மணிமேகலை

ஒருவரை



சிலம்பொலி சு.செல்லப்பன்

மணிமேகலை

(மூலமும் தெளிவுரையும்)

உரையாசிரியர் :

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

பாரதி பதிப்பகம்

108, உஸ்மான் சாலை,
தியாகராய நகர்,
சென்னை - 600 017.
த.பெ. எண்:4984 போன்:4340205

விலை : ரூ.75-00

□ MANIMEGALAI (Moolamum Thelivuraiyum) □ By Cilamboli S. CHELLAPPAN □ First Edition : September 1998 □ Price: Rs.75.00 □ Published by : BHARATHI PATHIPPAGAM, 108, Usman Road, T.Nagar, Chennai - 600 017, Ph : 4340205 □ Typeset by : Graphic Access, Chennai - 94 □ Printed at : Lotus Offset Press, Chennai - 600 013. □

அன்புக் காணிக்கை

பாரதி பதிப்பக நிறுவனர் மறைந்த பழ.சிதம்பரம் என் உற்ற நண்பர்; செயல் வீரர்; பழகுதற்கினிய பண்பாளர். அவருடைய இடைவிடாத தூண்டுதலினாலேயே 'சிலப்பதிகாரத் தெளிவுரையை' எழுதினேன்.

அவருடைய மைந்தர்கள் பழ.சித. இராஜேந்திரனும், பழ.சித.மணியும் அவர்களுடைய தந்தையிடம் காட்டி வந்த அன்பினை, மதிப்பினை, பற்றினை என்பால் காட்டிவரும் இயல்பினராய்த் திகழ்கின்றனர்.

இவர்களிருவரும் தேனீக்களெனச் சுழன்று, சிறந்த ஆசிரியர்களின் எழுத்துத் தேன்துளிகளைச் சேகரித்துத் தம் பதிப்புத் தேனடையில் சேர்த்து மகிழ்பவராயுள்ளனர்.

சிலப்பதிகாரத்திற்குப் போலவே மணிமேகலைக்கும் நான் உரை எழுத வேண்டுமென என்னை வலியுறுத்தி எழுதச் செய்தனர். அவர்களுடைய வற்புறுத்தல் இல்லையேல் இந்நூல் இல்லை.

இந்நூல் வெளிவரக் காரணமாய் அமைந்த இளவல் இருவர்க்கும் இந்நூலை என் அன்புக் காணிக்கையாகப் படைத்து மகிழ்கிறேன்.

அன்புடன்,



உள்ளடக்கம்

		பக்க எண்
	முன்னுரை	
	மணிமேகலை கதைச் சுருக்கம்	9
	பதிகம்	35
1.	விழா அறை காதை	42
2.	ஊர் அலர் உரைத்த காதை	48
3.	மலர் வனம் புக்க காதை	56
4.	பளிக்கறை புக்க காதை	72
5.	மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை	84
6.	சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதை	96
7.	துயில் எழுப்பிய காதை	112
8.	மணிபல்லவத்துத் துயருற்ற காதை	124
9.	பீடிகை கண்டு பிறப்பு உணர்ந்த காதை	130
10.	மந்திரம் கொடுத்த காதை	136
11.	பாத்திரம் பெற்ற காதை	144
12.	அறவணர்த் தொழுத காதை	156
13.	ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை	166
14.	பாத்திர மரபு கூறிய காதை	176

15. பாத்திரம் கொண்டு பிச்சை புக்க காதை 186
16. ஆதிரை பிச்சை இட்ட காதை 194
17. உலக அறவி புக்க காதை 206
18. உதயகுமரன் அம்பலம் புக்க காதை 214
19. சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய காதை 230
20. உதய குமரனை வாளால் எறிந்த காதை 246
21. கந்திற்பாவை வருவது உரைத்த காதை 256
22. சிறைசெய் காதை 270
23. சிறைவிடு காதை 284
24. ஆபுத்திரன் நாடு அடைந்த காதை 298
25. ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை 312
26. வஞ்சி மாநகர் புக்க காதை 332
27. சமயக்கணக்கர்தம் திறம்கேட்ட காதை 340
28. கச்சி மாநகர் புக்க காதை 368
29. தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை 388
30. பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை 426

முன்னுரை

மணிமேகலை

மணிமேகலை தமிழில் உள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. முதற் காப்பியமான சிலப்பதிகாரத்தை அடுத்துத் தோன்றிய இரண்டாவது காப்பியம். சிலப்பதிகாரக் கதையின் தொடர்ச்சியாக மணிமேகலை அமைந்துள்ளது. கோவலன், கண்ணகி, மாதவி வரலாறு கூறுவது சிலப்பதிகாரம். மாதவி-கோவலன் பெற்றெடுத்த மகள் மணிமேகலையின் வரலாறு கூறுவது மணிமேகலைக் காப்பியம். ஆதலின் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரண்டனையும் தமிழிலுள்ள 'இரட்டைக் காப்பியங்கள்' என்றழைப்பர். ஒரே காப்பியத்தின் இரு பகுதிகள் போல, கதைத் தொடர்ச்சியும் பிற அமைப்புகளும் உள்ளன.

அழகொழுகும் உயிரோவியமாய்த் திகழ்ந்த இளமங்கை மணிமேகலை, இளமையில் செல்லும் வளமையைத் தடுத்து, துறவறம் பூண்டு, பசித்தவர்க்கு உணவு வழங்குவதே பேரறம் எனக்கொண்டு வாழ்ந்து, முடிவில் பிறவிப் பிணியை அறுக்க அறவண அடிகள்பால் அறங்கேட்டு நோற்றனள் என்பதுவே இக் காப்பியச் செய்தி. இக்குணநலன் வாய்ந்த ஓர் இளநங்கையைக் காப்பியத் தலைவியாகக் கொண்ட காப்பியம் உலகில் மணிமேகலையைத் தவிர வேறு இல்லை எனலாம்.

மணிமேகலை துறவு

'மணிமேகலை'யின் துறவு வரலாறு கூறுவதால், இக்காப்பியம் 'மணிமேகலை துறவு' என்று பெயர் பெற்றது.

> இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப
> வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
> மாவண் தமிழ்த்திறம் 'மணிமேகலை துறவு'
> ஆறைம் பாட்டினுள் அறியவைத் தனனே

என நூலின் பதிகம் இப்பெயரையே கூறுகிறது.

நீலகேசியின் உரையாசிரியரான திவாகரவாமன முனிவரும், சிவஞான சித்தியாருக்கு உரை இயற்றிய திருவொற்றியூர் ஞானப்பிரகாசரும் இக் காப்பியத்தை, 'மணிமேகலை துறவு' என்றே குறிப்பிடுகின்றனர். எனினும்

காப்பியத் தலைவியான மணிமேகலையின் பெயரால் இக்காப்பியம் 'மணிமேகலை' என்று அழைக்கப்பட்டு வருகிறது.

மேகலைச் சிறப்பு

தொலகாப்பியம் கூறும் 'இயைபு' என்னும் செய்யுள் வனப்பிற்கு எடுத்துக் காட்டாக அதன் உரையாசிரியர், பேராசிரியர், 'சீத்தலைச் சாத்தனாராற் செய்யப்பட்ட மணிமேகலையும, கொங்கு வேளிராற் செய்யப்பட்ட தொடர்நிலைச் செய்யுளும் போல்வன' எனக் கூறுவதால் மணிமேகலைக் காப்பியத்தின் யாப்புச் சிறப்பினைத் தெரிய முடிகிறது;

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் 'கொந்தார் குழல் மணிமேகலை நூல் நுட்பம் கொளவது எங்ஙன்?' எனக் குறிப்பதால் இக்காப்பியத்தின் பொருள் நுண்மையை உணர முடிகிறது.

'மாதவி பெற்ற மணிமேகலை நம்மை வாழ்விப்பதே' என அம்பிகாபதிக் கோவை புகழ்வதால் காப்பியப் பயன்படு தன்மையைத் தெளிய முடிகிறது.

மணிமேகலை அறம்

பசிப்பிணியைத் தீர்த்தலே அறம் என மணிமேகலைக் காப்பியம் கூறுகிறது.

மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்க்கொடுத் தோரே:

மக்கள் தேவர் என இரு சார்க்கும்
ஒத்த முடிவின் ஓர்அறம் உரைக்கேன்;
பசிப்பிணி தீர்த்தல் என்றே, அவரும்
தவப்பெரும் நல்லறம் சாற்றினர்

எனக் காப்பியம் கூறுகிறது. உனவை அடுத்து, உடையும் உறையுளும் மக்கட்கு இன்றியமையாது கிடைக்க வேண்டுமென்பதையும் இக்காப்பியம் வலியுறுத்துகிறது.

அறம்எனப் படுவது யாது? எனக் கேட்பின்,
மறவாது இதுகேள்; மன் உயிர்க்கு எல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டது இல்

என்கிறது 'மணிமேகலை'

'பசித் துன்பத்தைப் போக்குபவருடைய புகழை எடுத்துச் சொல்லச் சொற்கள் இல்லை'.

'உண்டதும் பசித்தவன் முகத்தில் அதுவரை இருந்த சோர்வும் களைப்பும் நீங்கி, அவன் முகம் ஒளி பெறுகிறதே - அதைக் காணும் இன்பத்திற்கு ஈடு எதுவுமே இல்லை' என்னும் கருத்துகள் மணிமேகலையில் கூறப்பட்டுள்ளன.

அதனாற்றான் பாவேந்தர் பாரதிதாசன், தாம் இயற்றிய 'மணிமேகலை வெண்பா'வில், ''அறங்களின் சாற்றையெல்லாம் கூட்டிய கூட்டு, பசித்தவர்க்குச் சோறு தருவதேயாம்''

சோறில்லை என்பார்க்குச் சோறு தருவதுதான்
கூறறங்களின் சாற்றுக் கூட்டு -

என்கிறார். இக்கருத்தே மணிமேகலைக் காப்பியத்தின் உயிர்க் கருத்தாகும்.

பௌத்தக் காப்பியம்

மணிமேகலை ஒரு பௌத்த சமயக் காப்பியம்; எனினும் எல்லாச் சமயத்தவரும் படிக்கும் வண்ணம் இலக்கிய நயம் செறிய இனிது எழுதப்பட்டுள்ளது. பிற சமயத்தவரைக் குறைத்துக் கூறும் நிலை இலைமறைகாயாக இக் காப்பியத்தில் இடம் பெற்றுள்ளது. எல்லாச் சமயக் கருத்துகளையும் கேட்ட பௌத்தத் துறவி மணிமேகலை,

வேற்றுருக் கொண்டு வெவ்வேறு உரைக்கும்
நூல்துறைச் சமய நுண்பொருள் கேட்டே,
அவ்வுரு என்ன, 'ஐவகைச் சமயமும்
செவ்விது அன்மையின்' சிந்தையில் வைத்திலேன்

என்கிறாள்.

அவ்வவர் சமயத்து அறிபொருள் கேட்டு,
'மெய்வகை இன்மை' நினக்கே விளங்கிய
பின்னர், பெரியோன் பிடகநெறி கடவாய்

என பௌத்த நெறியே உண்மை நெறி என்றும் பிற சமயக் கொள்கைகள் மெய்த்தன்மையற்றவை என்றும் உரைக்கப்படுகிறது.

'பல்வேறு சமயப் படிற்றுரை'

என்றும் சொல்லப்படுகிறது.

பிற சமயப் பழிப்பும் சிற்சில இடங்களில் காணப்படுகிறது.

புகார் நகர வீதியில் நடக்கும் ஒரு சமணத் துறவி; அவன் 'ஆடையோடு நாணத்தையும அறவே நீக்கியவன்; புழுதிபடிந்த யானை போல, குளிக்காத உடம்போடு அசைந்தாடிச் சென்றனன்' என ஒருவகைப் பழிப்போடு கூறப்படுகிறான்.

நாணமும் உடையும் நன்கணம் நீத்து ...
உண்ணா நோன்பொடு உயவல் யானையின்
மண்ணா மேனியன் வருவோன்

என அத்துறவி காட்டப்படுகிறார். ஓர் அந்தணனை ஒரு பசு முட்டி வயிற்றைக் கிழித்து விட்டது. குடல் தொங்கிய நிலையில் தன் தந்தையைத் தான் தங்கியிருந்த சமணப் பள்ளிக்கு அழைத்து வந்தாள் அவன் மகள். அங்கிருந்த துறவிகள், அவாகளைக் கடிந்து, கையை அசைத்து இரக்கமின்றி வெளியேற்றி விட்டனர். வீதியில் அவர்களைக் கண்ட பௌத்தத் துறவி ஒருவர், காயமுற்றவரைத தோளில் சுமந்து சென்று, பௌத்தப் பள்ளியில் சேர்த்து நலப்படுத்தினார். இக்காப்பியததில் வருகிற இக்கதை சமணத்தைக் குறைத்து, பௌத்தத்தை உயர்த்திக் கூறுகிறது. இவ்வாறு ஒன்றிரண்டு இடங்கள் இருப்பினும், காப்பியத்தின் மற்ற நலன்களால் இக்காப்பியம் உயர்வு பெற்று இலக்கிய வரலாற்றில் சிறந்ததோர் இடத்தைப் பெற்றுள்ளது; 'தமிழ்ன்னையின் இடையில் அழகு செய்யும் மணிகளாலான மேகலை அணியைப் போன்றது' எனச் சிறப்பித்துப் போற்றப்பட்டும் வருகிறது.

காப்பியம் கூறும் சில செய்திகள்

தமிழ்நாட்டின் வரலாறு, மக்களின் ஒழுகலாறு, பண்பாடுகளை மணிமேகலைக் காப்பிய வாயிலாக நாம் அறிய முடிகிறது. சங்க காலததில் இருந்த சமயங்களையும அவறறின் கொள்கைகளையும் மணிமேகலை விரிவாக எடுத்துரைக்கின்றது.

சாவகநாடு, நாகநாடு, மணிபல்லவம், இரத்தினத தீவு, இலங்கைத்தீவு, மகதநாடு பற்றிய குறிப்புகளைக் காண்கிறோம். புகார், மதுரை நகரமைப்பைச் சிலப்பதிகாரம் விரிவாகக் காட்டுகிறது; மணிமேகலையோ வஞ்சி, கசசி நகரமைப்பைச் சிறப்பாகக் காட்டுகிறது.

சிலப்பதிகாரத்தில் பூம்புகாரில் உள்ள ஐந்து மன்றங்களை அறிகிறோம்; மணிமேகலையில் புகாரில் உள்ள ஐந்து சோலைகளைப் பற்றிய விளக்கம் பெறுகிறோம்.

மணிமேகலை காலத்தில் பூம்புகார் நகரம் கடலுள் மூழ்கிய செய்தியை அறிகிறோம்.

காப்பியத்தில் இடையிடையே பல இதிகாச, புராணக் கதைக் குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

இக்காப்பியத்தில பல கிளைக் கதைகள் - சுதமதி, ஆதிரை, ஆபுத்திரன், காயசண்டிகை, மருதி, விசாகை, பீலிவளை பற்றிய கதைகளோடு இனனும் பல கதைகள் - உள்ளன. மூலக் கதையோடு இக்கதைகளைத் தக்கவாறு இணைத்துச் சுவை கூட்டியிருக்கிறார் காப்பிய ஆசிரியர்.

சீத்தலைச் சாத்தனார்

மணிமேகலைக் காப்பியத்தை இயற்றியவர் மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் இவரது இயறபெயர் சாத்தனார். நெல் முதலிய கூலங்களை (தானியங்களை) வ்ாணிபம் செய்து வந்தார்; ஆதலின் கூலவாணிகன் சாத்தனார் எனப்பட்டார். இவர் மதுரையில் வாழ்ந்தவர்.

சாத்தனார் சிலப்பதிகாரக் கதை நிகழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர். சேரன் செங்குட்டுவனுக்குக் கண்ணகி கதையைக் கூறியவரும், இளங்கோவடிகளைச் சிலப்பதிகாரக் காப்பியத்தைப் பாடுமபடிக் கேட்டுக் கொண்டவரும் இவரே. இளங்கோவடிகள் கேட்க, இவர் மணிமேகலையைப் பாடினார்.

இவர், இளங்கோவடிகளால், **'தண்டமிழாசான் சாத்தன்'** என்றழைக்கப்படும் சிறப்பினைப் பெற்றுள்ளார்.

இளங்கோவடிகளும் இவரும் ஒரு காலத்தவர் ஆதலின் இவர் கி.பி.இரண்டாம் நூற்றாண்டினர் ஆவர். (இதில் மாறுபடுபவரும் உண்டு). இவர் சீத்தலைச் சாத்தனார் என்றும் அழைக்கப்படுகிறார்.

புலவர்கள் இவரிடம் வந்து கவிதைகளைப் பாடும்போது, அவற்றில் பிழைகளைக் கேட்க நேரிட்டபோதெல்லாம், 'இவற்றைக் கேட்க நேரிட்டதே' என வருந்தி, கையிலிருந்த எழுத்தாணியால் தன தலையைக் குத்திக் கொள்வார் என்றும்; அதனால் அவர் தலை புண்பட்டுச் சீழ் படிந்ததாக இருந்ததாலேயே இவர் சீத்தலைச் சாத்தனார் என்றழைக்கப்பட்டார்.என்றொரு செய்தியும் உண்டு.

'சீத்தலை' என்பது ஓர் ஊர்; இவர் அவ்வூரினர் என்பதால் சீத்தலைச் சாத்தனார் எனப்பட்டார் எனக் கூறுவாரும் உண்டு.

திருவள்ளுவரிடம் பெரும்மதிப்புக் கொண்டவராகச் சாத்தனார் இருந்திருக்கிறார்.

'தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்எனப் பெய்யும் பெருமழை' என்ற, அப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய் (காதை 22:59-61)

என்னும் அடிகளில் திருக்குறளை அப்படியே எடுத்தாண்டிருப்ப தோடு, திருவள்ளுவரை, 'பொய்யில் புலவன்' எனவும் போற்றிப் புகழ்கிறார். 'கேள்வியால் தோட்கப்படாத செவி' எனும் திருக்குறள் தொடரை நினைவிற் கொண்டு இவர்,

.... கேள்வி யாளரில்
தோட்ட செவியை, நீ ஆகுவை (18:134-35)

எனப் பாடியிருக்கக் காண்கிறோம்.

மேகலை மொழி பெயர்ப்புகள்

மணிமேகலை பிறமொழிகள் பலவற்றில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. ஆங்கிலத்தில் ஜான்பேட்டன் மொழிபெயர்த்துள்ளார். ஜி.யு.போப் உரைநடைச் சுருக்கத்தை 1911ல் தந்தார். தி இந்தியன் பப்ளிஷிங் ஹவுஸ் வெளியீடாக ஏ.மாதவய்யாவின் பெயர்ப்பு 1923-லும், சென்னை அல்லயன்ஸ் கம்பெனி வெளியீடாக ஏ எஸ்.பஞ்சாபகேச அய்யரின் பெயர்ப்பு 1947-லும் வெளிவந்தன. எஸ்.கிருஷ்ணசாமி அய்யங்காரின் Manimekalai in its Historical Setting எனும் நூல் இலண்டனில் வெளியாயிற்று. வீ.கனகசபை பிள்ளை அவர்கள் Tamil Eight Hundred Years Ago எனும் நூலில் மணிமேகலையின் உரைநடையைத் தந்துள்ளார். நியூயார்க்கிலிருந்து 1989ல் Allain Danelow-ன் Manimekala (The Dancer with the Magic Bowl) எனும் நூல் வெளியாயிற்று. ஸ்ரீதரன் குருசாமி, எஸ் சீனிவாசன் ஆகிய இவ்விருவருடைய ஆய்வு முன்னுரையுடனும் அருங்குறிப்புகளுடனுமான நூல், உ.வே சா. நூலக வெளியீடாக 1993ல் வெளிவந்தது. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடாக ஆர்.பாண்டியனின் பெயர்ப்பும், தஞ்சைப் பல்கலைக்கழக வெளியீடாக, பிரேமா நந்தகுமாரின் மொழி பெயர்ப்பும் ஆங்கிலச் செய்யுள் நடையில் 1989ல் வெளிவந்தன.

1955ல் திருப்பதி திருமலை தேவஸ்தான வெளியீடாக, பூதலப்பட்டு ஸ்ரீராமுலு ரெட்டி அவர்களுடைய தெலுங்கு மொழிபெயர்ப்பு வெளிவந்துள்ளது; சி.ஆர்.சர்மா அவர்கள் மணிமேகலைச் சுருக்கத்தைத் தெலுங்கில் எழுதியுள்ளார்.

இந்தியில் பேராசிரியர் தி.சேஷாத்திரியின் பெயர்ப்பு லக்னோ, புவன வாணி டிரஸ்ட்டின் வெளியீடாக 1993-லும், எஸ்.என். கணேசமூர்த்தியின் பெயர்ப்பு சென்னைப் பல்கலைக்கழக வெளியீடாக 1990-லும் வெளிவந்துள்ளன.

கேரள சாகித்திய அகாதெமி வெளியீடாக ப.ஜனார்த்தனம் பிள்ளையின் மலையாள மொழி பெயர்ப்பு 1971ல் வெளிவந்தது; திருச்சூர் பி.நாராயணன் நாயர் 1928ல் மலையாளத்தில் எழுதியுள்ளார்.

தர்ம ரத்ன தேரோ என்பவர் சிங்களத்தில் மொழி பெயர்த்திருக்கிறார்.

ஷு ஹி கோ சாகா (Sho-Hi-Ko-Shaka) என்பவர் ஜப்பான் மொழியில் பெயர்த்துள்ளார்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் மணிமேகலை பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல வெளிவந்துள்ளன

மணிமேகலைப் பதிப்புகள்

மணிமேகலைக் காப்பியத்தின் மூலத்தை மட்டும் முதன் முதலில் **மகாவித்துவான் திருமயிலை சண்முகம் பிள்ளை** அவர்கள் 1894-ஆம் ஆண்டில் சென்னை ரிப்பன் அச்சுக் கூடத்தில் அச்சிட்டுப் பதிப்பித்தார். மணிமேகலைக்குப் பழைய உரை எதுவும் கிடைக்கவில்லை. **டாக்டர் உ.வே.சாமிநாதய்யர்,** அரும்பதவுரையுடனும் பல ஆராய்ச்சிக் குறிப்புகளுடனும் முதன் முதலில் 1898ல் வெளியிட்டார்.

நாவலர் **பண்டித ந.மு.வேங்கடசாமி நாட்டார்** அவர்களும் சித்தாந்த கலாநிதி **ஔவை சு.துரைசாமிப்பிள்ளை** அவர்களும் எழுதிய தெளிவான விளக்கவுரை 1946ல் வெளிவந்தது. இதில் நாட்டார் அவர்கள முதல் இருபத்தாறு காதைகளுக்கும், ஔவை சு துரைசாமிப் பிள்ளை அவர்கள் இறுதி நான்கு காதைகளுக்கும் உரை எழுதியிருந்தனர். இந்நூல் பாகனேரி தனவைசிய இளைஞர் தமிழ்ச் சங்க வெளியீடாக, பாகனேரி வெ.பெரி.பழ.மு. காசி விசுவநாதன் செட்டியார் அவர்கள் பொருளுதவியால் வெளியிடப்பட்டது.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடாக, பெருமழைப் புலவர் **பொ.வே.சோமசுந்தரனார்** உரை 1971ல் வெளிவந்தது.

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடான 'செந்தமிழ்' இதழின் ஆசிரியர் **திரு.நாராயண அய்யங்கார்,** 'தவத் திறம் பூண்டு தருமம் கேட்ட காதை'யின் அனுமான விளக்கத்தை நன்கு ஆராய்ந்து வெளியிட்டார்.

டாக்டர் வ.சுப.மாணிக்கம் அவர்களைக் கொண்டு, காரைக்குடி செல்வி பதிப்பகத்தினர் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இரு காப்பியங்களின் மூலங்களை மட்டும் 1958ல் வெளியிட்டனர். இதில் டாக்டர் வ.சுப அவர்கள் எண்பது பக்க அளவில் எழுதியுள்ள ஒப்பாய்வு மிகு நுட்பமானது.

மர்ரே அண்டு கம்பெனி வெளியீடாக **எஸ்.இராஜம்** அவர்களால் 1957ல் மணிமேகலை மூலம் மட்டும் பதிப்பிக்கப்பட்டது. இதில் மூல பாடம் சொல் பிரித்து, உரிய நிறுத்தல் குறிகளுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளது. நூலின் இறுதியில் அரிய சொற்களுக்கும் தொடர்களுக்கும் அகர வரிசையில் பொருள் தரப்பட்டுள்ளது இப்பதிப்பின் சிறப்பு ஆம்.

தி லிட்டில் பிளவர் கம்பெனியார் 1968ல் மணிமேகலை மூலத்தை மட்டும் வெளி பிட்டுள்ளனர். இதில் ஒவ்வொரு காதையின் தொடக்கத்திலும் காதைச் சுருக்கம் தரப்பட்டுள்ளது. படிப்பதற்கு எளிதாக இருக்குமாறு சந்தி பிரித்துத் தரப்பட்டுள்ளது.

தமிழறிஞர் **புலியூர்க் கேசிகன்** அவர்களின் 'மணிமேகலை மூலமும் தெளிவுரையும்' **பாரி நிலைய வெளியீடாக** 1961ல வெளிவந்தது. எல்லாரும் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் மூல பாடத்தின் நேர் பொருள் மட்டும், இதில தரப்பட்டுள்ளது.

துரை. தண்டபாணி அவர்களின், 'மணிமேகலை தெளிவுரையை', **உமா** பதிப்பகத்தினர் 1993-ல் பதிப்பித்துள்ளனர்.

சிலம்பொலியின் தெளிவுரை

இவ்வரிசையில் மணிமேகலைக்கு நான் எழுதியுள்ள தெளிவுரை பாரதி பதிப்பகத்தின் வாயிலாக இப்போது (1998) வெளி வருகிறது. ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள பாடல் பகுதிக்கு மட்டும் அமையுமாறு எதிர்ப்பக்கத்தில் உரை தரப்பட்டுள்ளது. பாடல் பகுதியுள்ள ஒவ்வொரு பக்கத்தின அடியிலும் அருஞ்சொற்களுக்குப் பொருள் தரப்பட்டுள்ளது; தேவைப்படுமிடங்களில் விளக்கங்களும் தரப்பட்டுள்ளன. உரைப் பகுதியில் கதைத் தொடர்பு புலப்படுமாறு உட்தலைப்புகள் குறிக்கப்பட்டுள்ளன ஓரளவே தமிழ் கற்றோரும் புரிந்து கொள்ளும வகையில் உரை எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. அனைவரும் படித்துப் பயன்கொள்ள வேண்டும் என்பதே என் வேணவா.

நன்றி மலர் தூவுதல்

இந்நூலை அழகிய முறையில் கண்கவர் வனப்பினதாகச் சிறந்த கட்டமைப்புடன் வெளிக்கொணர்ந்துள்ள **பாரதி பதிப்பகத்தினர்க்கு** - குறிப்பாக, சித.இராஜேந்திரனுக்கும், சித.மணிக்கும் என் உளம் நிறைந்த நன்றி. அழகிய அட்டைப் படம் வரைந்தளித்த **ஓவியர் மாருதி**, நூலுருவாக்கத்தில் பெரிதும் துணை புரிந்த **ஓவியர் சிவா, திரு. நாராயணன்** ஆகியோர்க்கு என் நன்றி மலர்களைத் தூவுகிறேன்.

அன்புடன்,

சீ. சிவசுப்பிரமணியன்

மணிமேகலை

கதைச் சுருக்கம்

1. விழா அறை காதை

புகழ் மிக்கதும் பெருமையுடையதுமாகிய புகார் நகரத்தில் தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன் என்ற சோழ மன்னன் அகத்தியரின் அறிவுரைப்படி, இந்திரனிடமிருந்து அனுமதி பெற்று இருபத்தெட்டு நாட்கள் இந்திர விழாவை நடத்தி வந்தான். அவன் மரபினர் தொடர்ந்து அவ் விழாவினைத் தவறாது சிறப்புற நடத்தி வந்தனர். காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திர விழாவை வழக்கம்போல் நடத்த வேண்டுமென ஐம்பெருங் குழுவினர், எண் பேராயத்தினர், சமயக் கணக்கர்கள் ஒன்று கூடி முடிவு செய்தனர்.

தொல்குடிப் பிறந்த வள்ளுவன் யானை மேல் ஏறி இந்திர விழா நடக்க இருப்பதை முரசறைந்து நகருக்குத் தெரிவித்தான். ''வானம் மும்மாரி பொழிக! மன்னவன் செங்கோல் சிறக்க'' எனத் தொடங்கிய அவன் நகரை அழகுபடுத்துமாறும் விழா நாள்களில் அறிஞர்கள் அரிய கருத்துரைகளைப் பொது இடங்களில் மக்கட்கு வழங்குமாறும் அறிவித்தான். ''பசியும் பிணியும் பகையும் நீங்கி, வசியும் வளமும் சுரக்க'' என வாழ்த்தி அமைந்தான்.

2. ஊர் அலர் உரைத்த காதை

இந்திர விழாவில் ஆடற்கலையரசி மாதவி நாட்டியமாடுவது வழக்கம். கோவலன் இறந்ததால் துறவு பூண்ட மாதவியும் அவள் மகள்

மணிமேகலையும் ஆட வராமையால் மக்கள் பழிமொழி கூறினர். மாதவியின் தாய் சித்திராபதி மாதவியின் தோழி வயந்தமாலையிடம், ''நீ மாதவியிடம் சென்று ஊரார் சொல்லும் பழிமொழிகளைக் கூறி மாதவியையும் மணிமேகலையும் அழைத்து வா'' என்றாள்.

வயந்தமாலை மாதவியிடம் சென்று, ''நீ உன் மகளுடன் ஆட வரவில்லை. உன் மரபிற்குப் பொருந்தாத தவ ஒழுக்கம் பூண்டிருப் பதை ஊரார் பழிக்கின்றனர்'' என்றாள்.

மாதவி கூறினாள்; ''வயந்தமாலை! கணவன் இறந்த உடனேயே நான் இறந்திருக்க வேண்டும். இன்னும் உயிர் வாழ்ந்திருப்பதே வெட்கமானது. கணவன் இறந்த செய்தி கேட்டதும் மன்னனிடம் வழக்குரைத்துக் கணவனின் பழியையும் துடைத்து மதுரையையும் தீக்கிரையாக்கிய மாபெரும் பத்தினி கண்ணகி மணிமேகலை என் வயிற்றில் பிறந்திருக்கலாம். ஆனால் அவள் கண்ணகியின் மகளே! அவள் ஆட வர மாட்டாள். நான் அறவண அடிகள்பால் சென்று அறவுரை கேட்டுத் தவவழியை மேற்கொண்டுள்ளேன். எனவே நானும் அங்கே வரமாட்டேன். இதை என் தாயிடம் சொல்'' என்றாள். பெறற்கரிய மாணிக்கத்தை அலை கடலில் தவற விட்டவர்போல மாதவியின் சொல் கேட்ட வயந்தமாலை வருத்தத்தோடு சென்றாள்.

3. மலர்வனம் புக்க காதை

அங்கே ஒரு பக்கம் பூத்தொடுத்துக் கொண்டிருந்த மணிமேகலை, மாதவி வயந்தமாலைக்குச் சொன்னதைக் கேட்டிருந்தாள். தன் பெற்றோர் (கோவலனும், கண்ணகியும்) அடைந்த துன்பத்தைக் கேட்ட அவள் கண்களிலிருந்து நீர் வழிந்து அவள் தொடுத்துக் கொண்டிருந்த மாலையை நனைத்தது. இதைக் கண்ட மாதவி, ''மகளே! உன் கண்ணீர்பட்டதால் மாலை தூய்மையை இழந்தது. ஆதலால் வேறு மாலை தொடுக்க, புதிய மலர்களைக் கொய்து வருவாயாக'' என்றாள். அதனைக் கேட்ட மணிமேகலையின் தோழி சுதமதி, ''மணிமேகலை அழகின் திரு உரு. இவளை ஆடவர் கண்டால் அகலமாட்டார். தம் இயல்பு மாறுவர். இவளைத் தனியே பூக்கொய்ய அனுப்பக்கூடாது. நான் இவ்வூருக்கு வந்து சேர்ந்தது ஏன் தெரியுமா? சண்பை நகரத்தில் நான் ஓர் அந்தணன் மகள். தனியே செல்வதற்கு அஞ்சாமல் ஒருநாள் மலர் வனம் சென்று மலர் பறித்துக் கொண்டிருந்தேன். அப்போது

இந்திர விழாவைக் காண இந் நகருக்கு வான்வழியே வந்து கொண்டிருந்த மாருதவேகன் எனும் விஞ்சையன் என்னை எடுத்து விண்ணில் சென்றான். தன் வயப்படுத்தினான். சில நாள் கழித்து என்னை இந்நகரத்தில் விட்டு விட்டு மறைந்து போய்விட்டான். ஆதலால் மணிமேகலை தனியே பூப்பறிக்கச் செல்லுதல் கூடாது. நானும் உடன் செல்வேன். இவ்வூரில் ஐந்து வனங்கள் உள்ளன. இலவந்திகைச் சோலை, உய்யா வனம், சம்பாதி வனம், கவேர வனம் ஆகிய வனங்கட்கு இப்போது நாம் செல்ல முடியாது. உவவனம் என்ற ஒன்று உண்டு. அங்கே பளிங்கு மண்டபம் ஒன்று உள்ளது. அதில் உள்ளே இருந்து பேசும் ஒலி வெளியே கேட்காது; ஆனால் உருவம் தெரியும். அம் மண்டபத்தினுள்ளே தாமரைப் பீடிகை ஒன்று உள்ளது. அதனடியில் மலர் இட்டு நாம் எக்கடவுளை நினைக்கிறோமோ அக் கடவுளின் திருவடிகளில் அம் மலர் சென்று சேரும் யாதொரு நினைப்புமின்றி இட்டால் மலர் அங்கேயே இருக்கும். அந்த உவவனத்திற்குச் சென்று மலர் பறித்து வருவோம்'' எனக் கூறி மணிமேகலையைச் சுதமதி அழைத்துச் சென்றாள்.

வழியிலே பல காட்சிகளைக் கண்ட வண்ணம் மணிமேகலையும் சுதமதியும் மலர் வனம் சென்றனர். மணிமேகலையைக் கண்ட மக்கள், ''இம் மகளைத் தவநெறிப்படுத்திய மாதவி கொடியள் இவள் சோலையில் புகுந்தால் அன்னத்தின் நடை இவள் நடைமுன் எடுபடுமா? இவள் சாயலைக் கண்டு தன் சாயல் இப்படி இல்லையே என்று மயில் நாணுமே!'' என்றெல்லாம் அவள் அழகைப் பாராட்டி வியந்தனர். மணிமேகலை சுதமதியோடு உவவனத்தினுள் புகுந்தாள்!

4. பளிக்கு அறை புக்க காதை

பல்வேறு இயற்கைக் காட்சிகளைச் சுதமதி மணிமேகலைக்குக் காட்டிக் கொண்டிருந்தாள். அப்போது ஊரினுள்ளே காலவேகம் என்னும் யானை மதங்கொண்டு ஊரையே கலக்கியது. இளவரசன் உதயகுமரன் அதை அடக்கி வெற்றிக் களிப்போடு தேர் மீது வந்தான். கணிகையர் தெருவில் ஒரு வீட்டில் எட்டி என்பவன் கவலையோடு வீற்றிருந்தான். அவன் வருந்தியிருப்பதேன்? என உதயகுமரன் வினவினான். ''மணிமேகலை மலர் பறிக்க உவவனத்திற்கு இவ் வழியே சென்றாள். அவளைக் கண்டதும் அவளுடைய தந்தை

கோவலனுக்கு நேர்ந்த கொடுந்துயரினை நினைத்ததால் வருந்தியிருக்கி றேன்'' என்றான் எட்டி. உதயகுமரன் மணிமேகலையை அடைய வேண்டுமென்ற விருப்பினனாதலால் எட்டி சொல்கேட்டு மகிழ்ச்சியுற்று, ''வருந்தாதே. அம் மணிமேகலையை என் தேரில் ஏற்றி வருவேன்'' எனத் தேரினை உவவனம் நோக்கிச் செலுத்தினான்.

உவவனத்தினுள் தேரொலி கேட்டது. மணிமேகலை, ''இஃது உதயகுமரன் தேரொலிபோல் இருக்கிறதே. அவன என்னிடத்தில் மையல் கொண்டிருப்பதாகப் பாட்டி சித்திராபதி சொல்லியதாக வயந்தமாலை என் தாயிடம் கூறியதைக் கேட்டிருக்கிறேன். இப்போது என் செய்வேன்?'' என அஞ்சிச் சொன்னாள். சுதமதி அவளைப் பளிக்கறையில் புகுந்து தாளிட்டுக் கொள்ளுமாறு செய்து சற்றுத் தள்ளி நின்றாள்.

உவவனத்தினுள் நுழைந்த உதயகுமரன் சுதமதியைக் கண்டு, ''உன்னுடன் வந்த மணிமேகலை எங்கே?'' என்று கேட்டான். ''அரசர் மகனுக்கு அறிவு கூறும் தகுதி எமக்கு இல்லையாயினும் ஒன்று சொல்வேன்'' எனத் தொடங்கி, சுதமதி அவனுக்கு அறிவுரைகளைச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே பளிக்கறையில் தோன்றிய மணிமேகலையின் உருவத்தை உதயகுமரன் பார்த்துவிட்டான்.

5. மணிமேகலா தெய்வம் தோன்றிய காதை

மணிமேகலையின் உருவைப் பளிக்கறைச் சுவர் வழியே கண்ட உதயகுமரன் விரைந்து சென்று சுவரைத் தடவிப் பார்த்தான். உள்ளே நுழைய வழி தெரியவில்லை. சுதமதியிடம், 'மணிமேகலையின் எண்ணம் என்ன?' எனக் கேட்டான். ''அவள் தவ வழியில் செல்பவள்; உன்னைத் திரும்பியும் பாராள்; சாபமிடவும் வல்லவள்; அவளை மறந்து விடு'' என எச்சரித்தாள் சுதமதி.

உதயகுமரன் அவளிடம், ''மணிமேகலையை இங்கே நான் அடைய முடியாது போயினும் சித்திராபதி மூலமாக அவளைக் கைப்பற்றுவேன்'' எனச் சொல்லிப் போனான்.

மணிமேகலை பளிக்கறையிலிருந்து வெளிவந்தாள். ''கற்பில்லாதவள்; விலை மாது என்றெல்லாம் என்னை இகழ்ந்தும் என்னை விரும்புகிற அந்தப் புதியவன் பின்னே என் நெஞ்சு போனதே!

என்ன காரணம்? இதுதான் காமத்து இயற்கையோ? இக் காமம் கெடுவதாகுக!'' என மணிமேகலை சுதமதியிடம் கூறினாள்.

அதுவேளை, இந்திர விழாக் காண விரும்பி அங்கு வந்திருந்த மணிமேகலா தெய்வம் உவவனத்தில் பளிக்கறையிலிருந்த பீடிகையை வலம் வந்து துதித்தது.

புகார் நகரத்தில் அந்திமாலை வந்து சேர்ந்தது.

6. சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதை

மணிமேகலா தெய்வம் மானிடப் பெண்ணுருக் கொண்டு சுதமதியிடம், ''இங்கு நிற்கின்றீரே? உங்கட்கு என்ன நேர்ந்தது?'' என்று கேட்டது. சுதமதி உதயகுமரன் வந்ததையும் அங்கு நடந்ததையும் சொன்னாள். மானிட உருக் கொண்டிருந்த மணிமேகலா தெய்வம், ''இஃது அறவோர் உறைவிடமாதலால் உதயகுமரன் யாதும் செய்யாது அகன்றான். நீங்கள் வெளியே சென்றால் வீதியில் அவன் அகப் படுத்திக் கொள்வான். இச் சோலையைச் சூழ்ந்த மதிலின் மேற்றிசையிலே உள்ள சிறிய வாயில் வழியே போய், முனிவர்களின் இருப்பிடமான சக்கரவாளக் கோட்டத்தின் வழியே செல்லுங்கள். உங்கட்கு ஒரு துன்பமும் நேராது'' என்றது. சுதமதி, ''என்னை எடுத்து வந்த மாருதவேகனும் நீருமே இதனைச் சக்கரவாளக் கோட்டம் என்கிறீர்கள். மற்றவர் இதனைக் கடுகாட்டுக் கோட்டம் என்கின்றனரே; ஏன்?'' என்றனள்.

அத் தெய்வம், ''காவிரிப் பூம்பட்டினம் தோன்றிய காலத்தே உடன் தோன்றிய இடுகாடு இச்சோலையின் பக்கத்தே உள்ளது. அது நாற்புறமும் வாயில் உள்ள மதிலால் சூழப்பட்டது. அங்கு, புதைத்த இடத்தில் அவரவர் தகுதிக்கேற்பக் கட்டப்பட்ட சிறியனவும் பெரியனவுமான கோட்டங்கள் உண்டு. அங்கே சுடுகாட்டுக்குரிய பல்வகை ஒலிகளும் நிறைந்திருக்கும். முன்பொரு காலத்தில் சார்ங்கலன் என்னும் பார்ப்பனச் சிறுவன் அதனை நகரமென்று நினைத்துச் சென்றான். அங்கு ஆடிய ஒரு பேயால் தாக்கப்பட்டு ஓடி, தன் தாய் கோதமையின்முன், 'பேய் என்னைத் தாக்கி விட்டது' என விழுந்து இறந்தான். அவள் தன் மகனைச் சுமந்து சென்று சுடுகாட்டைச் சூழ்ந்த மதில் வாயிலில் நின்று, சம்பாபதி தெய்வத்தை முறையிட்டு அழைத்தாள்.

தோன்றிய சம்பாபதியிடம், ''சம்பாபதி! நீ யாருக்கும் தீங்கு நேராது பாதுகாக்கும் தெய்வமாயிற்றே! என் மகனைப் பேயறைந்து கொன்றுவிட்டதே! அவனைப் பிழைக்கச் செய்! கண்ணற்ற தன் தந்தையை அவன் காப்பான்'' என்று மனமுருக வேண்டினாள். சம்பாபதி, ''இழந்த உயிரை மீட்கத் தேவர் எவரேயாயினும் முடியாது'' எனச் சொல்லி எல்லாத் தெய்வங்களையும் அவள் முன் தோன்றச் செய்தாள். அனைவரும் சம்பாபதி கூறியபடியே கூறினர். கோதமை தன் மகனைச் சுடுகாட்டிற் சேர்த்து விட்டுத் தானும் இறந்தாள்.

எல்லாத் தேவர்களும் கூடிய இந்த இடத்தில் எல்லா உலகங்களையும் ஆங்காங்கு வாழும் உருவங்களையும் சுதையால் மயன் அமைத்து வைத்தான். ஆதலின் இது சக்கரவாளக் கோட்டம் எனப் பெயர் பெற்றது. இது சுடுகாட்டைச் சூழ்ந்துள்ள மதிலின் புறத்தே இருப்பதால் எல்லோரும் சுடுகாட்டுக் கோட்டம் என்பர்'' என நீண்ட வரலாறு கூறினாள். கேட்டுக்கொண்டிருந்த சுதமதி தூங்கி விட்டாள். மணிமேகலா தெய்வம் மணிமேகலையை மந்திரத்தால் மயக்கி, தழுவி எடுத்து, விண்ணிலே பறந்து, முப்பது யோசனைக்கு அப்பால், தெற்கே இருந்த மணிபல்லவம் என்னும் தீவில் வைத்து விட்டுச் சென்றது.

7. துயிலெழுப்பிய காதை

மணிமேகலையை மணிபல்லவத் தீவில் வைத்த மணிமேகலா தெய்வம் மீண்டும் புகார் நகருக்கு வந்து, மணிமேகலை நினைவால் தூக்கமின்றியிருந்த உதயகுமரனுக்கு அறிவுரை கூறியது. தவ ஒழுக்கமுடைய மணிமேகலைபால் வைத்த காமத்தை ஒழிக்குமாறு கூறியது. பின்னர் உவவனத்தில் தூங்கியிருந்த சுதமதியை எழுப்பியது. ''மணிமேகலையை மணிபல்லவத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறேன். ஏழு நாளில் அவள் இங்கே திரும்புவாள். இதை மாதவிக்குச் சொல். அவள் என்னை அறிவாள். மணிமேகலைக்குப் பெயர் சூட்டிய நாளில் அவள் கனவில் தோன்றிப் பிறப்பறுக்கும் பெற்றியுடைய மகளை ஈன்றுளாய் என்று கூறினேன். இதை அவளிடம் கூறு'' எனச் சொல்லி மறைந்தது. இருள் செறிந்த இரவு. சுதமதி உவவனத்தின் மேற்புறமிருந்த சிறுவாயில் வழியாகச் சக்கரவாளக் கோட்டத்தை அடைந்தாள். அங்கே ஊரம்பலத்தில் தூணிலிருந்த பாவையுருவம் ஒன்று சுதமதியின் முற்பிறப்பை அறிவித்தது. மணிமேகலைபற்றி

அஞ்சாதிருக்கவும் கூறியது. சுதமதி இரவு அங்கேயே தங்கினாள். காலை புலர்ந்ததும் மாதவியிடம் சென்று நடந்தவற்றைக் கூறினாள். மணியிழந்த நாகம்போல மாதவியும் இன்னுயிர் இழந்த யாக்கையெனச் சுதமதியும் இருந்தனர்.

8. மணிபல்லவத்துத் துயருற்ற காதை

மணிபல்லவத் தீவில் மணிமேகலை காலையில் துயில் எழுந்தாள். எதிரே நீலக்கடல் பரந்து கிடந்தது. தான் புதியதோர் இடத்தில் இருப்பதை அறிந்து ஒன்றும் தெரியாது திகைத்தாள். ''யாரையும் காணேனே; சுதமதி எங்கே சென்று ஒளிந்தாய்?'' எனக் கூக்குரலிட்டுத் தீவிலே அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தவள் முன்னே புத்த பீடிகை ஒன்று தோன்றியது.

அஃது இந்திரனால் அங்கே இடப்பட்டது; அதைக் காண் போர்க்குப் பழம்பிறப்பை உணர்த்தும் தன்மையது.

9. பீடிகை கண்டு பிறப்புணர்ந்த காதை

புத்த பீடிகையைக் கண்டதும் மணிமேகலை கைகுவித்துக் கண்ணீர் சொரிந்து வலம்வந்து வணங்கினாள். அப்போது அவளுடைய முற்பிறப்புச் செய்தி அவளுக்குத் தெரிந்தது.

அவளுடைய முற்பிறப்புக் காலத்தில் பிரமதருமன் என்னும் முனிவன் ஒரு நாள் இடவய நகரத்திலிருந்து அரசாண்டு வந்த தன் மைத்துனனிடம் அந்நாடு ஏழு நாள்களில் பாதலத்தில் வீழ்ந்து அழியும் என்பதை அறிவித்தான். மன்னனும் மக்களும் பெயர்ந்து வடக்கே அவந்தி நகரம் செல்லும் வழியில் காயங்கரை என்னும் நதிக்கரையில் பாடிவீடு அமைத்துத் தங்கினர். அங்கு அரசனுக்கும் மற்றையோர்க்கும் பிரமதரும முனிவர் முக்திக்கான வழியை உபதேசித்திருந்தார். அப்போது, அசோதர நகர அரசன் இரவிவன்மன்; அவன் மனைவி அமுதபதி; அவர்கள் மகள் இலக்குமி அங்கு வந்தனர். இலக்குமி தன் கணவன் இராகுலனுடன் வந்து முனிவரை வணங்கினாள். முனிவர், ''இலக்குமி! இன்றைக்குப் பதினாறாம் நாளில் திட்டிவிடம் என்னும் பாம்பு உன் கணவனின் உயிரைக் கொல்லும். அவனோடு சேர்ந்து நீயும் தீயிற் புகுந்து இறப்பாய். பிறகு காவிரிப்பூம்பட்டினத்தில் பிறப்பாய்

அங்கு உனக்கு ஒரு துன்பம் நேரும்போது மணிமேகலா தெய்வம் தோன்றி உன்னைக் காவிரிப்பூம்பட்டினத்திற்குத் தெற்கேயுள்ள ஒரு தீவில் வைக்கும். அங்குள்ள புத்த பீடிகையை வணங்கும்போது உன்னுடைய முற்பிறப்பு நிகழ்ச்சிகளை அறிவாய்; நான் சொன்ன மொழிகளையும் தெரிந்து கொள்வாய்'' என்றார். உடனே இலக்குமி, ''என் கணவன் எங்கு எவ்வாறு பிறப்பான்?'' என்று கேட்டபோது முனிவர், ''உன்னை எடுத்துச் செல்லும் தெய்வம் உனக்குப் புலப்படுத்தும்'' என்றார். இப்போது இத் தீவில் தன்னுடைய முற்பிறப்புச் செய்தியை அறிந்த மணிமேகலை, முனிவர் சொன்ன அத் தெய்வம் வரவில்லையே என ஏங்கி அழுது கொண்டிருந்தாள்.

10. மந்திரங் கொடுத்த காதை

மணிமேகலை புத்த பீடிகையைத் தொழுது தன் முற்பிறப்பை அறிந்து கொண்டவளாக மணிமேகலா தெய்வம் வாராதா என வருந்திக் கொண்டிருந்தபோது அத் தெய்வம் அவள் முன் வந்தது. மணிமேகலை அத் தெய்வத்தினிடம், ''உன் அருளால் என் முற்பிறப் பறிந்தேன். முற்பிறப்பில் என் கணவனான இராகுலன் இப்போது எங்கே உளான்?'' என்று கேட்டாள்.

அத் தெய்வம், ''இலக்குமி! நீ சோலையொன்றில் உன் கணவன் இராகுலனோடு ஊடியிருந்தாய். ஊடலைத் தீர்க்க அவன் உன் பாதம் பணிந்தான். அப்போது அங்குச் சாதுசக்கர முனிவர் தோன்றினார். கணவன் உன்னை வணங்கியிருந்த அந் நிலையில் நாணமுற்றவளாய் அம் முனிவரை வரவேற்றாய். உன் கணவனோ, 'வந்தவர் யார்?', எனச் சினந்து கேட்டான். நீ உன் கணவன் வாயைப் பொத்தி, அவனுடன் சேர்ந்து முனிவரை வணங்கினாய். ''பெரியீர்! யாம் உம்மைப் பேணும் தகுதிபெற்றவர் அல்லேம். ஆயினும் எம்மிடம் நீரும் உணவும் உள்ளன, உண்ணுங்கள்'' என்றீர்! அவரும் உண்டார். அப் புண்ணியத்தால் இப்பிறவியில் உயர்ந்த பிறவி பெற்றுள்ளீர்.

உவவனத்தில் உன்பால் வந்த உதயகுமரனே முற்பிறப்பில் உன் கணவனாக இருந்த இராகுலன். அதனால்தான் அவன் உன்னை விரும்பியதோடன்றி உன் மனமும் அவன்பால் சென்றது. அப் பற்றினை நீக்கி உன் மனத்தை ஒரு நிலைப்படுத்துவதற்காகவே உன்னை இங்குக் கொண்டுவந்து இப் பீடிகையைக் காணச் செய்தேன்.

இலக்குமியாகிய மணிமேகலையே! இன்னும் கேள். முற்பிறப்பில் வீரை, தாரை என்போர் உன் தமக்கையர். அவர்கள் இருவரையும் அங்கநாட்டுக் கச்சய நகர அரசன் துச்சயன் மணந்தான். ஒரு நாள் மலைவளங் கண்டு கங்கைக் கரையில் அவர்கள் இருந்தனர். அப்போது அங்கே அறவண அடிகள் வந்தார். அவரை வணங்கி, ''அடிகள் இங்கு வந்த காரணம் யாதோ?'' எனக் கேட்டனர். அடிகள், ''பாதபங்கய மலையில் புத்தருடைய பாதச் சுவடு உள்ளது. அதனை வழிபடவே வந்தேன். நீங்களும் அதனை வழிபடுங்கள்'' என்றார். அவ்வாறு வழிபட்ட புண்ணியத்தால் தாரையும் வீரையும் இப்போது மாதவி யாகவும், சுதமதியாகவும் பிறந்துள்ளனர்.

மணிமேகலை! நீ பழம் பிறப்பை அறிந்து கொண்டாய்! தருமத்தின் தோற்றத்தையும் தெரிந்து கொண்டாய்! மற்றைச் சமயவாதிகளுடைய கொள்கைகளையும் இனி ஒரு காலத்தில் கேட்பாய்! அப்போது, ''நீ இளையள்; வளையலணிந்த பெண்; என்பதால் அவர்கள் தத்தம் சமய உண்மைகளைச் சொல்லமாட்டார். ஆதலால் அக் காலத்தில் வேற்று வடிவங் கொள்ள வேண்டியது இன்றியமையாதது'' எனக் கூறி வேற்றுருக் கொள்ளவும், வான் வழியே செல்வதற்குமான இரண்டு மந்திரங்களை மணிமேகலா தெய்வம் மணிமேகலைக்கு அருளியது. 'பீடிகையை வணங்கி ஊர் செல்க' எனப் பணித்து அத் தெய்வம் மேலெழுந்தது. மீண்டும் திரும்பி, ''ஒன்றைச் சொல்ல மறந்துவிட்டேன். மக்கள் உடல் உணவால் ஆகியது. பசியைப் போக்கும் இந்த மந்திரத்தையும் தெரிந்து கொள்'' எனச் சொல்லி பசியாதிருக்க ஒரு மந்திரத்தையும் கற்றுத் தந்தபின் விண்வழியே எழுந்து சென்றது.

11. பாத்திரம் பெற்ற காதை

தீவில் மணிமேகலை உலாவி வருகையில் ஒருத்தி தோன்றி, ''தனியே இங்குள்ள நீ யார்?'' எனக் கேட்டாள். மணிமேகலை, ''யார் என்றது எப்பிறப்பில்? முன் பிறவியில் இராகுலன் என்னும் அரசிளங் குமரனின் மனைவியாய் இலக்குமி என்ற பெயருடனிருந்தேன். இப்பிறப்பில் காவிரிப்பூம்பட்டினத்தில் நாடகக் கணிகை மாதவியின் மகளாய் உள்ளேன். என் பெயர் மணிமேகலை. மணிமேகலா தெய்வம் என்னை இங்கே கொண்டு வந்தது. இங்குள்ள பீடிகையைக் கண்டு என்

முற்பிறப்பு அறிந்தேன்'' என்றாள். மணிமேகலை அப் பெண்ணை, 'நீ யார்?' எனக் கேட்டாள். ''நான் இந்திரன் கட்டளைப்படி இங்குள்ள பீடிகையைக் காவல் செய்து வருகிறேன். என் பெயர் தீவதிலகை. பீடிகையால் பிறப்புணர்ந்த நீ பெருமையுடையவள். பீடிகையின் முன்னே கோமுகி என்னும் பொய்கை உள்ளது. ஒவ்வோராண்டும் புத்தர் பிறந்த வைகாசி முழு நிலவில் அப் பொய்கையிலிருந்து அமுதசுரபி என்னும் பாத்திரம் மேலே தோன்றும். இத் தினம் அத் தினம்; அது தோன்றும் வேளையும் இதுவே; அப் பாத்திரம் உன் கையில் வந்து சேரும். அதில் எடுக்க எடுக்கக் குறையாது சோறு நிறைந்து கொண்டே இருக்கும். அப் பாத்திரத்தின் வரலாற்றை உன் ஊரிலுள்ள அறவண அடிகளிடம் கேள்'' என்றாள். மணிமேகலை மகிழ்ந்து பீடிகையை வணங்கி, பொய்கையை வலம் வந்து நின்றதும், அமுதசுரபி அவள் கையில் சேர்ந்தது. தீவதிலகை மணிமேகலையிடம் பசியின் கொடுமையைக் கூறி, 'இனி உன் ஊர் சென்று அங்கே பசி நீங்கும் அறத்தைச் செய்க' எனக் கூறினாள் மணிமேகலையும் விண்வழியே செல்லும் மந்திரத்தை ஓதி, புகார் திரும்பினாள். தன்னைக் காணாது வருந்தியிருந்த தன் தாயையும் தோழி சுதமதியையும் கண்டு அவர்களுடைய முற்பிறப்புச் செய்தியையும் கூறினாள். பின்னர் அவர்களை அழைத்துக் கொண்டு அறவண அடிகளைக் காணச் சென்றாள்.

12. அறவணர்த் தொழுத காதை

மணிமேகலை அறவண அடிகளிடம், தான் மணிபல்லவம் சென்றதும், புத்த பீடிகையைத் தொழுது பழம் பிறப்பினை உணர்ந்ததும் கூறினாள். தீவில் மணிமேகலா தெய்வம் தோன்றி, ''முன் பிறப்பில் உன் கணவனாக இருந்த இராகுலனே இப்போது உதயகுமரனாகப் பிறந்துள்ளான். முற்பிறப்பில் உன் தமக்கையராயிருந்த தாரையும், வீரையுமே மாதவியும், சுதமதியுமாக வந்துள்ளனர். அவர்கள் வரலாற்றை அறவண அடிகள்பால் தெரிந்கொள் எனச் சொல்லியது. பின்னர்ப் பீடிகையைக் காவல் செய்யும் தீவதிலகை தோன்றினாள். அவள் கூறியவாறு கோமுகிப் பொய்கையில் அமுதசுரபி பெற்றேன். அஃது ஆபுத்திரனுடையது. அவன் வரலாற்றை அறவண அடிகளிடம் அறியலாம் என்றாள் தீவதிலகை. தீவிலிருந்து திரும்பிய நான் தங்களைக் காணவந்துள்ளேன்'' என்றாள்.

13. ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை

அறவண அடிகள் மணிமேகலைக்கு ஆபுத்திரன் வரலாற்றைக் கூறினார். வாரணாசி என்னும் ஊரில் ஓர் அந்தணன் இருந்தான். அவன் பெயர் அபஞ்சிகன். அவன் மனைவி சாலி. அவள் கற்பொழுக்கம் கெட்டாள்; பாவத்தைத் தீர்த்துக் கொள்ளக் குமரியாடப் புறப்பட்டாள். வழியில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதை ஒரு தோட்டத்தில் இட்டு நீங்கினாள். குழந்தை பசியால் அழுதது. ஒரு பசு அதற்குப் பால் சுரந்தூட்டி ஏழு நாள் பாதுகாத்திருந்தது.

இளம்பூதி எனும் அந்தணன் தன் மனைவியோடு அவ்வழியே வந்தான். குழந்தை அழும் ஒலி கேட்டு அங்குச் சென்று குழந்தையைக் கண்டான். அதனை எடுத்துச் சென்று வளர்த்தான். எல்லாக் கலைகளையும் கற்பித்தான். அச் சிறுவன் ஒரு நாள் ஓர் அந்தணன் வீட்டில் யாகத்தில் வெட்டப்படுவதற்காக ஒரு பசு கட்டப் பட்டிருந்ததைக் கண்டான். பசு அலறுதலைக் கண்டு, வருந்தி, அன்றிரவு ஒருவரும் அறியாமல் பசுவை அவிழ்த்து வெளியே சென்று விட்டான். பசுவைக் காணாது அந்தணர்கள் தேடி அலைந்து, பசுவோடிருந்த சிறுவனைக்கண்டு, அவனை அடித்துத் துன்புறுத்தினர். பசு, அந்தண உவாத்தியின் வயிற்றினைக் கொம்பினால் குத்திக் கிழித்துத் தப்பியோடி விட்டது. ''பசுவை வருத்தும்படி அது என்ன குற்றம் செய்தது?'' என அந்தணர்களைச் சிறுவன் கேட்டான். ''நீ வேள்வி விதியை அறியாமல் பேசுகிறாய். நீ பசு மகனே'' என இகழ்ந்தனர். ''அந்தணர்கள் மதிக்கும் வேத முனிவர்களெல்லாம் புலிக்கும் நரிக்கும் மானுக்கும் பிறந்ததாகச் சொல்லப்படுகிறதே! அப்படியானால் பசு மகன் என்பதிலே இழிவென்ன இருக்கிறது?'' என்று கேட்டான் சிறுவன் ஆபுத்திரன். அப்போது ஓர் அந்தணன், தான் அச் சிறுவனின் தாய் சாலியைக் கண்டதையும், அவள் தன் குழந்தையை வழியில் போட்டுச் சென்றதற்கு வருந்தித் தன்னிடம் அழுது புலம்பியதையும் சொல்லி அம்மகனே இவன் என்றும், இதைச் சொல்லுவதால் பயனேதுமில்லை என்பதால் அதுவரை சொல்லாதிருந்ததாகவும் சொன்னான். அந்தணர்கள் ஆபுத்திரனையும் அவன் தாயையும் இழித்துப்பேச, ''தேவதாசி திலோத்தமையின் மக்கள் பெரிய முனிவர்களாயிருக்க சாலியை மட்டும் தவறு சொல்வது ஏன்?'' என்று வினவினான்.

அவனை வளர்த்த தந்தை அவனை வீட்டை விட்டு நீக்கினான். ஆபுத்திரன் பிச்சை உணவுக்காகப் பாத்திரம் ஏந்திச் சென்றான். ஊரார் பாத்திரத்தில் உணவிடுவதற்கு மாறாகக் கற்களைப் போட்டனர். வேறு வழியின்றி அவன் தென் மதுரையை அடைந்தான். அங்கே சிந்தாதேவி கோவிலின் முன்னேயிருந்த அம்பலத்தில் தங்கினான். ஊரில் பிச்சையெடுத்துக் குருடர், செவிடர், முடவர் ஆகியோர்க்குத் தந்து எஞ்சியதைத் தானுண்டு, பிறகு அவ்வோட்டையே தலையணையாகக் கொண்டு அம்பலத்தில் தூங்கிக் காலம் கழித்து வந்தான்.

14. பாத்திர மரபு கூறிய காதை

ஒரு நாள் நள்ளிரவில் ஆபுத்திரன் அம்பலத்தில் உறங்கியிருந்த போது மழையில் நனைந்த வண்ணம் வந்த சிலர், பசிக்கு உணவு கேட்டனர். ஆபுத்திரன் செய்வதறியாது வருந்தியிருந்தபோது, சிந்தாதேவி என்ற தெய்வம் தோன்றி, ''நாடெல்லாம் வறுமையுற்றாலும் இப் பாத்திரத்தில் உணவு வளர்ந்துகொண்டே இருக்கும்'' என ஓர் அட்சய பாத்திரத்தைக் கொடுத்து மறைந்தது. ஆபுத்திரன் சிந்தாதேவியைத் துதித்தவனாய் வந்தவர்கள் பசியைப் போக்கினான். அன்று முதல் எல்லா உயிர்களுக்கும் உணவளிக்கத் தொடங்கினான். பழுமரம் சூழும் பறவைபோல அவனைச் சுற்றி இடையறாது பறவைகளும், விலங்குகளும், மனிதர்களும் சூழ்ந்து கொண்டனர். அவனுடைய அறச் சிறப்பு இந்திரனுக்குத் தெரிந்தது. இந்திரன் ஒரு முதியவன் வடிவில் தோன்றி, ''நான் இந்திரன் வந்துளேன்; உன் அறப் பயனைப் பெற்றுக் கொள். உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டான். ஆபுத்திரன் எளிய நகைத்து, ''உன்னால் மண்ணும் பெண்ணும் பொன்னும்தான் தரமுடியும். உலகத்தில் பசியால் வருந்திவந்தவர்கட்கு உணவளிக்க, அதனால் அவர்களின் திருந்துமுகம் காணும் இன்பத்திலும் சிறந்த இன்பம் உண்டோ? இவ் வின்பம் தவிர நான் வேறு வேண்டேன். நீவிர் போகலாம்'' என்றான். இந்திரன் வெகுண்டு, மேகங்களை ஏவி, பெருமழை பெய்யச் செய்தான். நாடெலாம் வளமுற்றதால் ஆபுத்திரனிடம் பிச்சை ஏற்க வருவோர் எவரும் இலராயினர். ''உண்பார் யாரேனும் உண்டா?'' என்று அவன் கேட்டால் அவனை எள்ளினர். 'உயிர் மருந்தளிக்கும் இக் கலத்தை ஒன்றுக்கும் உதவாமல் வைத்திருக்கிறேனே' என அவன் வருந்தியிருந்த போது, கப்பலில்

வணிகம் செய்து மீண்ட சிலர் சாவக நாட்டில் மழையின்றி மக்கள் பசித் துன்பத்தால் வாடுவதாகக் கூறினர். ஆபுத்திரன் உடனே அந் நாட்டிற்குச் செல்லும் கப்பலில் ஏறினான். அக் கப்பல் மணிபல்லவத் தீவின் அருகே ஒருநாள் தங்கியது. ஆபுத்திரன் இறங்கித் தீவினுள் சென்றான். இரவில், அவன் ஏறி விட்டதாக நினைத்து, மாலுமி கப்பலைச் செலுத்திக் கொண்டு போயினன். மணிபல்லவத்தில் தனியே விடப்பட்ட ஆபுத்திரன் பெரிதும் வருந்தி, ''பலருக்கும் உணவளிக்கும் இப் பாத்திரத்தை வைத்துக் கொண்டு யான் ஒருவன் மட்டும் இங்கிருப்பது தகாது'' என நினைத்து, 'அறச் செயலால் அனைத்துயிர்களையும் பேணுகின்ற அருளுள்ளம் கொண்டவர் எவரேனும் இங்கே வருவராயின் அவர் கையில் சேர்க' எனச் சொல்லி அப் பாத்திரத்தை அங்கிருந்த கோமுகி என்னும் பொய்கையில் விட்டான். பின்னர் அவன் பட்டினி கிடந்து உயிர் துறக்கும் நிலையில் இருந்தபோது நான் அங்குச் சென்றேன். அவன், முன் நிகழ்ந்தவற்றையெல்லாம் என்னிடம் கூறியதும் உயிர் விட்டான். அவ் வுயிர் சென்று சாவக நாட்டிலுள்ள ஒரு பசுவின் வயிற்றில் தங்கி ஒரு மகனாகப் பிறந்துள்ளது'' என அறவண அடிகள் கூறினார்.

15. பாத்திரம் கொண்டு பிச்சைபுக்க காதை

மணிமேகலைக்கு அறவண அடிகள் மேலும் கூறினார். ''மணிமேகலை! முன்பு ஆபுத்திரனுக்குப் பாலூட்டிய பசு, நல்வினையால், சாவகத் தீவில் பனிமலையில் தவம் செய்து கொண்டிருந்த மண்முக முனிவரிடத்தில், பொன் கொம்பும் பொன் குளம்புமுடையதாய்ப் பிறந்து வளர்ந்தது. அஃதும் முன்னரே பால் சுரந்து உயிர்களுக்கு ஊட்டியது. அப் பசுவின் வயிற்றில் ஒரு பேரருளாளன் தோன்றுவான் என முனிவர் கூறினார். மணி பல்லவத்தீவில் உயிர் விட்ட ஆபுத்திரன் அப் பசுவின் வயிற்றில் பொன்முட்டையில் கருவாய் இருந்து ஒரு வைகாசிப் பௌர்ணமியில் மகனாகப் பிறந்தான். அவன் பிறந்தபோது நன்னிமித்தங்கள் தோன்றின.

மகப்பேறில்லாமல் வருந்திய அந் நகர அரசன் பசு பெற்ற குழந்தையை வாங்கிச் சென்று வளர்த்தான். இப்போது அவன் அங்கு அரசனாகத் திகழ்கிறான்.

மணிமேகலையே! நீ இந்த அமுத சுரபியை மறைத்து வைக்காமல் உலகின் பசியைப் போக்குவாயாக'' என்றார் அறவண அடிகள். மணிமேகலை பாத்திரத்தை ஏந்திப் பிக்குணிக் கோலத்துடன் வீதிக்கு வந்தாள். பெருங்கூட்டம் அவளைச் சூழ்ந்தது! மணிமேகலை அப்போது, ''கற்புடைய மாதர் இடும் பிச்சையையே முதலில் ஏற்க வேண்டும்'' என்றாள். கூட்டத்திலிருந்த காயசண்டிகை என்பவள், ''பெருங் கற்பினளாகிய ஆதிரையின் வீட்டில் நீ புகலாம்'' என ஆதிரையின் வீட்டைக் காட்டினாள்.

16. ஆதிரை பிச்சையிட்ட காதை

ஆதிரையின் வீட்டைக் காட்டிய காயசண்டிகை ஆதிரையின் கற்புச் சிறப்பையும் கூறினாள். ''ஆதிரையின் கணவன் சாதுவன். அவன் தீயொழுக்கம் கொண்டு ஒரு கணிகையிடம் வாழ்ந்து வந்தான். அவனுடைய பொருளெல்லாம் தீர்ந்தபின் கணிகை அவனை வீட்டை விட்டு வெளியேற்றினாள். அவன் பொருள் தேட வணிகர்களுடன் ஒரு கப்பலில் சென்றான். கடுங்காற்றால் கப்பல் கவிழ்ந்தது. ஒடிந்த பாய்மரத் துண்டினைப் பற்றி நீந்திச் சென்று உடையில்லாமல் திரிபவர்களாகிய நாகர்கள் வாழும் மலைப்பக்கம் சேர்ந்தான். கப்பலில் தப்பிய சிலர் காவிரிப் பூம்பட்டினம் வந்தடைந்தனர். அவர்கள் ஆதிரையிடம், ''கப்பல் உடைந்ததால் இறந்தவர்களோடு சாதுவனும் இறந்தான்'' எனக் கூறினர். அவள் மிகவும் வருந்தி, சுடுகாட்டில் குழி தோண்டி, விறகுகளை அடுக்கித் தீமூட்டி, 'என் கணவன் சென்ற இடத்தை நானும் அடைவேனாக' எனத் தீயில் குதித்தாள். தீ அவளைச் சுடவில்லை. தாமரையில் வீற்றிருக்கும் திருமகள் போலத் தீயினிடையே தோற்றமளித்த அவள், அத்தீயினின்று வெளிப்போந்து, 'தீயும் சுடாத பாவியானேனே' என வருந்தினாள். அப்பொழுது, 'உன் கணவன் இறக்கவில்லை. அவன் உயிர்தப்பி நாகர் மலையில் இருக்கிறான். விரைவில் சந்திரதத்தன் கப்பலில் திரும்புவான்' என ஓர் அசரீரி கேட்டது. ஆதிரை மகிழ்ச்சியோடு வீடடைந்து நல்லறச் செயல்களைச் செய்து வந்தாள்.

சாதுவனைக் கண்ட நாகர்கள் நல்ல உணவு கிடைத்ததெனக் களித்தனர். சாதுவனுக்கு நாகர்களின் மொழி தெரிந்திருந்ததால் அவர்களோடே நன்கு பேசினான். அது கேட்டு மகிழ்ந்த காவலர்கள்,

அவனைத் தம் தலைவரிடம் அழைத்துச் சென்றனர். கள் குடங்களுக்கிடையே வெள்ளெலும்புகளின் மீது புலால் நாற்றம் வீசக் கரடி தன் பெண் கரடியுடனிருப்பது போலத் தலைவன் வீற்றிருந்தான்.

தலைவன், சாதுவனை அங்கு வந்தது ஏன்? எனக் கேட்க, சாதுவன் நிகழ்ந்தவை கூறினான். தலைவன் தன் மக்களை நோக்கி, 'இவன் களைத்து வந்திருக்கிறான். குடிக்கக் கள்ளும் இன்புற்றிருக்கப் பெண்ணும் இவனுக்குத் தாருங்கள்' என்றான். சாதுவன், 'எனக்கு அவை வேண்டா' என்றான். வெகுளியுற்ற நாகர் தலைவன், 'பெண்ணையும் கள்ளையும் தவிர, பேரின்பம் தர வேறு எது உண்டு?' எனக் கேட்டான். சாதுவன் அவனுக்கு உயிர் பிறத்தல், இறத்தல், நல்வினை, தீவினை ஆகியவைபற்றி விளக்கமாக எடுத்துரைத்தான். நல்லறிவு பெற்ற நாகர் தலைவன் இனி அவர்கள் செய்ய வேண்டியதைக் கூறுமாறு கேட்டான். சாதுவன், 'கடலில் தப்பிக் கரை சேர்பவர்களை உண்ணாது அவர்களைப் பாதுகாத்து அனுப்புங்கள். செத்த உயிர்களைத் தவிரப் பிறவற்றைக் கொன்று உண்ணாதீர்கள்' என்றான். மகிழ்ந்த தலைவன் பொன்னும் பொருளும் சாதுவனுக்கு அள்ளிக் கொடுத்தான். அவற்றைப் பெற்று அங்கு வந்த சந்திரதத்தன் கப்பலில் சாதுவன் மீண்டான்'' என ஆதிரை வரலாற்றைக் காயசண்டிகை கூறினாள். மணிமேகலை ஆதிரை வீட்டினுள் நுழைந்து புனையா ஓவியம்போல நின்றாள்.

17. உலக அறவி புக்க காதை

ஆதிரை பிச்சையிட்டதும் அமுதசுரபியில் உணவு எடுக்க எடுக்கக் குறையாது வளர்ந்தது. காயசண்டிகை மணிமேகலையிடம், ''தாயே! என் தீராப் பசியைத் தீர்த்தருள வேண்டும்'' என்று வேண்டினாள். மணிமேகலை ஒரு பிடி அள்ளியிட அவள் பசி தீர்ந்தது. தன் வரலாற்றை அவள் மணிமேகலைக்குக் கூறினாள். ''வட திசையில் வித்தியாதரர் உலகத்திலுள்ள காஞ்சனபுரம் என்பது என் ஊர். காவிரிப்பூம்பட்டினத்தில் நடைபெறும் இந்திர விழாவைக் காண நானும் என் கணவனும் விண்வழியே பறந்து வந்தோம். இடையே ஒரு காட்டாற்றங்கரையில் தங்கினோம். அங்கு விருச்சிகன் என்றொரு முனிவன் நீராடி வந்து உண்பதற்காக ஒரு பெரிய நாவல்கனியைத் தேக்கிலையில் வைத்துச் சென்றிருந்தான். என் தீவினையால் நான்

அதை என் காலால் சிதைத்து விட்டேன். நீராடித் திரும்பிய முனிவன் சினந்து, 'இது பன்னிரண்டாண்டுக்கொரு முறை ஒரு கனியைத் தரும் நாவல் மரத்தில் உண்டானது. உண்டோர் பன்னிரண்டாண்டு பசியின்றி இருப்பர். நான் பன்னிரண்டாண்டு நோன்பிருந்து இதனை உண்ணும் வழக்கமுடையேன். இதை நீ சிதைத்தாய். ஆதலால் நீ விண்வழியே செல்லும் சக்தியை இழப்பாய். யானைத்தீ எனும் தீராப் பசி நோயால் உழன்று, அடுத்த பன்னிரண்டாண்டின்பின் கனியை நான் உண்ணும் நாளில் உன் பசி தீர்வதாக, எனச் சபித்தான். என் கணவன் காய் கனி எவ்வளவு தந்தும் என் பசி தீரவில்லை. விண்ணில் செல்லும் மந்திரமும் மறந்தது. என் கணவன் என்னிடம், 'ஆற்றாதவர்க்கு அள்ளி வழங்கும் செல்வர்கள் உள்ள காவிரிப்பூம்பட்டினத்திற்குச் சென்று தங்கு' எனக் கூறிச் சென்றான். முனிவர் சொன்ன பன்னிரண்டாண்டு முடியும் நாள் இதுபோலும்! உன் கையால் சோறு பெற்றுப் பசி தீர்ந்தேன். இவ்வூரில் முனிவர்கள் வாழும் சக்கரவாளக் கோட்டம் என்ற ஒன்று உண்டு. யாவரும் வந்து தங்க அதில் 'உலக அறவி' என்னும் அம்பலம் ஒன்றுண்டு. அதில் சென்று தங்குவாயாக'' எனச் சொல்லி, விண்வழியே தன்னூர் சென்றாள் காயசண்டிகை.

மணிமேகலை உலக அறவியை அடைந்து அங்குள்ள சம்பாபதி தெய்வத்தையும் கந்திற் பாவையையும் வணங்கினாள். ''ஆபுத்திரன் கை அமுதசுரபி இது. உண்ணுதற்கு விருப்பமுள்ளோர் எவரும் வருக'' என்று அழைத்தாள். பலரும் வந்து உண்டதால், உலக அறவியில் உண்போர் ஒலி ஓயாது கேட்டது.

18. உதயகுமரன் அம்பலம் புக்க காதை

மணிமேகலை பிக்குணிக் கோலம் கொண்டு பிச்சையெடுத்து உலக அறவியில் தங்கியிருப்பதை அறிந்து சித்திராபதி மனம் கொதித்தாள். மணிமேகலையை அச் செயலிலிருந்து நீக்குவேன் எனச் சூளுரைத்தாள். உதயகுமரனிடம் சென்றாள். மணிமேகலை உலக அறவியில் இருப்பதைக் கூறி உடனே சென்று அவளைக் கைப்பற்றி வரவேண்டுமெனத் தூண்டினாள். உதயகுமரனும் உலக அறவியை அடைந்து மணிமேகலையைப் பார்த்து, 'நீ தவக்கோலம் பூண்டதேன்?' என வினவினான். பழம் பிறப்பில் தன் கணவனாக இருந்ததால் உதயகுமரனை மணிமேகலை மனத்துள் வணங்கினாள். அதேசமயம்

அவன் ஏது செய்வானோ என மறுகினாள். இவ்வுருவத்தோடு இருந்தால் அவனிடமிருந்து தப்புவது எளிதன்று என உணர்ந்தாள். சம்பாபதி கோயிலினுள் சென்றாள். முன்பு மணிமேகலா தெய்வம் அருளிய மந்திரத்தை ஓதி, காயசண்டிகை வடிவத்தை மேற்கொண்டு வெளியே வந்தாள். உதயகுமரன் மணிமேகலையைக் காணாது மயங்கினான். 'மணிமேகலையின்றி இங்கிருந்து அகலேன்' எனச் சம்பாபதியின் திருவடிகளை வணங்கிச் சூளுரைத்தான்.

19. சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய காதை

உதயகுமரன் சம்பாபதியை வணங்கிச் சூளுரைத்தபோது அக் கோயில் சிற்பம் ஒன்று, ''அரசகுமரனே! ஆராய்ந்து பாராமல் சூளுரை கூறினை. நீ மணிமேகலையைத் தீண்டமுடியாது'' என்றது. உதயகுமரன், ''மணிமேகலையை மறப்பாய் என்று முன்னொரு தெய்வம் கூறியதும், இப்போது இத் தெய்வம் என் எண்ணம் தவறு என்று கூறுவதும் வியப்பளிக்கிறது. இவற்றைப் பின்னர் அறிவோம். முதலில் மணிமேகலையின் செய்தியை அறிவோம்'' என நினைந்தவனாய் அரண்மனை சென்றான். மணிமேகலை காயசண்டிகை வடிவில் இருப்பதே நல்லது என்று கருதி அவ்வுருவிலேயே அனைவர்க்கும் உணவளித்து வந்தாள். ஒருநாள் சிறைச் சாலைக்குள் நுழைந்தாள். அங்கிருந்தோர் வாங்கும் கை தாங்க முடியாது வருந்துமாறு உணவை அள்ளி அள்ளித் தந்தாள். சிறைக் காவலர் அரசனுக்கு இச் செய்தியைக்கூற, அரசன் அப்பெண்ணை அழைத்து வருமாறு கூறினான். அவள் வந்ததும், ''பெண்ணே நீ யார்? இப் பாத்திரம் உனக்கு எப்படிக் கிடைத்தது?'' எனக் கேட்டான். அவள் ''அரசே! நான் விஞ்சை மகள். அம்பலத்திலுள்ள தெய்வம் எனக்கு இப் பாத்திரத்தைத் தந்தது'' என்றாள். வியந்த அரசன், ''உனக்கு நான் செய்ய வேண்டுவது ஏதேனும் உண்டா?'' என்று கேட்டான். அவள், ''அரசே! சிறைச்சாலையை அறச்சாலையாகச் செய்ய வேண்டும்'' என்றாள். அவள் விரும்பியவாறே அரசனும் சிறைச்சாலையை அறச்சாலையாக ஆக்கினான்.

20. உதயகுமரனை வாளால் எறிந்த காதை

இச் செய்திகளையெல்லாம் அறிந்த உதயகுமரன், ''மணிமேகலை உலக அறவியை விட்டு வெளியேறும்போது கைப்பற்றி வந்து அவள்

கற்ற வித்தைகளைக் கேட்டறிவேன்'' என எண்ணியவனாய் உலக அறவியை நோக்கிச் சென்றான்.

காயசண்டிகை விருச்சிக முனிவனால் சாபம் பெற்றுப் பன்னிரண்டாண்டுகள் முடிந்தும் அவள் இன்னும் தன் ஊர் வந்து சேராததால் அவளைத் தேடி அவள் கணவன் விஞ்சையன் பூம்புகார் வந்தான். மணிமேகலை காயசண்டிகை வடிவிலிருந்ததால் அவளே தன் மனைவி என்று கருதினான். அவளிடம் சென்று பேசினான். மணிமேகலை அவனை அறியாள்; ஆதலால் அவன் பேசுவதை விரும்பாது ஒதுங்கினாள். அதேவேளை அங்கு வந்த உதயகுமரனிடம் ஒரு நரைத்த கிழவியைக் காட்டி, உடலின் இழிதன்மையை எடுத்து ரைத்து உபதேசித்தாள். காஞ்சனன், ''இவள் நம்மை மதிக்கவில்லை. அயலானிடம் பேசுகிறாள். அவனிடம் கொண்ட ஆசையாலே இங்குத் தங்கி விட்டாளோ'' எனச் சீற்றத்துடன் உலக அறவியினுள்ளே ஒரு பக்கத்தில் ஒளிந்திருந்தான். உதயகுமரனோ, ''இவள் மணிமேகலையேதான்! வேற்றுருக் கொண்டிருக்கிறாள். இரவில் திரும்பி வந்து இவள் செய்தியை அறிவோம்'' என அரண்மனை சேர்ந்தான்.

காயசண்டிகை வடிவிலிருந்த மணிமேகலை சம்பாபதி கோயிலினுள் சென்றாள். இரவில் உதயகுமரன் அங்கே வந்தான். சினத்துடன் அங்கிருந்த காஞ்சனன் உதயகுமரனை வெட்டி வீழ்த்தினான். காயசண்டிகையைப் பற்றிச் செல்ல உள்ளே நுழைந்தான். அங்கேயிருந்த கத்திற்பாவை, அவன் மனைவி நோய் நீங்கி, தன் ஊர்க்குப் பறந்து சென்றபோது, யாரும் மேலே பறந்து செல்லக்கூடாத விந்திய மலை மீது பறந்து சென்றதையும், அதனால் மலையைக் காக்கும் விந்தாகடிகை அவளை இழுத்துத் தன் வயிற்றுக்குள் அடக்கிக் கொண்டதையும் கூறி உள்ளே செல்ல வேண்டாம் எனத் தடுத்தது. காஞ்சனன் வருந்தி ஊர் திரும்பினான்.

21. கந்திற்பாவை வருவது உரைத்த காதை

உதயகுமரன் வெட்டுண்டு வீழ்ந்ததைப் பார்த்த மணிமேகலை தான் கொண்ட வேற்றுருவை நீக்கி, முற்பிறப்பில் அவன் தன் கணவனாயிருந்ததைச் சொல்லி அழுதவாறு அவனருகே செல்லத்

தொடங்கினாள். கந்திற்பாவை, ''பிறவியை ஒழிக்க முயன்று கொண்டிருக்கும் மேகலையே! பழமையை நினைக்காதே! அங்குச் செல்லாதே'' என்றது. மணிமேகலை அத் தெய்வத்தை வணங்கி, ''சென்ற பிறப்பில் திட்டிவிடத்தால் இறந்த இவன், இப்போது வாளால் வெட்டப்பட்டது ஏன்?'' என வினவினாள். ''சென்ற பிறவியில் காயங்கரை என்னும் ஆற்றங்கரையிலிருந்த பிரதமதரும முனிவரை இலக்குமியாக இருந்த நீயும் இராகுலனும் வழிபட்டு அவரை உணவுண்ண அழைத்தீர்கள். அவரும் ஒப்பினார். சமையற்காரன் கால்தடுக்குற்றுக் கீழே விழுந்ததால் உணவுக் கலம் உடைந்தது. இராகுலன் சினமுற்று அவன் தோளும் தலையும் துண்டாகும்படி வெட்டினான். அத் தீவினையாலேயே உதயகுமரன் இப்போது வெட்டுண்டான். வினைப்பயன் நிகழ்ந்தே தீரும்'' என்று சொன்ன அத் தெய்வம் மேலும் கூறியது, ''உதயகுமரன் இறந்த செய்தியை இங்குள்ள முனிவர்கள் அரசனிடம் சொல்வர். அரசன் உன்னைச் சிறையிலிடுவான். இராசமாதேவி உன்னை மீட்டுத் தன் காவலில் வைப்பாள். மாதவியின் வேண்டுகோளால் அறவண அடிகள் உன்னை வந்து மீட்பார். பிறகு நீ சாவக நாடு சென்று அங்கு மறுபிறவி எடுத்து அந் நாட்டை ஆண்டு வரும் ஆபுத்திரனை அடைவாய். அவனோடு மணிபல்லவம் செல்வாய். அங்கு ஆபுத்திரன் தன் வரலாற்றை அறிவான். பின், நீ முனிவன் வேடம் கொண்டு வஞ்சி நகர் புகுவாய். அங்குள்ள சமயவாதிகள் கூறுவதெல்லாம் கேட்பாய்'' என அத் தெய்வம் சொல்லியது.

மணிமேகலை அத் தெய்வத்திடம் தன் மரணம்வரை நடக்க இருப்பதைக் கூறுமாறு கேட்டாள். ''மழையில்லாமல் காஞ்சியில் பஞ்சம் ஏற்படும். அதை அறிந்து வஞ்சி நகரிலுள்ள நீ அங்கே சென்று பசித்துன்பத்தைப் போக்கி அறம் செய்வாய்! அங்கே அறவண அடிகள் இருப்பார். அவரிடம் நீ வஞ்சியில் கேட்ட சமயவாதிகளுடைய கொள்கைகளை எல்லாம் கூறுவாய். அவர் உனக்கு நல்லறம் கூறுவார். நீ காஞ்சியிலேயே இறப்பாய். மேலே பல பிறப்புகளை எடுப்பாய். அவை யாவும் ஆண் பிறப்புகளாகவே அமையும். ஒவ்வொரு பிறவியிலும் அறவழி நின்று இறுதியில் பிறப்பறுத்துப் புத்ததேவனிடம் முதன் மாணாக்கனாகி உய்தி பெறுவாய்'' என மணிமேகலைக்கு நேர இருப்பதையும் தெய்வம் கூறியது. அவ்வளவில் பகலவன் தோன்றினான்.

22. சிறைசெய் காதை

உதயகுமரன் வெட்டுண்டதைச் சக்கரவாளக் கோட்டத்திலிருந்த முனிவர்கள் அறிந்தனர். மணிமேகலையைக் கேட்கவே அவள் நிகழ்ந்ததை உரைத்தாள். முனிவர்கள் அரசனிடம் சென்று அவனை வாழ்த்தி, முற்காலத்தில் காமத்தினால் அழிவுற்றவர்களின் கதைகளைக் கூறினர். அரசன், 'அத் தீய ஒழுக்கம் இப்போதும் உளதா?' என்று கேட்டபோது உதயகுமரன் கொலையுண்ட செய்தியை விரிவாகக் கூறினர். கேட்ட அரசன், ''உதயகுமரனுக்கு நான் தரவேண்டிய தண்டனையை வித்தியாதரன் தந்துவிட்டான்! நீதி தவறாத அரச மரபில் இப்படி ஒரு தீவினையாளன் பிறந்தான் என்பதை மற்றவர் அறியும் முன்னே, அவனைச் சுடுகாடு சேர்த்துங்கள்; மணிமேகலையையும் சிறைப்படுத்துங்கள்'' என ஆணையிட்டான்.

23. சிறைவிடு காதை

இராசமாதேவி, மகன் இறந்த வருத்தத்தை வெளியே தோன்றாதவாறு அடக்கிக் கொண்டாள். ஆயினும் மணிமேகலையை வஞ்சித்து வருத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு அரசனிடம், ''துறவியாகிய மணிமேகலையைச் சிறையிலடைப்பது சிறப்பன்று'' என்றாள். அரச கட்டளைப்படி அவளைச் சிறை விடுவித்துத் தன்னுடன் அழைத்துச் சென்றாள். இராசமாதேவி மணிமேகலைக்குப் பித்துப் பிடிக்கும் மயக்க மருந்தைக் கொடுத்தாள். மணிமேகலை மறு பிறப்பு அறிந்தவளாதலால் வேறுபடாதிருந்தாள். அரசி ஓர் இளைஞனை அழைத்து, பெரும்பொருள் தருவதாக ஆசை காட்டி, மணிமேகலையை வன்முறையில் புணர்ந்து எல்லோரிடமும் கூறி இகழ் உண்டாக்குமாறு அனுப்பினாள். அவன் வந்தபோது மணிமேகலை ஆணாக உருமாறியிருக்கவே அந்த இளைஞன் அஞ்சி ஓடினான். பின்னர் இராசமாதேவி, 'இவளை உயிரோடு வையேன்' எனக் கறுவி ஒரு புழுக்கறையில் அடைத்துப் பட்டினி போட்டாள். பசியை நீக்கும் மந்திரத்தை மணிமேகலை அறிவாளாதலால் அம் மந்திரத்தை ஓதி வாட்டமின்றி இருந்தாள். இராசமாதேவி மணிமேகலையின் பெருமையை அறிந்து, தான் செய்த தவறுகளை மன்னிக்குமாறு வேண்டினாள். மணிமேகலை இராசமாதேவியிடம் உதயகுமரனின் முற்பிறப்பு வரலாறு கூறி, அவன் இறந்ததற்கான தீவினைப் பயனை

விளங்கக் கூறினாள். மனம் தெளிந்த இராசமாதேவி மணிமேகலையை வணங்க, அவளோ, ''முற்பிறப்பில் எனக்குக் கணவனாக இருந்தவற்கு இப்போது நீ தாய்; ஆதலின் என்னை வணங்குதல் தகுதியன்று'' என அவளைத் தான் வணங்கினாள்.

24. ஆபுத்திரன் நாடு அடைந்த காதை

மணிமேகலை இராசமாதேவியிடமிருப்பதையறிந்த சித்திராபதி, அரசியிடம் சென்று வணங்கி, மணிமேகலையைத் தன்னிடம் சேர்ப்பிக்குமாறு வேண்டினாள். ''பரத்தமைத் தொழில் பூண்டுள்ள உன் இல்லத்திற்கு வாராள்'' என இராசமாதேவி மணிமேகலையை அவளுடன் அனுப்ப இசையவில்லை. மாதவியும் சுதமதியும் அறவண அடிகளை அழைத்துக் கொண்டு மணிமேகலையை மீட்க அரசியிடம் வந்தனர். அரசி அடிகளை வணங்கி வரவேற்றுப் போற்றினாள். அடிகள் அரசிக்கு அறம் கூறினார். மணிமேகலை, ''நான் இங்கிருந்தால் உதயகுமரன் கொலைக்கு இவளே காரணம் என்று யாவரும் கூறுவர். நான் ஆபுத்திரன் நாடடைந்து, அவனோடு மணிபல்லவம் சென்று, பின் வஞ்சி நகர் சென்று என் தாயாகிய பத்தினித் தெய்வம் கண்ணகியைக் கண்டபின் எங்கும் சென்று நல்லறம் செய்வேன்'' என அனைவரிடமும் கூறி, விடைபெற்று வான்வழியே பறந்து சென்று புண்ணியராசன் (முன்பு ஆபுத்திரன்) நகர்ப்புறத்தேயிருந்த ஒரு சோலையுள் இறங்கினாள். அங்கிருந்தவர் புண்ணியராசனின் பெருமையை உரைக்கக் கேட்டு மகிழ்ந்தாள்.

25. ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை

அப்பொழுது புண்ணியராசன் தன் அரசியுடன் அச் சோலைக்கு வந்தான். மணிமேகலை புண்ணியராசனிடம், ''உன் கையிலிருந்த பாத்திரம் என் கைக்கு வந்தது. நீ உன் முற்பிறப்பை அறிந்தாயில்லை. மணிபல்லவம் சென்று புத்த பீடிகையை வணங்கினால் பழம் பிறப்பறிவாய்! ஆதலால் அரசே! அங்கு வருக'' எனச் சொல்லி அவள் வான்வழியே மணிபல்லவம் அடைந்தாள்.

புண்ணியராசன் கடல் வழியே மணிபல்லவத்தை அடைந்தான். மணிமேகலை அவனை அழைத்துச் சென்று, தீவை வலம் வந்து, புத்த பீடிகையைக் காட்டினாள். அதைத் துதித்ததும் அவன் தன் பழம்

பிறப்பை அறிந்தான். பின்னர் மணிமேகலையோடு கோமுகிக் கரையில் ஒரு புன்னை மரநிழலில் தங்கினான். அங்கே தீவதிலகைத் தெய்வம் வந்தது. ''அமுத சுரபி ஏந்தியிருந்தவனே! உன்னைத் தனியே விட்டுவிட்டுக் கப்பலில் ஏறிச் சென்ற ஒன்பது செட்டிகள், கப்பலில் இங்கே மீண்டும் வந்தபோது நீ இறந்து போனதை அறிந்து உண்ணா நோன்பிருந்து தங்கள் உயிரை விட்டனர். அவர்கள் உயிர்விட்டதறிந்து அவர்களுடன் வந்தவர்களும் உயிர் விட்டனர். அவர்களுடைய எலும்புகள் இவை'' எனத் தெய்வம் காட்டியது. பின்னர், புன்னை மரநிழலில் புதையுண்டிருந்த அவனுடைய எலும்புக் கூட்டையும் காட்டியது. தீவதிலகைத் தெய்வம் மணிமேகலையிடம் காவிரிப்பூம் பட்டினம் கடலால் கொள்ளப்பட்டதையும் அதற்கான காரணத்தையும் கூறியது; அறவண அடிகளும் மாதவியும் சுதமதியும் வஞ்சிநகர் சேர்ந்தனர் என்பதையும் சொல்லிப் போயிற்று.

புண்ணியராசன் மணலைத் தோண்டித் தன் முற் பிறப்பின் எலும்புக் கூட்டைக் கண்டு மயங்கினான். மணிமேகலை அவனுக்கு அறங்களை எடுத்துரைத்து, ''நீ உன் நாடு திரும்புக. நான் வஞ்சி செல்வேன்'' எனக் கூறி வானில் எழுந்தாள்.

26. வஞ்சி மாநகர் புக்க காதை

வான் வழியே சென்ற மணிமேகலை வஞ்சி மாநகரில் இறங்கினாள். தாய் கண்ணகியும் தந்தை கோவலனும் படிமங்களாக, இருந்த கோயிலுக்குச் சென்று வணங்கினாள். 'மதுரையை அழித்ததற்குக் காரணம் கூறி அருள வேண்டும்' எனப் பத்தினித் தெய்வத்தை வேண்ட, கண்ணகித் தெய்வமும், 'பழம்பிறப்பின் தீவினை ஒருவரை வந்து அடைந்தே தீரும்' எனச் சொல்லி மதுரை எரிந்ததற்கும், கோவலன் கொலையுண்டதற்கும் ஆன காரணங்களை எடுத்துரைத்தது. மேலும் கண்ணகித் தெய்வம் மணிமேகலையிடம், ''நீ இந் நகரில் உள்ள பல சமயத்தவரும் கூறும் கொள்கைகளைக் கேட்டு, அவை உனக்கு உண்மையென்று தோன்றாமையால் பௌத்த சமயத்தைப் பற்றி யொழுகுவை'' என்று கூறியது. மணிமேகலை கண்ணகியை வணங்கி, மந்திரம் ஓதி ஒரு முனிவன் உருக்கொண்டு வஞ்சி நகருள் புகுந்தாள்.

27. சமயக்கணக்கர் தம் திறம் கேட்ட காதை

வஞ்சி நகருள் புகுந்த மணிமேகலை முதலில் வைதிக நெறியைச் சார்ந்த அளவை வாதியையும், பின்னர் முறையே சைவவாதி, வைணவவாதி, ஆசீவகவாதி, நிகண்டவாதி, சாங்கிய வாதி, வைசேடிக வாதி, பூதவாதி ஆகியோரையும் சார்ந்து அவரவர்தம் கொள்ளைகளை வின்வி அறிந்தாள்.

28. கச்சி மாநகர் புக்க காதை

மணிமேகலை வஞ்சி நகரில் பல இடங்களையும் கண்டாள். பௌத்தப் பள்ளிக்குச் சென்று அங்கே தவம் செய்து கொண்டிருந்த மாசாத்துவானை வணங்கித் தனக்கு நேர்ந்ததையெல்லாம் கூறினாள். புகார் நகரம் கடலுள் மூழ்கியதையும், அறவண அடிகளும், மாதவியும், சுதமதியும் வஞ்சிநகர் வந்தனர் என்பதையும் தீவதிலகைபால் கேட்டறிந்ததைச் சொன்னாள். தான் கண்ணகி தேவியை வணங்கியதையும் வேற்றுருக் கொண்டு பல சமயவாதிகளிடம் அவர்கள் கருத்துகளைக் கேட்டதையும் கூறினாள்.

மாசாத்துவானும் தான் வஞ்சி நகர் வந்ததற்கான காரணத்தைக் கூறினார். ''காஞ்சி மாநகர் மழையில்லாமையால் வறுமையுற்றிருக்கிறது. மக்கள் பலர் மடிந்தனர். நீ அங்குச் சென்று உயிர்களைப் பாதுகாத்தருள்வாயாக; அறவண அடிகளும் நின் தாயரும் இப்போது காஞ்சியில்தான் உள்ளனர்'' என்று கூறினார்.

அதுகேட்ட மணிமேகலை அட்சய பாத்திரத்துடன் வான் வழியே காஞ்சி நகரடைந்தாள். புத்தர் கோயிலுள்ள ஒரு தெருவில் தங்கினாள். மணிமேகலை தன் நகர் வந்திருப்பதை அறிந்த அரசன், ''அம்மையே! நாடு வறுமையுற்றுச் செய்வது இன்னதென அறியாது மயங்கியிருந்தேன். ஒரு தெய்வம் என் முன் தோன்றி, ஒரு மங்கை இங்கே தோன்றுவாள். அவள் கையிலுள்ள ஓடு உன் நாட்டு வறுமையைப் போக்கும். அவள் இருப்பதற்காக நகர வீதியில் ஒரு குளமும் தீவும், கோமுகியும் மணிபல்லவமும் என்று சொல்லத்தக்க வகையில் அமைக்க வேண்டும் என்று சொல்லிச் சென்றது. அவ்வாறே செய்துள்ளோம்'' என்று அவ்விடத்தைக் காட்டினான். மணிமேகலை அங்கிருந்து எல்லா உயிர்கட்கும் அமுதசுரபி கொண்டு உணவூட்டினாள். நாடு மழை நிறைந்து வளமுற்றது. இச் செய்தி கேட்ட

அறவண அடிகளும் மாதவியும் சுதமதியும் மணிமேகலையைக் காண வந்தனர். மணிமேகலை அவர்களை வணங்கினாள்; நல்லறம் அருளுமாறு அடிகளாரை வேண்டினாள்.

29. தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை

அறவண அடிகள் புகார் நகரைக் கடல் கொண்டதற்கான காரணத்தையும் நகர் அழிந்ததும் மாதவியோடு காஞ்சி வந்து சேர்ந்ததையும் கூறினார். மணிமேகலை, அடிகளை வணங்கி, ''நான் மணிபல்லவத்தில் இருந்தபோது தீவதிலகை வாயிலாகப் புகாரைக் கடல் கொண்டதை அறிந்தேன். நான் வேற்றுருக் கொண்டு வஞ்சி மாநகரடைந்து பல சமயவாதிகள் கூறியவற்றைக் கேட்டேன். அவை என் மனத்திற்குப் பொருந்தவில்லை. உண்மைப் பொருளை அடிகள் எனக்கு உணர்த்தி அருள வேண்டும்'' என்று வேண்டினாள். அடிகள் மணிமேகலைக்குப் புத்த தத்துவத்தை விளக்கினார்.

30. பவத்திறம் அறுக எனப் பாவை நோற்ற காதை

மணிமேகலை புத்தம் தர்மம் சங்கம் எனும் மும்மணிகளையும் வணங்கிப் புத்த தருமத்தைச் சரணடைந்தாள். அறவண அடிகள் புத்த தேவன் அருளிச் செய்ததை அவளுக்கு எடுத்தோதினார். பேதைமை முதலிய பன்னிரு நிதானங்களின் தோற்ற ஒழுக்கங்களையும் பிறவற்றையும் விளங்க உபதேசித்தார். 'உன் மனத்திருள் நீங்குக' எனக் கூறி ஞான ஒளியை நன்கு காட்டினார். மணிமேகலையும் அடிகள் காட்டிய வழியைப் பின்பற்றிப் பிறவித் துன்பம் நீங்க நோன்பு மேற்கொண்டாள்.

மதுரைக் கூலவாணிகன்
சாத்தனார்
அருளிய
மணிமேகலை

மூலமும் தெளிவுரையும்

மணிமேகலை

(மூலம்)

பதிகம்

(கதை பொதி பாட்டு)

இளங்கதிர் ஞாயிறு எள்ளும் தோற்றத்து
விளங்குஒளி மேனி விரிசடை யாட்டி
பொன்திகழ் நெடுவரை உச்சித் தோன்றித்
தென்திசைப் பெயர்ந்தஇத் தீவத் தெய்வதம்
சாகைச் சம்பு தன்கீழ் நின்று
மாநில மடந்தைக்கு வருந்துயர் கேட்டு
வெந்திறல் அரக்கர்க்கு வெம்பகை நோற்ற
சம்பு என்பாள் சம்பா பதியினள்
செங்கதிர்ச் செல்வன் திருக்குலம் விளக்கும்
கஞ்ச வேட்கையில் காந்தமன் வேண்ட
அமர முனிவன் அகத்தியன் தனாது
கரகம் கவிழ்த்த காவிரிப் பாவை
செங்குணக்கு ஒழுகிஅச் சம்பா பதிஅயல்
பொங்குநீர்ப் பரப்பொடு பொருந்தித் தோன்ற,
ஆங்குஇனிது இருந்த அருந்தவ முதியோள்
ஓங்குநீர்ப் பாவையை உவந்துஎதிர் கொண்டுஆங்கு
ஆணு விசும்பின் ஆகாய கங்கை
வேணவாத் தீர்த்த விளக்கே வாஎன,

அருஞ்சொற் பொருள்: (எண் – பாடல் அடியைக் குறிக்கிறது.)

5. சாகை – கிளை. சம்பு – நாவல் மரம்.
10. கஞ்சம் – நீர். 13. செங்குணக்கு – நேர்கிழக்கு.
17. ஆணு – அன்பு.

மணிமேகலை

பதிகம்

(கதைபொதி பாட்டு)

சம்பாபதித் தெய்வம் (1 – 8)

சம்பாபதி என்னும் தெய்வம் நீண்டுயர்ந்த பொன்மலையாகிய மேரு மலையின் உச்சியில் தோன்றியவள்; அவள் இளங்கதிர் ஞாயிற்றினை மிஞ்சிய சிவந்த ஒளிமிக்க மேனியையும், விரிந்த கூந்தலையும் உடையவள். இத் தெய்வ மகள் தெற்கே வந்து இந் நாவலந் தீவில் கிளைவிரிந்த ஒரு நாவல் மரத்தின் கீழே நின்றாள். இந் நிலவுலகிற்குக் கொடிய அரக்கரால் கொடிய துன்பம் நேரும் என்பதறிந்து நோன்பினை மேற்கொண்டு அத் துன்பத்தை நீக்கினாள். சம்பு என்னும் பெயரினையுடைய அவள் சம்பாபதி என்று தன் பெயரால் வழங்கிய பூம்புகார் நகரில் தவநிலை கொண்டாள்.

காவிரி தோன்றினாள் (9 – 14)

சிவந்த கதிர்களையுடைய சூரிய குலச் செம்மலான காந்தன் என்ற சோழ மன்னன் நாட்டில் நீர்வளம் பெருக விரும்பி அகத்தியனை வேண்டினான். அமர முனிவன் அகத்தியன் தன் கமண்டல நீரைக் கவிழ்க்க, காவிரிப்பாவை தோன்றினாள். அக் காவிரியாள் நேர் கிழக்காக ஓடி, சம்பாபதி நகருக்கு அருகே பொங்கும் நீர்ப்பரப்புடைய கடலோடு கலந்து ஒன்றினாள்.

சம்பாபதி வரவேற்றாள் (15 – 18)

தவமிருந்த முதியவளான சம்பாபதி, ''விண்ணிலிருந்து வந்த ஆகாய கங்கையே! நீர் வேட்கையைத் தீர்த்து வைத்த விளக்கே! வருக'' என உவப்புடன் காவிரியை வரவேற்றாள்.

பின்நிலை முனியாப் பெருந்தவன் கேட்டுஈங்கு
அன்னை கேள்இவ் அருந்தவ முதியோள்
நின்னால் வணங்கும் தகைமையள் வணங்குஎனப்
பாடல்சால் சிறப்பிற் பரதத்து ஓங்கிய
கோடாச் செங்கோல் சோழர்தம் குலக்கொடி
கோள்நிலை திரிந்து கோடை நீடினும்
தான்நிலை திரியாத் தண்தமிழ்ப் பாவை
தொழுதனள் நிற்பஅத் தொல்மூ தாட்டி
கழுமிய உவகையில் கவான்கொண் டிருந்து
தெய்வக் கருவும் திசைமுகக் கருவும்
செம்மலர் முதியோன் செய்த அந்நாள்
என்பெயர்ப் படுத்தஇவ் விரும்பெயர் மூதூர்
நின்பெயர்ப் படுத்தேன் நீவா ழியஎன
இருபால் பெயரிய உருகெழு மூதூர்
ஒருநூறு வேள்வி உரவோன் தனக்குப்
பெருவிழா அறைந்ததும், பெருகியது அலர்எனச்
சிதைந்த நெஞ்சிற் சித்திரா பதிதான்
வயந்த மாலையால் மாதவிக்கு உரைத்ததும்,
மணிமே கலைதான் மாமலர் கொய்ய
அணிமலர்ப் பூம்பொழில் அகவயின் சென்றதும்,
ஆங்குஅப் பூம்பொழில் அரசிளங் குமரனைப்
பாங்கில் கண்டுஅவள் பளிக்கறை புக்கதும்,
பளிக்கறை புக்க பாவையைக் கண்டவன்
துளக்குறு நெஞ்சில் துயரொடும் போயபின்
மணிமே கலாதெய்வம் வந்துதோன் றியதும்,

19. பெருந்தவன் – அகத்தியன்.
27. கழுமிய – கலந்த. கவான் – துடை.
29. செம்மலர் முதியோன் – பிரமன்.
34. அலர் – பழிமொழி.
42. துளக்குறு – கலங்குதலுற்ற.

காவிரி சம்பாபதியை வணங்கினாள் (19 – 26)

சம்பாபதியின் சொற்களை அங்கு வந்த அகத்தியன் கேட்டு மகிழ்ந்தான். அவன் சினத்தை அறவே அடக்கியவன். பெரும் தவவலிமை உடையவன். அவன் காவிரியை நோக்கி, ''அன்னையே! இத்தவ மூதாட்டியான சம்பாபதி உன்னால் வணங்கத்தக்கவள்! வணங்குக'' என்றான்.

பாடல் பெற்றுச் சிறக்கும் பரத கண்டத்தில் வளையாத செங்கோல் செலுத்தும் சோழர்களின் குலக்கொடியாகத் திகழ்பவள் காவிரி! கோள் நிலை திரிந்து கோடை நீடித்தாலும் தன் நிலை திரியாது தண்ணீர் சுரக்கும் தண்டமிழ்ப் பாவையான காவிரி, சம்பாபதியைத் தொழுது நின்றாள்.

சம்பாபதி காவிரியை வாழ்த்தினாள் (26 – 32)

பழந் தவமூதாட்டியான சம்பாபதி பேருவகை கொண்டு காவிரிச் செல்வியைத் தன் மடிமேற் கொண்டாள். ''காவிரிச் செல்வியே! பிரமன் தெய்வங்களையும் மக்களையும் படைத்த அக்காலத்திலிருந்தே இப்பழம்பெரும் நகரம் என் பெயரால் அழைக்கப்பட்டு வருகிறது. இன்று முதல் இந்நகருக்கு உன் பெயரை அளித்தேன். நீ வாழ்க'' என்று வாழ்த்தினாள். பகைவர்க்கு அச்சமூட்டும் இப் பழைய நகரம் 'சம்பாபதி' எனவும் 'காவிரிப்பூம்பட்டினம்' எனவும் இரு பெயர்களையும் பெற்று விளங்கும் என்றாள்.

முப்பது காதைகள் கொண்ட காப்பியம் (33 – 94)

(1) நூறு வேள்வி செய்த இந்திரனுக்குக் காவிரிப் பூம்பட்டினத்தில் திருவிழா எடுப்பதை முரசறைந்து அறிவித்ததும்; (2) மாதவி ஆடவராமையால் ஊரில் பழிச்சொல் ஏற்பட்டது என மனக்கவலையுடன் சித்திராபதி வயந்தமாலை வாயிலாக மாதவிக்குச் செய்தி அனுப்பியதும்; (3) மணிமேகலை மாசற்ற மலர் கொய்ய அழகிய மலர் நிறைந்த உவவனத்தின் உள்ளே சென்றதும்; (4) அப் பூம்பொழிலில் மணிமேகலை அரசிளங்குமரன் உதயகுமரனைக் கண்டு பளிக்கறையினுள் புகுந்ததும்; (5) பளிக்கறையினுள் மணிமேகலை புகுந்ததை அறிந்து உதயகுமரன் உள்ளம் கலங்கித் துயருடன் சென்றபின் அங்கு மணிமேகலா தெய்வம் வந்து தோன்றியதும்;

மணிமே கலையைமணி பல்லவத்து உய்த்ததும்,
உவவன மருங்கின்அவ் வுரைசால் தெய்வதம்
சுதமதி தன்னைத் துயில்எடுப் பியதூஉம்,
ஆங்குஅத் தீவகத்து ஆயிழை நல்லாள்
தான்துயில் உணர்ந்து தனித்துயர் உழந்ததும்,
உழந்தோள் ஆங்கண்ஓர் ஒளிமணிப் பீடிகைப்
பழம்பிறப் பெல்லாம் பான்மையின் உணர்ந்ததும்,
உணர்ந்தோள் முன்னர் உயர்தெய்வம் தோன்றி
மனம்கவல் ஒழிகென மந்திரம் கொடுத்ததும்,
தீப திலகை செவ்வனம் தோன்றி
மாபெரும் பாத்திரம் மடக்கொடிக்கு அளித்ததும்,
பாத்திரம் பெற்ற பைந்தொடி தாயரோடு
யாப்புஉறு மாதவத்து அறவணர்த் தொழுததும்,
அறவண வடிகள் ஆபுத் திரன்திறம்
நறுமலர்க் கோதைக்கு நன்கனம் உரைத்ததும்,
அங்கைப் பாத்திரம் ஆபுத் திரன்பால்
சிந்தா தேவி கொடுத்த வண்ணமும்,
மற்றுஅப் பாத்திரம் மடக்கொடி ஏந்திப்
பிச்சைக்கு அவ்வூர்ப் பெருந்தெரு அடைந்ததும்,
பிச்சை ஏற்ற பெய்வளை கடிஞையில்
யத்தினிப் பெண்டிர் பாத்தூண் ஈத்ததும்,
காரிகை நல்லாள் காயசண் டிகைவயிற்று
ஆனைத் தீக்கெடுத்து அம்பலம் அடைந்ததும்,
அம்பலம் அடைந்தனள் ஆயிழை என்றே
கொங்குஅலர் நறுந்தார்க் கோமகன் சென்றதும்,
அம்பலம் அடைந்த அரசிளங் குமரன்முன்
வஞ்ச விஞ்சையன் மகள்வடி வாகி
மறம்செய் வேலோன் வான்சிறைக் கோட்டம்
அறம்செய் கோட்டம் ஆக்கிய வண்ணமும்,

---

46. எடுப்பியதூஉம் – எழுப்பியதும்.
48. உழந்ததும் – வருந்தியதும்.
52. கவல் – துன்பம்.
63. கடிஞை – பிச்சைப் பாத்திரம்.

(6) மணிமேகலா தெய்வம் மணிமேகலையை மணிபல்லவத் தீவில் கொண்டு சேர்த்ததும்; (7) சிறப்புப் பெற்ற மணிமேகலா தெய்வம் உவவனத்தில் சுதமதியைத் துயில் எழுப்பியதும்; (8) மணிபல்லவத் தீவில் மணிமேகலை உறக்கம் நீங்கித் தனியே துன்புற்று வருந்தியதும்; (9) தனித்து வருந்திய மணிமேகலை அத்தீவில் ஒளிமிக்க மணிகளாலாகிய புத்த பீடிகையைக்கண்டு முற்பிறப்பு நிகழ்ச்சிகளை முறையாக அறிந்ததும்; (10) முற்பிறப்பை அறிந்த மணிமேகலைமுன் மணிமேகலா தெய்வம் தோன்றி, 'மனக்கவலை தீர்க' எனக் கூறி மந்திரம் அருளியதும்; (11) தீவதிலகை என்பவள் தோன்றி மணிமேகலைக்குப் பெருமை பொருந்திய பாத்திரத்தைக் கொடுத்ததும்; (12) பாத்திரம் பெற்ற மணிமேகலை மாதவியுடனும் சுதமதியுடனும் உறுதியான தவமுடைய அறவண அடிகளைத் தொழுததும்; (13) அறவண அடிகள் ஆபுத்திரனின் வரலாற்றை நறிய மலர்மாலை போலும் மணிமேகலைக்கு உரைத்ததும்; (14) தன் கையிலிருந்த அமுதசுரபியை ஆபுத்திரனுக்குச் சிந்தாதேவி கொடுத்ததை அறவண அடிகள் மணிமேகலைக்கு விளக்கியதும்; (15) அப் பாத்திரத்தை ஏந்தி மணிமேகலை பிக்குணிக் கோலத்துடன் பிச்சை ஏற்கப் புகார் நகரப் பெருந்தெருவினை அடைந்ததும்; (16) பிச்சைக்காக மணிமேகலை ஏந்திய பாத்திரத்தில் ஆதிரை எனும் பத்தினிப்பெண் உணவினை இட்டதும்; (17) மணிமேகலை காயசண்டிகையின் யானைத் தீ எனும் பெரும்பசியைப் போக்கி உலகஅறவி என்னும் ஊரம்பலத்தை அடைந்ததும்; (18) மணிமேகலை அம்பலம் அடைந்தாள் என்பதை அறிந்து மனம் வீசும் மாலையணிந்த உதயகுமரன் அங்கே சென்றதும்; (19) அம்பலத்தினை அடைந்த அரச குமரன்முன் மணிமேகலை விஞ்சையன் மனைவியாகிய காயசண்டிகை உருவில் தோன்றி, வீரம் விளைக்கும் வேலையுடைய அரசனின் பெரிய சிறைச்சாலையை அறச்சாலையாக ஆக்கியதும்;

காயசண் டிகையென விஞ்சைக் காஞ்சனன்
ஆயிழை தன்னை அகலாது அணுகலும்,
வஞ்ச விஞ்சையன் மன்னவன் சிறுவனை
மைந்துஉடை வாளில் தப்பிய வண்ணமும்,
ஐஅரி உண்கண் அவன்துயர் பொறாஅள்
தெய்வக் கிளவியில் தெளிந்த வண்ணமும்,
அறைகழல் வேந்தன் ஆயிழை தன்னைச்
சிறைசெய் கென்றதும்,சிறைவீடு செய்ததும்,
நறுமலர்க் கோதைக்கு நல்லறம் உரைத்துஆங்கு
ஆய்வளை ஆபுத் திரன்நாடு அடைந்ததும்,
ஆங்குஅவன் தன்னோடு அணியிழை போகி
ஓங்கிய மணிபல் லவத்திடை உற்றதும்,
உற்றவள் ஆங்குஓர் உயர்தவன் வடிவாய்ப்
பொன்கொடி வஞ்சியில் பொருந்திய வண்ணமும்,
நவைஅறு நன்பொருள் உரைமி னோஎனச்
சமயக் கணக்கர் தம்திறம் கேட்டதும்,
ஆங்குஅத் தாயரோடு அறவணர்த் தேர்ந்து
பூங்கொடி கச்சி மாநகர் புக்கதும்,
புக்கவள் கொண்ட பொய்உருக் களைந்து
மற்றவர் பாதம் வணங்கிய வண்ணமும்,
தவத்திறம் பூண்டு தருமம் கேட்டுப்
பவத்திறம் அறுகெனப் பாவை நோற்றதும்
இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப
வளம்கெழு கூல வாணிகன் சாத்தன்
மாவண் தமிழ்த்திறம் மணிமே கலைதுறவு
ஆறைம் பாட்டினுள் அறியவைத் தனன்என்.

76. மைந்து – வலிமை. தப்பிய – வெட்டிய.
78. கிளவி – மொழி.
87. நவைஅறு – குற்றம் அற்ற.

(20) காயசண்டிகை வடிவில் இருந்த மணிமேகலையை, விஞ்சையனான காஞ்சனன் காயசண்டிகை எனவே கருதி, அவளைக் காண வந்த உதயகுமரனை வலிமையுடைய வாளால் வெட்டி வீழ்த்தியதும்; (21) இளவரசன் இறந்ததைப் பொறுக்க இயலாத மணிமேகலை கந்திற்பாவை சொன்ன மொழியால் தெளிவு பெற்றதும்; (22) ஒலிக்கின்ற வீரக்கழலினை அணிந்த மன்னன் மணிமேகலையைச் சிறை செய்யச் சொன்னதும்; (23) அரசியின் வேண்டுகோளால் அரசன் மணிமேகலையைச் சிறையிலிருந்து விடுவித்ததும்; (24) இராசமாதேவிக்கு மணிமேகலை நல்அறங்களை உரைத்து, ஆபுத்திரன் நாட்டினை அடைந்ததும்; (25) ஆபுத்திரனோடு மணிமேகலை பெருமை பொருந்திய மணிபல்லவத்தைச் சேர்ந்ததும்; (26) மணிபல்லவம் சென்ற மணிமேகலை ஒரு முனிவன் வடிவில் அங்கிருந்து வஞ்சி மாநகர் சென்றடைந்ததும்; (27) வஞ்சி மாநகரில் மணிமேகலை சமயவாதிகளிடம் குற்றமற்ற நல்ல தத்துவங்களைக் கூறுமாறு கேட்டதும்; (28) மணிமேகலை அறவண அடிகளும் மாதவியும் சுதமதியும் காஞ்சியில் இருப்பதறிந்து காஞ்சி மாநகர் சென்றதும்; (29) காஞ்சி மாநகர் அடைந்த மணிமேகலை தான் கொண்ட ஆண் வடிவை நீக்கி அறவணர் பாதம் வணங்கியதும்; (30) மணிமேகலை தவநெறி பூண்டு அறவணரிடம் தருமம் கேட்டு, பாவம் நீங்குக என நோன்பியற்றியதும்;

இளங்கோ கேட்கச் சாத்தானார் பாடினார் (95 – 98)

ஆகிய இவற்றை இளங்கோ அடிகள் எழுதுமாறு கேட்டுக் கொள்ள, கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்னும் நல்லிசைப் புலவர் தமிழ்த்திறம் அனைத்தும் ஒருங்கே பொருந்த 'மணிமேகலை துறவு' எனும் மாத்தமிழ்க் காப்பியத்தை முப்பது காதைகளில் யாவரும் அறியுமாறு இயற்றியருளினார்.

1. விழா அறை காதை

உலகம் திரியா ஓங்குஉயர் விழுச்சீர்ப்
பலர்புகழ் முதூர்ப் பண்புமேம் படஇய
ஓங்குஉயர் மலயத்து அருந்தவன் உரைப்பத்
தூங்குஎயில் எறிந்த தொடித்தோள் செம்பியன்
விண்ணவர் தலைவனை வணங்கிமுன் நின்று
மண்ணகத்து என்தன் வான்பதி தன்னுள்
மேலோர் விழைய விழாக்கோள் எடுத்த
நால்ஏழ் நாளினும் நன்குஇனிது உறைகென,
அமரர் தலைவன் ஆங்குஅது நேர்ந்தது
கவராக் கேள்வியோர் கடவார் ஆகலின்,
மெய்த்திறம் வழக்கு நன்பொருள் வீடுஎனும்
இத்திறம் தத்தம் இயல்பினில் காட்டும்
சமயக் கணக்கரும், தம்துறை போகிய
அமயக் கணக்கரும் அகலார் ஆகிக்
கரந்துஉரு எய்திய கடவு ளாளரும்,
பரந்துஒருங்கு ஈண்டிய பாடை மாக்களும்,
ஐம்பெருங் குழுவும், எண்பேர் ஆயமும்

---

1. திரியா – வேறுபடாத.
2. பலர்புகழ் மூதூர் – புகார் நகரம்.
3. மலயம் – பொதியில் மலை.
4. தூங்கு எயில் – அசைகின்ற கோட்டை
5. விண்ணவர் தலைவன் – இந்திரன்.
10. கவரா – ஐயுறாத கடவார் – தவறார்.
14. அமயம் – காலம்.
15. கரத்தல் – மறைத்தல்.
16. பாடை (பாஷை) – மொழி.

1. விழா அறை காதை

இந்திர விழா வரலாறு (1 – 10)

நன்மக்கள் தம் ஒழுக்கங்களிலிருந்து மாறுபடாத மிகவும் உயர்ந்த பெருஞ்சிறப்பினை உடையதாகப் புகார் நகரம் திகழ்ந்தது. அது பலரும் புகழும்படியானதாகவும் பழம்பெரும் நகரமாகவும் விளங்கியது. அச் சிறப்பு மேலும் பெருகுவதற்குப் பெருமை பொருந்திய பொதிய மலையில் வாழ்ந்த அரிய தவத்தினையுடைய அகத்தியன் ஒன்று சொன்னான்: அவன் சொற்படி, விண்ணிலே திரிந்து கொண்டிருந்த மதில்களை அழித்த தொடித்தோள் செம்பியன் என்னும் சோழ மன்னன் விண்ணவர்களின் தலைவனான இந்திரனிடம் சென்று அவனை வணங்கி நின்று, ''நிலவுலகில் எம்முடைய புகார் மிகச் சிறந்த நகரம். அங்கு மேலோரும் விரும்புமாறு உமக்கு விழா எடுக்கிறோம். அவ் விழா நடைபெறும் இருபத்தெட்டு நாள்களிலும் நீவிர் அங்கு வந்து இனிதே தங்கிச் சிறப்பிக்க வேண்டும்'' என்று வேண்டினான். அமரர் தலைவனும் அதற்கு உடன்பட்டான். அப்போதிலிருந்து ஆண்டு தோறும் கேள்வியிற் சிறந்த அறிவாளர் இவ்விழாவைத் தவறாது கொண்டாடி வருகின்றனர்.

சான்றோர் கூடினர் (11 – 18)

இத்தகைய பழமையான விழா அது. ஆதலால் (அதைக் கொண்டாடுவதைக் கருதும் பொருட்டு) மெய்ம்மையை உணர்த்து வனவாகிய நூல் வகை, உலகியல், தத்துவம், முத்திச் சிறப்பு எனும் நால்வகை உறுதிப் பொருள்களையும் அறிந்து அவரவர் இயற்கைக் கேற்பப் பிறர்க்கு உணர்த்துகின்ற சமயக் கணக்கர்; காலங்களைக் கணக்கிட்டு, வருவது சொல்வோராகிய காலக்கணக்கர்; தம் தெய்வ உருவை மறைத்து மனித உரு எடுத்துப் புகார் நகரை விட்டு அகலாது தங்கியிருக்கும் தேவர்கள்; வேற்று நாடுகளிலிருந்து வாணிகத்தின் பொருட்டு வந்து புகார் நகரில் ஒன்று கூடியிருக்கின்ற வெவ்வேறு மொழி பேசும் மக்கள்; அமைச்சர், புரோகிதர், சேனாபதியர், தூதுவர், சாரணர் எனப்படும் ஐம்பெருங் குழுவினர்; கரணத்து இயலவர், கரும விதிகள், கனகச்சுற்றம், கடை காப்பாளர், நகர மாந்தர், படைத்தலைவர், யானை வீரர், இவுளி மறவர் எனப்படும் எண் பேராயத்தினர்

வந்துஒருங்கு குழீஇ வான்பதி தன்னுள்
கொடித்தேர்த் தானைக் கொற்றவன் துயரம்
விடுத்த பூதம் விழாக்கோள் மறப்பின்
மடித்த செவ்வாய் வல்எயிறு இலங்க
இடிக்குரல் முழக்கத்து இடும்பை செய்திடும்
தொடுத்தபா சத்துத் தொல்பதி நரகரைப்
புடைத்துஉணும் பூதமும் பொருந்தா தாயிடும்
மாயிரு ஞாலத்து அரசுதலை ஈண்டும்
ஆயிரம் கண்ணோன் விழாக்கால் கொள்கென,
வச்சிரக் கோட்டத்து மணம்கெழு முரசம்
கச்சை யானைப் பிடர்த்தலை ஏற்றி
ஏற்றுஉரி போர்த்த இடியுறு முழக்கின்
கூற்றுக்கண் விளிக்கும் குருதி வேட்கை
முரசுகடிப் பிடூஉம் முதுகுடிப் பிறந்தோன்
திருவிழை மூதூர் வாழ்கென்று ஏத்தி
வானம்மும் மாரி பொழிக மன்னவன்
கோள்நிலை திரியாக் கோலோன் ஆகுக
தீவகச் சாந்தி செய்தரு நல்நாள்
ஆயிரம் கண்ணோன் தன்னோடு ஆங்குஉள
நால்வேறு தேவரும் நலத்தகு சிறப்பில்
பால்வேறு தேவரும் இப்பதிப் படர்ந்து
மன்னன் கரிகால் வளவன் நீங்கியநாள்
இந்நகர் போல்வதுஓர் இயல்பினது ஆகிப்
பொன்னகர் வறிதாப் போதுவர் என்பது
தொல்நிலை உணர்ந்தோர் துணிபொருள் ஆதலின்,

19. தானை – படை.
21. வல்எயிறு – வலிய பல.
23. பாசம் – கயிறு.
26. ஆயிரங்கண்ணோன் – இந்திரன்.
28. பிடர்த்தலை – பிடரின் மீது.
29. ஏற்று உரி – எருதின் தோல்.
31. கடிப்பு – முரசு அடிக்கும் குறுந்தடி. இடூஉம் – அறையும்.
35. தீவகச் சாந்தி – இந்திர விழா.
41. பொன்னகர் – தேவலோகம்.

ஆகிய இவரனைவரும் ஒன்று கூடினர். (விழா நடத்துவது பற்றிச் சிந்தித்தனர்).

விழா எடுக்கக் கூறினர் (19 – 26)

''இப்புகார் நகரிலே நாளங்காடி உண்டு. அதில் உலாவும் பூதம் கொடித்தேர் மன்னன் முசுகுந்தனுக்கு முன்னொரு காலத்தில் ஏற்பட்ட இடரைப் போக்குவதற்காக இந்திரனால் அனுப்பப்பெற்றது. இந்திர விழாவைக் கொண்டாட நாம் மறந்து போவோமானால் அப் பூதம் தன்னுடைய சிவந்த வாயை மடித்து, வலிமையான பற்கள் வெளித் தோன்றும்படியாக, இடிபோலக் குரலெடுத்து முழங்கி, புகார் நகருக்குத் துன்பம் செய்திடும். தன் கையிலே கட்டியுள்ள பாசக் கயிற்றினாலே பழமையான இந்நகரில் குற்றம் செய்யும் பாவியரைப் பற்றி அறைந்து உண்ணுகின்ற சதுக்கப் பூதமும் தன் செயலைச் செய்யாது விட்டுவிடும். ஆகவே பரந்த இவ் வுலகிலுள்ள பல நாட்டு அரசர்களும் வந்து கூடுவதற்குக் காரணமான இந்திர விழாவினை எடுக்கக் கால்கோள் செய்க'' எனச் சான்றோர் அறிவித்தனர்.

வள்ளுவன் முரசு அறைந்தனன் (27 – 72)

வச்சிரப்படை நிற்கும் கோயிலுள் சிறப்புப் பொருந்திய முரசு இருந்தது. எருத்துத் தோலைப் போர்த்த அம் முரசம் இடிபோல் முழங்கிக் கூற்றையும் அறைகூவி அழைக்கும் குருதி வேட்கை கொண்டது. அந்த முரசினைக் கச்சை கட்டியுள்ள யானையின் தலையிலே ஏற்றி வைத்தனர். முரசினை முழக்கும் முதுகுடியில் பிறந்த வள்ளுவன் குறுந்தடி கொண்டு அம் முரசை முழக்கினான். ''திருமகளும் விரும்பும் அழகிய மூதூரான பூம்புகார் வாழ்க; வானம் மும்மாரி பொழிக! கோள்கள் நிலைபிறழா வண்ணம் அரசன் செங்கோல் செலுத்துவானாக!'' என நகரையும், அரசனையும் முதலில் வாழ்த்திப் பின்னர் விழாபற்றிக் கூறத் தொடங்கினான். ''இந்திர விழாக் கொண்டாடப்படும் நன்னாள்களிலே இந்திரனோடு நால்வகைத் தேவர்களும், நலந்தரு சிறப்புடைய பதினெட்டுக் கணங்களும் இந் நகரில் வந்து தங்குவர். கரிகால் வளவன் வடநாட்டை வெல்லப்போன அந்நாளிலே இந் நகர் வறிதாயிருந்ததுபோலத் தேவலோகம் வறிதாய் இருக்கும் என்று சொல்லும்படியாகத் தேவர்கள் அனைவருமே இந் நகரினில் வந்து நிறைவர் என்று அறிந்தோர் கூறுவர்.

தோரண வீதியும் தோம்அறு கோட்டியும்
பூரண கும்பமும் பொலம்பா லிகைகளும்
பாவை விளக்கும் பலவுடன் பரப்புமின்
காய்க்குலைக் கமுகும் வாழையும் வஞ்சியும்
பூக்கொடி வல்லியும் கரும்பும் நடுமின்
பத்தி வேதிகைப் பசும்பொன் தூணத்து
முத்துத் தாமம் முறையொடு நாற்றுமின்
விழவுமலி மூதூர் வீதியும் மன்றமும்
பழமணல் மாற்றுமின் புதுமணல் பரப்புமின்
கதலிகைக் கொடியும் காழ்ஊன்று விலோதமும்
மதலை மாடமும் வாயிலும் சேர்த்துமின்
நுதல்விழி நாட்டத்து இறையோன் முதலாப்
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வம்மா றாக
வேறுவேறு சிறப்பின் வேறுவேறு செய்வினை
ஆறுஅறி மரபின் அறிந்தோர் செய்யுமின்
தண்மணல் பந்தரும் தாழ்தரு பொதியிலும்
புண்ணிய நல்உரை அறிவீர் பொருந்துமின்
ஒட்டிய சமயத்து உறுபொருள் வாதிகள்
பட்டிமண் டபத்துப் பாங்குஅறிந்து ஏறுமின்
பற்றா மாக்கள் தம்முடன் ஆயினும்
செற்றமும் கலாமும் செய்யாது அகலுமின்
வெண்மணல் குன்றமும் விரிபூஞ் சோலையும்
தண்மணல் துருத்தியும் தாழ்பூந் துறைகளும்
தேவரும் மக்களும் ஒத்துஉடன் திரிதரும்
நால்ஏழ் நாளினும் நன்குஅறிந் தீர்என
ஒளிறுவாள் மறவரும் தேரும் மாவும்
களிறும் சூழ்தரக் கண்முரசு இயம்பிப்
பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி
அணிவிழா அறைந்தனன் அகநகர் மருங்குஎன்.

---

43. தோம் – குற்றம். கோட்டி – மன்றம்.
48. பத்தி – வரிசை. வேதிகை – திண்ணை. தூணம் – தூண.
49. தாமம் – மாலை. நாலுதல – தொங்கவிடுதல.
52. கதலிகை, விலோதம் என்பன துணியாலான கொடி வகைகள்
63. செற்றம் – சினம். கலாம் – போர்.
65. துருத்தி – ஆற்றிடைக் குறை. 70. வசி – மழை.

ஆதலின் தோரண வீதிகளிலும், மாசற்ற மன்றங்களிலும் நிறைகுடங்கள், பொற்பாலிகைகள், பாவை விளக்குகள் மற்றும் பல மங்கலப் பொருள்களை ஒருங்கே பரப்புங்கள்! குலைமுற்றிய பாக்கு மரமும், வாழை மரமும், வஞ்சிக் கொடியும், பூங்கொடிகளும், கரும்பும் நட்டு வையுங்கள்! திண்ணையில் இருக்கும் பொன் தூண்களிலே வரிசையாக முத்துமாலைகளைத் தொங்க விடுங்கள்! விழாக்கள் நிறைந்த இப் பழைய நகரின் வீதிகளிலும் மன்றங்களிலும் பழைய மணலை மாற்றிப் புதிய மணலைப் பரப்புங்கள்! துகில் கொடிகளையும், கம்புகளில் கட்டிய கொடிகளையும் கொடுங்கை மாடத்திலும், மாட வாயிலிலும் சேர்த்துக் கட்டுங்கள்! நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான் முதல் இந் நகரில் வாழும் சதுக்கப்பூதம் ஈறாக உள்ள கோயில்களிலெல்லாம் அந்தந்தத் தெய்வத்துக்குரிய வெவ்வேறு சிறப்புகளை அவ்வம் மரபறிந்த நல்லோர் அதன்படி செய்யுங்கள்! குளிர் மணல் பரப்பிய பந்தல்களிலும், மரங்கள் தாழ்ந்து நிழல்தரும் ஊர் மன்றங்களிலும் புண்ணிய நல்லற நூல்களை விளக்கும் அறிஞர்கள் கூடி உரையாற்றுங்கள்! அவரவர் சமயத்திற்கு இசைந்த, உட்பொருளறிந்த சமயவாதிகள் பட்டிமண்டபத்தே வாதிட வேண்டியவற்றை அறிந்து வாதிட்டுத் தீர்வு காணுங்கள்! மனம் பொருந்தாத பகைவரேயாயினும் சினமும் போரும் செய்யாது அகலுங்கள்! வெண்மையான மணற் குன்றுகளிலும், மலர் செறிந்த பூஞ்சோலைகளிலும், குளிர் மணல் கொண்ட ஆற்றிடைக் குறைகளிலும், மரங்கள் தாழ்ந்து அழகு செய்யும் நீர்த் துறைகளிலும் விழா நடைபெறும் இருபத்தெட்டு நாள்களிலும் தேவரும் மக்களும் வேற்றுமையின்றி ஒன்றுபட்டு மகிழ்வுடன் உலாவுவர் என்பதை நன்கு அறியுங்கள்.''

ஒளி வீசும் வாளேந்திய காலாட் படையினரும், தேர்ப் படையினரும், குதிரைப் படையினரும், யானைப் படையினரும் சூழ்ந்துவர முரசினை அறைந்து இவ்வாறு செய்திகளை அறிவித்த வள்ளுவன் முடிவில், 'பசியும் நோயும் நீங்கி மழையும் வளமும் எங்கும் பெருகுவதாகுக' என வாழ்த்தி அந் நகர் முழுதும் அழகிய விழா பற்றி அறிவித்தான்.

2. ஊர் அலர் உரைத்த காதை

நாவல் ஓங்கிய மாபெருந் தீவினுள்
காவல் தெய்வதம் தேவர்கோற்கு எடுத்த
தீவகச் சாந்தி செய்தரு நல்நாள்
மணிமே கலையொடு மாதவி வாராத்
தணியாத் துன்பம் தலைத்தலை மேல்வரச்
சித்திரா பதிதான் செல்லல்உற்று இரங்கித்
தத்துஅரி நெடுங்கண் தன்மகள் தோழி
வயந்த மாலையை வருகெனக் கூஉய்ப்
பயம்கெழு மாநகர் அலர்எடுத்து உரைஎன,
வயந்த மாலையும் மாதவி துறவிக்கு
அயர்ந்துமெய் வாடிய அழிவினள் ஆதலின்
மணிமே கலையொடு மாதவி இருந்த
அணிமலர் மண்டபத்து அகவயின் செலீஇ
ஆடிய சாயல் ஆயிழை மடந்தை
வாடிய மேனி கண்டுஉளம் வருந்திப்
பொன்நேர் அனையாய் புகுந்தது கேளாய்
உன்னோடு இவ்வூர் உற்றதுஒன்று உண்டுகொல்
வேத்தியல் பொதுஇயல் என்றுஇரு திறத்துக்
கூத்தும் பாட்டும் தூக்கும் துணிவும்
பண்ணியாழ்க் கரணமும் பாடைப் பாடலும்
தண்ணுமைக் கருவியும் தாழ்தீங் குழலும்

---

3. தீவகச் சாந்தி – இந்திர விழா.
6. செல்லல் – வருத்தம்.
7. தத்து அரி – செவ்வரி படர்ந்த.
9. பயம – பயன். அலர் – பழிமொழி.
13. அகவயின் – உள்ளே. செலீஇ – சென்று
19. தூக்கு – தாள ஒழுங்கு. துணிவு – தாளக் கட்டு.
21. தண்ணுமை – மத்தளம்.

2. ஊர் அலர் உரைத்த காதை

சித்திராபதி மாதவியிடம் வயந்தமாலையை அனுப்புதல் (1 – 9)

நாவலந் தீவு எனும் பெயருடைய பெரிய தீவின் காவல் தெய்வமாகிய சம்பாபதி, தேவர் தலைவனாகிய இந்திரனுக்குத் தீவகச்சாந்தி செய்யும் நன்னாளே இந்திர விழா. இவ் விழாநாளில் வழக்கப்படி ஆடல் நிகழ்த்த மாதவி தன் மகள் மணிமேகலையுடன் வரவில்லை. (இச் செய்தி பழியாக ஊர் முழுதும் பரவியது). மாதவியின் தாய் சித்திராபதி அடக்க முடியாத துன்பம் மேலும் மேலும் பெருக வருத்த முற்றாள். செவ்வரி படர்ந்த நீண்ட கண்களையுடைய தன் மகள் மாதவியின் தோழி வயந்தமாலையை 'வருக' எனக் கூவி அழைத்தாள். ''நீ மாதவியிடம் சென்று, வளம் நிறைந்த இம் மாநகர் சொல்லும் பழிமொழியை எடுத்துச் சொல்'' என்றாள்.

வயந்தமாலை வருத்தம் (10 – 17)

வயந்தமாலையும் மாதவி துறவு பூண்டதற்கு வருந்தித் தளர்வுற்று வாடியிருந்தாள். அவ் வருத்தத்தோடே மணிமேகலையோடு மாதவி தங்கியிருந்த அழகிய மலர் மண்டபத்துள் சென்றாள். முன்பு மயில் போன்ற சாயலுடன் ஆராய்ந்தெடுத்த அணிமணிகளைப் பூண்டிருந்த மாதவி இப்போது அவையெலாம் நீங்கப் பெற்றவளாய் இருந்தாள். வயந்தமாலை மாதவியின் வாட்டமுற்ற உடலினைக் கண்டு உள்ளம் வருந்தினாள். பின்னர், ''பொன்னே போல்வாய்! யான் இங்கு வந்ததற்கான காரணத்தைக் கேள்! உன்னோடு இவ் ஊரார்க்குப் பகை ஏதும் உண்டா? இல்லையே! அப்படியிருக்க நீ ஆடவராததால்தானே பழித்துப் பேசுகிறார்கள்.

கலையரசி மாதவி (18 – 32)

நீ நாடகக் கணிகையர்க்குரிய அறுபத்து நான்கு கலைகளிலும் கைதேர்ந்தவள். அரசர்க்கு ஆடும் கூத்தான வேத்தியல், மற்றவர்க்கு ஆடும் புறக்கூத்தான பொதுவியல் எனும் இருவகைப்பட்ட கூத்து; பாட்டு; தாள ஒழுங்கு; தாளக்கட்டு; பண்ணுடன் பொருந்திய யாழின் செய்கை; அகப்புற நாடகப்பாடல்; மத்தளம்; இனிய குழலிசை;

கந்துகக் கருத்தும் மடைநூல் செய்தியும்
சுந்தரச் சுண்ணமும் தூநீர் ஆடலும்
பாயல் பள்ளியும் பருவத்து ஒழுக்கமும்
காயக் கரணமும் கண்ணியது உணர்தலும்
கட்டுரை வகையும் கரந்துஉறை கணக்கும்
வட்டிகைச் செய்தியும் மலர்ஆய்ந்து தொடுத்தலும்
கோலம் கோடலும் கோவையின் கோப்பும்
காலக் கணிதமும் கலைகளின் துணிவும்
நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
ஓவியச் செந்நூல் உரைநூல் கிடக்கையும்
கற்றுத் துறைபோகிய பொன்தொடி நங்கை
நல்தவம் புரிந்தது நாண்உடைத்து என்றே
அலகுஇல் மூதூர் ஆன்றவர் அல்லது
பலர்தொகுபு உரைக்கும் பண்புஇல் வாய்மொழி
நயம்பாடு இல்லை நாண்உடைத்து என்ற
வயந்த மாலைக்கு மாதவி உரைக்கும்:
காதலன் உற்ற கடுந்துயர் கேட்டுப்
போதல் செய்யா உயிரொடு நின்றே
பொன்கொடி மூதூர்ப் பொருள்உரை இழந்து
நல்தொடி நங்காய் நாணுத் துறந்தேன்

22. கந்துகம் – பந்து மடை நூல் – சமையற்கலை நூல்.
25. காயம் – உடல். கண்ணியது – பிறர் கருதியது
27 வட்டிகை – எழுதுகோல்.
35. தொகுபு – கூடி.
36. நயம்பாடில்லை – நயமாயில்லை. இனிமையுடையதாயில்லை

பந்தாடல்; சமையல் கலை; நறுமணப்பொடி செய்தல்; அப் பொடியைத் தேய்த்துத் தூய நீராடல்; படுப்பதற்குரிய பள்ளியறையை அழகுற அமைத்தல்; பருவ காலத்திற்கேற்பப் பாங்குடன் நடந்து கொள்ளுதல்; உடலால் செய்யும் அறுபத்துநான்கு வகைக் கரணங்கள்; பிறர் மனக்கருத்தினை உய்த்துணர்தல்; தொடுத்துக் கூறும் சொல் வன்மை; மறைந்து உறையும் வகை; எழுதுகோலினாலே எழில்கொள வரையும் திறன்; மலர்களைத் தேர்ந்து அழகுறத் தொடுத்தல்; (பருவ) காலங்கட்கு ஏற்ப ஒப்பனை செய்து கொள்ளுதல்; முத்துகளை மாலையாகக் கோத்தல்; காலக் கணிதம் (சோதிடம்); மற்றுமுள்ள கலைகளின் முடிவான பொருள்கள், நாடகப் பெண்களுக்கென வகுக்கப்பட்ட ஓவியச் செந்நூல், உரைநூல் ஆகியவற்றின் உட்பொருள்கள் ஆகிய இவை யாவற்றையுமே கற்று, அவ்வவற்றுள் கைதேர்ந்தவளாகியும் விளங்குகின்ற பொற்பாவை நீ!

ஊரார் பழிக்கின்றனர் (33 – 36)

இவ்வளவு கலைத்திறம் பெற்ற நீ, துறவு பூண்டுள்ளது வெட்கப்படக் கூடியதாய் இருக்கிறது என்று நம் ஊர் ஆன்றோர் மட்டுமன்று, வேற்றூரிலிருந்து வந்துள்ளவரும் கூடி உன்னைக் குறித்துப் பண்பில்லாது வாய்க்கு வந்தபடி பேசுகின்றனர். அவை கேட்பதற்கு நயமாயில்லை; வெட்கம் கொள்ள வேண்டியதாயிருக்கிறது'' என வயந்தமாலை கூறினாள்.

மாதவி வயந்தமாலைக்கு உரைத்தது (36 – 41)

இவ்வாறு சொன்ன வயந்தமாலைக்கு மாதவி சொல்வாள்:

''என் கணவன் (கோவலன்) உயிர் துறந்த கொடிய செய்தியைக் கேட்ட அப்போதே என் உயிர் போயிருக்க வேண்டும்.

அப்படிப் போகாது இன்னும் உயிரோடிருக்கிறேனே! அன்றே நான் இவ்வூரார்ின் புகழுரையினை இழந்து விட்டேன்.

நல்ல தொடியணிந்துள்ள நங்கையே! நான் உயிருடன் இருப்பதே நாணம் இழந்த செயலாகும்.

காதலர் இறப்பின் கனைஎரி பொத்தி
ஊதுஉலைக் குருகின் உயிர்த்துஅகத்து அடங்காது
இன்உயிர் ஈவர்; ஈயார் ஆயின்
நல்நீர்ப் பொய்கையின் நளிஎரி புகுவர்;
நளிஎரி புகாஅர் ஆயின் அன்பரோடு
உடன்உறை வாழ்க்கைக்கு நோற்றுஉடம்பு அடுவர்
பத்தினிப் பெண்டிர் பரப்புநீர் ஞாலத்து.
அத்திறத் தாளும் அல்லள்எம் ஆயிழை
கணவற்கு உற்ற கடுந்துயர் பொறாஅள்
மணமலி கூந்தல் சிறுபுறம் புதைப்பக்
கண்ணீர் ஆடிய கதிர்இள வனமுலை
திண்ணிதில் திருகித் தீஅழல் பொத்திக்
காவலன் பேர்ஊர் கனைஎரி ஊட்டிய
மாபெரும் பத்தினி மகள்மணி மேகலை
அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும்
திருந்தாச் செய்கைத் தீத்தொழில் படாஅள்
ஆங்ஙனம் அன்றியும் ஆயிழை கேளாய்
ஈங்குஇம் மாதவர் உறைவிடம் புகுந்தேன்
மறவணம் நீத்த மாசுஅறு கேள்வி
அறவண அடிகள் அடிமிசை வீழ்ந்து
மாபெருந் துன்பம் கொண்டுஉளம் மயங்கிக்
காதலன் உற்ற கடுந்துயர் கூறப்
பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பேர் இன்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது

---

42. கனை எரி – மிக்க நெருப்பு.
43. குருகு – துருத்தி மூக்கு.
45. நளி எரி – செறிந்த நெருப்பு.
47. அடுவர் – வருத்துவர்.
48. பரப்பு நீர் – கடல்.
51. சிறுபுறம் – பிடர்.
57. தீத்தொழில் – பரத்தமைத் தொழில்.
60. மறவணம் – பாவத் தன்மைகள்.

பத்தினிப் பெண்டிர் தன்மை (42 – 48)

பத்தினிப் பெண்டிர், கணவர் இறந்தால் பெரு நெருப்பினை மூட்டி, ஊதுகின்ற துருத்தியின் முனைபோல, வெப்பப் பெருமூச்செறிந்து, உள்ளத்துயரம் தாங்காது அப்போதே தம் இனிய உயிரை விட்டுவிடுவர். அவ்வாறு உயிர் போகாவிட்டால், குளிர்ந்த நீரில் ஆடுவதுபோல எரிகின்ற பெருநெருப்பில் புகுந்து மடிவர். அவ்வாறு தீக்குளிக்காவிட்டால், மறுமையில் அதே கணவனோடு வாழ்தல் கருதி, கைம்மை நோன்பு நோற்று, உடம்பை வருத்தியிருப்பர். கடல் சூழ்ந்த இவ்வுலகில் பத்தினிப் பெண்டிர் செய்கை இவையே!

கண்ணகியின் தனித்தன்மை (49 – 57)

எம்முடைய கண்ணகியோ இம் மூன்று வகையிலும் சேர்ந்தவள் அல்லள். கணவனுக்கு நேர்ந்த கடும் துயரத்தைப் பொறுக்க முடியாமல், மணம் நிறைந்த கூந்தல் அவிழ்ந்து பிடரில் விரிந்து கிடக்க, கண்ணீரில் நனைந்த அழகிய தன் இளைய முலையினை உறுதியுடனே திருகி எறிந்து தீ மூளச் செய்தாள். பாண்டியன் பேரூராகிய மதுரையைக் கொழுந்துவிட்டெரியும் தீக்கு இரையாக்கினாள். அப்படிப்பட்ட மாபெரும் பத்தினியின் மகள் மணிமேகலை. அவள் அரிய தவநெறியில் செல்வாளே அல்லாமல், எவ்வகையிலும் திருத்தமில்லாத தீய பரத்தமைத் தொழிலை மேற்கொள்ளமாட்டாள்.

அறவண அடிகள் அறவுரை (58 – 69)

வயந்தமாலையே! இதுமட்டுமன்று! இன்னும் கேள். நான் பெருந்தவத்தினர் தங்கியிருக்கும் இங்கே வந்து சேர்ந்தேன். மறவினைகளை நீக்கிய குற்றமற்ற அறக்கேள்வியரான அறவண அடிகளின் திருவடிகளில் வீழ்ந்தேன். மாபெரும் துன்பத்தால் உள்ளம் மயங்கி, என் கணவனுக்கு நேர்ந்த கொடிய துன்பத்தைக் கூறிக் கலங்கினேன். அறவண அடிகள், 'இவ்வுலகிலே பிறந்தோர் அடைவதெல்லாம் பெருகிய துன்பங்களே! பிறவாத பேறு பெற்றவர் அடைவதோ பெரும் பேரின்பம்! முன்னர்க் கூறிய பிறவியானது பற்றின் காரணமாக உயிர்களை வந்தடையும். பின்னர்க் கூறிய பிறவாப்

அற்றோர் உறுவது அறிகென்று அருளி
ஐவகைச் சீலத்து அமைதியும் காட்டி
உய்வகை இவைகொள்என்று உரவோன் அருளினன்
மைத்தடங் கண்ணார் தமக்கும்என் பயந்த
சித்திரா பதிக்கும் செப்பு நீஎன,
ஆங்குஅவள் உரைகேட்டு அரும்பெறல் மாமணி
ஓங்குதிரைப் பெருங்கடல் வீழ்த்தோர் போன்று
மையல் நெஞ்சமொடு வயந்த மாலையும்
கையற்றுப் பெயர்ந்தனள் காரிகை திறத்துஎன்.

67. அற்றோர் – பற்றினை விட்டவர்.
69. உரம் – அறிவு. உரவோன் – அறவண அடிகள்.
70. மைத் தடங் கண்ணார் – மை தீட்டிய பெரிய கண்களையுடையவர்.
74. மையல் – மயக்கம்.
75. கையற்று – செயலற்று.

இருநிலையோ அப் பற்றினை விட்டவர்களால் மட்டுமே அடையக் கூடியது. இவற்றை நீ அறிவாயாக, எனக் கூறினார். மேலும் கொலை, களவு, கள், காமம், பொய் என்னும் இவற்றை முற்றிலும் விட்டொழிப்பதாகிய ஐவகைச் சீலத்தின் அமைதிகளையும் உணர்த்தி, 'இவையே நீ உய்வதற்கான வழி' என்றும் அறவண அடிகள் எனக்கு அறவுரை கூறி அருளினார்.

வயந்தமாலை வருத்தமுற்றுத் திரும்பினாள் (70 – 75)

இவற்றையெல்லாம் மைதீட்டிய கண்களையுடைய நம் தோழிமார்க்கும், என்னைப் பெற்ற தாய் சித்திராபதிக்கும் நீ சொல்வாயாக'' என்றாள் மாதவி. மாதவியின் இவ் வுரைகளைக் கேட்ட வயந்தமாலை, கிடைத்தற்கரிய மாணிக்கத்தைப் பெரிய அலைவீசும் கடலிலே தொலைய விட்டவர்போல மனக்கலக்கமடைந்து செய்வது இன்னதெனத் தெரியாது சித்திராபதியிடம் சென்று சேர்ந்தாள்.

பிறப்பு இறப்பினின்று தப்பும் வகை நால்வகை வாய்மையும், ஐவகை ஒழுக்கமும் ஆகும் என்பது பௌத்த மதக் கொள்கை (i) துன்பம் (துக்கம்), (ii) துன்ப நீக்கம் (துக்க நிவாரணம்), (iii) துன்பத் தோற்றம் (துக்கோற்பத்தி), (iv) துன்பம் நீக்கும் வழி (துக்க நிவாரண மார்க்கம்) என்பன **நால்வகை வாய்மை**.

பிறப்பு துக்கம்; பிறவாமை துக்க நீக்கம்; பற்றினால் வருவது துக்கோற்பத்தி; பற்றினை அறுப்பது துக்க நிவாரண மார்க்கம்.

கொலை, களவு, கள், பொய், காமம் என்னும் இவ் வைந்தையும் முற்றத் துறத்தல் **ஐவகைச் சீலம்** எனப்படும்.

3. மலர் வனம் புக்க காதை

வயந்த மாலைக்கு மாதவி உரைத்த
உயங்குநோய் வருத்தத்து உரைமுன் தோன்றி
மாமலர் நாற்றம் போல்மணி மேகலைக்கு
ஏது நிகழ்ச்சி எதிர்ந்துளது ஆதலின்
தந்தையும் தாயும் தாம்நனி உழந்த
வெந்துயர் இடும்பை செவியகம் வெதுப்பக்
காதல் நெஞ்சம் கலங்கிக் காரிகை
மாதர் செங்கண் வரிவனப்பு அழித்துப்
புலம்புநீர் உருட்டிப் பொதியவிழ் நறுமலர்
இலங்குஇதழ் மாலையை இட்டுநீ ராட்ட,
மாதவி மணிமே கலைமுகம் நோக்கித்
தாமரை தண்மதி சேர்ந்தது போலக்
காமர் செங்கையில் கண்ணீர் மாற்றித்
தூநீர் மாலை தூத்தகை இழந்தது
நிகர்மலர் நீயே கொணர்வாய் என்றலும்,
மதுமலர்க் குழலியொடு மாமலர் தொடுக்கும்
சுதமதி கேட்டுத் துயரொடும் கூறும்:
குரவர்க்கு உற்ற கொடுந்துயர் கேட்டுத்
தணியாத் துன்பம் தலைத்தலை எய்தும்
மணிமே கலைதன் மதிமுகம் தன்னுள்
அணிதிகழ் நீலத்து ஆய்மலர் ஓட்டிய
கடைமணி உகுநீர் கண்டனன் ஆயின்

---

2 உயங்கு நோய் – வருத்தம் தரும் துன்பம்.
4 ஏது நிகழ்ச்சி – வினை தத்தம் பயனைக் கொடுத்தற்குத் தோன்றுதலை 'ஏது நிகழ்ச்சி' என்பது பௌத்த நூல் வழக்கு.
6 வெதுப்ப – சுட
8 மாதர் – காதல்.
13 காமர் – விருப்பம்.
14 தூத்தகை – தூய்மைத் தன்மை.

3. மலர் வனம் புக்க காதை

மேகலையின் கண்ணீர் மாலையை நனைத்தது (1 – 10)

வயந்தமாலைக்கு மாதவி கூறிய துன்பப் பேச்சினை அங்கே பூத்தொடுத்துக் கொண்டிருந்த மணிமேகலை கேட்டாள். மலரில் அடங்கியிருந்து உரிய காலத்தில் தோன்றும் மணம்போல, மணிமேகலையினிடம் அடங்கியிருந்த வினைப்பயன் இப்போது விளைவைத் தந்தது. தன் தந்தை தாயரான கோவலனும் கண்ணகியும் பட்ட கொடிய துயரச் செய்தி அவள் காதுகளைச் சுட்டு வருத்தியது. அவர்கள்பால் வைத்த அன்பால் நெஞ்சு கலங்கினாள்; அழகிய செவ்வரி படர்ந்த கண்களின் அழகு கெடுமாறு கண்ணீர் பொங்கியது. அக் கண்ணீர், இதழ் விரிந்த மணமலர்களால் அவள் தொடுத்துக் கொண்டிருந்த மாலைமேல் வீழ்ந்து நனைத்தது.

புதுமலர் பறித்துவர மாதவி கூறினாள் (11 – 15)

மாதவி, மணிமேகலையின் கண்ணீர் வழியும் முகத்தைக் கண்டாள். தாமரை மலரானது குளிர்ந்த நிலவினைச் சேர்ந்ததுபோல, தன் அழகிய கைகளினாலே மகளுடைய கண்களில் திரண்டிருந்த கண்ணீரைத் துடைத்து அகற்றினாள். ''தூய்மையான இம் மாலை உன் கண்ணீர்பட்டுத் தூய்மைத் தன்மையை இழந்தது. ஆதலால் வேறு மாலை தொடுக்க இதே மாதிரியான மலர்களை நீயே சென்று கொண்டு வருக'' என மாதவி மணிமேகலையிடம் கூறினாள்.

மணிமேகலை தனித்துச் செல்லக் கூடாது (16 – 25)

தேன் சொரியும் மலர்களை அணிந்த கூந்தலையுடைய மணிமேகலையோடு மலர் தொடுத்துக் கொண்டிருந்த அவள் தோழி சுதமதி, மாதவியின் சொல்லைக் கேட்டுத் துயரத்தோடு கூறினாள். ''மணிமேகலை தன் தாய் தந்தையர்க்கு நேர்ந்த கொடிய துயரத்தினைக் கேட்டுத் தணியாத துன்பத்தினை மேலும் மேலும் அடைகின்றாள். மணிமேகலையின் நிலவு போன்ற முகத்தில் அழகுமிளிரும் நீலமலரையும் தோற்கச் செய்யுமாறு அவ்ளுடைய கண்கள் விளங்குகின்றன. இக் கண்களின் கடைமணிகளிலிருந்து சிந்துகின்ற இவள் கண்ணீரைக் கண்டால்

படையிட்டு நடுங்கும் காமன் பாவையை
ஆடவர் கண்டால் அகறலும் உண்டோ
பேடியர் அன்றோ பெற்றியின் நின்றிடின்
ஆங்ஙனம் அன்றியும் அணியிழை கேளாய்
ஈங்குஇந் நகரத்து யான்வருங் காரணம்
பாரா வாரம் பல்வளம் பழுநிய
காராளர் சண்பையில் கௌசிகன் என்போன்
இருபிறப் பாளன் ஒருமகள் உள்ளேன்
ஒருதனி அஞ்சேன் ஓரா நெஞ்சமோடு
ஆரா மத்திடை அலர்கொய் வேன்தனை
மாருத வேகன்என் பான்ஓர் விஞ்சையன்
திருவிழை மூதூர் தேவர்கோற்கு எடுத்த
பெருவிழாக் காணும் பெற்றியின் வருவோன்
தாரன் மாலையன் தமனியப் பூணினன்
பாரோர் காணாப் பலர்தொழு படிமையன்
எடுத்தனன் என்கொண்டு எழுந்தனன் விசும்பில்
படுத்தனன் ஆங்குஅவன் பான்மையேன் ஆயினேன்
ஆங்குஅவன் ஈங்குஎனை அகன்றுகண் மாறி
நீங்கினன் தன்பதி நெட்டிடை ஆயினும்
மணிப்பூங் கொம்பர் மணிமே கலைதான்
தனித்துஅலர் கொய்யும் தகைமையள் அல்லள்

---

25. பெற்றியின் நின்றிடின் – இயற்கை திரியாமல் நிற்பரேல்
28 பாரா வாரம் – கடல். பழுநிய – முதிர்ந்த.
29 காராளர் – பூவைசியர்.
30. இரு பிறப்பாளன் – அந்தணன்.
31. ஓரா – ஆராயாத
32. ஆராமம் – உவவனம்.
33 விஞ்சையன் – விண்ணிலே உலவும் விதியாதரன்
36. தமனியம் – பொன்.
37. படிமையன் – உருவினன்.
40. கண் மாறுதல் – விழித்த கண் இமைத்த அளவிலே மறைதல்
41. நெட்டிடை – நீண்ட தொலைவு

காமனும் தன் வில்லை எறிந்து நடுங்குவான் என்றால் இப் பாவையை ஆடவர் கண்டால் அகன்று நீங்குவரோ? நீங்கவே மாட்டார். இவளைக்கண்டு, தம் மனம் திரியாமல் நிற்பவர் பேடியராகத்தான் இருக்க முடியும்! (ஆடவர் எவரும் இவளைக் கண்டால் மனம் தளர்வர்)'' எனக் கூறி, அழகிய மணிமேகலை தனியே செல்லக் கூடாது என்பதைச் சுதமதி மாதவிக்கு உணர்த்தினாள்.

சுதமதி கூறிய தன்வரலாறு (26 – 43)

''அஃதேயன்றியும் மாதவி! நான் இந்த நகரில் வந்து சேர்ந்ததற்கான காரணத்தைக் கேட்பாயாக! கடல் தரும் பல வளங்கள் நிறைந்து விளங்குவதும் காராளர்களுக்கு உரியதாகவும் இருப்பது சண்பை நகரம். அங்குக் கௌசிகன் எனும் பார்ப்பனனுக்கு ஒரே மகளாக நான் பிறந்தேன். தன்னந்தனியே செல்வதற்கு அஞ்சாதவளாய், எதனையும் ஆராய்ந்து பார்க்காத நெஞ்சமுடையவளாய் மலர்வனம் சென்று ஒருநாள் பூக்கொய்து கொண்டிருந்தேன். மாருதவேகன் என்பவன் விண்ணிலே பறந்து செல்லும் விஞ்சையன். திருமகளும் விரும்பும் புகார் நகரில் இந்திரனுக்கு எடுக்கும் பெருமைமிக்க விழாவினைக் காண்பதற்காக வந்து கொண்டிருந்தான். அவன் பூமாலையையும், மணிமாலையையும் அணிந்து பொன்னணிகளும் பூண்டிருந்தான். மக்கள் கண்ணிற்குப் புலப்படாதவனாகவும், தேவர் பலரும் தொழும் வடிவுடையவனுமாக விளங்கினான். பூக்கொய்து கொண்டிருந்த என்னை அவன் தழுவி எடுத்து வானிலே எழுந்தான். அங்கே அவன் என்னைத் தன்வயப்படுத்திக் கொண்டான். நானும் அவனோடு ஒன்றினேன். அவன் இப்புகார் நகரில் விழித்த கண் இமைப்பதற்குள் என்னை விட்டு நீங்கி நெடுந்தொலைவிலுள்ள தன் நாட்டுக்குச் சென்று விட்டான். ஆகவே மாணிக்கப் பூங்கொம்பு போன்றுள்ள மணிமேகலை பூக்கொய்யத் தனித்துச் செல்லுவது நல்லதன்று; (நானும் உடன் செல்வேன்)'' எனச் சுதமதி கூறினாள்.

ஐவகை மலர் வனங்கள்

(சுதமதி புகார் நகரில் உள்ள ஐந்து மலர் வனங்களின் தன்மைகளைக் கூறி உவவனமே மலர் கொய்ய ஏற்றது என விளக்கமாகக் கூறினாள்)

பல்மலர் அடுக்கிய நன்மரப் பந்தர்
இலவந் திகையின் எயில்புறம் போகின்
உலக மன்னவன் உழையோர் ஆங்குஉளர்.
விண்ணவர் கோமான் விழாக்கொள் நல்நாள்
மண்ணவர் விழையார் வானவர் அல்லது
பாடுவண்டு இமிரா பல்மரம் யாவையும்
வாடா மாமலர் மாலைகள் தூக்கலின்
கைபெய் பாசத்துப் பூதம் காக்கும்என்று
உய்யா னத்திடை உணர்ந்தோர் செல்லார்.
வெங்கதிர் வெம்மையின் விரிசிறை இழந்த
சம்பாதி இருந்த சம்பாதி வனமும்,
தவாநீர்க் காவிரிப் பாவைதன் தாதை
கவேரன்ஆங்கு இருந்த கவேர வனமும்
மூப்புஉடை முதுமைய தாக்குஅணங்கு உடைய
யாப்புடைத் தாக அறிந்தோர் எய்தார்.
அருளும் அன்பும் ஆர்உயிர் ஓம்பும்
ஒருபெரும் பூட்கையும் ஒழியா நோன்பின்
பகவனது ஆணையின் பல்மரம் பூக்கும்
உவவனம் என்பதுஒன்று உண்டு; அதன் உள்ளது

45. எயில் – மதில்.
46. உழையோர் – உரிமைச் சுற்றம்.
49. இமிரா – ஒலியா.
55. தவா – அழியாத, நீங்காத. தாதை – தந்தை.
57. தாக்கு அணங்கு – தீண்டி வருத்தும் தெய்வம்.
58. யாப்புடைத் தாக – உறுதியுடைத்தாக.
60. பூட்கை – குறிக்கோள்.

இலவந்திகைச் சோலை (44 – 46)

பலவகை மலர்கள் அடுக்கடுக்காய் மலர்ந்திருக்கும் நல்ல மரங்கள் பந்தல்போலக் காட்சி தரும் இலவந்திகைச் சோலையின் மதற்புறத்தே சென்றால் சோழ மன்னனின் உரிமை மகளிர் அங்கே விளையாடி இருப்பர். (அரசனும் அவனுடைய உரிமை மகளிரும் விளையாடும் இடம் அது. எனவே அது மலர் கொய்யச் செல்ல ஏற்ற வனம் அன்று).

உய்யாவனம் (47 – 52)

இந்திர விழாக் கொண்டாடப்பெறும் இந்நல் நாளில் உய்யா வனத்தில் தேவர்கள் விரும்பி இருப்பார்களேயன்றி மக்கள் இருக்க மாட்டார்கள். தேவர்கள் இருப்பதால் பாடுகின்ற வண்டுகளும் ஒலி செய்யா. பலவகையான மரங்களும் வாடாத பெரிய மலர்களை மாலைகளாகத் தொங்க விட்டிருப்பனபோலத் தோற்றமளிக்கும். கையில் பாசக் கயிற்றினை வைத்திருக்கும் பூதம் அதனைக் காத்துக் கொண்டிருக்கும். அறிந்தவர் உய்யா வனத்திற்கும் செல்லமாட்டார்.

சம்பாதி வனம், கவேர வனம் (53 – 58)

கதிரவனுடைய வெப்பத்தால் விரிந்த தன் சிறகினை இழந்தவன் சம்பாதி. அவன் தங்கியிருந்த வனம் சம்பாதிவனம். குறையாத நீர்ப் பெருக்கினையுடைய காவிரிப் பாவையின் தந்தையாகிய கவேரன் தங்கியிருந்த வனம் கவேர வனம். இவ்விரண்டு வனங்களிலும் முதுமையுடையனவும் பிறரைத் தாக்கி வருத்துவனவுமான அணங்குகள் உள்ளன. இதனை உறுதியாக அறிந்தோர் இவ் வனங்களுக்குச் செல்லமாட்டார்.

உவவனம் (59 – 62)

உயிர்கள் மீது அருள்கொண்ட தன்மையும், அவற்றின்பால் அன்பு செலுத்துகின்ற இயல்பும், அவற்றைப் பேணிக் காக்கின்ற ஒப்பற்ற குறிக்கோளும் உடைய பண்பினன் புத்த தேவன். அவனது ஆணையாலே பலவகை மலர்களும் பூத்து விளங்கும் வனம் ஒன்று உண்டு. அதுவே உவவனம்.

விளிப்புஅறை போகாது மெய்புறத்து இடூஉம்
பளிக்கறை மண்டபம் உண்டுஅதன் உள்ளது
தூநிற மாமணிச் சுடர்ஒளி விரிந்த
தாமரைப் பீடிகை தான்உண்டு ஆங்குஇடின்
அரும்புஅவிழ் செய்யும் அலர்ந்தன வாடா
சுரும்புஇனம் மூசா தொல்யாண்டு கழியினும்
மறந்தேன் அதன்திறம் மாதவி கேளாய்;
கடம்பூண்டுஓர் தெய்வம் கருத்திடை வைத்தோர்
ஆங்குஅவர் அடிக்குஇடின் அவர்அடி தான்உறும்
நீங்காது யாங்கணும் நினைப்பில ராய்இடின்;
ஈங்குஇதன் காரணம் என்னை என்றியேல்
சிந்தை இன்றியும் செய்வினை உறும்எனும்
வெந்திறல் நோன்பிகள் விழுமம் கொள்ளவும்
செய்வினை சிந்தை இன்றுஎனின் யாவதும்
எய்தாது என்போர்க்கு ஏது வாகவும்
பயம்கெழு மாமலர் இட்டுக் காட்ட
மயன்பண்டு இழைத்த மரபினது அதுதான்
அவ்வனம் அல்லது அணியிழை நின்மகள்
செவ்வனம் செல்லும் செம்மை தான்இலள்
மணிமே கலையொடு மாமலர் கொய்ய
அணியிழை நல்லாய் யானும் போவல்என்று

---

63. விளிப்பு – ஓசை. அறை போகாது – வெளியே செல்லாது. புறத்து இடூஉம் – வெளியே தோற்றுவிக்கும்.
66. பீடிகை – பீடம்.
68. மூசா – மொய்க்கா. தொல்யாண்டு – ஆண்டு பல.
70. கடம் – காணிக்கை.
75. விழுமம் – வருத்தம்.
77. ஏது – கருவி.
79. மயன் – தெய்வ தச்சன்.
81. செவ்வனம் – வேறாக.

பளிக்கறை மண்டபமும் தாமரைப் பீடிகையும் (62 - 83)

அந்த உவவனத்தினுள்ளே பளிக்கறை மண்டபம் ஒன்று உண்டு. அதன் உள்ளே எழும்பும் ஓசை வெளியே வாராது; ஆனால் உள்ளே இருக்கும் உருவம் வெளியே தெரியும். (ஒலி ஊடுருவாது; ஒளி ஊடுருவும் மண்டபம் அது).

அம் மண்டபத்தினுள்ளே தூய நிறமுடைய மாணிக்க ஒளி பரந்த தாமரைப் பீடிகை (பதுமபீடம்) ஒன்று உண்டு. அப் பீடத்தின்மேல் அரும்புகளை இட்டால் அவை மலரும். அலர்ந்த மலர்கள் ஆண்டுகள் பல கடந்தாலும் வாடா. அம் மலர்களில் வண்டுகளும் மொய்க்கா. மாதவி! அப் பீடத்தின் தன்மையைச் சொல்ல மறந்து விட்டேன். இப்போது சொல்கிறேன் கேள். காணிக்கை செலுத்துவதற்காக எந்த ஒரு தெய்வத்தைத் தன் மனத்திலே குறித்திருக்கிறார்களோ, அத் தெய்வத்தின் அடியினை நினைந்து, மலரினை அப் பீடத்திலிட்டால் அம் மலர் அவர் கருதிய அத் தெய்வத்தின் அடிகளில் சென்று சேரும். எவ்வித நினைப்புமின்றி இட்டால் அம் மலர் எங்கேயும் செல்லாது அங்கேயே கிடக்கும். இதற்கு என்ன காரணம் என்று கேட்கிறாயா?

மனத்தோடு கூடாதபோதும் செய்யும் கருமங்கள் பின்னர் வந்து பயனளிக்கும் என்னும் நோன்பிகள் வருத்தமடையவும், மனத்தோடு கூடாவிடின் செய்யும் கருமங்கள் சிறிதும் பயனளிக்காது என்று சொல்வோர்க்குக் கருவியாகவும் மலரை இட்டுக் காட்டுமாறு மயன் என்னும் தெய்வத் தச்சனால் முன்காலத்தில் செய்யப்பட்ட மரபினையுடையது அத் தாமரைப் பீடிகை. (சிந்தை வழித்தான் செயல் நிகழ்கிறது என்ற உண்மையைக் காட்ட மயன் செய்த பீடிகை அது.) மாதவி! அந்த உவவனம் அல்லாது, உன் மகள் செல்லத்தக்க வேறு வனம் எதுவுமில்லை. மாதவியே! மலர்களைக் கொய்துவர மணிமேகலையோடு யானும் செல்வேன் என்று சுதமதி கூறினாள்.

அணிப்பூங் கொம்பர் அவளொடும் கூடி
மணித்தேர் வீதியில் சுதமதி செல்வுழீஇ,
சிமிலிக் கரண்டையன் நுழைகோல் பிரம்பினன்
தவல்அருஞ் சிறப்பின் அராந்தா னத்துஉளோன்
நாணமும் உடையும் நன்கனம் நீத்துக்
காணா உயிர்க்கும் கையற்று ஏங்கி
உண்ணா நோன்போடு உயவல் யானையின்
மண்ணா மேனியன் வருவோன் தன்னை
வந்தீர் அடிகள்நும் மலர்அடி தொழுதேன்
எந்தம் அடிகள் எம்உரை கேண்மோ
அழுக்குஉடை யாக்கையில் புகுந்த நும்உயிர்
புழுக்கறைப் பட்டோர் போன்றுஉரம் வருந்தாது
இம்மையும் மறுமையும் இறுதிஇல் இன்பமும்
தன்வயின் தருஉம்என் தலைமகன் உரைத்தது
கொலையும் உண்டோ கொழுமடல் தெங்கின்
விளைபூந் தேறலின் மெய்த்தவத் தீரே
உண்டு தெளிந்துஇவ் யோகத்து உறுப்யன்
கண்டால் எம்மையும் கையுதிர்க் கொண்மென
உண்ணா நோன்பி தன்னொடும் சூள்உற்று
உண்மென இரக்கும்ஓர் களிமகன் பின்னரும்,

---

86. சிமிலி – உறி. கரண்டை – குண்டிகை.
87. தவல் அரும் – குற்றம் அற்ற.
அராந்தாணம் – அருகன் கோயில் (சினாலயம்).
88. நன்கனம் – அறவே.
90. உயவல் – வருத்தம்.
91. மண்ணா – குளிக்காத.
101. கையுதிர்த்தல் – நீக்கி விடுதல்.
103. களிமகன் – கட்குடியன்.

வீதிக் காட்சிகள்

சமணத் துறவி வந்தான் (84 – 92)

அழகிய மலர்க் கொம்புபோன்ற மணிமேகலையோடு மணித் தேரோடும் வீதி வழியே சுதமதியும் சென்று கொண்டிருந்தாள். அப்படிச் சென்று கொண்டிருந்தபோது, வீதியின் வழியே ஓர் உண்ணா நோன்பி வந்தான். அவன் வைத்திருந்த உறியிலே பிச்சைப் பாத்திரம் இருந்தது; உறியைப் பிரப்பங் கோலிலே தாங்கியிருந்தான். குற்றமற்ற மேன்மையுடைய அருகன் கோயிலில் உள்ளவன் அவன், அவன் நாணத்தையும் உடையையும் முற்றிலுமாக அகற்றியவனாயிருந்தான். (ஆடையில்லை; அதற்காக நாணவும் இல்லை). கண்களால் காணமுடியாத நுண்ணுயிர்க்கும் தீங்கு விளைந்துவிடுமோ எனச் செயலற்று ஏக்கமுடையவனாயிருந்தான். உண்ணா நோன்பு மேற்கொண்டிருந்த அவன் வருத்தம் கொண்ட யானையைப்போலக் குளிக்காத உடம்பை உடையவனாக அசைந்தாடி வந்து கொண்டி ருந்தான்.

கட்குடியன் துறவியைக் குடிக்குமாறு கெஞ்சினான் (93 – 103)

வருகின்ற அவனைப் பார்த்து ஒரு குடிகாரன், ''அடிகளே வாருங்கள்! உம்முடைய மலர் போன்ற திருவடிகளை வணங்குகின்றேன். எம்முடைய அடிகளே! நான் சொல்வதைக் கேளுங்கள். அழுக்குடைய உடலில் புகுந்துள்ள உம் உயிர், புழுங்கச் செய்யும் அறையில் அகப்பட்டோர் போல வருந்தியிருக்கிறது. அவ் வருத்தம் தீர என்னிடம் ஒரு மருந்து இருக்கிறது. இம்மருந்து இம்மையின்பத்தையும், மறுமையின்பத்தையும் முடிவில்லாது தருவது என என் தலைவர் கூறியுள்ளார். (அதுவே தென்னம்பாளைக் கள்). கொழுமையான மடல்களைக் கொண்டுள்ள தென்னையின் பாளையில் விளைகின்ற கள்ளில் கொலைப் பாவம் உண்டா? இல்லையே! உண்மைத் தவம் உடையீர்! இக் கள்ளை உண்டு தெளிந்தால் யோக நெறியிலே அடையும் பயனைப் பெறலாம். அவ்வாறு பெறவில்லை என்றால் கள்ளையும் நீக்கி விடுங்கள்; என்னையும் கைவிட்டு விடுங்கள்!'' என உண்ணா நோன்பியான சமண முனிவரிடம் சபதம் கூறி, ''குடியுங்கள்! குடியுங்கள்'' என வேண்டி நின்றான் அக்குடிகாரன். அவன் பின்னே சிலர் நின்றனர்.

கணவிரி மாலை கட்டிய திரணையன்
குவிமுகிழ் எருக்கில் கோத்த மாலையன்
சிதவல் துணியொடு சேண்ஓங்கு நெடுஞ்சினைத்
ததர்வீழ்பு ஒடித்துக் கட்டிய உடையினன்
வெண்பலி சாந்தம் மெய்ம்முழுது உரீஇப்
பண்புஇல் கிளவி பலரொடும் உரைத்தாங்கு
அழூஉம் விழூஉம் அரற்றும் கூஉம்
தொழூஉம் எழூஉம் சுழலலும் சுழலும்
ஓடலும் ஓடும் ஒருசிறை ஒதுங்கி
நீடலும் நீடும் நிழலொடு மறலும்
மையல் உற்ற மகன்பின் வருந்திக்
கையறு துன்பம் கண்டுநிற் குநரும்.
சுரியல் தாடி மருள்படு பூங்குழல்
பவளச் செவ்வாய்த் தவள வாள்நகை
ஒள்அரி நெடுங்கண் வெள்ளிவெண் தோட்டுக்
கருங்கொடிப் புருவத்து மருங்குவளை பிறைநுதல்
காந்தள்அம் செங்கை ஏந்துஇள வனமுலை
அகன்ற அல்குல் அந்நுண் மருங்குல்
இகந்த வட்டுடை எழுதுவரிக் கோலத்து
வாணன் பேரூர் மறுகிடைத் தோன்றி
நீள்நிலம் அளந்தோன் மகன்முன் ஆடிய
பேடிக் கோலத்துப் பேடுகாண் குநரும்,

---

104. கணவிரி மாலை – அலரிப் பூ மாலை.
106 சிதவல் துணி – சிதரின துணி.
107. ததர் வீழ்பு – செறிந்த சுள்ளிகள்.
108 வெண்பலி – திருநீறு. சாந்தம் – சநதனம்.
112. ஒரு சிறை – ஒரு பக்கம்.
113. மறலும் – பகைமை கொள்ளும்.
114. மையல் – பித்து.
116. சுரியல் தாடி – சுருண்ட தாடி.
118. வெள்ளி வெண் தோடு – சங்கினால் செய்த காதணி.
122 வட்டுடை – முழந்தாளளவாக உடுக்கும் உடை.

பித்தன் திரிந்தான் (104 – 115)

பித்தன் ஒருவன், செவ்வலரிப் பூமாலையைக் கொண்டையிலே கட்டியிருந்தான். எருக்கின் குவிந்த அரும்புகளால் கோக்கப்பட்ட மாலையை அணிந்திருந்தான். கிழிந்த கந்தைத் துணியோடு நீண்ட மரத்தின் கிளைகளிலுள்ள உலர்ந்த சுள்ளிகளையும் ஒடித்து ஆடையாக அணிந்திருந்தான். உடம்பு முழுவதும் வெண்ணீறும், சந்தனமும் பூசியிருந்தான். பண்பில்லாத சொற்களைப் பலருடனும் பேசியிருந்தான். அழுதான்; விழுந்தான்; அரற்றினான்; கூவினான்; தொழுதான்; சுற்றிச் சுழன்றான்; ஓடினான்; ஒரு பக்கமாக ஒதுங்கி நெடுநேரம் நின்றான்; தன் நிழலுடனேயே பகைகொண்டு சண்டையிட்டான். பித்துற்ற அத்தகைய ஒருவனின் பின்னே அவனுடைய துன்பத்தினைக் கண்டு வருந்திச் சிலர் நின்றனர்.

பேடி ஆடினான் (116 – 125)

சுருண்ட தாடி; செறிந்த அழகிய கூந்தல்; பவளம் போன்று சிவந்த வாய்; ஒளியுடைய வெண்மையான பற்கள்; செவ்வரிபடர்ந்த நெடிய கண்கள்; வெண்மையான சங்குத்தோடு; கரிய கொடிபோன்ற புருவங்கள்; வளைந்த பிறைபோன்ற நெற்றி; காந்தள் மலர் போன்ற அழகிய கை, ஏந்தியிருக்கும் இளைய அழகிய முலைகள்; அகன்ற அல்குல்; அழகிய நுண்ணிய இடை; முழங்காலளவு உடுத்தியிருக்கும் வட்டுடை; தோளிலும் மார்பிலும் எழுதப்பெற்ற வரிக் கீற்றுகள் கொண்ட பேடி ஒருவன், முன்னொரு காலத்தில் வாணன் என்னும் அசுரனது 'சோ' என்னும் நகர வீதியில், உலகளந்த திருமாலின் மகனாகிய காமன் பேடிக் கோலத்துடன் ஆடிய ஆடல்போல ஆடி நின்றான். அவனைக் கண்டு நின்றனர் சிலர்.

(காமன் மகன் அநிருத்தன், வாணன் மகள் உஷாவைக் காதலித்தான். வாணன் அவனைச் சிறையிலிட்டான். காமன், அலி வேடம் பூண்டு பேடிக் கூத்தாடி வாணனை மகிழ்வித்து அநிருத்தனை விடுவித்தான் என்பது கதை)

வம்ப மாக்கள் கம்பலை மூதூர்ச்
சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்
மைஅறு படிவத்து வானவர் முதலா
எவ்வகை உயிர்களும் உவமம் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியம் கண்டுநிற் குநரும்
விழவுஆற்றுப் படுத்த கழிபெரு வீதியில்
பொன்நாண் கோத்த நல்மணிக் கோவை
ஐயவி அப்பிய நெய்அணி முச்சி
மயிர்ப்புறம் சுற்றிய கயிற்கடை முக்காழ்
பொலம்பிறைச் சென்னி நலம்பெறத் தாழச்
செவ்வாய்க் குதலை மெய்பெறா மழலை
சிந்துபு சின்னீர் ஐம்படை நனைப்ப
அற்றம் காவாச் சுற்றுடைப் பூந்துகில்
தொடுத்தமணிக் கோவை உடுப்பொடு துயல்வரத்
தளர்நடை தாங்காக் கிளர்பூண் புதல்வரைப்
பொலந்தேர் மீமிசைப் புகர்முக வேழத்து
இலங்குதொடி நல்லார் சிலர்நின்று ஏற்றி
ஆல்அமர் செல்வன் மகன்விழாக் கால்கோள்
காண்மி னோஎனக் கண்டுநிற் குநரும்

126. வம்ப மாக்கள் – புதியோர். கம்பலை – முழக்கம்.
127. சுடுமண – செங்கல.
130. சுதை – சுண்ணச் சாந்து.
134. ஐயவி – வெண்சிறு கடுகு. (பேய் தீண்டி வருத்தா வண்ணம் குழந்தைகளின் மயிர் முடியில் நெய் பூசி வெண்சிறு கடுகு அப்புவது மரபு).
135. கயிற் கடை – கொக்கி.
138. ஐம்படை – ஐம்படைத் தாலி எனும் மார்பணி.
139. அற்றம் – உடம்பில் மறைப்பதற்குரிய பகுதி.
144. ஆல் அமர் செல்வன் மகன் – முருகன்.

வேற்று நாட்டினர் ஓவியம் கண்டனர் (126 – 131)

வேற்று நாடுகளிலிருந்து வந்த புதிய மக்கள் செய்கின்ற ஆரவார முழக்கம் நிறைந்த புகார் நகரில் செங்கற்களால் கட்டப்பெற்று நெடிய நிலைகளைக் கொண்ட பெரிய வீடுகளில் வித்தகர் ஓவியம் தீட்டியிருந்தனர். அவ் வோவியங்கள் வானவர் முதலாக மற்ற எல்லா வகை உயிரினங்களையும் முழுதும் ஒத்திருக்கும்படியாக வெண் சாந்தினால் விளக்கமாகத் தீட்டப்பெற்றிருந்தன. கண்கவரும் அவ்வோவியங்களை கண்டு வியந்து நின்றனர் சிலர்.

மகளிர் புதல்வர்க்கு விழா நிகழ்ச்சிகளைக் காட்டினர் (132 – 145)

விழா நடைபெற்றுக் கொண்டிருந்த பெரிய வீதிகளில் மகளிர் புதல்வரை அழைத்து வந்தனர். குழந்தைகட்குப் பொன் கயிற்றில் கோக்கப்பெற்ற மணிக்கோவையை அணிவித்திருந்தனர். நெய் பூசிய உச்சியில் வெண் சிறு கடுகை அரைத்து அப்பியிருந்தனர். மயிர்ப் புறத்தில் கொக்கியில் இணைத்த மூன்று சரங்கள் கொண்ட முத்து வடத்தைச் சுற்றியிருந்தனர். அது பிறைபோன்ற நெற்றியில் அழகுபெறத் தொங்கிக் கொண்டிருந்தது.

பொருள் விளக்கமில்லாத இனிய மழலை பேசும் அக் குழந்தைகளின் குதலைச் செவ்வாயிலிருந்து வழிந்த நீர் மார்பில் அணிந்திருந்த ஐம்படைத்தாலியை நனைத்தது.

இடையில் அற்றத்தை மறைக்காமல் சுற்றப்பட்டிருந்த அழகிய ஆடையும் மணிவடமும் அசைந்தன. ஒளி வீசும் அணிகலன்களை அணிந்து தளர்நடை நடப்பதையும் பொறுக்க முடியாதவர்களாய் நடந்த அப்புதல்வர்களை வளையணிந்த தாயர் பொன்தேரின் மீதிருந்த யானையின் மேல் ஏற்றினர். ''ஆலமர் செல்வனான சிவபெருமானின் மகன் முருகனின் திருவிழாவிற்குக் கால்கோள் நாட்டுவதைக் காணீர் காணீர்'' என்று மகிழ்வுடன் கூறினர். இக் காட்சியைக் கண்டு நின்றனர் சிலர்.

விராடன் பேர்ஊர் விசயனாம் பேடியைக்
காணிய சூழ்ந்த கம்பலை மாக்களின்
மணிமே கலைதனை வந்துபுறம் சுற்றி,
அணிஅமை தோற்றத்து அருந்தவப் படுத்திய
தாயோ கொடியள் தகவுஇலள் ஈங்குஇவள்
மாமலர் கொய்ய மலர்வனம் தான்புகின்
நல்இள அன்னம் நாணாது ஆங்குஉள
வல்லுந கொல்லோ மடந்தை தன்நடை
மாமயில் ஆங்குஉள வந்துமுன் நிற்பன
சாயல்கற் பனகொலோ தையல் தன்னுடன்
பைங்கிளி தாம்உள பாவைதன் கிளவிக்கு
எஞ்சல கொல்லோ இசையுந அல்ல
என்றுஇவை சொல்லி யாவரும் இனைந்துஉக,
செந்தளிர்ச் சேவடி நிலம்வடு உறாமல்
குரவமும் மரவமும் குருந்தும் கொன்றையும்
திலகமும் வகுளமும் செங்கோல் வெட்சியும்
நரந்தமும் நாகமும் பரந்துஅலர் புன்னையும்
பிடவமும் தளவமும் முடமுள் தாழையும்
குடசமும் வெதிரமும் கொழுங்கால் அசோகமும்
செருந்தியும் வேங்கையும் பெருஞ்சண் பகமும்
எரிமலர் இலவமும் விரிமலர் பரப்பி
வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே
ஒப்பத் தோன்றிய உவவனம் தன்னைத்
தொழுதனள் காட்டிய சுதமதி தன்னொடு
மலர்கொய்யப் புகுந்தனள் மணிமே கலைஎன்

---

150. தகவு இலள் – தகுதி இல்லாதவள்.
153. வல்லுந கொல்லோ – வல்லனவோ?
157. எஞ்சல கொல்லோ – தோற்பன அல்லவோ ?
இசையுந அல்ல – ஒப்பன அல்ல.
158. இனைந்து உக – வருந்திக் கெட
168. படாம் – துகில்.

மணிமேகலையைச் சூழ்ந்து மக்கள் கூடினர் (146 –159)

இவ்வாறாகப் பலவற்றையும் கண்டு நின்றோரெல்லாம் விராடன் நகரில் சென்று கொண்டிருந்த அருச்சுனனாகிய பேடியைக் காண்பதற்கு வந்து சூழ்ந்த மக்களைப்போலத் திரண்டு வந்து மணிமேகலையைச் சூழ்ந்து கொண்டனர். ''இந்த எழில் உருவத்தை அரிய தவநெறியில் ஈடுபடுத்திய இவளுடைய தாயோ மிகக் கொடியவள்; தாயாயிருக்கத் தகுதியுமற்றவள்.

இம் மணிமேகலை அழகிய மலர் கொய்ய வனத்துள்ளே சென்றால், அங்குள்ள நல்ல இளம் அன்னங்கள் இவளைப்போல நாம் நடக்கமுடியுமா? (முடியாதே) என்று வெட்கப்படுமே! அங்குள்ள தோகை மயில்கள் இவள் முன் வந்து இவளுடைய சாயலைக் கற்றுக் கொள்ளுமோ? (கற்க முடியாதே!) அங்குள்ள பசுங்கிளிகளின் பேச்சுகள் இவளுடைய மொழிகளுக்குத் தோற்பன அன்றி ஒப்பன ஆகாவே! என இவ்வாறு அனைவரும் வருந்திக் கூறினர். மணிமேகலையோ நிலத்தில் சுவடு ஏற்படாதவாறு மெல்லெனத் தன் சிவந்த தளிர்போன்ற அழகிய அடிகளை எடுத்து வைத்து நடந்து சென்றாள்.

மணிமேகலையும் சுதமதியும் மலர்வனம் புகுந்தனர் (160 – 171)

குரா, வெண்கடம்பு, குருந்து, கொன்றை, மஞ்சாடி, மகிழ், சிவப்பு வெட்சி, நாரத்தை, நாகம், மலர் பரந்த புன்னை, பிடவம், செம்முல்லை, வளைந்த முள்ளுடைய தாழை, வெட்பாலை, மூங்கில், அடிபருத்த அசோகம், செருந்தி, வேங்கை, பெருஞ் சண்பகம், நெருப்பு நிறப்பூக்களையுடைய இலவம் ஆகிய பல மரங்களும் மலர்களைப் பரப்பியிருந்தன. தேர்ந்த ஓவியன் திறம்பட எழுதிய சித்திரத் துகிலினைப் போர்த்தியிருப்பதுபோல உவவனம் காட்சியளித்தது. 'இதுதான் உவவனம்' என்று தொழுது காட்டினாள் சுதமதி. மணிமேகலை அவளுடன் மலர் கொய்ய அவ் வனத்தினுள் புகுந்தனள்.

4. பளிக்கறை புக்க காதை

பரிதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக்கு
இருள்வளைப் புண்ட மருள்படு பூம்பொழில்
குழல்இசை தும்பி கொளுத்திக் காட்ட
மழலை வண்டினம் நல்லியாழ் செய்ய
வெயில்நுழைபு அறியாக் குயில்நுழை பொதும்பர்
மயில்ஆடு அரங்கில் மந்திகாண் பனகாண்;
மாசுஅறத் தெளிந்த மணிநீர் இலஞ்சிப்
பாசடைப் பரப்பில் பன்மலர் இடைநின்று
ஒருதனி ஓங்கிய விரைமலர்த் தாமரை
அரச அன்னம் ஆங்குஇனிது இருப்பக்
கரைநின்று ஆலும் ஒருமயில் தனக்குக்
கம்புள் சேவல் கனைகுரல் முழவாக்
கொம்பர் இருங்குயில விளிப்பது காணாய்;

1. பரிதி – சூரியன். தானை – சேனை
2. மருள்படு – மயக்கத்தைத் தருகின்ற
3. கொளுத்திக் காட்ட – பொருத்திக் காட்ட.
5. பொதும்பர் – இளமரச் சோலை
7. இலஞ்சி – பொய்கை
8. பாசடை – பசிய இலைகள்
9. விரை – மணம்.
11. ஆலும் – ஆடும்
12. கம்புள் சேவல் – சம்பங்கோழி
13. கொம்பர் – கிளை.

4. பளிக்கறை புக்க காதை

உவவனக் காட்சிகள் (1 – 2)

கதிரவனுடைய விரிந்த கதிர்களாகிய படை வளைக்க, அதனால் தோற்றுப்போன இருளெல்லாம் ஓரிடத்தே வந்து குவிந்ததுபோன்ற மயக்கத்தைத் தருகின்ற கருநிழல் கொழுவிய மலர் வனம் அது. அம் மலர்வனக் காட்சிகளை ஒவ்வொன்றாகச் சுதமதி மணிமேகலைக்குக் காட்டினாள்.

மயில் ஆட மந்தி காண்கிறது (3 – 6)

தும்பிகள் வேய்ங்குழல் போல இசைத்தன; இளைய வண்டினங்கள் யாழ்போல் ஒலித்தன. வெயில் உள்ளே நுழைய முடியாததும் ஆனால் குயில்கள் நுழைந்து சென்று கொண்டிருப்பது மான அடர்ந்த இளமரக்கா அது. அங்கே ஆடரங்கில் பெண்கள் ஆடுவதுபோல மயில்கள் ஆடுகின்றன; அவ்வாட்டத்தை மந்திகள் இன்புடன் பார்த்துக் கொண்டிருக்கின்றன. மணிமேகலையே இதனைக் காண்பாயாக! எனச் சுதமதி மணிமேகலைக்குக் காட்டினாள். (இளமரச் சோலை – நாட்டிய அரங்கு; மயில் - நாட்டியப் பெண்; மந்தி - நாட்டியம் காணும் அவை; தும்பியிசை - குழல்; வண்டொலி - யாழ்).

அன்ன அரசன் காணும் நாட்டியம் (7 – 13)

தூய்மையான தெளிந்த பளிங்கு போன்ற நீர்ப் பொய்கை. பசிய இலைப் பரப்பினிடையே பலவகை மலர்கள் காணப்படுகின்றன. அவற்றிடையே மணமுடைய ஒரு தாமரை மலர் தனியாக உயர்ந்து காணப்படுகிறது. அதில் அரச அன்னம் இனிதாக வீற்றிருக்கிறது. பொய்கைக் கரையிலிருந்து ஒரு மயில் ஆடுகிறது. அந்த ஆட்டத்திற்கு முழங்கும் முழவுபோலச் சம்பங்கோழிச் சேவல் மிக்க குரலெடுத்து முழங்குகின்றது; மரக் கொம்பிலே கருங்குயில் பாடிக் கொண்டிருக்கிறது. ''இதனையும் காண்பாயாக!'' எனச் சுதமதி மணிமேகலைக்குக் காட்டினாள் (அன்னம் ஆகிய அரசன் காண நடைபெறுகின்ற நாட்டியம் இது).

இயங்குதோ வீதி எழுதுகள் சேர்ந்து
வயங்குஒளி மழுங்கிய மாதர்நின் முகம்போல்
விரைமலர்த் தாமரை கரைநின்று ஓங்கிய
கோடுஉடைத் தாழைக் கொழுமடல் அவிழ்ந்த
வால்வெண் சுண்ணம் ஆடியது இதுகாண்;
மாதர் நின்கண் போதுஎனச் சேர்ந்து
தாதுஉண் வண்டுஇனம் மீதுகடி செங்கையின்
அம்சிறை விரிய அலர்ந்த தாமரைச்
செங்கயல் பாய்ந்து பிறழ்வன கண்டுஆங்கு
எறிந்துஅது பெறாஅது இரைஇழந்து வருந்தி
மறிந்து நீங்கு மணிச்சிரல் காண்எனப்
பொழிலும் பொய்கையும் சுதமதி காட்ட,
மணிமே கலைஅம் மலர்வனம் காண்புழி,
மதிமருள் வெண்குடை மன்னவன் சிறுவன்
உதய குமரன் உருகெழு மீதூர்
நீயான் நடுங்க நடுவுநிலன்று ஓங்கிய
கூம்புமுதல் முறிய வீங்குபிணி அவிழ்ந்து
கயிறுகால் பரிய வயிறுபாழ் பட்டாங்கு
இதைசிதைந்து ஆர்ப்பத் திரைபொரு முந்நீர்
இயங்குதிசை அறியாது யாங்கணும் ஓடி
மயங்குகால் எடுத்த வங்கம் போலக்
காழோர் கையற மேலோர் இனறிப்

---

14. துகள் – புழுதி.
18. வால் வெண் – தூய வெள்ளிய.
20. கடி – அகற்றுகின்ற.
24. மணிச் சிரல – நீலமணி போன்ற சிச்சிலிப் பறவை.
29. நீயான் – மாலுமி.
31. கால் பரிய – அறுபட. வீங்கு பிணி – இறுகின பிடிப்பு.
32. இதை – பாய்.
34. கால் – காற்று. வங்கம் – மரக் கலம்
35. காழோர் – குத்துக்கோற்காரர்.

புழுதி படிந்த முகமும் தாது படிந்த தாமரையும் (14 – 18)

சுதமதி மணிமேகலையிடம், ''தேர் ஓடும் வீதியிலே எழுந்த புழுதி படிந்து ஒளி வீசும் உன் முகம் ஒளி மழுங்கிக் காணப்படுகிறது. மணம்மிக்க தாமரை மலர்மேல் கரையிலே வளர்ந்து வளைந்துள்ள தாழையின் கொழுமையான மடலினின்றும் உதிர்ந்த தூய வெண்ணிறத் தாது படிந்திருப்பதால் அம்மலரும் புழுதி படிந்த உன் முகம்போல ஒளியிழந்திருப்பதை இதோ பார்!'' எனக் காட்டினாள்.

சிச்சிலியும் செங்கையும் (19 – 26)

''மணிமேகலை! உன் அழகிய கண்ணை மலர் என்று கருதி வண்டுகள் மொய்க்க வந்தன. அவற்றை உன் சிவந்த கைகளால் ஓட்டினாய்! அதோபார் மேகலை! விரிந்த தாமரை மலரில் பாய்ந்து பிறழ்கின்ற செங்கயல் மீன்களைக் கண்டு அவற்றின் மீது பாய்ந்து குத்தியெடுக்க முடியாமல் இரையை இழந்த நீலநிற சிச்சிலிப் பறவை வண்டுகளை ஓட்டி மீளும் உன் கைபோலத் திரும்புவதைப் பாராய்! (மணிமேகலையின் முகம் தாமரைக்கும், கண் கயல் மீனுக்கும், கை சிச்சிலிப் பறவைக்கும் உவமம்). இவ்வாறு பொழிலையும் பொய்கையையும் சுதமதி காட்ட, மணிமேகலை அம் மலர்வனத்தின் அழகைக் கண்டு நின்றாள் அப்போது.

பட்டத்து யானை மதம் கொண்டு அலைந்தது (27 – 43)

மதிபோலும் வெண்கொற்றக் குடையையுடைய சோழ மன்னனின் மகன் உதயகுமரன்.

ஒரு மரக்கலம், மாலுமி நடுங்கிப் பதறுமாறு, அக்கலத்தின் நடுவே நின்ற பாய்மரம் அடியோடு முறிகிறது. பாயினைக் கட்டியிருந்த கயிறு இறுக்கியிருந்த நிலை தளர்ந்து அறுபடுகிறது. வயிறு கிழிந்ததுபோல பாய்கள் பீறுண்டு ஒலிக்கின்றன. அலைகள் குமுறி மோதிக் கொண்டிருக்கின்றன. சுழல் காற்றினால் தாக்கப்பட்ட கலம் திசை தெரியாமல் அங்கும் இங்குமாக ஓடி அலைகிறது. இப்படிப்பட்ட ஒரு மரக் கலத்தைப்போல புகார் நகரில் சோழ மன்னனின் பட்டத்து யானை மதங்கொண்டு கட்டறுத்து ஓடுகிறது. குத்துக் கோற்காரர்கள் செயலற்று நிற்கின்றனர். மேலிருந்து செலுத்தும் பாகரையும் அது வீசியெறிந்தது.

பாகின் பிளவையிற் பணைமுகம் துடைத்துக்
கோவியன் வீதியும் கொடித்தேர் வீதியும்
பீடிகைத் தெருவும் பெருங்கலக் குறுத்து ஆங்கு
இருபால் பெயரிய உருகெழு மூதூர்
ஒருபால் படாஅது ஒருவழித் தங்காது
பாகும் பறையும் பருந்தின் பந்தரும்
ஆதுல மாக்களும் அலவுற்று விளிப்ப
நீல மால்வரை நிலனொடு படர்ந்தெனக்
கால வேகம் களிமயக்கு உற்றென
விடுபரிக் குதிரையின் விரைந்துசென்று எய்திக்
கடுங்கண யானையின் கடாத்திறம் அடக்கி
அணித்தேர்த் தானையொடு அரசிளங் குமரன்
மணித்தேர்க் கொடிஞ்சி கையால் பற்றிக்
கார்அலர் கடம்பன் அல்லன் என்பது
ஆரங் கண்ணியில் சாற்றினன் வருவோன்
நாடக மடந்தையர் நலம்கெழு வீதி
ஆடகச் செய்வினை மாடத்து ஆங்கண்
சாளரம் பொளித்த கால்போகு பெருவழி
வீதிமருங்கு இயன்ற பூஅணைப் பள்ளித்
தகரக் குழலாள் தன்னொடு மயங்கி
மகர யாழின் வான்கோடு தழீஇ
வட்டிகைச் செய்தியின் வந்ரைந்த பாவையின்
எட்டி குமரன் இருந்தோன் தன்னை
மாதர் தன்னொடு மயங்கினை இருந்தோய்
யாதுநீ உற்ற இடுக்கண் என்றலும்,

---

36. பாகு – பாகர்.
38. பீடிகைத் தெரு – கடைத் தெரு
42 ஆதுல மாக்கள் – ஏழை எளியவர்.
44. களி – மதம். 46 கடாம் – மதம்
48. கொடிஞ்சி – தேர்த் தட்டிலுள்ள ஓர் உறுப்பு.
50. ஆரங்கண்ணி – ஆத்தி மாலை.
52. ஆடகம் – பொன்.
53 பொளித்த – துளை செய்யப்பட்ட
55. தகரம் – மயிர்ச் சாந்து.

பாகர் குத்தியதால் பிளந்த பெரிய முகத்தைத் தன் கையால் துடைத்துக் கொண்டே வெறிபிடித்து ஓடுகிறது. அரசப் பெரு வீதி, தேர் ஓடும் வீதி, கடைத்தெரு என எல்லா இடங்களையும் கலக்கமடையச் செய்கிறது. பட்டினப்பாக்கமும், மருவூர்ப்பாக்கமும் அமைந்த அப் பெரிய நகரில் ஒரே பக்கத்தில் செல்லாமலும், ஒரே இடத்தில் தங்காமலும் ஓடியதால் பாகர் யானையை அடக்க முடியவில்லை. பறை கொட்டுவோரும், பருந்துக் கூட்டமும், ஏழையெளியவரும் கலங்கக்கலங்க, யார் அழைத்தாலும் வாராது நீலமலை நிலத்தில் திரிவதுபோல ஊரில் திரிந்தது பட்டத்து யானை.

உதயகுமரன் யானையை அடக்கித் திரும்பினான் (44 – 50)

காலவேகம் என்னும் பட்டத்து யானை மதம் உற்றதென்பதை அறிந்த உதயகுமரன் வேகமாகச் செல்லும் குதிரையில் விரைந்து சென்று, யானை இருந்த இடத்தை அடைந்து கொலை வெறி கொண்ட யானையின் மதத்தினை அடக்கினான். பின்னர் அழகிய தேர்ப்படை பின் தொடர அரசிளங்குமரனாகிய உதயகுமரன் தான் ஏறிய தேரிலிருந்த அழகிய கொடிஞ்சியைக் கையால் பற்றிக்கொண்டு திரும்பினான். கார் காலத்தில் மலர்கின்ற கடம்ப மலர் மாலையை அணிந்த முருகப்பெருமான் இவனோ என்றால் இல்லை என்பதை அவன் அணிந்திருந்த ஆத்திமாலை அறிவித்தது.

(முருகனைப் போன்று இருக்கிறான். ஆயினும் கடம்ப மாலை இல்லாமையாலும் ஆத்தி மாலையணிந்திருப்பதாலும் இவன் சோழன் மகன் என்று சொல்லவேண்டியிருக்கிறது. முருகன் கடம்ப மாலை அணிபவன். சோழர்கள் ஆத்திமாலை அணிபவர்கள்.)

எட்டி குமரன் துயரம் (51 – 71)

நாடக மகளிர் உறையும் நலஞ்சிறந்த வீதி; அங்கே ஆடகப் பொன்னால் செய்யப்பெற்ற வேலைப்பாடமைந்த ஒரு மாளிகை. அதில் காற்றுச் செல்வதற்காக வீதியை நோக்கி அமைக்கப்பட்ட சாளரம்; அச் சாளரத்தின்முன் தெருப்பக்கம் அமைந்த மலர்ப்படுக்கையில் மயிர்ச் சாந்தணிந்த கூந்தலையுடைய கணிகை ஒருத்தியுடன், மகரயாழின் சிறந்த தண்டினைத் தழுவியவாறு எழுதி வைத்த சித்திரம்போல அசைவற்றிருந்தான் எட்டிகுமரன். உதயகுமரன் அவனிடம், ''காதலி அருகிருக்க வருந்தியிருக்கிறாயே! உனக்கு நேர்ந்த துன்பம் யாது?'' எனக் கேட்டான்

ஆங்குஅது கேட்டு வீங்குஇள முலையொடு
பாங்கில் சென்று தான்தொழுது ஏத்தி
மட்டுஅவிழ் அலங்கல் மன்ன குமரற்கு
எட்டி குமரன் எய்தியது உரைப்போன்:
வகைவரிச் செப்பினுள் வைகிய மலர்போல்
தகைநலம் வாடி மலர்வனம் புகூஉம்
மாதவி பயந்த மணிமே கலையொடு
கோவலன் உற்ற கொடுந்துயர் தோன்ற
நெஞ்சுஇறை கொண்ட நீர்மையை நீக்கி
வெம்பகை நரம்பின் என்கைச் செலுத்தியது
இதுயான் உற்ற இடும்பை என்றலும்,
மதுமலர்த் தாரோன் மனம்மகிழ்வு எய்தி
ஆங்குஅவள் தன்னைஎன் அணித்தேர் ஏற்றி
ஈங்குயான் வருவேன் என்றுஅவற்கு உரைத்துஆங்கு
ஓடுமழை கிழியும் மதியம் போல
மாட வீதியில் மணித்தேர் கடைஇக்
கார்அணி பூம்பொழில் கடைமுகம் குறுகஅத்
தேர்ஒலி மாதர் செவிமுதல் இசைத்தலும்,
சித்திரா பதியோடு உதய குமரன்உற்று
என்மேல் வைத்த உள்ளத் தான்என
வயந்த மாலை மாதவிக்கு ஒருநாள்
கிளந்த மாற்றம் கேட்டேன் ஆதலின்
ஆங்குஅவன் தேர்ஒலி போலும் ஆயிழை
ஈங்குஎன் செவிமுதல் இசைத்ததுஎன் செய்கெஎன
அமுதுஉறு தீஞ்சொல் ஆயிழை உரைத்தலும்
சுதமதி கேட்டுத் துளக்குறு மயில்போல்
பளிக்கறை மண்படம் பாவையைப் புகுகென்று
ஒளித்துஅறை தாழ்கோத்து உள்ளகத்து இரீஇ
ஆங்குஅது தனக்குஓர் ஐவிலின் கிடக்கை
நீங்காது நின்ற நேர்இழை தன்னை,

75 ஓடு மழை – ஓடுகின்ற முகில் 76. கடைஇ – செலுத்தி.
77 கடைமுகம் – வாயிலிலிடம். 86. துளக்குறுதல் – தளர்ச்சியடைதல்

அதைக் கேட்ட எட்டிகுமரன் பருத்த முலையுடைய தன் காதலியுடன் அவன் அருகிற் சென்று துதித்தான். தேன் சொரியும் மாலையணிந்திருந்த அரசகுமரனிடம் எட்டிகுமரன் நடந்ததை உரைத்தான். ''அரசிளங்குமர! வேலைப்பாடமைந்த செப்பின் உள்ளே வைக்கப்பட்ட மலர்போல மலர்வனத்துக்குச் சென்ற மாதவியின் மகள் மணிமேகலையின் பேரழகு வாடியிருக்கக் கண்டேன். மணிமேகலையைக் கண்டதும் அவள் தந்தை கோவலனுக்கு நேர்ந்த துன்பம் நினைவுக்கு வந்தது. என் மனத்துயரை அடக்க முடியவில்லை. கணிகையுடன் யாழிசைத்திருந்த என்னுடைய விரல் பகை நரம்பில் சென்றது. இதுவே யான் அடைந்த துன்பம்'' என்றான்.

உதயகுமரன் மகிழ்ச்சி (72 – 77)

தேன் நிறைந்த மலர்மாலையணிந்த உதயகுமரன் மனமகிழ்வு கொண்டு, ''அவளை என் அழகிய தேரிலேற்றி இங்கே வருவேன்'' என எட்டியிடம் கூறினான். முகிலைக் கிழித்தோடும் முழுமதிபோல மாட வீதியில் மணித்தேர் செலுத்தி, மேகம் சூழ்ந்து அழகு செய்யும் பூம்பொழிலின் வாயிலை அடைந்தான்.

மணிமேகலையின் அச்சம் (78 – 85)

உதயகுமரனின் தேரொலி மணிமேகலையின் காதுகளில் விழுந்தது. மணிமேகலை சுதமதியிடம், ''உதயகுமரன் என் மேல் காதல் கொண்டுள்ளான் என்பதை என் பாட்டி சித்திராபதியிடமிருந்து தெரிந்துகொண்ட வயந்தமாலை அதனை ஒருநாள் என் தாய் மாதவியிடம் சொல்லியதைக் கேட்டிருக்கிறேன்.

என் காதில் இப்போது விழுவது அந்த உதயகுமரனுடைய தேரொலிபோல இருக்கிறது. நான் என் செய்வேன்?'' என அழுதினும் இனிய மொழியுடைய மணிமேகலை கூறினாள்.

பளிக்கறையுள் மணிமேகலை (86 – 90)

இதைக்கேட்ட சுதமதி தளர்ச்சியடைந்த மயில்போலச் சோர்வுற்றாள். மணிமேகலையிடம், ''பளிக்கறை மண்டபத்துள்ளே புகுந்து கதவைத் தாளிட்டுக் கொள்க'' எனச் சொல்லி ஒளித்து வைத்தாள். பின் அங்கிருந்து ஐந்து விற்கிடை தொலைவிலே சென்று, அசையாது நின்று கொண்டாள்

கல்என் தானையொடு கடுந்தோ் நிறுத்திப்
பல்மலர்ப் பூம்பொழில் பகல்முளைத் ததுபோல்
பூமரச் சோலையும் புடையும் பொங்கரும்
தாமரைச் செங்கண் பரப்பினன் வரூஉம
அரசிளங் குமரன் ஆரும்இல் ஒருசிறை
ஒருதனி நின்றாய் உன்திறம் அறிந்தேன்
வளர்இள வனமுலை மடந்தை மெல்இயல்
தளர்இடை அறியும் தன்மையள் கொல்லோ?
விளையா மழலை விளைந்து மெல்இயல்
முளைஎயிறு அரும்பி முத்துநிரைத் தனகொல்?
செங்கயல் நெடுங்கண் செவிமருங்கு ஓடி
வெங்கணை நெடுவேள் வியப்புஉரைக் கும்கொல்?
மாதவர் உறைவிடம் ஓரீஇமணி மேகலை
தானே தமியள்இங்கு எய்தியது உரைஎன,
பொதிஅறைப் பட்டோர் போன்றுஉளம் வருந்தி
மதுமலர்க் கூந்தல் சுதமதி உரைக்கும்:
இளமை நாணி முதுமை எய்தி
உரைமுடிவு காட்டிய உரவோன் மருகற்கு
அறிவும் சால்பும் அரசியல் வழக்கும்
செறிவளை மகளிர் செப்பலும் உண்டோ?
அனையது ஆயினும் யான்ஒன்று கிளப்பல்
வினைவிளங்கு தடக்கை விறலோய் கேட்டி:
வினையின் வந்தது வினைக்குவிளைவு ஆயது
புனைவன நீங்கில் புலால்புறத்து இடுவது
மூப்புவிளிவு உடையது தீப்பிணி இருக்கை

92 பகல் – சூரியன்
95 ஒரு சிறை – ஒரு பக்கத்தில்.
103 ஓரீஇ – நீங்கி.
105 பொதியறை – சாளரமில்லாத நிலவறை
115 விளிவு – சாவு.

உவவனம் புகுந்த உதயகுமரன் (91 – 104)

அரசிளங்குமரன் ஆரவாரம் மிக்க சேனையையும் விரைவாகச் செல்லும் தேரையும் உவவன வாயிலிலே நிறுத்தினான். பல்வேறு மலர்கள் பூத்துள்ள சோலையில் உதயகுமரன் புகுந்தது அங்கே சூரியன் தோன்றியதுபோல இருந்தது. பூமரச் சோலையையும், கட்டு மலைகளையும், சுற்றுப் பக்கங்களையும் தாமரைபோன்ற தன் செங்கண்ணால் கூர்ந்து பார்த்துக் கொண்டே வந்த அவன் சுதமதியைக் கண்டான். அவளிடம், ''யாருமில்லாத இடத்தில் ஒருபக்கத்தே தனித்து நிற்கின்ற பெண்ணே! உன் நிலையை நான் அறிவேன். வளர்கின்ற அழகிய இளம் கொங்கைகளையும், மென்மைத் தன்மையையுமுடைய மணிமேகலை முலைப்பாரம் தாங்காது, தன் இடை தளர்கிறது என்பதை அறிவாளா? அவளுடைய இளமையான மழலை மொழிகளே, முதிர்ந்து பற்களாக முளைத்து முத்து முத்தாக நிறைந்தனவோ? கயல் மீன்கள் போன்ற நீண்ட கண்கள் செவியருகே சென்று, 'கொடிய மலரம்புகளை வீசும் காமன்கூட உன் அழகை வியக்கின்றான்' என்று கூறுகின்றனவோ? மாதவர் இருப்பிடமான தவப்பள்ளியை விட்டு தானே தனியளாக இங்கு அவள் வந்தது ஏன்? சொல்'' எனக் கேட்டான்.

உதயகுமரனுக்குச் சுதமதி கூறிய அறிவுரை (105 – 121)

தேன் பொருந்திய மலர்களையணிந்த கூந்தலையுடைய சுதமதி, சாளரமில்லாத கீழ் அறையில் (பாதாள அறையில்) அகப்பட்டவர் போல மனம் வருந்தி இளவரசனை நோக்கி, ''இரண்டு முதியவர் களுக்கு முறை செய்யத் தன் இளமையை மறைத்து முதுமைக் கோலம் பூண்டு நீதி வழங்கிய, அறிவுடையோனாகிய கரிகாற் பெருவளத்தானின் வழிவந்தவன் நீ! உனக்கு நல்லறிவினையும், அமைதியையும், அரசியல் நீதியையும் வளையலணிந்த மகளிர் சொல்வதும் உண்டோ? இருந்தாலும் நான் ஒன்று சொல்வேன்; போர் வலிமைமிக்க அகன்ற கைகளையுடைய வீரனே! கேட்பாயாக! இந்த உடல் வினைப்பயனால் வந்தது. இனிவரும் நல்வினை தீவினைகள் விளைவதற்கு நிலமாக இருப்பது. பூசியுள்ள மணப் பொருள்களை நீக்கிவிட்டால் புலால் நாற்றம் வீசுவது. முதுமையை யும் சாவையும் உடையது. கொடிய நோய்களுக்கு இருப்பிடமானது;

பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்
புற்றுஅடங்கு அரவின் செற்றச் சேக்கை
அவலக் கவலை கையாறு அழுங்கல்
தவலா உள்ளம் தன்பால் உடையது
மக்கள் யாக்கை இதுஎன உணர்ந்து
மிக்கோய் இதனைப் புறமறிப் பாராய்
என்றுஅவள் உரைத்த இசைபடு தீஞ்சொல்
சென்றுஅவன் உள்ளம் சேரா முன்னர்,
பளிங்குபுறத்து எறிந்த பவளப் பாவையின்
இளங்கொடி தோன்றுமால் இளங்கோ முன்என்.

117. அரவு – பாம்பு. செற்றம் – பகைமை. சேக்கை – இருப்பிடம்.
118. அவலம் – வருத்தம் கையாறு – மூர்ச்சித்தல்.
அழுங்கல் – வாய்விட்டழுதல்.
119. தவலா – நீங்கா.
121. புறமறிப் பாராய் – பையை உட்புறம் வெளியே தோன்றுமாறு மறித்துப் பார்த்தல் போல் உடம்பையும் பார்க்க

பாசப்பற்றுகள் பற்றிக் கொண்டிருப்பது; குற்றங்களுக்குக் கொள்கலமாக இருப்பது, பாம்பு அடங்கியுள்ள புற்றுப்போல பகைமை தங்குதற்கு இடமாயிருப்பது; வருத்தம், கவலை, மூர்ச்சை, வாய்விட்டழுதல் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டது. மக்கள் உடம்பின் தன்மை இதுவே! இதனை அறிந்து பையை உள்புறம் வெளியாகுமாறு மறித்துப் பார்ப்பதுபோல இந்த உடம்பையும் பார்ப்பாயாக'' எனச் சுதமதி அறிவுறுத்தினாள்.

பளிக்கறையுள் பாவை உரு கண்டனன் (122 - 125)

சுதமதியின் அறிவோடு கூடிய இனிய மொழிகள் அவனுடைய உள்ளத்தைச் சென்றடையும் முன்னர், பளிக்கறையின் சுவர் வழியே மணிமேகலையின் உருவம் பவளப் பாவைபோல அவன் கண்முன்னே தோற்றமளித்தது.

5. மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை

இளங்கோன் கண்ட இளம்பொன் பூங்கொடி
விளங்குஒளி மேனி விண்ணவர் வியப்பப்
பொருமுகப் 'பளிங்கின் எழினி வீழ்த்துத்
திருவின் செய்யோள் ஆடிய பாவையின்
விரைமலர் ஐங்கணை மீன விலோதனத்து
உருவி லாளனொடு உருவம் பெயர்ப்ப
ஓவியன் உள்ளத்து உள்ளியது வியப்போன்
காவியங் கண்ணி ஆகுதல் தெளிந்து
தாழ்ஒளி மண்டபம் தன்கையில் தடைஇச்
சூழ்வோன் சுதமதி தன்முகம் நோக்கிச்
சித்திரக் கைவினை திசைதொறும் செறிந்தன
எத்திறத் தாள்நின் இளங்கொடி உரைஎன,
குருகுபெயர்க் குன்றம் கொன்றோன் அன்னநின்
முருகச் செவ்வி முகந்துதன் கண்ணால்
பருகாள் ஆயின்இப் பைந்தொடி நங்கை

---

1. இளங்கோன் - உதயகுமரன்
3. எழினி - திரை.
4. திருவின் செய்யோள் - இலக்குமி.
5. ஐங்கணை – ஐந்து அம்புகள். விலோதனம் – கொடி.
6. உருவிலாளன் – மன்மதன்.
9. தடைஇ-தடவிப பார்த்து
13. குருகுபெயர்க்குன்றம் – கிரௌஞ்ச மலை, கொன்றோன் - முருகன்
14 முருகச் செவ்வி – இளமை அழகு.
15 ஆயின் - ஆராயுமிடத்து

5. மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதை

உதயகுமரன் மணிமேகலையின் எழில் வடிவைக் கண்டான் (1 - 8)

உதயகுமரன் இளமை பொருந்திய அழகிய பூங்கொடி போன்ற மணிமேகலையின் ஒளி பொருந்திய மேனி பளிங்கின் புறத்தே தோன்றக் கண்டான். (உதயகுமரனுக்கும் மணிமேகலைக்கும் இடையே பளிங்குச் சுவர்). விண்ணவரெல்லாம் வியந்து நிற்குமாறு, பளிங்கினாலாகிய திரைச்சீலையை வீழ்த்து, திருமகள், அவுணரை மயக்க அன்று ஆடிய கொல்லிப்பாவை போன்றிருந்தது பளிக்கறையினுள் தோன்றிய வடிவம். அவ் வடிவம் மணம்மிக்க ஐந்து மலர் அம்புகளையும், மீன் கொடியையும் உடைய காமனுடைய படைத்துணையையும் பெற்றதாய்த் தோன்றியது அவனுக்கு. (மன்மதனின் துணையைப்பெற்று நிற்பதுபோல உருவம் பளிக்கறையினுள் தெரிந்தது.)

பளிக்கறையில் தோன்றிய உருவத்தை ஓவியம் என்று எண்ணி வியந்தான் உதயகுமரன். பின்னர் அஃது ஓவியமன்று; மணிமேகலையே என்பது தெளிந்தான்.

உதயகுமரன் - சுதமதி உரையாட்டல் (9 - 10)

ஒளி தங்கிய அம் மண்டபத்தைக் கையினால் தடவிச் சுற்றிச் சுற்றி வந்தான். (உள்ளே செல்ல வழி தெரியவில்லை). சுதமதியைப் பார்த்துக் கேட்டான்:

மணிமேகலை எத்தகையவள்? (11 - 12)

''பளிங்கு மண்டபத்துள்ளேயுள்ள எழிலுருவம் நோக்குமிடமெல்லாம் தோன்றுகிறதே! இளங்கொடியாகிய நின் தோழி எத்தன்மையள்? எனக்குச் சொல்'' என்று கேட்டான்.

தவ நெறியினள் (13 - 18)

''அரசிளங்குமர! கிரௌஞ்ச மலையினைப் பிளந்து சூரனைக் கொன்ற முருகவேளை ஒத்த உன் இளமை அழகினை அவள் தன் கண்ணாலும் பார்க்கமாட்டாள். பசுமையான வளையல்களணிந்துள்ள

ஊழ்தரு தவத்தள் சாப சரத்தி
காமன் கடந்த வாய்மையள் என்றே
தூமலர்க் கூந்தல் சுதமதி உரைப்ப,
சிறையும் உண்டோ செழும்புனல் மிக்குழீஇ
நிறையும் உண்டோ காமம் காழ்க்கொளின்
செவ்வியள் ஆயின்என் செவ்வியள் ஆகென
அவ்விய நெஞ்சமொடு அகல்வோன் ஆயிடை
அம்செஞ் சாயல் அராந்தா ணத்துள்ஓர்
விஞ்சையன் இட்ட விளங்குஇழை என்றே
கல்என் பேரூர்ப் பல்லோர் உரையினை
ஆங்குஅவர் உறைவிடம் நீங்கி ஆயிழை
ஈங்குஇவள் தன்னோடு எய்தியது உரைஎன,
வார்கழல் வேந்தே! வாழ்கநின் கண்ணி!
தீநெறிப் படரா நெஞ்சினை ஆகுமதி
ஈங்குஇவள் தன்னோடு எய்திய காரணம்
வீங்குநீர் ஞாலம் ஆள்வோய் கேட்டருள்:
யாப்புஉடை உள்ளத்து எம்அனை இழந்தோன்
பார்ப்பன முதுமகன் படிம உண்டியன்
மழைவளம் தரூஉம் அழல்ஓம் பாளன்
பழவினைப் பயத்தால் பிழைமணம் எய்திய
என்கெடுத்து இரங்கித் தன்தக வுடைமையின்
குரங்கு செய்கடல் குமரியம் பெருந்துறைப்
பரந்துசெல் மாக்களொடு தேடினன் பெயர்வோன்
கடல்மண்டு பெருந்துறைக் காவிரி ஆடிய

---

16. சரத்தி – அம்பினை உடையவள்.
19. சிறை - அணை; தடை.
20. நிறை – நிறுத்தும் தன்மை. காழ் கொளல் – வயிரம் பாய்தல்.
22. அவ்வியம் – பொறாமை.
25. உரையினை - சொல்லப்படுவாய்.
28. கண்ணி – தலை மாலை.
31. வீங்குநீர் – கடல்.
32. யாப்பு - உறுதி.

இம் மணிமேகலை முன்வினைப்பயனால் தவநெறி புகுந்தவள். தீயரைச் சுடும் சாபமாகிய அம்பினையுடையவள். காமனை வென்ற வாய்மையுடையவள்'' எனத் தூய மலரணிந்த கூந்தலையுடைய சுதமதி கூறினாள்.

காமத்தை அடக்க முடியாது (19 – 22)

செழுமையான நீர் அளவு கடந்து பெருகும்போது அதனைத் தடுக்கத் தடையும் உண்டா? அதுபோல் காமம் முற்றிய பிறகு நிறுத்தும் தன்மையும் உண்டா? (இல்லை). இவள் செவ்விய தன்மை உடையவளாக இருக்கட்டுமே! அதனால் என்ன? எனக்குச் செவ்வியளாக அமையட்டுமே! என்று பிறர்க்கு இவள் உரிமையாகி விடக்கூடாதே என்ற பொறாமை உணர்வோடு அகன்றான்.

பௌத்த நெறியைக் கொண்டது ஏன்? (23 – 27)

அவ்வாறு அகல்பவன் சுதமதியிடம், ''அழகிய செம்மையான சாயலை உடையவளே! சமணப் பள்ளியில் ஒரு விஞ்சையனால் விட்டுச் செல்லப்பட்ட பெண் நீ என்று ஆரவாரம் மிக்க இவ் வூரிலே பலரும் சொல்வரே! அப் பள்ளியை விட்டு அகன்று பௌத்த மதத்தினளாகிய மணிமேகலையுடன் இங்கு வந்தது ஏன்? சொல்'' என்றான்.

சுதமதி புத்த நெறியடைந்த வரலாறு (28 – 79)

சுதமதி சொன்னாள்: ''வீரக்கழலணிந்த வேந்தனே! நின் கண்ணி (தலைமாலை) வாழ்வதாக! நின் உள்ளம் தீயவழியில் செல்லாதிருப்ப தாகுக! கடல் சூழ்ந்த இவ் வுலகத்தை ஆள்பவனே! இம் மணிமேகலையுடன் நான் வந்ததற்கான காரணத்தைக் கேட்பாயாக! என் தந்தை ஒரு பார்ப்பன முதுமகன்; என் தாயை இழந்தவன், பட்டினி இருந்து உண்ணும் நோன்பினன்; மழை வளம் தரும் தீ வளர்ப்போன். முன்வினைப் பயனால் நான் மாருதவேகனால் தூக்கிச் செல்லப்பட்டுப் பிழைமணம் கொண்டேன். என்னைக் காணாது என் தந்தை வருந்தினார். குமரிக் கடலாடச் சென்ற ஏராளமான மக்களோடு என்னைத் தேடிப் புறப்பட்டான். அவ்வாறு புறப்பட்டவன், காவிரி கடலோடு கலக்கின்ற பெரிய துறையிலே நீராடுவதற்காக

வடமொழி யாளரொடு வருவோன் கண்டுஈங்கு
யாங்ஙனம் வந்தனை என்மகள் என்றே
தாங்காக் கண்ணீர் என்தலை உதிர்த்துஆங்கு
ஓதல் அந்தணர்க்கு ஒவ்வேன் ஆயினும்
காதலன் ஆதலின் கைவிட லீயான்
இரந்துஊண் தலைக்கொண்டு இந்நகர் மருங்கில்
பரந்துபடு மனைதொறும் திரிவோன் ஒருநாள்
புனிற்றுஆப் பாய்ந்த வயிற்றுப் புண்ணினன்
கணவிர மாலை கைக்கொண் டென்ன
நிணம்நீடு பெருங்குடர் கையகத்து ஏந்தி
என்மகள் இருந்த இடம்என்று எண்ணித்
தன்உறு துன்பம் தாங்காது புகுந்து
சமணீர் காள்நும் சரண்என் றோனை
இவண்நீர் அல்லஎன்று என்னொடும் வெகுண்டு
மைஅறு படிவத்து மாதவர் புறத்துஎமைக்
கைஉதிர்க் கோடலின் கண்நிறை நீரேம்
அறவோர் உளீரோ ஆரும்இ லோம்எனப்
புறவோர் வீதியில் புலம்பொடு சாற்ற
மங்குல்தோய் மாடம் மனைதொறும் புகூஉம்
அங்கையில் கொண்ட பாத்திரம் உடையோன்
கதிர்சுடும் அமயத்துப் பனிமதி முகத்தோன்
பொன்னில் திகழும் பொலம்பூ ஆடையன்
என்உற் றனிரோ என்றுஎமை நோக்கி
அன்புடன் அளைஇய அருள்மொழி அதனால்
அஞ்செவி நிறைத்து நெஞ்சகம் குளிர்ப்பித்துத்
தன்கைப் பாத்திரம் என்கைத் தந்துஆங்கு
எந்தைக்கு உற்ற இடும்பை நீங்க
எடுத்தனன் தழீஇக் கடுப்பத் தலைஏற்றி
மாதவர் உறைவிடம் காட்டிய மறையோன்
சாதுயர் நீக்கிய தலைவன் தவமுனி

---

44. கைவிடலீயான் - கைவிடான்.
47. புனிற்று ஆ – அண்மையில் கன்று ஈன்ற பசு.
48. கண விர மாலை – அலரி மாலை.
55. கையுதிர்க் கோடல் – கையை அசைத்துப் 'போ' எனக் குறிப்பித்தல்.
58. மங்குல் - மேகம்.
61. பொலம் பூ ஆடை – மஞ்சள் நிற ஆடை.
67. கடுப்ப - விரைவாக.

கூடமொழியாளரோடு வந்தவன் என்னை இங்கே கண்டான். ''என் மகளே! நீ இங்கு எவ்வாறு வந்தாய்?'' என்று துயரம் தாங்காது என்மேல் கண்ணீர் சொரிந்தான். நான் அந்தணருடன் இருக்கத் தகாதவள்; என்றாலும் என் தந்தை என் மீது அன்புடையவனாதலால் என்னைக் கைவிடாமல் ஆதரித்தான். இந் நகரில் பரந்து விளங்கும் வீடுகள்தோறும் பிச்சையெடுத்து வாழ முற்பட்டான்.

ஒருநாள் அண்மையில் கன்றையீன்ற பசு ஒன்று பாய்ந்து என் தந்தையின் வயிற்றைக் குத்திக் கிழித்தது. குடல் வெளி வந்தது. வயிற்றில் ஏற்பட்ட புண்ணுடன் செவ்வலரி மாலையைக் கையில் கொண்டு வருவதுபோலக் குடலைக் கையிலே ஏந்திக் கொண்டு என் மகள் இருந்த இடம் என்றெண்ணிச் சமணப்பள்ளியுள் புகுந்தான். தன்னுடைய் வலி தாங்கமுடியாது, 'சமணர்களே! நான் உம் அடைக்கலம் (என்னைக் காப்பாற்றுங்கள்)'' என்றான். அவர்களோ, ''நீர் இவ்விடத்தில் இருக்கத் தகுதியற்றவர்'' என்று கூறி, என்னையும் சினந்தனர். குற்றமற்ற தவ வடிவத்தையுடைய அச் சமண முனிவர்கள் எம்மைக் கையசைத்து வெளியேற்றினர். கண்களில் நீர் வழிய ''எம்மைப் பாதுகாக்கும் அறவோர் யாராவது இருக்கிறார்களா? நாங்கள் துணை இல்லாதவர்கள்'' என்று மக்கள் வாழும் வீதியிற் புலம்பிக் கூறினோம்.

(அப்போது, அங்கே சங்க தருமன் எதிர்ப்பட்டார்). மேகம் தவழும் மாடமனைகள் தோறும் சென்று பெறும் பிச்சைப் பாத்திரம் அவருடைய கைகளில் இருந்தது. கதிர்சுடும் போதும் குளிர் முகம் காட்டுபவர். பொன்போல் விளங்கும் மஞ்சள் நிற ஆடை யணிந்திருந்தார். ''உங்களுக்கு என்ன நேர்ந்தது?'' என எம்மிடம் அன்பு கலந்த அருள்மிகுந்த இனிய சொற்களால் கேட்டார். அச் சொற்கள் எம் செவியை நிறைத்து நெஞ்சைக் குளிரச் செய்தன. தன் கையிலிருந்த பிச்சைப் பாத்திரத்தை என் கையில் தந்தார். என் தந்தைக்கு நேர்ந்த துன்பத்தை நீக்க, அவரைத் தழுவி எடுத்து விரைவாகத் தன் உடம்பில் சார்த்திச் சுமந்து சென்று, புத்த முனிவர் உறையும் தவச்சாலையில் சேர்த்தார். என் தந்தையை இறப்பிலிருந்து நீக்கிக் காப்பாற்றினார் பெருந்தலைவரும் தவமுனிவருமாகிய சங்க தருமன்.

சங்க தருமன் தான்எமக்கு அருளிய
எம்கோன் இயல்குணன் ஏதம்இல் குணப்பொருள்
உலக நோன்பின் பலகதி உணர்ந்து
தனக்குஎன வாழாப் பிறர்க்குஉரி யாளன்
இன்பச் செவ்வி மன்பதை எய்த

அருள்அறம் பூண்ட ஒருபெரும் பூட்கையின்
அறக்கதிர் ஆழி திறம்பட உருட்டிக்
காமன் கடந்த வாமன் பாதம்
தகைபா ராட்டுதல் அல்லது யாவதும்
மிகைநா இல்லேன் வேந்தே வாழ்கென,
அம்சொல் ஆயிழை நின்திறம் அறிந்தேன்
வஞ்சி நுண்இடை மணிமே கலைதனைச்
சித்திரா பதியால் சேர்தலும் உண்டுஎன்று
அப்பொழில் ஆங்குஅவன் அயர்ந்து போயபின்,
பளிக்குஅறை திறந்து பனிமதி முகத்துக்
களிக்கயல் பிறழாக் காட்சியள் ஆகிக்
கற்புத் தான்இலள் நல்தவ உணர்வுஇலள்
வருணக் காப்புஇலள் பொருள்விலை யாட்டிஎன்று
இகழ்ந்தனன் ஆகி நயந்தோன் என்னாது
புதுவோன் பின்றைப் போனதுஎன் நெஞ்சம்
இதுவோ அன்னாய் காமத்து இயற்கை
இதுவே ஆயின் கெடுகதன் திறம்என
மதுமலர்க் குழலாள் மணிமே கலைதான்
சுதமதி தன்னொடு நின்ற எல்லையுள்,

---

71. ஏதம் – குற்றம்.
72. கதி – பிறப்பு.
74. மன்பதை – உயிர்க் குலம்.
77. வாமன் – புத்தன்.
80. நின் திறம் – நின் வரலாறு.
83. அயர்ந்து - தன்னை மறந்து.
87. பொருள் விலையாட்டி – விலை மகள.

அச் சங்கதருமன் எமக்குப் புத்த தருமத்தை அருளினன். எம் புத்ததேவன் (எங்கள் இறைவன்) இயல்பான நற்குணமுடையோன்; குற்றமில்லாத மெய்ப்பொருளானவன்; உலக ஒழுக்கத்தைப் பல பிறப்புகளிலும் பிறந்து உணர்ந்தவன்; (பல பிறப்புகளில் உணர்ந்து உணர்ந்து ஒழுக்கம் கடைப்பிடித்துத் தூயநிலை பெற்றவன்). தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்பவன்; பேரின்பப் பேறு மானிடர் பெறுவதற்காக அருளறம் பூண்ட ஒப்பற்ற பெருந்தகை; அவன் அறமாகிய கதிர்களையுடைய சக்கரத்தை இவ் வுலகில் திறம்பட உருட்டியவன்; காமனை வென்ற புத்தன்; அவன் திருவடிப் பெருமையைப் பாராட்டுதல் அல்லது வேறெதையும் என் நா பேசாது. அரசே! வாழ்வாயாக'' என்றனள் சுதமதி.

சேயிழையைச் சித்திராபதியால் அடைவேன் (80 – 83)

''அழகாகப் பேசும் ஆயிழையே! உன் வரலாற்றை அறிந்தேன். கொடிபோன்று நுண்ணிய இடையையுடைய மணிமேகலையை (இப்போது அடைய முடியவில்லை என்றாலும்) சித்திராபதி மூலம் சேர்வேன்'' எனக் கூறியவனாக அப்பொழிலிலிருந்து உதயகுமரன் காமத்தால் தளர்ச்சியுற்றவனாய் வெளியேறினான்.

இதுதான் காமத்து இயற்கையோ? (84 – 93)

பளிக்கறையைத் திறந்து, குளிர் நிலவு போன்ற முகத்தில், கயல்மீன் போன்ற கண்கள் பிறழாது நிலைகுத்தியிருக்க மணிமேகலை வெளியே வந்தாள்! ''சுதமதி! இவள் கற்பில்லாதவள்; நல்ல தவ உணர்வும் இல்லாதவள்; மரபு வழியிலேயும் தனக்கொரு காவல் அற்றவள்; பொருளுக்காகத் தன் உடலை விற்பவள்'' என்று என்னை இகழ்வாக எண்ணி உதயகுமரன் விரும்பினான். இவ்வாறு இழிவாக எண்ணியவன் என்றும் கருதாது இப் புதியவன் பின்னே என் மனமும் சென்றதே! அன்னாய்! இதுதான் காமத்தின் இயல்போ? அவ்வாறாயின் இக்காமத்தின் வலிமை கெடுவதாகுக'' என்று தேன்சொரியும் மலரணிந்த கூந்தலையுடைய மணிமேகலை சுதமதியுடன் பேசிக் கொண்டிருந்த அப்போது;

இந்திர கோடணை விழாஅணி விரும்பி
வந்து காண்குறூஉம் மணிமே கலாதெய்வம்
பதியகத்து உறையும்ஓர் பைந்தொடி ஆகி
மணிஅறைப் பீடிகை.வலம்கொண்டு ஓங்கிப்
புலவன் தீர்த்தன் புண்ணியன் புராணன்
உலக நோன்பின் உயர்ந்தோய் என்கோ!
குற்றம் கெடுத்தோய் செற்றம் செறுத்தோய்
முற்ற உணர்ந்த முதல்வா என்கோ!
காமன் கடந்தோய் ஏமம் ஆயோய்
தீநெறிக் கடும்பகை கடிந்தோய் என்கோ!
ஆயிர ஆரத்து ஆழியன் திருந்தடி
நாஆ யிரம்இலேன் ஏத்துவது எவன்என்று
எரிமணிப் பூங்கொடி இருநில மருங்குவந்து
ஒருதனி திரிவதுஒத்து ஓதியின் ஒதுங்கி
நிலவரை இறந்துஓர் முடங்குநா நீட்டும்
புலவரை இறந்த புகார்எனும் பூங்கொடி
பல்மலர் சிறந்த நல்நீர் அகழிப்
புள்ஒலி சிறந்த தெள்அரிச் சிலம்புஅடி
ஞாயில் இஞ்சி நகைமணி மேகலை
வாயில்மருங்கு இயன்ற வான்பணைத் தோளி
தருநிலை வச்சிரம் எனஇரு கோட்டம்
எதிர்எதிர் ஓங்கிய கதிர்இள வனமுலை

94. கோடணை – முழக்கம்
102. ஏமம் – பாதுகாப்பு
107. ஓதியின் – மெய்ஞ்ஞானத்துடன்.
108. நிலவரை இறந்து – நில எல்லையைக் கடந்து.
109. புலவரை இறந்த – அறிவின் எல்லையைக் கடந்த.
112. ஞாயில் – மதில் உறுப்புகளுள் ஒன்று. இஞ்சி – மதில்.
113. பணைத் தோளி – மூங்கில் போலும் தோள்களை உடையவள்.
114. தருநிலை - கற்பகத்தரு நிற்கும் கோயில்

மணிமேகலா தெய்வம் வந்து தோன்றியது (94 – 108)

இந்திரவிழாவினைக் கரண விரும்பி, வந்த மணிமேகலா தெய்வம், அந் நகரில் வாழும் வளையலணிந்த ஒரு பெண் வடிவம் கொண்டு பளிக்கறையிலுள்ள பீடிகையை வலம் வந்து வணங்கித் துதித்தது:

''மெய்யறிவுடையோனே! தூய்மையானவனே! அறவோனே! பழமையானவனே! உலக உயிர்களை உய்விக்கும் நோன்பில் சிறந்தவனே! எனப் போற்றுவேனா?

குற்றங்களைப் போக்கியவனே! சினத்தை முற்றிலுமாக நீக்கியவனே! முழுதும் உணர்ந்த முதல்வனே! எனப் போற்றுவேனா?

காமனை வென்றவனே! எல்லோர்க்கும் பாதுகாவலா யுள்ளவனே! தீய நெறியாகிய கடும் பகை அனைத்தையும் ஒதுக்கியவனே! எனப் போற்றுவேனா? ஆயிரம் ஆரங்களைக் கொண்ட அற ஆழியினை உடைய உன் திருவடியைப் போற்ற ஆயிரம் நா வேண்டும். (ஒரு நா உள்ள நான் எவ்வாறு போற்ற முடியும்?) என்று போற்றியவண்ணம் ஒளிவீசும் மாணிக்கப் பூங்கொடி ஒன்று உலகில் வந்து தன்னந்தனியே திரிவதுபோல, மெய்ஞ்ஞானத்துடன் ஒதுங்கி நின்று, நிலத்தின்மேலே எழுந்து தன் ஒப்பற்ற வளைந்த நாவை நீட்டியது (அதாவது மணிமேகலா தெய்வம் சுதமதியிடத்தில் பேசத் தொடங்கியது. அது மாலை நேரம், புகார் நகரம் ஒரு பெண்ணாக உருவகிக்கப்படுகிறது)

புகார் நகர் என்ற பூங்கொடி (109 – 122)

அறிவின் எல்லையைக் கடந்து விலங்குபவள் புகார் என்னும் பூங்கொடி. பன்னிற மலர்களும் நல்ல நீரும் நிறைந்த அகழி அவளுடைய சிலம்பொலிக்கும் திருவடி. (மலர் – சிலம்பு; வண்டொலி - சிலம்பொலி, அகழி - அடி) 'ஞாயில்' என்னும் உறுப்புக் கொண்ட மதில், அவள் இடையில் அணிந்திருக்கும் ஒளிபொருந்திய மணிகளைக்கொண்ட மேகலை; வாயிலின் பக்கங்களிலே அமைந்துள்ள பெரிய தோரண கம்பங்கள் அவளுடைய பணைத்த தோள்கள்; எதிரெதிரே அமைந்துள்ள கற்பகக் கோயிலும் வச்சிரக் கோட்டமும் அவளுடைய அழகிய இளைய முலைகள்.

ஆர்புனை வேந்தற்குப் பேரளவு இயற்றி
ஊழி எண்ணி நீடுநின்று ஒங்கிய
ஒருபெருங் கோயில் திருமுக வாட்டி
குணதிசை மருங்கில் நாள்முதிர் மதியமும்
குடதிசை மருங்கில் சென்றுவீழ் கதிரும்
வெள்ளிவெண் தோட்டொடு பொன்தோ டாக
எள்அறு திருமுகம் பொலியப் பெய்தலும்
அன்னச் சேவல் அயர்ந்துவிளை யாடிய
தன்உறு பெடையைத் தாமரை அடக்கப்
பூம்பொதி சிதையக் கிழித்துப் பெடைகொண்டு
ஓங்குஇருந் தெங்கின் உயர்மடல் ஏற
அன்றில் பேடை அரிக்குரல் அழைஇச்
சென்றுவீழ் பொழுது சேவற்கு இசைப்பப்
பவளச் செங்கால் பறவைக் கானத்துக்
குவளை மேய்ந்த குடக்கண் சேதா
முலைபொழி தீம்பால் எழுதுகள் அவிப்பக்
கன்றுநினை குரல மன்றுவழிப் பட்ர
அந்தி அந்தணர் செந்தீப் பேணப்
பைந்தொடி மகளிர் பலர்விளக்கு எடுப்ப
யாழோர் மருதத்து இன்னரம் புளரக்
கோவலர் முல்லை குழல்மேல் கொள்ள
அமரக மருங்கில் கணவனை இழந்து
தமரகம் புகூஉம் ஒருமகள் போலக்
கதிர்ஆற்றுப் படுத்த முதிராத் துன்பமோடு
அந்தி என்னும் பசலைமெய் யாட்டி
வந்துஇறுத் தனளால் மாநகர் மருங்குஎன்.

---

116. ஆர்புனை வேந்தன் – சோழன். 119. நாள் முதிர் மதியம் – முழு நிலவு.
121. முழுமதி நாளில் வெண்ணிலவு கீழ்த்திசையில் தோன்றும். அதே வேளை பொன் நிற ஞாயிறு மேற்றிசையில் மறையும். எனவே நிலவும் ஞாயிறும் புகார்ச் செல்வி அணிந்துள்ள வெள்ளித்தோடும், பொன் தோடும் ஆயின.
127. அரிக குரல் – மெல்லிய குரல். 129. செங்கால் பறவை – அன்னம்.
130. சேதா – செவ்விய பசு.
137. அமரகம் – போர்க்களம். 138. தமரகம் – தம்மவர்களிடம்.
141. இறுத்தனள் – தங்கினாள்.

ஆத்திமாலை சூடிய சோழனுடைய அரண்மனை மிகப் பெரியது. அது பல ஊழிக்காலமாக நின்று நிலவுவது. அக் கோயில் அவளுடைய திருமுகம். கிழக்கே எழுகின்ற முழு வெண்ணிலவும் மேற்கே சென்று மறைகின்ற பொன் நிற ஞாயிறும் அவளுடைய வெள்ளித்தோடும், பொன்தோடும் ஆவன. இவ்வாறாகத் தன் அழகிய முகம் பொலிவுறுமாறு புகார்ப் பூங்கொடி விளங்குகிறாள். (அகழியை அடியாகவும்; மதிலை மேகலையாகவும்; தோரண கம்பத்தைத் தோளாகவும்; கற்பகத்தருக் கோயில், வச்சிரப்படைக்கோயில் ஆகிய இரு கோயில்களை மார்பகங்களாகவும்; மன்னன் அரண்மனையை முகமாகவும்; முழு நிலவையும் மறையும் ஞாயிற்றையும் வெள்ளி பொன் தோடுகளாகவும் கொண்டு பூம்புகார்ப் பொற்கொடி தோன்றுகிறாள்.)

அந்திமாலை வந்து சேர்ந்தது (123 - 141)

இத்தகைய பூம்புகாரில் அந்திமாலை படர்கிறது. அன்னச் சேவலோடு விரும்பி விளையாடிய அதன் பேடையை மாலை நேரத்தில் குவிந்த தாமரை தன்னுள்ளே அடக்கிக் கொண்டது உடனே ஆண் அன்னம் குவிந்த அத்தாமரை மலரைக் கிழித்துத் தன் பேட்டினை வெளியே கொண்டு வந்து தென்னை மடலில் ஏறிக் கொண்டது. அன்றில் பேடை மென்மையான குரலால் தன் சேவலை அழைத்துப் 'பொழுது விழுந்துவிட்டது' என்பதைக் குறிப்பிடுகிறது. பவளம் போன்ற செந்நிறக் கால்களையுடைய அன்னங்கள் நிறைந்த நீர் நிலைகளில் குவளை மலர்களை மேய்ந்த திரண்ட கண்களையுடைய செவ்விய பசுக்களின் மடியிலிருந்து பொழியும் இனிய பால் நிலத்தில் எழும் புழுதியை அவிக்கிறது. அப் பசுக்கள் கன்றுகளை நினைந்து குரல் எழுப்பி மன்றுகளில் புகுகின்றன. அந்தணர் மாலைநேர வழிபாட்டுத் தீயை வளர்க்கின்றனர். பசுமையான வளையணிந்த பெண்கள் விளக்குகளை ஏற்றுகின்றனர். யாழிசைப் பாணர் யாழின் நரம்புகளை வருடி இனிய மருதப்பண்ணை இசைக்கின்றனர். கோவலர் குழலில் முல்லைப்பண் இசைக்கின்றனர்.

போர்க்களத்தில் கணவனை இழந்து தன் தாய் வீடு செல்லும் ஒரு மங்கைபோல, தன் காதலனாகிய கதிரவனைப் போக்கியதால் ஏற்பட்ட நீங்காத துன்பத்துடனே அந்திமாலை என்பவள் பசலை படர்ந்த மேனியளாக அப்புகார் நகரத்தே வந்து தங்கினாள்.

6. சக்கரவாளக் கோட்டம்

உரைத்த காதை

அந்தி மாலை நீங்கிய பின்னர்
வந்து தோன்றிய மலர்கதிர் மண்டிலம்
சான்றோர் தங்கண் எய்திய குற்றம்
தோன்றுவழி விளங்கும் தோற்றம் போல
மாசுஅறு விசும்பில் மறுநிறம் கிளர
ஆசுஅற விளங்கிய அம்தீம் தண்கதிர்
வெள்ளிவெண் குடத்துப் பால்சொரி வதுபோல்
கள்அவிழ் பூம்பொழில் இடைஇடை சொரிய
உருவு கொண்ட மின்னே போலத்
திருவில் இட்டுத் திகழ்தரு மேனியள்
ஆதி முதல்வன் அறவாழி ஆள்வோன்
பாத பீடிகை பணிந்தனள் ஏத்திப்
பதியகத்து உறையும்ஓர் பைந்தொடி ஆகிச்
சுதமதி நல்லாள் தன்முகம் நோக்கி
ஈங்கு நின்றீர் என்உற் றீர்என
ஆங்குஅவள் ஆங்குஅவன் கூறியது உரைத்தலும்,
அரசிளங் குமரன் ஆயிழை தன்மேல்
தணியா நோக்கம் தவிர்ந்திலன் ஆகி
அறத்தோர் வனம்என்று அகன்றனன் ஆயினும்
புறத்தோர் வீதியில் பொருந்துதல் ஒழியான்
பெருந்தெரு ஒழித்துஇப் பெருவனம் சூழ்ந்த
திருந்துஎயில் குடபால் சிறுபுழை போகி
மிக்க மாதவர் விரும்பினர் உறையும்
சக்கர வாளக் கோட்டம் புக்கால்
கங்குல் கழியினும் கடுநவை எய்தாது
அங்குநீர் போம்என்று அருந்தெய்வம் உரைப்ப,

---

5. விசும்பு – வானம். மறு – களங்கம்
6 ஆசு – குற்றம். 10. திருவில் – வானவில்.
22. புழை – நுழைவாயில். 25. கடு நவை – கொடிய துன்பம்.

6. சக்கரவாளக் கோட்டம் உரைத்த காதை

நிலவு ஒளி சொரிந்தது (1 – 8)

அந்தி மாலை நீங்கியது. வானில் விரிந்த கதிருடைய நிலவு தோன்றியது. உயர்ந்தோரிடத்தில் தோன்றும் குற்றம் எல்லாருக்கும் விளக்கமாக வெளியே தெரிவதுபோல, தெளிந்த வானத்தில் நிலவினிடத்திலே உள்ள களங்கமும் விளங்கித் தோன்றியது. குற்றமற்று விளங்குகிற அழகிய இனிய குளிர்ந்த நிலவின் கதிர்கள், வெள்ளியால் செய்யப்பெற்ற வெண்ணிறக் குடத்திலிருந்து பால் சொரிவதுபோலத் தேன் ததும்பும் மலர்ச் சோலையின் இடையிடையே பொழிந்தது.

மணிமேகலா தெய்வம் சொன்ன அறிவுரை (9 – 26)

பெண் உருவம் கொண்ட மின்னலைப் போலவும் வானவில்லைப் போலவும் அழகிய ஒளிவீசுகின்ற திருமேனியை உடையதாக மணிமேகலா தெய்வம் அச் சோலையில் மீண்டும் தோன்றியது. அற ஆழியை உருட்டுகின்ற புத்த தேவனின் பாத பீடிகையை வணங்கித் துதித்தது.

பின்னர், புகார் நகரிலுள்ள ஒரு பெண்போல உருக்கொண்டு அங்கே நின்று கொண்டிருந்த சுதமதியை நோக்கி, ''இங்கு நிற்கிறீர்களே? என்ன நேர்ந்தது?'' என்று கேட்டது. சுதமதி, உதயகுமரன் கூறியதைச் சொன்னாள். ''அரசிளங்குமரன் மணிமேகலை மீது கொண்டுள்ள வேட்கை தணியவில்லை. இஃது அறத்தோர் வனமென்பதால் அகன்றான்; புறத்தேயுள்ள வீதியில் சென்றால் உம்மைத் தவறாது பற்றுவான். ஆதலால் பெருந்தெரு வழியே செல்ல வேண்டாம். இப் பெரிய சோலையைச் சூழ்ந்துள்ள திருத்தமான மதிலின் மேற்குப்புறமுள்ள சிறுவாயில் வழியே சென்றால் ஒழுக்கம் மிக்க மாதவர்கள் உறைகின்ற சக்கரவாளக் கோட்டத்தை அடையலாம். அங்கே இரவு முழுதுமிருந்தாலும் உங்கட்குத் துன்பம் எதுவும் நேராது. ஆதலால் நீங்கள் அங்கே செல்லுங்கள்'' என மணிமேகலா தெய்வம் கூறியது.

வஞ்ச விஞ்சையன் மாருத வேகனும்
அம்செஞ் சாயல் நீயும் அல்லது
நெடுநகர் மருங்கின் உள்ளோர் எல்லாம்
சுடுகாட்டுக் கோட்டம் என்றுஅலது உரையார்
சக்கர வாளக் கோட்டம் அஃதுஎன
மிக்கோய் கூறிய உரைப்பொருள் அறியேன்
ஈங்குஇதன் காரணம் என்னை யோஎன,
ஆங்குஅதன் காரணம் அறியக் கூறுவன்
மாதவி மகளொடு வல்இருள் வரினும்
நீகேள் என்றே நேர்இழை கூறும்;இந்
நாமப் பேரூர் தன்னொடு தோன்றிய
ஈமப் புறங்காடு ஈங்குஇதன் அயலது
ஊரா நல்தேர் ஒவியப் படுத்துத்
தேவர் புகுதரூஉம் செழுங்கொடி வாயிலும்
நெல்லும் கரும்பும் நீரும் சோலையும்
நல்வழி எழுதிய நலம்கிளர் வாயிலும்
வெள்ளி வெண்சுதை இழுகிய மாடத்
துள், உரு எழுதா வெள்ளிடை வாயிலும்
மடித்த செவ்வாய்க் கடுத்த நோக்கின்
தொடுத்த பாசத்துப் பிடித்த சூலத்து
நெடுநிலை மண்ணீடு நின்ற வாயிலும்
நால்பெரு வாயிலும் பால்பட்டு ஓங்கிய
காப்புஉடை இஞ்சிக் கடிவழங்கு ஆர்இடை
உலையா உள்ளமோடு உயிர்க்கடன் இறுத்தோர்
தலைதூங்கு நெடுமரம் தாழ்ந்துபுறம் சுற்றிப்
பீடிகை ஓங்கிய பெரும்பலி முன்றில்
காடுஅமர் செல்வி கழிபெருங் கோட்டமும்,

35. வல் இருள் – மிக்க இருள் 37. நாமம் – புகழ், அச்சம்.
38. ஈமம் – பிணம் சுடுதற்கு அடுக்கும் விறகடுக்கு. புறங்காடு – சுடுகாடு.
39. ஊரா நல்தேர் – பாகரால் செலுத்தப்படாது தானே செல்லும் தேர்; விமானம்
43. இழுகிய – பூசிய.
47. மண்ணீடு – சுதையால் செய்யபபட்ட பாவை
49 கடி – பேய். 50. உலையா – தளராத.
53. காடுஅமர் செல்வி – துர்க்கை

சக்கரவாளக் கோட்டம் என்று சொல்வது ஏன்? (27 – 36)

''என்னை ஏமாற்றிய வஞ்ச மனமுடைய மாருதவேகனும், அழகிய செந்நிறமுடைய நீயும்தாம் இதனைச் சக்கரவாளக் கோட்டம் என்கிறீர்கள். இப் பெரிய நகரிலுள்ள மற்றெல்லோரும் சுடுகாட்டுக் கோட்டம் என்று சொல்வதன்றி வேறு பெயர் கூறார். மேன்மை யுடையீர்! சக்கரவாளக்கோட்டம் என்று நீவிர் சொன்னதன் பொருளை நானறியேன். இவ்வாறு நீவிர் கூறுவதற்குக் காரணம் என்னவோ?'' எனக் கேட்டாள் சுதமதி. ''அப் பெயர் வந்ததற்கான காரணத்தைத் தெளிவாகக் கூறுவேன்; இருள் வந்து சூழ்ந்தாலும் மாதவி மகள் மணிமேகலையுடன் அதனைக் கேட்பாயாக'' எனத் தெய்வம் கூறத் தொடங்கியது.

நான்கு வாயில்கள் கொண்ட சுடுகாடு (37 – 49)

பகைவர்க்கு அச்சம் தரும் இப்பெரிய புகார் நகரம் தோன்றிய காலத்திலேயே தோன்றிய, பிணம்சுடும் சுடுகாடு இந்த உவவனத்தை அடுத்து உள்ளது. (அதில் நான்கு வாயில்கள் உள்ளன.) விண்ணிலிருந்து ஓவியம்போல் விமானம் வந்து நிற்க அதிலிருந்து இறங்கித் தேவர்கள் நுழைந்து செல்லும் செழுங்கொடிகளை உடைய வாயில் ஒன்று; நெற்பயிர், கரும்பு, பொய்கை, சோலை ஆகியவற்றை அழகிய ஓவியமாக எழுதியுள்ள வாயில் ஒன்று; வெள்ளிபோன்ற வெண்சாந்து பூசிய மாடத்தின் உள்ளே உருவம் எதுவும் எழுதப்பெறாத வெளியை உடைய வாயில் ஒன்று; மடித்த செவ்வாய், கடுகடுத்த பார்வை; தொடுத்த பாசக்கயிறு, பிடித்த சூலம் ஆகியவற்றுடன் நெடிய பூதஉருவம் நிற்கின்ற வாயில் ஒன்று; இவ்வாறு தனித்தனியே உயர்ந்துள்ள நான்கு வாயில்களுடன் அரிய காவலுடைய நீண்ட மதில் சூழ்ந்தது அச் சுடுகாடு. அங்கே பேய்கள் நடமாடிக் கொண்டிருக்கும்.

சுடுகாட்டின் உள் தோற்றம் (50 –65)

அங்கே உள்ள மிகப் பெரிய காளி (துர்க்கை) கோயிலில் பெரிய பலிபீடமும் உயர்ந்த முன்றிலும் உள்ளன. அவற்றைச் சூழ்ந்து கிளைகள் தாழ்ந்த உயர்ந்த மரங்கள் இருக்கின்றன. உறுதியான உள்ளத்துடன் உயிர்ப்பலி கொடுத்தோரின் தலைகள் அம் மரங்களில் தொங்கிக் கொண்டிருக்கும் (பலி கொடுப்போர் சிகையை மரத்தில் முடிந்துவிட்டுத் தலையை அரிந்து துர்க்கைக்குப் பலிகொடுத்தல் மரபு.)

அருந்தவர்க்கு ஆயினும் அரசர்க்கு ஆயினும்
ஒருங்குஉடன் மாய்ந்த பெண்டிர்க்கு ஆயினும்
நால்வேறு வருணப் பால்வேறு காட்டி
இறந்தோர் மருங்கில் சிறந்தோர் செய்த
குறியவும் நெடியவும் குன்றுகண் டன்ன
சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டமும்,
அருந்திறல் கடவுள் திருந்துபலிக் கந்தமும்,
நிறைக்கல் தெற்றியும் மிறைக்களச் சந்தியும்
தண்டும் மண்டையும் பிடித்துக் காவலர்
உண்டுகண் படுக்கும் உறையுள் குடிகையும்
தூமக் கொடியும் சுடர்த்தோ ரணங்களும்,
ஈமப் பந்தரும் யாங்கணும் பரந்து,
சுடுவோர் இடுவோர் தொடுகுழிப் படுப்போர்
தாழ்வயின் அடைப்போர் தாழியில் கவிப்போர்
இரவும் பகலும் இளிவுடன் தரியாது
வருவோர் பெயர்வோர் மாறாச் சும்மையும்,
எஞ்சியோர் மருங்கின் ஈமம் சாற்றி
நெஞ்சு நடுக்குறூஉம் நெய்தல் ஓசையும்,
துறவோர் இறந்த தொழுவிளிப் பூசலும்,
பிறவோர் இறந்த அழுவிளிப் பூசலும்,
நீள்முக நரியின் தீவிளிக் கூவும்,
சாவோர்ப் பயிரும் கூகையின் குரலும்
புலவுஊண் பொருந்திய குராலின் குரலும்
ஊண்தலை துற்றிய ஆண்டலைக் குரலும்
நல்நீர்ப் புணரி நளிகடல் ஓதையின்
இன்னா இசைஒலி என்றும்நின்று அறாது

---

59. சுடுமண் – செங்கல். 60. கந்தம் – தூண்.
61. தெற்றி – திண்ணை
மிறைக்களச் சந்தி – வளைந்த இடத்தினையுடைய பலவழிகளும் கூடின சந்து.
62. மண்டை – மட்கலம். 63. குடிகை – குடிசை.
68. இளிவு – அருவருப்பு. 69. சும்மை – ஒலி.
75. பயிரும் – அழைக்கும். 76. குரால் – கோட்டான்.

உயர்ந்த தவசியர், அரசர், கணவருடன் உயிர் நீத்த மகளிர், நால்வகை மரபினர் ஆகிய இவர்கள் உடலைப் புதைத்த இடங்களில் அவர்களுடைய உற்றோர் அமைத்த கோட்டங்கள் உள்ளன. அந்நெடுநிலைக் கோட்டங்கள் செங்கற்களால் கட்டப்பெற்று சிறிய, பெரிய குன்றுகள்போல் தோற்றமளிப்பன.

அரிய வலிமைமிக்க தேவதைகட்குத் திருத்தமுடையதான பலிகளை இடுவதற்கான தூண்கள்; பெரிய கற்களாலான திண்ணைகள்; வளைவான பல பாதைகள் சந்திக்கும் முட்டிடங்கள்; கையில் காவல் தடியும் உண்ணும் கலமும் உடையவரான ஈமங் காப்போர் உண்டு உறங்கும் குடில்கள்; ஈமத்துப் புகை ஒழுங்காகச் செல்லும் புகைக்கொடிகள்; தோரணவாயில் போலும் தீக்கொழுந்துகள்; ஈமக்கடன் செய்ய வந்தோர் இட்ட பந்தல்கள் - ஆகிய இவை சுடுகாடெங்கும் பரந்திருக்கும்.

துன்ப ஒலிகள் (66 – 79)

பிணங்களைச் சுடுவோர் சிலர்; வெறுமனே போட்டுச் செல்வோர் சிலர்; தோண்டப்பட்ட குழியில் புதைப்போர் சிலர்; பள்ளமான இடங்களில் அடைத்து வைப்போர் சிலர்; தாழியிலிட்டு மூடிவைப்போர் சிலர்; என இங்ஙனமாகப் பிணங்களை அடக்கம் செய்வோர் இரவும் பகலும் வருவதும் போவதுமாக இருப்பர். அவர்கள் எழுப்பும் ஒலி அங்கே எப்போதும் நிறைந்திருக்கும். உயிர் வாழ்வோர்க்கு இறப்பு உண்டு என்பதை அறிவித்து உள்ளத்தை நடுங்கச் செய்யும் சாப்பறை ஓசை; துறவியர் இறப்பின்போது மற்றையோர் அவரைத் துதித்துப் போற்றுகின்ற ஒலி; இல்லறத்தார் இறந்தால் அவரைச் சார்ந்தோர் அழுது அரற்றும் ஒலி; நீண்ட முகமுடைய நரிகளின் ஊளை ஒலி; இறப்பவரை அழைக்கும் பேராந்தையின் குரல்; புலாலுண்டு கோட்டான்கள் எழுப்பும் ஒலி; தலை மூளையைக் கொத்தி உணவாக உண்ணுகின்ற ஆண்டலைப் பறவையின் குரல் ஆகிய துன்ப ஒலிகள் அலைகள் செறிந்த கடல் ஒலிபோல என்றும் நீங்காது நிலைபெற்றிருக்கும்.

தான்றியும் ஒடுவையும் உழிஞ்சிலும் ஓங்கிக்
கான்றையும் சூரையும் கள்ளியும் அடர்ந்து
காய்பசிக் கடும்பேய் கணம்கொண்டு ஈண்டும்
மால்அமர் பெருஞ்சினை வாகை மன்றமும்,
வெள்நிணம் தடியொடு மாந்தி மகிழ்சிறந்து
புள்இறை கூறும் வெள்ளில் மன்றமும்,
சுடலை நோன்பிகள் ஓடியா உள்ளமொடு
மடைதீ யுறுக்கும் வன்னி மன்றமும்,
விரத யாக்கையர் உடைதலை தொகுத்துஆங்கு
இருந்தொடர்ப் படுக்கும் இரத்தி மன்றமும்,
பிணம்தின் மாக்கள் நிணம்படு குழிசியில்
விருந்தாட்டு அயரும் வெள்ளிடை மன்றமும்,
அழல்பெய் குழிசியும் புழல்பெய் மண்டையும்
வெள்ளில் பாடையும் உள்ளீட்டு அறுவையும்
பரிந்த மாலையும் உடைந்த கும்பமும்
நெல்லும் பொரியும் சில்பலி அரிசியும்
யாங்கணும் பரந்த ஓங்குஇரும் பறந்தலை,
தவத்துறை மாக்கள் மிகப்பெருஞ் செல்வர்
ஈற்றிளம் பெண்டிர் ஆற்றாப் பாலகர்
முதியோர் என்னான் இளையோர் என்னான்
கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்பஇவ்
அழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டும்
கழிபெருஞ் செல்வக் கள்ளாட்டு அயர்ந்து
மிக்க நல்லறம் விரும்பாது வாழும்
மக்களில் சிறந்த மடவோர் உண்டோ?

---

83. மால் – மேகம்.
84. தடி – தசை.
86. சுடலை நோன்பிகள் – காபாலிகர்கள்.
87. மடை – சோறு.
89. இரத்தி – இலந்தை மரம்.
90. குழிசி – பானை.
96. பறந்தலை – பாழிடம்.
104. மடவோர் – மூடர்.

ஐந்து மன்றங்கள் (80 – 91)

இச் சுடுகாட்டில் தான்றி, ஒடுவை, உழிஞ்சி ஆகிய மரங்கள் ஓங்கி வளர்ந்திருக்கும்; கான்றை, சூரை, கள்ளி ஆகிய செடிகள் செறிந்திருக்கும்; அங்கு முகில் தங்குகின்ற உயர்ந்த பெரிய கிளைகளையுடைய வாகை மரம் நிற்கும். அதில் பெரும்பசி கொண்ட பேய்கள் கூட்டம் கூட்டமாகத் திரண்டிருக்கும். இத்தகைய வாகைமரம் நிற்கின்ற வாகைமன்றம்; நினத்தைத் தசையுடன் உண்டு மகிழ்ச்சி மிக்கிருக்கும் பறவைகள் தங்குகின்ற விளாமரங்களுள்ள வெள்ளில் மன்றம்; தளராத உள்ளத்துடன் காபாலிகர்கள் சோறு சமைக்கும் தீயையுடைய வன்னிமரம் நிற்கும் வன்னிமன்றம்; விரதம் காப்போர் உடைந்து கிடக்கும் தலையோடுகளைச் சேர்த்து, பெரிய மாலைகளாகச் செய்யும் இலந்தை மரங்கள் நிற்கும் இரத்திமன்றம்; பிணத்தைத் தின்னும் வழக்கமுடைய மக்கள் நிணம் பொருந்திய பானைகளில் விருந்து சமைத்துக கொண்டிருக்கக் கூடிய வெட்டவெளியான வெள்ளிடைமன்றம் எனப் பல இடங்கள் அங்கே உண்டு.

பரவிக்கிடந்த பொருள்கள் (92 – 96)

நெருப்பை உள்ளே போட்டுள்ள தீச்சட்டிகள்; புழல் என்னும் ஒருவகைச் சிற்றுண்டியுள்ள பிண்டப் பாத்திரங்கள்; பிணங்களை நீக்கிவிட்ட வெற்றுப்பாடைகள்; உள்ளே பண்டங்கள் இடப்பட்ட உறிகள்; பாடைகளில் கட்டி அறுத்தெறியப்பட்ட மாலைகள்; உடைந்த கும்பங்கள்; நெல், பொரி, சிறுபலியாகிய அரிசி ஆகிய இவை அப் பாழிடம் எங்கும் பரவிக் கிடக்கும்.

சுடலை காட்டும் அறநெறி (97 – 104)

அறநெறியில் ஒழுகுகின்ற துறவிகள்; மிகப்பெரிய செல்வமுடையவர்; ஈன்று அணிமையுடைய இளம் பெண்கள்; எவ்வகைச் செயலும் ஆற்ற முடியாத இளஞ் சிறுவர்கள்; என அனைவரையும்; வயது முதிர்ந்தவர்கள் என்றோ இளையவர் என்றோ எண்ணிப் பாராமல் கொடுந்தொழிலையுடைய காலன் கொன்று குவிக்கின்றான். அவர்கள் உடலைச் சுடலை தின்கிறது. இதைக் கண்டும் மிகப்பெருஞ் செல்வமயக்கத்தில் உழன்று, மேன்மை தரும் அறத்தைச் செய்ய விரும்பாமல் வாழுகின்ற மக்களைவிட அறிவற்றவர் எவரேனும் உண்டா?

ஆங்குஅது தன்னைஓர் அருங்கடி நகர்எனச்
சார்ங்கலன் என்போன் தனிவழிச் சென்றோன்
என்பும் தடியும் உதிரமும் யாக்கைஎன்று
அன்புஉறு மாக்கட்கு அறியச் சாற்றி
வழுவொடு கிடந்த புழுஊன் பிண்டத்து
அலத்தகம் ஊட்டிய அடிநரி வாய்க்கொண்டு
உலப்புஇல் இன்பமோடு உளைக்கும் ஓதையும்,
கலைப்புற அல்குல் கழுகுகுடைந்து உண்டு
நிலைத்தலை நெடுவிளி எடுக்கும் ஓதையும்,
கடகம் செறிந்த கையைத் தீநாய்
உடையக் கவ்வி ஒடுங்கா ஓதையும்,
சாந்தம் தோய்ந்த ஏந்துஇள வனமுலை
காய்ந்தபசி எருவை கவர்ந்துஊண் ஓதையும்,
பண்புகொள் யாக்கையின் வெண்பலி அரங்கத்து
மண்கணை முழவம் ஆக ஆங்குஓர்
கருந்தலை வாங்கிக் கையகத்து ஏந்தி
இரும்பேர் உவகையின் எழுந்துஓர் பேய்மகள்
புயலோ குழலோ கயலோ கண்ணோ
குமிழோ மூக்கோ இதழோ கவிரோ
பல்லோ முத்தோ என்னாது இரங்காது
கண்தொட்டு உண்டு கவைஅடி பெயர்த்துத்
தண்டாக் களிப்பின் ஆடும் கூத்துக்
கண்டனன் வெரீஇக் கடுநவை எய்தி,
விண்டுஓர் திசையின் விளித்தனன் பெயர்ந்துஈங்கு
எம்அனை காணாய் ஈமச் சுடலையின்
வெம்முது பேய்க்குஎன் உயிர்கொடுத் தேன்எனத்
தம்அனை தன்முன் வீழ்ந்துமெய் வைத்தலும்

105. கடி – காவல்.
109. பிண்டம் – உடம்பு.
110. அலத்தகம் – செம்பஞ்சுக் குழம்பு.
117. எருவை – பருந்து.
118. வெண்பலி அரங்கம் – சாம்பற் குவையாகிய அரங்கம்.
123. குமிழ் – குமிழ மலர். கவிர் – முள்ளு முருக்கம் பூ.
126. தண்டா – தணியாத.
128. விண்டு – நீங்கி.

சார்ங்கலன் வரலாறு

உடலின் இழிதன்மை (105 – 116)

இங்ஙனமுள்ள சுடுகாட்டினை ஒரு சிறந்த காவலுடைய நகரென்று கருதி, சார்ங்கலன் என்னும் சிறுவன் தனியே சென்றான். எலும்பும் தசையும் குருதியும் சேர்ந்த உடம்பிலே அன்பு வைத்து அறத்தை மறந்திருக்கும் மக்களுக்கு உடலின் இழிதன்மையை அறிவிப்பதுபோலப் புழுக்கள் புழுத்து அரித்த மனிதப் பிணம் ஒன்று கிடந்தது. அந்த உடலின் செம்பஞ்சுக் குழம்பு பூசிய அடியினை நரி ஒன்று வாயில் கௌவி உண்டு தன் பசி தீர்ந்த மகிழ்ச்சியில் ஊளையிடுகிறது; ஆடை நீங்கிக் கிடந்த அல்குலைக் கழுகு ஒன்று குடைந்து உண்டு நீண்ட ஓசை எழுப்புகிறது; கடகம் அணிந்த கையை ஒடித்துச் சுடுகாட்டு நாய் ஒன்று கௌவிக் கொண்டு எலும்பு கிடைத்த மகிழ்ச்சியில் காத தூரம் கேட்கும்படியாகக் கத்துகிறது; சந்தனம் பூசப்பெற்ற திமிர்ந்த இளங்கொங்கைகளை மிகுந்த பசியுடைய பருந்து ஒன்று கவர்ந்து உண்டு ஓசை எழுப்புகிறது.

பேய்க்கூத்து (117 – 126)

உடல்கள் வெந்து கிடக்கும் சாம்பற் குவியலை அரங்கமாகக் கொண்டு அங்கே கிடந்த ஒரு பெண் பிணத்தின் கருந்தலையைப் பறித்துக் கையில் ஏந்தி கொண்டு ஒரு பெண் பேய் மகிழ்ச்சியுடன் கூத்தாடுகிறது; அது தன் கையிலுள்ள தலையைப் பார்த்து 'இது மேகமோ அல்லது கூந்தலோ? இது கயலோ அல்லது கண்ணோ? இது குமிழமலரோ அல்லது மூக்கோ? இது முருக்க மலரோ அல்லது இதழோ; இவை முத்துகளோ அல்லது பற்களோ, என்று அப் பெண்ணுடலைப் போற்றிச் சொல்லவுமில்லை; இவ்வுடல் பிணமாகி இந்நிலைக்கு வந்ததே என்று இரக்கப்படவுமில்லை; கண்களைத் தோண்டி உண்டு, பிளவுபட்ட தன்பாதங்களைப் பெயர்த்து வைத்துத் தணியாத மகிழ்ச்சியோடு கூத்தாடிக் கொண்டிருந்தது.

சார்ங்கலன் இறந்தான் (127 – 131)

அதைச் சார்ங்கலன் கண்டான். (அஞ்சி நடுங்கி) அங்கிருந்து ஒலி எழுப்பியவாறே ஓடி, ''அம்மா! இதோ பார் கொடுமையான முதிய சுடுகாட்டுப் பேய்க்கு என் உயிரைக் கொடுத்துவிட்டேன்'' 'என்று கூறிக்கொண்டே தன் தாயின் முன்னே விழுந்து உயிர் துறந்தான்.

பார்ப்பான் தனனொடு கண்இழந்து இருந்தஇத்
தீத்தொழி லாட்டிஎன் சிறுவன் தன்னை
யாரும்இல் தமியேன் என்பது நோக்காது
ஆர்உயிர் உண்டது அணங்கோ பேயோ
துறையும் மன்றமும் தொல்வலி மரனும்
உறையுளும் கோட்டமும் காப்பாய் காவாய்
தகவுஇலை கொல்லோ சம்பா பதிஎன
மகன்மெய் யாக்கையை மார்புஉறத் தழீஇ
ஈமப் புறங்காட்டு எயில்புற வாயிலில்
கோதமை என்பாள் கொடுந்துயர் சாற்ற,
கடிவழங்கு வாயிலில் கடுந்துயர் எய்தி
இடைஇருள் யாமத்து என்னைஈங்கு அழைத்தனை
என்உற் றனையோ எனக்குஉரை என்றே
பொன்னின் பொலிந்த நிறத்தாள் தோன்ற,
ஆரும்இ லாட்டிஎன் அறியாப் பாலகன்
ஈமப் புறங்காட்டு எய்தினோன் தன்னை
அணங்கோ பேயோ ஆர்உயிர் உண்டது
உறங்குவான் போலக் கிடந்தனன் காண்என,
அணங்கும் பேயும் ஆர்உயிர் உண்ணா
பிணங்குநூல் மார்பன் பேதுகந் தாக
ஊழ்வினை வந்துஇவன் உயிர்உண்டு கழிந்தது
மாபெரும் துன்பம்நீ ஒழிவாய் என்றலும்,
என்உயிர் கொண்டுஇவன் உயிர்தந் தருளில்என்
கண்இல் கணவனை இவன்காத்து ஒம்பிடும்
இவன்உயிர் தந்துஎன் உயிர்வாங்கு என்றலும்

141. சாற்ற – கூற.
145. பொலிந்த – விளங்கிய.
151. பேது கந்தாக – அறியாமை காரணமாக.

தாயின் புலம்பல் (132 – 141)

தாய் கோதமை அவனைத் தழுவி எடுத்துக் கொண்டு, சுடுகாட்டு மதிற்புறத்தின வெளிவாயிலிலே வந்து நின்றாள். ''தெய்வமே! என் கணவன் கண்ணில்லாத பார்ப்பான். தீவின்னயுடையவளாகிய நான் யாரும் துணையில்லாது தனித்திருப்பவள் என்பதையும் நினைத்துப் பாராது, அணங்கோ, பேயோ என் மகன் உயிரை உண்டு விட்டதே!

நீர்த்துறைகளையும், மன்றங்களையும், பழைய வலிமைமிக்க மரங்களையும், தங்குமிடங்களையும், கோட்டங்களையும் காக்கும் கடவுளே! சம்பாபதியே! என் மகனைக் காக்கும் தகவு உன்னிடம் இல்லையோ?'' என மகன் உடலை மார்புறத் தழுவிக்கொண்டு இடுகாட்டின் மதிற்புறத்திலுள்ள வாயிலில் நின்று கோதமை தன் கொடுந்துயரைக் கூறினாள்.

சம்பாபதி தோன்றினாள் (142 – 145)

''பேய்கள் நடமாடும் இம் மதிற்புற வாயிலில், மிகுந்த துயரம் கொண்டவளாய், இரவின் நடுச்சாம வேளையில் என்னை அழைக்கின்றனையே, உனக்குற்ற துன்பம் என்ன? சொல்'' என்று கேட்டவாறு பொன்னிறமுடைய சம்பாபதி அங்குத் தோன்றினாள்.

தாயின் முறையீடும் சம்பாபதியின் உரையும் (146 – 171)

''நான் யாரும் துணையில்லாதவள்! என் அறியாச் சிறுவன் இந்த ஈமக்காட்டின் வழியே வந்தான்; அணங்கோ, பேயோ அவன் உயிரை உண்டுவிட்டது. உறங்குகின்றவன்போலச் செத்துக்கிடக்கும் இவனைப் பார்!'' என்றாள் கோதமை! அதுகேட்ட சம்பாபதி, ''அணங்கும் பேயும் அரிய உயிரை உண்ணா! முப்புரிநூல் அணிந்துள்ள மார்பினையுடைய உன்மகனின் அறியாமையே ஊழ்வினையாக வந்து அவன் உயிரை உண்டுவிட்டது. அதனால் நீ அடைந்துள்ள மிகப் பெரியதான துன்பத்தினை நீக்குவாயாக'' என்றது சம்பாபதி!

''தெய்வமே! என்னுயிரை எடுத்துக்கொண்டு என் மகன் உயிரைத் தந்தருளினால் கண்ணில்லாத என் கணவனை இவன் பாதுகாப்பான். ஆதலால் இவன் உயிரை அளித்து என் உயிரை எடுத்துக் கொள்'' எனக் கோதமை வேண்டினாள்.

முதுமூ தாட்டி இரங்கினள் மொழிவோள்
ஐயம் உண்டோ ஆர்உயிர் போனால்
செய்வினை மருங்கில் சென்றுபிறப்பு எய்துதல்
ஆங்குஅது கொணர்ந்துநின் ஆர்இடர் நீக்குதல்
ஈங்குஎனக்கு ஆவதுஒன்று அன்றுநீ இரங்கல்
கொலைஅறம் ஆம்எனும் கொடுந்தொழில் மாக்கள்
அவலப் படிற்றுஉரை ஆங்கது மடவாய்
உலக மன்னவர்க்கு உயிர்க்குஉயிர் ஈவோர்
இலரோ இந்த ஈமப் புறங்காட்டு
அரசர்க்கு அமைந்தன ஆயிரம் கோட்டம்
நிரயக் கொடுமொழி நீஒழி என்றலும்,
தேவர் தருவர் வரம்என்று ஒருமுறை
நால்மறை அந்தணர் நன்னூல் உரைக்கும்
மாபெருந் தெய்வம் நீஅரு ளாவிடின்
யானோ காவேன் என்உயிர் ஈங்குஎன,
ஊழி முதல்வன் உயிர்தரின் அல்லது
ஆழித் தாழி அகவரைத் திரிவோர்
தாம்தரின் யானும் தருகுவன் மடவாய்
ஈங்குஎன் ஆற்றலும் காண்பாய் என்றே
நால்வகை மரபின் அரூபப் பிரமரும்
நானால் வகையின் உரூபப் பிரமரும்
இருவகைச் சுடரும் இருமூ வகையில்
பெருவனப்பு எய்திய தெய்வத கணங்களும்
பல்வகை அசுரரும் படுதுயர் உறூஉம்
எண்வகை நரகரும் இருவிசும்பு இயங்கும்
பல்மீன் ஈட்டமும் நாளும் கோளும்
தன்அகத்து அடக்கிய சக்கர வாளத்து
வரம்தரற்கு உரியோர் தமைமுன் நிறுத்தி
அரந்தை கெடும்இவள் அருந்துயர் இதுஎனச்

163. அவலப் படிற்றுரை – கேட்டைத் தருகின்ற பொய்யுரை
167 நிரயம் – நரகம்
182. ஈட்டம் – கூட்டம்.
185. அரந்தை – துன்பம்.

பெருமூதாட்டியான சம்பாபதி அதனைக் கேட்டு கோதமைபால் இரக்கம் கொண்டவளாகப் பேசினாள். ''அரிய உயிர் பிரிந்தது என்றால் தான் செய்த நல்வினை தீவினைகளுக்கேற்ப மறு பிறப்பு எடுக்கும். இதில் ஐயமும் உண்டோ? போன உயிரைக் கொண்டு வந்து உன் பெருந்துயரை நீக்குதல் என்னால் முடியக்கூடிய செயல் அன்று. ஆதலின் நீ வருந்தாதே! பெண்ணே! நீ கூறுவது கொலையும் அறமே என்று சொல்லும் கொடுந்தொழில் மக்களின் பொய்யுரை. இச் சுடுகாட்டில் ஆயிரமாயிரம் அரசர்களுக்குச் சமாதிகள் உள்ளன. உயிர்க்குயிர் தருவதாக இருந்தால் இம் மன்னர்களுக்கு உயிர் தருவார் ஒருவரும் இல்லாமலா போயிருப்பர்? (யார் உயிர் கொடுத்தாலும் செத்த உயிர் வராது!) செத்த உயிர் திரும்பும் என்று சொல்வது நரகத்தைத் தரும் கொடிய மொழியாகும்'' என்றாள்.

''தேவர்கள் வரந்தருவர் என்று அந்தணர் நான்மறை நூல்கள் உறுதியாகக் கூறுகின்றன. அப்படியிருக்க மிகப்பெரிய தெய்வமே! நீ எனக்கு அருள் செய்யாவிடின் நான் என் உயிரை விட்டு விடுவேன்'' என்றாள் கோதமை.

சம்பாபதியின் ஆற்றல் (172 – 189)

சம்பாபதி, ''ஊழி முதல்வனாகிய இறைவனைத் தவிர வேறு யாரும் உயிர்தர முடியாது. சக்கரவாளக் கோட்டமாகிய இவ்விடத்தில் திரிகின்ற தேவர்களுள் எவரேயாயினும் சென்ற உயிரைத் திருப்பித் தரமுடியுமானால் நானும் உன் மகன் உயிரைத் தருவேன்! பெண்ணே! இப்போது என் ஆற்றலைக் காண்பாயாக'' எனச் சொல்லி, நான்கு வகைப்பட்ட அரூபப் பிரம்மர்களையும், பதினாறு வகைப்பட்ட உரூபப் பிரம்மர்களையும், ஞாயிற்றையும், திங்களையும், பேரழகு பெற்றுள்ள ஆறுவகைப்பட்ட தேவகணங்களையும், பலதிறப்பட்ட அசுரர்களையும், பெரும் துன்பத்தை அனுபவிக்கின்ற எட்டு வகைப்பட்ட நரகர்களையும், அகன்ற விசும்பிலே இயங்கும் பலதிறப்பட்ட மீன் கூட்டங்களையும், நாள்களையும், கோள்களையும் தன்னுள்ளே அட்க்கிக் கொண்டிருக்கக்கூடிய சக்கரவாளத்தில் வரந்தருவதற்குரிய தேவர்கள் அனைவரையும் சம்பாபதித் தெய்வம் கோதமை முன் நிறுத்தி, ''இவளுடைய துயர் இது; இவளுடைய பெருந்துயரை நீக்குவீராக'' என்றாள்

சம்பா பதிதான் உரைத்தஅம் முறையே
எங்குவாழ் தேவரும் உரைப்பக் கேட்டே,
கோதமை உற்ற கொடுந்துயர் நீங்கி
ஈமச் சுடலையில் மகனைஇட்டு இறந்தபின்,
சம்பா பதிதன் ஆற்றல் தோன்ற
எங்குவாழ் தேவரும் கூடிய இடம்தனில்
சூழ்கடல் வளைஇய ஆழியங் குன்றத்து
நடுவு நின்ற மேருக் குன்றமும்
புடையில் நின்ற எழுவகைக் குன்றமும்
நால்வகை மரபின் மாபெருந் தீவும்
ஓர்ஈ ராயிரம் சிற்றிடைத் தீவும்
பிறவும் ஆங்குஅதன் இடவகை உரியன
பெறுமுறை மரபின் அறிவுவரக் காட்டி
ஆங்குவாழ் உயிர்களும் அவ்வுயிர் இடங்களும்
பாங்குற மண்ணீட்டில் பண்புற வகுத்து
மிக்க மயனால் இழைக்கப் பட்ட
சக்கர வாளக் கோட்டம்ஈங்கு இதுகாண்
இடுபிணக் கோட்டத்து எயில்புறம் ஆதலின்
சுடுகாட்டுக் கோட்டம் என்றல்து உரையார்
இதன்வரவு இதுஎன்று இருந்தெய்வம் உரைக்க,
மதன்இல் நெஞ்சமொடு வான்துயர் எய்திப்
பிறந்தோர் வாழ்க்கை சிறந்தோள் உரைப்ப,
இறந்துஇருள் கூர்ந்த இடைஇருள் யாமத்துத்
தூங்குதுயில் எய்திய சுதமதி ஒழியப்
பூங்கொடி தன்னைப் பொருந்தித் தழீஇ
அந்தரம் ஆறா ஆறுஐந்து யோசனைத்
தென்திசை மருங்கில் சென்றுதிரை உடுத்த
மணிபல் லவத்திடை மணிமே கலாதெய்வம்
அணிஇழை தன்னைவைத்து அகன்றது தான்என்

206. மதனில் நெஞ்சமொடு – செருக்கற்ற மனத்துடனே
211 அந்தரம் ஆறா - ஆகாயமே வழியாக
212. திரை உடுத்த – அலைகள் சூழ்ந்த.

சம்பாபதி முன் சொல்லிய முறைப்படியே எங்கும் வாழ்கின்ற அத் தேவர்களும் கூறினர். அதைக் கேட்டு கோதமை தான் அடைந்த பெருந்துயர் விட்டாள். சுடுகாட்டில் அடுக்கிய விறகில் மூட்டிய தீயில் தன் மகனை இட்டுத் தானும் உயிர் நீத்தாள்.

சக்கரவாளக் கோட்ட வரலாறு (190 – 205)

சம்பாபதியின் ஆற்றலால் எல்லாத் தேவர்களும் கூடிய அவ்விடத்தில் கடலால் சூழப்பட்ட சக்கரவாள மலை அமைக்கப்பட்டது. அம் மலைக்கு உட்பட்ட இடத்தில் நடுவே மேருமலை நிலைபெற்றுள்ளது. மேருமலையைச் சுற்றிலும் ஏழு வகைக் குலகிரிகள்; நான்கு வகைப்பட்ட மரபினையுடைய பெருந்தீவுகள்; அவற்றைச் சுற்றி இரண்டாயிரம் சிறிய தீவுகள் ஆகிய இவையும் பிறவும் அவ்விடத்தே அவ்வவற்றிற்குரிய இடங்களில் முறைப்படி அமைந்துள்ளன. அங்கு வாழும் உயிர்களையும் அவை வாழும் இடங்களையும் பாங்குடன் சுதையால் செய்யப்பட்ட பாவை வடிவமாக தெய்வத் தச்சனாகிய மயன் அவற்றிற்குரிய பண்பு வெளிப்பட அமைத்துள்ளான். இதுவே சக்கரவாளக் கோட்டம். இச் சக்கரவாளக் கோட்டம் சுடுகாட்டின் மதிற்புறத்தில் உள்ளது. ஆதலால் இதனைச் சுடுகாட்டுக் கோட்டம் என்று சொல்வதல்லாமல் வேறுவகையாகச் சொல்லார். சக்கரவாளக்கோட்ட வரலாறு இதுவே என்று மணிமேகலா தெய்வம் கூறியது.

தெய்வம் மணிமேகலையை மணிபல்லவத்தில் சேர்த்தது (206 – 214)

இவ்வாறு கூறியதும் மணிமேகலை வலியற்ற மனத்துடன் மிக்க துன்பமடைந்து, பிறந்தவர்களுடைய வாழ்க்கை நிலையாமையைக் கூறினாள். இதற்குள் இருள் மிகுந்து யாமம் ஆயிற்று. சுதமதி உறக்கமுற்றாள். அவளை விட்டுவிட்டு மணிமேகலா தெய்வம் பூங்கொடி போன்றவளாகிய மணிமேகலையைத் தழுவி எடுத்துக் கொண்டு விண்ணின் வழியே முப்பது யோசனை தூரம் தென் திசையில் சென்று, கடலால் சூழப்பட்ட மணிபல்லவத் தீவில் மணிமேகலையை வைத்துவிட்டு, மணிமேகலா தெய்வம் நீங்கியது.

7. துயில் எழுப்பிய காதை

மணிமே கலைதனை மணிபல் லவத்திடை
மணிமே கலாதெய்வம் வைத்து நீங்கி
மணிமே கலைதனை மலர்ப்பொழில் கண்ட
உதய குமரன் உறுதுயர் எய்திக்
கங்குல் கழியில்என் கையகத் தாள்எனப்
பொங்குமெல் அமளியில் பொருந்தாது இருந்தோன்
முன்னர்த் தோன்றி மன்னவன் மகனே
கோல்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்
கோள்நிலை திரிந்திடின் மாரிவறம் கூரும்
மாரிவறங் கூரின் மன்உயிர் இல்லை
மன்உயிர் எல்லாம் மண்ஆள் வேந்தன்
தன்உயிர் என்னும் தகுதிஇன்று ஆகும்
தவத்திறம் பூண்டோள் தன்மேல் வைத்த
அவத்திறம் ஒழிகென்று அவன்வயின் உரைத்தபின்,
உவவனம் புகுந்துஆங்கு உறுதுயில் கொள்ளும்
சுதமதி தன்னைத் துயிலிடை நீக்கி,
இந்திர கோடணை இந்கர்க் காண
வந்தேன் அஞ்சல் மணிமே கலையான்
ஆதிசால் முனிவன் அறவழிப் படுஉம்
ஏது முதிர்ந்தது இளங்கொடிக்கு ஆதலின்
விஞ்சையின் பெயர்த்துநின் விளங்குஇழை தன்னைஓர்
வஞ்சம்இல் மணிபல் லவத்திடை வைத்தேன்
பண்டைப் பிறப்பும் பண்புஉற உணர்ந்துஈங்கு
இன்றுஏழ் நாளில் இந்நகர் மருங்கே
வந்து தோன்றும் மடக்கொடி நல்லாள்
களிப்புமாண் செல்வக் காவல் பேர்ஊர்
ஒளித்துருவு எய்தினும் உன்திறம் ஒளியாள்
ஆங்குஅவள் இந்நகர் புகுந்த அந்நாள்
ஈங்கு நிகழ்வன ஏதுப் பலஉள

6. அமளி – படுக்கை 9. வறம் – வறுமை.
14. அவத்திறம் – கேடு செய்யும் செயல்.
21. விஞ்சை – வித்தை.

7. துயில் எழுப்பிய காதை

மணிமேகலையை மறப்பாயாக (1-14)

மணிமேகலையை மணிபல்லவத் தீவில் வைத்து நீங்கிய மணிமேகலா தெய்வம் மீண்டும் புகாருக்கே திரும்பியது. மணிமேகலையை மலர்ப்பொழிலில் கண்டு உதயகுமரன் மிகுந்த காமத்துயர் எய்தியிருந்தான். ''இரவு கழிந்தால் மணிமேகலை என் கையகப்படுவாள்'' என நினைந்தவனாய்ச் சிறந்த மெல்லிய படுக்கையில் தூங்காது தவித்த உதயகுமரன் முன்னே மணிமேகலா தெய்வம் தோன்றி, ''அரசனுடைய செங்கோல் கோடினால் கோள்கள் நிலைகுலையும். கோள்கள் நிலைகுலைந்தால் மழை பெய்யாது; மழை பெய்யாவிடின் உயிர்கள் வாழா. மன்னுயிரெல்லாம் தன்னுயிர் என்று கருதிக் காக்கும் அரசனின் பெருமையும் அப்போது தகுதி இல்லாததாகும். ஆதலால் தவத்தினளான மணிமேகலைமேல் நீ கொண்டுள்ள தீய விருப்பத்தை ஒழிப்பாயாக'' என்று உரைத்தது.

சுதமதியிடம் மணிமேகலா தெய்வம் சொன்னது (15-41)

பின்னர் உவவனத்தில் நுழைந்து, அங்கே தூங்கிக் கொண்டிருந்த சுதமதியைத் தூக்கத்தினின்றும் எழுப்பியது. ''சுதமதி! அஞ்சாதே! இந்திரவிழாக் காண நான் இந்நகர் வந்தேன். நான் மணிமேகலா தெய்வம் புத்தனுடைய அறவழியில் செல்லும் பக்குவம் மணிமேகலைக்கு வந்து விட்டது. ஆகவே உன் தோழியை என் வித்தையினாலே எடுத்துச் சென்று வஞ்சனை ஏதுமில்லாத மணிபல்லவத் தீவிலே வைத்துள்ளேன். தன்னுடைய முற்பிறவியை முறையாக அறிந்து, இன்றைய ஏழாம் நாளில் இந் நகரிடத்தே இளம்கொடி போன்ற மணிமேகலை வந்து தோன்றுவாள். செல்வக்களிப்பும் சிறந்த காவலுடையதுமான இந்நகரில் அவள் வேற்றுருக் கொண்டு வந்தாலும் உன்னிடம் அவள் மறைக்க மாட்டாள். அவள் இந்நகர் புகும் அந்நாளில் விந்தைகள் பல நிகழும்.

மாதவி தனக்குயான் வந்த வண்ணமும்
ஏதம்இல் நெறிமகள் எய்திய வண்ணமும்
உரையாய் நீஅவள் என்திறம் உணரும்
திரைஇரும் பௌவத்துத் தெய்வம்ஒன்று உண்டுஎனக்
கோவலன் கூறிஇக் கொடிஇடை தன்னைஎன்
நாமம் செய்த நல்நாள் நள்இருள்
காமன் கையறக் கடுநவை அறுக்கும்
மாபெருந் தவக்கொடி ஈன்றனை என்றே
நனவே போலக் கனவகத்து உரைத்தேன்
ஈங்குஇவ் வண்ணம் ஆங்குஅவட்கு உரைஎன்று
அந்தரத்து எழுந்துஆங்கு அருந்தெய்வம் போயபின்
வெந்துயர் எய்திச் சுதமதி எழுந்துஆங்கு
அகல்மனை அரங்கத்து ஆசிரியர் தம்மொடு
வகைதெரி மாக்கட்கு வட்டணை காட்டி
ஆடல் புணர்க்கும் அரங்கியல் மகளிரில்
கூடிய குயிலுவக் கருவிகண் துயின்று
பண்ணுக்கிளை பயிரும் பண்ணியாழ்த் தீந்தொடை
கொளைவல் ஆயமோடு இசைகூட் டுண்டு
வளைசேர் செங்கை மெல்விரல் உதைத்த
வெம்மைவெய் துறாது தன்மையில் திரிய்வும்,
பண்புஇல் காதலன் பரத்தமை நோனாது
உண்கண் சிவந்தாங்கு ஒல்குகொடி போன்று
தெருட்டவும் தெருளாது ஊடலொடு துயில்வோர்
விரைப்பூம் பள்ளி வீழ்துணை தழுவவும்,

35 நாமம் – பெயர்.
36 கடு நவை – பெரிய துன்பம்
43 வட்டணை – வர்த்தனை. அதாவது கைத்தலம் காட்டுதல்
46 பயிரும் - இசைக்கும்
47 கொளைவல் ஆயம் – பாடடில வல்ல மகளிர்
51 ஒல்கல் - துவளல். அசைதல்

மாதவியிடம் நான் வந்த வகையையும், மாசற்ற அறவழியில் மகள் மணிமேகலை சென்றதையும் சொல். மாதவி என் வரலாற்றை அறிவாள். (மாதவி தன் மகளுக்குப் பெயரிட்ட அந்த நாளிலே கோவலன்) 'அலைகளையுடைய பெருங்கடலில் தெய்வம் ஒன்று உண்டு' எனக்கூறி, கொடிபோன்ற இடையையுடைய இப்பெண்மகளுக்கு மணிமேகலை என்று என் பெயரைச் சூட்டுமாறு கூறினான். அந்த நல்ல நாளில், நள்ளிருள் வேளையில் நான் மாதவியிடம், 'காமனும் செயலற்றுப் போக, பெரிய துன்பங்களை அறுக்கவல்ல மிகப்பெரிய தவச்செல்வியை ஈன்றெடுத்துள்ளாய்' என்று நேரில் கூறுவதுபோலக் கனவில் தோன்றி உரைத்தேன். இவற்றையெல்லாம் மாதவிக்குக் கூறுவாயாக!'' எனச் சொல்லி வானிலே எழுந்து அந்த அரிய தெய்வம் மறைந்தது. சுதமதி உள்ளத்தைச் சுடுகின்ற பெருந்துயர்கொண்டு எழுந்தாள்.

நள்ளிரவில் புகார்

ஆடல் பாடல் அடங்கிய நடனச்சாலை (42 - 49)

சுதமதி மாதவியின் இருப்பிடம் நோக்கிச் சென்றாள். எங்கும் கரிய இருள் பரந்திருக்கிறது. அகன்ற வீடுகள்; அவற்றில் ஆடல் அரங்குகள்; அவ்வரங்குகளிலே, ஆசிரியரோடு நின்று அவிநயம் முதலிய கூறுபாடுகளை அறிகின்ற மக்களுக்குக் கைத்தலம் காட்டி ஆடல் நிகழ்த்துவோராகிய ஆடல் மகளிர் கண் துயின்றனர். அவர்களுடன் கூடியிருக்கும் குழல், யாழ், மத்தளம், குடமுழா ஆகிய குயிலுவக் கருவிகளும் ஒலியடங்கின. பண்ணின் வகைகளை இசைக்கும் யாழின் நரம்புகள், இசைப்போரின் வளையலணிந்த சிவந்த கைகளின் மெல்லிய விரல்கள் தெறித்த வெம்மையைப் பொறாமையால் தம் இயல்பிலிருந்து திரிபு கொண்டன.

(அஃதாவது இரவில் ஆடல் பாடல் அடங்கி யாழிசை கூடத் தளர்கிறது.)

ஊடல் மகளிர் (50 - 53)

பண்புடைய காதலர் பரத்தையரை நுகர்ந்ததைப் பொறுக்க முடியாத காதலியரின் மையுண்ட கண்கள் சினத்தால் சிவக்கின்றன. அசையும் கொடிபோன்று தளர்வுறுகின்றனர். காதலர் தெளிவித்தும் தெளியாமல் ஊடலுடன் துயிலுகின்றனர். ஆயினும் அம்மகளிர் மலரணையில் தம்மைத் தழுவும் கொழுநரைத் தாமும் தழுவிக் கொள்கின்றனர்.

தளர்நடை ஆயமொடு தாங்காது ஓடி
விளையாடு சிறுதேர் ஈர்த்துமெய் வருந்தி
அமளித் துஞ்சும் ஐம்படைத் தாலிக்
குதலைச் செவ்வாய்க் குறுநடைப் புதல்வர்க்குக்
காவல் பெண்டிர் கடிப்பகை எறிந்து
தூபம் காட்டித் தூங்குதுயில் வதியவும்,
இறைஉறை புறவும் நிறைநீர்ப் புள்ளும்
காஉறை பறவையும் நாஉள் அழுந்தி
விழவுக்களி அடங்கி முழவுக்கண் துயின்று
பழவிறல் மூதூர் பாயல்கொள் நடுநாள்
கோமகன் கோயில் குறுநீர்க் கன்னலின்
யாமம் கொள்பவர் ஏத்துஒலி அரவமும்,
உறையுள்நின்று ஒடுங்கிய உண்ணா உயக்கத்து
நிறைஅழி யானை நெடுங்கூ விளியும்,
தேர்வழங்கு தெருவும் சிற்றிடை முடுக்கரும்
ஊர்காப் பாளர் எறிதுடி ஓதையும்,
முழங்குநீர் முன்துறைக் கலம்புணர் கம்மியர்
துழந்துஅடு கள்ளின் தோப்பிஉண்டு அயர்ந்து
பழஞ்செருக்கு உற்ற அனந்தர்ப் பாணியும்,
அரவாய்க் கடிப்பகை ஐயவிக் கடிப்பகை
விரவிய மகளிர் ஏந்திய தூமத்துப்
புதல்வரைப் பயந்த புனிறுதீர் கயக்கம்
தீர்வினை மகளிர் குளன்ஆடு அரவமும்,

---

55. ஈர்த்து – இழுத்து
56. அமளி – படுக்கை துஞ்சும் – உறங்கும்.
57. குதலை – மழலை.
60. இறை உறை – வீட்டின் இறப்புகளில் வாழ்கின்ற
63. பாயல் – உறக்கம்.
64. குறுநீர்க் கன்னல் – நாழிகை வட்டில்.
66. உயக்கம் - வருத்தம்
71. தோப்பி – நெல்லால் சமைத்த கள்.
72. அனந்தர் – கள்ளுண்ட மயக்கம்.
74. தூமம் – புகை
75. கயக்கம் - சோர்வு; மெலிவு

இளஞ்சிறார் உறக்கம் (54 - 59)

இளஞ்சிறார் கூட்டம் எங்கும் தங்காதோடி விளையாடினர். சிறுதேர் இழுத்து உடல் வருந்தினர். அவர்கள் இப்போது படுக்கையில் துயில்கின்றனர். மார்பில் ஐம்படைத்தாலி அணிந்துள்ளனர். மழலை பேசும் செவ்வாயும் தளர் நடையழகும் கொண்ட அவ்விளம் புதல்வர்க்குச் செவிலித்தாயர் பேய்க்குப் பகையாகிய வேம்பும் சிறுகடுகும் அப்பிப் புகைகாட்டிப் பின்னர்த் தாமும் உறங்குகின்றனர்.

பறவைகள் ஒலியடங்கித் துயிலுதல் (60 - 64)

வீட்டின் இறப்புகளில் வாழும் புறாக்களும், பெரிய நீர்நிலைகளில் வாழும் பறவைகளும், சோலைகளில் தங்கும் பறவைகளும் நாவடங்கி உறங்குகின்றன. இந்திரவிழாக் களியாட்டங்களும் அடங்கின. முழவுகளும் ஒலியடங்கின. பழமையானதும் ஆற்றலுடையதுமான புகார் நகரம் முழுதும் துயிலில் ஆழ்ந்தது; அந் நள்ளிரவிலே.

இடையாமத்தில் பல்வகை ஒலிகள் (65 - 86)

சோழன் அரண்மனையில் நீர்கொண்ட நாழிகை வட்டிலினாலே நாழிகை கணக்கிடும் கணக்கர் நாழிகையை அறிவித்து அரசனை வாழ்த்தும் ஒலி; கட்டுத்தறியில் நிற்கும் யானை பசியால் வயிறு ஒடுங்கி, உண்ணாமையால் உண்டான வருத்தத்தினாலே நெடிதாக அழைத்துப் பிளிறுகின்ற ஒலி; தேரோடும் வீதியிலும் சிறிய முடுக்குகளிலும் ஊர்காவலர் கூடி காவல் அறிகுறியாக அடிக்கும் துடியின் ஒலி; ஆரவாரிக்கும் நீர்ப் பெருக்கினையுடைய கடற்றுரையிலே மரக்கலத் தொழில் செய்வோர் துழாவிச் சமைத்த கள்வகைகளில் நெல்லால் சமைத்த கள்ளையுண்டு, தம்மை மறந்து கள்ளுண்ட செருக்கினால் வெறியோடு பாடிக்கொண்டிருக்கும் பாட்டின் ஒலி;

அரத்தின் வாய் போன்ற வேப்பிலை, வெண்சிறு கடுகு ஆகியவற்றின் புகையைப் பேய்க்குப் பகையாக ஏந்திவரும் பெண்களுடனே சென்று, புதல்வரைப் பெற்ற மகளிர் சோர்வு தீர்ந்து பத்தாவது நாள் இரவில் குளங்களில் நீராடுகின்ற ஒலி;

வலித்த நெஞ்சின் ஆடவர் இன்றியும்
புலிக்கணத்து அன்னோர் பூத சதுக்கத்துக்
கொடித்தேர் வேந்தன் கொற்றம் கொள்கென
இடிக்குரல் முழக்கத்து இடும்பலி ஓதையும்,
ஈற்றிளம் பெண்டிர் ஆற்றாப் பாலகர்
கடுஞ்சூல் மகளிர் நெடும்புண் உற்றோர்
தம்துயர் கெடுக்கும் மந்திர மாக்கள்
மன்றப் பேய்மகள் வந்துகைக் கொள்கென
நின்றுஎறி பலியின் நெடுங்குரல் ஓதையும்,
பல்வேறு ஓதையும் பரந்துஒருங்கு இசைப்ப,
கேட்டுஉளம் கலங்கி ஊட்டிருள் அழுவத்து
முருந்துஏர் இளநகை நீங்கிப் பூம்பொழில்
திருந்துஎயில் குடபால் சிறுபுழை போகி
மிக்கமா தெய்வம் வியந்துஎடுத்து உரைத்த
சக்கர வாளக் கோட்டத்து ஆங்கண்
பலர்புகத் திறந்த பகுவாய் வாயில்
உலக அறவியின் ஒருபுடை இருத்தலும்
கந்துஉடை நெடுநிலைக் காரணம் காட்டிய
அந்தில் எழுதிய அற்புதப் பாவை
மைந்தடங் கண்ணாள் மயங்கினள் வெருவத்
திப்பியம் உரைக்கும் தெய்வக் கிளவியின்
இரவி வன்மன் ஒருபெரு மகளே
துரகத் தானைத் துச்சயன் தேவி
தயங்குஇணர்க் கோதை தாரை சாவுற

---

82. கடுஞ்சூல் – முதற் சூல்
87. அழுவம் – பரப்பு
88. முருந்து – மயிற்பீலியின் முனை
93. ஒருபுடை – ஒரு பக்கத்தே
94 கந்து - தூண்
95. அந்தில் – ஆங்கு.
97 திப்பியம் – இறந்தகால, எதிர்கால நிகழ்வுகளைச் சொல்லும் வியப்பு
99 துரகம் – குதிரை.

பகை கொண்டு வருகின்றவர் இல்லையென்றபோதும் புலிக் கூட்டத்தினை ஒத்த வீர மறவர்கள், ''கொடி பறக்கும் தேரினையுடைய எம் வேந்தன் வெற்றிகொள்வானாக'' என இடியைப் போன்ற முழக்கத்துடன் பூதசதுக்கத்தில் பலியிட்டுப் போற்றுகின்ற ஒலி;

ஈன்றணிமையுடைய மகளிர், ஆற்றாச் சிறுவர், முதற் சூலினையுடைய மகளிர், பெரும்புண்ணுற்று வருந்துவோர் ஆகிய இவர்களின் துன்பத்தைப் போக்கும் மந்திரவாதிகள், ''மன்றத்திலுள்ள பேய்கள் வந்து பெற்றுக் கொள்க'' என்று சொல்லி நின்றவாறு பலிப்பொருள்களை எறிகின்ற நீண்ட குரல் முழக்கம்; ஆக இவ்வாறு பலவகையான ஓசைகளும் ஒன்று கலந்து பரந்து ஒன்றாக ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

உலக அறவியில் சுதமதி இருத்தல் (87 - 95)

அவற்றையெல்லாம் கேட்டுச் சுதமதி உள்ளம் கலங்கினாள். கருமை பூசப்பட்டதுபோன்ற இருட்பரப்பில் மயிலிறகின் முளைபோன்ற அழகிய பற்களையுடைய சுதமதி மலர்வனத்தினின்றும் வெளியேறினாள். திருத்தமான மதிலின் மேற்குப்பக்கத்தில் இருந்த சிறிய வாயில் வழியாகச் சென்றாள். மணிமேகலா தெய்வம் வியந்து கூறிய சக்கரவாளக் கோட்டத்தை அடைந்தாள். அங்கே பலரும் ஒரு சேரச் செல்லத்தக்கவாறு அகன்ற பெரிய வாயிலையுடைய ஊரம்பலத்தின் ஒரு பக்கத்தில் ஒதுங்கியிருந்தாள். அங்கே ஒரு நெடுந்தூண்; அதில் அற்புதப்பாவை ஒன்று இருந்தது. அது மயன் என்னும் தெய்வத் தச்சனால் உருவாக்கப்பட்டது.

கந்திற்பாவை சுதமதியின் முற்பிறப்புக் கூறியது (96 - 110)

மையுண்ட கண்ணினளாகிய சுதமதி மயங்கி அச் சமுறும்படியாகத் திடீரென்று அப் பாவை அவளுடைய முற்பிறவிச் செய்தியைத் தன் தெய்வ வாக்கினால் சொல்லத் தொடங்கியது.

''முற்பிறவியில் அசோதர நகரத்து அரசனாகிய இரவிவன்மனது ஒரே மகளாய் இருந்தவளே! அப்போது நீ குதிரைப்படை கொண்ட வனும் கச்சய நகரத்து அரசனுமாகிய துச்சயன் மனைவியாக இருந்தாய். பூங்கொத்தினாலாகிய மாலையையுடைய (உன் தமக்கை)

மயங்கி யானைமுன் மன்உயிர் நீத்தோய்
காராளர் சண்பையில் கௌசிகன் மகளே
மாருத வேகனோடு இந்நகர் புகுந்து
தாரை தவ்வை தன்னொடு கூடிய
வீரை ஆகிய சுதமதி கேளாய்
இன்றுஏழ் நாளில் இடைஇருள் யாமத்துத்
தன்பிறப் பதனொடு நின்பிறப்பு உணர்ந்துஈங்கு
இலக்குமி யாகிய நினக்குஇளை யாள்வரும்
அஞ்சல் என்று உரைத்தது அவ்வுரை கேட்டு
நெஞ்சம் நடுக்குறூஉம் நோ்இழை நல்லாள்,
காவலாளர் கண்துயில் கொள்ளத்
தூமென் சேக்கைத் துயில்கண் விழிப்ப
வலம்புரிச் சங்கம் வறிதுஎழுந்து ஆர்ப்பப்
புலம்புரிச் சங்கம் பொருளொடு முழங்கப்
புகர்முக வாரணம் நெடுங்கூ விளிப்பப்
பொறிமயிர் வாரணம் குறுங்கூ விளிப்பப்
பணைநிலைப் புரவி பலஎழுந்து ஆலப்
பணைநிலைப் புள்ளும் பலஎழுந்து ஆலப்
பூம்பொழில் ஆர்கைப் புள்ஒலி சிறப்பப்
பூங்கொடி யார்கைப் புள்ஒலி சிறப்பப்

---

104 தவ்வை – தமக்கை.
112. சேக்கை – படுக்கை.
114. புலம் புரிச்சங்கம் - அறிவின் மிக்க புலவர் கூட்டம்.
115 வாரணம் – யானை.
116. வாரணம் – கோழி.
117. பணை – குதிரைப் பந்தி. ஆல – ஆட.
118. பணை – கிளை. ஆல - முழங்க.
119. ஆர்கை – தேன் உண்ணுகின்ற. புள் – வண்டுகள்.
120. புள் – வளையல்.

தாரை இறந்தாள். அதைப் பொறுக்காது யானையின் முன்னர் மயக்கமுற்று வீழ்ந்து உயிர் விட்டாய்! காராளர் மலிந்த சண்பை நகரத்தினுள், கௌசிகன் என்பவனின் மகளாகப் பிறந்தாய். மாருத வேகன் என்னும் விஞ்சையடனுன் இந் நகருள் புகுந்தாய்! உன் தமக்கையான தாரை மாதவியாகப் பிறந்துள்ளாள். முற்பிறப்பில் உன் பெயர் வீரை. இங்கே தாரையாகிய தமக்கையோடு மீண்டும் சேர்ந்துள்ள வீரையாகிய சுதமதியே! நான் சொல்வதைக் கேள்! இன்றைய ஏழாம் நாளில் இருள்நிறைந்த நள்ளிரவில், தன்னுடைய முற்பிறப்புடன் உன்னுடைய முற்பிறப்பினையும் அறிந்தவளாக மணிமேகலை இங்கு வருவாள். முற்பிறப்பில் அவள் நினக்கு இளையவளாக இலக்குமி என்னும் பெயருடன் இருந்தவள்! நீ எதற்கும் அஞ்சாதே'' என்று அப் பாவை உரைத்தது.

(தாரை, வீரை, இலக்குமி இம்மூவரும் முற்பிறப்பில் உடன் பிறந்தவர்கள். இப்பிறப்பில் தாரை மாதவியாகவும், வீரை சுதமதியாகவும், இலக்குமி மணிமேகலையாகவும் பிறந்துள்ளனர்.)

பாவை கூறிய உரையைக் கேட்டு நேரிழை நல்லாள் சுதமதி நெஞ்சு நடுக்குற்றாள்.

புலர்காலைப் பொழுது (111- 126)

(இரவெல்லாம் சுதமதி கவலை கொண்டிருந்தாள். காலை புலர்ந்தது). இரவெல்லாம் காவல் செய்த ஊர் காவலர் துயின்றனர். மெல்லிய படுக்கையில் துயின்ற ஆடவரும், மகளிரும் விழித்தனர். வலம்புரிச் சங்குகள் பொருளற்ற ஒலிகளை முழங்கின. அறிவு நிறைந்த புலவர் கூட்டம் பொருளுடைய மொழிகளை முழங்கின. புள்ளிகள் பொருந்திய முகத்தினையுடைய யானைகள் நீண்ட துதிக்கையைத் தூக்கி நெடிய குரலில் கூப்பீடு செய்தன. புள்ளிகள் கொண்ட சிறசினையுடைய கோழிகள் மெல்லிய குரலெடுத்துக் கூவின. பந்திகளில் வரிசை வரிசையாக நின்ற குதிரைகள் எழுந்து ஆலின. கிளைகளிலிருந்த பறவைகள் பலவும் துயில் எழுந்து ஒலித்தன. பூம்பொழிலில் மதுவுண்ணும் வண்டுகளின் ஒலி முழக்கம் பெரிதாயிற்று. பூங்கொடி மகளிரின் கை வளையல்களின் ஒலி முழக்கமும் மிகுதியாயிற்று.

கடவுள் பீடிகைப் பூப்பலி கடைகொளக்
கலம்பகர் பீடிகைப் பூப்பலி கடைகொளக்
குயிலுவர் கடைதொறும் பண்ணியம் பரந்துஎழக்
கொடுப்போர் கடைதொறும் பண்ணியம் பரந்துஎழ
ஊர்துயில் எடுப்ப உரவுநீர் அழுவத்துக்
கார்இருள் சீத்துக் கதிரவன் முளைத்தலும்,
ஏஉறு மஞ்ஞையின் இனைந்துஅடி வருந்த
மாநகர் வீதி மருங்கில் போகி
போய கங்குலில் புகுந்ததை எல்லாம்
மாதவி தனக்கு வழுஇன்று உரைத்தலும்
நல்மணி இழந்த நாகம் போன்றுஅவள்
தன்மகள் வாராத் தனித்துயர் உழப்ப
இன்உயிர் இழந்த யாக்கையில் இருந்தனள்
துன்னியது உரைத்த சுதமதி தான்என்.

121. பூப்பலி – பொலிவு பெற்ற பலிகள்.
122. பூப்பலி – மலரால் செய்யப்பெறும் பூசனை.
123. குயிலுவர் – தோற் கருவிகளை இசைப்பவர். பண்ணியம் – இசையொலி.
124. பண்ணியம் – பல பண்டங்கள்.
125. எடுப்ப – எழுப்ப. உரவுநீர் அழுவத்து – கடல் பரப்பில்.
126. சீத்து – அழித்து.
127. ஏ – அம்பு.
129. போய கங்குலில் – சென்ற இரவில்.

தெய்வங்களுக்குரிய பலி பீடங்களில் கொடுக்கப்படும் பொலிவு பெற்ற பலிகள் முடிவு பெற்றன. அணிகலன்கள் விற்கப்படும் அங்காடி வீதியில் கடைகளில் மலர் வழிபாடு நடைபெற்றது. தோற்கருவி இசைப்பாருடைய இடங்களிலெல்லாம் பல்வகையான வாச்சிய ஒலிகள் மேம்பட்டன. கொடையாளருடைய வாயில்கள்தோறும் கொடுப்பதற்காகப் பல பண்டங்களும் பரந்து நிறைந்தன. ஊரை உறக்கத்திலிருந்து எழுப்ப, கடற்பரப்பிடையே காரிருளை ஓட்டிக் கதிரவன் முளைத்து எழுந்தனன்.

மாதவியிடம் சுதமதி சொல்லுதல் (127-134)

அப்போது, அம்பு தைக்கப்பெற்றுப் புண்ணுற்ற ஒரு மயில்போல உள்ளம் நைந்த சுதமதி, அப் பெரிய நகரின் வீதி வழியே நடந்து சென்றாள். முன்னாள் இரவில் நிகழ்ந்தவற்றையெல்லாம் மாதவியிடம் ஒன்றும் விடுபடாமல் சொன்னாள். அது கேட்டு மாதவி தன் மகள் வாராத துன்பத்தால் நல்ல மணியை இழந்துவிட்ட நாகம்போல வருத்தமுற்றாள். நடந்தனவற்றை மாதவியிடம் கூறிய சுதமதி இனிய உயிரை இழந்த உடலினள் போல அசைவற்று இருந்தனள்.

8. மணிபல்லவத்துத் துயருற்ற காதை

ஈங்குஇவள் இன்னண மாக இருங்கடல்
வாங்குதிரை உடுத்த மணிபல் லவத்திடைத்
தத்துநீர் அடைகரைச் சங்குஉழு தொடுப்பின்
முத்துவிளை கழனி முரிசெம் பவளமொடு
விரைமரம் உருட்டும் திரைஉலாப் பரப்பின்
ஞாழல் ஓங்கிய தாழ்கண் அசும்பின்
ஆம்பலும் குவளையும் தாம்புணர்ந்து மயங்கி
வண்டுஉண மலர்ந்த குண்டுநீர் இலஞ்சி
முடக்கால் புன்னையும் மடல்பூந் தாழையும்
வெயில்வரவு ஒழித்த பயில்பூம் பந்தர்
அறல்விளங்கு நிலாமணல் நறுமலர்ப் பள்ளித்
துஞ்சு துயில்எழூஉம் அம்சில் ஓதி
காதல் சுற்றம் மறந்து கடைகொள
வேறுஇடத்துப் பிறந்த உயிரே போன்று
பண்டுஅறி கிளையொடு பதியும் காணாள்
கண்டுஅறி யாதன கண்ணிற் காணா
நீல மாக்கடல் நெட்டிடை அன்றியும்
காலை ஞாயிறு கதிர்விரித்து முளைப்ப
உவவன மருங்கினில் ஓர்இடம் கொல்இது
சுதமதி ஒளித்தாய் துயரம் செய்தனை
நனவோ கனவோ என்பதை அறியேன்
மனநடுக் குறூஉம் மாற்றம் தாராய்

---

3. தொடுப்பு – விதைப்பு.
4. முரி – ஒளி வீசும்.
6. அசும்பு – சேறு.
8. குண்டு நீர் இலஞ்சி – ஆழமான நீரையுடைய பொய்கை.
9. முடம் – வளைவு.
13. கடைகொள – முடிவு கொள்ள.
15. கிளை – சுற்றம். பதி – ஊர்.
17. நெட்டிடை – நெடிய இடம்.

8. மணிபல்லவத்துத் துயருற்ற காதை

மணிபல்லவத்தில் மணிமேகலை (1-11)

சுதமதி இங்கே இவ்வாறு இருக்க, அங்கே பெரிய கடலின் வளைந்த திரைகளால் சூழப்பெற்ற மணிபல்லவத் தீவில் மணிமேகலை இருந்தாள். அலைகள் தத்திச் செல்லும் கடற்கரை, சங்குகள் உழுவதால் முத்துகள் விளைகின்ற கழனிபோலக் காட்சியளித்தது. அலைகள் அந்த முத்துக் கழனிகளில் ஒளி வீசும் செம்பவளத்தையும் சந்தனம் அகில் முதலிய மணமரங்களையும் உருட்டித் தள்ளுகின்றன. தாழ்ந்த இடமுள்ள சேற்றில் புலிநகக் கொன்றைகள் ஓங்கி வளர்ந்திருக்கின்றன. ஆம்பலும் குவளையும் கலந்து நெருங்கி வண்டுகள் உண்ணுமாறு மலர்ந்துள்ளன. மலர்கள் நிரம்பிய பொய்கையில் வளைந்த அடியினையுடைய புன்னையும் மடல் விரிந்த தாழையும் வெயில் நுழைவதைத் தடுப்பன போல அழகாகப் பந்தரிட்டிருக்கின்றன. அறல் விளங்குகின்ற நிலாவைப் போன்ற வெண்மணற் பரப்பில் நறுமலர்ப் படுக்கையிலே உறங்கிய அழகிய கூந்தலையுடைய மணிமேகலை தூக்கத்தினின்று விழித்தெழுந்தாள்.

சுதமதி எங்கு ஒளித்தனை? (12 - 27)

அன்புள்ள சுற்றம் அங்கு இல்லை. ஊழ்வினையானது முடிவு செய்ய, அவரை விட்டுப் பிரிந்து வேறோரிடத்தில் பிறந்திருக்கிற உயிரினைப் போன்ற நிலையில் அப்பொழுது மணிமேகலை இருந்தாள். முன்பு தான் அறிந்த சுற்றத்தையும், தன்னுடைய ஊரையும் காணவில்லை. முன் கண்டறியாத சூழலைக் கண்டாள். எதிரே நீல நிறப் பெருங்கடலில் காலைக் கதிரவன் கதிர் விரித்துத் தோன்றினான். இஃது உவவனத்தின் ஓரிடமோ? என ஐயுற்றாள்.

''ஏ! சுதமதியே எங்கே ஒளிந்து கொண்டாய்? துன்பத்தைச் செய்கிறாயே! இது கனவோ அன்றி நனவோ என்பதையும் அறிகிலேனே! என் உள்ளம் நடுங்குகிறது. தோழியே! மறுமொழி தாராயோ?

வல்இருள் கழிந்தது மாதவி மயங்கும்
எல்வளை வாராய் விட்டுஅகன் றனையோ
விஞ்சையில் தோன்றிய விளங்குஇழை மடவாள்
வஞ்சம் செய்தனள் கொல்லோ அறியேன்
ஒருதனி அஞ்சுவென் திருவே வாஎனத்
திரைதவழ் பறவையும் விரிசிறைப் பறவையும்
எழுந்துவீழ் சில்லையும் ஒடுங்குசிறை முழுவலும்
அன்னச் சேவல் அரச னாகப்
பல்நிறப் புள்இனம் பரந்துஒருங்கு ஈண்டிப்
பாசறை மன்னர் பாடி போல
வீசுநீர்ப் பரப்பின் எதிர்எதிர் இருக்கும்
துறையும் துறைசூழ் நெடுமணல் குன்றமும்
யாங்கணும் திரிவோள் பாங்கினம் காணாள்
குரல்தலைக் கூந்தல் குலைந்துபின் வீழ
அரற்றினள் கூஉய் அழுதனள் ஏங்கி,
வீழ்துயர் எய்திய விழுமக் கிளவியில்
தாழ்துயர் உறுவோள் தந்தையை உள்ளி
எம்இதில் படுத்தும் வெவ்வினை உருப்பக்
கோல்தொடி மாதரொடு வேற்றுநாடு அடைந்து
வைவாள் உழந்த மணிப்பூண் அகலத்து
ஐயா வோஎன்று அழுவோள் முன்னர்
விரிந்துஇலங்கு அவிர்ஒளி சிறந்துகதிர் பரப்பி
உரைபெறு மும்முழம் நிலமிசை ஓங்கித்
திசைதொறும் ஒன்பான் முழுநிலம் அகன்று

---

25. விஞ்சையில் தோன்றிய – வித்தையினாலே தோன்றிய.
36 குரல் – பூங்கொத்து.
37. கூஉய் – கூவி.
38. விழுமக் கிளவி – துன்பத்தை வெளிப்படுத்தும் சொற்கள்.
39. உள்ளி – நினைத்து.
40. உருப்ப – முதிர.
42 வைவாள் உழந்த – கூரிய வாளால் வெட்டுண்ட.

இருண்ட இரவுப் பொழுதும் கழிந்து விட்டது; அன்னை மாதவி என்னைக் காணாது மயங்குவாள். வளைக்கரத் தோழியே, வா! வா! என்னை விட்டு அகன்றது ஏனோ? வானத்திலிருந்து தோன்றிய அந்த அணியிழை ஏதேனும் வஞ்சகம் செய்தாளோ? ஒன்றும் அறிய முடியவில்லையே! தன்னந்தனியாக இருப்பதற்கு அஞ்சுகிறேனே! என் செல்வமே! வருக! வருக!'' என மணிமேகலை புலம்பினாள்.

மணிமேகலை தீவினில் சுற்றித் திரிந்தாள் (28 - 35)

அலையில் தவழ்ந்து செல்லும் பறவைகளும், சிறகுகளை விரித்து விண்ணில் பறந்து செல்லும் பறவைகளும், எழுந்தெழுந்து மீண்டும் நீரில் படிகின்ற சில்லையும், சிறகு ஒடுங்கியவாறே இருக்கின்ற முழுவலும் ஆகிய பல்வேறு வண்ணமுடைய பறவையினங்கள் ஒருங்கே கூடியிருந்தன. அன்னச் சேவல் அவற்றினிடையே அரசனைப் போல் வீற்றிருந்தது. பாசறையிலே அமைந்துள்ள மன்னரின் பாடி வீடுகளைப்போல நீர்ப்பரப்பில் எதிரெதிர் எழுந்துள்ள துறைகளும் அத்துறைகளைச் சூழ்ந்து மணற் குன்றுகளும் இருந்தன. அவற்றிலெல்லாம் மணிமேகலை சுற்றித் திரிந்தாள்.

தந்தையை நினைத்து அழுதாள் (36 - 43)

தன் பாங்கியர் எவரையும் காணாத அவள் பூங்கொத்துகளைச் சூடியிருந்த கூந்தல் அவிழ்ந்து பின்னே விழ, கூவிப் புலம்பினாள்; ஏங்கி அழுதாள்; துன்பத்தைப் புலப்படுத்தும் சொற்களைச் சொல்லி ஆழ்ந்த துன்பம் அடைந்து தன் தந்தையை நினைத்தாள். எம்மை இவ்வாறு துன்புறுத்தும் கொடிய தீவினையானது வந்துசேர, எம் அன்னையாம் கண்ணகியோடு வேற்று நாடு சென்று, அங்கே கூரிய வாளால் வெட்டுண்டு வருந்திய மாணிக்கப்பூண் அணிந்த மார்பினையுடைய 'என் ஐயாவே' என்று கதறி அழுதாள்.

பீடிகை கண்டாள் (44 - 63)

இப்படி அழுகின்றவள் முன்னால் புத்த பீடிகை தோன்றியது. அப்பீடிகை பரந்து விளங்குகின்ற பேரொளி மிகுந்ததாய் ஒளிக்கதிர்களை எங்கும் பரப்பிக் கொண்டிருந்தது. நிலத்திற்கு மேலே மூன்று முழம் அளவிற்கு உயர்ந்து தோன்றியது; நான்கு பக்கங்களிலும் ஒன்பது முழம் அகன்றிருந்தது;

விதிமாண் ஆடியின் வட்டம் குயின்று
பதும சதுரம் மீமிசை விளங்கி
அறவோற்கு அமைந்த ஆசனம் என்றே
நறுமலர் அல்லது பிறமரம் சொரியாது
பறவையும் முதிர்சிறை பாங்குசென்று அதிராது
தேவர்கோன் இட்ட மாமணிப் பீடிகை
பிறப்புவிளங்கு அவிர்ஒளி அறத்தகை ஆசனம்
கீழ்நில மருங்கின் நாகநாடு ஆளும்
இருவர் மன்னவர் ஒருவழித் தோன்றி
எமதுஈது என்றே எடுக்கல் ஆற்றார்
தமபெரும் பற்று நீங்கலும் நீங்கார்
செங்கண் சிவந்து நெஞ்சுபுகை உயிர்த்துத்
தம்பெருஞ் சேனையொடு வெஞ்சமம் புரிநாள்
இருஞ்செரு ஒழிமின் எமதுஈது என்றே
பெருந்தவ முனிவன் இருந்துஅறம் உரைக்கும்
பொருஅறு சிறப்பில் புரையோர் ஏத்தும்
தரும பீடிகை தோன்றியது ஆங்குஎன்

47. ஆடியின் வட்டம் குயின்று – பனிங்கினால் வட்டம் செய்யப்பட்டு.
49. அறவோற்கு – புத்தனுக்கு . ஆசனம் – இருக்கை.
54 கீழ் நிலம் – கீழ்த் திசையிலுள்ள இடம்.
58. நெஞ்சு புகை உயிர்த்து – மனம் கொதித்து.
59. வெஞ்சமம் – கடுமையான போர்.
60. இருஞ்செரு – பெரிய போர்.
62. பொருஅறு – ஒப்பற்ற. புரையோர் – உயர்ந்தோர்.

முறைமையோடு மேன்மையான பளிங்கினால் வட்டமாகச் செதுக்கப்பெற்று அதன்மேல் சதுரமான பதுமத்தைக் கொண்டிருந்தது. அதில் புத்ததேவனுடைய பாதங்கள் அமைந்திருந்தன. அது புத்ததேவனுக்கு அமைந்த ஆசனம் என்பதால் மரங்கள் நறுமலர்களையன்றி வேறொன்றையும் சொரியா; பறவையும் அப் பீடிகையின் அருகில் சென்று சிறகொலி செய்யா. அஃது இந்திரனால் இடப்பெற்ற சிறந்த மாணிக்கப் பீடிகை. அதைக் காண்போருடைய பழம்பிறப்புகள் அவர்களுக்கு விளங்கும்; ஒளி வீசுகின்ற அஃது அறத்தன்மை பொருந்தியது. கீழ்த்திசையில் அமைந்துள்ள நாக நாட்டை ஆண்ட இரண்டு மன்னர்கள் ஒருங்கே தோன்றி, ''இது எமது எமது'' என்று எடுக்க முயன்றும் எடுக்க முடியவில்லை. தம்முடைய ஆசையையும் அவர்களால் விட முடியவில்லை. இருவரும் செங்கண் சிவந்து, மனம் கொதித்து, தம் பெரிய சேனை கொண்டு மணிப்பீடத்திற்காகக் கடுமையாகப் போர் புரியத்தொடங்கினர். அந் நாளில், ''நீங்கள் போரை நிறுத்துங்கள். இஃது எம்முடைய பீடம்'' எனக் கூறிப் பெருந்தவ முனிவனாகிய புத்தன் அதன் மீதிருந்து அறம் உரைத்தான். அத்தகைய ஒப்பற்ற சிறப்பினை உடையதும், உயர்ந்தோர் போற்றுவதுமாகிய அத் தரும பீடிகை மணிமேகலையின் கண்களுக்குத் தெரிந்தது.

9. பீடிகை கண்டு பிறப்பு உணர்ந்த காதை

ஆங்குஅது கண்ட ஆயிழை அறியாள்
காந்தள்அம் செங்கை தலைமேல் குவிந்தன;
தலைமேல் குவிந்த கையள் செங்கண்
முலைமேல் கலுழ்ந்துமுத் தத்திரள் உகுத்துஅதின்
இடமுறை மும்முறை வலமுறை வாராக்
கொடிமின் முகிலொடு நிலம்சேர்ந் தென்ன
இறுநுசுப்பு அலச வெறுநிலம் சேர்ந்துஆங்கு
எழுவோள் பிறப்பு வழுஇன்று உணர்ந்து
தொழுகை மாதவ! துணிபொருள் உணர்ந்தோய்!
காயங் கரையில்நீ உரைத்ததை எல்லாம்
வாயே ஆகுதல் மயக்குஅற உணர்ந்தேன்
காந்தாரம் என்னும் கழிபெரு நாட்டுப்
பூருவ தேயம் பொறைகெட வாழும்
அத்தி பதிஎனும் அரசாள் வேந்தன்
மைத்துனன் ஆகிய பிரம தருமன்!
ஆங்குஅவன் தன்பால் அணைந்துஅறன் உரைப்போய்
தீங்கனி நாவல் ஓங்கும்இத் தீவிடை
இன்றுஏழ் நாளில் இருநில மாக்கள்
நின்றுநடுக்கு எய்த நீள்நில வேந்தே
பூமி நடுக்குறூஉம் போழ்தத்து இந்நகர்
நாகநல் நாட்டு நானூறு யோசனை
வியன்பா தலத்து வீழ்ந்துகேடு எய்தும்
இதன்பால் ஒழிகென, இருநில வேந்தனும்
மாபெரும் பேரூர் மக்கட்கு எல்லாம்
ஆவும் மாவும் கொண்டுகழிக என்றே

4. கலுழ்ந்து – கலங்கி.
7. அலச – வருந்த.
11. வாயே யாகுதல் – உண்மையே ஆதலை.

9. பீடிகை கண்டு பிறப்புணர்ந்த காதை

பிறப்பு உணர்ந்தாள் (1-8)

அங்கே, புத்த பீடிகையைக் கண்ட மணிமேகலை மெய்ம்மறந்தாள். காந்தள்போன்ற அவளுடைய அழகிய சிவந்த கைகள் தலைமீது குவிந்தன; தலைமேற்குவித்த கையினளான அவளுடைய செங்கண்கள் கலங்கின; கொங்கைகளின்மேலே கண்ணீர்த்துளிகள் முத்துகள்போல உதிர்ந்தன. அப் பீடிகையை இடப்பக்கமிருந்து மும்முறை வலம் வந்தாள். மின்னல் கொடி முகிலோடு நிலத்திலே வந்து வீழ்வதுபோன்று தன்னுடைய நுண்ணிடை வருந்த வெறு நிலத்தில் விழுந்து வணங்கினாள். வணங்கி எழும்போது தன் முற்பிறப்புச் செய்தியினை உணர்ந்தவளானாள். (அவள் அறிந்த பழம் பிறப்பினைச் சொல்லுகின்றாள். இவை பழம்பிறப்பில் பிரமதருமன் என்னும் முனிவன் அவளுக்குக் கூறியவையாம். அது இப்போது அவளுக்கு நினைவில் தோன்றுகிறது.)

நாக நாடு அழிந்தது (9 - 37)

''வணங்கத்தக்க பெருந்தவமுடையவரே! மெய்ப்பொருளை உணர்ந்தவரே! காயங்கரை என்னும் இடத்தில் நீ உரைத்தவை எல்லாம் உண்மை என்று தெளிவாக இப்போது உணர்கிறேன்.

காந்தாரம் என்னும் மிகப்பெரிய நாட்டிலுள்ள பூருவதேசத்தில் மாசற்று வாழ்ந்த அத்திபதி என்னும் அரசனுக்கு மைத்துனன் ஆகிய பிரமதருமனே! அந்த அரசனிடத்தே வந்து அறம் கூறிய நீ அவனுக்கு ஒரு செய்தி உரைத்தாய்! அஃதாவது; 'நெடுநிலம் ஆள்கின்ற வேந்தனே! இனிய கனிகளையுடைய நாவல் மரத்துப் பெயருடன் சிறந்திருக்கும் இத் தீவில் (நாவலந் தீவில்) இன்றைக்கு ஏழாவது நாளிலே, இப் பெருநிலத்து மக்களெல்லாம் கலங்கும்படியாக நிலம் பூகம்பத்தால் நடுங்கும். அப்போது இந்நகரும் நாக நாட்டின் நானூறு யோசனைப் பரப்பும் அகன்ற பாதாளத்திலே வீழ்ந்து அழிவெய்தும். ஆதலால் இந் நகரினின்றும் வெளியே செல்க' எனச் சொன்னாய். அகன்ற நிலத்தையாண்ட அம் மன்னனும் மிகப் பெரிய அந்த ஊர் மக்கட்கு எல்லாப் பசுக்களையும் ஏனைய விலங்குகளையும் ஓட்டிக் கொண்டு 'நகரை விட்டுச் செல்லுங்கள்' என்று

பறையில் சாற்றி நிறைஅருந் தானையோடு
இடவயம் என்னும் இரும்பதி நீங்கி
வடவயின் அவந்தி மாநகர்ச் செல்வோன்
காயங் கரைஎனும் பேரியாற்று அடைகரைச்
சேய்உயர் பூம்பொழில் பாடிசெய்து இருப்ப,
எம்கோன் நீஆங்கு உரைத்தஅந் நாளிடைத்
தங்காது அந்நகர் வீழ்ந்துகேடு எய்தலும்
மருள்அறு புலவ!நின் மலர்அடி அதனை
அரசொடு மக்கள் எல்லாம் ஈண்டிச்
சூழ்ந்தனர் வணங்கித் தாழ்ந்துபல ஏத்திய
அருள்அறம் பூண்ட ஒருபேர் இன்பத்து
உலகுதுயர் கெடுப்ப அருளிய அந்நாள்,
அரவக் கடல்ஒலி அசோதரம் ஆளும்
இரவி வன்மன் ஒருபெருந் தேவி
அலத்தகச் சீறடி அமுத பதிவயிற்று
இலக்குமி என்னும் பெயர்பெற்றுப் பிறந்தேன்
அத்தி பதிஎனும் அரசன் பெருந்தேவி
சித்திரபும் ஆளும் சீதரன் திருமகள்
நீல பதிஎனும் நேர்இழை வயிற்றில்
காலை ஞாயிற்றுக் கதிர்போல் தோன்றிய
இராகுலன் தனக்குப் புக்கேன் அவனொடு
பராஅரு மரபின்நின் பாதம் பணிதலும்,
எட்டுஇரு நாளில்இவ் இராகுலன் தன்னைத்
திட்டி விடம்உணும்; செல்உயிர் போனால்
தீஅழல் அவனொடு சேயிழை மூழ்குவை;

---

26. சாற்றி – அறிவித்து.
34. ஈண்டி – கூடி.
40. அலத்தகம் – செம்பஞ்சுக் குழம்பு.
47. பரா அரு – போற்றுதற்கரிய.
49. திட்டிவிடம் – கண்ணில் நஞ்சுடைய ஒரு பாம்பு. இதன் கண்ணில் பட்டோர் இறப்பர்.

முறை சாற்றினான். அவ்வரசனும் பெரிய அரிய தன் படைகளோடு 'இடவயம்' என்னும் அப் பெரிய நகரிலிருந்து வெளியேறி, வடக்கேயுள்ள அவந்தி மாநகரினை நோக்கிச் செல்லலாயினான். வழியில் காயங்கரை என்னும் ஒரு பெரிய ஆற்றங்கரையில் மிக உயர்ந்த மரங்கள் கொண்ட ஒரு பூம்பொழிலில் பாடிவீடு அமைத்துத் தங்கியிருந்தான். அப்போது தேவ! நீ உரைத்த அந் நாளில் அந்நகர் நிலையாது வீழ்ந்து அழிந்தது. மயக்கம் அறுத்த அறிவினை யுடையவனே! அரசனும் மக்களும் நின்மலர் போன்ற திருவடியைச் சூழ்ந்து பணிந்து வணங்கித் தலைதாழ்ந்து பலவாறு போற்றினர். அப்போது அருளாகிய அறத்தினைக் கொண்ட ஒப்பற்ற பேரின்ப நெறியினை உலக மக்களின் துயரத்தைப் போக்கும் பொருட்டு அருளிச் செய்தாய்! அந் நாளிலே-

முற்பிறப்பில் இலக்குமி (38 - 41)

கடல் ஒலி போன்ற முழக்கத்தையுடைய அசோதர நகரத்தை இரவிவன்மன் என்பவன் ஆண்டு வந்தான். அவனுடைய ஒப்பற்ற மனைவி அமுதபதி. செம்பஞ்சுக் குழம்பு ஊட்டிய சிறப்புமிக்க அடிகளையுடைய அவள் வயிற்றிலே நான் இலக்குமி என்னும் பெயர் பெற்றுப் பிறந்தேன்.

இராகுலன் கணவன் (42 - 47)

அத்திபதி என்னும் அரசனுடைய மனைவியும் சித்திபுரத்தை ஆண்ட சீதரன் என்பவனுடைய அழகிய மகளுமானவள் நீலபதி. சிறந்த அணிகலன்களை அணிந்த அவளுடைய வயிற்றில் இளஞாயிற்றின் கதிர்போல் ஒளிவீசும் மகன் ஒருவன் பிறந்தான். அவன் பெயர் இராகுலன். அவனுக்கு இலக்குமியாகிய நான் மனைவியானேன். என் கணவனும் நானும் போற்றுதற்கரிய உன் அடி பணிந்து அன்று நின்றோம்.

பதினாறு நாட்களில் கணவனோடு தீக்குளிப்பாய் (48 - 50)

இன்னும் பதினாறு நாட்களில் இந்த இராகுலனைத் திட்டிவிடம் என்னும் பாம்பு உயிர் குடித்துவிடும். அவனோடு செம்மையான அணிகலன்களை அணிந்துள்ள இலக்குமியே! நீயும் தீக்குளிப்பாய்.

ஏதுநிகழ்ச்சி ஈங்குஇன்று ஆகலின்
கவேரக் கன்னிப் பெயரோடு விளங்கிய
தவாக்களி மூதூர்ச் சென்றுபிறப்பு எய்துதி;
அணிஇழை நினக்குஓர் அருந்துயர் வருநாள்
மணிமே கலாதெய்வம் வந்து தோன்றி
அன்றுஅப் பதியில் ஆர்இருள் எடுத்துத்
தென்திசை மருங்கில்ஓர் தீவிடை வைத்தலும்
வேக வெந்திறல் நாகநாட்டு அரசர்
சினமாசு ஒழித்து மனமாசு தீர்த்துஆங்கு
அறச்செவி திறந்து மறச்செவி அடைத்துப்
பிறவிப்பிணி மருத்துவன் இருந்துஅறம் உரைக்கும்
திருந்துஒளி ஆசனம் சென்றுகை தொழுதி;
அன்றைப் பகலே உன்பிறப்பு உணர்ந்துஈங்கு
இன்றுயான் உரைத்த உரைதெளி வாய்என,
சாதுயர் கேட்டுத் தளர்ந்துஉகு மனத்தேன்
காதலன் பிறப்பும் காட்டா யோஎன
ஆங்குஉனைக் கொணர்ந்த அரும்பெருந் தெய்வம்
பாங்கில் தோன்றிப் பைந்தொடி கணவனை
ஈங்குஇவன் என்னும் என்றுஎடுத்து ஓதினை
ஆங்குஅத் தெய்வதம் வாரா தோஎன
ஏங்கினள் அழுஉம் இளங்கொடி தான்என,

52. கவேரக் கன்னி – காவேரி.
53. தவாக்களி – அழியாத களிப்பு.
58. திறல் - வலிமை.
65. சா துயர் – இறப்பாகிய துன்பத்தை.

பூம்புகாரில் பிறப்பாய் (51 - 53)

பிறப்பறுப்பதற்கான ஏது நிகழ்ச்சி உங்களுக்கு இப்போது இல்லை. ஆதலால் காவிரியாளின் பெயரோடு விளங்குகின்றதும் என்றும் அழியாத களிப்பினையுடையதுமான காவிரிப்பூம்பட்டினம் என்னும் பழமையான நகரில் மறுபிறப்பு எய்துவாய்.

மணிபல்லவம் செல்வாய் (54 - 64)

அணிகலன்களை அணிந்துள்ளவளே! அந்நகரில் உனக்கோர் துன்பம் வரும். அந் நாளில் மணிமேகலா தெய்வம் அங்கு வந்து தோன்றி, இருளில் உன்னை எடுத்துச் சென்று தெற்குத் திசையிலே உள்ள ஒரு தீவிலே வைக்கும். மிகுந்த வலிமை படைத்த நாக நாட்டு மன்னர் இருவரின் சினமாகிய குற்றத்தைப் போக்கி, மனமாசுகளையும் நீக்கி, அவர்கள் அறச்செவி திறந்து, மறச்செவி அடைத்து, பிறவிப் பிணிக்கு மருத்துவனான புத்ததேவன் அமர்ந்து இருந்து அறம் உரைக்கும், திருந்திய ஒளி பொருந்திய பீடத்தைக் கைதொழுதேத்துவாய்!

அன்றைப் பொழுதிலேயே உன் பிறப்பை உணர்ந்து இங்கே இன்று யான் உரைக்கின்ற சொற்களின் உண்மையைத் தெளிவாய் என்று சொன்னாய்!

கணவன் எங்கே பிறந்துள்ளான்? (65 - 71)

இராகுலன் இறப்பான் என்னும் துயரைக் கேட்டு என் உள்ளம் தளர்ந்து சிதைந்தேன். 'என் காதலன் பிறப்பையும் காட்டாயோ?' என்று உன்னை நான் அன்று வேண்டினேன். அப்போது உன்னை எடுத்துச் சென்ற அரிய பெரிய தெய்வம் உன்னிடத்தில் வந்து தோன்றி உன் கணவன் இன்னான், இங்கிருக்கிறான் என்று சொல்லும் என்று நீ எடுத்துக் கூறினாய். நீ சொன்ன அம் மணிமேகலா தெய்வம் இப்போது வாராதா?'' என ஏங்கி, இளங்கொடி போன்ற மணிமேகலை அழுது கொண்டிருந்தாள்.

10. மந்திரம் கொடுத்த காதை

அறவோன் ஆசனத்து ஆயிழை அறிந்த
பிறவியள் ஆயினள் பெற்றியும் ஐதுஎன
விரைமலர் ஏந்தி விசும்பூடு இழிந்து
பொருஅறு பூங்கொடி பூமியில் பொலிந்தென
வந்து தோன்றிய மணிமே கலாதெய்வம்
முந்தைப் பிறப்புஎய்தி நின்றோள் கேட்ப,
உயிர்கள் எல்லாம் உணர்வுபாழ் ஆகிப்
பொருள்வழங்கு செவித்துளை தூர்ந்துஅறிவு இழந்த
வறந்தலை உலகத்து அறம்பாடு சிறக்கச்
சுடர்வழக்கு அற்றுத் தடுமாறு காலைஓர்
இளவள ஞாயிறு தோன்றியது என்ன
நீயோ தோன்றினை நின்அடி பணிந்தேன்
நீயே ஆகிநிற்கு அமைந்தஇவ் ஆசனம்
நாமிசை வைத்தேன் தலைமிசைக் கொண்டேன்
பூமிசை ஏற்றினேன் புலம்புஅறுக என்றே
வலம்கொண்டு ஆசனம் வணங்குவோள் முன்னர்,
பொலங்கொடி நிலமிசைச் சேர்ந்துஎனப் பொருந்தி
உன்திரு அருளால் என்பிறப்பு உணர்ந்தேன்
என்பெருங் கணவன் யாங்குஉளன் என்றலும்,
இலக்குமி கேளாய் இராகுலன் தன்னொடு
புலத்தகை எய்தினை பூம்பொழில் அகவயின்
இடங்கழி காமமொடு அடங்கா னாய்அவன்
மடந்தை மெல்இயல் மலர்அடி வணங்குழிச்
சாது சக்கரன் மீவிசும்பு திரிவோன்

2. பெற்றியும் ஐது – இவள் பெற்றபேறும் அழகியது.
10. சுடர் – சூரியன்.
15. புலம்பு – வருத்தம்.
21. புலத்தகை எய்தினை – ஊடினாய்.
24. மீவிசும்பு – மேலேயுள்ள ஆகாயம்.

10. மந்திரம் கொடுத்த காதை

மணிமேகலா தெய்வம் புத்த பீடிகையை வலம் வந்தது (1 - 19)

''அறவோன் புத்தனுடைய பாத பீடிகையால் மணிமேகலை முற்பிறப்பை அறிந்தாள். இவள் பெற்ற பேறு பெரிது'' என்று நினைத்ததாக மணிமேகலா தெய்வம் மணமலர்களை ஏந்திய வண்ணம் விண்ணினின்றும் இறங்கி ஒப்பற்ற ஒரு பூங்கொடியானது இந்நிலவுலகில் வந்து தோன்றிற்று என்று கருதும்படியாக அங்கே தோன்றியது.

தன்னுடைய முற்பிறப்பை அறிந்து நின்ற மணிமேகலை கேட்கும்படியாக அத் தெய்வம் கூறியது: ''உயிர்களின் நல்லுணர்வு பாழாயின; நல்லறத்தைக் கேட்க வேண்டிய செவித்துளைகள் தூர்ந்து போயின; உலகம் அறிவிழந்து வறுமை கூர்ந்தது. அவ்வாறு கிடக்கும் உலகத்திலே அறத்தின் தோற்றமானது எழுந்து சிறப்படைவதற்கான கூர் விளக்கு ஒன்று இல்லாமல், இருளிடையே கிடந்து தடுமாறிக் கொண்டிருந்த நேரத்திலே ஓர் இளஞாயிறு அழகுடன் தோன்றியது என்னும்படியாகப் புத்ததேவா! நீ தோன்றி அருள் செய்தனை. நின் திருவடிகளைப் பணிந்தேன். நீயேயாகி நின் பொருட்டாக அமைந்த இப் பீடத்தை நாவால் போற்றினேன். நின் பாதங்களை என் தலைமேற் கொண்டேன்; மலர் தூவித் துதித்தேன். என் வருத்தம் நீங்குக'' எனக் கூறி அப் பீடத்தை வலங்கொண்டு சுற்றி நின்றனள். அவள் முன்னே பொற்கொடியொன்று நிலத்தின்மீது சோர்ந்ததுபோல மணிமேகலை விழுந்து வணங்கி, ''உன்னுடைய திருவருளால் என்னுடைய முற்பிறவியை உணர்ந்தேன். பெருமையுடைய என் கணவன் இராகுலன் எங்கே உள்ளான்?'' எனக் கேட்டாள்.

இராகுலனே உதயகுமரன் (20 - 49)

(தெய்வம் கூறியது:) இலக்குமியே கேள்! நீ உன் கணவன் இராகுலனுடன் ஒரு பூம்பொழிலிடத்தே ஊடல் கொண்டிருந்தாய். அவன் காமம் கரைபுரண்டது. அதை அடக்க முடியாமல் அவன் உன் மெல்லிய மலரடியை வணங்கினான். அப்பொழுது வானத்தில் திரியும் சாது சக்கரன் என்ற சாரணன் தரும சக்கரத்தைச் சுழற்றிக் கொண்டு

தெருமரல் ஒழித்துஆங்கு இரத்தின தீவத்துத்
தரும சக்கரம் உருட்டினன் வருவோன்
வெங்கதிர் அமயத்து வியன்பொழில் அகவயின்
வந்து தோன்றலும் மயங்கினை கலங்கி
மெல்இயல் கண்டனை மெய்ந்நடுக் குற்றனை
நல்கூர் நுசுப்பினை நாணினை இறைஞ்ச
இராகுலன் வந்தோன் யார்என வெகுளலும்
விராமலர்க் கூந்தல் அவன்வாய் புதையா
வான்ஊடு இழிந்தோன் மலர்அடி வணங்காது
நாநல் கூர்ந்தனை என்றுஅவன் தன்னொடு
பகைஅறு பாத்தியன் பாதம் பணிந்துஆங்கு,
அமர கேள்நின் தமர்அலம் ஆயினும்
அம்தீம் தண்ணீர் அமுதொடு கொணர்கேம்
உண்டி யாம்உன் குறிப்பினம் என்றலும்
எம்அனை உண்கேன் ஈங்குக் கொணர்கென
அந்நாள் அவன்உண் டருளிய அவ்வறம்
நின்ஆங்கு ஒழியாது நின்பிறப்பு அறுத்திடும்.
உவவன மருங்கில் உன்பால் தோன்றிய
உதய குமரன் அவன்உன் இராகுலன்
அங்குஅவன் அன்றியும் அவன்பால் உள்ளம்
நீங்காத் தன்மை நினக்கும்உண்டு ஆதலின்
கந்த சாலியின் கழிபெரு வித்துஓர்
வெந்துஉகு வெங்களர் வீழ்வது போன்ம்என
அறத்தின் வித்தாங்கு ஆகிய உன்னைஓர்
திறப்படற்கு ஏதுவாச் சேயிழை செய்தேன்
இன்னும் கேளாய் இலக்குமி! நீநின்
தவ்வையர் ஆவோர் தாரையும் வீரையும்
ஆங்குஅவர் தம்மை அங்கநாட்டு அகவயின்
கச்சயம் ஆளும் கழல்கால் வேந்தன்
துச்சயன் என்போன் ஒருவன் கொண்டனன்;
அவருடன் ஆங்குஅவன் அகல்மலை ஆடிக்
கங்கைப் பேர்யாற்று அடைகரை இருந்துழி
மறவணம் நீத்த மாசுஅறு கேள்வி

---

25. தெருமரல் – மனக் கவற்சி
27. வெங்கதிர் அமயம் – உச்சிப் பொழுது.
35. பாத்தியன் – (புத்தனுடைய பாதத்திற்கு) அன்பன்.
46. கந்தசாலி – சிறந்த மணமுள்ள ஒருவகை நெல்.

மனக்கவற்சி அற்றவனாய் இரத்தினத் தீவிலிருந்து வந்து கொண்டிருந்தவன் நண்பகலில் நிழலுக்காக பரந்த அச் சோலையின் உட்புறத்தில் வந்து தோன்றினான். அவனைக் கண்டதும் நீ மயங்கிக் கலங்கி உடல் நடுக்கமுற்றாய். தளர்வுற்ற நடையையுடைய நீ (கணவன் உன்னை வணங்குதலை அவன் கண்டதால்) நாணமுற்று அவனை வணங்கினாய். இராகுலன், 'இங்கு வந்தவன் யார்?' எனச் சினந்தான். மணமலர்க் கூந்தலாய்! நீ அவன் வாயைப் பொத்தி, 'விண்ணிலிருந்து இறங்கியுள்ள பெரியோனின் மலரடி வணங்கிப் புகழாது நா வறுமை உற்றாய்!' எனக் கூறிக் கணவனோடும் சேர்ந்து புத்ததேவன் பாதங்கட்கு அன்பனாகிய அம் முனிவரின் பாதங்களை வணங்கினீர்! 'முனிவரே! யாம் உமக்குச் சிறந்த அன்பர் அல்லேம்; ஆயினும் இனிய குளிர்ந்த நீரும் உணவும் கொண்டு வருவோம்! உண்பீராக! உம் உள்ளக்குறிப்பின்படி நாங்கள் நடப்போம்' என்று சொன்னாய்! அவனும், 'தாயே! நான் உண்பேன்; இங்கே கொண்டு வருக' என்றான். அந் நாளில் அம்முனிவன் உண்டருளிய அறம் நின்னை விட்டு நீங்காது; அது நின் பிறப்பை அறுக்கும்.

உவவனத்தில் காமத்தோடு உன்னிடம் வந்த உதயகுமரனே உன்னுடைய (முற்பிறப்புக் கணவனாகிய) இராகுலன். அதனால்தான் அவன் உன்பால் நீங்கா விருப்பம் கொண்டனன்; உன் உள்ளமும் அவனை நீங்காது விரும்பியது. உன் உள்ளத்தில் எழுந்த அந்த உணர்வு கந்தசாலி என்னும் நெல்லின் மிகச்சிறந்த விதை வெந்து உருகுகின்ற வெள்ளிய உப்பு நிலத்தில் விழுந்து பாழாகும் தன்மை போன்றது என்று எண்ணினேன். அறத்தின் விதை ஆகிய நீ (காமம் என்ற நிலத்திலே விழுந்து பாழ்பட்டுவிடக்கூடாது) என்பதற்காக உன்னை ஒருநிலைப்படுத்தவே இங்குக் கொண்டு வந்தேன்!

தாரையும் வீரையும் உன் தமக்கையரே (50 - 74)

இலக்குமியே, இன்னும் (நான் சொல்வதைக்) கேள்! தாரை, வீரை ஆகிய இருவரும் உன் தமக்கையர். அவர்கள் இருவரையும் அங்க நாட்டில் உள்ள கச்சயத்தை ஆண்ட வீரக்கழல் வேந்தனான துச்சயன் என்பான் மணந்தான். அவன் அவர்களுடன் அகன்ற மலைகளில் விளையாடி, கங்கையின் கரையில் தங்கியிருந்தான். அப்போது பாவத் தன்மைகளைக் கைவிட்டவரும் குற்றமற்ற அறக்கேள்வியருமான

அறவணன் ஆங்குஅவன் பால்சென் றோனை
ஈங்கு வந்தீர் யார்என்று எழுந்துஅவன்
பாங்குஉளி மாதவன் பாதம் பணிதலும்
ஆதி முதல்வன் அறஆழி ஆள்வோன்
மாதுயர் எவ்வம் மக்களை நீக்கி
விலங்கும் தம்முள் வெருஉம்பகை நீக்கி
உடங்குஉயிர் வாழ்கஎன்று உள்ளம் கசிந்துஉகத்
தொன்றுகா லத்து நின்றுஅறம் உரைத்த
குன்றம் மருங்கில் குற்றம் கெடுக்கும்
பாத பங்கயம் கிடத்தலின் ஈங்குஇது
பாதபங் கயமலை எனும்பெயர்த்து ஆயது.
தொழுது வலம்கொள்ள வந்தேன் ஈங்குஇப்
பழுதுஇல் காட்சியீர் நீயிரும் தொழும்என,
அன்றுஅவன் உரைத்த அவ்வுரை பிழையாது
சென்றுகை தொழுது சிறப்புச் செய்தலின்
மாதவி ஆகியும் சுதமதி ஆகியும்
கோதைஅம் சாயல் நின்னொடு கூடினர்.
அறிபிறப்பு உற்றனை அறம்பாடு அறிந்தனை
பிறஅறம் உரைப்போர் பெற்றியும் கேட்குவை
பல்வேறு சமயப் படிற்றுஉரை எல்லாம்
அல்லியங் கோதை கேட்குறும் அந்நாள்
இளையள் வளையோள் என்றுஉனக்கு யாவரும்
விளைபொருள் உரையார் வேற்றுஉரு எய்தவும்,
அந்தரம் திரியவும் ஆக்கும்இவ் அருந்திறல்
மந்திரம் கொள்கென வாய்மையின் ஓதி

60. பாங்கு உளி – இயல்பை நினைத்து.
62. எவ்வம் – துன்பம்.
77. படிற்று உரை – பொய் உரை.

அறவணர் என்பார் அங்கு வந்தார். துச்சயன், 'இங்கு எழுந்தருளிய தாங்கள் யாவிரோ?' என்று எழுந்து அப் பெருந்தவமுடையோனின் பாதங்களைப் பணிந்து கேட்டான்.

ஆதி முதல்வனும் அற ஆழி உருட்டுவோனுமாகிய புத்தன், மக்களைப் பெருந்துன்பங்களாகிய பிறப்பு இறப்புகளிலிருந்து நீக்கவும் விலங்குகளும் தம்முள் கொள்ளும் பகை நீக்கி இணைந்து வாழ வேண்டுமென்றும் எண்ணினான். யாவரும் மனமுருகிக் கேட்குமாறு இக் குன்றத்திலிருந்து அறத்தினை எடுத்துரைத்தான்.

இங்கே குற்றங்களையெல்லாம் அழிக்கவல்ல புத்ததேவனின் பாதத்தாமரைகள் உள்ளன. ஆதலின் இம் மலை 'பாதபங்கய மலை' எனப் பெயர் பெற்றது. அப்பாத மலர்களைத் தொழுது வலங்கொள்ளவே இங்கு நான் வந்தேன். குற்றமில்லா அறிவினையுடையீர்! நீங்களும் இதனை வணங்குவீர்' என்றனன் அம்முனிவன். அன்று அவன் கூறிய அவ்வுரையினைத் தவறாது ஏற்று, மன்னனும் அவன் மனைவியரும் சென்று கைதொழுது போற்றிச் சிறப்பும் செய்தனர். அதன் பயனாகத் தாரையும் வீரையும் மாதவி யாகவும், சுதமதியாகவும் கோதை சூடிய அழகிய சாயலையுடைய உன்னோடு இப்போது கூடியுள்ளனர்.

வேற்றுரு எய்தவும் விண்ணிலே செல்லவும் மந்திரம் (75 - 82)

நீ நின் முற்பிறப்பை அறிந்து கொண்டாய்; அறத்தின் தோற்றத்தையும் அறிந்தாய்; பிற சமய உண்மைகளைச் சொல்லுவோர் தன்மையும் கேட்பாய். பல்வேறு சமயங்களின் பொய்யுரை களையெல்லாம் நீ கேட்கச் செல்லும் அந் நாளில் இளமைத்தன்மை உடையவள், வளையலணிந்த பெண் என்று எண்ணி எவரும் தத்தம் சமய தத்துவங்களைச் சொல்லமாட்டார். ஆதலால் நீ வேற்றுருவத்தினை அடையவும், வானத்திலே செல்லவும் செய்யும் அரிய ஆற்றல் பொருந்திய இம் மந்திரங்களை அறிந்து கொள்வாயாக" என இரண்டு மந்திரங்களை மணிமேகலா தெய்வம் மணிமேகலைக்குக் கூறி அருளியது.

மதிநாள் முற்றிய மங்கலத் திருநாள்
பொதுஅறிவு இகழ்ந்து புலம்உறு மாதவன்
திருஅறம் எய்துதல் சித்தம்என்று உணர்நீ
மன்பெரும் பீடிகை வணங்கினை ஏத்தி
நின்பதிப் புகுவாய் என்றுஎழுந்து ஓங்கி,
மறந்ததும் உண்டுஎன மறித்துஆங்கு இழிந்து
சிறந்த கொள்கைச் சேயிழை கேளாய்
மக்கள் யாக்கை உணவின் பிண்டம்
இப்பெரு மந்திரம் இரும்பசி அறுக்கும்என்று
ஆங்குஅது கொடுத்துஆங்கு அந்தரம் எழுந்து
நீங்கியது ஆங்கு நெடுந்தெய்வம் தான்என்

83. மதி நாள் முற்றிய – நிலவு நாள்தோறும் ஒவ்வொரு கலையாக வளர்ந்து முற்றுப்பெற்ற மங்கலத் திருநாள்; முழு மதி நாள்
84 புலம் – மெய்ஞ்ஞானம். புலம் உறு மாதவன் – புத்தன்.
85. சித்தம் – உறுதி.
88 மறித்து – மீட்டும். இழிந்து – இறங்கி.
90 பிண்டம் – தொகுதி
92. அந்தரம் - வானம்

அரும்பசி அறுக்கும் மந்திரம் (83 - 93)

''நாள்தோறும் கலை வளர்ந்து நிறைவு,பெறுகின்ற வைகாசி முழு நிலவுநாள் புத்தர் ஞானம் பெற்ற மங்கலத் திருநாள் (அவன் பிறந்த நாளும் அதுவே). அந் நாளிலே பொதுவான உலக அறிவினை வெறுத்து ஒதுக்கிச் சிறப்பான மெய்ஞானம் பெற்றான் புத்தபெருமான். அப் புத்த பெருமானின் நல்லறத்தை நீ அடைதல் உறுதி என்பதை உணர்வாயாக!

மிக்க பெருமையுடைய புத்த பீடிகையை வணங்கித் துதித்தபின் உன் ஊர் செல்க'' எனச் சொல்லி தெய்வம் மேலே சென்றது. மீண்டும் இறங்கி வந்து, ''சிறந்த கொள்கையையுடைய மணிமேகலையே! ஒன்று சொல்ல மறந்துபோனேன். அதனைக் கேள். மக்களுடைய உடல் உணவினால் ஆகிய ஒரு தொகுதி. இப் பெரிய மந்திரம் பெரும்பசியையும் போக்கும்'' என்று கூறி அம் மந்திரத்தையும் அளித்துப் பெருமையுடைய மணிமேகலா தெய்வம் வானிலே எழுந்து நீங்கியது.

11.பாத்திரம் பெற்ற காதை

மணிமே கலாதெய்வம் நீங்கிய பின்னர்
மணிபல் லவத்திடை மணிமே கலைதான்
வெண்மணல் குன்றமும் விரிபூஞ் சோலையும்
தண்மலர்ப் பொய்கையும் தாழ்ந்தனள் நோக்கிக்
காவதம் திரியக் கடவுள் கோலத்துத்
தீவ திலகை செவ்வனம் தோன்றிக்
கலம்கவிழ் மகளிரின் வந்துஈங்கு எய்திய
இலங்குதொடி நல்லாய் யார்நீ என்றலும்
எப்பிறப் பகத்துள் யார்நீ என்றது
பொன்கொடி அன்னாய் பொருந்திக் கேளாய்
போய பிறவியில் பூமியங் கிழவன்
இராகுலன் மனையாள் இலக்குமி என்பேர்
ஆய பிறவியில் ஆடலங் கணிகை
மாதவி ஈன்ற மணிமே கலையான்
என்பெயர்த் தெய்வம் ஈங்குஎனைக் கொணரஇம்
மன்பெரும் பீடிகை என்பிறப்பு உணர்ந்தேன்
ஈங்குஎன் வரவுஇதுஈங்கு எய்திய பயன்இது
பூங்கொடி அன்னாய் யார்நீ என்றலும்,
ஆயிழை தன்பிறப்பு அறிந்தமை அறிந்த
தீவ திலகை செவ்வனம் உரைக்கும்
ஈங்குஇதன் அயலகத்து இரத்தின தீவத்து
ஓங்குஉயர் சமந்தத்து உச்சி மீமிசை
அறவியங் கிழவோன் அடிஇணை ஆகிய
பிறவி என்னும் பெருங்கடல் விடூஉம்
அறவி நாவாய் ஆங்குஉளது ஆதலின்
தொழுதுவலம் கொண்டு வந்தேன் ஈங்குப்
பழுதுஇல் காட்சிஇந் நன்மணிப் பீடிகை

4. தாழ்ந்து நோக்கி – மெல்ல நோக்கி
5. காவதம் – காதம்

.11. பாத்திரம் பெற்ற காதை

தெய்வமகள் தீவதிலகை தோன்றினாள் (1 – 6)

மணிமேகலா தெய்வம் நீங்கிய பின்னர் மணிமேகலை மணிபல்லவத் தீவில் உள்ள வெண்மையான மணல் குன்றுகள், பரந்த பூஞ்சோலைகள், குளிர்ந்த மலர்ப் பொய்கைகள் ஆகியவற்றை மெல்ல நோக்கியவாறு காத தூரம் நடந்தாள். அப்போது அங்கே தெய்வமகள் தீவதிலகை செவ்விதாகத் தோன்றினாள்.

தீவதிலகையின் வினா; மணிமேகலையின் மறுமொழி (7 - 18)

''மரக்கலம் கவிழ அதிலிருந்து தப்பி வந்த மகளைப்போல இங்கு வந்திருக்கும் வளையலணிந்த நல்லவளே! நீ யார்?'' என்று மணிமேகலையைத் தீவதிலகை கேட்டாள். உடனே மணிமேகலை, ''எப்பிறப்பில் யார் என்று கேட்கிறாய்? பொற்கொடி போல்பவளே! நான் சொல்வதை மனம் பொருந்தக்கேள்! போன பிறப்பில் நான் நிலமாண்ட மன்னன் இராகுலனின் மனைவியாயிருந்தேன். அப்போது என் பெயர் இலக்குமி. இப்பிறவியில் ஆடல் கணிகை மாதவியின் மகள்; பெயர் மணிமேகலை. என் பெயர் கொண்ட மணிமேகலா தெய்வம் இங்கு என்னைக் கொண்டு வந்தது. பெருமை பொருந்திய இப்பீடிகையால் என் முற்பிறப்பினை அறிந்தேன். நான் வந்த விதம் இது; பெற்ற பயன் இது. பூங்கொடிபோன்ற பெண்ணே! நீ யார்?'' எனத் தீவதிலகையை மணிமேகலை கேட்டாள்.

தீவதிலகை தன்வரலாறு கூறினாள் (19 – 36)

மணிமேகலை தன் பிறப்பை அறிந்த தன்மையை உணர்ந்த தீவதிலகை சிறந்த முறையில் கூறலுற்றாள். ''இம்மணிபல்லவத்தின் அயலிலே இரத்தினத் தீவு உள்ளது. அங்கே மிக உயர்ந்த சமந்தம் என்னும் மலை உச்சியின்மீது அறத்திற்கு உரிமையுடையவனாகிய புத்தனின் அடி இணை உள்ளது. அது பிறவியாகிய பெருங்கடலைக் கடத்தும் நாவாய் ஆகும். அதனை வணங்கி, வலங்கொண்டு இங்கே வந்துள்ளேன். குற்றமற்ற தோற்றத்தையுடைய இந்த நல்ல

தேவர்கோன் ஏவலின் காவல் பூண்டேன்
தீவ திலகை என்பெயர் இதுகேள்:
தரும தலைவன் தலைமையின் உரைத்த
பெருமைசால் நல்அறம் பிறழா நோன்பினர்
கண்டுகை தொழுவோர் கண்டதன் பின்னர்ப்
பண்டைப் பிறவியர் ஆகுவர் பைந்தொடி
அரியர் உலகத்து ஆங்குஅவர்க்கு அறமொழி
உரியது உலகத்து ஒருதலை யாக
ஆங்ஙனம் ஆகிய அணியிழை இதுகேள்:
ஈங்குஇப் பெரும்பெயர்ப் பீடிகை முன்னது
மாமலர்க் குவளையும் நெய்தலும் மயங்கிய
கோமுகி என்னும் கொழுநீர் இலஞ்சி
இருதுஇள வேனிலில் எரிகதிர் இடபத்து
ஒருபதின் மேலும் ஒருமூன்று சென்றபின்
மீனத்து இடைநிலை மீனத்து அகவையின்
போதித் தலைவனொடு பொருந்தித் தோன்றும்
ஆபுத் திரன்கை அமுத சுரபிஎனும்
மாபெரும் பாத்திரம் மடக்கொடி கேளாய்
அந்நாள் இந்நாள் அப்பொழுது இப்பொழுது
நின்ஆங்கு வருவது போலும் நேர்இழை
ஆங்குஅதின் பெய்த ஆர்உயிர் மருந்து
வாங்குநர் கையகம் வருத்துதல் அல்லது
தான்தொலைவு இல்லாத் தகைமையது ஆகும்
நறுமலர்க் கோதை நின்ஊர் ஆங்கண்
அறவண்ணன் தன்பால் கேட்குவை இதன்திறம்

39. இலஞ்சி – பொய்கை.
40. இருது – பருவம்.
43. போதி – அரசமரம்.
48. ஆருயிர் மருந்து – உணவு.

மணிபீடத்தை இந்திரன் கட்டளைப்படி காவல் செய்து வருகிறேன். தீவதிலகை என்பது என் பெயர். தரும தலைவனாகிய புத்தன் சிறப்பாக உரைத்த பெருமை மிகுந்த நல்அறத்தில் தவறாமல் நடக்கும் தவமுடையவரே இப்பீடிகையைக் கண்டு கைகூப்பி வணங்குவதற்கு உரியவர். பைந்தொடியே! இப்பீடிகையைக் கண்ட பின்னர் அவர் முற்பிறப்பை அறிந்தோராவர். உலகில் இப்பேறு பெற்றவர் மிக அரியர். அவர்க்கு உலகிலே தருமபதம் உறுதியாக உரியது. அப்பேற்றினைப் பெற்றுள்ள அணியிழையே! நான் சொல்வதைக் கேள்.

அமுதசுரபி தோன்றும் நாளும் பொழுதும் இதுவே (37 – 53)

இங்கே இப்பெரும் புகழையுடைய பீடிகையின் முன்னே அழகிய குவளை மலர்களும் நெய்தல் மலர்களும் கலந்து விளங்குகின்ற குளிர்ந்த நீர்ப்பொய்கை உள்ளது. அதன் பெயர் கோமுகி. இளவேனிற் பருவத்தில் சூரியன் மிகுந்த வெப்பம் செய்கின்ற வைகாசித் திங்களில் இருபத்தேழு நட்சத்திரங்களுள் கார்த்திகை முதலிய பதின்மூன்று நட்சத்திரங்கள் சென்றபிறகு, பதினான்காவதாக நடு நட்சத்திரமாய் விளங்குவது விசாக நட்சத்திரம். புத்தன் பிறந்ததும் அவ் விசாக நட்சத்திரமே! (புத்தர் பிறந்ததும் ஞானம் பெற்றதும் வைகாசித் தூய நிறைமதி நாள்). அவ் வைகாசி விசாகையில் இப் பொய்கையில் அமுதசுரபி வெளிப்பட்டுத் தோன்றும். அப் பாத்திரம் ஆபுத்திரன் கையிலிருந்தது.

இன்று விசாக முழு நிலவு நாள். பாத்திரம் தோன்றும் அந் நன்னாள் இந்நாளே; அது தோன்றும் பொழுதும் இப்பொழுதே! அப் பாத்திரம் உன் கையில் கிடைக்கும் போலும்! மேகலையே! அப்பாத்திரத்தில் பெய்த உயிர் மருந்தாகிய உணவு எடுக்க எடுக்கப் பெருகிக் கொண்டேயிருக்கும். வாங்குவோர் கை வருந்துமே அல்லாது அதிலுள்ள உணவு எப்போதும் குறையாத தன்மையுடையதாகும். மணம் மிக்க மலர்களைச் சூடியுள்ள மணிமேகலையே! அப் பாத்திரத்தின் வரலாற்றினை உன்னூரில் உள்ள அறவண அடிகளிடம் கேட்டுத் தெரிந்து கொள்.''

என்றுஅவள் உரைத்தலும் இளங்கொடி விரும்பி
மன்பெரும் பீடிகை தொழுதனள் வணங்கித்
தீவ திலகை தன்னொடும் கூடிக்
கோமுகி வலம்செய்து கொள்கையின் நிற்றலும்
எழுந்துவலம் புரிந்த இளங்கொடி செங்கையில்
தொழுந்தகை மரபின் பாத்திரம் புகுதலும்,
பாத்திரம் பெற்ற பைந்தொடி மடவாள்
மாத்திரை இன்றி மனம்மகிழ்வு எய்தி
மாரனை வெல்லும் வீர நின்அடி
தீநெறிக் கடும்பகை கடிந்தோய் நின்அடி
பிறர்க்குஅறம் முயலும் பெரியோய் நின்அடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்அடி
எண்பிறக்கு ஒழிய இறந்தோய் நின்அடி
கண்பிறர்க்கு அளிக்கும் கண்ணோய் நின்அடி
தீமொழிக்கு அடைத்த செவியோய் நின்அடி
வாய்மொழி சிறந்த நாவோய் நின்அடி
நரகர் துயர்கெட நடப்போய் நின்அடி
உரகர் துயரம் ஒழிப்போய் நின்அடி
வணங்குதல் அல்லது வாழ்த்தல்என் நாவிற்கு
அடங்காது என்ற ஆயிழை முன்னர்,
போதி நீழல் பொருந்தித் தோன்றும்
நாதன் பாதம் நவைகெட ஏத்தித்
தீவ திலகை சேயிழைக்கு உரைக்கும்
குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாண்அணி களையும் மாண்எழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவிஅது தீர்த்தோர்
இசைச்சொல் அளவைக்கு என்நா நிமிராது

60. மாத்திரை – அளவு.
64. துறக்கம் – சுவர்க்கம்.
70. உரகர் – நாகர். 74. நவை – குற்றம்.
77. புணை – தெப்பம்.
81. இசை - புகழ்

மணிமேகலை அமுதசுரபி பெற்றாள் (54 – 58)

இவ்வாறு தீவதிலகை கூறியதும், இளங்கொடி போன்ற மணிமேகலை நிலைபெற்ற புகழுடைய பீடிகையைப் பணிந்து தொழுதாள். தீவதிலகையோடு சென்று கோமுகிப் பொய்கையை வலம் வந்து, நியமத்தோடு நின்றபோது அமுதசுரபி பொய்கையில் எழுந்தது. அனைவரும் தொழும்படியான பெருமை பெற்ற அப் பாத்திரம் மணிமேகலையின் சிவந்த கைகளில் சென்று புகுந்தது.

மணிமேகலை புத்தனைப் போற்றினாள் (59 – 72)

பாத்திரத்தைப் பெற்ற மணிமேகலை அளவற்ற மகிழ்ச்சி கொண்டு புத்தனைப் போற்றலானாள். ''காமனை வெல்லும் வீரனே நின் திருவடி போற்றி; தீய வழிகளாகிய பெரும் பகையை நீக்கியவனே போற்றி; மற்றையோர்க்குப் புண்ணியமுண்டாவதற்கு முயலுகின்ற பெரியோய் போற்றி; சுவர்க்க இன்பத்தை வேண்டாத தொன்மையானவனே போற்றி; மக்களின் எண்ணத்திற்கும் எட்டாத மேம்பட்ட நிலையில் சென்றோனே போற்றி; உயிர்கட்கு அறிவுக்கண் அளிக்கும் அறிவே போற்றி; தீமொழி கேளாச் செவியோய் போற்றி; நன்மொழி பேசும் நா உடையோய் போற்றி; மக்கள் துயர்கெட நடப்பவனே போற்றி; நரகர் துயரம் ஒழிப்பவனே போற்றி; உன்னை வணங்கமுடியுமே தவிர உன் புகழை வாழ்த்த என் நாவால் முடியாது.''

பசியின் கொடுமை (73 – 81)

இவ்வாறு புத்தனைப் போற்றியிருந்த மணிமேகலைக்குப் போதி நிழலில் வீற்றிருக்கும் புத்தனின் பாதங்களை வணங்கித் தீவதிலகை கூறலுற்றாள். ''பசிக் கொடுமை என்னும் பாவி, தான் பற்றியவரின் குடிப்பெருமையைக் கெடுக்கும்; பெருமையைக் கொல்லும்; கல்வியாகிய பெரிய தெப்பத்தை ஒதுக்கும்; நாணமாகிய அணிகலனைப் போக்கும்; சிறந்த அழகினை அழிக்கும்; மனைவியுடன் பிறர் வீட்டு வாயிலிலே கையேந்தச் செய்துவிடும். இப் பசி எனும் பாவியைத் தீர்ப்பவருடைய புகழைக் கூற என்னுடைய இந்த நா போதாது.

புல்மரம் புகையப் புகைஅழல் பொங்கி
மன்உயிர் மடிய மழைவளம் கரத்தலின்
அரசுதலை நீங்கிய அருமறை அந்தணன்
இருநில மருங்கின் யாங்கணும் திரிவோன்
அரும்பசி களைய ஆற்றுவது காணான்
திருந்தா நாய்ஊன் தின்னுதல் உறுவோன்
இந்திர சிறப்புச் செய்வோன் முன்னர்
வந்து தோன்றிய வானவர் பெருந்தகை
மழைவளம் தருதலின் மன்உயிர் ஓங்கிப்
பிழையா விளையுளும் பெருகியது அன்றோ
ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உயிர்க்கொடை பூண்ட உரவோய் ஆகிக்
கயக்குஅறு நல்அறம் கண்டனை என்றலும்,
விட்ட பிறப்பில்யான் விரும்பிய காதலன்
திட்டிவிடம் உணச் செல்உயிர் போவுழி
உயிரொடு வேவேன் உணர்வுஒழி காலத்து
வெயில்விளங்கு அமயத்து விளங்கித் தோன்றிய
சாது சக்கரன் தனையான் ஊட்டிய
காலம் போல்வதுஓர் கனாமயக்கு உற்றேன்
ஆங்குஅதன் பயனே ஆர்உயிர் மருந்தாய்
ஈங்குஇப் பாத்திரம் என்கைப் புகுந்தது

84. அருமறை அந்தணன் – விசுவாமித்திரன்.
88. இந்திர சிறப்பு – பலியிடுதல்.
92. ஆற்றுநர்க்கு – செல்வர்க்கு.
98. கயக்கு – கலங்குதல்.
100. திட்டிவிடம் – கண்ணில் நஞ்சுடைய பாம்பு.

விசுவாமித்திரன் நாய் ஊன் தின்ன முற்பட்டான் (82 – 91)

நெருப்பு போல வெப்பம் மிகுந்து புல்லும் மரமும் கரிந்து போயின; மழை பெய்யாது மறைந்து போயிற்று; உயிர்கள் பசியால் மடிந்தன. அப்போது அரச பதவியை விட்டுத் தவ வாழ்க்கையை மேற்கொண்ட விசுவாமித்திர முனிவன் தன் பசியைப் போக்கிக் கொள்ள உணவில்லாது இப்பெரிய நிலப்பரப்பு எங்கும் அலைந்தான். உண்ணப் பொருத்தமில்லாத நாயின் இறைச்சி கிடைத்தது. அதை உண்ணுவதற்குமுன் தேவபலியாகச் சிறிது வழங்கி, பின் தானும் தின்ன முற்பட்டபோது அவன் முன்னே இந்திரன் தோன்றி மழையைத் தந்தான். அதனால் உயிர்கள் சிறப்புற்று வாழ்ந்தன; விளைச்சல் தவறாது பெருகியது.

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே (92 – 98)

கைம்மாறு செய்யும் தகுதியுடைய செல்வர்க்கு ஒன்றைக் கொடுப்பது அறத்தை விலை கூறுவதாகும். எதுவும் இல்லாத வறியவர்களின் கடும் பசியைப் போக்குவதே உண்மையான அறம். அத்தகைய அறமுடையவர்களைச் சார்ந்தே உலகம் நிற்கும். மண் செறிந்த இந்நில உலகத்தில் வாழ்பவர்கட்கெல்லாம் உணவு கொடுப்பவர் உயிரையே கொடுப்பவர் ஆவர். மணிமேகலையே! நீ உயிரைக் கொடுத்தலாகிய அறத்தினை மேற்கொண்டுள்ளாய்! நல்லறிவுடையவளாய், 'கலக்கமில்லாத அறம் இதுவே' என உணர்ந்துள்ளாய்'' எனத் தீவதிலகை கூறினாள்.

அறத்தின் பயன் (99 - 106)

உடனே மணிமேகலை, ''போன பிறவியில் என் அன்புக் காதலனைத் திட்டிவிடம் எனும் பாம்பு தீண்ட உயிர் போயிற்று. அவன் பிரிவாற்றாது நானும் அவனுடன் தீப்புகுந்து உயிருடன் வெந்தேன். என் உணர்வழிகின்றபோது நான் நண்பகல் நேரத்தில் சாதுசக்கரனுக்கு உணவுபடைத்த நிகழ்ச்சி கனவாக வந்தது. அக் கனவின் பயனே போலும் ஆருயிர் மருந்தான இப்பாத்திரம் இப்போது என் கையில் புகுந்துள்ளது. (உயிர் உடம்பிலிருந்து நீங்கும்போது உள்ள நினைப்பின் பயனை அவ்வுயிர் மறுபிறப்பில் அடையும் என்பது தொன்னூல் துணிபு.)

நாவலொடு பெயரிய மாபெருந் தீவத்து
வித்தி நல்அறம் விளைந்த அதன்பயன
துய்ப்போர் தம்மனைத் துணிச்சிதர் உடுத்து
வயிறுகாய் பெரும்பசி அலைத்தற்கு இரங்கி
வெயில்என முனியாது புயல்என மடியாது
புறங்கடை நின்று புன்கண் கூர்ந்துமுன்
அறங்கடை நில்லாது அயர்வோர் பலரால்
ஈன்ற குழவி முகம்கண்டு இரங்கித்
தீம்பால் சுரப்போள் தன்முலை போன்றே
நெஞ்சு வழிப்படூஉம் விஞ்சைப் பாத்திரத்து
அகன்சுரைப் பெய்த ஆர்உயிர் மருந்துஅவர்
முகம்கண்டு சுரத்தல் காண்டல்வேட் கையேன்என
மறந்தேன் அதன்திறம் நீஎடுத்து உரைத்தனை
அறம்கரி யாக அருள்சுரந்து ஊட்டும்
சிறந்தோர்க்கு அல்லது செவ்வனம் சுரவாது
ஆங்ஙனம் ஆயினை அதன்பயன் அறிந்தனை
ஈங்குநின்று எழுவாய் என்றுஅவள் உரைப்ப,
தீவ திலகை தன்அடி வணங்கி
மாபெரும் பாத்திரம் மலர்க்கையில் ஏந்திக்
கோமகன் பீடிகை தொழுதுவலம் கொண்டு
வான்ஊடு எழுந்து மணிமே கலைதான்
வழுஅறு தெய்வம் வாய்மையின் உரைத்த
எழுநாள் வந்தது என்மகள் வாராள்
வழுவாய் உண்டென மயங்குவோள் முன்னர்
வந்து தோன்றி அவர்மயக் கம்களைந்து
அந்தில் அவர்க்குஓர் அற்புதம் கூறும்
இரவி வன்மன் ஒருபெரு மகளே
துரகத் தானைத் துச்சயன் தேவி

109. துணிச்சிதர் – கிழிந்த ஆடை
111. முனியாது – வெறுக்காமல். மடியாது - தங்காமல்.
117. சுரை – பாத்திரத்தின் உட்பாகம்.
120. கரி – சான்று.
130. வழுவாய் – தவறு.
132. அந்தில் – அந்த இடத்தில்.
134. துரகம் – குதிரை.

அமுதசுரபி சுரப்பதைக் காண அவா (107 – 118)

நாவலின் பெயர் கொண்டுள்ள மிகப்பெரிய தீவில் (சம்புத்தீவில்) நல்லறத்தை விதைத்து அதன் பயனாய்ச் செல்வத்தைத் துய்ப்பவர் உள்ளனர். முற்பிறப்பில் செய்த பாவத்தால் கிழிந்த ஆடைகளை உடுத்திக் கொண்டு வெயிலையும் மழையையும் பாராது அச்செல்வர் வீட்டு முன்வாயிலில் நின்று இரந்து துன்புற்று அலையும் மாந்தர் பலர். ஆதலால் ஈன்ற குழந்தையைக் கண்டதும் இரக்கமுற்று இனிய பாலைச் சுரக்கும் தாய் முலையைப்போல,இப்பாத்திரத்தினுள்ளேஇட்ட உணவு அவ்வறியவர் முகம் கண்டு சுரப்பதைக் காணுகின்ற வேட்கை யுடையவளாயிருக்கின்றேன்'' என்றனள் மணிமேகலை.

அறத்தோரிடமே சுரபி சுரக்கும் (119 – 123)

''நான் அப்பாத்திரத்தின் சிறப்பினைச் சொல்ல மறந்தேன்; நீ எடுத்துக் கூறினாய். ஓர் உண்மையைத் தெரிந்து கொள். இப் பாத்திரம் அறமே சான்றாக அருள் சுரந்து ஊட்டும் சிறப்புடையோர்க்கு அல்லாமல் மற்றவர்க்குச் சுரக்காது. இந்த உண்மையை நீ அறிந்துள்ளனை. இனி நீ இங்கிருந்து உன் நகர்க்குச் செல்லலாம்'' எனத் தீவதிலகை மணிமேகலையிடம் உரைத்தாள்.

மணிமேகலையைக் காணாது மாதவி வருத்தம் (124 – 132)

மணிமேகலை தீவதிலகையின் அடியை வணங்கி, பெருமை மிக்க அட்சய பாத்திரத்தைத் தன் மலர்போன்ற கையிலே ஏந்தியவளாய்ப் புத்த பீடிகையைத் தொழுது வலம்வந்து விண்ணிலே எழுந்தாள். புகாரிலே, ''மணிமேகலா தெய்வம் உரைத்த ஏழாம்நாள் வந்துவிட்டது; என் மகள் இன்னும் வரவில்லையே, தவறு ஏதேனும் நடந்திருக்குமோ?'' என மயங்கிக் கொண்டிருந்த மாதவிமுன் மணிமேகலை வந்து தோன்றினாள். மாதவி, சுதமதி ஆகியவரின் கலக்கத்தை நீக்கி, அவர்க்கு ஓர் அற்புதத்தைச் சொல்லத் தொடங்கினாள்.

மணிமேகலை கூறிய செய்தி (133 – 146)

அவர்களை நோக்கி,

''இரவிவன்மன் பெற்றெடுத்த ஒப்பற்ற மகளே! குதிரைப்படை கொண்ட துச்சயன் மனைவியே! அமுதபதியின் வயிற்றில்

அமுத பதிவயிற்று அரிதில் தோன்றித்
தவ்வையர் ஆகிய தாரையும் வீரையும்
அவ்வையர் ஆயினீர் நும்அடி தொழுதேன்
வாய்வ தாக மானிட யாக்கையில்
தீவினை அறுக்கும் செய்தவம் நுமக்குஈங்கு
அறவண வடிகள் தம்பால் பெறுமின்
செறிதொடி நல்லீர் உம்பிறப்பு ஈங்கு,இஃது
ஆபுத் திரன்கை அமுத சுரபிஎனும்
மாபெரும் பாத்திரம் நீயிரும் தொழும்எனத்
தொழுதனர் ஏத்திய தூமொழி யாரொடும்
பழுதுஅறு மாதவன் பாதம் படர்கேம்
எழுகென எழுந்தனள் இளங்கொடி தான்என்,

136. தவ்வை – தமக்கை.
137. அவ்வையர் – தாய்மார்.
145. பழுது – குற்றம். படர்கேம் – செல்லுவோம்.

பெருமையுடன் பிறந்து தாரை, வீரை என எனக்குத் தமக்கையராக முற்பிறப்பில் இருந்த நீங்கள் இப்பிறப்பில் எனக்குத் தாயராக இருக்கிறீர்கள்! உம் அடிகளை வணங்குகிறேன். மானிட யாக்கையைப் பெற்றுள்ள உங்கட்குத் தீவினையை அறுக்கின்ற செய்தவம் வாய்ப்பதாகுக! செறிந்த வளையலணிந்துள்ளவர்களே! உம் பிறப்பின் வரலாற்றை அறவண அடிகளிடம் தெரிந்து கொள்ளுங்கள். இஃது ஆபுத்திரன் கையில் இருந்த அமுதசுரபி எனும் பெயர் கொண்ட பெருமைமிக்க பாத்திரம். இதனை நீங்களும் வணங்குங்கள்!'' என்றனள் மணிமேகலை. இருவரும் அப் பாத்திரத்தைப் போற்றி வணங்கினர். ''குற்றமற்ற தவமுடைய அறவண அடிகள் திருவடி சேர்வோம்; புறப்படுங்கள்'' என இளநங்கையாகிய மணிமேகலை இருவரையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டாள்.

12. அறவணர்த் தொழுத காதை

ஆங்குஅவர் தம்முடன் அறவண அடிகள்
யாங்குஉளர் என்றே இளங்கொடி வினாஅய்
நரைமுதிர் யாக்கை நடுங்கா நாவின்
உரைமூ தாளன் உறைவிடம் குறுகி
மைம்மலர்க் குழலி மாதவன் திருந்தடி
மும்முறை வணங்கி முறையுளி ஏத்தி,
புதுமலர்ச் சோலை பொருந்திய வண்ணமும்,
உதய குமரன்ஆங்கு உற்றுஉரை செய்ததும்,
மணிமே கலாதெய்வம் மணிபல் லவத்திடை
அணியிழை தன்னை அகற்றிய வண்ணமும்,
ஆங்குஅத் தீவகத்து அறவோன் ஆசனம்
நீங்கிய பிறப்பு நேரிழைக்கு அளித்ததும்,
அளித்த பிறப்பின் ஆகிய கணவனைக்
களிக்கயல் நெடுங்கண் கடவுளின் பெற்றதும்,
தவ்வையர் ஆகிய தாரையும் வீரையும்
வெவ்வினை உருப்ப விளிந்துகேடு எய்தி
மாதவி ஆகியும் சுதமதி ஆகியும்
கோதைஅம் சாயல் நின்னொடும் கூடினர்
ஆங்குஅவர் தம்திறம் அறவணன் தன்பால்
பூங்கொடி நல்லாய் கேள்என்று உரைத்ததும்,
உரைத்த பூங்கொடி ஒருமூன்று மந்திரம்
தனக்குஉரை செய்துதான் ஏகிய வண்ணமும்,
தெய்வம் போயபின் தீவ திலகையும்
ஐயெனத் தோன்றி அருளொடும் அடைந்ததும்,
அடைந்த தெய்வம் ஆபுத் திரன்கை
வணங்குஉறு பாத்திரம் வாய்மையின் அளித்ததும்,
ஆபுத் திரன்திறம் அறவணன் தன்பால்
கேள்என்று உரைத்துக் கிளர்ஒளி மாதெய்வம்
போகென மடந்தை போந்த வண்ணமும்
மாதவன் தன்னை வணங்கினள் உரைத்தலும்,

---

4. உரை மூதாளன் – அறவண அடிகள்.
11 தீவகம் – மணிபல்லவத் தீவு. ஆசனம் – (இருக்கை) புத்தபீடிகை.
24. ஐயெனத் தோன்றி – விரைந்து தோன்றி.

12. அறவணர்த் தொழுத காதை

அறவணரை வணங்கினாள் (1 - 6)

மாதவி, சுதமதியுடன் இளங்கொடி போன்ற மணிமேகலை அறவண அடிகள் எங்குள்ளார் எனக் கேட்டுச் சென்றனள். நரை முதிர்ந்த உடல், ஆனாலும் நடுங்காத நாஉடைய அறவண அடிகள் இருப்பிடத்தை அடைந்தனர். மலரணிந்த கருங்கூந்தலையுடைய மணிமேகலை அறவண அடிகளின் திருத்தமுற்ற பாதங்களை மூன்று முறை வணங்கி, முறைப்படிப் போற்றினாள்.

நடந்தது கூறினாள் (7 - 30)

தான் மலர் கொய்ய உவவனத்திற்குச் சென்றதும், அங்கு உதயகுமரன் வந்து பேசியதும், மணிமேகலா தெய்வம் மணிபல்லவத்திற்கு எடுத்துச் சென்றதும், அங்கே அத் தீவில் புத்த பீடிகையால் தன்னுடைய முற்பிறப்பை உணர்ந்ததும், துள்ளும் கயல்போன்ற கண்களையுடைய மணிமேகலா தெய்வத்திடமிருந்து முற்பிறவியில் தன் கணவனாக இருந்தவனைத் தெரிந்து கொண்டதும், முற்பிறப்பில் தன்னுடைய தமக்கையராயிருந்த தாரையும் வீரையும் கொடிய வினைப்பயனால் இறந்து மாதவியாகவும் சுதமதியாகவும் தோன்றியுள்ளனர் என்பதும், அவ்விருவரின் வரலாற்றினை அறவண அடிகள்பால் கேள் என மணிமேகலா தெய்வம் சொன்னதும், அவ்வாறுரைத்த அத்தெய்வம் தனக்கு மூன்று மந்திரங்களைச் சொல்லிச் சென்றதும், அத்தெய்வம் சென்றதும் அங்கே விரைந்து தீவதிலகை தோன்றி அருளொடு தன்னிடம் வந்ததும், அவ்வாறு வந்த தெய்வம் ஆபுத்திரன் கையிலிருந்த வணங்கத்தக்க பாத்திரத்தை வாய்மையோடு அளித்ததும், ஒளி வீசும் அத்தெய்வம் ஆபுத்திரன் திறத்தை அறவண அடிகளிடத்தில் கேள் எனச் சொல்லித் தன்னைப் போ என்று சொன்னதும், தான் மீண்டு வந்ததும் ஆகிய செய்திகளை மணிமேகலை அறவண அடிகளை வணங்கி உரைத்தாள்.

மணிமே கலைஉரை மாதவன் கேட்டுத்
தணியா இன்பம் தலைத்தலை மேல்வரப்
பொன்தொடி மாதர் நல்திறம் சிறக்க
உற்றுஉணர் வாய்நீ இவர்திறம் உரைக்கேன்:
நின்நெடுந் தெய்வம் நினக்குஎடுத்து உரைத்த
அந்நாள் அன்றியும் அருவினை கழூஉம்
ஆதி முதல்வன் அடிஇணை ஆகிய
பாதபங் கயமலை பரவிச் செல்வேன்
கச்சயம் ஆளும் கழல்கால் வேந்தன்
துச்சயன் தன்னைஓர் சூழ்பொழில் கண்டேன்
மாபெருந் தானை மன்ன நின்னொடும்
தேவியர் தமக்கும் தீதுஇன் றோஎன
அழிதகவு உள்ளமொடு அரற்றினன் ஆகி
ஒளிஇழை மாதர்க்கு உற்றதை உரைப்போன்
புதுக்கோள் யானைமுன் போற்றாது சென்று
மதுக்களி மயக்கத்து வீரை மாய்ந்ததூஉம்
ஆங்குஅது கேட்டு ஓர் அரமியம் ஏறித்
தாங்காது வீழ்ந்து தாரைசா வுற்றதூஉம்
கழிபெருந் துன்பம் காவலன் உரைப்ப
பழவினைப் பயன்நீ பரியல்என்று எழுந்தேன்
ஆடுங் கூத்தியர் அணியே போல
வேற்றோர் அணியொடு வந்தீ ரோஎன
மணிமே கலைமுன் மடக்கொடி யாதிறம்
துணிபொருள் மாதவன் சொல்லியும் அமையான்.
பிறவியும் அறவியும் பெற்றியின் உணர்ந்த
நறுமலர்க் கோதாய் நல்கினை கேளாய்:
தரும தலைவன் தலைமையின் உரைத்த
பெருமைசால் நல்அறம் பெருகா தாகி
இறுதிஇல் நல்கதி செல்லும் பெருவழி
அறுகையும் நெருஞ்சியும் அடர்ந்துகண் அடைத்தாங்குச்

45. புதுக்கோள் யானை – புதிதாகப் பிடித்துக் கொண்டு வரப்பட்ட யானை
50. பரியல் – வருந்தாதே.
55. அறவி – அறத்தொடு கூடிய வழி.
60. அறுகை – அறுகம் புல்.

அறவணர், மாதவி – சுதமதி வரலாறு கூறினார் (31 - 54)

மணிமேகலை சொன்னவற்றைக் கேட்ட அறவண அடிகளுக்குக் குறையாத பேரின்பம் மேன்மேலும் பெருகியது. ''பொற்கொடி போன்றவர்களே! நீவிர் நற்சிறப்புப் பெறுக'' என வாழ்த்தினார். பின்னர் மணிமேகலையிடம், ''இவ்விருவர் வரலாற்றையும் உரைப்பேன் கேட்பாயாக! மணிமேகலா தெய்வம் உனக்குக் கூறிய அந்த நாளில் மட்டுமல்லாமல் அருவினையைப் போக்கும் ஆதிமுதல்வனாகிய புத்தனின் அடியிணை உள்ள பாதபங்கய மலையைத் தொழப் பலமுறை சென்றுள்ளேன். அப்படிச் சென்ற ஒரு சமயம் கச்சய நகரை ஆண்ட வீரக்கழலணிந்த வேந்தன் துச்சயனை மரங்கள் சூழ்ந்த ஒரு பொழிலில் கண்டேன். ''பெருஞ்சேனையை உடைய மன்னனே! நீயும் உன் இரு தேவியரும் நலமாக இருக்கின்றீரா?'' எனக் கேட்டேன். அவன் உள்ளம் வருந்தி, அரற்றியவனாக, ஒளி வீசும் அணிகளணிந்த தன் மனைவியர்க்கு நேர்ந்த துன்பத்தை உரைக்கலானான். புதிதாகப் பிடித்துக் கொண்டுவரப்பட்ட யானைமுன் மதுவுண்டு வெறி மயக்கத்தால் சென்ற வீரை அதனால் மிதியுண்டு இறந்தாள். அச் செய்தி கேட்டுத் துயரம் தாங்காமல் தாரை நிலாமுற்றத்தில் ஏறிக் கீழே விழுந்து இறந்தாள்'' என்ற கொடிய துன்பச் செய்தியை மன்னன் கூறினான். நான் அவனிடம், ''இது உன் பழைய வினைப்பயன்; வருந்தாதே'' என ஆறுதல் கூறி வந்தேன். ''அவ்வாறு சாவுற்ற நீவிர், ஆடும் அரங்கத்தில் கூத்தியர் வேற்றுருக் கொள்வது போல இப்போது இங்கே வேறு கோலத்துடன் வந்துள்ளீர்?'' என மாதவி, சுதமதியின் வரலாற்றை மெய்ப்பொருளறிந்த அறவண அடிகள் மணிமேகலை முன் உரைத்தார்.

அறம் அருகி மறம் பெருகியது (55 - 65)

அவர் மேலும் கூறத் தொடங்கினார். ''முற்பிறவியினையும் அறநெறியினையும் பண்புடனறிந்தவளே! நறிய மலர் மாலை அணிந்த நங்கையே! நான் சொல்வதை மனமுவந்து கேள்: தருமங்களின் தலைவன் புத்தன். அவன் தலைவனாக இருந்து உலகிற்குப் பெருமை பொருந்திய நல்லறங்களைக் கூறினான். அது பெருகி வளரவில்லை. அழிவில்லாத நற்கதிக்குச் செல்லும் பெரிய வழியை அறுகம் புல்லும் நெருஞ்சி முள்ளும் அடர்ந்து அடைத்துக் கொண்டிருக்கிறது.

செயிர்வழங்கு தீக்கதி திறந்து கல்என்று
உயிர்வழங்கு பெருநெறி ஒருதிறம் பட்டது
தண்பனி விழுங்கிய செங்கதிர் மண்டிலம்
உண்டுஎன உணர்தல் அல்லது யாவதும்
கண்டுஇனிது விளங்காக் காட்சி போன்றது
சலாகை நுழைந்த மணித்துளை அகவையின்
உலாநீர்ப் பெருங்கடல் ஓடா தாயினும்
ஆங்குஅத் துளைவழி உகுநீர் போல
ஈங்கு நல்அறம் எய்தலும் உண்டுஎனச்
சொல்லலும் உண்டுயான் சொல்லுதல் தேற்றார்
மல்லல்மா ஞாலத்து மக்களே ஆதலின்
சக்கர வாளத்துத் தேவர் எல்லாம்
தொக்குஒருங்கு ஈண்டித் துடிதலோ கத்து
மிக்கோன் பாதம் விழுந்தனர் இரப்ப
இருள்பரந்து கிடந்த மலர்தலை உலகத்து
விரிகதிர்ச் செல்வன் தோன்றினன் என்ன
ஈர்எண் ணூற்றோடு ஈர்எட்டு ஆண்டில்
பேர்அறி வாளன் தோன்றும்அதன் பிற்பாடு
பெருங்குள மருங்கில் சுருங்கைச் சிறுவழி
இரும்பெரு நீத்தம் புகுவது போல
அளவாச் சிறுசெவி அளப்புஅரு நல்அறம்
உளம்மலி உவகையொடு உயிர்கொளப் புகூஉம்
கதிரோன் தோன்றுங் காலை ஆங்குஅவன்
அவிர்ஒளி காட்டும் மணியே போன்று
மைத்துஇருள் கூர்ந்த மனமாசு தீரப்
புத்த ஞாயிறு தோன்றுங் காலைத்
திங்களும் ஞாயிறும் தீங்குஉறா விளங்கத்
தங்கா நாண்மீன் தகைமையின் நடக்கும்

---

66. சலாகை – சிறிய நாராசம். அகவையின் – உள்ளிடத்தே.
70. தேற்றார் – தெளியார்.
73. தொக்கு – கூடி.
79. சுருங்கை – மதகு.
80. நீத்தம் – வெள்ளம்.
85. மைத்து – கறுத்து.

துன்பம் தருகின்ற தீக்கதிக்குச் செல்லும் வழி நன்றாகவே திறந்து கிடக்கின்றது. அதுவே ஆரவாரத்துடன் உயிர்கள் சென்று வரும் ஒரே வழிப் பாதையாகவும் அமைந்துவிட்டது. குளிர்ந்த பனியினாலே மூடப்பட்டிருக்கும் சிவந்த கதிர்களையுடைய கதிரவனை உண்டு என உணர்ந்து அறியமுடியுமே அல்லாது நேரில் கண்ணால் காண முடியாது; அதுபோன்றே அறநெறியும் நேரிற் காணுமாறு காட்டப்படுவது அன்று; ஆன்றோர் உணர்த்த உணரப்படுவதேயாகும்.

நல்லறம் சிறிது சிறிதாகவே நடைபெறும் (66 – 71)

சிறிய நாராசம் நுழைந்த மணித்துளை வழியாக அலையுலாவும் பெருங்கடல் நீர் முழுவதும் ஓடாது என்றாலும் அச் சிறு துளைவழியே நீர்த் திவலைக்ள் கசிவதுபோல இவ்வுலகத்தில் நல்லறங்கள் சிறுகச்சிறுகத்தான் சென்றடையும் என்று யான் சொல்வதுமுண்டு. இவ்வாறு நான் சொல்வதைக் கேட்டு வளமிகுந்த இவ்வுலக மக்கள் தெளிவு பெறுதல் இல்லை.

புத்தன் தோன்றுவான் (72 – 78)

சக்கரவாளத்திலுள்ள தேவர்கள் அனைவரும் ஒன்றாய்க் கூடித் துடித உலகத்திலுள்ள சிறந்த தேவன் (பிரபாபாலன்) திருவடியில் விழுந்து இறைஞ்சினர். ஆதலின் இருள் படர்ந்து கிடக்கின்ற இடமகன்ற இவ்வுலகத்தில் விரிந்த கதிர்களையுடைய சூரியன் தோன்றினாற்போல இற்றைக்கு ஆயிரத்துப் பதினாறாம் ஆண்டிலே புத்தர் தோன்றுவார்.

நல்லன நடைபெறும் (79 - 107)

அதன் பிறகு, பெரிய குள்த்தின் மதகாகிய சிறிய வழியே, மிகப்பெரிய வெள்ளமும் புகுவதுபோல, சிறிய செவி வழியே அளவிடுதற்கரிய நல்ல அறிவுரைகள் உள்ளத்தே புகும். அவற்றை நிறைந்த உவகையோடு மக்கள் ஏற்றுக் கொள்வர். கதிரவன் தோன்றும்போது அதன் ஒளியினைச் சூரியகாந்தக் கற்கள் மிகுதி யாக்கிக் காட்டும். அதனைப் போலவே புத்த ஞாயிறு தோன்றும்போது, கறுத்து இருள்நிறைந்த மனமாசு நீங்கி, அவன் பொலிவை மாந்தர் உள்ளம் பிரதிபலிக்கும் (மனமாசு நீங்கும்). திங்களும் ஞாயிறும் தீமை உறாமல் விளங்கும், ஓரிடத்தே தங்காது சுழன்று கொண்டே இருக்கக்கூடிய விண்மீன்கள் முறைப்படி நடக்கும். அதனால் மழை

வானம் பொய்யாது மாநிலம் வளம்படும்
ஊன்உடை உயிர்கள் உறுதுயர் காணா
வளிவலம் கொட்கும் மாதிரம் வளம்படும்
நளிஇரு முந்நீர் நலம்பல தரும்
கறவைகன்று ஆர்த்திக் கலநிறை பொழியும்
பறவை பயன்துய்த்து உறைபதி நீங்கா
விலங்கும் மக்களும் வெரூஉப்பகை நீங்கும்
கலங்குஅஞர் நரகரும் பேயும் கைவிடும்
கூனும் குறளும் ஊமும் செவிடும்
மாவும் மருளும் மன்உயிர் பெறாஅ
அந்நாள் பிறந்தவன் அருள்அறம் கேட்டோர்
இன்னாப் பிறவி இகந்தோர் ஆதலின்
போதி மூலம் பொருந்திய சிறப்பின்
நாதன் பாதம் நவைகெட ஏத்துதல்
பிறவி தோறும் மறவேன்; மடக்கொடி
மாதர் நின்னால் வருவன இவ்வூர்
ஏது நிகழ்ச்சி யாவும் பலஉள
ஆங்குஅவை நிகழ்ந்த பின்னர் அல்லது
பூங்கொடி மாதர் பொருள்உரை பொருந்தாய்
ஆதி முதல்வன் அருந்துயர் கெடுக்கும்
பாதபங் கயமலை பரசினர் ஆதலின்
ஈங்குஇவர் இருவரும் இளங்கொடி நின்னோடு
ஓங்குஉயர் போதி உரவோன் திருந்தடி
தொழுதுவலம் கொண்டு தொடர்வினை நீங்கிப்
பழுதுஇல் நன்னெறிப் படர்குவர் காணாய்

---

89. வானம் – மேகம்.
91. வளி – காற்று. கொட்கும் – வீசும். மாதிரம் – திசை.
93. ஆர்த்தி – உண்ணச் செய்து.
96. அஞர் – துன்பம்.
100. இகந்தோர் – கடந்தோர்.
102. நவை – குற்றம்.
109. பரசினர் – துதித்தனர்.
111. உரம் – அறிவு. உரவோன் – புத்தன்.

பெய்தலில் தப்பாது; மாநிலம் வளம்படும்; மக்கள் முதலிய உயிர்கள் துயர் அடையா. காற்று வலமாக வீசும்; நான்கு திசைகளும் செழுமையடையும். நீர் நிறைந்த கடலும் நலம் பல நல்கும். கறவைப் பசுக்கள் கன்று நன்றாக உண்ட பிறகு கலம் நிறையப் பால் தரும். பறவைகள் கனிகளையுண்டு தாம் வாழும் இடங்களை விட்டு நீங்காது மகிழ்ந்து வாழும். விலங்குகளும் மக்களும் அச்சமும் பகையும் நீங்குவர். நரகர் இனமும் பேய் இனமும் தம் கொடுந்தன்மையினை விட்டுவிடும். கூன், குட்டை, ஊமை, செவிடு, விலங்குத்தன்மை, மயக்கம் ஆகிய குறைகளை உயிர்கள் பெறமாட்டா. புத்தன் பிறக்கின்ற அக் காலத்திலே பிறந்து அவனுடைய அருள் அறம் கேட்டவர் கொடிய பிறவித் துன்பத்தைக் கடந்தவராவர். ஆதலால் போதிமரத்தின் அடியில் பொருந்தியிருக்கும் சிறப்பினையுடைய புத்ததேவனின் திருவுடிகளை, என் குற்றம் நீங்குமாறு போற்றுதலைப் பிறவிதோறும் நான் மறவேன்! இளங்கொடி போன்ற மணிமேகலையே! இவ்வூரில் உன் செயலால் விளையும் பயன்கள் பல உண்டு. அவை நிகழ்வுற்ற பிறகே அன்றி நீ அறவுரைகளின்பால் ஈடுபாடு கொள்ளமாட்டாய். (அவை நிகழ்ந்த பிறகு அறவுரைகளைக் கேட்பாயாக!).

மாதவியும் சுதமதியும் நன்னெறி சேர்வர் (108 – 113)

போக்குதற்கரிய துயரத்தைப் போக்கும் புத்ததேவனுடைய பாதபங்கய மலையை இவர்கள் இருவரும் வணங்கினர். ஆதலின் இளங்கொடி போன்றவளே! இவர்கள் இருவரும் உன்னோடும் கூடி, ஓங்கி உயர்ந்த போதிமரத்தின் அடியில் இருப்போனாகிய அறம்மிக்க புத்தனின் திருவடிகளை வலங்கொண்டு தொழுது, அதன் காரணமாக, தம்மைத் தொடர்கின்ற இருவினைகளிலிருந்தும் நீங்கிய மாசற்ற நல்வழியில் செல்வர். இதை நீ காண்பாய்!

ஆர்உயிர் மருந்தாம் அமுத சுரபிஎனும்
மாபெரும் பாத்திரம் மடக்கொடி பெற்றனை
மக்கள் தேவர் எனஇரு சார்க்கும்
ஒத்த முடிவின் ஓர்அறம் உரைக்கேன்
பசிப்பிணி தீர்த்தல் என்றே அவரும்
தவப்பெரு நல்லறம் சாற்றினர், ஆதலின்
மடுத்ததீக் கொளிய மன்உயிர்ப் பசிகெட
எடுத்தனள் பாத்திரம் இளங்கொடி தான்என்,

120. மடுத்த தீ – மிகுந்த தீ. கொளிய – கொளுத்தினாற் போன்ற.

பசிப்பிணி தீர்த்தலே அறம் (114 – 121)

மணிமேகலையே! ஆருயிர் மருந்தான உணவைப் பொழியும் அமுதசுரபி எனும் பாத்திரத்தினை நீ பெற்றுள்ளாய்! மக்கள், தேவர் என்னும் இருசாராார்க்கும் ஒத்த முடிவுடையதாகிய ஓர் அறம் சொல்வேன். பசி தீர்த்தல் ஒன்றே அவ் அறநெறி'' என இவ்வாறாக மிகப்பெரிய நல்லறத்தை அறவணார் கூறினார். இளங்கொடி போன்றவளாகிய மணிமேகலையும் மிகுந்த தீயினாலே கொளுத்தப்பெற்றதுபோன்று வருந்தும் உலகத்து உயிர்களின் பசிநோய் நீங்குமாறு அமுதசுரபி என்னும் பாத்திரத்தைத் தன் கையில் எடுத்தனள்.

13. ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை

மாபெரும் பாத்திரம் மடக்கொடிக்கு அருளிய
ஆபுத் திரன்திறம் அணியிழை கேளாய்:
வார ணாசிஓர் மறைஓம் பாளன்
ஆரண உவாத்தி அபஞ்சிகன் என்போன்
பார்ப்பனி சாலி காப்புக்கடை கழிந்து
கொண்டோன் பிழைத்த தண்டம் அஞ்சித்
தென்திசைக் குமரி ஆடிய வருவோள்
சூல்முதிர் பருவத்துத் துஞ்சுஇருள் இயவிடை
ஈன்ற குழவிக்கு இரங்காள் ஆகித்
தோன்றாத் துடவையின் இட்டனள் நீங்க,
தாய்இல் தூவாக் குழவிதுயர் கேட்டுஓர்
ஆவந்து அணைந்துஆங்கு அதன்துயர் தீர
போகாது எழுநாள் புறம்காத்து ஓம்ப,
வயனங் கோட்டில்ஓர் மறைஓம் பாளன்
இயவிடை வருவோன் இளம்பூதி என்போன்
குழவி ஏங்கிய கூஉக்குரல் கேட்டுக்
கழுமிய துன்பமொடு கண்ணீர் உகுத்துஆங்கு
ஆமகன் அல்லன் என்மகன் என்றே
காதலி தன்னொடு கைதொழுது எடுத்து
நம்பி பிறந்தான் பொலிகநம் கிளைஎனத்
தம்பதிப் பெயர்ந்து தமரொடும் கூடி
மார்புஇடை முந்நூல் வளையா முன்னர்
நாஇடை நன்னூல் நன்கனம் நவிற்றி
ஒத்துஉடை அந்தணர்க்கு ஒப்பவை எல்லாம்
நாத்தொலைவு இன்றி நன்கனம் அறிந்தபின்,

---

4. ஆரண உவாத்தி – வேதம் ஓதுவிப்பவன்.
5. காப்புக் கடை கழிந்து – கற்பொழுக்கம் நீங்கி.
6. தண்டம் – தண்டனை.
8. இயவிடை – வழியினிடத்தே.
10. துடவை – தோட்டம்.
11. தூவாக் குழவி – உண்ணாத குழந்தை.
25. ஒத்து – வேதம்.

13. ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை

அமுதசுரபி அருளிய ஆபுத்திரன் வரலாறு (1 – 2)

பெருமை மிகுந்த இப் பாத்திரத்தை உனக்கு அருளிச் செய்த ஆபுத்திரன் வரலாற்றைக் கேட்பாயாக!

பெற்ற குழந்தையை விட்டுச் சென்றாள் (3 – 10)

வாரணாசியில் ஓர் அந்தணன்; மறை ஓதுவிப்பவன்; அபஞ்சிகன் என்பது அவன் பெயர். அவனுடைய மனைவி சாலி. அவள் கற்புநெறியாகிய காவலின் எல்லையைக் கடந்து கணவனுக்குப் பிழை செய்தாள். அக் குற்றத்திற்குரிய தண்டனைக்கு அஞ்சித் தென்திசையில் குமரிக்கடல் ஆட வந்தாள். சூல் முதிர்ந்த நிலையில் இருந்த அவள் வழியிலே நள்ளிரவில் அனைவரும் தூங்கும் நேரத்தில் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். பெற்ற அக் குழந்தைமீது இரக்கமின்றி அதனை ஒரு தோட்டத்தில் கிடத்தி நீங்கினாள்.

பசு பாலூட்டிக் காத்தது (11 – 14)

தாயில்லாத அக்குழந்தை பசியால் துடித்து அழுதது. அக் குரல் கேட்டு அங்கு வந்த ஒரு பசு குழந்தையை நாவால் நக்கி, தன் மடிப் பால் சொரிந்து ஊட்டி அதன் துயரைத் தீர்த்தது. ஏழு நாள் எங்கும் அகலாது பசு அக் குழந்தையைக் காத்தது.

பூதி எடுத்து வளர்த்தான் (15 – 26)

வயனங்கோடு என்பது ஓர் ஊர்; அவ்வூரில் ஓர் அந்தணன்; அவன் வேதக் கலையை வளர்ப்பவன். இளம்பூதி என்பது அவன் பெயர். வழியிடையே வந்த அவன் இளங்குழந்தையின் ஏங்கிய அழுகுரல் கேட்டான். (அதனைக்கண்டு) துன்பத்தால் கலங்கிக் கண்ணீர் விட்டான். 'இக்குழந்தை பசுவின் குழந்தை அன்று; என் குழந்தை' என்று எடுத்து அணைத்தான். மனைவியோடு கடவுளைத் தொழுதான். 'நம்பி பிறந்துளான்; நம் சுற்றம் சிறக்க' எனத் தன் ஊர் வந்தான். உறவினரோடு மகிழ்ந்தான். சிறுவனுக்கு மார்பில் பூணூல் அணிவதற்கு முன்பே வேதங்களைப் பயிற்றுவித்தான். மறையோதுபவர்களான அந்தணர்க்கு ஏற்றதையெல்லாம் சிறுவன் நாப்பிறழ்ச்சியின்றி நன்றாகக் கற்றறிந்தான்.

அப்பதி தன்னுள்ஓர் அந்தணன் மனைவயின்
புக்கோன் ஆங்குப் புலைசூழ் வேள்வியில்
குரூஉத்தொடை மாலை கோட்டிடைச் சுற்றி
வெரூஉப்பகை அஞ்சி வெய்துயிர்த்துப் புலம்பிக்
கொலைநவில் வேட்டுவர் கொடுமரம் அஞ்சி
வலையிடைப் பட்ட மானே போன்றுஆங்கு
அஞ்சிநின்று அழைக்கும் ஆத்துயர் கண்டு
நெஞ்சுநடுக்கு உற்று நெடுங்கணீர் உகுத்துக்
கள்ள வினையில் கடுந்துயர் பாழ்பட
நள்இருள் கொண்டு நடக்குவன் என்னும்
உள்ளம் கரந்துஆங்கு ஒருபுடை ஒதுங்கி
அல்இடை ஆக்கொண்டு அப்பதி அகன்றோன்
கல்அதர் அத்தம் கடவா நின்றுழி,
அடர்க்குறு மாக்களொடு அந்தணர் எல்லாம்
கடத்திடை ஆவொடு கையகப் படுத்தி
ஆகொண்டு இந்த ஆர்இடைக் கழிய
நீமகன் அல்லாய் நிகழ்ந்ததை உரையாய்
புலைச்சிறு மகனே போக்கப் படுதிஎன்று,
அலைக்கோல் அதனால் அறைந்தனர் கேட்ப,
ஆட்டிநின்று அலைக்கும் அந்தணர் உவாத்தியைக்
கோட்டினில் குத்திக் குடர்புய்த் துறுத்துக்
காட்டிடை நல்ஆக் கதழ்ந்து கிளர்ந்துஓட,

---

28. புலை சூழ் வேள்வி – ஊன் தின்றலைச் செய்கின்ற யாகசாலை.
29. குரூஉ – நிறம் பொருந்திய, கோடு – கொம்பு
31 கொடுமரம் – வில்
38. அல் – இரவு
41. கட்டம் – அரிய வழி.
44. போக்கப்படுதி – விலக்கப்படுவாய்.
45 அலைக்கோல் – வருத்துதலைச் செய்யும் கோல்
47. குடர் புய்த்துறுத்து – குடலைப் பிடுங்கி.
48 கதழ்ந்து – விரைந்து

ஆபுத்திரன் பலிப் பசுவைக் கண்டான் (27 – 33)

(சிறுவன் வளர்ந்தான்; ஒருநாள்) அவ்வூரில் ஓர் அந்தணன் வீட்டுக்குள் நுழைந்தான். அங்கே, ஊன் தின்னுவதைக் கருதுகின்ற யாகசாலையைக் கண்டான். யாகத்தில் வெட்டப்படுவதற்காக ஒரு பசு வேள்விக் கம்பத்தில் கட்டப்பட்டிருந்தது. அதன் கொம்பில் நிறம் பொருந்திய மாலை சூட்டப்பட்டிருந்தது. பகையைக் கண்டு அஞ்சிப் பசு பெருமூச்செறிந்து வருந்தியது. கொலை புரியும் வேடருடைய வில்லுக்கு அஞ்சி ஓடி வலையிலகப்பட்ட மான்போல யாகப்பசு அச்சம் கொண்டு கதறியது.

நள்ளிரவில் கவர்ந்து சென்றான் (34 – 39)

அப் பசுவின் துயரம் கண்டு ஆபுத்திரன் மனம் நடுங்கினான்; மிகுதியான கண்ணீர் சொரிந்தான்; ''இப்பசுவினுடைய மிகுந்த துயர் நீங்குமாறு நள்ளிரவில் அவிழ்த்துச் செல்வேன்'' என்ற தன் நினைப்பை மறைத்துக் கொண்டு ஒருபக்கத்தே ஒதுங்கியிருந்தான். இரவில் பசுவைக் கைப்பற்றிக் கொண்டு அவ்வூரை விட்டு நீங்கினான்; பருக்கைக் கற்கள் நிறைந்த வழியில் நடந்து கொண்டிருந்தான்.

அந்தணர்கள் பிடித்து அடித்தனர் (40 – 45)

முரட்டுத்தன்மையுடைய காவலருடன் சென்ற அந்தணர்கள் காட்டுவழியில் ஆபுத்திரனைப் பசுவுடன் பிடித்தனர். ''எங்கள் பசுவைத் திருடிக் கொண்டு இந்த அரிய வழியே செல்லும் நீ அந்தண மகன் அல்லன்; நீச மகனானாய்! நடந்ததைச் சொல். இல்லையேல் உன் உயிரைப் போக்கி விடுவோம்'' என்று அவனைக் கோலினால் அடித்து வருத்தினர்.

பசு உவாத்தியைக் கொம்பால் குத்தி ஓடியது (46 – 48)

அவனை மிகவும் துன்புறுத்திக் கொண்டிருந்த பார்ப்பன உவாத்தியைப் பசு கொம்பினால் வயிற்றில் குத்தியது. குடலைப் பிடுங்கிக் கொம்பில் சுற்றிக் கொண்டு காட்டிடையே விரைந்தோடிச் சென்றது.

ஆபுத் திரன்தான் ஆங்குஅவர்க்கு உரைப்போன்
நோவன செய்யன்மின் நொடிவன கேண்மின்;
விடுநில மருங்கில் படுபுல் ஆர்ந்து
நெடுநில மருங்கின் மக்கட்கு எல்லாம்
பிறந்தநாள் தொட்டும் சிறந்ததன் தீம்பால்
அறம்தரு நெஞ்சோடு அருள்சுரந்து ஊட்டும்
இதனொடு வந்த செற்றம் என்னை
முதுமறை அந்தணிர் முன்னியது உரைமோ
பொன்அணி நேமி வலம்கொள்சக் கரக்கை
மன்உயிர் முதல்வன் மகன்எமக்கு அருளிய
அருமறை நன்னூல் அறியாது இகழ்ந்தனை
தெருமரல் உள்ளத்துச் சிறியை நீஅவ்
ஆமகன் ஆதற்கு ஒத்தனை அறியாய்
நீமகன் அல்லாய் கேள்என இகழ்தலும்,
ஆன்மகன் அசலன் மான்மகன் சிருங்கி
புலிமகன் விரிஞ்சி புரையோர் போற்றும்
நரிமகன் அல்லனோ கேச கம்பளன்
ஈங்குஇவர் நும்குலத்து இருடி கணங்கள்என்று
ஓங்குஉயர் பெருஞ்சிறப்பு உரைத்தலும் உண்டால்
ஆவொடு வந்த அழிகுலம் உண்டோ
நான்மறை மாக்காள் நன்னூல் அகத்துஎன,
ஆங்குஅவர் தம்முள்ஓர் அந்தணன் உரைக்கும்
ஈங்குஇவன் தன்பிறப்பு யான்அறி குவன்என
நடவை வருத்தமொடு நல்கூர் மேனியள்
வடமொழி யாட்டி மறைமுறை எய்திக்

---

50. நொடிவன – சொல்லுவனவற்றை
55. செற்றம் – பகைமை.
56. முன்னியது – எண்ணியது.
58. மன்னுயிர் முதல்வன் – திருமால். மகன் – பிரமன்.
60. தெருமரல் – சுழற்சி.
64. புரையோர் – மேலோர்.
72. நடவை – வழி.

பசு உங்கட்கு என்ன கேடு செய்தது? (49 – 56)

ஆபுத்திரன் அந்தணர்களை நோக்கிச் சொன்னான்: ''பிற உயிர்கள் வருத்தமடையுமாறு துன்பம் செய்யாதீர்! நான் சொல்வதைக் கேளுங்கள்! மேய்தற்கு என்று விடப்பட்ட புறம்போக்கு நிலத்தில் உண்டாகும் புல்லை மேய்கிறது. நாம் பிறந்த நாள் முதல் சிறந்த தன் இனிய பாலினை அறம் வளர் உள்ளத்தோடு அருள் பெருக ஊட்டுகிறது. இப்பசுவிடம் உமக்குச் சினம் உண்டானதேன்? பழமையான வேதங்களை அறிந்த அந்தணர்களே! உங்கள் எண்ணத்தைச் சொல்லுங்கள்'' என்றான்.

நீ எம் மகன் அல்லன் பசு மகன் (57 – 62)

அதற்கு அவ் வந்தணர்கள், ''அழகிய பொன் வண்ணச் சக்கரப்படையை வலது கையில் ஏந்தியிருக்கும் திருமால் உயிர்கட்கெல்லாம் முதல்வன். அவன் மகன் பிரமன். அவன் எங்களுக்கு அருளிய வேதத்தை அறியாது இகழ்ச்சியாகப் பேசினாய். தெளிவற்ற உள்ளமுடைய சிறுவன் நீ; பசுவுக்கு மகனாக இருப்பதற்கே நீ தகுதியுடையவன். அறியாதவனே! நீ எம் மகன் ஆகவேமாட்டாய்'' என இகழ்ச்சியாகப் பேசினர்.

பெரிய முனிவர்களெல்லாம் விலங்கின் மக்களே! (63 – 69)

ஆ மகன் என்று தன்னை இகழ்ந்த அந்தணரிடம் ஆபுத்திரன், ''நீங்கள் போற்றும் அசலன் என்னும் முனிவன் ஒரு பசுவின் மகன்; சிருங்கி முனிவனோ மானின் மகன்; விரிஞ்சி முனிவன் புலியின் மகன்; மேலோர் போற்றும் கேசகம்பளன் நரியின் மகன் அல்லவா? இவர்களெல்லாம் உம் குலத்து முனிவர் கூட்டம் என்று மிகப் பெருமையோடு பாராட்டுகிறீர்களே! அப்படியிருக்க நான்மறை அந்தனர்களே! பசுப்பிறப்பில் உங்கட்கு இழிவென்ன வந்தது?'' எனக் கேட்டான்.

அந்தணன் ஆபுத்திரன் பிறப்பைச் சொன்னான் (70 – 91)

அங்கிருந்த அந்தணர்களில் ஒருவன் சொன்னான்: ''இவன் பிறப்பை நான் அறிவேன். வழி நடந்த வருத்தத்தோடு இளைத்த மேனியுடைய ஒரு பார்பனத்தி, வேதவிதிப்படியே சென்று

குமரி பாதம் கொள்கையின் வணங்கித்
தமரில் தீர்ந்த சாலிஎன் போள்தனை
யாது நின்ஊர் ஈங்குஎன் வரவுஎன
மாமறை யாட்டி வருதிறம் உரைக்கும்
வார ணாசிஓர் மாமறை முதல்வன்
ஆரண உவாத்தி அரும்பெறல் மனைவியான்
பார்ப்பார்க்கு ஒவ்வாப் பண்பின் ஒழுகிக்
காப்புக் கடைகழிந்து கணவனை இழந்தேன்
எறிபயம் உடைமையின் இரியல் மாக்களொடு
தென்கண் குமரி ஆடிய வருவேன்
பொன்தோர்ச் செழியன் கொற்கையம் பேர்ஊர்க்
காவதம் கடந்து கோவலர் இருக்கையின்
ஈன்ற குழவிக்கு இரங்கேன் ஆகித்
தோன்றாத் துடவையின் இட்டனன் போந்தேன்
செல்கதி உண்டோ தீவினை யேற்குஎன்று
அல்லல்உற்று அழுத அவள்மகன் ஈங்குஇவன்
சொல்லுதல் தேற்றேன் சொல்பயம் இன்மையின்
புல்லல்ஓம் பன்மின் புலைமகன் இவன்என
ஆபுத் திரன்பின்பு அமர்நகை செய்து
மாமறை மாக்கள் வருகுலம் கேண்மோ
முதுமறை முதல்வன் முன்னர்த் தோன்றிய
கடவுள் கணிகை காதலஞ் சிறுவர்
அருமறை முதல்வர் அந்தணர் இருவரும்
புரிநூல் மார்பீர் பொய்உரை யாமோ
சாலிக்கு உண்டோ தவறுஎன உரைத்து
நான்மறை மாக்களை நகுவனன் நிற்ப,
ஓதல் அந்தணர்க்கு ஒவ்வான் என்றே
தாதை பூதியும் தன்மனை கடிதர
ஆகவர் கள்வன் என்று அந்தணர் உறைதரும்
கிராமம் எங்கணும் கடிஞையில் கல்இட

---

82 எறி பயம் - அடித்தலாலுண்டாகும் அச்சம்
இரியல் மாக்கள் - விரைந்து செல்லும் மக்கள்
95 கடவுள் கணிகை - திலோத்தமை.
101 கடிதர - நீக்க 103 கடிஞை - பிச்சைப் பாத்திரம்

குமரிமுனைத் தெய்வத்தின் பாதங்களை முறையோடு வணங்கித் தன் உறவினின்றும் நீங்கி வந்து கொண்டிருந்தாள். அவளை, ''உம் ஊர் எது? இங்கு வரக் காரணம் என்ன?'' எனக் கேட்டேன். அவள் தன் வரலாற்றை உரைத்தாள். 'காசியில் ஓர் அந்தணன்; வேதம் ஓதுவிக்கும் ஆசிரியன்; நான் அவனுடைய மனைவி. பார்ப்பனர்க்கு ஒவ்வாத வழியிலே நடந்தேன்; கற்புத் தவறினேன். என் கணவனை இழந்தேன். அடித்துத் துரத்துவார்கள் என்ற பயம் ஏற்பட்டது. அதனால் மக்களுடன் சேர்ந்து தெற்கே உள்ள குமரித் துறையில் ஆட வந்தேன். பொற்றேர்ச்செழியன் ஊரான கொற்கையைத் தாண்டிக் காத தூரம் சென்றேன். அங்கே இடையர் இருப்பிடத்தில் குழந்தை பிறந்தது. பெற்றெடுத்த குழந்தையிடம் இரக்கமில்லாமல் அங்கே கண்ணில்பட்ட ஒரு தோட்டத்தில் போட்டுவிட்டு வந்தேன். தீவினை செய்த எனக்கு நற்கதியும் உண்டோ?' எனத் துன்புற்றுச் சொல்லி அழுதாள். இவன் அவள் மகன். இதைச் சொல்லுவதால் பயனில்லை என இதுவரை சொல்லாதிருந்தேன். இவன் புலைமகன். இவனைத் தொடாதீர்கள்'' என்றான்.

ஆபுத்திரன் அந்தணரை எள்ளி நகையாடினான் (92 – 99)

இதுகேட்ட ஆபுத்திரன் பெருஞ்சிரிப்புடன், ''அந்தணர்களே! வேதங்களை உணர்ந்தவர்கள் (முனிவர்கள்) தோன்றிய குலமரபினைக் கேளுங்கள்! வேதங்கட்கு முதல்வனான பிரம்மனின் தேவதாசியாகிய திலோத்தமையின் மக்களன்றோ அரியமறை முதல்வர் என நீவிர் போற்றுகின்ற வசிட்டரும், அகத்தியரும். பூணூல் அணிந்துள்ளவர்களே! நான் சொல்வது பொய்யா? அப்படியிருக்கச் சாலிக்கு மட்டும் என்ன தவறு?'' எனச் சொல்லி அந்தணர்களை எள்ளி நகையாடி நின்றான்.

வளர்த்த தந்தை வெளியேற்றினான் (100 – 103)

'இவன் வேதம் ஓதும் அந்தணர் குடிக்குப் பொருத்தமற்றவன்' என்று அவனை வளர்த்த தந்தை பூதியும், ஆபுத்திரனை வீட்டை விட்டு வெளியேற்றினான். 'இவன் வேள்விப் பசுவைத் திருடிய கள்வன்' என அந்தணர் வாழ்ந்த ஊரிலெல்லாம் இவனுடைய பிச்சைப் பாத்திரத்தில் கற்களை இட்டனர். (சோறு போடாவிட்டாலும் பரவாயில்லை; பாவிகள் கற்களைப் போட்டனர்).

மிக்க செல்வத்து விளங்கியோர் வாழும்
தக்கண மதுரை தான்சென்று எய்தி,
சிந்தா விளக்கின் செழுங்கலை நியமத்து
அந்தில் முன்றில் அம்பலப் பீடிகைத்
தங்கினன் வதிந்துஅத் தக்கணப் பேர்ஊர்
ஐயக் கடிஞை கையின் ஏந்தி
மைஅறு சிறப்பின் மனைதொறும் மறுகிக்
காணார் கேளார் கால்முடப் பட்டோர்
பேணுநர் இல்லோர் பிணிநடுக் குற்றோர்
யாவரும் வருகஎன்று இசைத்துஉடன் ஊட்டி
உண்டுஒழி மிச்சில்உண்டு ஒடுதலை மடுத்துக்
கண்படை கொள்ளும் காவலன் தான்என்.

105. தக்கண மதுரை – தென் திசைக்கண் உள்ள மதுரை.
106. சிந்தா விளக்கு - கலைமகள், நியமம் – கோயில்.
109. ஐயம் – பிச்சை.
110. மை – குற்றம். மறுகி – சுழன்று.
114. மிச்சில் – மீதி · தலைமடுத்து – தலையணையாகக் கொண்டு.

தக்கண மதுரை அடைந்தான் (104 – 110)

அவ்வூரினின்றும் நீங்கிப் பெருஞ்செல்வர்கள் வாழும் தென்மதுரையைச் சென்றடைந்தான். சிந்தாதேவியாகிய கலைமகள் கோயில் வாயிலில் இருந்த மன்றத்தில் தங்கினான். பிச்சைப் பாத்திரத்தைக் கையிற் கொண்டு அப்பேரூர் வீடுகளில் பிச்சையெடுத்தான்.

பிறர் பசி போக்குவதை அறமாகக் கொண்டான் (111 – 115)

'குருடர், செவிடர், முடவர், ஆதரவற்றோர், பிணியாளர் யாவரும் வாருங்கள்' எனக் கூவி அழைத்து அவர்களை முதலில் உண்ணச் செய்து, அவர்கள் உண்டு மிஞ்சியதைத் தானுண்டு, பின்னர் அவ் வோட்டினையே தலைக்கு அணையாக வைத்துப் படுத்து உறங்கி வந்தான் அறங்காவலனாகிய ஆபுத்திரன்.

14. பாத்திர மரபு கூறிய காதை

ஆங்குஅவற்கு ஒருநாள் அம்பலப் பீடிகைப்
பூங்கொடி நல்லாய் புகுந்து கேளாய்:
மாரி நடுநாள் வல்இருள் மயக்கத்து
ஆரிடை உழந்தோர் அம்பலம் மரீஇத்
துயில்வோன் தன்னைத் தொழுதனர் ஏத்தி
வயிறுகாய் பெரும்பசி மலைக்கும் என்றலும்
ஏற்றுஊண் அல்லது வேற்றூண் இல்லோன்
ஆற்றுவது காணான் ஆர்அஞர் எய்த,
கேள்இது மாதோ கெடுகநின் தீதுஎன
யாவரும் ஏத்தும் இருங்கலை நியமத்துத்
தேவி சிந்தா விளக்குத் தோன்றி
ஏடா அழியல் எழுந்துஇது கொள்ளாய்
நாடுவறங் கூரினும்இவ் ஓடுவறம் கூராது
வாங்குநர் கையகம் வருந்துதல் அல்லது
தான்தொலைவு இல்லாத் தகைமையது என்றே
சிந்தா தேவி செழுங்கலை நியமத்து
தன்கைப் பாத்திரம் அவன்கைக் கொடுத்தலும்
நந்தா விளக்கே நாமிசைப் பாவாய்
வானோர் தலைவி மண்ணோர் முதல்வி
ஏனோர் உற்ற இடர்களை வாய்எனத்
தான்தொழுது ஏத்தித் தலைவியை வணங்கி,
ஆங்குஅவர் பசிதீர்த்து அந்நாள் தொட்டு
வாங்குகை வருந்த மன்உயிர் ஓம்பலின்
மக்களும் மாவும் மரம்சேர் பறவையும்

---

3. வல் இருள் – மயக்கும் இருள்
6. மலைக்கும் – வருத்தும்.
7. ஏற்று ஊண் – பிச்சையெடுத்து உண்ணும் உணவு
10. நியமம் - கோயில்.
12. அழியல - வருந்தாதே.
13. வறம் – பஞ்சம்.
18. நந்தா – கெடாத.
24. மா – விலங்கு.

14. பாத்திர மரபு கூறிய காதை

ஆபுத்திரன் அருந்துயரம் (1 – 8)

பூங்கொடி போன்றவளே! ஆபுத்திரனுக்கு அவன் தங்கியிருந்த அம்பலப்பீடிகையில் நேர்ந்ததைச் சொல்கிறேன் கேள்! ஒருநாள் மழைக்கால நள்ளிரவில் செறிந்த இருளில், வழி நடந்து துன்பமடைந்த சிலர் அம்பலத்திற்கு வந்தனர். தூங்கிக் கொண்டிருந்த ஆபுத்திரனைத் தொழுது வணங்கி, 'வயிறு காய்ந்து பெரும்பசி வருத்துகின்றது' என்றனர். பிச்சையெடுத்து உண்ணும் உணவைத் தவிர வேறு உணவேதும் தன்னிடம் இல்லாத ஆபுத்திரன் அவர்கள் பசித்துயரைப் போக்கி உதவ வழியொன்றுமில்லாது பெரும் வருத்தம் உற்றான். (அப்போது நிகழ்ந்ததை மணிமேகலையே! கேள்!)

ஆபுத்திரன் பெற்ற பாத்திரம் (9 – 16)

யாவரும் போற்றும் அக் கோவிலிலிருந்த சிந்தாதேவி தோன்றி ''ஆபுத்திர! உன் துன்பம் ஒழிவதாகுக! வருந்தாதே! எழுந்திரு; இதனைப் பெற்றுக் கொள்; நாடு வறண்டாலும் இந்த ஓடு வறுமையுறாது; வாங்குவோர் கை அலுத்துப்போகுமே அல்லாது, தான் அலுக்காது கொடுக்கும் தன்மையுடையது'' எனச் சொல்லி சிந்தாதேவி தன் கையிலிருந்த பாத்திரத்தை அவன் கையில் கொடுத்தாள்.

சிந்தாதேவியைச் சிந்தை குளிர வணங்கினான் (17 – 21)

ஆபுத்திரன் மகிழ்வுடன், ''சிந்தாதேவியே! இக்கலைக் கோயிலில் ஒளிவிடும் நந்தாவிளக்கே! நா மகளே! வானோர் தலைவியே! உலகோர் முதல்வியே! பிறர் துயர் நீக்கும் பெருந்தெய்வமே!'' எனத் தேவியின் திருவடிகளைத் தொழுது போற்றி வணங்கினான்.

பழமரம் சூழ்ந்த பறவைபோல மக்கள் சூழ்ந்தனர் (22 – 27)

அப்பாத்திரத்திலிருந்த உணவைக் கொண்டு ஆபுத்திரன் முதலில் அங்கு வந்தவர் பசியை நீக்கினான். அந் நாள் தொடங்கி வாங்குகின்ற கை வருந்துமளவுக்கு (போதும் போதும் என்று சொல்லுமளவுக்கு) உணவு வழங்கி உலக உயிர்களின் பசி தீர்க்கும் அருட்பணி செய்து வந்தான். அதனால் மக்கள் மட்டுமன்றி, விலங்குகளும், மரங்களில்

தொக்குஉடன் ஈண்டிச் சூழ்ந்தன விடாஅ
பழுமரத்து ஈண்டிய பறவையின் எழுஉம்
இழும்என் சும்மை இடைஇன்று ஒலிப்ப,
ஈண்டுநீர் ஞாலத்து இவன்செயல் இந்திரன்
பாண்டு கம்பளம் துளக்கியது ஆகலின்
தளர்ந்த நடையின் தண்டுகால் ஊன்றி
வளைந்த யாக்கைஓர் மறையோன் ஆகி
மாஇரு ஞாலத்து மன்உயிர் ஒம்பும்
ஆர்உயிர் முதல்வன் தன்முன் தோன்றி
இந்திரன் வந்தேன் யாதுநின் கருத்து
உன்பெருந் தானத்து உறுபயன் கொள்கென
வெள்ளை மகன்போல் விலாஇற நக்குஈங்கு
எள்ளினன் போம்என்று எடுத்துஉரை செய்வோன்
ஈண்டுச் செய்வினை ஆண்டுநுகர்ந் திருத்தல்
காண்தகு சிறப்பின்நும் கடவுளர் அல்லது
அறம்செய் மாக்கள் புறம்காத்து ஓம்புநர்
நல்தவம் செய்வோர் பற்றுஅற முயல்வோர்
யாவரும் இல்லாத் தேவர்நல் நாட்டுக்கு
இறைவன் ஆகிய பெருவிறல் வேந்தே
வருந்தி வந்தோர் அரும்பசி களைந்துஅவர்

---

25. தொக்குஉடன் ஈண்டி – ஒருமிக்கச் சேர்ந்து திரண்டு.
26. ஈண்டிய – வந்து கூடிய.
27. சும்மை – ஒலி. இடையின்று – இடையீடு இல்லாமல.
29. துளக்கியது – நடுங்கச் செய்தது.
36. வெள்ளை மகன் – பயனில்லாச் சொல்லையுடையவன்.
38. ஈண்டு – இவ்வுலகு. ஆண்டு – அவ்வுலகு.
40. புறங்காத்து ஓம்பல் – பாதுகாத்தல்.

வாழும் பறவைகளும் ஒருங்கே திரண்டு அவனை விடாது தொடர்ந்து சூழ்ந்தன. பழுத்த மரத்தில் பறவைகள் கூடி ஒலி எழுப்புவதுபோல ஆபுத்திரனைச் சுற்றி இரப்பவர் எழுப்பிய ஒலி இடையறாது எழுந்தது.

இந்திரன் வந்தேன்! என்ன வேண்டும்? (28 – 35)

நீர் நிறைந்த கடலால் சூழப்பெற்றுள்ள இவ்வுலகில் ஆபுத்திரன் செய்த அறச்செயல், இந்திரனின் பாண்டு கம்பளத்தை நடுங்கச் செய்தது. (இந்திரனின் இருக்கையிலிருக்கும் வெள்ளைக் கம்பளம் உலகில் ஈகையிற் சிறந்த பௌத்தர் தோன்றினாலும் அவர்கட்கு ஏதேனும் துன்பம் நேரிட்டாலும் நடுங்குமாம். அக் குறிப்பால் அவற்றை அறிந்து இந்திரன் வந்து அவர்கட்கு வேண்டிய வரங்களைத் தருவானாம்!) கம்பளம் நடுங்கியதால் ஆபுத்திரனின் அறச்செயலை அறிந்த இந்திரன், தளர்ந்த நடையுடையவனாக, தடியினை ஊன்றிக் கொண்டு, வளைந்த உடலுடைய ஓர் அந்தணன் வடிவு கொண்டான். இப் பெருவுலகில் மன்னுயிரைப் பசிப்பிணியினின்று காக்கும் அறமுதல்வனாகிய ஆபுத்திரன்முன் தோன்றினான். ''ஆபுத்திரா! இந்திரன் வந்துளேன்! சோறுதரும் உன் அறச் செயலின் பயனை ஏற்றுக் கொள். உன் எண்ணம் என்ன? (உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள்! தருகிறேன்)'' என்றான்.

உன் நாட்டில் பசி நீங்கி ஒளிவிடும் முகத்தைப் பார்க்க முடியுமா? (36 – 48)

ஆபுத்திரன் வெள்ளை உள்ளத்தோடு விலா வெடிக்கச் சிரித்தான். ''இந்திர! நீங்கள் போகலாம்'' என்றவன் மேலும் சொன்னான். ''இவ்வுலகத்தே செய்துள்ள நல்வினை தீவினைகளின் பயன்களை, அங்கே இருந்து அனுபவித்துக் கொண்டிருக்கும் (பெருமை வாய்ந்ததே) உம் போன்றோர் வாழும் தெய்வ உலகம். அது தவிர அங்கு வேறு என்ன உள்ளது? அறம்செய் மக்கள்; பிற உயிர்களைப் பேணிக் காப்பவர்; நல்ல தவம் செய்வோர்; பற்றினை அறுத்துக் கொள்ள முயல்வோர் இவர்கள் எவருமே இல்லாத தேவர் நாட்டுக்குத் தலைவனாயுள்ள பேராற்றல் மிக்கவனே! என்னுடைய இப்பாத்திரம் வருந்தி வந்தவரின் பொறுத்தற்கரிய பசியைப் போக்கும்.

திருந்துமுகம் காட்டும்என் தெய்வக் கடிஞை
உண்டி கொல்லோ உடுப்பன கொல்லோ
பெண்டிர் கொல்லோ பேணுநர் கொல்லோ
யாவைஈங்கு அளிப்பன தேவர்கோன் என்றலும்,
புரப்போன் பாத்திரம் பொழிந்துஊண் சுரந்துஈங்கு
இரப்போர்க் காணாது ஏமாந் திருப்ப
நிரப்புஇன்று எய்திய நீள்நிலம் அடங்கலும்
பரப்பு நீரால் பல்வளம் சுரக்கென
ஆங்குஅவன் பொருட்டால் ஆயிரம் கண்ணோன்
ஓங்குஉயர் பெருஞ்சிறப்பு உலகோர்க்கு அளித்தலும்,
பன்னீ ராண்டு பாண்டிநல் நாடு
மன்உயிர் மடிய மழைவளம் இழந்தது
வசித்தொழில் உதவ மாநிலம் கொழுப்பப்
பசிப்புஉயிர் அறியாப் பான்மைத்து ஆகலின்
ஆர்உயிர் ஓம்புநன் அம்பலப் பீடிகை
ஊண்ஒலி அரவம் ஒடுங்கிய தாகி
விடரும் தூர்த்தரும் விட்டேற் றாளரும்
நடவை மாக்களும் நகையொடு வைகி
வட்டும் சூதும் வம்பக் கோட்டியும்
முட்டா வாழ்க்கை முறைமைய தாக,
ஆபுத் திரன்தான் அம்பலம் நீங்கி,
ஊர்ஊர் தோறும் உண்போர் வினாஅய்
யார்இவன் என்றே யாவரும் இகழ்ந்துஆங்கு

---

51. நிரப்பு – வறுமை.
53. ஆயிரங்கண்ணோன் – இந்திரன்.
57. வசி – மழை.
58. பசிப்பு – பசி.
61. விடர் – தீய நடையுடைய காமுகர். தூர்த்தர் – பரத்தையை நுகரும் காமுகர்.
விட்டேற்றாளர் – இகழ்ந்து கடுஞ்சொல் சொல்லுவோர்.
62. நடவை – வழி.
63. வம்பக் கோட்டி – பயனில சொல் சொல்லுவோர் கூட்டம்.
64. முட்டா வாழ்க்கை – குறையாத வாழ்க்கை.

பசியோடு சோர்ந்திருந்த முகத்தில் அப்பசி தீர்ந்ததும் ஓர் ஒளி தோன்றுமே! அது உன் தெய்வ உலகத்தில் உண்டா? (பசியாறியோர் இனிய முகம் பார்க்கும் இன்பம் விண்ணுலக இன்பத்தினும் சிறந்தது). தேவர் தலைவனே! இங்கு நீ எனக்கு என்ன தரப்போகிறாய்? உணவா, உடையா, பெண்டிரா, என்னைப் பேணும் நண்பரா? யாவை? என்றான்.'' (இவையெல்லாம் பசியாறியோர் இனிய முகம் பார்க்கும் இன்பத்துக்கு ஈடாகுமா? அவ்வின்பம் விண்ணுலகில் இல்லையே!)

இந்திரன் வளம் பெருக்கி வறுமை நீக்கினான் (49 – 54)

இதனால் சினமுற்ற இந்திரன், உயிர்களின் பசியைப் போக்கும் ஆபுத்திரனின் பாத்திரத்தில் உணவு பெருகிச் சுரந்தாலும், அதைப் பெறுவதற்கு இரப்போர் இல்லாமல் இருக்க உலகெங்கும் பெருமழை பெய்யச் செய்து எல்லா வளங்களும் பெருகி வறுமை இல்லாது செய்தான். (ஆபுத்திரன் தன்னை இகழ்ந்தமையால் இந்திரன் உலகில் பெருவளங்களைத் தந்தான். இந்திரன் உலகோர்க்குப் பெருஞ் சிறப்பளித்தான். இரப்போர் இல்லை; அமுத சுரபி அன்னம் பொழிந்தது. கொள்வோர் இல்லை. அதனால் ஆபுத்திரன் ஏமாற்றமடைந்தான்).

அம்பலம் வெறுமையானது (55 – 64)

பாண்டிய நாடு பன்னிரண்டு ஆண்டுகள் உயிர்களெல்லாம் மடியுமாறு மழை வளம் இழந்திருந்தது. இப்போது மழை வளம் பெருகியது. மாநிலம் பெருஞ்செழிப்புற்றது. அதனால் உயிர்கள் போதிய விளைவைப் பெற்றுப் பசி இன்னதென அறியாத நிலை உண்டாயிற்று. உயிர்களைப் பாதுகாத்து வந்த ஆபுத்திரனிருந்த மன்றத்தில் உணவு கேட்டு வருவோர் ஒலி இல்லாதாயிற்று. அம்பலம் காமுகரும், பரத்தரும், சுற்றி அலைபவரும், வழிப்போக்கரும் தங்கியிருக்கும் இடமாயிற்று. உருண்டை உருட்டுவோர், சூதாடுவோர், வீண்பேச்சுப் பேசுவோர் நிறைந்திருக்கும் நிலைமையானது.

ஆபுத்திரன் வெளியேறினான் (65 – 72)

ஆபுத்திரன் அம்பலத்தை விட்டு அகன்றான். ஊர் ஊராகச சென்று, ''பசியால் வருந்தி உணவு வேண்டுவோர் உண்டோ?'' என்று கேட்டுத் திரிந்தான். 'எங்கட்குச் சோறு தர இவன் யார்?'' என அனைவரும் இகழ்ந்தனர்.

அருந்தே மாந்த ஆர்உயிர் முதல்வனை
இருந்தாய் நீயோ என்பார் இன்மையின்
திருவின் செல்வம் பெருங்கடல் கொள்ள
ஒருதனி வரூஉம் பெருமகன் போலத்
தானே தமியன் வருவோன் தன்முன்,
மாநீர் வங்கம் வந்தோர் வணங்கிச்
சர்வக நல்நாட்டுத் தண்பெயல் மறுத்தலின்
ஊன்உயிர் மடிந்தது உரவோய் என்றலும்,
அமரர்கோன் ஆணையின் அருந்துவோர்ப் பெறாது
குமரி மூத்தஎன் பாத்திரம் ஏந்தி
அங்குஅந் நாட்டுப் புகுவதுஎன் கருத்துஎன
வங்க மாக்களொடு மகிழ்வுடன் ஏறிக்
கால்விசை கடுகக் கடல்கலக் குறுதலின்
மால்இதை மணிபல் லவத்திடை வீழ்த்துத்
தங்கியது ஒருநாள் தான்ஆங்கு இழிந்தனன்
இழிந்தோன் ஏறினன் என்றுஇதை எடுத்து
வழங்குநீர் வங்கம் வல்இருள் போதலும்,
வங்கம் போயபின் வருந்துயர் எய்தி
அங்கு வாழ்வோர் யாவரும் இன்மையின்
மன்உயிர் ஓம்பும்இம் மாபெரும் பாத்திரம்
என்உயிர் ஓம்புதல் யானோ பொறேஎன்
தவம்தீர் மருங்கில் தனித்துயர் உழந்தேன்

68. அருந்தேமாந்த – பிறர் உண்பதைக் காண ஆசைப்பட்ட.
71. பெருமகன் – அரசன்; செல்வன்.
73. வங்கம் – கப்பல்.
81. மால் – பெரிய. இதை – கப்பற் பாய்.
82. இழிந்தனன் – இறங்கினான்.

பிறர் உண்பதைக் காண ஆசைப்பட்ட உயிர் முதல்வனாகிய ஆபுத்திரனை, ''நீ இங்கு இருக்கிறாயா?'' என்று கேட்கக்கூட ஆளில்லை. ஆதலின், தன் செல்வமெல்லாம் பெரிய கடல் கொண்டு விட, தன்னந்தனியனாக வந்துகொண்டிருக்கின்ற ஒரு செல்வனைப் போல அவன் சென்று கொண்டிருந்தான்.

மரக்கலம் ஏறினான் (73 - 79)

ஒருநாள், கடலில் மரக்கலத்திலிருந்து இறங்கிய சிலர் அவனை வணங்கினர். ''சாவக நாட்டில் மழை இல்லை. அதனால் உயிர்கள் பசியால் மடிகின்றன'' என்றனர். இந்திரன் ஆணையால் என் பாத்திர உணவை உண்பவர் இல்லாதாயினர். கன்னிப் பெண் வறிதே மூத்தது போன்றுள்ள இப்பாத்திரத்தை ஏந்தித் திரிகிறேன். இனிச் சாவக நாட்டுக்குச் செல்வது என் எண்ணம் என்று மரக்கலத்தில் ஏறிச் சாவக நாடு செல்லும் மக்களோடு மகிழ்ச்சியோடு சென்றான்.

மணிபல்லவத்தில் இறங்கினான் (80 - 84)

காற்று வேகமாக வீசியது; கடல் கலங்கியது; அதனால் பாயை இறக்கி மணிபல்லவத்தில் கலத்தை நிறுத்தினர். கலம் அங்கு ஒருநாள் தங்கியது. ஆபுத்திரன் அங்குக் கரையில் இறங்கியிருந்தான். இறங்கியவன் ஏறிவிட்டதாக நினைத்து மாலுமி பாயையுயர்த்தியதால் இரவில் மரக்கலம் கடலில் சென்று விட்டது.

ஆபுத்திரன் புலம்பினான் (85 - 90)

மரக்கலம் சென்றதையறிந்து ஆபுத்திரன் பெருந்துயரடைந்தான். அத் தீவில் வாழ்பவர் எவருமில்லை. ஆதலால், ''உயிர்களைக் காக்க வேண்டிய இப்பாத்திரம் என்னுயிரை மட்டும் காத்தலை நான் பொறுக்க மாட்டேன். இப்பாத்திரதத்தைக் கொண்டு உதவுகின்ற தவப்பயன் என்னை விட்டு நீங்கி விட்டதால் பெருந்துயருள் ஆழ்ந்துளேன். ஏற்போரில்லாது இப்பாத்திரத்தை நான் சுமத்தல் வீண்'' என்று புலம்பினான்.

சுமந்துஎன் பாத்திரம் என்றனன் தொழுது
கோமுகி என்னும் கொழுநீர் இலஞ்சியின்
ஓர்யாண்டு ஒருநாள் தோன்றுஎன விடுவோன்
அருள்அறம் பூண்டுஆங்கு ஆர்உயிர் ஓம்புநர்
உளர்எனில் அவர்கைப் புகுவாய் என்றுஆங்கு
உண்ணா நோன்போடு உயிர்பதிப் பெயர்ப்புழி,
அந்நாள் ஆங்குஅவன் தன்பால் சென்றேன்
என்உற் றனையோ என்றுயான் கேட்பத்
தன்உற் றனபல தான்எடுத்து உரைத்தனன்
குணதிசைத் தோன்றிக் கார்இருள் சீத்துக்
குடதிசைச் சென்ற ஞாயிறு போல
மணிபல் லவத்திடை மன்உடம்பு இட்டுத்
தணியா மன்உயிர் தாங்கும் கருத்தொடு
சாவகம் ஆளும் தலைத்தாள் வேந்தன்
ஆவயிற்று உதித்தனன் ஆங்குஅவன் தான்என்,

91. கொழுநீர் – நிறைந்த நீர். இலஞ்சி – பொய்கை.
93. ஓம்புநர் – பாதுகாப்போர்.
99. சீத்து – நீக்கி.
103. தாள் – முயற்சி. தலைத்தாள் – மிக்க முயற்சி

ஆபுத்திரன் உயிர் விட்டான் (90 – 95)

பின்னர், அதனைத் தொழுது, நீர் நிறைந்த கோமுகி என்னும் பொய்கையில், ''ஆண்டுக்கு ஒருமுறை தோன்றுக. அருளறம் பூண்டு, உயிர்களைப் பாதுகாக்கும் நல்லார் எவரேனும் உளர் எனில் அவர் கைப்புகுக'' எனச் சொல்லி விட்டான். உண்ணா நோன்பிருந்து உயிர் விட்டான்.

சாவக நாட்டில் பசு வயிற்றில் பிறந்தான் (96 – 104)

அவன் உயிரை விட்ட அந் நாளில் நானும் அங்கே சென்றேன். 'உனக்கு என்ன நேர்ந்தது?' என்று அவனிடம் கேட்டேன். அவன் தானுற்ற பல துயரங்களைச் சொன்னான். கிழக்கே தோன்றி, கரிய இருளைப் போக்கி, மேற்கே மறையும் பகலவனைப்போல ஆபுத்திரன் மணிபல்லவத்தில் தன் உடலை விட்டான்; மன்னுயிர் காக்கும் கருத்துடன் அவனுடைய உயிர் சாவக நாட்டை ஆளுகின்ற மிக்க முயற்சி உடைய மன்னனுடைய பசுவின் வயிற்றில் புகுந்து மகவாய்ப் பிறந்தது.

15. பாத்திரம் கொண்டு பிச்சை புக்க காதை

இன்னும் கேளாய் இளங்கொடி மாதே:
அந்நாள் அவனை ஓம்பிய நல்ஆத்
தண்என் சாவகத் தவள மால்வரை
மண்முகன் என்னும் மாமுனி இடவயின்
பொன்னின் கோட்டது பொன்குளம்பு உடையது
தன்நலம் பிறர்தொழத் தான்சென்று எய்தி
ஈனா முன்னம் இன்உயிர்க்கு எல்லாம்
தான்முலை சுரந்து தன்பால் ஊட்டலும்
மூன்று காலமும் தோன்றநன்கு உணர்ந்த
ஆன்ற முனிவன் அதன்வயிற் றகத்து
மழைவளம் சுரப்பவும் மன்உயிர் ஓம்பவும்
உயிர்கா வலன்வந்து ஒருவன் தோன்றும்
குடர்த்தொடர் மாலை பூண்பான் அல்லன்
அடர்ப்பொன் முட்டை அகவையி னான்என,
பிணிநோய் இன்றியும் பிறந்துஅறம் செய்ய
மணிபல் லவத்திடை மன்உயிர் நீத்தோன்
தன்காத்து அளித்த தகைஆ அதனை
ஒற்கா உள்ளத்து ஒழியான் ஆதலின்
ஆங்குஅவ் ஆவயிற்று அமரர்கணம் உவப்பத்
தீங்கனி நாவல் ஓங்கும்இத் தீவினுக்கு
ஒருதான் ஆகி உலகுதொழத் தோன்றினன்.

2. ஓம்பிய – பாதுகாத்த.
3. தவள மால் வரை – வெள்ளிப் பெருமலை; அதாவது பனிமூடிய பெரிய மலை.
5. கோடு – கொம்பு.
17. தகை – அழகு, தகுதி.
18. ஒற்கா – தளராத.

15. பாத்திரங் கொண்டு பிச்சை புக்க காதை

ஆபுத்திரனுக்குப் பால் கொடுத்த பசுவின் மறுபிறப்பு (1 – 8)

இளங்கொடி மாதே! இன்னும் கேளாய்! முன்நாளில் ஆபுத்திரனைப் பால்சுரந்தூட்டிப் பேணியதல்லவா ஒரு நல்ல பசு! அது குளிர்ச்சிமிக்க சாவகத் தீவில் பனிமூடிய பெரிய மலை ஒன்றிலிருந்த மண்முகன் என்னும் பெரிய முனிவனிடத்திலே மறுபிறப்பிற் போய்ச் சேர்ந்தது. அது பொன் கொம்பும், பொன் குளம்பும் கொண்டிருந்தது. அதன் சிறப்பைக் கண்டு எல்லாரும் போற்றினர். அது ஈனா முன்னரே மடிசுரந்து இனிய உயிர்களுக்கெல்லாம் பால் தந்து வந்தது.

பசு வயிற்றில் மகன் தோன்றுவான் (9 – 14)

மண்முக முனிவர் மூன்று காலங்களையும் தெளிவுற அறிந்த சிறந்த முனிவர். அவர், ''இப் பசுவின் வயிற்றிலே உயிர் வளம் பெருகவும், உயிர்களைப் பேணவும், உயிர் காவலனாகவும் ஓர் அரசன் தோன்றுவான். அவன் பிற உயிர்களைப்போலக் குடல் சுற்றிப் பிறக்கமாட்டான். பசுவின் வயிற்றில் பொன்தகட்டாலாகிய ஒரு முட்டையினுள்ளே அவன் வளர்ந்து வருகிறான். அதிலிருந்து அவன் வெளிவருவான்'' என்று கூறினார்.

பசு வயிற்றில் ஆபுத்திரன் மறுபிறவியுற்றான் (15 – 21)

பிணியால் உண்டாகும் வருத்தம் இல்லாதிருக்கவும் மீண்டும் உலகில் பிறந்து அறம் செய்வதற்குமாகவே ஆபுத்திரன் மணிபல்லவத் தீவில் உயிர் விட்டான். அவன் குழந்தையாயிருந்த போது அவனைப் பேணிக்காத்த பெருமைமிகு பசுவினை உள்ளத்தே என்றும் நினைத்திருந்தான். ஆதலின் இப் பிறவியில் மண்முக முனிவரிடமிருந்த அதே பசுவின் வயிற்றில் பிறந்தான். தேவர்கள் மகிழ்ந்தனர். நாவல் மரங்கள் நிறைந்த அத்தீவுக்கு ஒப்பற்ற தலைவனாக உலகோர் போற்றுமாறு பிறந்தனன்.

பெரியோன் பிறந்த பெற்றியைக் கேள்நீ:
இருதுஇள வேனிலில் எரிகதிர் இடபத்து
ஒருபதின் மேலும் ஒருமூன்று சென்றபின்
மீனத்து இடைநிலை மீனத்து அகவையின்
போதித் தலைவனொடு பொருந்திய போழ்தத்து
மண்ணகம் எல்லாம் மாரி இன்றியும்
புண்ணிய நல்நீர் போதொடு சொரிந்தது.
போதி மாதவன் பூமியில் தோன்றும்
காலம் அன்றியும் கண்டன சிறப்புஎனச்
சக்கர வாளக் கோட்டம் வாழும்
மிக்க மாதவர் விரும்பினர் வியந்து
கந்துடை நெடுநிலைக் கடவுள் எழுதிய
அந்தில் பாவை அருளு மாயிடின்
அறிகுவம் என்றே செறிஇருள் சேறலும்,
மணிபல் லவத்திடை மன்உயிர் நீத்தோன்
தணியா உயிர்உயச் சாவகத்து உதித்தனன்
ஆங்குஅவன் தன்திறம் அறவணன் அறியும்என்று
ஈங்குஎன் நாவை வருத்தியது இதுகேள்:
மண்ஆள் வேந்தன் மண்முகன் என்னும்
புண்ணிய முதல்வன் திருந்தடி வணங்கி
மக்களை இல்லேன் மாதவன் அருளால்
பெற்றேன் புதல்வனை என்றுஅவன் வளர்ப்ப
அரைசுஆள் செல்வம் அவன்பால் உண்மையின்
திரைதார் வேந்தன் ஆயினன் அவன்தான்.

---

22. பெற்றி – பேறு, சிறப்பு.
28. போது – மலர்.
34 அந்தில் – அவ்விடத்து.
கந்திற்பாவை – சக்கரவாளக் கோட்டத்தில் சம்பாபதி கோயிலின் கிழக்கேயுள்ள தூணில் மயனால் நிருமிக்கப்பட்ட ஒரு பிரதிமை. துவதிகன் என்னும் தேவனுடைய வடிவமாக உள்ளது. இதனைப் பூசித்து வழிபாடு செய்வோர்க்கு இப்பாவை வாயிலாகத் துவதிகன் முக்காலச் செய்தியையும் கூறுவான். (கந்து – தூண்)

ஆபுத்திரன் பிறப்பின் சிறப்பு (22 – 35)

பெரியோனாகிய ஆபுத்திரன் பிறந்த இயல்பினைக் கேட்பாயாக! இளவேனில் பருவத்தில் ஞாயிறு இடபராசியில் இருக்கும் வைகாசித் திங்களில் நட்சத்திரங்களுள் நடுவணதாகிய விசாக நட்சத்திரத்தில் புத்த தேவன் பிறந்த சிறந்த வேளையில் ஆபுத்திரன் பிறப்பெய்தினான், உலகமெலாம் மழையில்லாதிருந்தது. அவன் பிறந்த அப்போது புண்ணிய தூய நீர் மலருடன் கலந்து பொழிந்தது. சக்கரவாளக் கோட்டத்தில் வாழும் பெருந்தவமுடையவர்களும், ''புத்த தேவன் உலகில் தோன்றும் காலம் இல்லை என்றாலும் அதற்குரிய சிறப்புகள் நிகழக் கண்டோம்'' என வியந்து போற்றினர். 'உயரிய தூணில் எழுதப்பட்டுள்ள கந்திற்பாவை அருள் செய்யுமானால் இந்த அற்புத நிகழ்ச்சிகளின் உண்மையை அறிகுவம்' என்று கருதி அக்காரிருளில் கந்திற்பாவையைச் சென்று கண்டனர்.

பசு வயிற்றில் தோன்றியவன் ஆபுத்திரன் (36 – 39)

''கந்திற்பாவை மணிபல்லவத்தில் ஆருயிர் துறந்த ஆபுத்திரனே உலக உயிர்கள் உய்யச் சாவகத்தில் தோன்றியுள்ளான். அவனுடைய பெருமையை அறவண அடிகள் அறிவார்'' என்று சொன்னது. முனிவர்களுக்கு ஆபுத்திரன் வரலாற்றைச் சொல்லும்படியாக என் நாவையும் வருத்தியது. (முனிவர்கட்கு அவன் வரலாற்றைச் சொல்லும்படியாக எனக்கு உணர்த்தியது).

மறு பிறவியெடுத்த ஆபுத்திரன் மன்னன் ஆயினான் (40 – 45)

மேகலையே! மேலும் கேட்பாயாக! அச் சாவக நாட்டினை அப்போது ஆண்டு வந்த பூமிசந்திரன் என்னும் மன்னன் மண்முக முனிவருடைய திருவடிகளை வணங்கி, ''மக்கட்பேறு இல்லாத நான் தங்களருளால் அரிய புதல்வனை அடையப் பெற்றேன்'' எனச் சொல்லி பசு ஈன்ற மகவை முனிவரிடமிருந்து பெற்றுச் சென்று வளர்த்து வந்தான். அரசும் செல்வமும் அவனிடம் பொருந்த ஆபுத்திரன் மலர் மாலை சூடிய மன்னவன் ஆனான்.

துறக்க வேந்தன் துய்ப்புஇலன் கொல்லோ
அறக்கோல் வேந்தன் அருள்இலன் கொல்லோ
சுரந்து காவிரி புரந்துநீர் பரக்கவும்
நலத்தகை இன்றி நல்உயிர்க்கு எல்லாம்
அலத்தல் காலை ஆகியது ஆயிழை
வெண்திரை தந்த அமுதை வானோர்
உண்டுஒழி மிச்சிலை ஒழித்துவைத் தாங்கு
வறன்ஒடு உலகின் வான்துயர் கெடுக்கும்
அறன்ஒடு ஒழித்தல் ஆயிழை தகாதுஎன,
மாதவன் உரைத்தலும் மணிமே கலைதான்
தாயர் தம்மொடு தாழ்ந்துபல ஏத்திக்
கைக்கொண்டு எடுத்த கடவுள் கடிஞையொடு
பிக்குணிக் கோலத்துப் பெருந்தெரு அடைதலும்,
ஒலித்துஒருங்கு ஈண்டிய ஊர்க்குறு மாக்களும்
மெலித்துஉகு நெஞ்சின் விடரும் தூர்த்தரும்
கொடிக்கோ சம்பிக் கோமகன் ஆகிய
வடித்தேர்த் தானை வத்தவன் தன்னை
வஞ்சம் செய்துழி வான்தளை விடீஇய
உஞ்சையின் தோன்றிய யூகி அந்தணன்
உருவுக்கு ஒவ்வா உறுநோய் கண்டு
பரிவுஉறு மாக்களில் தாம்பரிவு எய்தி,
உதய குமரன் உளம்கொண்டு ஒளித்த
மதுமலர்க் குழலாள் வந்து தோன்றிப்

50. அலத்தல் காலை – வறுமைக் காலம்.
52. மிச்சில் – மிகுதி.
54. ஒழித்தல் – பயன்படுத்தாது வைத்தல.
58. பிக்குணி – பெண் துறவி.
59. குறுமாக்கள் – அறிவில்லாத சிறியர்.
62. வடி – திருத்தம்.

அமுத சுரபியைப் பயன்படுத்த அறவணர் அறிவுரை (46 – 54)

ஆயிழையே! இங்கே காவேரி பரந்து சுரந்து நீர் வளம் செய்தும், நாட்டில் நல்லுயிர்கள் வறுமையால் வருந்தின. இது மாதவர் வேள்வி செய்து இந்திரன் அவியுண்ணாததாலோ அல்லது அறச்செங்கோல் வேந்தனுக்கு அருளில்லாததாலோ அறியோம். பாற்கடல் தந்த அமுதத்தைத் தேவர் தாம் உண்டு மிச்சத்தைப் பயன்படுத்தாது வைத்தனர். அதுபோல உலகின் வறுமைத் துன்பத்தைப் போக்கக்கூடிய அமுதசுரபி உன் கையில் இருந்தும் இப்போது, பயன்படாமல் உள்ளது. அதனைப் பயன்படுத்தாமல் இருப்பது தகாது. (உடனே இந்த அறத் திருவோட்டைப் பயன்படுத்துக) என அறவணர் கூறி முடித்தார்.

மணிமேகலை துறவிக் கோலத்தில் தெருவிற்கு வந்தாள் (55 – 58)

மணிமேகலை தன் தாய் மாதவி, தோழி சுதமதி இருவருடனும் அறவண அடிகளை வணங்கிப் போற்றினாள். பின் தெய்வப் பாத்திரத்தைக் கையிலே கொண்டு, துறவுக் கோலத்துடன் புகார் நகரப் பெருந்தெருவிற்கு வந்தாள்.

மணிமேகலையைக் கண்டு மக்கள் வருந்தினர் (59 – 70)

தெருவில், அறிவில்லாத சிறியரும் அவள் அழகைக் கண்டு மெலிவுற்றனர்; தீய உள்ளமுடையவரான இளங் காளையரும் ஆரவாரித்துக் கூடினர். கொடி நகரான கோசம்பி, வத்தவ நாட்டின் தலைநகர். அதன் அரசன் உதயணன். அவன் பயிற்சி பெற்ற படைவலிமிக்கவன். உச்சயினி மன்னன் பிரச்சோதனன், சாலங்காயன் என்னும் தன் அமைச்சனைக் கொண்டு மந்திர யானையைக் காட்டி உதயணனைச் சிறைப்பிடித்தான். அவனை விடுவிக்க அவன் அமைச்சனாகிய யூகி என்னும் அந்தணன் புறப்பட்டான். யூகி சூழ்ச்சித்திறம் வாய்ந்தவன். அவன் மாறுவேடம் பூண்டு பெரு நோயுற்றவன் போலவும் மருள் கொண்டவன் போலவும் உச்சயினி நகரில் திரிந்தான். நகர மக்கள் பெருங்கூட்டமாகக் கூடி அவனைப் பரிவுடன் பார்த்தனர். அதுபோலவே புகார் நகரத் தெருவில் சூழ்ந்த கூட்டத்தினரும் பிக்குணிக் கோலத்துடன் பாத்திரமேந்தி வந்த மணிமேகலையைப் பரிவுடன் நோக்கினர். ''உதயகுமரன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவள் மணிமேகலை; மதுமலர்க் குழலாள்; இவ்வளவு

பிச்சைப் பாத்திரம் கையின்ஏந் தியது
திப்பியம் என்றே சிந்தைநோய் கூர,
மணமனை மறுகில் மாதவி ஈன்ற
அணிமலர்ப் பூங்கொம்பு அகம்மலி உவகையின்
பத்தினிப் பெண்டிர் பண்புடன் இடூஉம்
பிச்சை ஏற்றல் பெருந்தகவு உடைத்துஎன,
குளன்அணி தாமரைக் கொழுமலர் நாப்பண்
ஒருதனி ஓங்கிய திருமலர் போன்று
வான்தரு கற்பின் மனைஉறை மகளிரில்
தான்தனி ஓங்கிய தகைமையள் அன்றோ
ஆதிரை நல்லாள் அவள்மனை இம்மனை
நீபுகல் வேண்டும் நேர்இழை என்றனள்
வடதிசை விஞ்சை மாநகர்த் தோன்றித்
தென்திசைப் பொதியில்ஓர் சிற்றியாற்று அடைகரை
மாதவன் தன்னால் வல்வினை உருப்பச்
சாபம் பட்டுத் தனித்துயர் உறூஉம்
வீவில் வெம்பசி வேட்கையொடு திரிதரும்
காயசண் டிகைஎனும் காரிகை தான்என்.

70. திப்பியம் – வியப்பு.
74. தகவு – சிறப்புடையது.
75. நாப்பண் – நடுவே.
83. உருப்ப – தோன்ற.
85. வீவு இல் – அழியாத.

சிறப்புப் பெற்ற அவள் துறவியாகத் தெருவில் பிச்சைப் பாத்திரம் ஏந்திச் செல்வது வியப்பே'' எனக் கூறி நகர மக்கள் அனைவருமே பெரிதும் வருத்தம் உற்றனர்.

பத்தினிப் பெண்டிர் இடும் பிச்சையே சிறப்புடையது (71-74)

சிறப்புமிக்க இல்லத்தில் மாதவி பெற்றெடுத்த அழகிய பூங்கொம்பு போன்றவளாகிய மணிமேகலை, மனம் நிறை மகிழ்வுடன், ''பத்தினிப் பெண்கள் பண்புடன் இடுகின்ற பிச்சையினை முதலில் ஏற்பதே பெருமையுடையது'' என்றாள்.

ஆதிரை வீட்டில் புகுக (75 – 80)

அங்கு நின்றிருந்த காயசண்டிகை, ''குளத்தை அழகு செய்யும் தாமரையின் கொழுவிய மலர்களின் நடுவே தனிச்சிறப்புடையதாக உயரமுடன் விளங்கும் ஒரு மலரினைப் போன்று மழைவளம் தரும் கற்புச் செல்வியரான இல்லுறை மகளிருள் தனித்த புகழையுடையவள் ஆதிரை என்பவள். சிறப்புமிக்கவளாகிய அந்த ஆதிரையின் வீடு இதோ இந்த வீடு! நேரிழையே! பிச்சைக்காக முதலில் இவ்வீட்டில் புகுவாயாக'' என்றாள்.

காயசண்டிகை (81 – 86)

காயசண்டிகை ஒரு வித்தியாதர மங்கை. வடக்கே வித்தியாதரர் நகரமாகிய காஞ்சனபுரத்தில் பிறந்தவள். பழவினைப் பயனால் தெற்கே பொதிய மலையில் ஒரு சிறிய ஆற்றங்கரையில் ஒரு முனிவரால் சாபம் பெற்றாள். அதனால் தீராப் பெரும் பசியால் துயருற்றுப் புகார் நகரில் திரிந்து கொண்டிருக்கிறாள்.

16. ஆதிரை பிச்சை இட்ட காதை

ஈங்குஇவள் செய்தி கேள்என விஞ்சையர்
பூங்கொடி மாதர்க்குப் புகுந்ததை உரைப்போள்:
ஆதிரை கணவன் ஆயிழை கேளாய்
சாதுவன் என்போன் தகவுஇலன் ஆகி
அணியிழை தன்னை அகன்றனன் போகிக்
கணிகை ஒருத்தி கைத்தூண் நல்க
வட்டினும் சூதினும் வான்பொருள் வழங்கிக்
கெட்ட பொருளின் கிளைகேடு உறுதலின்
பேணிய கணிகையும் பிறர்நலம் காட்டிக்
காணம் இலிஎனக் கைஉதிர்க் கோடலும்,
வங்கம் போகும் வாணிகர் தம்முடன்
தங்கா வேட்கையின் தானும் செல்வுழி,
நளிஇரு முந்நீர் வளிகலன் வெளவ
ஒடிமரம் பற்றி ஊர்திரை உதைப்ப
நக்க சாரணர் நாகர் வாழ்மலைப்
பக்கம் சார்ந்துஅவர் பான்மையன் ஆயினன்.
நாவாய் கேடுஉற நன்மரம் பற்றிப்
போயினன் தன்னோடு உயிர்உயப் போந்தோர்
இடைஇருள் யாமத்து எறிதிரைப் பெருங்கடல்
உடைகலப் பட்டாங்கு ஒழிந்தோர் தம்முடன்
சாதுவன் தானும் சாவுற் றான்என,

---

6. கணிகை - பரத்தை. கைத்தூண் - தீய ஒழுக்கத்தால் வந்த உணவு
7. வட்டு - வட்டாடல்.
10. காணம் இலி - பொன் இல்லாதவன்.
கைஉதிர்க்கோடல் - கையை அசைத்து வெளியேற்றுதல்.
13. வெளவ - கவர.
14. ஒடிமரம் - பாய்மரத்தின் ஒடிந்த துண்டம்.
15. நக்க சாரணர் நாகர் - உடையில்லாமல் திரிபவராகிய நாகர்; இவர்கள் மனிதர்களை உண்பவர்.

16. ஆதிரை பிச்சை இட்ட காதை

ஆதிரை வரலாறு (1-2)

ஆதிரையின் வரலாற்றை விஞ்சையர் மகள் காயசண்டிகை மணிமேகலைக்குக் கூறலானாள்:

சாதுவன் கணிகையிடம் பொருளிழந்தான் (3 – 8)

மணிமேகலையே கேள்! ஆதிரையின் கணவன் சாதுவன் என்போன், அவன் ஒழுக்கமில்லாதவனாய் ஆதிரையை விட்டுப் பிரிந்து பொதுமகள் ஒருத்தியிடம் சென்றான். தீய் வழியில் நடந்த அவள் தந்த உணவை உண்டு, வட்டும் சூதும் ஆடித் தன் பொருளையெல்லாம் இழந்தான்.

கடல் வாணிகரோடு சென்றான் (9 – 12)

பொருளை இழந்த பின், அவனைப் பேணிய கணிகை, பிறர் செல்வ வளத்தைச் சுட்டிக்காட்டி, அவனைக் காசில்லாதவன் எனப் பழித்துக் கையை அசைத்து வெளியேற்றினாள். சாதுவன், பொருள் தேடி வர வேண்டுமென்னும் அடங்காத ஆர்வத்தினால் கடல் கடந்து செல்லும் வாணிகர்களுடன் சேர்ந்து மரக்கலத்தில் சென்றான்.

மரக்கலம் உடைந்தது (13 – 16)

அகன்ற பெரிய கடலில் எழுந்த புயற் காற்று மரக்கலத்தைச் சிதைத்தது. பாய்மரத்தின் ஒடிந்த துண்டினைப் பற்றிக் கொண்டு அலைகள் தள்ளத் தள்ளச் சென்று கொண்டிருந்தான். ஆடையின்றித் திரியும் நாகர்கள் வாழும் மலைப்பக்கம் கரை சேர்ந்தான். நாகர்கள் அவனைக் கைப்பற்றினர்.

சாதுவன் இறந்ததாகக் கூறினர் (17 – 20)

சாதுவனைப் போலவே மரத்துண்டினைப் பற்றிச் சிலர் உயிர் தப்பி ஊர் திரும்பினர். அவர்கள் ஆதிரையிடம், ''நள்ளிரவில் புயலில் மரக்கலம் உடைந்தது; பலர் கடலில் மூழ்கி இறந்தனர். சாதுவனும் இறந்தான்'' எனக் கூறினர்.

ஆதிரை நல்லாள் ஆங்குஅது தான்கேட்டு
ஊரீ ரேயோ ஒள்அழல் ஈமம்
தாரீ ரோஎனச் சாற்றினள் கழறிச்
சுடலைக் கானில் தொடுகுழிப் படுத்து
முடலை விறகின் முளிஎரி பொத்தி
மிக்கஎன் கணவன் வினைப்பயன் உய்ப்பப்
புக்குழிப் புகுவேன் என்றுஅவள் புகுதலும்,
படுத்துடன் வைத்த பாயல் பள்ளியும்
உடுத்த கூறையும் ஒள்எரி உறாஅது
ஆடிய சாந்தமும் அசைந்த கூந்தலில்
சூடிய மாலையும் தொல்நிறம் வழாது
விரைமலர்த் தாமரை ஒருதனி இருந்த
திருவின் செய்யோள் போன்றுஇனிது இருப்ப,
தீயும் கொல்லாத் தீவினை யாட்டியேன்
யாது செய்கேன் என்றுஅவள் ஏங்கலும்,
ஆதிரை கேள்உன் அரும்பெறல் கணவனை
ஊர்திரை கொண்டாங்கு உய்ப்பப் போகி
நக்க சாரணர் நாகர் வாழ்மலைப்
பக்கம் சேர்ந்தனன் பல்லியாண்டு இராஅன்
சந்திர தத்தன் எனும்ஓர் வாணிகன்
வங்கம் தன்னொடும் வந்தனன் தோன்றும்
நின்பெருந் துன்பம் ஒழிவாய் நீஎன
அந்தரம் தோன்றி அசரீரி அறைதலும்,
ஐஅரி உண்கண் அழுதுயர் நீங்கிப்
பொய்கைபுக்கு ஆடிப் போதுவாள் போன்று
மனம்கவல்வு இன்றி மனையகம் புகுந்துஎன்
கண்மணி யனையான் கடிதுஈங்கு உறுகெனப்
புண்ணிய முட்டாள் பொழிமழை தருஉம்
அரும்பெறல் மரபின் பத்தினிப் பெண்டிரும்
விரும்பினர் தொழூஉம் வியப்பினள் ஆயினள்.

---

23. ஈமம் – பிணம் சுடுதற்கு அடுக்கும் விறகடுக்கு.
26. முடலை விறகு – முறுக்குண்ட விறகு.
30. கூறை – சேலை. 44. அந்தரம் – ஆகாயம்.
47. கவல்வு – கவலையடைதல்.
49. முட்டாள் – வழுவாதவளாய்.

ஆதிரை தீக்குளித்தல் (21 - 36)

அதுகேட்ட ஆதிரை, ''ஊரவர்களே! நான் உயிர்விடத் தீமூட்டித் தாரீர்களோ?'' எனக் கூறிப் புலம்பினாள். சுடுகாட்டில் குழி வெட்டி அதில் விறகுகளை அடுக்கித் தீமூட்டி, ''தீவினைப் பயனால் என் கணவன் இறந்தான்; அவன் சென்ற இடத்திற்கு நானும் செல்வேன்'' என்று கூறித் தீயில் குதித்தாள்.

குழியிலே அவளுக்காக அமைக்கப்பட்ட படுக்கையும் அவள் உடுத்தியிருந்த ஆடையும் தீப்பற்றவில்லை. உடலில் பூசிய சந்தனமும், கூந்தலில் சூடிய மாலையும் பழைய நிறம் மாறாமல் அப்படியே இருந்தன. எரிகின்ற தீயிடையே ஒரு குறையுமின்றி இருந்த அவள் மணமிக்க தாமரை மலரில் ஒப்பின்றி வீற்றிருக்கும் திருமகள்போலத் தோற்றமளித்தாள். ''தீயும் என்னைக் கொல்லாத தீவினை உடையவள் ஆனேனே! என்ன செய்வேன்'' என ஏக்கமுற்றாள்.

அசரீரி எழுந்தது (37 - 51)

அப்போது ஓர் அசரீரி எழுந்தது. ''ஆதிரையே! கேள்! உன் கணவனை அலைகள் தள்ளிச் சென்றதால் பிழைத்து, நாகர்கள் வாழும் மலைப்பக்கம் சேர்ந்துள்ளான். அங்கே அவன் பலகாலம் இருக்க, மாட்டான் (விரைவில் திரும்புவான்). சந்திரதத்தன் என்னும் வாணிகனின் கப்பலில் இங்கே வந்து சேர்வான். உன் துன்பத்தை நீக்குவாயாக'' என்றது அசரீரி. மைதீற்றியவும் செவ்வரி உடையவுமான கண்களையுடைய ஆதிரை, அழுது கலங்கிய துன்பம் நீங்கினாள். பொய்கையில் புகுந்து நீராடி வெளிப்படுபவள் போல தீயினின்றும் வெளியே வந்து, மனக் கலக்கம் ஏதும் இன்றித் தன் வீட்டிற்குச் சென்றாள். கண்மணி போன்ற கணவன் விரைவில் வந்தடையப் புண்ணியச் செயல்களை வழுவின்றிச் செய்து வந்தாள். தமது கற்பினால் மழை தரவல்ல பத்தினிப் பெண்கள் விரும்பித் தொழுகின்ற சிறப்பினை ஆதிரை பெற்றாள்.

ஆங்குஅவள் கணவனும் அலைநீர் அடைகரை
ஓங்குஉயர் பிறங்கல் ஒருமர நீழல்
மஞ்சுஉடை மால்கடல் உழந்தநோய் கூர்ந்து
துஞ்சுதுயில் கொள்ளஅச் சூர்மலை வாழும்
நக்க சாரணர் நயம்இலர் தோன்றிப்
பக்கம் சேர்ந்து பரிபுலம் பினன்இவன்
தானே தமியன் வந்தனன் அளியன்
ஊன்உடை இவ்வுடம்பு உணவுஎன்று எழுப்பலும்,
மற்றவர் பாடை மயக்குஅறு மரபின்
கற்றனன் ஆதலில் கடுந்தொழில் மாக்கள்
சுற்று நீங்கித் தொழுதுஉரை யாடி
ஆங்குஅவர் உரைப்போர் அருந்திறல் கேளாய்
ஈங்குஎம் குருமகன் இருந்தோன் அவன்பால்
போந்துஅருள் நீஎன அவருடன் போகி,
கள்அடு குழிசியும் கழிமுடை நாற்றமும்
வெள்என்பு உணங்கலும் விரவிய இருக்கையில்
எண்குதன் பிணவோடு இருந்தது போலப்
பெண்டுடன் இருந்த பெற்றி நோக்கிப்
பாடையில் பிணித்துஅவன் பான்மையன் ஆகிக்
கோடுஉயர் மரநிழல் குளிர்ந்த பின்அவன்
ஈங்குநீ வந்த காரணம் என்என
ஆங்குஅவற்கு அலைகடல் உற்றதை உரைத்தலும்,
அருந்துதல் இன்றி அலைகடல் உழந்தோன்
வருந்தினன் அளியன் வம்மின் மாக்காள்
நம்பிக்கு இளையள்ஓர் நங்கையைக் கொடுத்து

---

53. பிறங்கல் – மலை.
55. சூர்.– அச்சம்.
56. நயம்இலர் – இனிமையில்லாதவர்.
60. பாடை – (பாஷை) மொழி.
66. குழிசி – பானை. கழிமுடை நாற்றம் – புலால் நாற்றம்.
67. உணங்கல் – வற்றல்.
68. எண்கு – கரடி. பிணவு – பெண்கரடி.

சாதுவன் நாகர்மலை சேர்ந்தான் (52-59)

ஆதிரையின் கணவன் சாதுவன், கடற்கரையிலுள்ள நாகர் மலையடிவாரத்தில் ஒரு மர நிழலில் வந்து சேர்ந்தான். முகில் முகக்கும் பெருங்கடலில் சிக்கி வருந்திய துன்பத்தால் அயர்ந்து தூங்கினான் அச்சத்தைத் தருகின்ற அம்மலையில் வாழும் பண்பில்லாதவராகிய நக்கசாரணர் அங்கே தோன்றி அவனைப் பார்த்தனர். ''இவன் மிகவும் வருந்தியிருக்கிறான், தன்னந்தனியே வந்திருக்கிறான்; எளியவனாயிருக்கிறான்; என்றாலும் இவனுடைய புலால் உடம்பு நமக்கு நல்ல உணவாகும்'' என்று அவனை எழுப்பினர்

நாகர் குருமகனைக் கண்டான் (60 – 65)

சாதுவன் அவர்கள் பேசும் மொழியை ஐயமறக் கற்றவன். அவன் அவர்கள் மொழியில் தன் நிலையைக் கூறவே கொடிய தொழில் செய்யும் அம் மக்கள் சற்று விலகி நின்று அவனைத் தொழுது நன்மொழி பேசினர். அரிய திறமையுடையவனே! கேள். எங்கள் குரு இங்கே இருக்கிறார். அவன் இருப்பிடத்திற்கு நீ வருக! என்றழைத்தனர். சாதுவனும் குருமகனைக்காண அவர்களுடன் சென்றான்.

குருமகன் வினாவும் சாதுவன் விடையும் (66 - 73)

கள் காய்ச்சும் பானைகளும், மிக்க புலால் நாற்றமும், வெண்மையான எலும்புத் துண்டுகளும் கலந்து கிடந்த ஓர் இருக்கையில் கரடி ஒன்று தன் பெண் கரடியுடன் இருந்ததுபோல குரு மனைவியுடன் இருந்தான் சாதுவன் அவன் தன்மையை அறிந்து, தன் பேச்சிலே அவனைத் தன்வயப்படுத்தி, அவனுக்கு வேண்டியவனானான் கிளைகளடர்ந்த மர நிழலில் குருவோடு அமர்ந்தான். குருமகன் சாதுவனிடம், ''நீ இங்கே வந்த காரணம் என்ன?'' எனக் கேட்டான். சாதுவன் அலை கடலில் நேர்ந்ததையெல்லாம் உரைத்தான்.

கள்ளும் நங்கையும் தருக (74-77)

''அலை கடலில் தத்தளித்துத் துன்புற்றிருக்கும் இவன் உணவின்றி வருந்தி இரங்கத்தக்கவனாயிருக்கிறான். மக்களே வாருங்கள்! இந் நம்பிக்கு ஓர் இளைய நங்கையைத் தாருங்கள்!

வெங்களும் ஊனும் வேண்டுவ கொடும்என,
அவ்வுரை கேட்ட சாதுவன் அயர்ந்து
வெவ்வுரை கேட்டேன் வேண்டேன் என்றலும்,
பெண்டிரும் உண்டியும் இன்றுஎனின் மாக்கட்கு
உண்டோ ஞாலத்து உறுபயன உண்டுஎனில்
காண்குவம் யாங்களும் காட்டுவா யாகெனத்
தூண்டிய சினத்தினன் சொல்எனச் சொல்லும்:
மயக்கும் கள்ளும் மன்உயிர் கோறலும்
கயக்குஅறு மாக்கள் கடிந்தனர் கேளாய்:
பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்றது உண்மையின்
நல்அறம் செய்வோர் நல்உலகு அடைதலும்
அல்அறம் செய்வோர் அருநரகு அடைதலும்
உண்டுஎன உணர்தலின் உரவோர் களைந்தனர்
கண்டனை யாகென, கடுநகை எய்தி
உடம்புவிட்டு ஓடும் உயிர்உருக் கொண்டுஓர்
இடம்புகும் என்றே எமக்குஈங்கு உரைத்தாய்
அவ்வுயிர் எவ்வணம் போய்ப்புகும் அவ்வகை
செவ்வனம் உரைஎன, சினவாது இதுகேள்:
உற்றதை உணரும் உடல்உயிர் வாழ்வுழி
மற்றைய உடம்பே மன்உயிர் நீங்கிடில்
தடிந்துஎரி ஊட்டினும் தான்உண ராதுஎனின்
உடம்பிடைப் போனதுஒன்று உண்டுஎன உணர்நீ

78. அயர்ந்து – கவலையுற்று.
84. கோறல – கொல்லுதல்.
85. கயக்கு அறு – கலக்கம் இல்லாத.
90. உரவோர் – அறிவுடையோர்.
95. செவ்வனம் – நேரே (செவ்வையாக).
98. தடிந்து – வெட்டி.

கவம்மையான கள்ளும், புலாலும் வேண்டிய மட்டும் கொடுங்கள்'' என்றான் குருமகன்.

சாதுவன் மறுப்பு (78 – 83)

இதுகேட்ட சாதுவன் திடுக்கிட்டான். ''கொடுமையான சொற்களைக் கேட்டேன். இவை வேண்டேன்'' என்றான். ''பெண்களும் புலாலும் இல்லாது உலகத்தில் மக்கள் அடையும் பயனும் உண்டோ? உண்டெனில் காட்டு; நாங்களும் காண்போம்'' என மிகுந்த சினம் கொண்டவனாகக் குருமகன் கொதித்தான்.

சாதுவன் அறிவுரை (84 – 91)

சாதுவன் குருமகனிடம், ''நாகர் தலைவ! அறிவை மயக்கும் கள்ளையும், உயிர்க் கொலையையும் தெளிந்த அறிவுடைய மக்கள் வெறுத்து ஒதுக்கினர். உலகில் பிறந்தவர் சாவர்; செத்தவர் பிறப்பர்; இஃது உறங்கலும் விழித்தலும் போன்ற உண்மையாகும். நல்லறம் செய்தோர் இன்ப உலகு அடைவர்; தீய செயல் செய்தோர் கொடுமையான நரகத்தில் சேர்வர். இந்த உண்மையை அறிந்ததால் பெரியோர் அவற்றை நீக்கினர். நீயும் இதனைத் தெரிந்து கொள்'' என்று கூறினான்.

உயிர் செல்லும் நெறி (91 – 106)

இதனைக் கேட்ட குருமகன் உரக்கச் சிரித்தான், ''உடம்பை விட்டுப் பிரிந்த உயிர், வேறு வடிவுடன் மற்றோர் இடம் புகும் என்று சொன்னாயே! அவ்வுயிர் எவ்வாறு சென்று சேரும்? அதனைச் செவ்வையாகச் சொல்'' எனக் கேட்டான்.

''குருமகனே! சினம் கொள்ளாது நான் சொல்வதைக் கேள்! உடலில் உயிர் இருக்கும்போது தன் மேல் படுவதை உணர்கிறது. உடம்பிலிருந்து உயிர் நீங்கி விட்டாலோ, அதனை வெட்டினாலும் எரிநெருப்பில் இட்டாலும் உணர்வதில்லை. அப்படியானால் அவ்வுடம்பிலிருந்து ஏதோ ஒன்று போயிருக்கிறது என்பது தெரிகிறதல்லவா?

போனார் தமக்குஓர் புக்கில்உண்டு என்பது
யானோ அல்லேன் யாவரும் உணர்குவர்
உடம்புஈண்டு ஒழிய உயிர்பல காவதம்
கடந்துசேண் சேறல் கனவினும் காண்குவை
ஆங்கனம் போகி அவ்வுயிர் செய்வினை
பூண்ட யாக்கையின் புகுவது தெளிநீ
என்றுஅவன் உரைத்தலும், எரிவிழி நாகனும்
நன்றிஅறி செட்டி நல்அடி வீழ்ந்து
கள்ளும் ஊனும் கைவிடின் இவ்வுடம்பு
உள்உறை வாழ்உயிர் ஒம்புதல் ஆற்றேன்
தமக்குஒழி மரபின் சாவுறு காறும்
எமக்குஆம் நல்அறம் எடுத்துஉரை என்றலும்,
நன்று சொன்னாய் நல்நெறிப் படர்குவை
உன்தனக்கு ஒல்லும் நெறிஅறம் உரைக்கேன்
உடைகல மாக்கள் உயிர்உய்ந்து ஈங்குஉறின்
அடுதொழில் ஒழிந்துஅவர் ஆர்உயிர் ஒம்பி,
மூத்துவிளி மாஒழித்து எவ்வுயிர் மாட்டும்
தீத்திறம் ஒழிகென, சிறுமகன் உரைப்போன்
ஈங்குஎமக்கு ஆகும் இவ்வறம் செய்கேம்
ஆங்குஉனக்கு ஆகும் அரும்பொருள் கொள்கெனப்
பண்டும் பண்டும் கலம்கவிழ் மாக்களை
உண்டேம் அவர்தம் உறுபொருள் ஈங்குஇவை
விரைமரம் மென்துகில் விழுநிதிக் குப்பையோடு
இவைஇவை கொள்கென எடுத்தனன் கொணர்ந்து

---

100. புக்கில் – புகும் இடம்.
103. சேண் – தொலைவு.
113. ஒல்லும் நெறி – இயலும் வழி
114. உய்ந்து – பிழைத்து.
116. விளி - இறந்த. மா - விலங்கு
117. தீத்திறம் – தீய செயல் (கொலை).
122. விரை – மணம். விரை மரம் – சந்தனம் அகில் முதலியன.
குப்பை – குவியல்.

ஓரிடத்தை விட்டுப்போனவர் தமக்குப் புகும் இடம் ஒன்று இருக்க வேண்டுமென்பதை நான் மட்டுமா, இல்லை; எவரும் அறிவர்! உடம்பு இங்கிருக்க, உயிர் பல காவதம் கடந்து நெடுந்தொலைவு செல்வதைக் கனவிலும் காண்பாய்! அங்ஙனம் சென்ற உயிர், தன் வினைப்பயனை நுகரத் தக்க உடலில் புகும். இதனைத் தெளிவாக அறிக'' என்று சொன்னான்.

அறவழி கூறுக (106 – 111)

இவ்வாறு சாதுவன் சொன்னதும் எரிதழல் போலும் விழிகளைக் கொண்ட அந் நாகர் தலைவன் அறநெறியை நன்கு அறிந்துள்ள சாதுவ செட்டியின் நல்லடிகளில் வீழ்ந்து வணங்கினான். ''கள்ளையும் புலாலையும் விட்டு விட்டால், என் உடலுள்ளே இருக்கும் உயிரை எப்படிப் பாதுகாப்பது? தெரியவில்லையே! உயிர் நீங்குகின்ற இறப்பு வரும்வரை எங்கட்கு ஏற்ற நல்ல அறங்களை எடுத்துரைப்பாயாக'' என்று வேண்டினான்.

சாதுவன் சொன்னது (112 – 117)

இது கேட்ட சாதுவனும், ''நன்றாகச் சொன்னாய். இனி நீ நல்வழியிலே செல்வாய்! உனக்குப் பொருத்தமான அறநெறியைச் சொல்லுவேன். வருங்காலத்தில் உடைந்த மரக்கலங்களிலிருந்து மக்கள் உயிர் பிழைத்து இங்கு வந்தால் அவர்களைக் கொல்லாதீர்! அவர்கள் உயிரைக் காப்பாற்றுங்கள்! முதுமையுற்றுத் தாமே இறந்த விலங்குகளை அல்லாமல், உயிருள்ளனவற்றைக் கொன்று தின்னும் தீய செயலை விட்டொழியுங்கள்'' என்றனன் சாதுவன்.

நாகர் தந்த பொருள் (117 – 123)

சாதுவன் கூறியதைக் கேட்ட இழி மகனான நாகர் தலைவன், ''சாதுவ! இந்த அறம் எமக்குப் பொருந்தும்; இந் நற்செயலைச் செய்வோம். உன் ஊரில் உனக்குப் பயன்படும் பொருள் தருவோம்; பெற்றுக் கொள்க. பழங்காலம் தொட்டு மரக்கலங்கள் கவிழ்ந்ததால் தப்பி வந்த மக்களை உண்டு வந்தோம். இங்கிருக்கும் பொருள்கள் அவர்களிடமிருந்தவை. இதோ! சந்தனமரம்; இதோ மெல்லிய ஆடைகள்; இதோ சிறந்த பொருட்குவியல்; இவற்றையெல்லாம் நீ எடுத்துக் கொள்க'' என்றான்.

சந்திர தத்தன் என்னும் வாணிகன்
வங்கம் சேர்ந்ததில் வந்துஉடன் ஏறி
இந்நகர் புகுந்துஈங்கு இவளொடு வாழ்ந்து
தன்மனை நன்பல தானமும் செய்தனன்.
ஆங்ஙனம் ஆகிய ஆதிரை கையால்
பூங்கொடி நல்லாய் பிச்சை பெறுகென,
மனையகம் புகுந்து மணிமே கலைதான்
புனையா ஓவியம் போல நிற்றலும்
தொழுது வலம்கொண்டு துயர்அறு கிளவியோடு
அமுத சுரபியின் அகன்சுரை நிறைதரப்
பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுகென
ஆதிரை இட்டனன் ஆர்உயிர் மருந்துஎன்.

131. புனையா ஓவியம் – அணி செய்யப்படாத அழகிய ஓவியம்.
132. துயர் அறு கிளவி – துன்பத்தை நீங்கும் சொல், அதாவது இனிய சொல்
133 அகன் சுரை – அகன்ற உள்ளிடம்.
134. பாரகம் – நிலவுலகம். அடங்கலும் – முழுவதும்.
135. ஆருயிர் மருந்து – உணவு

ஊர் திரும்பினான் (123 – 127)

சாதுவன் அவற்றை எடுத்துக் கொண்டான். சந்திரதத்தன் என்னும் வணிகனின் கப்பல் வந்தது. உடனே அதில் ஏறி, இந் நகருக்கு வந்து, இங்கே தன் மனைவியுடன் தன் இல்லத்திலே இருந்து நல்ல பல அறங்களைச் செய்து வாழ்ந்து வருகிறான்.

''இத்தகைய சிறப்புக்குரிய ஆதிரையினுடைய கையினாலே பூங்கொடி போன்ற மணிமேகலையே! நீ பிச்சை பெறுவாயாக!'' என்றாள் காயசண்டிகை.

ஆதிரை இட்ட அமுது (128 – 135)

உடனே மணிமேகலை ஆதிரையின் வீட்டினுள் புகுந்து புனையா ஓவியம்போல நின்றாள். ஆதிரை மணிமேகலையை வலம் வந்து, ''நிலவுலகம் முழுவதும் பசிப்பிணி நீங்குக'' என இனியசொல் சொல்லி ஆருயிர் மருந்தாகிய சோற்றினை அமுதசுரபியின் அகன்ற உள்ளிடம் நிறையுமாறு இட்டனள்.

17. உலக அறவி புக்க காதை

பத்தினிப் பெண்டிர் பாத்தூண் ஏற்ற
பிச்சைப் பாத்திரப் பெருஞ்சோற்று அமலை
அறத்தின் ஈட்டிய ஒண்பொருள் அறவோன்
திறத்து வழிப்படூஉம் செய்கை போல
வாங்குகை வருந்த மன்உயிர்க்கு அளித்துத்
தான்தொலைவு இல்லாத் தகைமை நோக்கி,
யானைத் தீநோய் அகவயிற்று அடக்கிய
காயசண் டிகைஎனும் காரிகை வணங்கி
நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி
அடல்அரு முந்நீர் அடைத்த ஞான்று
குரங்குகொணர்ந்து எறிந்த நெடுமலை எல்லாம்
அணங்குஉடை அளக்கர் வயிறு புக்காங்கு
இட்டது ஆற்றாக் கட்டழல் கடும்பசிப்
பட்டேன் என்தன் பழவினைப் பயத்தால்
அன்னை கேள்நீ ஆர்உயிர் மருத்துவி
துன்னிய என்நோய் துடைப்பாய் என்றலும்,
எடுத்த பாத்திரத்து ஏந்திய அமுதம்
பிடித்துஅவள் கையில் பேணினள் பெய்தலும்
வயிறுகாய் பெரும்பசி நீங்கி மற்றவள்
துயரம் நீங்கித் தொழுதனள் உரைக்கும்:
மாசுஇல் வால்ஒளி வடதிசைச் சேடிக்
காசுஇல்காஞ் சனபுரக் கடிநகர் உள்ளேன்.

---

1. பாத்தூண் – பகுத்துக் கொடுத்து உண்ணப்படும் உணவு.
2. அமலை – திரளை.
6 தொலைவில்லா – தீர்தல் இலலாத.
9 நெடியோன் – திருமால்
10. அடல் அரு –வெல்லுதற்கு அரிய. ஞான்று – பொழுது.
12. அளக்கர் – கடல.
16. துன்னிய – நெருங்கிய.
21. சேடி – வித்தியாதரர் உலகு.
22. காசு – குற்றம்.

17. உலக அறவி புக்க காதை

காயசண்டிகை பசி தீர்ந்தனள் (1 – 20)

ஆதிரை இட்ட உணவு அமுதசுரபியில் விழுந்தது. நல்ல வழியிலே ஈட்டிய பொருள் நல்ல வழியிலே நடப்பவரிடம், நல்ல செயல்களுக்காகப் பயன்படுத்தப்படும் போது நாளும் பெருகுவது போல, அவ் வுணவு எடுக்க எடுக்கக் குறையாமல் பெருகியது. அவள் அச் சோற்றை வழங்கியபோது வாங்குவோரின் கைகள் வருந்தினவே யன்றி, அவள் பல்லுயிருக்கும் அளித்தபோதும் பாத்திரத்தில் உணவு குறைவின்றி இருந்தது.

யானைத்தீ நோய் என்னும் அடங்காப் பசி கொண்ட காயசண்டிகை இதனைக் கண்டாள். அவள் மணிமேகலையை வணங்கி, ''அம்மையே! முன்னொருகால் திருமால் இராமனாக இவ்வுலகில் தோன்றி, சீதையை மீட்க, இலங்கைக்குச் செல்லக் கடலிலே அணை கட்டியபோது குரங்குகள் கொண்டு வந்து போட்ட பெரிய மலைகளெல்லாம் இருந்தது தெரியாமல் கடலினுள் அழுந்தினபோல, நான் எவ்வளவு உண்டாலும், உண்ட உணவு போன இடம் தெரியாமல், வயிற்றை எரிக்கின்ற பசியால் வாடி வருகிறேன். இஃது என் வினைப்பயன். அன்னையே! ஆருயிர் மருந்தினை உடையவளே! என் இக்கொடிய பசியை நீக்கி அருள்வாயாக'' என வேண்டினாள்.

மணிமேகலை தான் ஏந்தியிருந்த பாத்திரத்திலிருந்து உணவை எடுத்துக் காயசண்டிகை கையில் இட்டாள். அதனை உண்ட காயசண்டிகை தன் பெரும்பசி அடங்க, அதுவரை பட்ட துன்பமெலாம் நீங்கினாள். மணிமேகலையைத் தொழுது தன் வரலாற்றை உரைத்தாள்.

காயசண்டிகை வரலாறு

பொதியமலை காண வந்தாள் (21-24)

நான் வடக்கே வெள்ளிமலைமேல் விஞ்சையர் உலகில், குற்றமற்ற காஞ்சனபுரம் எனும் நாவல் மிகுந்த நகரில் இருப்பவள்.

விஞ்சையன் தன்னொடுஎன் வெவ்வினை உருப்பத்
தென்திசைப் பொதியில் காணிய வந்தேன்
கடுவரல் அருவிக் கடும்புனல் கொழித்த
இடுமணல் கானியாற்று இயைந்துஒருங்கு இருந்தேன்
புரிநூல் மார்பில் திரிபுரி வார்சடை
மரஉரி உடையன் விருச்சிகன் என்போன்
பெருங்குலைப் பெண்ணைக் கருங்கனி அனையதுஓர்
இருங்கனி நாவல் பழம்ஒன்று ஏந்தித்
தேக்குஇலை வைத்துச் சேண்நாறு பரப்பில்
பூக்கமழ் பொய்கை ஆடச் சென்றோன்
தீவினை உருத்தலின் செருக்கொடு சென்றேன்
காலால் அந்தக் கருங்கனி சிதைத்தேன்
உண்டல் வேட்கையின் வரூஉம் விருச்சிகன்
கண்டனன் என்னைக் கருங்கனிச் சிதைவுடன்
சீர்திகழ் நாவலில் திப்பிய மானது
ஈர்ஆறு ஆண்டில் ஒருகனி தருவது
அக்கனி உண்டோர் ஆறுஈர் ஆண்டு
மக்கள் யாக்கையின் வரும்பசி நீங்குவர்
பன்னீ ராண்டில் ஒருநாள் அல்லது
உண்ணா நோன்பினேன் உண்கனி சிதைத்தாய்
அந்தரம் செல்லும் மந்திரம் இழந்து
தந்தித் தீயால் தனித்துயர் உழந்து
முந்நால் ஆண்டின் முதிர்கனி நான்ஈங்கு
உண்ணும் நாள்உன் உறுப்சி களைகென
அந்நாள் ஆங்குஅவன் இட்ட சாபம்
இந்நாள் போலும் இளங்கொடி கெடுத்தனை
வாடுபசி உழந்து மாமுனி போயபின்
பாடுஇமிழ் அருவிப் பயமலை ஒழிந்துஎன்

25. கடுவரல் – விரைந்து வருதல்.
29 பெண்ணை – பனை.
37 திப்பியமானது – தெய்வத்தன்மை உடையது.
44 தந்தி – யானை. உழந்து – வருந்தி.

என் பழவினை வந்து தோன்றியதால் என் கணவனுடன் தென் திசையிலே உள்ள பொதிய மலையின் அழகைக் காண்பதற்கு வந்தேன்.

நாவற்கனி சிதைந்தது (25 – 34)

மிகு வேகத்துடன் ஓடுகின்ற அருவியின் பெருகிய நீர் கொழித்த ஆற்று மணலில் இருவரும் ஒன்றாக அமர்ந்து மகிழ்ந்திருந்தோம். அவ் வேளையில், மார்பில் முறுக்கிய பூணூலும், திரித்து முறுக்கிய நீண்ட சடையும், மரவுரி ஆடையும் கொண்ட விருச்சிகன் என்னும் முனிவன் அங்கு வந்தான். பனை மரத்தின் பெருங்குலையிலுள்ள, கருமையான பனங்காயைப் போன்ற பெரிய கரிய நாவல் பழம் ஒன்றைத் தேக்கிலை மீது வைத்து விட்டு, நெடுந்தொலைவுக்கு மணம் வீசுகின்ற பூக்கள் நிறைந்திருந்த பொய்கையில் நீராடச் சென்றான். என் தீவினைப் பயன் தோன்றியது போலும். நான் செருக்கோடு சென்று அக் கரிய கனியினைக் காலில் மிதித்துச் சிதைத்தேன்.

விருச்சிகன் இட்ட சாபம் (35 – 48)

நீராடி முடித்த விருச்சிகன் எனியை உண்ண விருப்போடு வந்தான். பழத்தை நான் சிதைத்திருப்பதைக் கண்டான். ''இக்கனி சிறந்த நாவல் மரத்தில் விளைந்தது; அமுதினும் இனிமையானது. இம் மரம் பன்னிரண்டாண்டுக் கொருமுறை ஒரே கனியைத் தருவது. இக் கனியை உண்டோர் பன்னிரண்டாண்டுகள் பசியின்றி இருப்பர். பன்னிரண்டாண்டுகளில் ஒருநாள் மட்டுமே உண்ணுகின்ற நோன்பினை உடையவன் நான். நான் உண்ண வேண்டிய கனியைச் சிதைத்து விட்டாய்! ஆதலால் ஆகாயத்தில் செல்லும் மந்திரத்தை நீ மறப்பாய். யானைத் தீ என்னும் பெரும் பசியால் தாங்க முடியாத் துன்பம் அடைவாய். பன்னிரண்டாண்டுகளுக்குப் பிறகு, நான் இம் மரத்தில் பழுத்த கனியை உண்ணும்போது உன் பசி நீங்கும்'' என்று முனிவன் சாபமிட்டான். அப்போது அவனிட்ட அச் சாபத்தின் முடிவு இந்த நாள் போலும்! இளங்கொடி போன்ற மணிமேகலையே! என் தீராப் பசியைத் தீர்த்தாய்!

கணவன் வருந்தினான் (49 – 61)

சாபமிட்ட முனி பசியால் வருந்தி அங்கிருந்து சென்றான். அருவி ஒலிக்கும் பொதிய மலையை விட்டு அகன்று, பின் விளைவை

அலவலைச் செய்திக்கு அஞ்சினன் அகன்று
இலகுஒளி விஞ்சையன் விழுமமோடு எய்தி
ஆர்அணங்கு ஆகிய அருந்தவன் தன்னால்
காரணம் இன்றியும் கடுநோய் உழந்தனை
வான்ஊடு எழுகஎன, மந்திரம் மறந்தேன்
ஊனுயிர் நீங்கும் உருப்பொடு தோன்றி
வயிறுகாய் பெரும்பசி வருத்தும் என்றேற்குத்
தீங்கனி கிழங்கு செழுங்காய் நல்லன
ஆங்குஅவன் கொணரவும் ஆற்றே னாக
நீங்கல் ஆற்றான் நெடுந்துயர் எய்தி
ஆங்குஅவன் ஆங்குஎனக்கு அருளொடும் உரைப்போன்
சம்புத் தீவினுள் தமிழக மருங்கில்
கம்பம் இல்லாக் கழிபெருஞ் செல்வர்
ஆற்றா மாக்கட்கு ஆற்றும்துணை ஆகி
நோற்றோர் உறைவதுஓர் நோன்நகர் உண்டால்
பலநாள் ஆயினும் நிலனொடு போகி
அப்பதிப் புகுகென்று அவன்அருள் செய்ய
இப்பதிப் புகுந்துஈங்கு யான்உறை கின்றேன்
இந்திர கோடணை விழவுஅணி வருநாள்
வந்து தோன்றிஇம் மாநகர் மருங்கே
என்உறு பெரும்பசி கண்டனன் இரங்கிப்
பின்வரும் யாண்டுஅவன் எண்ணினன் கழியும்
தணிவுஇல் வெம்பசி தவிர்த்தனை வணங்கினேன்
மணிமே கலைஎன் வான்பதிப் படர்கேன்
துக்கம் துடைக்கும் துகள்அறு மாதவர்
சக்கர வாளக் கோட்டம்உண்டு ஆங்குஅதில்
பலர்புகத் திறந்த பகுவாய் வாயில்
உலக அறவி ஒன்றுஉண்டு அதனிடை
ஊர்ஊர் ஆங்கண் உறுபசி உழந்தோர்
ஆரும் இன்மையின் அரும்பிணி உற்றோர்
இடுவோர்த் தேர்ந்துஆங்கு இருப்போர் பலரால்
வடுவாழ் கூந்தல் அதன்பால் போகென்று
ஆங்குஅவள் போகிய பின்னர், ஆயிழை

51. அலவலைச் செய்தி – மனத்தில் தோன்றியதை ஆராயாது செய்த செய்கை.
56. உருப்பொடு – வெப்பத்தொடு.
63. கம்பம் –நடுக்கம். 72. கழியும் – நீங்குவான்.
82. வடு – வகிர்.

ஆராயாது நான் செய்த செய்கைக்காக அஞ்சியவனாக என்னிடம் வந்த என் கணவன், ''தெய்வத் தன்மை வாய்ந்த சிறந்த தவசியால் காரணமில்லாமலேயே கொடிய நோய் உற்றாய்! வானத்திலே செல்வோம் எழுக'' என்றான். ''அதற்குரிய மந்திரம் மறந்தேன். உடம்பிலிருந்து உயிர் போய்விடுவதுபோல வயிறு காயும் பெரும்பசி என்னை வருத்துகிறது'' என்றேன். இனிய கனிகள், கிழங்குகள், செழுமையான காய்கள் முதலிய பலவகை நல்லுணவுகளை என் கணவன் கொண்டு தந்தான். ஆயினும் பசி நீங்கவில்லை. என்னை விட்டுப் பிரிய முடியாது மிகவும் வருந்தி, முடிவில் எனக்கு அவன் அருளுரை கூறினான்.

புகார் நகர் செல்க என்றான் (62 – 68)

''பெண்ணே! நாவலந் தீவில் தமிழகத்தில் மிகப்பெருஞ் செல்வர் வாழ்கின்றனர். ஆற்ற முடியாதவர்களுக்கு உதவும் பண்பில் சிறந்தோர் வாழ்கின்ற தவப்பதியான புகார் நகரம் உள்ளது. பலநாளாயினும் நீ நடந்து சென்று அவ்வூரைச் சேர்க'' என்று சொன்னான். அதன்படி நான் இந் நகரடைந்து இங்கு வாழ்ந்து வருகின்றேன்.

சாபம் தீர்ந்து ஊர் திரும்பினாள் (69 – 74)

இந்திர விழா நடைபெறும் நாளில் என் கணவன் விஞ்சையன் இங்கு வருவான். என் பெரும்பசி கண்டு இரக்கமுற்று வருந்துவான். என் சாபம் கழியும் ஆண்டுகளை எண்ணியவனாகத் திரும்பி விடுவான். மணிமேகலை! நீக்க முடியாத என் பசியை நீக்கினாய்; உன்னை வணங்கினேன். நான் இனி என் ஊருக்கு வான்வழியே செல்வேன்.

ஊரவர் கூடும் உலக அறவி (75 – 82)

வகிர்ந்து வாரிய கூந்தலையுடைய மணிமேகலையே! இவ்வூரில் சக்கரவாளக் கோட்டம் உளளது. அங்குத் துக்கங்களைப் போக்கும் குற்றமற்ற பெரும் முனிவர்கள் உள்ளனர். அங்கு உலக அறவி என்னும் ஊரம்பலம் ஒன்று உண்டு. பலரும் வந்து செல்லும்படி அதன் வாயில் திறந்திருக்கும். ஊர்தோறும் பசியால் வருந்தினோரும், தீர்ப்பார் யாருமில்லாதலால் பெரும் நோய்க்கு ஆளானவர்களும், உணவிடுவோரை எதிர் நோக்கியவரும் அங்கே கூடியிருப்பர். நீ அங்கே செல்வாயாக'' எனச் சொல்லிக் காயசண்டிகை சென்றாள்.

ஓங்கிய வீதியின் ஒருபுடை ஒதுங்கி
வலமுறை மும்முறை வந்தனை செய்துஅவ்
உலக அறவியின் ஒருதனி ஏறிப்
பதியோர் தம்மொடு பலர்தொழுது ஏத்தும்
முதியோள் கோட்டம் மும்மையின் வணங்கிக்
கந்துஉடை நெடுநிலைக் காரணம் காட்டிய
தம்துணைப் பாவையைத் தான்தொழுது ஏத்தி
வெயில்சுட வெம்பிய வேய்கரி கானத்துக்
கருவி மாமழை தோன்றியது என்னப்
பசிதின வருந்திய பைதல் மாக்கட்கு
அமுத சுரபியோடு ஆயிழை தோன்றி
யாவரும் வருக ஏற்போர் தாம்என
ஊண்ஒலி அரவத்து ஒலிஎழுந் தன்றே
யாணர்ப் பேர்ஊர் அம்பலம் மருங்குஎன்.

84. ஒருபுடை – ஒரு பக்கம்.
88. முதியோள் கோட்டம் – சம்பாபதி கோயில்.
91. வேய் கரி கானம – மூங்கில் கரிந்த காடு.
93. பைதல் – துன்பம்.
96. ஒலி எழுந்தன்றே – ஒலி எழுந்தது.
97. யாணர் - புது வருவாய்.

மணிமேகலை உலக அறவி சேர்ந்தாள் (83 - 90)

மணிமேகலை மாடங்கள் ஓங்கிய நகர வீதிகளின் ஒருபுறமாக ஒதுங்கிச் சென்று உலக அறவியை அடைந்தாள். வலமுறையாக மூன்று முறை வந்து பணிந்து உலக அறவி என்னும் அம் மன்றத்தில் ஏறினாள். அங்கே அவ் வூர் மக்களோடு இன்னும் பலரும் தொழும் சம்பாபதிக் கோயில் இருந்தது. அதனை மூன்று முறை வணங்கினாள். அக் கோவில் நெடுந்தூணில் தன்னை அடைந்தவர்க்குப் பிறவியின் காரணம் காட்டுவதற்காக எழுதப்பட்ட கந்திற்பாவை இருந்தது. அதனையும் கைதொழுது வணங்கினாள்

உணவு உண்ண வருக என அழைத்தாள் (91 - 98)

கடும் வெயில் சுட்டுக்கரிந்த மூங்கில் காட்டில் இடி முழக்கோடு பெருமழை தோன்றியதுபோல, பசி வாட்டியதால் வருந்தித் துன்ப முற்றிருந்த மக்களிடையே அமுத சுரபியோடு மணிமேகலை தோன்றினாள் ''இஃது ஆபுத்திரன் கையிலிருந்த அமுத சுரபி. உணவு வேண்டுவோர் அனைவரும் வருக'' எனக் கூறியழைத்தாள். அதனால் புதுவருவாயுடைய புகார் நகர அம்பலத்தில் உணவுண்போரின் ஆரவார ஒலி எழுந்து முழங்கியது.

18. உதயகுமரன் அம்பலம் புக்க காதை

ஆங்குஅது கேட்டுஆங்கு அரும்புண் அகவயின்
தீத்துறு செங்கோல் சென்றுசுட் டாங்குக்
கொதித்த உள்ளமொடு குரமபுகொண்டு ஏறி
விதுப்புறு நெஞ்சினள் வெய்துயிர்த்துக் கலங்கித்
தீர்ப்பல்இவ் அறம்எனச் சித்திரா பதிதான்
கூத்தியல் மடந்தையர்க்கு எல்லாம் கூறும்:
கோவலன் இறந்தபின் கொடுந்துயர் எய்தி
மாதவி மாதவர் பள்ளியுள் அடைந்தது
நகுதக் கன்றே நல்நெடும் பேர்ஊர்
இதுதக்கு என்போர்க்கு எள்உரை ஆயது
காதலன் வீயக் கடுந்துயர் எய்திப்
போதல் செய்யா உயிரொடு புலந்து
நளிஇரும் பொய்கை ஆடுநர் போல
முளிஎரிப் புகூஉம் முதுகுடிப் பிறந்த
பத்தினிப் பெண்டிர் அல்லேம் பலர்தம்
கைத்தூண் வாழ்க்கை கடவியம் அன்றே
பாண்மகன் பட்டுழிப் படூஉம் பான்மைஇல்
யாழ்இனம் போலும் இயல்பினம் அன்றியும்
நறுந்தாது உண்டு நயன்இல் காலை
வறும்பூத் துறக்கும் வண்டு போல்குவம்
வினைஒழி காலைத் திருவின் செல்வி
அனையேம் ஆகி ஆடவர்த் துறப்பேம்
தாபதக் கோலம் தாங்கினம் என்பது
யாவரும் நகூஉம் இயல்பினது அன்றே

---

2. தீத்துறு செங்கோல் – தீயில் பழுக்கக் காய்ச்சிய சூட்டுக்கோல்.
4. விதுப்புறு – நடுக்கமுற்ற.
9. நகுதக்கன்று – சிரிக்கத் தக்கது.
11. வீய – இறக்க.
16. கைத்தூண் – பலருடைய கைபதாகிய உணவு.
23. தாபதக் கோலம் – துறவுக் கோலம்.

18. உதயகுமரன் அம்பலம் புக்க காதை

சித்தாரபதியின் கொதிப்பு (1 – 6)

மணிமேகலையின் இச்செய்தி கேட்ட அவளுடைய பாட்டி சித்திராபதி ஆற்றுதற்கரிய புண்ணினுள்ளே தீயில் பழுக்கக் காய்ச்சப்பெற்ற சூட்டுக்கோல் சென்று சுட்டதைப்போல உள்ளம் கொதித்தாள். ஆத்திரம் வரம்பு கடந்து மேலேறியது; நெஞ்சு நடுக்குற்றாள்; பெருமூச்சு விட்டாள்; கலங்கினாள். 'மணிமேகலையின் இத்துறவறத்தை ஒழித்துக் கட்டுவேன்' என்று நாடகக் கணிகையருக் கெல்லாம் கூறத் தொடங்கினாள்.

மாதவி துறவு நாணத்தக்கது (7 – 10)

''கோவலன் இறந்த பின் மிகு துயர் அடைந்து மாதவி பெருந்தவத்தினரான அறவண அடிகளின் பௌத்தப் பள்ளியைச் சேர்ந்தாள். அதுவே இப் பேரூரில் சிரிக்கத்தக்கதாயிற்று. அறிஞர்களுக்கே அஃது இகழ்ச்சிச் சொல்லாயிற்று.

பத்தினிப் பெண்டிர் அல்லேம் (11 – 16)

கணவன் இறந்ததும் பெருந்துயர் கொண்டு, அவன் இறந்த அப்போதே நீங்காத தன் உயிரை வெறுத்து, குளிர்ந்த பெரிய குளத்திலே முழுகி நீராடுவதுபோலச் சிதையைப் பற்றியெறியும் தீயினுள் புகுந்து, தம் உயிரைப் போக்குவர் பத்தினிப் பெண்டிர். நாம் அத்தகைய பத்தினியர் அல்லேம்; பலருடைய கையிலிருந்து பொருள் பெற்று உண்டு வாழும் உரிமையுடையவர் நாம்!

கணிகையர் குல ஒழுக்கம் (17 – 24)

பாண் மகன் இறந்ததும் உடன் இறக்காது பிறன் ஒருவன் கையில் சேரும் யாழினத்தைப் போன்ற இயல்பினை உடையவர் நாம். மலரில் மகரந்தம் உண்ணும் வண்டு தேன் இல்லையாயின் அதைத் துறந்து வேறு பூவைத் தேடும். அதுபோலவே நாமும்! நல்வினை நீங்கும்போது திருமகள் நீங்குவள் (செல்வம் நீங்கும்). அதுபோலவே செல்வம் நீங்கிய ஆடவரை நாமும் விட்டுப் பிரிவோம். நாம் துறவுக் கோலம் பூண்டோம் என்பது யாவரும் எள்ளி நகையாடும் செயல் அல்லவோ?

மாதவி ஈனற மணிமே கலைவல்லி
போதுஅவிழ் செவ்வி பொருந்துதல் விரும்பிய
உதய குமரனாம் உலகுஆள் வண்டின்
சிதையா உள்ளம் செவ்விதின் அருந்தக்
கைக்கொண்டு ஆங்குஅவள் ஏந்திய கடிஞையைப்
பிச்சை மாக்கள் பிறர்கைக் காட்டி
மற்றுஅவன் தன்னால் மணிமே கலைதனைப்
பொன்தேர்க் கொண்டு போதேன் ஆகில்
சுடுமண் ஏற்றி அரங்குசூழ் போகி
வடுவொடு வாழும் மடந்தையர் தம்மோர்
அனையேன் ஆகி அரங்கக் கூத்தியர்
மனையகம் புகாஅ மரபினன் என்றே
வஞ்சினம் சாற்றி நெஞ்சுபுகை உயிர்த்து,
வஞ்சக் கிளவி மாண்பொடு தேர்ந்து
செறிவளை நல்லார் சிலர்புறம் சூழக்
குறுவியர் பொடித்த கோலவாள் முகத்தள்
கடுந்தேர் வீதி காலின் போகி
இளங்கோ வேந்தன் இருப்பிடம் குறுகி
அரவ வண்டொடு தேன்இனம் ஆர்க்கும்
தருமணல் ஞெமிரிய திருநாறு ஒருசிறைப்
பவழத் தூணத்துப் பசும்பொன் செஞ்சுவர்த்
திகழ்ஒளி நித்திலச் சித்திர விதானத்து
விளங்குஒளி பரந்த பளிங்குசெய் மண்டபத்துத்
துளங்குமான் ஊர்தித் தூமலர்ப் பள்ளி

---

32. போதேன் ஆகில் – வாரேன் என்றால்.
33. சுடுமண் – செங்கல்.
40. வியர் – வேர்வை. பொடித்த – தோன்றிய.
41. காலின் – காற்றைப் போல விரைந்து.
43. அரவம் – ஒலி.
44 ஞெமிரிய – பரந்த.

மணிமேகலையைக் கைப்பற்றி வருவேன் (25 – 32)

என் மகள் மாதவி பெற்ற பூங்கொடியாள் மணிமேகலை பருவ மலர்ச்சி பெற்றபோது, அவளைத் தழுவி இன்பம் நுகர விரும்பியவன் அரச மகன் உதயகுமரன். இந் நாட்டினை ஆளும் அரச வண்டாகிய அவன் உள்ளத்தை வேறொருத்தியாலும் சிதைக்க முடியவில்லை. அவன் செவ்வையான முறையிலே அருந்தி அனுபவிக்குமாறு மணிமேகலையைக் கைப்பற்றி வருவேன். அவள் ஏந்தியிருக்கிற பாத்திரத்தைப் பிடுங்கிப் பிச்சை எடுத்துண்ணும் பிறமக்கள் கையிலே எறிவேன். உதயகுமரனைக் கொண்டு அம் மணிமேகலையைப் பொற்றேரில் ஏற்றிக் கொண்டு வருவேன்.

சித்திராபதியின் வஞ்சினம் (33 – 37)

அப்படிச் செய்யாவிட்டால், ''என் தலைமேல் சுட்ட செங்கற்களைச் சுமந்து ஆடரங்கைச் சுற்றி வருவேன். குலமரபு கெட்டுப் பழியுடன் வாழுகின்ற நாடக மடந்தையர் போன்றவள் ஆவேன். அரங்கக் கூத்தியர் வீட்டில் நுழையத் தகுதியில்லாதவளுமாவேன்'' என வஞ்சினம் கூறினாள்.

உதயகுமரனிடம் சென்றாள் (38 – 42)

நெஞ்சில் புகையெழப் பெருமூச்சு விட்டு, தான் கூறிய வஞ்சினத்தை முடிக்க உள்ளம் கொண்டாள். அவளது அழகிய ஒளியுடைய முகத்தில் சிறு வியர்வை அரும்பியது. செறிந்த வளையணிந்த நாடகக் கணிகையர் சிலர் சூழ்ந்துவர்த் தேரோடும் வீதியில் காற்றைப்போல விரைந்து சென்றாள். இளவரசன் உதய குமரனின் இருப்பிடம் சேர்ந்தாள்.

தவம் தவறு இன்றி நடக்கிறதோ? (43 – 54)

(உதயகுமரன் மணிமண்டபத்தில் வீற்றிருந்தான்). வண்டுகளும் தேனீக்களும் ஆரவாரம் செய்யும் மணல் பரந்த அழகிய முன்றில் ஒரு பக்கம் விளங்குகிறது. அதில் ஒரு பளிங்கு மண்டபம். அதன் தூண்களோ பவளம்; சுவர்களோ செம்பொன்; விதானமோ முத்துகள்; மண்டபம் ஒளிமயமாக விளங்குகிறது. அரியணையில் தூய மலர் போன்ற மெதுவான இருக்கை மீது உதயகுமரன் வீற்றிருக்கின்றான்.

வெண்திரை விரிந்த வெண்நிறச் சாமரை
கொண்டுஇரு மருங்கும் கோதையர் வீச
இருந்தோன் திருந்துஅடி பொருந்திநின்று ஏத்தி,
திருந்துஎயிறு இலங்கச் செவ்வியின் நக்குஅவன்
மாதவி மணிமே கலையுடன் எய்திய
தாபதக் கோலம் தவறுஇன் றோஎன,
அரிதுபெறு சிறப்பில் குருகுகரு உயிர்ப்ப
ஒருதனி ஓங்கிய திருமணிக் காஞ்சி
பாடல்சால் சிறப்பின் பரதத்து ஓங்கிய
நாடகம் விரும்ப நல்நலம் கவினிக்
காமர் செவ்விக் கடிமலர் அவிழ்ந்தது
உதய குமரன்எனும் ஒருவண்டு உணீஇய
விரைவொடு வந்தேன் வியன்பெரு மூதூர்ப்
பாழ்ம்ம் பறந்தலை அம்பலத்து ஆயது
வாழ்சுநின் கண்ணி வாய்வாள் வேந்துஎன,
ஓங்கிய பௌவத்து உடைகலப் பட்டோன்
வான்புணை பெற்றென மற்றுஅவட்கு உரைப்போன்:
மேவிய பளிங்கின் விருந்தின் பாவைஇ்ந்து
ஓவியச் செய்திஎன்று ஒழிவேன் முன்னர்க்
காந்தள்அம் செங்கை த்ளைபிணி விடாஅ
ஏந்துஇள வனமுலை இறைநெரித் ததூஉம்

---

49. வெண்திரை விரிந்த – வெள்ளிய அலைகள் போல விரிந்த.
52. நக்கு – சிரித்து.
54. தாபதக் கோலம் – தவ வேடம்.
55. குருகுகரு உயிர்ப்ப – குருக்கத்தி பெற, மாதவி பெற.
குருகு – குருக்கத்திக் கொடி. குருக்கத்தி மாதவி என்றும் வழங்கப்பெறும்.
56. திருமணிக் காஞ்சி – அழகிய காஞ்சி மரம்; அழகிய மணிமேகலை.
65. வான்புணை – சிறந்த தெப்பம்.

இருபுறமும் மங்கையர் கவரி வீசுகின்றனர். அக் கவரிகள் கடலின் வெள்ளிய அலைபோல விரைந்து அசைகின்றன. சித்திராபதி உதயகுமரனைக் கண்டு வணங்கி நின்றாள்.

உதயகுமரன் தன் அழகிய பற்கள் வெளிப்படுமாறு சிரித்து, ''மாதவியும் மணிமேகலையும் கொண்டுள்ள தவவேடம் தவறின்றி நடக்கிறதோ?'' எனக் கேட்டான்.

சித்திராபதியின் தூண்டுதல் (55 – 63)

(உதயகுமரன் அரச மண்டபத்தில் பணிப்பெண்டிர் சூழ இருந்ததால் சித்திராபதி தான் சொல்லவந்ததைக் குறிப்பால் சிலேடையாக உரைக்கிறாள்.)

''அரிய குஞ்சினைப் பெறும் சிறப்புடைய குருகு (மாதவி) கருத்தரித்து, ஒப்பற்ற தனித்திரு அழகிற் சிறந்த மணிக்காஞ்சி (மணிமேகலை) தோன்றியது. பரத கண்டத்தில் உள்ள நாட்டோர் விரும்புமாறு அழகிய நலங்கள் நிறைந்த அம் மணிக்காஞ்சிமலர் அழகு நிறைந்து இப்போது இதழ் விரிந்துள்ளது. அதை உதயகுமரனாகிய வண்டு உடனே உண்ண வேண்டும்; அதைக் கூறவே விரைந்து வந்தேன். அம் மணிமலர் இம் மூதூரில் புறங்காட்டைச் சார்ந்த உலக அறவி என்னும் ஊரம்பலத்தில் உள்ளது. வாளேந்திய மன்னவ! வாழ்க நின் கண்ணி'' எனச் சித்திராபதி கூறினாள்.

(குருகு - மாதவி; மணிக்காஞ்சி - மணிமேகலை. மாதவி ஈன்ற மகள் மணிமேகலை பருவம் அடைந்துள்ளாள். அவள் இப்போது ஊரம்பலத்தில் உள்ளாள் எனச் சித்திராபதி குறிப்பால் கூறினாள்)

தெய்வத்தின் எச்சரிக்கை (64 – 85)

அலை கடலில் கப்பல் உடைந்து வருந்துவோனுக்குச் சிறந்த தெப்பம் கிடைத்ததுபோன்ற மகிழ்ச்சியுற்ற உதயகுமரன் சித்திராபதியிடம் கூறலானான். ''பளிக்கறையினுள் இருந்த மணிமேகலையைக் கண்டபோது முதலில் இஃது ஓர் ஓவியப் பாவை என்று நினைத்துப் புறப்பட இருந்தேன். அப்போது காந்தள் மலர் போன்ற பிணைந்திருந்த அவளுடைய கைகள் எடுப்பாயிருந்த அவளுடைய மார்பகங்களைச் சிறிது நெறிக்கக் கண்டேன்.

ஒத்துஒளிர் பவளத்து உள்ஒளி சிறந்த
முத்துக்கூர்த் தன்ன முள்எயிற்று அமுதம்
அருந்தே மாந்த ஆர்உயிர் தளிர்ப்ப
விருந்தின் மூரல் அரும்பிய தூஉம்
மாஇதழ்க் குவளை மலர்புறத்து ஒட்டிக்
காய்வேல் வென்ற கருங்கயல் நெடுங்கண்
அறிவுபிறிது ஆகியது ஆயிழை தனக்குஎனச்
செவியகம் புகூஉச் சென்ற செவ்வியும்,
பளிங்குபுறத்து எறிந்த பவளப் பாவைஎன்
உளம்கொண்டு ஒளித்தாள் உயிர்க்காப் பிட்டுஎன்று
இடைஇருள் யாமத்து இருந்தேன் முன்னர்ப்
பொன்திகழ் மேனி ஒருத்தி, தோன்றிச்
செங்கோல் காட்டிச் செய்தவம் புரிந்த
அங்குஅவள் தன்திறம் அயர்ப்பாய் என்றனள்
தெய்வம் கொல்லோ திப்பிய மம் கொல்லோ
எய்யா மையலேன் யான்எஓறு அவன்சொல,
சித்திரா பதிதான் சிறுநகை எய்தி
அத்திறம் விடுவாய் அரசிளாங் குரிசில்
காமக் கள்ளாட்டு இடைமயங் குற்றன
தேவர்க் காயினும் சிலவோ செப்பின்,
மாதவன் மடந்தைக்கு வருந்துதுயர் எய்தி
ஆயிரம் செங்கண் அமரர்கோன் பெற்றதும்,
மேருக் குன்றத்து ஊருநீர்ச் சரவணத்து
அருந்திறல் முனிவர்க்கு ஆ,ர்.அணங்கு ஆகிய
பெரும்பெயர்ப் பெண்டிர் பிறர்புஉளம் போக்கிய
அங்கி மனையாள் அவரவர் படிவாய்த்
தங்கா வேட்கை தனைஅவள் ,தணித்ததூஉம்
கேட்டும் அறிதியோ வாள்திறல் குரிசில்

---

71. கூர்த்தன்ன – கூர்மையுற்றாற் போன்ற.
72. ஏமாந்த – ஆசைப்பட்ட.
73. விருந்தின் மூரல் – புதிய இள நகை.
83. அயர்ப்பாய் – மறப்பாய்.
95. அங்கி – நெருப்புக் கடவுள்.

பவளம் போன்று செவ்வொளி பொலிந்த இதழ்களினுள்ளே, முத்துகளைக் கூர்மை செய்து அமைத்ததுபோன்ற வெண்மையான அவளுடைய பற்கள் தோன்றின. அவளுடைய அவ்விதழமுதத்தை அருந்த என் ஆருயிர் ஆசைப்பட்டது. அவ் வுயிர் தளிர்க்குமாறு அவளும் புதியதொரு புன்முறுவல் பூத்தாள். பகைவரை அழிக்கும் வேலினையும் வெல்லும் அவளுடைய கயல்போன்ற கரிய கண்கள் பெரிய இதழ்களையுடைய கருங்குவளை மலர்களையும் வெல்லுவனவாய் விளங்கின. அக் கண்கள் அவ்வாயிழையாளுக்கு அறிவு நிலை மயங்கியதைக் காதுகளிடம் ஓடிச் சென்று சொல்வது போன்ற அழகையும் கண்டேன்.

இவற்றைக் கண்டதும் பளிக்கறையின் வெளியே பளிச்சிட்ட அப் பவள நிறப் பாவை என் உள்ளத்தே புகுந்து அதனைத் தன்வசம் ஆக்கிக் கொண்டாள். அவள் நினைவால் இரவெல்லாம் விழித்திருந்தேன். அப்போது என்முன்னே பொன்போன்ற திருமேனியுடைய ஒருத்தி தோன்றி, சோழர் செங்கோன்மையை அறிவுறுத்தி, ''மணிமேகலை தவநெறிச் சென்றாள். அவள்மீது வைத்த நினைவை மறப்பாய் என்று சொன்னாள். அவ்வாறு சொன்னது தெய்வமோ அல்லது வேறு யாதோ? என அறிய முடியாது மயங்கினேன்'' என்றான் உதயகுமரன்.

தேவரும் மயங்கினரே (86 – 97)

சித்திராபதி சிறுநகை பூத்துச் சொன்னாள். ''அரசிளங்குமரனே! அப் பொன்மேனியாள் சொன்னதை மற சொல்லப்போனால் தேவர்களேயாயினும் காமக்களியாட்டில் மயக்கமுற்றுச் செய்த செயல்கள் மிகப்பல. கௌதமன் மனைவியாகிய அகலிகையை விரும்பி, அம் முனிவரின் சாபத்தால் வானவர் தலைவனாகிய இந்திரன் ஆயிரம் செங்கண் பெற்றான். மேருமலையில் நீர் நிறைந்த சரவணப் பொய்கை உள்ளது. அங்கே அரிய திறமுடைய ஏழு முனிவர் வாழ்ந்தனர். அவர்களுடைய மனைவியர் எழுவரும் பேரழகினர். நெருப்புக் கடவுள் அவர்களைக் காதலித்து அவர்களிடம் தன் உள்ளத்தைப் பறிகொடுத்தான். வேட்கை தாங்காமல் காட்டிற்குச் சென்றான். அந் நெருப்புக்கடவுளின் மனைவி அம்முனிவர் மனைவி ஒவ்வொருவரின் வடிவத்தைத் தானே மேற்கொண்டு கணவனைக்கூடி அவன் வேட்கையைத் தணித்தாள். வாள்வலமிக்க அரசே! இவற்றையெல்லாம் நீ கேட்டு அறிந்ததில்லையோ?

கன்னிக் காவலும் கடியின் காவலும்
தன்உறு கணவன் சாவுறின் காவலும்
நிறையின் காத்துப் பிறர்பிறர்க் காணாது
கொண்டோன் அல்லது தெய்வமும் பேணாப்
பெண்டிர்தம் குடியில் பிறந்தாள் அல்லள்
நாடவர் காண நல்அரங்கு ஏறி
ஆடலும் பாடலும் அழகும் காட்டிச்
சுருப்புநாண் கருப்புவில் அருப்புக்கணை தூவச்
செருக்கயல் நெடுங்கண் சுருக்குவலைப் படுத்துக்
கண்டோர் நெஞ்சம் கொண்டுஅகம் புக்குப்
பண்தேர் மொழியின் பயன்பல வாங்கி
வண்டின் துறக்கும் கொண்டி மகளிரைப்
பான்மையில் பிணித்துப் படிற்றுஉரை அடக்குதல்
கோல்முறை அன்றோ குமரற்கு என்றலும்,
உதய குமரன் உள்ளம் பிறழ்ந்து
விரைபரி நெடுந்தேர் மேல்சென்று ஏறி
ஆயிழை இருந்த அம்பலம் எய்திக்
காடுஅமர் செல்வி கடிப்பசி களைய
ஓடுகைக் கொண்டுநின்று ஊட்டுநர் போலத்
தீப்பசி மாக்கட்குச் செழுஞ்சோறு ஈத்துப்
பாத்திரம் ஏந்திய பாவையைக் காண்டலும்,
இடங்கழி காமமொடு அடங்கான் ஆகி

98. கடி – திருமணம்
100. நிறை - நெஞ்சைக் கற்பு நிலையில் நிறுத்தல்.
105. சுருப்பு – வண்டு. அருப்புககணை – மலர் அரும்பாகிய அம்பு.
109. கொண்டி மகளிர் – பொருள் கொள்ளும் பரத்தையர்.
110. படிற்று உரை – பொய் வார்த்தை
115. காடு அமர் செல்வி – துர்க்கை.
119. இடங்கழி காமம் – வரம்பின்றிப் பெருகிய காமம்

குலமாதர் காப்பு (98 – 102)

(கற்புள்ள குலமாதர் காவலில் வாழ்பவர்.) குல மகளிர்க்குக் கன்னிப் பருவத்தில் பெற்றோரின் காவல்; மணமானதும் கணவனின் காவல்; மணந்த கணவன் இறந்து கைம்பெண்ணானபோதும் மக்களின் காவல்; அவர்கள் உள்ளத்தை நிறைவான கற்பு நெறியில் காத்துக் கொள்ள வேண்டும். பிறர் எவரையும் நோக்கலாகாது; கொண்ட கணவனைத் தெய்வமாகக் கொள்ள வேண்டுமல்லாது பிற தெய்வங்களைப் பேணக்கூடாது. இத்தகைய குலமகளிர் மரபில் தோன்றியவள் அல்லள் மணிமேகலை.

கொண்டி மகளிரை அடக்கியாள்க (103 – 111)

கணிகையர் நாட்டோர் காணுமாறு நாட்டிய மேடை ஏறி ஆடலும் பாடலும் அழகும் காட்டுபவர். கரும்பு வில்லில் வண்டு நாணேற்றி மலர் அம்புகளை மன்மதனை எய்யச் செய்வர். (அதாவது காம மயக்கத்தைத் தோற்றுவிப்பர்.) போர்புரியும் கயல்மீன்களைப்போலப் பிறழுகின்ற தம் கண் வலையை வீசிக் காண்பார் உள்ளங்களைப் பற்றி இழுத்துக் கொள்வர். பண்போலும் இனிய மொழிகளைப் பேசித் தம்மைச் சேர்வோரிடமுள்ள பொருள்களையெல்லாம் பறித்துக் கொள்வர்; அவர்களிடம் செல்வம் நீங்கியதும் தேனில்லாத மலரை விட்டு நீங்கும் வண்டுபோல அவரை விட்டு நீங்கி வேற்றிடம் செல்வர். இத்தகைய கொண்டிமகளிரை, தம் தொழிலில் நிற்கச்செய்து அவர்களுடைய பொய்யுரைகளை அடக்கியாளுதல் அரசிளங் குமரனுக்குச் செங்கோல் முறையன்றோ?'' என்றாள் சித்திராபதி.

உலகஅறவி சென்றான்;
மணிமேகலையைக் கண்டான் (111 – 119)

இதைக் கேட்டதும் உதயகுமரனுடைய உள்ளம் வேறுபட்டது. விரைந்து செல்லும் குதிரைகள் பூட்டிய நெடுந்தேரில் ஏறி மணிமேகலையிருந்த உலக அறவியை அடைந்தான். பேய்களின் பசியைப் போக்க ஓட்டினைக் கையிற்கொண்டு காளி உணவூட்டியதைப்போல பெரும்பசியாளர்க்குப் பாத்திரமேந்திச் சோறு தந்து கொண்டிருந்த மணிமேகலையைக் கண்டான். வரம்பின்றிப் பெருகிய காமத்தை அடக்க முடியாதவனானான்.

உடம்போடு என்தன் உள்ளகம் புகுந்துஎன்
நெஞ்சம் கவர்ந்த வஞ்சக் கள்வி
நோற்றுஊண் வாழ்க்கையின் நொசிதவம் தாங்கி
ஏற்றுஊண் விரும்பிய காரணம் என்எனத்
தானே தமியள் நின்றோள் முன்னர்
யானே கேட்டல் இயல்புஎனச் சென்று
நல்லாய் என்கொல் நல்தவம் புரிந்தது
சொல்லாய் என்று துணிந்துஉடன் கேட்ப,
என்அமர் காதலன் இராகுலன் ஈங்குஇவன்
தன்அடி தொழுதுலும் தகவுஎன வணங்கி
அறைபோய் நெஞ்சம் அவன்பால் அணுகினும்
இறைவளை முன்கை ஈங்குஇவன் பற்றினும்
தொன்று காதலன் சொல்எதிர் மறுத்தல்
நன்றி அன்றுஎன நடுங்கினள் மயங்கிக்
கேட்டது மொழிவேன் கேள்வி யாளரில்
தோட்ட செவியைநீ ஆகுவை யாம்எனில்
பிறத்தலும் மூத்தலும் பிணிப்பட்டு இரங்கலும்
இறத்தலும் உடையது இடும்பைக் கொள்கலம்
மக்கள் யாக்கை இதுஎன உணர்ந்து
மிக்க நல்அறம் விரும்புதல் புரிந்தேன்
மண்டுஅமர் முருக்கும் களிறுஅனை யார்க்குப்
பெண்டிர் கூறும் பேர்அறிவு உண்டோ
கேட்டனை ஆயின் வேட்டது செய்கென,
வாள்திறல் குரிசிலை மடக்கொடி நீங்கி
முந்தை முதல்வி முதியாள் இருந்த
குச்சரக் குடிகை தன்அகம் புக்குஆங்கு

---

123. ஏற்றுஊண் – இரந்துண்ணும் உணவு.
128. என் அமர் – என்னை விரும்பிய.
130. அறை போய் – கட்டிழந்து போய்.
137. இடும்பை – துன்பம்.
140. அமர் – போர். முருக்கும் – அழிக்கும்.
145. குச்சரக் குடிகை – கூர்ச்சர நாட்டு வேலைப்பாடமைந்த சிறிய கோயில்.

தவம் மேற்கொண்டது ஏன்? (120 – 126)

''உடம்போடு என் உள்ளத்தேயும் புகுந்து என் நெஞ்சத்தைக் கவர்ந்து கொண்ட வஞ்சக் கள்வி இவள். நோன்புகளால் பட்டினி கிடந்து உண்ணும் நுண்ணிய தவத்தைத் தாங்கிப் பிச்சை ஏற்று உண்ண விரும்பியிருக்கிறாள். அதன் காரணம் என்ன எனத் தன்னந்தனியாக நிற்கும் மணிமேகலையின் முன்னே சென்று நானே கேட்டறிதல் நன்று'' என நினைத்தவனாக அவள் முன் சென்றான்.

''நங்கையே! நீ குலத்தொழிலை விட்டு நற்றவம் புரிவது ஏனோ? சொல்'' என்று துணிந்து அவளைக் கேட்டான்.

மணிமேகலை மயங்கினாள் (127 – 133)

''இவன் முற்பிறவியில் என்னை விரும்பிய கணவனாகிய இராகுலன். ஆதலின் இவன் அடிகளைத் தொழுதலும் தகுதியுடையதே'' என நினைத்து மணிமேகலை அவனை வணங்கினாள். நெஞ்சம் கட்டிழந்துபோய் அவனிடத்தே சென்றாலும், வளை குலுங்கும் என் கையை இவன் பற்றினாலும், முற்பிறப்புக் கணவனாகிய இவன் பேச்சை எதிர்மறுத்தல் நன்றில்லை'' என்று (எங்கே அவ்வாறு நிகழ்ந்துவிடுமோ என) நடுக்கமுற்று மயங்கினாள்.

மணிமேகலையின் அறவுரை (134 – 145)

''இளங்கோவே ! (உன் வினாவிற்கு மறுமொழி கூறுவேன்.) முறையாகக் கேட்டுணருகின்ற தன்மையினை உடையவரைப் போல நீயும் கேட்டுணரும் செவியினை உடையையாயின் கேட்பாயாக ! பிறத்தலும், மூப்பு அடைதலும், நோயுற்று வருந்துதலும், இறத்தலும் ஆகிய தன்மைகளை உடையது மக்கள் உடல். இது துன்பங்களுக்குக் கொள்கலமாக இருப்பது. இதை நன்றாக உணர்ந்தே மேன்மையுடைய அருளறத்தை விரும்பி மேற்கொண்டேன். பெரும் போரில் பகைவரை அழிக்கும் யானை போன்ற வீரம் மிக்க உமக்கு, என்னைப் போன்ற மகளிர் கூறும் அறிவுரை உண்டோ? எனினும், என் சொற்களைக் கேட்ட பிறகு உம் விருப்பப்படி நடப்பீராக'' எனச் சொல்லியபின் வாளாற்றல் மிக்க இளவரசனை விட்டு மணிமேகலை அகன்று சென்றாள். அனைவருக்கும் முற்பட்ட முதல்வியும் முதியோளுமாகிய சம்பாபதி இருந்த சிறிய கோயிலுள்ளே புகுந்தாள்.

ஆடவர் செய்தி அறிகுநர் யார்எனத்
தோடுஅலர் கோதையைத் தொழுதனள் ஏத்தி
மாய விஞ்சை மந்திரம் ஓதிக்
காயசண் டிகைஎனும் காரிகை வடிவாய்
மணிமே கலைதான் வந்து தோன்ற
அணிமலர்த் தாரோன் அவள்பால் புக்குக்
குச்சரக் குடிகைக் குமரியை மரீஇப்
பிச்சைப் பாத்திரம் பெரும்பசி உழந்த
காயசண் டிகைதன் கையில் காட்டி
மாயையின் ஒளித்த மணிமே கலைதனை
ஈங்குஇம் மண்ணீட்டு யார்என உணர்கேன்
ஆங்குஅவ்வள் இவள்என்று அருளா யாயிடின்
பல்நா ளாயினும் பாடு கிடப்பேன்
இன்னும் கேளாய் இமையோர் பாவாய்
பவளச் செவ்வாய்த் தவளவாள் நகையும்
அஞ்சனம் சேராச் செங்கயல் நெடுங்கணும்
முரிந்துகடை நெரிய வளைந்தசிலைப் புருவமும்
குவிமுள் கருவியும் கோணமும் கூர்நுனைக்
கவைமுள் கருவியும் ஆகிக் கடிகொளக்

146. அறிகுநர் – அறிவோர்.
152. குமரி – சம்பாபதி.
156. மண்ணீடு – சுதையால் செய்யப்பட்ட பாவை.
158. பாடு கிடப்பேன் – வரங்கேட்டுக் கிடப்பேன்.

காயசண்டிகை வடிவடைந்தாள் (146 – 150)

''அம்மையே! ஆடவர் செயலை யார் அறிவார்?'' (உதயகுமரன் என்னை விரும்பி வந்துள்ளான். என்னைக் காத்தருள வேண்டும்.) என நினைந்து இதழ் விரிந்த மலர்மாலையை அணிந்த சம்பாபதியை வணங்கிப் போற்றினாள்.

மணிமேகலைத் தெய்வம் அருளிய உருமாறும் மந்திரத்தை ஓதி (அட்சய பாத்திர உணவால் பசி தீர்ந்து தன் ஊர் திரும்பிய) காயசண்டிகையின் வடிவு பெற்றுக் கோயிலின் வெளியே வந்து தோன்றினாள்.

உதயகுமரன் சம்பாபதியிடம் முறையிட்டான் (151 – 172)

அழகிய மலர் மாலையணிந்த உதயகுமரன் காயசண்டிகை உருக் கொண்ட நங்கையிடம் சென்றான். மணிமேகலையைக் காணாது மயங்கினான். பிறகு கோயிலுள் சம்பாபதி தெய்வத்திடம் சென்று, ''மணிமேகலை தன் பிச்சைப் பாத்திரத்தைப் பெரும்பசி நோயுற்று வருந்திய காயசண்டிகையின் கையிலே தந்துவிட்டு, மாயையினாலே தன்னை மறைத்துக் கொண்டாள். இங்குள்ள மண்ணீட்டுப் பாவைகளுள் மணிமேகலை யாவள் என என்னால் அறிய முடியவில்லை! இங்கே இருப்பவற்றுள் இவள்தான் மணிமேகலை என அறிவித்தருள். இல்லையெனின் பல நாளாயினும் இவ் விடத்திலேயே வரம் வேண்டிக் கிடப்பேன்'' எனச் சம்பாபதி தெய்வத்திடம் முறையிட்டுக் கொண்டான்.

மணிமேகலை வெள்ளொளி விளங்கும் பல் வரிசையினள்; மை தீட்டப் பெறாத அவளுடைய செவ்விழிகள் கயல் போலப் புரளும்; புருவங்கள் கடைமுறிய வளைந்து விரிந்த வில்லைப்போல் இருக்கும், குவிந்த முட்கருவியினைப் போன்ற மூக்கும், மேனியில் தோன்றும் பல்வகைக் கோணங்களும், கவைத்த முட்கருவியினைப் போன்று விளங்கும் திருமுலைகளும் உடையவளாகித் தக்க பாதுகாப்புடனே நின்றாள். நான் யானை போன்றேன். அவள் அங்குசம் போன்றாள். அவள் கண்ணும் சிரிப்பும் யானையை அடக்கும் கருவிகள் போன்றன. அவள் புன்னகை குவிந்த முள் கருவி போன்றது. கண்ணோ அங்குசம் போன்றது. புருவம் கவையான கூர்த்த முட்கருவியான பரிக்கோல் போன்றது. இவற்றால் அவள் தன்னைக் காத்துக் கொண்டாள்.

கல்விப் பாகரில் காப்புவலை ஓட்டி
வல்வாய் யாழின் மெல்லிதின் விளங்க
முதுக்குறை முதுமொழி எடுத்துக் காட்டிப்
புதுக்கோள் யானை வேட்டம் வாய்த்தென
முதியாள் உன்தன் கோட்டம் புகுந்த
மதிவாள் முகத்து மணிமே கலைதனை
ஒழியப் போகேன் உன்அடி தொட்டேன்
இதுகுறை என்றனன் இறைமகன் தான்என்.

167. முதுக்குறை முதுமொழி – பேரறிவைப் புலப்படுத்தும் மொழி.
168. புதுக் கோள் – புதிதாகக் கொள்ளப்படும்.
171. இது குறை – இதுவே எனக்கு வேண்டும் காரியம்

கல்வியாகிய பாகனும் வசமிழந்து போனதால் காப்பாகிய வலையினுள் என்னை அகப்படுத்திக்கொண்டு, சொல்வன்மையையுடைய வாயாகிய யாழினாலே மென்மையுடன் விளங்கும் படியாகப் பேரறிவினைக் காட்டும் முதுமொழிகளையும் எனக்கு அவள் எடுத்துக் காட்டினாள். 'புதிதாகக் கொள்ளப்படுகின்ற யானை வேட்டை யொன்று வாய்த்ததென என்னை அகப்படுத்திக்கொண்டு, சம்பாபதியே நின் கோயிலுள்ளே புகுந்து கொண்டாள். மதி போன்ற முகமுடைய அம் மணிமேகலையை விட்டு விட்டு, யான் இவ்விடத்தினின்று போக மாட்டேன். இது நின் திருவடிகளைத் தொட்டுச் சொல்லும் சூளுரை. என் மனக் குறையைத் தீர்த்தருள், முதிய தெய்வமே மணிமேகலையைத் தந்தருள்' என்று இறைஞ்சி நின்றான் உதயகுமரன்.

19. சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய காதை

முதியாள் திருந்துஅடி மும்மையின் வணங்கி
மதுமலர்த் தாரோன் வஞ்சினம் கூற
ஏடுஅவிழ் தாரோய் எம்கோ மகள்முன்
நாடாது துணிந்துநா நல்கூர்ந் தனைஎன
வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரம் ஒன்று தெய்வம் கூறலும்
உதய குமரன் உள்ளம் கலங்கிப
பொதிஅறைப் பட்டோர் போன்றுமெய் வருந்தி
அங்குஅவள் தன்திறம் அயர்ப்பாய் என்றே
செங்கோல் காட்டிய தெய்வமும் திப்பியம்
பைஅரவு அல்குல் பலர்பசி களையக்
கையில் ஏந்திய பாத்திரம் திப்பியம்
முத்தை முதல்வி அடிபிழைத் தாய்எனச்
சித்திரம் உரைத்த இதூஉம் திப்பியம்
இந்நிலை எல்லாம் இளங்கொடி செய்தியின்
பின்அறி வாம்எனப் பெயர்வோன் தன்னை
அகல்வாய் ஞாலம் ஆர்இருள் உண்ணப்
பகல்அரசு ஓட்டிப் பணைஎழுந்து ஆர்ப்ப
மாலை நெற்றி வான்பிறைக் கோட்டு
நீல யானை மேலோர் இன்றிக்

---

2. வஞ்சினம் – சூளுறவு.
4. நா நல்கூர்ந்தனை – நா வறுமையுற்றாய்.
8. பொதியறை – துவாரமில்லாத கீழ் அறை.
9. அயர்ப்பாய் – மறப்பாய்.
18. பகல் அரசு – சூரியன். பணை – பறை.
20. மேலோர் – பாகர்.

19. சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆக்கிய காதை

சித்திரப்பாவை சொல் (1 – 6)

சம்பாபதியின் திருவுடிகளை மும்முறை வணங்கி, தேன்பொழியும் மாலையணிந்த உதயகுமரன் சூளுரை கூறினான். அக் கோயிலில் இருந்த, திறமைமிக்க சிற்பி செய்தமைத்த வேலைப்பாடுமிக்க சித்திரப்பாவை ஒன்று அதனைக் கேட்டு, ''இதழ் விரிந்த மாலை சூடியுள்ளவனே! எம்முடைய தலைவியின் முன் ஆராயாது துணிவுடன் சூளுரை கூறினாய். அதனால் நா வறுமையுற்றாய்! உன் பேச்சுப் பயனற்றுப்போனது'' எனத் தெய்வவாக்காகக் கூறியது.

உதயகுமரன் வியப்பு (7 – 16)

இதனைக் கேட்ட உதயகுமரன் உள்ளங் கலங்கினான். காற்றுப்புக முடியாத அறையினுள் அடைக்கப்பட்டவன்போல உடல் வருந்தினான். ''மணிமேகலைமீது கொண்ட எண்ணத்தை மறந்து விடு என்று செங்கோல் முறைமையை எடுத்துச் சொல்லிய தெய்வச் சொல்லும் வியப்பு; பாம்பின் படம் போன்ற அல்குலையுடைய மணிமேகலை பலருடைய பசியைப் போக்கத் தன் கையிலே ஏந்தியுள்ள பாத்திரமும் வியப்பு; மூத்த முதல்வியாகிய சம்பாபதிமுன் பிழையான சூளுரைத்தாய் எனச் சித்திரம் இப்போது கூறியதும் வியப்பு. இவற்றின் உண்மைகளை எல்லாம் பின்னர் அறிவோம்; முதலில் இளங்கொடி மணிமேகலையின் செய்தியை அறிவோம்'' என்று உதயகுமரன் திரும்பினான்.

இரவு வந்தது (17 – 28)

அகன்ற இடமுடைய உலகினை இருள் கவ்வியது. (இருள் கரிய யானையாக உருவகித்துக் கூறப்படுகிறது. உதயகுமரனைத் தொடர்கிற்து இரவான கரிய யானை). அந்தி மாலையை நெற்றியாகவும், வானில் எழுந்த பிறைச் சந்திரனைக் கொம்பாகவும், மேலிருந்து செலுத்தும் பாகர் இன்றி,

காமர் செங்கை நீட்டி வண்டுபடு
பூநாறு கடாஅம் செருக்கிக் கால்கிளர்ந்து
நிறைஅழி தோற்றமொடு தொடர முறைமையின்
நகர நம்பியர் வளையோர் தம்முடன்
மகர வீணையின் கிளைநரம்பு வடித்த
இளிபுணர் இன்சீர் எஃகுஉளம் கிழிப்பப்
பொறாஅ நெஞ்சில் புகைஎரி பொத்திப்
பறாஅக் குருகின் உயிர்த்துஅவன் போயபின்,
உறையுள் குடிகை உள்வரிக் கொண்ட
மறுஇல் செய்கை மணிமே கலைதான்
மாதவி மகளாய் மன்றம் திரிதரின்
காவலன் மகனோ கைவிட லீயான்
காய்பசி யாட்டி காயசண் டிகைஎன
ஊர்முழுது அறியும் உருவம் கொண்டே
ஆற்றா மாக்கட்கு ஆற்றும் துணையாகி
ஏற்றலும் இடுதலும் இரப்போர் கடன்அவர்
மேல்சென்று அளித்தல் விழுத்தகைத்து என்றே
நூல்பொருள் உணர்ந்தோர் நுனித்தன ராம்என
முதியாள் கோட்டத்து அகவயின் இருந்த
அமுத சுரபியை அங்கையின் வாங்கிப்
பதிஅகம் திரிதரும் பைந்தொடி நங்கை

---

21. காமர் செங்கை – விருப்பமாகிய துதிக்கை.
22. கடாஅம் – மதம். கால் கிளர்ந்து – காற்றைப் போல எழுந்து.
26. இளி – இசை.
28 பறாஅக் குருகு – கொல்லன் உலை மூக்கு
29. உள்வரி – வேற்றுருவம்.
32. கைவிடலீயான் – கைவிடான்.
37. விழுத்தகைத்து – சிறப்புடைத்து.
38. நுனித்தனர் – ஆராய்ந்து சொன்னார்.

விருப்புடன் தன் துதிக்கையை நீட்டியவாறு, வண்டு மொய்க்கும் மணம் நாறும் மதநீரினைச் சொரிந்த வண்ணம், காற்றைப்போல விரைந்து செருக்குடன் அடியெடுத்து நடந்து காவலை மீறிக் கட்டவிழ்த்த தோற்றத்தோடு வரும் யானையைப்போல அவ் விருள் உதயகுமரனைத் தொடர்ந்து வந்தது (அந்திச் செவ்வானம் யானையின் நெற்றியாகவும், நிலவுப்பிறை அதன் கொம்பாகவும் உருவகிக்கப் பட்டுள்ளன. இரவு விரைந்து படர்தல் யானை துதிக்கையை நீட்டி ஓடுவதுபோன்றது. யானையின் மதம் வேங்கைப்பூ மணமுடையதாக இருக்கும். யானையின் வருகையைப் பறையறிந்து அறிவிப்பதுபோல நகரில் ஒலி முழக்கம் கேட்கிறது.) இரவு நேரத்திற்கேற்ற முறைமைப்படி, நகரிலுள்ள நம்பியர் வளைக்கர நங்கையருடன் மகர வீணை மீட்டுகின்றனர். (மகர யாழ் பதினேழு நரம்புகளைக் கொண்டது). அவ்வியாழின் கிளை நரம்பாகிய ஐந்தாம் நரம்பினைத் தடவி இன்னிசை வடித்தனர். இனிய தாள ஒற்றுடன் கூடிய யாழிசை வேலாகி உதயகுமரன் உள்ளத்தைக் கிழிக்கிறது. காம வேட்கையைப் பொறுக்க முடியாத நெஞ்சுடையவனாய், அவன் கொல்லன் உலைமூக்கினைப்போல வெப்பப் பெருமூச்சு விட்டுச் சென்றான்.

மணிமேகலை காயசண்டிகையாக உருமாறினாள் (29 – 41)

அவன் சென்றபின், சிறிய கோயிலினுள் வேற்றுருவம் கொண்டு தங்கியிருந்த குற்றமற்ற தவ வாழ்க்கையினை மேற்கொண்டுள்ள மணிமேகலை, ''நான் மாதவி மக்களாக மன்றிலே உலவினால் அரசிளங்குமரன் கைப்பற்றாது விடமாட்டான். பெரும்பசி யுடையவளாகிய காயசண்டிகையை ஊர் முழுவதும் அறியும். ஆதலால் அவளுடைய வடிவில் சென்று செயலற்ற ஏழைகளுக்கு உதவி செய்வேன்'' என மணிமேகலை எண்ணினாள். (காயசண்டிகை உருவம் கொண்டாள்.) ''பசித்தவர்க்காக உணவை இரந்து பெறுதலும் பெற்றதை ஏற்போர்க்குத் தருதலும் இரந்து வாழ்வோரின் கடமையாகும். பசித்தவர் இருக்கும் இடம் தேடிச் சென்று அவர்களுக்கு உணவளித்தலே சிறப்பு என நூற் பொருள் அறிந்தோர் கூறுவர்'' என மணிமேகலை தன் மனத்தில் சிந்தித்து, சம்பாபதி கோயிலினுள் இருந்த அமுத சுரபியைத் தன் அழகிய கையில் தாங்கி, காயசண்டிகை வடிவில் நகரெங்கும் சுற்றிப் பசித்தோர் பசி நீக்கி வந்தாள்.

அதிர்கழல் வேந்தன் அடிபிழைத் தாரை
ஒறுக்கும் தண்டத்து உறுசிறைக் கோட்டம்
விருப்பொடும் புகுந்து வெய்துஉயிர்த்துப் புலம்பி
ஆங்குப் பசிஉறும் ஆர்உயிர் மாக்களை
வாங்கு கையகம் வருந்தநின்று ஊட்டலும்,
ஊட்டிய பாத்திரம் ஒன்றுஎன வியந்து
கோட்டம் காவலர் கோமகன் தனக்குஇப்
பாத்திர தானமும் பைந்தொடி செய்தியும்
யாப்புடைத் தாக இசைத்தும்என்று ஏகி,
நெடியோன் குறள்உரு வாகி நிமிர்ந்துதன்
அடியில் படியை அடக்கிய அந்நாள்
நீரின் பெய்த மூரி வார்சிலை
மாவலி மருமான் சீர்கெழு திருமகள்
சீர்த்தி என்னும் திருத்தகு தேவியொடு
போதுஅவிழ் பூம்பொழில் புகுந்தனன் புக்குக்
கொம்பர்த் தும்பி குழல்இசை காட்டப்
பொங்கர் வண்டினம் நல்லியாழ் செய்ய
வரிக்குயில் பாட மாமயில் ஆடும்
விரைப்பூம் பந்தர் கண்டுஉளம் சிறந்தும்,
புணர்துணை நீங்கிய பொய்கை அன்னமொடு

50. யாப்புடைத்தாக – உறுதியுடைத்தாக.
இசைத்தும் –சொல்லுவோம்.
51. நெடியோன் – திருமால். குறள் உரு – வாமன வடிவம்.
52. படி – உலகம்.
53. மூரி வார் சிலை – வலிய பெரிய வில்.
58. பொங்கர் – சோலை.

சிறைச்சாலை சென்று உணவளித்தாள் (42 – 46)

ஒருநாள் மணிமேகலை வீரக் கழலொலிக்கும் அடியினையுடைய வேந்தனுக்குப் பிழை செய்தவரைத் தண்டித்து அடைக்கும் சிறைக் கோட்டத்தினுள் விருப்பத்துடனே புகுந்தாள். அங்கே தண்டனையால் வருந்திப் பெருமூச்சு விட்டுப் புலம்பிப் பசியால் வருந்தியிருக்கும் மக்களுக்கு, வாங்கும் கை தாங்க முடியாது வருந்துமளவிற்கு உணவை அள்ளி அள்ளி இட்டாள்.

சிறைக்காவலர் மன்னனிடம் செய்தி கூறச் சென்றனர் (47 – 50)

'ஒரே பாத்திரம் இத்தனை பேருக்கு உணவளிக்கிறதே' என வியந்தனர் சிறைக்காவலர், 'பாத்திரத்தின் பசி நீக்கும் சிறப்பினையும், அப் பாத்திரத்தை ஏந்தியுள்ள பாவை பற்றியும் நடந்தவாறு எடுத்துச் சொல்வோம்' என அரண்மனையை நோக்கிச் சென்றனர்.

மன்னன் பூஞ்சோலைக்கு மனைவியோடு சென்றான் (51 – 56)

அப்போது மன்னன் திருமகளை ஒத்த 'சீர்த்தி' என்னும் மனைவியுடன் பூக்கள் இதழ் விரித்திருக்கும் பூஞ்சோலைக்குள் சென்றிருந்தான். திருமால் வாமன வடிவு கொண்டு மாவலி மன்னனிடம் மூன்றடி மண் கேட்டான். மாவலி நீர் பெய்து தானம் அளித்தபோது திருமால் பேருரு எடுத்து ஈரடியால் மண்ணும் விண்ணும் அளந்து மூன்றாம் அடியை மாவலியின் தலைமேல் வைத்து அவனைப் பாதாளத்தில் ஆழ்த்தினான். வலிய நீண்ட வில்லினைக் கொண்ட அம் மாவலியின் மரபிலே தோன்றியவள் சீர்த்தி.

மலர்ப்பந்தல் கண்டு மகிழ்ந்தனர் (57 – 60)

மலர்பொழிலினுள் நுழைந்த மன்னனும் அரசியும், மரக்கொம்புகளில் தும்பிகள் குழல் இசைக்க, சோலைகளிலுள்ள வண்டினங்கள் யாழிசை மீட்ட, வரிக்குயில்கள் பாட, மயில்கள் ஆடிக் கொண்டிருக்கும் மணம்மிக்க மலர்ப்பந்தலைக் கண்டு மகிழ்ந்தனர்.

அன்னமும் மயிலும் ஆடின (61 – 66)

பொய்கையில் நீந்தி மகிழும் ஆண் அன்னம் தனது துணையாகிய பேட்டினைப் பிரிந்து நிற்கிறது. அதனுடன் சேர்ந்து

மடமயில் பேடையும் தோகையும் கூடி
இருசிறை விரித்துஆங்கு எழுந்துடன் கொட்பன
ஒருசிறைக் கண்டுஆங்கு உள்மகிழ்வு எய்தி
மாமணி வண்ணனும் தம்முனும் பிஞ்ஞையும்
ஆடிய குரவைஇஃது ஆம்என நோக்கியும்,
கோங்குஅலர் சேர்ந்த மாங்கனி தன்னைப்
பாங்குஉற இருந்த பல்பொறி மஞ்ஞையைச்
செம்பொன் தட்டில் தீம்பால் ஏந்திப்
பைங்கிளி ஊட்டும்ஓர் பாவையாம் என்றும்,
அணிமலர்ப் பூம்பொழில் அகவயின் இருந்த
பிணவுக்குரங்கு ஏற்றிப் பெருமதர் மழைக்கண்
மடவோர்க்கு இயற்றிய மாமணி ஊசல்
கடுவன் ஊக்குவது கண்டுநகை எய்தியும்,
பாசிலை செறிந்த பசுங்கால் கழையொடு
வால்வீ செறிந்த மராஅம் கண்டு
நெடியோன் முன்னொடு நின்றன னாம்எனத்
தொடிசேர் செங்கையில் தொழுதுநின்று ஏத்தியும்

---

62. தோகை – ஆண் மயில்.
63. கொட்பன – சுழலுவனவற்றை
64. ஒரு சிறை – ஒரு பக்கம்
65. மாமணி வண்ணன் – கண்ணன்.
தம்முன் – அவன் முன்னவனாகிய பலதேவன்
பிஞ்ஞை – நப்பின்னை.
72. பிணவுக்குரங்கு – பெண் குரங்கு
76 வால் வீ – வெள்ளிய மலர்.
77 நெடியோன் – திருமால். முன் – தமையன்

இளமை பொருந்திய பெண் மயிலும், ஆண் மயிலும் தம் பெரிய சிறகுகளை விரித்து, ஒருபுறம் ஆடி நிற்கின்றன. இவற்றின் இந்த ஆட்டம் ஒரு காலத்தில் நீலவண்ணக் கண்ணனும் அவன் முன்னவனாகிய பலராமனும், நப்பின்னையும் ஆயர்பாடியில் எருமன்றத்தில் ஆடிய குரவைக் கூத்து போல் இருக்கிறதென மன்னன் வியந்து மகிழ்ந்தனன். (வெண்ணிற அன்னம் பலராமனுக்கும், நீலமணி போன்ற ஆண் மயில் கண்ணனுக்கும் உவமைகளாக்கப்பட்டுள்ளன.)

மாங்கனி அருந்தியது மயில் (67 – 70)

மகரந்தத்துடன் சேர்ந்த மலர்களோடு இணைந்திருந்த மாங்கனியை அருந்துவதற்குப் பலகண் தோகையுடைய மயில் பக்குவமாக அமர்ந்திருக்கிறது. இக் காட்சி செம்பொன் தட்டில் இனிதான பாலினை ஏந்தித் தன் பசுமையான கிளிக்கு ஒரு பெண் ஊட்டிக் கொண்டிருப்பது போன்றிருக்கிறது என்றெண்ணி மன்னன் மகிழ்ந்து பார்த்தான். (மகரந்தம் பொன்தட்டில் உள்ள தீம்பால் போன்றது; மாங்கனி பைங்கிளி போன்றது; மகரந்தத்தைக் கோதிக் கிளறும் மயில் கிளிக்குப் பாலூட்டும் பெண் போன்றது.)

குரங்கு ஊஞ்சலாட்டியது (71 – 74)

அழகிய மலர்களையுடைய பூம்பொழிலினுள்ளே, மதர்த்த மழைக்கண் பாவையர் ஆடுதற்காக மாமணி ஊஞ்சல் அமைக்கப் பட்டிருந்தது. அந்த ஊஞ்சலில் பெண் குரங்கினை ஏற்றி வைத்து ஆண் குரங்கு ஆட்டுகிறது; இக் காட்சியைக் கண்டு மன்னன் சிரித்து மகிழ்ந்தான்.

மூங்கிலும் வெண்கடம்பும் நின்றன (75 – 78)

அடர்ந்த பசுமையான இலைகள் செறிந்த பசிய தண்டினை உடைய மூங்கிலோடு, வெண்மையான பூக்கள் நிறைந்த வெண்கடம்பு சேர்ந்திருக்கும் காட்சி, கண்ணன் தன் அண்ணனான பலராமனுடன் நின்றிருப்பதைப்போலத் தோன்றியது. மன்னன் தொடி சேர்ந்திருக்கும் தன் செங்கைகளால் அவற்றைத் தொழுது நின்று போற்றினான்.

ஆடல் கூத்தினோடு அவிநயம் தெரிவோர்
நாடக் காப்பிய நல்நூல் நுனிப்போர்
பண்ணியாழ் நரம்பில் பண்ணுமுறை நிறுப்போர்
தண்ணுமைக் கருவிக் கண்எறி தெரிவோர்
குழலொடு கண்டம் கொளச்சீர் நிறுப்போர்
பழுநிய பாடல் பலரொடு மகிழ்வோர்
ஆரம் பரிந்த முத்தம் கோப்போர்
ஈரம் புலர்ந்த சாந்தம் திமிர்வோர்
குங்கும வருணம் கொங்கையின் இழைப்போர்
அம்செங் கழுநீர் ஆய்இதழ் பிணிப்போர்
நல்நெடுங் கூந்தல் நறுவிரை குடைவோர்
பொன்னின் ஆடியின் பொருந்துபு நிற்போர்
ஆங்குஅவர் தம்மோடு அகல்இரு வானத்து
வேந்தனிற் சென்று விளையாட்டு அயர்ந்து,
குருந்தும் தளவும் திருந்துமலர்ச் செருந்தியும்
முருகுவிரி முல்லையும் கருவிளம் பொங்கரும்
பொருந்துபு நின்று திருந்துநகை செய்து
குறுங்கால் நகுலமும் நெடுஞ்செவி முயலும்
பிறழ்ந்துபாய் மானும் இறும்புஅகலா வெறியும்
வம்மெனக் கூஉய் மகிழ்துணை யொடுதன்
செம்மலர்ச் செங்கை காட்டுபு நின்று
மன்னவன் தானும் மலர்க்கணை மைந்தனும்
இன்இள வேனிலும் இளங்கால் செல்வனும்
எந்திரக் கிணறும் இடுங்கற் குன்றமும்
வந்துவீழ் அருவியும் மலர்ப்பூம் பந்தரும்

80. நுனிப்போர் – கூர்ந்து ஆராய்வோர்.
82. தண்ணுமைக் கருவி – மத்தளம்.
84. பழுநிய பாடல் – முற்றுப் பெற்ற பாடல்.
90. ஆடி – கண்ணாடி.
96. நகுலம் – கீரி.
97. இறும்பு – குறுங்காடு. வெறி – ஆடு.
98. கூஉய் – கூவி அழைத்து
99. காட்டுபு – காட்டி.
101. இளங்கால் செல்வன் – இளங்காற்றாகிய தென்றல்.

கலைஞர்களோடு கூடி மன்னன் களித்தான் (79 – 92)

ஆடல் கூத்தோடு, பாட்டின் பொருளுக்கேற்ப அபிநயம் பிடிப்போர்; நாடகக் காப்பியங்களாகிய நல்ல நூல்களை நுணுகி ஆராய்ந்தோர்; பண் இசைக்கும் யாழில் நரம்புகளை முறைப்படி அழுத்தி இன்னிசை முழக்கும் யாழறிஞர்; தோற் கருவியாகிய தண்ணுமையின் முகத்தில் (மத்தளத்தின் கண்ணில்) தாளமடிக்க வல்லவர்; குழலோடு குரலும் பொருந்தத் தாள உறுதி செய்பவர்; கனிந்த பாடல்களைப் பலரோடும் கூடிப்பாடி மகிழ்வோர்; (இத்தகைய இசைக்கலை வாணர்கள்); அறுபட்ட மாலைகளிலிருந்து சிதறிய முத்துகளைக் கோத்தளிப்போர்; ஈரம் உலர்ந்து பதமான சந்தனத்தைப் பூசுவோர்; குங்கும வண்ணக் குழம்பைக் கொங்கைகளில் இழைப் போர்; அழகிய செங்கழுநீர் இதழ்களை ஆராய்ந்து தொடுப்பவர்; கரிய நெடிய கூந்தலில் நறுமணங்களை ஊட்டுபவர்; பொன் சட்டமிட்ட கண்ணாடியில் தம் ஒப்பனை கண்டு நிற்போர் (இத்தகைய ஒப்பனைக் கலைஞர்கள்); ஆகிய இவர்களுடன் மன்னன் அகன்ற பெரிய வானத்து வேந்தன் இந்திரனைப்போலச் சென்று, பொழிலில் விளையாடிக் களித்தனன்.

விலங்குகளை அழைத்து மகிழ்ந்தான் (93 –100)

குருந்து, செம்முல்லை, அழகான மலர் குலுங்கும் செருந்தி, மணம் பரப்பும் முல்லை, கருவிளம் பூக்கள் மலர்ந்த மரச்செறிவு ஆகிய இடங்களிலே அமர்ந்திருந்து முறுவலித்து இன்புற்றனன்.

குறுகிய கால்களையுடைய கீரிப்பிள்ளை, நீண்ட காதுகளை யுடைய முயல், துள்ளிப் பாய்ந்தோடும் மான், குறுங்காட்டினின்றும் நீங்காத ஆடு முதலிய விலங்குகளைத் தன் மனைவியோடு இருந்த மன்னன், 'எம் அருகே வாருங்கள், வாருங்கள்!' எனச் சிவந்த மலர்போலும் தன் செங்கையை அசைத்து அழைத்து நின்றனன்.

மன்னவன் பொழிலில் மகிழ்ந்து உலாவினான் (101 –106)

இயந்திரங்கள் அமைந்த கிணறுகள், கற்களை இட்டு அமைக்கப்பட்டுள்ள செய்குன்றுகள், நீர் வந்து விழுகின்ற அருவிகள், மலர்கள் நிறைந்த பூப்பந்தல்கள்,

பரப்புநீர்ப் பொய்கையும் கரப்புநீர்க் கேணியும்
ஒளித்துறை இடங்களும் பளிக்குஅறைப் பள்ளியும்
யாங்கணும் திரிந்து தாழ்ந்துவிளை யாடி,
மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
தண்தமிழ் வினைஞர் தம்மொடு கூடிக்
கொண்டுஇனிது இயற்றிய கண்கவர் செய்வினைப்
பவளத் திரள்கால் பன்மணிப் போதிகைத்
தவள நித்திலத் தாமம் தாழ்ந்த
கோணச் சந்தி மாண்வினை விதானத்துத்
தமனியம் வேய்ந்த வகைபெறு வனப்பின்
பைஞ்சேறு மெழுகாப் பசும்பொன் மண்டபத்து
இந்திர திருவன் சென்றுஇனிது ஏறலும்,
வாயிலுக்கு இசைத்து மன்னவன் அருளால்
சேய்நிலத்து அன்றியும் செவ்வியின் வணங்கி
எஞ்சா மண்நசை இகல்உளம் துரப்ப
வஞ்சியின் இருந்து வஞ்சி சூடி
முறம்செவி யானையும் தேரும் மாவும்
மறம்கெழு நெடுவாள் வயவரும் மிடைந்த

112. நித்திலத் தாமம் – முத்து மாலை.
114. தமனியம் – பொன்.
119. நசை – விருப்பம். இகல் – மாறுபாடு
120. வஞ்சியின் இருந்து – வஞ்சி நகரிலிருந்து.
வஞ்சி சூடி – வஞ்சிப் பூமாலையைச் சூடி.

நீர்ப்பரப்பையுடைய பொய்கை, நீர் ஊறும் கேணி, ஒளிந்து விளையாடும் இடங்கள், பளிக்கறைப்பள்ளி ஆகிய இடங்கள் எல்லாவற்றிலும் மன்னனும், மலரம்புகளை உடைய மன்மதனும், இனிமை தரும் இளவேனிலும் இளங்காற்றாகிய தென்றல் செல்வனும் சுற்றித் திரிந்து விருப்புடன் விளையாடியிருந்தனர். (இளவேனிற் காலம், இளம் தென்றல் வீசுகிறது; காதல் வேட்கையை மிகுவிக்கும் இடங்களில் மன்னவன் மகிழ்ந்து உலாவுகின்றான்.)

மண்டபத்தில் அமர்ந்தான் (107 – 116)

விளையாட்டயர்ந்த பின்னர் மன்னன் பொழிலினுள்ளே ஒரு மணிமண்டபத்தே சென்று தங்கினான். அம் மண்டபம் மகத நாட்டுத் தொழில் வல்லுநர்; மராட்டியப் பொற்கொல்லர்; அவந்தி நாட்டுக் கொல்லர்; யவனத் தச்சர் ஆகியோர் தண்தமிழ்நாட்டுத் தொழிலாளருடன் கூடி, திட்டமிட்டு இனிதாகச் செய்து அமைக்கப்பட்டது. அம் மண்டபத்தின் திரண்ட தூண்கள் பவளங்களாலானவை; போதிகைக் கட்டைகள் பல்வேறு மணிகளால் இழைக்கப்பெற்றிருந்தன; அவைகோணமாக அமைந்த இணைப்புகளைக் கொண்டிருந்தன. வேலைப்பாடமைந்த விதானத்திலிருந்து வெண்முத்து மாலைகள் தொங்க விடப்பட்டிருந்தன. கூரை பொன்னால் வேயப்பெற்று வனப்புடையதாய் விளங்கியது. பசுமையான சந்தனச் சாந்தினால் மெழுகப்பெற்ற அப் பசும்பொன் மண்டபத்தில் இந்திரனைப் போலும் செல்வமுடைய சோழமன்னன் ஏறி அமர்ந்தனன்.

சிறைக்காவலர் மன்னனிடம் செய்தி கூறினர் (117 – 138)

சிறைக்காவலர்கள், மண்டபத்தின் வாயில் காவலர்க்குத் தம் வருகையைத் தெரிவித்தனர். அவர்கள் மன்னவனிடம் சொல்ல மன்னவன் கட்டளைப்படி, காவலர் மண்டபத்துள்ளே சென்றனர். தொலைவிலே நின்று செவ்விய முறையில் பணிவுடன் வணங்கினர். ''அரசே! குறையாத மண்ணாசையால் போரிடத்தே உள்ளம் செல்ல வஞ்சிமீது போர்தொடுத்து வஞ்சி சூடி அதனை வென்றுவரப் படையனுப்பி நீ பாடி வீட்டில் இருந்தாய்! முறம்போல் செவியுடைய யானைப் படைகளும், தேர்ப்படைகளும், குதிரைப்படைகளும், வீரமிகு நீண்ட வாள் பிடித்த காலாட்படை மறவரும் உன்

தலைத்தார்ச் சேனையொடு மலைத்துத்தலை வந்தோர்
சிலைக்கயல் நெடுங்கொடி செருவேல் தடக்கை
ஆர்புனை தெரியல் இளங்கோன் தன்னால்
காரியாற்றுக் கொண்ட காவல் வெண்குடை
வலிகெழு தடக்கை மாவண் கிள்ளி
ஒளியொடு வாழி ஊழிதோறு ஊழி
வாழி எம்கோ மன்னவர் பெருந்தகை
கேள்இது மன்னா கெடுகநின் பகைஞர்
யானைத் தீநோய்க்கு அயர்ந்துமெய் வாடிஇம்
மாநகர்த் திரியும்ஓர் வம்ப மாதர்
அருஞ்சிறைக் கோட்டத்து அகவயின் புகுந்து
பெரும்பெயர் மன்ன நின்பெயர் வாழ்த்தி
ஐயப் பாத்திரம் ஒன்றுகொண்டு ஆங்கு
மொய்கொள் மாக்கள் மொசிக்கஊண் சுரந்தனள்
ஊழிதோறு ஊழி உலகம் காத்து
வாழி எம்கோ மன்னவ என்றலும்,
வருக வருக மடக்கொடி தான்என்று
அருள்புரி நெஞ்சமொடு அரசன் கூறலின்
வாயி லாளரின் மடக்கொடி தான்சென்று
ஆய்கழல் வேந்தன் அருள்வா ழியஎனத்
தாங்குஅருந் தன்மைத் தவத்தோய் நீயார்
யாங்கா கியதுஇவ் ஏந்திய கடிஞைஎன்று
அரசன் கூறலும், ஆயிழை உரைக்கும்
விரைத்தார் வேந்தே நீநீடு வாழி
விஞ்சை மகள்யான் விழவுஅணி மூதூர்
வஞ்சம் திரிந்தேன் வாழிய பெருந்தகை
வானம் வாய்க்க மண்வளம் பெருகுக
தீதுஇன் றாக கோமகற்கு ஈங்குஈது

123. தலைத்தார்ச் சேனை – முதன்மையாகிய தூசிப்படை.
125. ஆர் – ஆத்தி.
132. வம்பு – புதுமை வம்ப மாதர் – காயசண்டிகை.
136 மொய் – நெருக்கம். மொசிக்க – உண்ண.
147. விஞ்சை மகள் – மந்திரத்தால் உருமாறிய பெண் என்றும் வித்தியாதர மகளென்றும் இரு பொருள் கொள்ளலாம்.
149. வானம் – மழை.

தூசிப்படையில் செறிந்திருந்தனர். அப் படையோடு போரிட வந்த இருபெரும் வேந்தரின் வில்லும் கயலுமாகிய நெடுங்கொடிகளைப் போர்புரியும் வேற்படையினைத் தன் தடக்கையிலே கொண்டோனாகிய ஆத்திமாலை புனைந்த கண்ணி சூடிய இளங்கோ வேந்தன் நலங்கிள்ளியால் காரியாற்றுப் போரிலே கைப்பற்றினாய்! மக்களைத் தண்ணளி செய்து காத்தற்கான வெண்கொற்றக் குடையினையும் வலிமை பொருந்திய பெரிய கைகளையும் உடையவனே! மாவண் கிள்ளியே! நீ ஊழிதோறும் ஊழிதோறும் புகழுடன் வாழ்வாயாக! எம் அரசர் பெருந்தகையே நீ வாழ்க! நின் பகைவர் கெட்டு அழிவாராக! அரசே நாங்கள் சொல்வதைக் கேட்டருள்க! யானைத்தீப் பசியினால் கவலையுற்று, உடல் வாடி, ஊருக்குப் புதியவளான ஒருத்தி, இம் மாநகர் வீதிகளிலே திரிந்து கொண்டிருந்தனள்! அவள் அரிய காவலையுடைய சிறைக் கோட்டத்தின் உள்ளே புகுந்தாள்! பெரும் புகழையுடைய மன்னவ! நின்னை வாழ்த்தினாள்! பிச்சைப் பாத்திரம் ஒன்றைக் கையில் வைத்திருக்கிறாள். அங்கே மொய்த்துக் கொண்டிருக்கும் மக்கள் அனைவரும் உண்ண உண்ண உணவு தந்தனள். எங்கள் மன்னவ! நீ ஊழிதோறும் ஊழிதோறும் உலகம் காத்து வாழ்க'' என்றனர்.

அரசன் அமுதசுரபியின் சிறப்பறிந்தான் (139 – 154)

அதுகேட்ட அரசன், ''அந்த இளங்கொடியை இங்கே கொண்டு வருக'' என அருள்புரியும் உள்ளத்துடன் கூறினான். வாயில் காவலர் அழைக்க மணிமேகலை அரசனிடம் சென்று, ''வீரக்கழலணிந்த வேந்தனின் அருள் உள்ளம் வாழ்க'' என வாழ்த்தினாள். ''தாங்குதற்கு அரிய தன்மையினையுடைய தவத்தினை மேற்கொண்டுள்ள நீ யாரம்மா? நீ ஏந்தியுள்ள பாத்திரம் (உனக்கு எங்கே) எவ்வாறு கிடைத்தது'' என அரசன் கேட்டான்.

கேட்ட மன்னனுக்கு மணிமேகலை கூறலானாள்: ''மணம் நிறைந்த மாலையணிந்துள்ள வேந்தனே! நீ நீடுழி வாழ்வாயாக! நான் ஒரு வித்தியாதர மகள். இந்திரவிழாவினால் சிறப்புப் பெற்றுத் திகழும் இப்பழைய நகரத்தில் ஒரு சாபத்தினால் வந்து திரிந்து வந்தேன்! அரசர் பெருந்தகை வாழ்க! வான மழை பொழிக! மண் வளம் பெருகுக! அரசர் பெருமகனுக்குத் தீமை இல்லாதிருப்பதாகுக; நான்

ஐயக் கடிஞை அம்பலம் மருங்குஓர்
தெய்வம் தந்தது திப்பிய மாயது
யானைத் தீநோய் அரும்பசி கெடுத்தது
ஊன்உடை மாக்கட்கு உயிர்மருந்து இதுஎன,
யான்செயற் பாலதுஎன் இளங்கொடிக்கு என்று
வேந்தன் கூற மெல்இயல் உரைக்கும்
சிறையோர் கோட்டம் சீத்துஅருள் நெஞ்சத்து
அறவோர்க்கு ஆக்கும் அதுவா மியர்என,
அருஞ்சிறை விட்டுஆங்கு ஆயிழை உரைத்த
பெருந்தவர் தம்மால் பெரும்பொருள் எய்தக்
கறையோர் இல்லாச் சிறையோர் கோட்டம்
அறவோர்க்கு ஆக்கினன் அரசுஆள் வேந்துஎன்.

151. ஐயக் கடிஞை – பிச்சைப் பாத்திரம்.
157. சீத்து – அழித்து.
161. கறையோர் – கறைப்பட்ட மக்கள்

வைத்துள்ளது பிச்சைப் பாத்திரம். இதனை உலக அறவியில் ஒரு தெய்வம் தந்தது. இது தெய்வத்தன்மை பொருந்தியது. என்னுடைய யானைத் தீ நோயாகிய பெரும் பசியைப் போக்கியது. பசியினால் உடல் தளர்ந்த மக்களுக்கு உயிர்காக்கும் மருந்தாக இஃது இருந்து வருகிறது'' என்றாள்.

சிறைக் கோட்டம் அறக்கோட்டம் ஆகியது (155 – 162)

மன்னன், ''இளங்கொடியே! நான் உனக்குச் செய்யக்கூடியது ஏதேனும் உண்டோ?'' எனக் கேட்டான். மெல்லியலான அவள், ''அரசே! சிறைச்சாலையை அழித்து, அதை அருள் நெஞ்சுடைய அறவோர் வாழும் இடமாக ஆக்குவாயாக! அதுவே நீ எனக்குச் செய்யத்தக்கது. அரசே! வாழ்க'' என்றாள்.

அரசன் உடனே அரிய சிறையிலிருந்தவர்களை விடுவித்தான். அத் தவமங்கை சொன்னவாறு பெருந்தவமுடையவர்களால் அவ்விடம் பெருமைபெற்றது. அரசாளும் வேந்தன் சிறைக் கோட்டத்தைக் கறைப்பட்ட மக்கள் இல்லாத அறக்கோட்டமாக ஆக்கினான். (மணிமேகலையின் அருளால் சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆனது.)

20. உதயகுமரனை வாளால் எறிந்த காதை

அரசன் ஆணையின் ஆயிழை அருளால்
நிரயக் கொடுஞ்சிறை நீக்கிய கோட்டம்
தீப்பிறப்பு உழந்தோர் செய்வினைப் பயத்தான்
யாப்புஉடை நல்பிறப்பு எய்தினர் போலப்
பொருள்புரி நெஞ்சில் புலவோன் கோயிலும்
அருள்புரி நெஞ்சத்து அறவோர் பள்ளியும்
அட்டில் சாலையும் அருந்துநர் சாலையும்
கட்டுஉடைச் செல்வக் காப்புஉடைத் தாக,
ஆயிழை சென்றதூஉம் ஆங்குஅவள் தனக்கு
வீயா விழுச்சீர் வேந்தன் பணித்ததூஉம்
சிறையோர் கோட்டம் சீத்துஅருள் நெஞ்சத்து
அறவோர் கோட்டம் ஆக்கிய வண்ணமும்
கேட்டனன் ஆகிஅத் தோட்டார் குழலியை
மதியோர் எள்ளினும் மன்னவன் காயினும்
பொதியில் நீங்கிய பொழுதில் சென்று
பற்றினன் கொண்டுஎன் பொன்தேர் ஏற்றிக்
கற்றுஅறி விச்சையும் கேட்டுஅவள் உரைக்கும்
முதுக்குறை முதுமொழி கேட்குவன் என்றே
மதுக்கமழ் தாரோன் மனம்கொண்டு எழுந்து
பலர்பசி களையப் பாவைதான் ஒதுங்கிய
உலக அறவியின் ஊடுசென்று ஏறலும்,
மழைசூழ் குடுமிப் பொதியில் குன்றத்துக்
கழைவளர் கான்யாற்றுப் பழவினைப் பயத்தால்

---

2. நிரயம் – நரகம்.
8. கட்டு – உறுதி. காப்புடைத்தாக – காவலையுடையதாக.
10. வீயா – மாறாத. விழுச்சீர் – சிறந்த புகழ்.
14. காயினும் – வெகுண்டாலும்.
18. முதுக்குறை முதுமொழி – பேரறிவைப் புலப்படுத்திய மொழி.
20. ஒதுங்கிய – சென்ற.
23. கழை – மூங்கில். கான்யாறு - காட்டாறு.

20. உதயகுமரனை வாளால் எறிந்த காதை

சிறைச்சாலை அறச்சாலை ஆனதை உதயகுமரன் அறிந்தான் (1–13)

கொடிய பிறவியிற் பிறந்து வருந்தினோர் முன் செய்த நல்வினைப் பயனால் பொருத்தமான நற்பிறவி அடைந்ததுபோல, அரசனுடைய ஆணையினாலும் மணிமேகலையின் அருளாலும் நரக வேதனை செய்யும் சிறைக்கோட்டம் பழைய தன்மையிலிருந்து மாறி விளங்கியது. வாய்மை நான்கினையும் உவந்து விளக்கிய மெய்யறிஞனான புத்தன் கோயில் அங்கே அமைந்தது. அருள் உள்ளங்கொண்ட அறவோர் அங்கே தங்கினர். சோறாக்கும் இடமும், சோறுண்போர் இடமும் ஏற்பட்டன. உறுதியான செல்வக் காப்புடையதாகவும் அவ் விடம் விளங்கியது.

பெண் ஒருத்தி (காயசண்டிகை உருவிலிருந்த மணிமேகலை) அரசனிடம் சென்றதையும், சிறந்த புகழுடைய அரசன் அவளுக்கு அருளிச் செய்ததையும், சிறைச்சாலையை அழித்து அதனை அறவோர் வாழும் அறச்சாலையாக ஆக்கியதையும் உதயகுமரன் கேள்வியுற்றான்.

உதயகுமரன் உலக அறவி சென்றான் (13 – 21)

''அறிவுடையோர் இகழ்ச்சியாகப் பேசினாலும், மன்னவனே சினந்தாலும், மாலையணிந்த கூந்தலையுடைய மணிமேகலையை ஊரம்பலத்தினின்றும் அவள் வெளிவருகின்ற அந்த நேரத்திலே கைப்பற்றி என் பொன்தேரில் ஏற்றிக் கொணர்வேன். அவள் கற்றறிந்த வித்தைகளையும் அவள் கூறும் அறிவுமிக்க முதுமொழிகளையும் கேட்பேன்'' என எண்ணியவனாகத் தேன் மணக்கும் மாலையினை உடைய உதயகுமரன் எழுந்தான். பலருடைய பசியையும் போக்கும் பாவை தங்கியுள்ள உலக அறவியினுள்ளே சென்றான்.

விஞ்சையன் தன் மனைவியைத் தேடி அலைந்தான் (22 – 37)

'முகில் சூழும் உச்சியையுடைய பொதிய மலையில் மூங்கில் வளரும் காட்டாற்றங்கரையில், முன் செய்த தீவினைப் பயனாலே

மாதவன் மாதர்க்கு இட்ட சாபம்
ஈர்ஆறு ஆண்டு வந்தது வாராள்
காயசண் டிகைஎனக் கையறவு எய்திக்
காஞ்சனன் என்னும் அவள்தன் கணவன்
ஓங்கிய மூதூர் உள்வந்து இழிந்து
பூத சதுக்கமும் பூமரச் சோலையும்
மாதவர் இடங்களும் மன்றமும் பொதியிலும்
தேர்ந்தனன் திரிவோன் ஏந்துஇள வனமுலை
மாந்தர் பசிநோய் மாற்றக் கண்டுஆங்கு,
இன்றுநின் கையின் ஏந்திய பாத்திரம்
ஒன்றே ஆயினும் உண்போர் பலரால்
ஆனைத் தீநோய் அரும்பசி களைய
வான வாழ்க்கையர் அருளினர் கொல்எனப்
பழைமைக் கட்டுரை பலபா ராட்டவும்,
விழையா உள்ளமொடு அவன்பால் நீங்கி
உதய குமரன் தன்பால் சென்று
நரைமூ தாட்டி ஒருத்தியைக் காட்டித்
தண்அறல் வண்ணம் திரிந்துவே றாகி
வெண்மணல் ஆகிய கூந்தல் காணாய்
பிறைநுதல் வண்ணம் காணா யோநீ
நரைமையில் திரைதோல் தகைஇன்று ஆயது
விறல்வில் புருவம் இவையும் காணாய்
இறவின் உணங்கல் போன்றுவே றாயின
கழுநீர்க் கண்காண் வழுநீர் சுமந்தன
குமிழ்மூக்கு இவைகாண் உமிழ்சீ ஒழுக்குவ
நிரைமுத்து அனைய நகையும் காணாய்
சுரைவித்து ஏய்ப்பப் பிறழ்ந்துவேறு ஆயின
இலவுஇதழ்ச் செவ்வாய் காணா யோநீ

---

26. கையறவு – செயலறுதல்.
41. அறல் – கருமணல்.
44. நரைமை – வெண்மை.
46. இறவின் உணங்கல் – இறால் மீனின் வற்றல்.

விருச்சிக முனிவன் காயசண்டிகைக்கு யானைத் தீ நோய் வரச் சாபமிட்டான். பன்னிரண்டு ஆண்டுகள் முடிந்து விட்டன. சாபம் நீங்கி அவள் இன்னும் தன்னிடம் வரவில்லையே' என வருந்திய அவளுடைய கணவன் புகழோங்கிய பூம்புகார் நகரில் வந்து இறங்கினான். பூத சதுக்கம், பூமரச் சோலைகள், அறவோர் வாழும் இடங்கள், மன்றங்கள், பொது இடங்கள் ஆகிய எல்லா இடங்களிலும் தேடித் திரிந்தான். முடிவில் பூரித்தெழுந்த இளைய அழகிய முலைகளுடைய காயசண்டிகை (உருமாறிய மணிமேகலை) மக்களின் பசித்துன்பத்தைப் போக்கிக் கொண்டிருப்பதைக் கண்டு அருகே சென்றான். ''உன் கையில் ஒரே பாத்திரம் உள்ளது. ஆனால் அது பலர் பசியைத் தீர்க்கிறது. யானைத் தீ நோயினால் உனக்கு ஏற்பட்டிருந்த பெரும் பசி நீங்க வானவர் இதனை உனக்குத் தந்தனரோ?'' எனப் பழைய உறவுடனே பேசிப் பலவாறாகப் பாராட்டினான். (காயசண்டிகையின் கணவனை மணிமேகலை அறியாள். காய சண்டிகையாக உருமாறியிருக்கும் மணிமேகலையைத் தன் மனைவி என்று நினைத்து அவன் பேசுகிறான்.)

யாக்கை, இளமை நிலையாதன (38 – 70)

காஞ்சனன் பேச்சைக் கேட்க விரும்பாமல் மணிமேகலை அவனிடத்திலிருந்து விலகி, உதயகுமரன் நிற்குமிடத்திற்குச் சென்றாள். அங்கே இருந்த நரைத்த கிழவியை உதயகுமரனுக்குக் காட்டி இளமை நிலையாமையையும் யாக்கை நிலையாமையையும் அறிவுறுத்தினாள்.

''மன்னர் மகனே! இந்த நரை மூதாட்டியைப் பார்! ஒரு காலத்தில் குளிர்ச்சியான கருமணல் போலச் செறிந்திருந்த கூந்தல் இன்று வெண்மணல் போல் நிறம் மாறி விட்டிருப்பதைப்பார். பிறை நுதல் போன்றிருந்த நெற்றியைப் பார்; நரைத்துத் திரைத்து வெளுத்து அழகின்றிக் காண்கிறது. முன்பு வில் போன்றிருந்த புருவங்களை இப்போது பார்; இறால்மீன் வற்றல் போல அழகிழந்து விட்டன. செங்கழுநீர் மலர் போன்று முன்பு செழித்திருந்த கண்களைப் பார்; அங்கே இப்போது பூளை வடிகிறது. குமிழ் போன்றிருந்த மூக்கில் இப்போது சளி ஒழுகுகிறது. முத்துப்பத்தி போன்று ஒளி வீசிய பற்களைப் பார்; நிறம் வேறுபட்டுச் சுரைவிதைபோலத் தோற்ற மளிக்கின்றன. இலவம் பூவின் இதழ் போன்ற செந்நிற வாயைப் பார்;

புலவுப் புண்போல் புலால்புறத் திடுவது
வள்ளைத் தாள்போல் வடிகாது இவைகாண்
உள்ளூன் வாடிய உணங்கல் போன்றன
இறும்பூது சான்ற முலையும் காணாய்
வெறும்பை போல வீழ்ந்துவேறு ஆயின
தாழ்ந்துஒசி தெங்கின் மடல்போல் திரங்கி
வீழ்ந்தன இளவேய்த் தோளும் காணாய்
நரம்பொடு விடுதோல் உகிர்த்தொடர் கழன்று
திரங்கிய விரல்கள் இவையும் காணாய்
வாழைத் தண்டே போன்ற குறங்குஇணை
தாழைத் தண்டின் உணங்கல் காணாய்
ஆவக் கணைக்கால் காணா யோநீ
மேவிய நரம்போடு என்புபுறம் காட்டுவ
தளிர்அடி வண்ணம் காணா யோநீ
முளிமுதிர் தெங்கின் உதிர்காய் உணங்கல்
பூவினும் சாந்தினும் புலால்மறைத்து யாத்துத்
தூசினும் மணியினும் தொல்லோர் வகுத்த
வஞ்சம் தெரியாய் மன்னவன் மகன்என
விஞ்சை மகளாய் மெல்இயல் உரைத்தலும்,
தன்பா ராட்டும்என் சொல்பயன் கொள்ளாள்
பிறன்பின் செல்லும் பிறன்போல் நோக்கும்
மதுக்கமழ் அலங்கல் மன்னவன் மகற்கு
முதுக்குறை முதுமொழி எடுத்துக் காட்டிப்
பவளக் கடிகையில் தவளவாள் நகையும்
குவளைச் செங்கணும் குறிப்பொடு வழாஅள்
ஈங்குஇவன் காதலன் ஆதலின் ஏந்துஇழை
ஈங்குஒழிந் தனள்என இகல்எரி பொத்தி
மற்றுஅவள் இருந்த மன்றப் பொதியிலுள்
புற்றுஅடங்கு அரவின் புக்குஒளித்து அடங்கினன்
காஞ்சனன் என்னம் கதிர்வாள் விஞ்சையன்.

---

55. இறும்பூது – வியப்பு.
59. உகிர் – நகம்.
61. குறங்கு – தொடை
63. ஆவம் – அம்புக் கூடு.
73. அலங்கல் – மாலை.
75. பவளக் கடிகை – பவளத் துண்டம்.

புண்பட்ட புலால் போலக் குப்பென்று நாறுகிறது. வள்ளைப்பூவின் தண்டுபோன்ற வடிந்த காதுகளைப் பார்; உள்ளே ஊன் வற்றிப்போய் வற்றலைப்போல இருக்கின்றன; காண்பதற்கு வியப்பூட்டிய திமிர்ந்து நின்ற கொங்கைகளைப் பார்; உள்ளே ஒன்றுமில்லாத வெறும் பையைப்போலத் தொய்ந்து வீழ்ந்து கிடக்கின்றன. இளம் மூங்கிலைப் போன்றிருந்த தோளைப் பாராய்! அது தாழ்ந்து ஒடிந்த தென்னை மடல் போலத் திரங்கி வீழ்ந்தது. திரங்கிய விரல்களைப் பார்; தோலும் நரம்புமாய் நகங்கள் விண்டுபோய் விரல்கள் கும்பிப் போயின. வாழைத் தண்டுபோலத் தளதளத்திருந்த துடைகள் இரண்டும் தாழைத் தண்டுபோல் வற்றிப் போயின. அம்பறாத் தூணி போன்றிருந்த கணைக்கால் இப்போது எலும்பும் நரம்பும் வெளியே தெரியும்படி வற்றிப் போயிருப்பதைப் பார்! தளிர் போன்றிருந்த இவள் அடிகள், முதிர்ந்த தென்னையில் உலர்ந்து உதிர்ந்த காய்போல வற்றி வறண்டு போயிருப்பதைக் காணவில்லையா? மன்னவன் மகனே! பெண்களைக் கண்டு மயங்காதே! பூவினாலும், சந்தனத்தினாலும், புலால் நாற்றத்தை மறைத்துவைத்து ஆடையிலும் அணிமணிகளிலும் முன்னோர் மறைத்து வைத்த வஞ்சமே இந்த உடல் என்பதை மன்னவன் மகனே தெரிந்துகொள்'' என விஞ்சையர் மகள் வடிவிலிருந்த மணிமேகலை உரைத்தாள்.

காஞ்சனன் உதயகுமரன்மேல் பகை கொண்டான் (71 – 81)

காயசண்டிகை வடிவில் மணிமேகலை இருத்தலால் அவளைத் தன் மனைவி என்று எண்ணிய காஞ்சனன், ''அவளைப் பாராட்டுகின்ற என் சொற்களைக் கேட்காமல் மற்றவன் பின்னால் செல்கிறாள். என்னை அயலான்போலப் பார்க்கிறாள். தேன் மணக்கும் மாலையுடைய மன்னவன் மகனுக்குப் பேரறிவு கொண்ட முதுமொழிகளை எடுத்துக் கூறுகிறாள். பவள இதழில் முத்துப்பல் தெரிய முறுவல் பூக்கிறாள். குவளை மலர் போன்ற சிவந்த கண்களும் அவன்பால் காதற்குறிப்பைக் காட்டுகின்றன. இங்கே இவன் இவளுக்குக் காதலன் போலும்! அதனால்தான் இவ்விடத்திலேயே தங்கி விட்டாள்'' எனக் காஞ்சனன் கருதினான். அவன் மனத்தில் பகை நெருப்புப் பற்றி எரிந்தது. அவளிருந்த மன்றமாகிய பொதியிலின் உள்ளே, புற்றினுள்ளே அடங்கியுள்ள ஒரு பாம்பினைப் போலச் சீற்றத்துடன் ஒரு பக்கமாக ஒளி வீசும் வாளுடன் ஒளிந்து கொண்டிருந்தான்.

ஆங்குஅவள் உரைத்த அரசிளங் குமரனும்
களையா வேட்கை கைஉதிர்க் கொள்ளான்
வளைசேர் செங்கை மணிமே கலையே
காயசண் டிகையாய்க் கடிஞை ஏந்தி
மாய விஞ்சையின் மனம்மயக் குறுத்தனள்
அம்பல மருங்கில் அயர்ந்துஅறிவு உரைத்தஇவ்
வம்பலன் தன்னொடுஇவ் வைகுஇருள் ஒழியாள்
இங்குஇவள் செய்தி இடைஇருள் யாமத்து
வந்துஅறி குவம்என மனம்கொண்டு எழுந்து
வான்தேர்ப் பாகனை மீன்திகழ் கொடிய்னைக்
கருப்பு வில்லியை அருப்புக்கணை மைந்தனை
உயாவுத் துணையாக வயாவொடும் போகி,
ஊர்துஞ்சு யாமத்து ஒருதனி எழுந்து
வேழம் வேட்டுஎழும் வெம்புலி போலக்
கோயில் கழிந்து வாயில் நீங்கி
ஆயிழை இருந்த அம்பலம் அணைந்து
வேக வெந்தீ நாகம் கிடந்த
போகுஉயர் புற்றுஅளை புகுவான் போல
ஆகம் தோய்ந்த சாந்துஅலர் உறுத்த
ஊழ்அடி இட்டுஅதன் உள்அகம் புகுதலும்
ஆங்குமுன் இருந்த அலர்தார் விஞ்சையன்
ஈங்குஇவன் வந்தனன் இவள்பால் என்றே
வெஞ்சின அரவம் நஞ்சுஎயிறு அரும்பத்
தன்பெரு வெகுளியின் எழுந்துபை விரித்தென
இருந்தோன் எழுந்து பெரும்பின சென்றுஅவன்
சுரும்புஅறை மணித்தோள் துணிய வீசிக்

---

83. கையுதிர்க் கொள்ளான் - நீங்கான்
88. வம்பலன் - புதியவன்
93. உயாவுத்துணை - வினாவும் துணையாக வயா-வருத்தம்
99. புற்று அளை-புற்றுத் துளை.
104. அரும்ப - தோன்ற.
106. பெரும்பின் சென்று - முதுகின் புறமாகச் சென்று
107. சுரும்பு - மலை

உதயகுமரன் அரண்மனை திரும்பினான் (82 – 93)

மணிமேகலை கூறிய அறிவுரைகளைக் கேட்ட பின்னரும் மன்னன் மகன் அவளிடம் கொண்ட காம வேட்கையைக் கைவிடவில்லை. ''வளையலணிந்த சிவந்த கைகளையுடைய மணிமேகலையே காயசண்டிகை உருவில் பிச்சைப் பாத்திரம் ஏந்தி மாய வித்தையினால் மயக்கியிருக்கிறாள். உலக அறவியின் ஒரு பக்கத்தே, இவளிடம் பழமைபாராட்டிப் பேசிய புதியவனோடு இந்த இரவில் எங்கும் வெளியே செல்லமாட்டாள். இந்த நங்கையின் செயலை இருளடர்ந்த நள்ளிரவில் வந்து அறிவேன்'' என எண்ணினான். வானிலே ஊர்கின்ற தென்றலாகிய தேரினையும், மகர மீன் விளங்குகின்ற கொடியினையும், கரும்பாகிய வில்லினையும், மலரரும்புகளாகிய அம்புகளையும் உடைய மன்மதனைத் தன் பேச்சுத் துணையாகக் கொண்டவனாய் (அதாவது காம உணர்வுடன்), வருத்தத்தோடு அரண்மனை நோக்கிச் சென்றான். (காமநோய் மிகுதியால் தனியே தனக்குள்ளே பேசியவாறு அரண்மனை மீண்டான். அஃது அவன் மன்மதனுடன் பேசுவதுபோலத் தோன்றியது).

உதயகுமரன் வெட்டுண்டான் (94 –111)

ஊர் உறங்கும் யாமம். தனியே எழுந்தான். யானை வேட்டையாட விரும்பிப் புறப்பட்ட புலிபோலப் புறப்பட்டான். அரண்மனையை விட்டு வாயிலைக் கடந்து ஆயிழை மணிமேகலை இருந்த அம்பலம் அடைந்தான். கொடிய நஞ்சு கொண்ட தீய நாகம் ஒளிந்து கிடக்கும் உயர்ந்த புற்றுத் துளையினுள்ளே புகுவோனைப்போல அம்பலத்தை அடைந்தான். மார்பில் பூசிய சந்தனம் அவன் வரவை அனைவருக்கும் அறிவித்தது; ஊழ்வினையே அடியிட்டு நடத்திச்செல்ல அவன் உள்ளே நுழைந்தான்.

அங்கே, முன்னதாகவே மறைந்திருந்த மலர்மாலையணிந்த காஞ்சனன், ''இவன் இவளைக் காணவே இப்போது வந்துள்ளான்'' என்று எண்ணினான். கொடிய சினங்கொண்ட பாம்பு, நச்சுப்பல் தோன்ற, சீறிப்படமெடுத்து எழுந்தாற்போல, ஒளிந்திருந்தவன் சினத்துடன் எழுந்தான்; உதயகுமரனைப் பின் தொடர்ந்து சென்று அவனுடைய மலையொத்த தோள் துண்டுபடுமாறு தன் வாளினாலே வெட்டினான்.

காயசண் டிகையைக் கைக்கொண்டு அந்தரம்
போகுவல் என்றே அவள்பால் புகுதலும்,
நெடுநிலைக் கந்தின் இடவயின் விளங்கக்
கடவுள் எழுதிய பாவைஆங்கு உரைக்கும்
அணுகல் அணுகல் விஞ்சைக் காஞ்சன
மணிமே கலைஅவள் மறைந்துஉரு எய்தினள்.
காயசண் டிகைதன் கடும்பசி நீங்கி
வானம் போவுழி வந்தது கேளாய்
அந்தரம் செல்வோர் அந்தரி இருந்த
விந்த மால்வரை மீமிசைப் போகார்
போவார் உளர்எனில் பொங்கிய சினத்தள்
சாயையின் வாங்கித் தன்வயிற்று இடூஉம்
விந்தம் காக்கும் விந்தா கடிகை
அம்மலை மிசைப்போய் அவள்வயிற்று அடங்கினள்.
கைம்மை கொள்ளேல் காஞ்சன இதுகேள்:
ஊழ்வினை வந்துஇங்கு உதய குமரனை
ஆர்உயிர் உண்ட தாயினும் அறியாய்
வெவ்வினை செய்தாய் விஞ்சைக் காஞ்சன!
அவ்வினை நின்னையும் அகலாது ஆங்குஉறும்
என்றுஇவை தெய்வம் கூறலும் எழுந்து
கன்றிய நெஞ்சின் கடுவினை உருத்துஎழ
விஞ்சையன் போயினன் விலங்குவிண் படர்ந்துஎன்

110 கந்து - தூண்.
112. அணுகல் - அணுகாதே.
116. அந்தரி - தூக்கை.
117. விந்தமால் வரை - விந்தியமலை.
122. கைம்மை - சிறுமை.
129. விலங்கு - குறுக்காக.

''காயசண்டிகையைக் கைப்பற்றி வான் வழியே செல்வேன்'' என்று அவளிருக்கும் கோயிலினுள் புகுந்தான். அப்போது அங்கே நெடிய தூணில் கடவுளாக இருக்குமாறு தெய்வதச்சன் மயனால் எழுதியமைக்கப்பெற்ற கந்திற்பாவை பேசத் தொடங்கியது!

காஞ்சனன் நடந்ததறிந்தான் (112 - 129)

''நெருங்காதே! விஞ்சைக் காஞ்சனனே நெருங்காதே! அவள் மணிமேகலை; தன் வடிவை மறைத்து இந்த வடிவில் இருக்கிறாள். நின் மனைவி காயசண்டிகை கொடிய பசி நீங்கப்பெற்று வான் வழியே நின் ஊர் சென்றாள்; வழியில் நடந்த துன்பத்தைச் சொல்லுவேன், கேள்! வானில் செல்வோர் அந்தரியான துர்க்கை இருக்கும் விந்தமலை மேலே செல்லமாட்டார்கள். அவ்வாறு செல்பவர் எவராவது இருப்பராயின், துர்க்கை பொங்கிய சீற்றம் கொள்வாள். அப்போது அவ் விந்தியமலையைக் காக்கும் விந்தாகடிகை தன் சாயலால் இழுத்து அவரைத் தன் வயிற்றினுள் அடைப்பாள். உன் மனைவி அம் மலைமீது பறந்தாள்; அதனால் விந்தா கடிகையின் வயிற்றினுள் அடங்கினாள்.

காஞ்சன! அதற்காக வருந்திச் சிறுமை கொள்ள வேண்டாம்! நான் சொல்வதைக் கேள். ஊழ்வினை வந்து இங்கே உதயகுமரனின் உயிரை உண்டது. ஆயினும் உன்னையறியாமலே நீயும் ஒரு கொலைக்குற்றம் செய்துள்ளாய். விஞ்சைக் காஞ்சன! அவ் வினையின் பயன் உன்னை விடாது பற்றும்'' எனக் கந்திற்பாவை கூறியது. காஞ்சனன் உளம் வருந்தினான்; கொடிய வினை வெகுண்டெழுந்து அவனைப் பற்றியது; அவ் வினையும் தொடர விஞ்சையன் விண்ணிலே குறுக்காக ஊடறுத்துப் பறந்து போயினன்.

21. கந்திற்பாவை வருவது உரைத்த காதை

கடவுள் எழுதிய நெடுநிலைக் கந்தின்
குடவயின் அமைத்த நெடுநிலை வாயில்
முதியாள் கோட்டத்து அகவயின் கிடந்த
மதுமலர்க் குழலி மயங்கினள் எழுந்து
விஞ்சையன் செய்தியும் வென்வேல் வேந்தன்
மைந்தற்கு உற்றதும் மன்றப் பொதியில்
கந்துஉடை நெடுநிலைக் கடவுள் பாவை
அங்குஅவற்கு உரைத்த அற்புதக் கிளவியும்
கேட்டனள் எழுந்து கெடுகஇவ் உருஎனத்
தோட்டலர்க் குழலி உள்வரி நீங்கி,
திட்டி விடம்உண நின்உயிர் போம்நாள்
கட்டழல் ஈமத்து என்உயிர் சுட்டேன்
உவவனம் மருங்கில் நின்பால் உள்ளம்
தவிர்வுஇலேன் ஆதலின் தலைமகள் தோன்றி
மணிப்பல் லவத்திடை என்னைஆங்கு உய்த்துப்
பிணிப்புஅறு மாதவன் பீடிகை காட்டி
என்பிறப்பு உணர்ந்த என்முன் தோன்றி
உன்பிறப்பு எல்லாம் ஒழிவுஇன்று உரைத்தலின்
பிறந்தோர் இறத்தலும் இறந்தோர் பிறத்தலும்
அறம்தரு சால்பும் மறம்தரு துன்பமும்
யான்நினக்கு உரைத்துநின் இடர்வினை ஒழிக்கக்
காயசண் டிகைவடிவு ஆனேன் காதல!
வைவாள் விஞ்சையன் மயக்குஉறு வெகுளியின்
வெவ்வினை உருப்ப விளிந்தனை யோஎன
விழுமக் கிளவியின் வெய்துஉயிர்த்துப் புலம்பி
அழுதனள் ஏங்கி அயாஉயிர்த்து எழுதலும்,

---

2. குடவயின் - மேற்குத் திசையில்
11. திட்டிவிடம் - கண்ணில் நஞ்சுடைய ஒரு பாம்பு.
12. கட்டழல் - மிக்க நெருப்பு.
24. விளிந்தனையோ - இறந்தனையோ.
25. விழுமக் கிளவி - துன்பத்தைப் புலப்படுத்தும் சொல்.

21. கந்திற்பாவை வருவது உரைத்த காதை

உதயகுமரன் வெட்டுண்டதை மணிமேகலை அறிந்தாள் (1 - 26)

சம்பாபதி கோயில் உயர்ந்த வாயிலைக் கொண்டது. மயன் எழுதிய கந்திற்பாவைத் தூணின் மேற்கே அக்கோயில் உள்ளது. கோயிலினுள்ளே துயின்று கொண்டிருந்த மணிமேகலை திடீரென எழுந்தாள். விஞ்சையன் வஞ்சம்; வெற்றிவேலேந்திய மன்னனின் மகன் வெட்டுண்டது; மன்றமாகிய ஊரம்பலத்தில் தூணிலிருந்த கடவுள்பாவை காஞ்சனனுக்குச் சொன்ன வியத்தகு பேச்சு – அனைத்தையும் அறிந்தாள். 'இவ் வுருவும் நீங்குக' எனத் தான் கொண்டிருந்த காயசண்டிகை வடிவத்தை நீக்கி மணிமேகலையாக நின்றாள். அரச குமரனை நினைந்து அழுது புலம்பினாள்.

''காதல! திட்டிவிடம் எனும் பாம்பு கடிக்க உன் உயிர் நீங்கிய அந் நாளில் மிக்க நெருப்பையுடைய ஈமத்தீயில் வீழ்ந்து என்னுயிரையும் எரித்தேன். உவவனத்தில் உன்னிடம் என் உள்ளம் சென்றதைத் தவிர்க்க முடியவில்லை. ஆதலால் மணிமேகலா தெய்வம் வந்து எடுத்துச் சென்று என்னை மணிபல்லவத்தில் சேர்த்தது. அங்கே பிறவிப் பிணியறுக்கும் புத்தனின் பாதபீடிகையைத் தொழுது என் பிறப்பு உணர்ந்தேன். என் முன் அத் தெய்வம் மீண்டும் தோன்றி உன் பிறப்பினையும் குறைவின்றி உரைத்தது. அதனால் அன்பனே! பிறந்தோர் இறப்பதும், இறந்தோர் பிறப்பதும் இயல்பே! அறம் சிறப்பைத் தரும்; மறம் துன்பத்தைத் தரும் என்று உனக்குச் சொல்லி உன் தீவினையை நீக்கும் பொருட்டாகக் காயசண்டிகை வடிவம் பூண்டேன். கூரிய வாளினையுடைய விஞ்சையன், என்னைத் தன் மனைவியான காயசண்டிகை எனத் தவறாக உணர்ந்தான். சீற்றம் கொண்டான்; தீவினையும் வந்து சேர்ந்தது. அதன் காரணமாக நீயும் வெட்டப்பட்டு இறந்தனையோ?'' என இவ்வாறு துன்பச் சொற்கள் பலவும் சொல்லிப் பெருமூச்சு விட்டுப் புலம்பி அழுதனள். அழுதவாறே எழுந்தவள் ஏக்கப் பெருமூச்சுடன் அவ்ன் அருகே செல்ல முயன்றாள்.

செல்லல் செல்லல் சேய்அரி நெடுங்கண்
அல்லிஅம் தாரோன் தன்பால் செல்லல்
நினக்குஇவன் மகனாத் தோன்றி யதூஉம்
மனக்குஇனி யாற்குநீ மகள்ஆ யதூஉம்
பண்டும் பண்டும் பல்பிறப்பு உளவால்
கண்ட பிறவியே அல்ல காரிகை
தடுமாறு பிறவித் தாழ்தரு தோற்றம்
விடுமாறு முயல்வோய் விழுமம் கொள்ளேல்
என்றுஇவை சொல்லி இருந்தெய்வம் உரைத்தலும்
பொன்திகழ் மேனிப் பூங்கொடி பொருந்திப்
பொய்யா நாவொடுஇப் பொதியிலில் பொருந்திய
தெய்வம் நீயோ திருவடி தொழுதேன்
விட்ட பிறப்பின் வெய்துஉயிர்த்து ஈங்குஇவன்
திட்டி விடம்உணச் செல்உயிர் போயதும்,
நெஞ்சு நடுங்கி நெடுந்துயர் கூரயான்
விஞ்சையன் வாளின் இவன்விளிந் ததூஉம்
அறிதலும் அறிதியோ அறிந்தனை ஆயின்
பெறுவேன் தில்லநின் பேர்அருள் ஈங்குஎன,
ஐஅரி நெடுங்கண் ஆயிழை கேள்எனத்
தெய்வக் கிளவியில் தெய்வம் கூறும்
காயங் கரைஎனும் பேரியாற்று அடைகரை
மாயம்இல் மாதவன் வருபொருள் உரைத்து
மருள்உடை மாக்கள் மனமாசு கழூஉம
பிரம தருமனைப் பேணினிர் ஆகி
அடிசில் சிறப்புயாம் அடிகளுக்கு ஆக்குதல்
விடியல் வேலை வேண்டினம் என்றலும்
மாலை நீங்க மனம்மகிழ்வு எய்திக்
காலை தோன்ற வேலையில் வரூஉ
நடைத்திறத்து இழுக்கி நல்அடி தளர்ந்து

---

29 மகனாக - கணவனாக
30 மகள் ஆயதூஉம் - மனைவியானதும்
41 கூர - மிக
54 வரூஉ - வந்து

கந்திற்பாவை பேசியது (27 – 35)

''செல்லாதே! மணிமேகலை, செல்லாதே! செவ்வரி படர்ந்த நெடுங் கண்களையுடையவளே! அல்லி மாலையைப் பூண்ட உதயகுமரன் பக்கம் செல்லாதே! சென்ற பிறப்பில் உனக்கு இவன் கணவனாகத் தோன்றியதும், மனத்திற்கினியவனான அவனுக்கு நீ மனைவியானதுமான ஒரு பிறப்பு மட்டுமன்று; அதற்கு முன்னும் முன்னும் பல பிறப்புகள் இருந்துள்ளன. பிறவியில் அழுந்துகின்ற தடுமாற்றத்தைப் போக்க முயலுகின்ற நீ இவன் சாவிற்காகத் துயரம் கொள்ளாதே!'' என இவ்வாறு அத் தெய்வம் சொல்லியது.

உதயகுமரன் வெட்டுண்டதேன் (36 – 44)

பொன்போலும் மேனி கொண்ட பூங்கொடி மணிமேகலை, ''பொய்த்தல் இல்லாத நாவினோடு இந்த அம்பலத்தில் வீற்றிருக்கும் தெய்வம் நீதானா? உன் திருவடிகளைத் தொழுகின்றேன்! சென்ற பிறப்பில் இவன் உயிர் திட்டிவிடம் எனும் பாம்பு கடிக்க நீங்கியது. இப்போது எனது நெஞ்சு நடுங்கிப் பெருந்துயரடையுமாறு விஞ்சையன் வாளினால் வெட்டுண்டு வீழ்ந்தான். இதற்கான காரணங்களை நீ அறிவாயா? அறிந்திருந்தால் எனக்குச் சொல்லி அருள்க'' என வேண்டினாள்.

முற்பிறவிச் செய்தியைப் பாவை கூறியது (45 – 71)

'அழகிய செவ்வரி படர்ந்த நீண்ட கண்களையுடையவளே! கேட்பாயாக' எனத் தெய்வப் பேச்சாக, கந்திற்பாவை கூறத் தொடங்கியது. ''காயங்கரை எனும் பெரிய ஆற்றங்கரையில் புத்தன் உலகில் தோன்றப் போவதைக் கூறி, பிரமதருமன் எனும் முனிவன் மயக்கமுற்ற மக்களின் மன மாசுகளைப் போக்கி வந்தான். அம் முனிவனை நீயும் உன் கணவனான இராகுலனும் வழிபட்டீர்கள்! 'நாளை காலையில் அடிகளுக்கு உணவு படைக்கும் பேற்றினை அருள வேண்டும்' என்றீர்கள். முனிவரும் இசைந்தார். இரவு கழிந்தது. உங்கள் மனம் மகிழக் காலை தோன்றியது. உணவு தயாரானது. சமையற்காரன் நடக்கும்போது நடை தவறிப்போய், கால் தடுமாறிக் கீழே விழுந்தான்.

மடைக்கலம் சிதைய வீழ்ந்த மடையனைச்
சீலம் நீங்காச் செய்தவத் தோர்க்கு
வேலை பிழைத்த வெகுளி தோன்றத்
தோளும் தலையும் துணிந்துவேறு ஆக
வாளில் தப்பிய வல்வினை அன்றே
விராய்மலர்க் கூந்தல் மெல்இயல் நின்னோடு
இராகுலன் தன்னை இட்டுஅக லாதது
தலைவன் காக்கும் தம்பொருட்டு ஆகிய
அவல வெவ்வினை என்போர் அறியார்
அறம்செய் காதல் அன்பினின் ஆயினும்
மறம்செய் துளதுஎனின் வல்வினை ஒழியாது
ஆங்குஅவ் வினைவந்து அணுகும் காலைத்
தீங்குஉறும் உயிரே செய்வினை மருங்கின்
மீண்டுவரு பிறப்பின் மீளினும் மீளும்
ஆங்குஅவ் வினைகாண் ஆயிழை கணவனை
ஈங்கு வந்துஇவ் இடர்செய்து ஒழிந்தது.
இன்னும் கேளாய் இளங்கொடி நல்லாய்
மன்னவன் மகற்கு வருந்துதுயர் எய்தி
மாதவர் உணர்த்திய வாய்மொழி கேட்டுக்
காவலன் நின்னையும் காவல்செய்து ஆங்கிடும்.
இடுசிறை நீக்கி இராசமா தேவி
கூட வைக்கும் கொட்பினள் ஆகி
மாதவி மாதவன் மலர்அடி வணங்கித்
தீது கூறஅவள் தன்னொடும் சேர்ந்து
மாதவன் உரைத்த வாய்மொழி கேட்டுக்
காதலி நின்னையும் காவல் நீக்குவள்
அரசுஆள் செல்வத்து ஆபுத் திரன்பால்
புரையோர்ப் பேணிப் போகலும் போகுவை
போனால் அவனொடும் பொருள்உரை பொருந்தி
மாநீர் வங்கத்து அவனொடும் எழுந்து
மாயம்இல் செய்தி மணிபல் லவம்எனும்
தீவகத்து இன்னும் சேறலும் உண்டால்

56. மடைக்கலம் - சோற்றுப்பாத்திரம்.
60. தப்பிய - வெட்டிய.
74. வாய் - உண்மை.
77. கொட்பு - கொள்கை.
83. புரையோர் - சங்கத்தார்.

சோற்றுப் பாத்திரம் உடைந்து வீணானது. உனது கணவன், 'ஐவகைச் சீலமும் கொண்ட அரிய தவசிக்கு உணவூட்ட முடியாத பிழை செய்தாய்' என வெகுண்டு அச் சமையற்காரனின் தோளும் தலையும் வெவ்வேறாகும்படி வாளாலே வெட்டி வீழ்த்தினான். மணமலர் அணிந்த கூந்தலையுடைய மென்மையானவளே! அந்த வலிய வினையே இப்போதும் உன்னோடு இராகுலனையும் விட்டு நீங்காதாயிற்று. (முற்பிறவியில் வாளால் வெட்டிய இராகுலன், இப் பிறவியில் உதயகுமரனாகி வாளால் வெட்டுப்பட்டான்).

'தம்முடைய செயலினாலே விளைந்து துயரம் தரும் கொடிய வினைப்பயன்கள் வராமல் கடவுள் காப்பார்' என்று சொல்பவர் அறியாமையுடையவர். அறம் செய்யும் விருப்புடன் இருந்தாலும் பாவம் செய்யப்பட்டுள்ளதானால் அதன் பயன் வந்து பற்றியே தீரும். தீவினையால் உயிர் துன்புறும். உயிர் தான் செய்யும் நல்வினைகளின் பயனாகப் பின்வரும் பிறப்புகளில் உய்தியினைப் பெற்று மீட்சி அடையவும் கூடும். அத்தகைய வினையின் பயன்தான் மணி மேகலையே! உன் கணவனுக்கு இங்கே இவ்வாறு துன்பத்தைத் தந்து போயிற்று.

கந்திற்பாவை மணிமேகலைக்கு வருவதுரைத்தது (72 – 128)

இளங்கொடி நல்லாய்! இன்னும் கேள்! மன்னவன் மகனுக்கு நேர்ந்ததனை அறிந்து வருந்துகின்ற முனிவர்கள் மன்னவனிடம் சென்று உரைப்பர். முனிவர் சொற்கேட்ட மன்னவன் உன்னையும் காவல் செய்து சிறையிலிடுவான். அரச மாதேவி உன்னைச் சிறையிலிருந்து நீக்கித் தன்னுடனேயே வைத்துக் கொள்வாள். நின் தாய் மாதவி அறவண அடிகளின் மலரடிகளைத் தொழுது நினக்கு நேர்ந்த தீங்கினைக் கூறுவாள். அடிகள் மாதவியுடன் வந்து உண்மையைச் சொல்வார். அதுகேட்ட இராசமாதேவி உன்னைக் காவலிலிருந்து நீக்குவாள். பிறகு நீ அறவண அடிகளை வணங்கி அரசாளும் சிறப்பைப் பெற்றுள்ள ஆபுத்திரனிடம் செல்வாய். அங்கு அவனோடே அறவுரையாடலில் ஈடுபட்டிருப்பாய். அதன்பின் அவன் கடலிலே மரக்கலத்திலே வர, நீ விண்ணிலே பறந்து வர, மாசற்ற மணிபல்லவத் தீவிற்கு இன்னமும் ஒருமுறை சென்றடைய நேரிடும்.

தீவ திலகையின் தன்திறம் கேட்டுச்
சாவக மன்னன் தன்நாடு அடைந்தபின்
ஆங்குஅத் தீவம்விட்டு அருந்தவன் வடிவாய்ப்
பூங்கொடி வஞ்சி மாநகர் புகுவை;
ஆங்குஅந் நகரத்து அறிபொருள் வினாவும்
ஓங்கிய கேள்வி உயர்ந்தோர் பலரால்
இறைவன் எம்கோன் எவ்வுயிர் அனைத்தும்
முறைமையில் படைத்த முதல்வன்என் போர்களும்
தன்உரு இல்லோன் பிறஉருப் படைப்போன்
அன்னோன் இறைவன் ஆகும்என் போர்களும்,
துன்ப நோன்புஇத் தொடர்ப்பாடு அறுத்துஆங்கு
இன்பஉலகு உச்சி இருத்தும்என் போர்களும்,
பூத விகாரப் புணர்ப்புஎன் போர்களும்
பல்வேறு சமயப் படிற்றுஉரை எல்லாம்
அல்லிஅம் கோதை கேட்குறும் அந்நாள்,
இறைவனும் இல்லை இறந்தோர் பிறவார்
அறனோடு என்னைஎன்று அறைந்தோன் தன்னைப்
பிறவியும் அறவியும் பெற்றியின் உணர்ந்த
நறுமலர்க் கோதை எள்ளினை நகுதி
எள்ளினை போலும் இவ்வுரை கேட்டுஇங்கு
ஒள்ளியது உரைஎன உன்பிறப்பு உணர்த்துவை
ஆங்குநின் கொணர்ந்த அருந்தெய்வம் மயக்கக்
காம்புஅன தோளி கனாமயக்கு உற்றனை
என்றுஅவன் உரைக்கும் இளங்கொடி நல்லாய்
அன்றுஎன்று அவன்முன் அயர்ந்துஒழி வாய்அலை;
தீவினை உறுதலும் செத்தோர் பிறத்தலும்
வாயே என்று மயக்குஒழி மடவாய்!

101. படிற்றுரை - பொய்ம்மொழி.
105. அறவி - அறத்தோடு பொருந்திய வழி.
114. வாயே - உண்மையே.

தீவதிலகை வாயிலாகத் தன் முற்பிறப்புச் செய்தியை யறிந்து சாவக மன்னன் தன்நாடு திரும்புவான். பூங்கொடியே! பின்னர் நீ அத் தீவை விட்டுப் புறப்பட்டுத் தவமுனிவர் வடிவில் வஞ்சி மாநகர் சென்று சேர்குவை.

அவ் வஞ்சி நகரில் மெய்ப்பொருள் உணர்ந்த கேள்வியாளர் பலர் இருப்பர். 'இறைவன் எம் தலைவன்; அவனே எல்லா உயிர்களையும் முறையோடு படைத்த முதல்வன்' என்பர் சிலர் (சைவரும் வைணவரும்), 'தனக்கென உருவில்லாதவன், என்றாலும் உருவுள்ள பிற அனைத்தையும் படைப்பவன்; அவனே இறைவன்' என்பர் சிலர் (வேதாந்திகள்; அத்வைதவாதிகள்). 'துன்பப்பட்டு நோன்புகள் செய்தால் பற்றறுத்துக் கன்மங்கள் சிந்தி இன்ப உலகில் உச்சியில் இருக்கலாம்' என்பர் சிலர் (மீமாம்சிகர்). 'இவ்வுலகம் அனைத்துமே பஞ்சபூதங்களின் சேர்க்கையினாலே அமைந்து விளங்குவது' என்பர் சிலர் (பூதவாதிகள்). இத்தகைய பல்வேறு சமயவாதிகளின் பொய் யுரைகளை எல்லாம் நறுமலர்க் கோதையான நீ அங்கே கேட்பாய்!

'இறைவன் என எவனுமில்லை. இறந்தவர்கள் மீண்டும் பிறப்பதில்லை; அதனால் அறத்தின் பயனென ஒன்றுமில்லை' என்று ஒருவன் சொல்வான். பிறவிகளின் தன்மையையும், அறத்தால் விளையும் பேற்றினையும், நன்குணர்ந்த நறுமலர்க்கோதையான நீ அவனை இகழ்ந்து சிரிப்பாய்! 'என் உரையைக் கேட்டு இகழ்கிறாய் போலும்! அப்படியானால் சிறந்த பொருள் யாதென உரைப்பாய்' என்று அவன் கேட்பான். அவனுக்கு நீ உன் பழம்பிறப்பு வரலாற்றினை உணர்த்துவாய். அதனைக் கேட்கும் அவன், 'மணிபல்லவத்திற்கு உன்னைக் கொண்டு சென்ற அரிய சக்தியுடைய தெய்வமானது நின்னை மயக்கி விட்டது. அதனால்தான் மூங்கில் போன்ற தோள்களையுடையவளே நீயும் ஏதோ கனவு மயக்கத்தில் பேசுகிறாய்' எனக் கூறுவான். இளங்கொடியாகிய நல்லவளே! நீ அதனைக் கேட்டு அவ்வாறு அன்று என மறுத்து, 'கனவு மயக்கில்லை; தீவினையாளர் துன்புறுவர்; இறந்தோர் மீண்டும் பிறப்பர் என்பது உண்மை. இவ்வுண்மையை அறிந்து உன் மயக்கத்தை விடுவாய்' என்று விளக்குவாய்!

வழுஅறு மரனும் மண்ணும் கல்லும்
எழுதிய பாவையும் பேசா என்பது
அறிதலும் அறிதியோ அறியாய் கொல்லோ
அறியாய் ஆயின் ஆங்குஅது கேளாய்:
முடித்துவரு சிறப்பின் மூதூர் யாங்கணும்
கொடித்தேர் வீதியும் தேவர் கோட்டமும்
முதுமர இடங்களும் முதுநீர்த் துறைகளும்
பொதியிலும் மன்றமும் பொருந்துபு நாடிக்
காப்புஉடை மாநகர்க் காவலும் கண்ணி
யாப்புஉடைத் தாக அறிந்தோர் வலித்து
மண்ணினும் கல்லினும் மரத்தினும் சுவரினும்
கண்ணிய தெய்வதம் காட்டுநர் வகுக்க
ஆங்குஅத் தெய்வதம் அவ்விடம் நீங்கா
ஊன்கணி னார்கட்கு உற்றதை உரைக்கும்
என்திறம் கேட்டியோ இளங்கொடி நல்லாய்
மன்பெருந் தெய்வ கணங்களின் உள்ளேன்
துவதிகன் என்பேன் தொன்றுமுதிர் கந்தின்
மயன்எனக்கு ஒப்பா வகுத்த பாவையின்
நீங்கேன் யான்என் நிலையது கேளாய்:
மாந்தர் அறிவது வானவர் அறியார்
ஓவியச் சேனன்என் உறுதுணைத் தோழன்
ஆவதை இந்நகர்க்கு ஆர்உரைத் தனரோ
அவனுடன் யான்சென்று ஆடிடம் எல்லாம்
உடன்உறைந் தார்போல் ஒழியாது எழுதிப்
பூவும் புகையும் பொருந்துபு புணர்த்து
நாநனி வருந்தஎன் நலம்பா ராட்டலின்
மணிமே கலையான் வருபொருள் எல்லாம்
துணிவுடன் உரைத்தேன் என்சொல் தேறுஎன.

121 முதுமரம் – பழைய மரம்
123 காவலும் கணனி – காவலையும் கருதி
128 ஊன் கண்ணினார்க்கு – மானிடர்களுக்கு
137 ஆடிடம் – விளையாடுமிடம்

குற்றமற்ற மரமும், மண்ணும், கல்லும் எழுதப்பெற்ற பாவையும் ஆகிய இவை பேச முடியாது என்பதை அறிவாய் அல்லவா? அல்லது அறிய மாட்டாயா? அறியாய் என்றால் அதன் நிலை கூறுவேன்

சிறப்போடு விளங்கும் இத்தொன்மையான நகரெங்கும் தேரோடும் வீதி, தேவர் கோட்டம், முதிய மரத்திடல், பழைய நீர்த்துறைகள், அம்பலங்கள், மன்றங்கள், மதில்கள் ஆகியவற்றில் இவ் வூரின் காப்புத் தெய்வங்களை அறிஞர் நாட்டியுள்ளனர். இங்ஙனம் மண், கல், மரம் ஆகியவற்றில் நாட்டப்பெற்ற தெய்வங்கள் அவற்றை விட்டு நீங்கா. அவை ஊனுடல் கொண்ட மானிடர்களுக்கு முன் நிகழ்ந்ததையும் இனி நடக்கப் போவதையும் உரைக்கும். (அவை பேசும்போது கல்லும் மரமும் பேசுவதில்லை. அவற்றில் நிலை கொண்ட தேவதையே பேசுகிறது அந்த வகையிலேதான் நானும் தூணிலிருந்து பேசுகிறேன்.)

கந்திற் பாவை தன் கதை கூறியது (129 - 142)

இளங்கொடி நல்லாய்! இனி என் கதையைக் கேள்! நான் நிலைபெற்ற பெரிய தெய்வ கணங்களுள் ஒருவன். என் பெயர் துவதிகன். பழைய நாளில், முதிர்ந்த இந்தத் தூணிலே மயன் என் பாவையை அமைத்தான். இதைவிட்டு நான் ஒரு நாளும் நீங்கேன் என் நிலையைக் கேளாய்! மக்கள் அறிகின்ற அளவுக்கு வானவர் அறியார். ஓவியச்சேனன் எனக்கு உறுதுணையான தோழன், இந் நகரத்திற்கு யார் இதைச் சொன்னார்களோ தெரியவில்லை (நகரார் எவ்வாறோ அறிந்தனர்)

நான் அவனுடன் சென்று விளையாடிய இடங்களிலெல்லாம் பக்கத்திலிருந்து பார்த்தவர்போல ஒன்றும் விடாமல் ஓவியப்படுத்தி எழுதி அமைத்துள்ளனர். அங்கெல்லாம் இவ்வூர் மக்கள் எனக்குப் பூவும் புகையும் சேர்த்து என் பெருமையை நாவாரப் போற்றி வழிபடுகின்றனர். மணிமேகலை! யான் நினக்கு வரு பொருள் எல்லாம் துணிவுடன் உரைத்தேன். என் பேச்சினை உண்மையெனத் தெளிவாயாக'' எனப் பாவை உரைத்தது.

தேறேன் அல்லேன் தெய்வக் கிளவிகள்
ஈறுகடை போக எனக்குஅருள் என்றலும்,
துவதிகன் உரைக்கும் சொல்லலும் சொல்லுவேன்
வருவது கேளாய்: மடக்கொடி நல்லாய்!
மன்உயிர் நீங்க மழைவளம் கரந்து
பொன்எயில் காஞ்சி நகர்கவின் அழிய
ஆங்குஆது கேட்டே ஆர்உயிர் மருந்தாய்
ஈங்குஇம் முதியாள் இடவயின் வைத்த
தெய்வப் பாத்திரம் செவ்விதின் வாங்கித்
தையல்நின் பயந்தோர் தம்மொடு போகி
அறவணன் தானும் ஆங்குஉளன் ஆதலின்
செறிதொடி காஞ்சி மாநகர் சேர்குவை
அறவணன் அருளால் ஆய்தொடி அவ்வூர்ப்
பிறவணம் ஒழிந்துநின் பெற்றியை ஆகி
வறன்ஒடு உலகின் மழைவளம் தரூஉம்
அறனஒடு ஏந்தி ஆர்உயிர் ஓம்புவை
ஆய்தொடிக்கு அவ்வூர் அறனொடு தோன்றும்
ஏது நிகழ்ச்சி யாவும் பலஉள
பிறஅறம் உரைத்தோர் பெற்றிமை எல்லாம்
அறவணன் தனக்குநீ உரைத்த அந்நாள்
தவமும் தருமமும் சார்பில் தோற்றமும்
பவம்அறு மார்க்கமும் பான்மையின் உரைத்து
மறஇருள் இரிய மண்உயிர் ஏமுற
அறவெயில் விரித்துஆங்கு அளப்புஇல் இருத்தியொடு
புத்த ஞாயிறு தோன்றும் காறும்
செத்தும் பிறந்தும் செம்பொருள் காவா
இத்தலம் நீங்கேன் இளங்கொடி யானும்
தாயரும் நீயும் தவறுஇன்று ஆக
வாய்வ தாகநின் மனப்பாட்டு அறம்என
ஆங்குஅவன் உரைத்தலும் அவன்மொழி பிழையாய்
பாங்குஇயல் நல்அறம் பலவும் செய்தபின்
கச்சிமுற் றத்து நின்உயிர் கடைகொள

144. ஈறு கடைபோக - மரணம் இறுதியாக.
156. பிறவணம் ஒழிந்து - வேற்றுமதப் பற்றொழிந்து.
165. ஏமம் - இன்பம். 166. இருத்தி - சித்தி.
174. கடை - முடிவு.

மணிமேகலையே நீ காஞ்சி செல்வாய் (143 - 154)

அதைக்கேட்ட மணிமேகலை, ''பாவைத் தெய்வமே நான் தெய்வமொழிகளைத் தெளிவேன். என் இறுதிக்காலம்வரை நடக்க இருப்பதைச் சொல்லி அருள்'' என வேண்டினாள். துவதிகன் எனும் பாவை உரைக்கும்: ''இளங்கொடியே! இனி உனக்கு நடக்க விருப்பதையும் சொல்லுவேன் கேள். காஞ்சி நகரில் மழை வளம் குறையும். மிகுதியான உயிர்கள் அழியும்; பொன் மதில் சூழ்ந்த அந்நகர் அழகு கெடும். அதனைக் கேள்வியுற்று நீ சம்பாபதி கோவிலில் வைத்துள்ள ஆருயிர் மருந்தாகிய அன்னத்தைச் சுரப்பதான தெய்வப் பாத்திரத்தைச் செவ்வனே ஏந்திக் காஞ்சி செல்வாய். அங்கே தாயர் இருவரும் அறவண அடிகளும் இருப்பர்.

அறவண அடிகள் அறம் கூறுவார் (155- 174)

ஆய்தொடி! அறவண அடிகளின் அருளாலே அவ்வூரிலே பிறசமயப் பற்றுகளினின்றும் முற்றவும் நீங்கப்பெற்று, நினக்குரிய பௌத்த தருமத்தை உடையவள் ஆவாய்! வறட்சி நிலவியுள்ள உலகில் மழை வளத்தால் கிடைப்பதாகிய உணவினைத் தருவதாகிய இந்த அற ஓட்டினை (அட்சய பாத்திரத்தை) ஏந்தி உயிர்களைப் பாதுகாப்பாய்! அவ்வூரில் உனக்கு அறநெறியோடு தோன்றும் ஏது நிகழ்ச்சிகள் மிகப்பல உள்ளன.

வஞ்சி நகரில் பிற சமயத்தினர் கூறிய கொள்கைகளை எல்லாம் நீ அறவண அடிகளுக்குச் சொல்லுவாய்! அந் நாளில் அவர் உனக்கு அறம் உரைப்பார். தவமும் தருமமும் இன்னதென விளக்குவார். பேதைமையால் வரும் பன்னிரு நிதானங்களைச் சொல்லுவார். பிறவியறும் நெறியை அவர் முறையாகச் சொல்லுவார். 'பாவ இருள் ஒழிந்து, மன்னுயிர் இன்புற, அறவொளி விரித்து, அளவற்ற சித்திகளுடன் புத்தனாகிய ஞாயிறு தோன்றும் மட்டும் நான் இந் நகரை விட்டு நீங்கேன், இறந்தும் பிறந்தும் இங்கேயே இருந்து அறத்தினைப் பாதுகாப்பேன். நின் அன்னைமாரும் நீயும் தவறேதும் இல்லாது வாழ்வீராக! நின் மனத்தில் நல்லறம் வந்து வாய்ப்பதாகுக!' என அறவணர் கூறுவார். நீயும் அவர் உரையிலிருந்து மாறாதவளாக பாங்குள்ள நல்லறம் பலவும் செய்வாய்! காஞ்சி நகரத்திலேயே உன் உயிர் இறுதி அடையும்.

உத்தர மகதத்து உறுபிறப்பு எல்லாம்
ஆண்பிறப் பாகி அருள்அறம் ஒழியரய்
மாண்பொடு தோன்றி மயக்கம் களைந்து
பிறர்க்குஅறம் அருளும் பெரியோன் தனக்குத்
தலைச்சா வகனாய்ச் சார்புஅறுத்து உய்தி
இன்னும் கேட்டியோ நல்நுதல் மடந்தை
ஊங்கண் ஓங்கிய உரவோன் தன்னை
வாங்குதிரை எடுத்த மணிமே கலாதெய்வம்
சாது சக்கரற்கு ஆர்அமுது ஈத்தோய்
ஈது நின்பிறப்பு என்பது தெளிந்தே
உவவனம் மருங்கில் நின்பால் தோன்றி
மணிபல் லவத்திடைக் கொணர்ந்தது கேள்எனத்
துவதிகன் உரைத்தலும் துயர்க்கடல் நீங்கி
அவதி அறிந்த அணியிழை நல்லாள்
வலைஒழி மஞ்ஞையின் மனமயக்கு ஒழிதலும்
உலகுதுயில் எழுப்பினன் மலர்கதி ரோன்என்.

179. தலைச் சாவகனாய் – முதல் மாணாக்கனாய்.
உய்தி – பிழைப்பாய்.
181. ஊங்கண் – முன்பு.
188. அவதி – எல்லை.
189. மஞ்ஞை - மயில்.

பல பிறப்புற்று முடிவில் முத்தி பெறுவாய் (175 - 179)

பின்னர் வடக்கே மகத நாட்டில் நீ அடையும் பிறப்புகள் எல்லாம் ஆண் பிறப்பாகவே அமையும். அப் பிறப்புகளில் அருளறத்திலிருந்து மா .திருப்பாய். பின்னர் மாண்புடனே தோன்றி, மக்களின் மயக்கத்தை நீக்கி, பிறர்க்கு அறநெறியினை அருளிச் செய்யும் புத்தபிரானுக்கு முதல் மாணாக்கனாகிப் பற்றறுத்து நிருவாணமான முத்திநிலை சேர்வாய்!

மணிமேகலை மயக்கம் ஒழிந்தாள் (180 - 190)

நன்னுதல் மடந்தையே! இன்னும் கேள்! முன்காலத்தே உன் குலத்திலே விளங்கிய அறிவுடையான் ஒருவன் கடலில் கலமுடைந்து வருந்தியபோது அவனை மணிமேகலா தெய்வம் எடுத்து வந்து கரை சேர்த்தது சாதுசக்கரன் என்பவனுக்கு அரிய உணவளித்தவளே! நின் பிறப்பு இத்தன்மையது என்பதை அறிந்தே, மணிமேகலா தெய்வம், உவவனத்தில் உன்முன் தோன்றி, உன்னை மணிபல்லவத்தீவில் கொண்டு சேர்த்தது. இவற்றையெல்லாம் அறிவாயாக'' எனத் துவதிகனான கந்திற்பாவை உரைத்தவையெல்லாம் கேட்டு மணிமேகலை உதயகுமரன் இறப்பினால் ஏற்பட்ட துயர்க் கடலினின்றும் நீங்கினாள். தன் பிறவியின் எல்லையை அறிந்த மணிமேகலை வலையினின்று விடுபட்ட மயில்போல மன மயக்கம் ஒழிந்தாள். அப்போது கதிரவனும் கதிர்களைப் பரப்பி உலகினைத் துயில் எழுப்பினான்.

22. சிறைசெய் காதை

கடவுள் மண்டிலம் கார்இருள் சீப்ப
நெடுநிலைக் கந்தில் நின்ற பாவையொடு
முதியோள் கோட்டம் வழிபடல் புரிந்தோர்
உதய குமரற்கு உற்றதை உரைப்பச்
சாதுயர் கேட்டுச் சக்கர வாளத்து
மாதவர் எல்லாம் மணிமே கலைதனை
இளங்கொடி அறிவதும் உண்டோ இதுஎனத்
துளங்காது ஆங்குஅவள் உற்றதை உரைத்தலும்
அங்குஅவள் தன்னை ஆர்உயிர் நீங்கிய
வேந்தன் சிறுவனொடு வேறுஇடத்து ஒளித்து
மாபெருங் கோயில் வாயிலுக்கு இசைத்துக்
கோயில் மன்னனைக் குறுகினர் சென்றுஈங்கு
உயர்ந்துஓங்கு உச்சி உவாமதி போல
நிவந்துஓங்கு வெண்குடை மண்அகம் நிழல்செய
வேலும் கோலும் அருள்கண் விழிக்க
தீதுஇன்று உருள்கநீ ஏந்திய திகிரி
நினக்குஎன வரைந்த ஆண்டுகள் எல்லாம்
மனக்குஇனி தாக வாழிய வேந்தே!
இன்றே அல்ல இப்பதி மருங்கில்
கன்றிய காமக் கள்ளாட்டு அயர்ந்து
பத்தினிப் பெண்டிர் பால்சென்று அணுகியும்
நல்தவப் பெண்டிர் பின்உளம் போக்கியும்
தீவினை உருப்ப உயிர்ஈறு செய்தோர்
பார்ஆள் வேந்தே பண்டும் பலரால்:
மன்மருங்கு அறுத்த மழுவாள் நெடியோன்
தன்முன் தோன்றல் தகாதுஒழி நீஎனக்
கன்னி ஏவலின் காந்த மன்னவன்
இந்நகர் காப்போர் யார்என நினைஇ
நாவலம் தண்பொழில் நண்ணார் நடுக்குறக்
காவல் கணிகை தனக்குஆம் காதலன்

1. சீப்ப – நீக்க. 8. துளங்காது – நடுங்காது. 11. வாயில் – வாயில் காப்போர்
13. உவாமதி – முழு நிலவு 17. வரைந்த – எல்லையிட்ட.
25. மழுவான் நெடியோன் – பரசுராமன். 29. நண்ணார் – பகைவர்

22. சிறை செய் காதை

உதயகுமரன் வெட்டுண்ட செய்தியை முனிவர் அறிந்தனர் (1 - 8)

சூரியன் இருளை நீக்கியது. பொழுது புலர்ந்தது. நெடிய தூணில் நின்ற பாவையையும் சம்பாபதித் தெய்வத்தையும் வழிபாடு செய்வோர் உதயகுமரனுக்கு நேரிட்டதை வெளியே கூறினர். உதயகுமரன் இறந்ததைக் கேட்ட சக்கரவாளக் கோட்டத்து முனிவரெலாம் மணிமேகலையிடம், ''இளங்கொடி போன்றவளே! இச் செயல்பற்றி உனக்கு ஏதேனும் தெரியுமா?'' என்று கேட்டனர். மணிமேகலை நடுக்கம் எதுவுமின்றி அங்கு நடந்ததை எல்லாம் உரைத்தாள்.

அரசனிடம் சென்றனர் (9 - 18)

முனிவர்கள் அவளையும், உயிர் நீங்கிய உதயகுமரன் உடலையும் வேற்றோரிடத்திலே ஒளித்து வைத்து, அரண்மனைக்குச் சென்றனர். தாங்கள் வந்திருப்பதைக் காவலரிடம் கூறி அரசனை அணுகினர். ''அரசே! உச்சி வானின் நடுவே உள்ள முழுமதிபோல, உயர்ந்தோங்கிய உன் வெண்கொற்றக்குடை உலகிற்குத் தண்ணிய நிழலைத் தருவதாகுக! உன் வேலும் செங்கோலும் அருள் நோக்கமுடையன ஆகுக! நீ ஏந்தியுள்ள ஆணைச் சக்கரம் தடையின்றி உருள்வதாகுக! உனக்கென வரையறுக்கப்பட்டுள்ள ஆண்டுகள் அனைத்திலும் நீ இனிதாக வாழ்வாயாக!'' என வாழ்த்தினர்.

காமத்தால் மாண்டோர் பலர் (19 - 79)

''மண்ணை ஆளும் மன்னனே! இந்நகரில் காமமாகிய கள்ளினால் போதை ஏறப்பட்டுப் பத்தினிப் பெண்டிரை அணுகியும், நல்ல தவப் பெண்டிரின் பின்னர் உள்ளத்தைச் செலுத்தியும் தீவினைப் பயன் வந்து ஊட்ட உயிரை இழந்தோர் முன்னரும் பலர் இருந்திருக்கின்றனர். முன்னொரு காலத்தில் சம்பாபதித் தெய்வம் காந்தன் என்னும் மன்னனிடம், 'பரசுராமன் அரசர் குலத்தை வேரறுத்த மழுவை ஏந்தியிருப்பவன். அவன் முன் நீ தோன்றக் கூடாது; இந் நகரை விட்டு நீங்குக' என ஆணையிட்டது. அப்போது காந்தன், 'நான் இப்புகார் நகரை விட்டுச் சென்றால் இச்சோழ நாட்டைக் காப்பவர் யார்?' என எண்ணினான். 'என் காமக்கிழத்தியின் மகன் ககந்தன் இந் நாவலந் தீவில் உள்ள பகைவர்கள் நடுங்கும் வலிமை படைத்தவன்;

/

இகழ்ந்தோர் காயினும் எஞ்சுதல் இல்லோன்
ககந்தன் ஆம்எனக் காதலின் கூஉய்
அரசுஆள் உரிமை நின்பால் இன்மையின்
பரசு ராமன்நின் பால்வந்து அணுகான்
அமர முனிவன் அகத்தியன் தனாது
துயர்நீங்கு கிளவியின் யான்தோன் றளவும்
ககந்தன் காத்தல் காகந்தி என்றே
இயைந்த நாமம் இப்பதிக்கு இட்டுஈங்கு
உள்வரிக் கொண்டுஅவ் உரவோன் பெயர்நாள்
தெள்ளுநீர்க் காவிரி ஆடினள் வருஉம்
பார்ப்பனி மருதியைப் பாங்கோர் இன்மையின்
யாப்புஅறை என்றே எண்ணினன் ஆகிக்
காவிரி வாயிலில் ககந்தன் சிறுவன்
நீவா என்ன, நேர்இழை கலங்கி
மண்திணி ஞாலத்து மழைவளம் தரூஉம்
பெண்டிர் ஆயின் பிறர்நெஞ்சு புகாஅ
புக்கேன் பிறன்உளம் புரிநூல் மார்பன்
முத்தீப் பேணும் முறைஎனக்கு இல்என
மாதுயர் எவ்வமொடு மனைஅகம் புகாஅள்
பூத சதுக்கம் புக்கனள் மயங்கிக்
கொண்டோன் பிழைத்த குற்றம் தான்இலேன்
கண்டோன் நெஞ்சில் கரப்புஎளி தாயினேன்
வான்தரு கற்பின் மனைஅறம் பட்டேன்
யான்செய் குற்றம் யான்அறி கில்லேன்
பொய்யினை கொல்லோ பூத சதுக்கத்துத்
தெய்வம் நீஎனச் சேயிழை அரற்றலும்,
மாபெரும பூதம் தோன்றி மடக்கொடி
நீகேள் என்றே நேர்இழைக்கு உரைக்கும்:
தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதுஎழுவாள்
பெய்எனப் பெய்யும் பெருமழை என்றஅப்
பொய்யில் புலவன் பொருள்உரை தேறாய்
பிசியும் நொடியும் பிறர்வாய்க் கேட்டு
விசிபிணி முழவின் விழாக்கோள் விரும்பிக்
கடவுள் பேணல் கடவியை ஆகலின்
மடவரல் ஏவ மழையும் பெய்யாது

31. காயினும் – வெகுண்டு எதிர்த்தாலும் 42. யாப்பு அறை – உறுதியற்றவள்.
62. பிசி – புதிர், நொடி – விடுகதை

இகழ்ச்சிபடப் பேசி எதிர்த்து வந்தாலும் அவர்கட்குச் சற்றும் குறையாது போரிடும் ஆற்றலுள்ளவன். நாட்டைக் காக்கக் ககந்தனே தகுதியானவன்' என அவனை அன்புடன் அழைத்தான். 'ககந்தா! நீ இந் நகரைச் சிலகாலம் ஆள்வாயாக! நீ அரசாளும் மரபிலே வந்தவன் அல்லன். ஆதலின் பரசுராமன் உன்னிடம் போரிட வரமாட்டான். அகத்திய முனிவன் அருள்மொழி கேட்டு நான் மீண்டும் வரும்வரை இந் நகரை நீயே ஆண்டு வருவாயாக' என்றான். 'ககந்தன் ஆள்வதால் இந் நகர் காகந்தி என்ற பெயர் பெறட்டும்' என்று கூறி வலிமைமிக்க காந்த மன்னன் வேற்றுருக் கொண்டு வெளியேறினான்.

ஒருநாள் மருதி என்ற பார்ப்பனப் பெண் தெளிந்த நீரையுடைய காவேரியில் நீராடி யாரும் துணையின்றித் தனியே வந்தாள். ககந்தன் மகன், 'அவள் கற்புறுதி இல்லாதவள்' என்று நினைத்து அவளைத் தன்னிடம் வருமாறு அழைத்தான். மருதி கலக்கமுற்று, 'இந்நிலவுலகத்தே மழையினைப் பெய்விக்கும் பத்தினிப் பெண்டிராயின் பிறர் நெஞ்சு புகார். நானோ இவன் மனத்தில் புகுந்துவிட்டேன். அதனால் 'புரிநூலணிந்த பார்ப்பனக் கணவனின் முத்தீயைக் காக்கும் தகுதி எனக்கு இல்லை' எனப் பெருந்துன்பமுற்றுத் தன் வீட்டிற்குச் செல்லாது பூத சதுக்கத்தை அடைந்தனள். 'நான் என் கணவனுக்கு ஒரு பிழையும் செய்திலேன். எனினும் அயலான் மனத்தில் எளிதில் புகுந்தேன். மழையைத் தரும் மகளிர்க்குரிய இல்லறத்தில் பொருந்தி வாழ்ந்தேன். நான் செய்த குற்றம், இன்னிதென அறியேன். பூத சதுக்கத்துத் தெய்வமே! தீயவரைப் புடைத்து உண்ணும் உன் நீதியும் பொய்த்து விட்டதோ' என மருதி அழுது புலம்பினாள்.

மிகப் பெரிய சதுக்க பூதம் தோன்றி, 'இளநங்கையே! நான் சொல்வதைக் கேள். பிற தெய்வங்களை வணங்காது, கணவனையே தெய்வமாகத் தொழுது வணங்கும் கற்புடைய மங்கை 'பெய்' என்று சொன்னால் பெருமழை பெய்யும் என்பது பொய்யில் புலவராகிய திருவள்ளுவர் வாக்கு! அந்த அறவுரையை நீ தெளியவில்லை. பிறர் கூறும் பொருளற்ற பொய்யுரைகளையும் வெற்றுரைகளையும் நம்பினை. கொட்டு முழக்குடன் கூடிய திருவிழாக்களை விரும்பி, கணவனையன்றி வேறு கடவுளரை வணங்கி வந்தாய்! ஆதலால் இளம் நங்கையே!' நீ சொன்னால் மழை பெய்யாது. கற்புநிறை

நிறைஉடைப் பெண்டிர் தம்மே போலப்
பிறர்நெஞ்சு சுடூஉம் பெற்றியும் இல்லை
ஆங்குஅவை ஒழிகுவை ஆயின் ஆயிழை
ஓங்குஇரு வானத்து மழையும்நின் மொழியது
பெட்டாங்கு ஒழுகும் பெண்டிரைப் போலக்
கட்டாது உன்னைஎன் கடுந்தொழில் பாசம்
மன்முறை எழுநாள் வைத்துஅவன் வழூஉம்
பின்முறை அல்லது என்முறை இல்லை
ஈங்குஎழு நாளில் இளங்கொடி நின்பால்
வாங்கா நெஞ்சின் மயரியை வாளால்
ககந்தன் கேட்டுக் கடிதலும் உண்டுஎன
இகந்த பூதம் எடுத்துஉரை செய்ததுஅப்
பூதம் உரைத்த நாளால் ஆங்குஅவன்
தாதை வாளால் தடியவும் பட்டனன்.
இன்னும் கேளாய் இருங்கடல் உடுத்த
மண்ஆள் செல்வத்து மன்னவர் ஏறே!
தரும தத்தனும் தன்மா மன்மகள்
பெருமதர் மழைக்கண் விசாகையும் பேணித்
தெய்வம் காட்டும் திப்பிய ஓவியக்
கைவினை கடந்த கண்கவர் வனப்பினர்
மைத்துனன் முறைமையால் யாழோர் முணவினைக்கு
ஒத்தனள் என்றே ஊர்முழுது அலர்எழப்
புனையா ஓவியம் புறம்போந்து என்ன
மனைஅகம் நீங்கி வாள்நுதல் விசாகை
உலக அறவியின் ஊடுசென்று ஏறி
இலகுஒளிக் கந்தின் எழுதிய பாவாய்
உலகர் பெரும்பழி ஒழிப்பாய் நீஎன,
மாநகர் உள்ளீர் மழைதரும் இவள்என
நாஉடைப் பாவை நங்கையை எடுத்தலும்,

70. பெட்டாங்கு – விரும்பிய வண்ணம்.
71. பாசம் – கயிறு.
75. மயரி – மயக்கமுடையான்.

மகளிரைப்போலக் காமுகர் நெஞ்சைச் சுடுகின்ற தன்மையும் உன்னிடம் இல்லை. முன் சொல்லிய பிழையினை நீ கைவிட்டால், பெண்ணே! வானத்து மழையும் உன் சொல் கேட்கும். மனம் போனபடி திரியும் பெண்டிரைத்தான் என் கடுமையான பாசக் கயிறு கட்டுமே அல்லாமல் உன் போன்ற குற்றமற்ற பெண்ணைக் கட்டாது. அரசன் முறைசெய்வதற்குரிய காலவரையறையான ஏழு நாள்களுள் அவன் தண்டிக்கத் தவறினால் அதன் பின்னர் நான் தண்டித்தலே முறையாகும். இளங்கொடி போன்றவளே! உனக்கு நேர்ந்ததைக் கேட்டு இன்றைக்கு ஏழாம் நாளிலே, உன்னிடம் வைத்த உள்ளத்தை மீட்காத அத் தீயோனைக் ககந்தன் தன் வாளினாலே வெட்டுவான்' எனத் தீமையைக் களையும் பூதம் கூறியது. பூதம் சொல்லிய அந் நாளிலே அக் காமுகன் தன் தந்தையின் வாளால் வெட்டவும் பட்டான்.

விசாகை வரலாறு (80 – 160)

பெரிய கடலை ஆடையாக உடுத்துள்ள நிலத்தினை ஆளும் சிறப்புடைய அரச சிங்கமே! இன்னமும் கேள்! தருமதத்தன் ஒரு வாணிகன். விசாகை அவன் மாமன் மகள்; பெரிய மதர்த்த குளிர்ந்த கண்களை உடையவள்! இருவரும் கண்கவர் அழகினர். தருமதத்தன் மைத்துனன் முறைமையுடையவனாதலின் விசாகை அவனுடன் காந்தர்வ மணத்திற்கு இசைந்தனள் என ஊர் முழுதும் பழிச்சொல் எழுந்தது. (காந்தர்வ முறையில் திருமணம் என்ற ஒன்று இல்லை. காதலர்க்குப் பிள்ளைப் பேற்றிற்குரிய உடற்கூட்டமும் உண்டு. இது தமிழ்க் களவொழுக்கத்திலிருந்து வேறுபட்டது. தமிழ் மரபில் களவு கற்பான பிறகே அதாவது திருமணத்தின் பின்னரே உடற்கூட்டம் உண்டு. காந்தர்வக் கூட்டம் நடந்ததாக விசாகையைப் பழித்தனர்.) ஓர் இடத்திலே தீட்டி வைக்கப்பட்டிருந்த ஓவியம் வெளியே புறப்பட்டுச் செல்வதுபோல ஒளி பொருந்திய நெற்றியையுடைய விசாகை தன் வீட்டை விட்டு வெளியே வந்தாள். உலக அறவியின் உள்ளே நுழைந்து அங்குள்ள கோட்டத்தில் ஏறி, கந்திற்பாவை முன் நின்றாள். 'ஒளி விளங்கும் தூணில் எழுதப்பட்டுள்ள பாவையே! உலகம் என்மேல் சுமத்தும் பழியை நீக்குவாயாக' என வேண்டினாள்.

தெய்வப் பாவையும், ''மாநகர் மக்களே! இவள் மழைதரும் கற்பினள்'' என விசாகையைப் போற்றிக் கூறியது. விசாகையும், ''இத்

தெய்வம் காட்டித் தெளித்திலேன் ஆயின்
மையல் ஊரோ மனமாசு ஒழியாது
மைத்துனன் மனையாள் மறுபிறப்பு ஆகுவேன்
இப்பிறப்பு இவனொடும் கூடேன் என்றே
நல்தாய் தனக்கு நல்திறம் சாற்றி
மற்றுஅவள் கன்னி மாடத்து அடைந்தபின்,
தரும தத்தனும் தந்தையும் தாயரும்
பெருநகர் தன்னைப் பிறகிட்டு ஏகித்
தாழ்தரு துன்பம் தலைஎடுத் தாய்என
நாஉடைப் பாவையை நலம்பல ஏத்தி
மிக்கோர் உறையும் விழுப்பெருஞ் செல்வத்துத்
தக்கண மதுரை தான்சென்று அடைந்தபின்,
தரும தத்தனும் தன்மா மன்மகள்
விரிதரு பூங்குழல் விசாகையை அல்லது
பெண்டிரைப் பேணேன் இப்பிறப்பு ஒழிகெனக்
கொண்ட விரதம் தன்னுள் கூறி
வாணிக மரபின் வருபொருள் ஈட்டி
நீள்நிதிச் செல்வனாய் நீள்நில வேந்தனின்
எட்டிப் பூப்பெற்று இருமுப் பதிற்றியாண்டு
ஒட்டிய செல்வத்து உயர்ந்தோன் ஆயினன்.
அந்த ணாளன் ஒருவன் சென்றுஈங்கு
என்செய் தனையோ இருநிதிச் செல்வ
பத்தினி இல்லோர் பலஅறம் செய்யினும்
புத்தேள் உலகம் புகாஅர் என்பது
கேட்டும் அறிதியோ கேட்டனை ஆயின்
நீட்டித்து இராது நின்நகர் அடைகெனத்
தக்கண மதுரை தான்வறிது ஆக
இப்பதிப் புகுந்தனன் இருநில வேந்தே!
மற்றவன் இவ்வூர் வந்தமை கேட்டுப்
பொன்தொடி விசாகையும் மனைப்புறம் போந்து
நல்லாள் நாணாள் பல்லோர் நாப்பண்

102. பிறகிட்டு – பின்வைத்து.
114 ஒட்டிய – தீராத.

தெய்வம் "உண்மையைக் காட்டித் தெளிவித்திருக்காதாயின் மயக்கங்கொனட இவ்வூராரின் மனத்திலிருக்கும் மாசு எண்ணம் நீங்கியிருக்காது. அடுத்த பிறப்பிலே என மைத்துனன் மனைவி ஆவேன். இப் பிறப்பில் இவனுடன் கூடேன்" எனத் தன் தாய்க்குத் தன் உறுதியினை எடுத்துச் சொல்லிக் கன்னிமாடம் சேர்ந்தாள்.

தருமதத்தனும் அவனுடைய பெற்றோரும், "நாங்கள் அழுந்தியுள்ள துன்பத்திலிருந்து எங்களை நீக்கினாய்" எனத் தெய்வப் பாவையின் சிறப்புகள் பலவற்றையும் சொல்லிப் போற்றிப் பாராட்டித் துதித்தனர். பின்னர் அவர்கள் புகார் நகரினின்றும் நீங்கி, செல்வம் மிக்கவர் வாழும் தென்மதுரையைச் சென்றடைந்தனர்.

தருமதத்தன், "மலர்ந்த பூக்களை அணிந்த மெல்லிய கூந்தலையுடையவளான என் மாமன் மகள் விசாகையைத் தவிர வேறொரு பெண்ணை விரும்பேன். இப் பிறப்பு இவ்வாறே கழிவதாகுக" என்னும் உறுதியைத தன் மனத்திலே கொண்டான். முறையான வாணிகத்தால் வந்த செல்வத்தைச் சேர்த்தான்; பெரு நிதிபடைந்த செல்வன் ஆனான்; பெருநிலம் ஆளும் பாண்டி மன்னனாலே எட்டி என்னும் பட்டமும் அதற்குரிய பொற்பூவும் பெற்றான். நிறைந்த செல்வத்தில் உயர்ந்தோனாக அறுபதாம் வயதையும் அடைந்தான்.

அந்தணன் ஒருவன் தருமதத்தனிடம் சென்று, "பெருநிதிச் செல்வனே! நீ தனித்து இங்கே என்ன செய்தாய்? மனைவி இல்லாதவன் பல்வகை அறங்களைச் செய்தாலும் புத்தேள் உலகத்தில் (சுவர்க்கத்தில்) புகமுடியாது என்பதைக் கேட்டு அறிந்ததில்லையா? அறிந்திருக்கிறாய் என்றால், மேலும் காலத்தை நீட்டிக்காது, உடனே உன் ஊர் சென்று திருமணம் செய்து கொள்" என்றான்.

பெருநிலமாளும் மன்னவ! அவனும் தென்மதுரையை விட்டு நீங்கி, விசாகையை மணக்கும் எண்ணத்துடன் மீண்டும் இப்புகார் நகருக்கே வந்து சேர்ந்தான்

அவன் இவ்வூருக்கு வந்ததைப் பொன்வளைகள் அணிந்த விசாகை கேள்வியுற்றாள். கன்னிமாடத்திலிருந்து வீட்டிற்கு வந்தாள். நாணம் கொள்ளாமல், பல்லோர் நடுவே, தீயனவற்றை வெறுத்து

அல்லவை கடிந்த அவன்பால் சென்று
நம்முள்நாம் அறிந்திலம் நம்மை முன்நாள்
மம்மர் செய்த வனப்புயாங்கு ஒளித்தன?
ஆறுஐந்து இரட்டி யாண்டுஉனக்கு ஆயதுஎன்
நாறுஐங் கூந்தலும் நரைவிரா வுற்றன
இளமையும் காமமும் யாங்குஒளித் தனவோ
உளன்இல் லாள! எனக்குஈங்கு உரையாய்
இப்பிறப்பு ஆயின்யான் நின்அடி அடையேன்
அப்பிறப்பு யான்நின் அடித்தொழில் கேட்குவன்
இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுத்துணை ஆவது
தானம் செய்எனத் தரும தத்தனும்
மாமன் மகள்பால் வான்பொருள் காட்டி
ஆங்குஅவன் அவளுடன் செய்த நல்அறம்
ஓங்குஇரு வானத்து மீனினும் பலவால்.
குமரி மூத்தஅக் கொடுங்குழை நல்லாள்
அமரன் அருளால் அகல்நகர் இடூஉம்
படுபழி நீங்கிப் பல்லோர் நாப்பண்
கொடிமிடை வீதியில் வருவோள் குழல்மேல்
மருதி பொருட்டால் மடிந்தோன் தம்முன்
கருகிய நெஞ்சினன் காமம் காழ்கொளச்
சுரிஇரும் பித்தை சூழ்ந்துபுறம் தாழ்ந்த
விரிபூ மாலை விரும்பினன் வாங்கித்
தொல்லோர் கூறிய மணம்ஈது ஆம்என
எல்அவிழ் தாரோன் இடுவான் வேண்டி
மாலை வாங்க ஏறிய செங்கை
நீலக் குஞ்சி நீங்காது ஆகலின்,
ஏறிய செங்கை இழிந்திலது இந்தக்

128. மம்மர் – மயக்கம்.
149. சுரி இரும்பித்தை – சுருண்ட கரிய குடுமி.

ஒதுக்கிய தருமதத்தனிடம் சென்றாள். ''நாம் ஒருவர்க்கொருவர் அடையாளம் கூட அறிய முடியாமல் மாறி இருக்கிறோம். முன்னே நம்மை மயங்கச் செய்த அழகு எங்கே ஒளிந்தது. உனக்கு அறுபது வயதாகிறது. மணம் கமழும் என் அழகிய கூந்தலிலும் நரை சேர்ந்துள்ளது. நம் இளமையும் காமமும் எங்கே ஒளிந்தன? மன உறுதி இல்லாதவரே, கூறுவீராக! இப்பிறவியிலே நான் உன்னடிகளை அடைய முடியாது. அடுத்த பிறவியில் நான் உனக்குக் குற்றேவல் செய்யும் மனைவியாவேன். இளமையும் நிலையானது அன்று; உடலும் நிலையான ஒன்று அன்று; வளமான பெருஞ்செல்வமும் நிலைத்து நிற்பது அன்று. புத்தேள் உலகத்தைப் புதல்வரால் பெற முடியாது. மேம்பட்டதான அறச்செயல்களே சிறந்த துணையாகும். ஆதலால் (மணம் செய்து கொள்ள வேண்டும் என்னும் உன் எண்ணத்தை மறந்து) அறம் செய்வாயாக'' என்று தெளிவுபடுத்தினாள். (பத்தினி இல்லாதவர் பல அறம் செய்தாலும் மோட்சம் பெறமுடியாது என்பதற்கு மறுப்பு இது)

தருமதத்தனும் தான் ஈட்டிய பெரும் பொருள் அனைத்தையும் மாமன் மகளிடம் காட்டினான்; அவளுடன் சேர்ந்து நல்ல அறங்கள் பலவற்றைச் செய்தான். அங்ஙனம் அவர்கள் செய்த நல் அறங்கள் உயர்ந்த, பெரிய வானத்தில் தோன்றும் மீன்களினும் பலவாக இருந்தன.

மணமின்றிக் கன்னியாகவே முதுமையடைந்த விசாகை, கந்திற்பாவையின் அருளால், அப்பெரிய ஊரிலுள்ளோர் இட்டுக் கூறிய பழியினின்றும் விடுபட்டாள்; கொடிகள் செறிந்த நகர வீதியில், பலர் நடுவே அவள் வந்து கொண்டிருந்தாள்.

அப்பொழுது மருதியின் காரணமாக இறந்தவனின் அண்ணன் (ககந்தனின் மூத்த மகன்) காமம் முற்றி இருண்ட நெஞ்சினன் ஆயினான். அவன் தன் சுருண்ட கரிய குடுமியில் சூட்டியிருந்த மலர்ந்த பூக்களாலாகிய மாலையினை, 'பண்டையோர் உரைத்த மணம் இதுவே' என்று கூறி அவளுக்கு இடும்பொருட்டு எடுப்பதற்கு அவனுடைய சிவந்த கையை ஏற்றினான். ஏறிய கை இறங்கவே இல்லை.

காரிகை பொருட்டுஎன், ககந்தன் கேட்டுக்
கடுஞ்சினம் திருகி மகன்துயர் நோக்கான்
மைந்தன் தன்னை வாளால் எறிந்தனன்
ஊழிதோறு ஊழி உலகம் காத்து
வாழிய எம்கோ மன்னவ என்று
மாதவர் தம்முள்ஓர் மாதவன் கூறலும்
வீயா விழுச்சீர் வேந்தன் கேட்டனன்
இன்றே அல்ல என்றுஎடுத்து உரைத்து
நன்றுஅறி மாதவிர் நலம்பல காட்டினிர்
இன்றும் உளதோ இவ்வினை உரைம்என,
வென்றி நெடுவேல் வேந்தன் கேட்பத்
தீதுஇன்று ஆக செங்கோல் வேந்துஎன
மாதவர் தம்முள்ஓர் மாதவன் உரைக்கும்:
முடிபொருள் உணர்ந்தோர் முதுநீர் உலகில்
கடியப் பட்டன ஐந்துஉள அவற்றில்
கள்ளும் பொய்யும் களவும் கொலையும்
தள்ளா தாகும் காமம் தம்பால்
ஆங்குஅது கடிந்தோர் அல்லவை கடிந்தோர்என
நீங்கினர் அன்றே நிறைதவ மாக்கள்
நீங்கார் அன்றே நீள்நில வேந்தே!
தாங்கா நரகம் தன்னிடை உழப்போர்
சேய்அரி நெடுங்கண் சித்திரா பதிமகள்
காதலன் உற்ற கடுந்துயர் பொறாஅள்
மாதவி மாதவர் பள்ளியுள் அடைந்தனள்.
மற்றவள் பெற்ற மணிமே கலைதான்
முற்றா முலையினள் முதிராக் கிளவியள்
செய்குவன் தவம்எனச் சிற்றிலும் பேரிலும்

162. வீயா – மாறாத.
165. உரைம் என – சொல்லும் என்று.
170. கடியப்பட்டன – விலக்கப்பட்டன.
176. உழப்போர் – வருந்துவோர்.

விசாகையின் கற்பு நெறியே இதற்கு காரணம் என்பதறிந்த ககந்த மன்னன் கடுஞ்சினம் மூண்டெழ, தன் மகன் அடைந்த துன்பத்தினைக் கருதாதவனாகி, அவனை வாளினால் வெட்டிக் கொன்றான்.

எம் மன்னவர் பெருமானே! நீ ஊழிதோறும் ஊழிதோறும் உலகத்தைக் காத்து வாழ்வாயாக!'' எனச் சக்கரவாளக் கோட்ட முனிவர்களுள் ஒருவன் சொன்னான்.

காமத்தின் தீமை (161 – 175)

மாறாத சிறப்புடைய மன்னவன் முனிவர்கள் சொன்னதைக் கேட்டான். ''நல்லனவற்றை அறியும் முனிவர்களே! இன்று மட்டும் அல்ல; நன்மையான செய்திகள் பலவற்றை எப்போதும் எனக்குக் கூறியுள்ளீர்கள்'' எனப் பாராட்டினான். பின்னர், ''நீங்கள் சொன்ன காமக் கேடுகள் இன்றைக்கும் உள்ளனவா? சொல்வீராக!'' என வெற்றி சூடும் நீண்ட வேலினை ஏந்திய மன்னன் கேட்டான்.

மாதவருள் ஒருவன், ''அரசே! நின் செங்கோல் தீதின்றி அமைவதாகுக! கடல் சூழ்ந்த இத்தொல்லுலகில் முழுதும் கற்றறிந்த பெரியோரால் விலக்கப்பட்ட குற்றங்கள் ஐந்து உள. அவற்றுள் கள்ளும், பொய்யும், களவும், கொலையும் ஆகிய நான்கினையும் காமம் என்ற ஒன்று தன்னுடனேயே வைத்துக் கொள்ளும் தன்மையுடையது. (காமம் எல்லாக் குற்றங்களையும் தரும்). எனவே காமத்தை நீக்கியவர் மற்றக் குற்றங்களையும் நீக்கியவர் ஆவர். காமத்தைத் ஒழித்தவரே நிறை தவமுனிவர். நெடுநிலம் ஆளும் வேந்தனே! அவ்வாறு நீக்காதவர் கடுநரகில் வீழ்ந்து வருந்துவர்''.

(இவ்வாறு நீண்ட முன்னுரை கூறி மன்னவன் மனத்தைப் பக்குவப்படுத்திய பின்னர் முனிவர்கள் உதயகுமரன் கொலை யுண்டதைக் கூறுகின்றனர்)

மகன் கொலையுண்டதை மன்னனுக்குக் கூறினர் (176 – 204)

''அரசே! செவ்வரிபடர்ந்த நீண்ட கண்களையுடைய சித்திராபதியின் மகள் மாதவி, தன் கணவனுக்கு நேர்ந்த கொடிய துயரத்தைப் பொறுக்க முடியாதவளாய்ப் பௌத்தப் பள்ளியில் சென்று சேர்ந்தனள். அவள் பெற்ற மகள் மணிமேகலை முற்றா முலையினள்; முதிர்ச்சியடையா மழலைப் பேச்சினள்; 'தவம் செய்வேன்' என உறுதி

ஐயம் கொண்டுஉண்டு அம்பலம் அடைந்தனள்
ஆங்குஅவள் அவ்இயல் பினளே ஆயினும்
நீங்கான் அவளை நிழல்போல் யாங்கணும்
காரிகை பொருட்டால் காமம் காழ்கொள
ஆர்இருள் அஞ்சான் அம்பலம் அடைந்தனன்
காயசண் டிகைவடிவு ஆயினள் காரிகை
காயசண் டிகையும் ஆங்குஉளள் ஆதலின்;
காயசண் டிகைதன் கணவன் ஆகிய
வாய்வ..ள் விஞ்சையன் ஒருவன் தோன்றி
ஈங்குஇவள் பொருட்டால் வந்தனன் இவன்என
ஆங்குஅவன் தீவினை உருத்தது ஆகலின்;
மதிமருள் வெண்குடை மன்ன! நின்மகன்
உதய குமரன் ஒழியான் ஆக,
ஆங்குஅவள் தன்னை அம்பலத்து ஏற்றி
ஓங்குஇருள் யாமத்து இவனைஆங்கு உய்த்துக்
காயசண் டிகைதன் கணவன் ஆகிய
வாய்வாள் விஞ்சையன் தன்னையும் கூஉய்
விஞ்சை மகள்பால் இவன்வந் தனன்என
வஞ்ச விஞ்சையன் மனத்தையும் கலக்கி
ஆங்குஅவன் தன்கை வாளால் அம்பலத்து
ஈங்குஇவன் தன்னை எறிந்ததுஎன்று ஏத்தி
மாதவர் தம்முள்ஓர் மாதவன் உரைத்தலும்,
சோழிக ஏனாதி தன்முகம் நோக்கி
யான்செயற் பாலது இளங்கோன் தன்னைத்
தான்செய் ததனால் தகவுஇலன் விஞ்சையன்
மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலன் காவல் இன்றுஎனின் இன்றால்
மகனை முறைசெய்த மன்னவன் வழிஓர்
துயர்வினை யாளன் தோன்றினன் என்பது
வேந்தர் தம்செவி உறுவதன் முன்னம்
ஈங்குஇவன் தன்னையும் ஈமத்து ஏற்றிக்
கணிகை மகளையும் காவல்செய்க என்றனன்
அணிகிளர் நெடுமுடி அரசுஆள் வேந்துஎன்.

186. காழ் கொள – முற்ற.
205. ஏனாதி என்பது வேந்தனால் கொடுக்கப்படும் பட்டப் பெயர்.

பூண்டவள். சிறு வீடுகளிலும் பெரிய மாளிகைகளிலும் பிச்சையெடுத்து உண்டு உலக அறவியில் தங்கி வந்தாள். அவள் தவ இயல்பினை அறிந்தும், உன் மகன் உதயகுமரன் அவளை நீங்காமல் நிழல்போலத் தொடர்ந்தான். காமம் முற்றியதால் கரிய இருள் என்றும் அஞ்சாது அம்பலம் புகுந்தான். அவனிடமிருந்து தப்ப மணிமேகலை காயசண்டிகை உருக்கொண்டிருந்தாள். காயசண்டிகை முன்பு அம்பலத்தில் இருந்து வந்தவள். காயசண்டிகையின் கணவனான விஞ்சையன், அப்போது அங்கே வந்தனன். காயசண்டிகையின் பொருட்டாகவே அரசகுமரன் அங்கு வந்தான் எனக் கருதினான். அவனுடைய தீவினை வந்து சூழ்ந்தது. ஆதலினாலே, நிலவினைப் போலும் வெண்கொற்றக் குடையினை உடைய மன்னனே! நின் மகனாகிய உதயகுமரனும் அவ்விடத்தை விட்டு நீங்கான் ஆயினான். அந்த வினையே, மணிமேகலையை அம்பலத்தில் ஏற்றியது; இருள் நிறைந்த யாமத்திலே உதயகுமரனையும் அங்குக் கொண்டு வந்து சேர்த்தது; காயசண்டிகையின் கணவனாகிய கூரிய வாளினையுடைய காஞ்சனனையும் கூவி அழைத்தது; காயசண்டிகை பொருட்டே உதயகுமரன் இங்கே வந்துள்ளான் என விஞ்சையன் மனத்தையும் கலக்கியது; அவ் வினையே விஞ்சையன் கைவாளாலே அம்பலத்தில் உதயகுமரனையும் வெட்டுவித்தது'' என மாதவருள் ஒருவன் அரசனை வணங்கிக் கூறினான்.

மணிமேகலை சிறைப்பட்டனள் (205 – 215)

முனிவர் சொற்களைக் கேட்ட அரசன் சோழிக ஏனாதியின் முகத்தை நோக்கினான். ''அரசகுமரனுக்கு நான் அளிக்க வேண்டிய தண்டனையை விஞ்சையன் செய்து விட்டான். அதனால் எனக்கு அப்பெருமை கிடைப்பதைத் தடுத்த தகுதியில்லாதவன் ஆகிவிட்டான். மாதவரின் தவமும் மகளிர் கற்பும் அரச காவல் இல்லாவிடில் இல்லையாகிவிடும். கன்றைத் தேர்க்காலில் நசுக்கிய தன் மகனை அதே தேர்க்காலில் கிடத்தி அவன் மார்பில் தேர் ஏற்றிய மனுநீதிச்சோழன் மரபில் என்னைப்போல ஒரு தீவினையாளன் தோன்றியுள்ளான் என்னும் பழிச்சொல் பிற மன்னர்களின் காதுகளில் விழும் முன்னே இவன் உடலை ஈமத்திலே ஏற்றி விட்டு, கணிகை மகள் மணிமேகலையையும் சிறைக் காவலில் வையுங்கள்'' என ஆணையிட்டான் அழகு கிளர்ந்துகொண்டிருக்கும் நெடிய திருமுடியினைச் சூடியிருந்த அரசன்.

23. சிறை விடு காதை

மன்னவன் அருளால் வாசந் தவைஎனும்
நல்நெடுங் கூந்தல் நரைமூ தாட்டி
அரசற்கு ஆயினும் குமரற்கு ஆயினும்
திருநிலக் கிழமை தேவியர்க்கு ஆயினும்
கட்டுரை விரித்தும் கற்றவை பகர்ந்தும்
பட்டவை துடைக்கும் பயம்கெழு மொழியினள்
இலங்குஅரி நெடுங்கண் இராசமா தேவி
கலங்குஅஞர் ஒழியக் கடிதுசென்று எய்தி
அழுதுஅடி வீழாது ஆயிழை தன்னைத்
தொழுதுமுன் நின்று தோன்ற வாழ்த்திக்
கொற்றம் கொண்டு குடிபுறம் காத்தும்
செற்றத் தெவ்வர் தேஎம்தமது ஆக்கியும்
தருப்பையின் கிடத்தி வாளின் போழ்ந்து
செருப்புகல் மன்னர் செல்வுழிச் செல்கென
மூத்து விளிதல்இக் குடிப்பிறந் தோர்க்கு
நாப்புடை பெயராது நாணுத்தகவு உடைத்தே
தன்மண் காத்தன்று பிறர்மண் கொண்டன்று
என்எனப் படுமோ நின்மகன் மடிந்தது
மன்பதை காக்கும் மன்னவன் தன்முன்
துன்பம் கொள்ளேல் என்றுஅவள் போயபின்,
கையாற்று உள்ளம் கரந்துஅகத்து அடக்கிப்
பொய்யாற்று ஒழுக்கம் கொண்டுபுறம் மறைத்து
வஞ்சம் செய்குவன் மணிமே கலையைஎன்று

---

5. கட்டுரை – பொருள் பொதிந்த சொல்.
6. பட்டவை – உண்டான துன்பம். பயம் – பயன்.
8. கலங்கு அஞர் – கலங்குதற்குக் காரணமான துன்பம்.
12. தெவ்வர் – பகைவர்.
15. விளிதல் – இறத்தல்.

23. சிறை விடு காதை

அரசிக்கு வாசந்தவை ஆறுதல் கூறினாள் (1 – 20)

வாசந்தவை என்பவள் நல்ல நெடிய நரைத்த கூந்தலை உடைய மூதாட்டி. அரசனுக்கு ஆயினும், அரச குமரர்க்காயினும், செல்வச் சிறப்புடைய நிலத்திற்கு உரிமைபூண்ட அரசரின் மனைவியர்க்காயினும் பொருள்நிறைந்த சொற்களை விரிவாகச் சொல்லியும் தான் கற்றவற்றை எடுத்துரைத்தும் துன்பத்தைப் போக்குகின்ற பயனுடைய மொழிகளைச் சொல்ல வல்லவள். அரசனுடைய ஆணைப்படி வாசந்தவை, செவ்வரி பொருந்திய நீண்ட கண்களையுடைய இராசமாதேவியின் கலங்குதற்குக் காரணமாகிய துன்பத்தை ஆறுதல் கூறிப் போக்குவதற்காக அரசியின் இருப்பிடத்திற்கு விரைந்து சென்றாள். அரசியைக் கண்டதும் அடிகளில் விழுந்து அழவில்லை; அவளைத் தொழுது வாழ்த்தித் தேற்றினாள். ''இராசமாதேவியே! மன்னர் குடியிற் பிறந்தோர் வீரத்தால் பிறரை வெற்றி கொண்டும், குடிமக்களை நன்கு பாதுகாத்தும், பகைவர் நாட்டினைப் போரிட்டு வென்று தமது ஆக்கியும் வீர வாழ்வு வாழ்வதைப் பெருமையாகக் கருதுவர். போர்க்களத்தில் மார்புகாட்டி இறக்காமல் இறந்தோரைத் தருப்பைப் புல்லின்மேல் கிடத்தி, வாளால் பிளந்து, 'போரில் வெற்றி கொள்ளும் மன்னர் செல்லும் வீரசுவர்க்கம் புகுக' என்று சொல்லி அடக்கம் செய்வர். வீரம் காட்டி மாளாது வெறுமனே முதுமையுற்று இறத்தல் சோழர் குடியில் பிறந்தவர்க்கு நாணத்தைத் தருவது. ஆதலால் இதனைக் கூறுவதற்கு என் நா எழவில்லை (தயங்குகிறது). உன்னுடைய மகன் இறந்தது தன் நாட்டைக் காக்கவோ, பிறர் நாட்டை வெல்லவோ அன்று. அவன் இறப்பை என் என்று சொல்வது? காமத்தால் கொலையுண்ட இவ்விறப்பு இழிவானது. அதனால் மக்களைக் காக்கும் அரசன் முன்பாக உன் துன்பத்தைக் காட்டாதே!'' என வாசந்தவை அரசியிடம் சொல்லிச் சென்றாள்.

அரசியின் வஞ்சனை (21 – 23)

அரசியோ, தன் பெருந்துயரை மனத்துள்ளே அடக்கிக் கொண்டு துயரமில்லாதவள்போல் பொய்யாக வெளியே காட்டிக் கொண்டாள். மகன் இறப்புக்குக் காரணமான 'மணிமேகலையை வஞ்சித்து வருத்துவேன்' என்று எண்ணம் கொண்டாள்.

அம்சில் ஓதி அரசனுக்கு ஒருநாள்
பிறர்பின் செல்லாப் பிக்குணிக் கோலத்து
அறிவு திரிந்தோன் அரசுஇயல் தான்இலன்
கரும்புஉடைத் தடக்கைக் காமன் கையற
அரும்பெறல் இளமை பெரும்பிறிது ஆக்கும்
அறிவு தலைப்பட்ட ஆயிழை தனக்குச்
சிறைதக் கன்று செங்கோல் வேந்துஎனச்
சிறப்பின் பாலார் மக்கள் அல்லார்
மறப்பின் பாலார் மன்னர்க்கு என்பது
அறிந்தனை ஆயின்இவ் ஆயிழை தன்னைச்
செறிந்த சிறைநோய் தீர்க்கென்று இறைசொல
என்னோடு இருப்பினும் இருக்கஇவ் இளங்கொடி
தன்ஓடு எடுப்பினும் தகைக்குநர் இல்என்று
அங்குஅவள் தனைக்கூஉய் அவள்தன் னோடு
கொங்குஅவிழ் குழலாள் கோயிலுள் புக்குஆங்கு,
அறிவு திரித்துஇவ் அகல்நகர் எல்லாம்
எறிதரு கோலம்யான் செய்குவல் என்றே
மயல்பகை ஊட்ட மறுபிறப்பு உணர்ந்தாள்
அயர்ப்பது செய்யா அறிவினள் ஆக,

27. கையற – செயலற
28. பெரும்பிறிது ஆக்கும் – பயன்படாது விடச் செய்யும்.
36. தகைக்குநர் இல் – தடுப்பவர் இல்லை.
40. எறிதரு கோலம் – கல்லெறிந்து அடிக்கும் கோலத்தை.
41. மயல்பகை ஊட்ட – பித்தேறுதற்குக் காரணமான மருந்தை ஊட்ட.
42. அயர்ப்பது – மறப்பது.

மணிமேகலையைச் சிறையினின்று விடுவித்தனர் (24 – 34)

அழகிய கூந்தலையுடைய அரசமாதேவி அரசனிடம் சென்று, ''செங்கோல் மன்னவ ! பிக்குணிக்கோலம் கொண்ட பெண் பின்னே யாரும் செல்லமாட்டார். மணிமேகலையின்பின் மயங்கித் திரிந்த உதயகுமரன் நாட்டை ஆளத் தகுதியற்றவன். கரும்பு வில்லை உடைய காமன் செயலற்றுப் போகுமாறு பெறுதற்கரிய தன் இளமையைக் காமத்திற்குப் பயன்படாது செய்து, நல்லறிவு வழியிற் செல்லும் மணிமேகலைக்குச் சிறை வாழ்க்கை தகுதியுடையதன்று என்றாள். அரசனும், மன்னர்க்குரிய சிறந்த குணங்களைக் கொண்டவரே அரச மக்களாகக் கருதப்படுவர். அவ்வாறில்லாதவர் மறப்பதற்கே உரியவர். இதனை நீயும் நன்கு அறிவாய். ஆதலின் இம் மணிமேகலையைச் சிறைத்துன்பத்தினின்றும் நீக்குவாயாக'' என அரசியிடம் கூறினான்.

மணிமேகலையை அரசி அழைத்துச் சென்றாள் (35 – 38)

''இளங்கொடி போன்ற மணிமேகலை என்னுடனேயே இருப்பதானாலும் இருக்கட்டும்; அல்லது தன் ஓட்டினைக் கொண்டு பழையவாறு பிச்சை ஏற்றுண்ணும் வாழ்க்கையை மேற்கொண்டாலும் கொள்ளட்டும்; அவளைத் தடுப்பவர் யாருமிலர்'' என்று அரசமாதேவி கூறினாள்.

பின்னர், மணம் வீசும் கூந்தலையுடைய அரசி, மணி மேகலையை அழைத்துக் கொண்டு அவளோடும் அரண்மனைக்குச் சென்றாள்.

அரசி மணிமேகலைக்குச் செய்த கொடுமைகள்

பித்தேற்ற மருந்தூட்டினாள் (39 – 42)

''இவள் அறிவுநிலை வேறுபட்டாள் என, அகன்ற இந் நகர மக்களெல்லாம் மணிமேகலையைக் கல்லால் அடிக்கும் நிலையை அவளுக்கு உண்டாக்குவேன்'' என அரசி திட்டமிட்டாள்; மணிமேகலைக்குப் பித்தினை உண்டாக்கும் மருந்தினை ஊட்டினாள். மணிமேகலையோ மறுபிறப்பினை உணர்ந்தவள்; ஆகையால் மருந்தினை உண்டும் மயக்கம் கொள்ளாமல் தெளிந்த அறிவினளாகவே இருந்தாள்.

கல்லா இளைஞன் ஒருவனைக் கூஉய்
வல்லாங்குச் செய்து மணிமே கலைதன்
இணைவளர் இளமுலை ஏந்துஎழில் ஆகத்துப்
புணர்குறி செய்து பொருந்தினள் என்னும்
பான்மைக் கட்டுரை பலர்க்குஉரை என்றே
காணம் பலவும் கைநிறை கொடுப்ப,
ஆங்குஅவன் சென்றுஅவ் ஆயிழை இருந்த
பாங்கில் ஒருசிறைப் பாடுசென்று அணைதலும்
தேவி வஞ்சம் இதுஎனத் தெளிந்து
நாஇயல் மந்திரம் நடுங்காது ஓதி
ஆண்மைக் கோலத்து ஆயிழை இருப்பக்
காணம் பெற்றோன் கடுந்துயர் எய்தி
அரசர் உரிமையில் ஆடவர் அணுகார்
நிரயக் கொடுமகள் நினைப்புஅறி யேன்என்று
அகநகர் கைவிட்டு ஆங்குஅவன் போயபின்,
மகனைநோய் செய்தாளை வைப்பது என்என்று
உய்யா நோயின் ஊண்ஒழிந் தனள்எனப்
பொய்ந்நோய் காட்டிப் புழுக்குஅறை அடைப்ப
ஊண்ஒழி மந்திரம் உடைமையின் அந்த
வாள்நுதல் மேனி வருந்தாது இருப்ப,
ஐஎன விம்மி ஆயிழை நடுங்கிச்
செய்தவத் தாட்டியைச் சிறுமை செய்தேன்
என்மகற்கு உற்ற இடுக்கண் பொறாது
பொன்நேர் அனையாய் பொறுக்கென்று அவள்தொழ,

---

44. வல்லாங்கு – வல்லபடி (பலாத்காரம்)
48. காணம் – காசு.
55. அரசர் உரிமையில் – அரசருடைய தேவிமார் இருக்கும் அந்தப்புரத்தில்.
56. நிரயம் – நரகம்.
63. ஐ என விம்மி – விரையப் பொருமி.

கற்பைக் கெடுக்கக் கல்லா இளைஞனை அனுப்பினாள் (43 – 57)

(இச்சூழ்ச்சி பலிக்காது போகவே அரசி மணிமேகலையின் கற்பைக் கெடுக்க முயன்றாள்). கல்வியறிவற்ற ஓர் இளைஞனை அழைத்தாள். வல்லாங்கு (பலாத்காரம்) செய்து மணிமேகலையின் இணைஒத்து வளர்ந்துள்ள இளைய முலைகளை ஏந்தியிருக்கும் எழிலான மார்பிலே, புணர்ச்சிக் காலத்தே செய்தலான பற்குறி, நகக்குறிகளைச் செய்து, 'இம் மணிமேகலை என்னொடு கூடியிருந்தனள்' என்னும்படியாக எல்லோர்க்கும் எடுத்துச் சொல்' என்று அவன் கை நிறையப் பொற்காசுகள் பலவும் கொடுத்தாள். அவனும் மணிமேகலை இருந்த பகுதியில் ஓர் இடத்தினை அடைந்தான். மணிமேகலை இந்து இராசமாதேவியின் சூழ்ச்சியென்று அறிந்தாள். உருமாறும் மந்திரத்தை நா அசைத்து நடுக்கமின்றி ஓதினாள். ஓர் ஆடவன் உருவம் பெற்று அங்கே இருந்தாள். பொன் பெற்று அவளைக் கெடுக்க வந்தவன் பேரச்சம் கொண்டான். 'அந்தப் புரத்தில் ஆடவர் புக முடியாதே! கொடிய மனம் கொண்ட அரசி என்ன நினைத்து இதைச் செய்தாளோ' என எண்ணியவனாய் ஊரை விட்டே ஓடிப் போனான்.

உணவு தராமல் வருத்தினாள் (58 – 62)

''என் மகனுக்குக் காம நோய் உண்டாக்கிய இவளை உயிருடன் வைப்பதா?'' என்று நினைத்த அரசி, ''மணிமேகலை பிழைக்க முடியாத கொடிய நோயுற்றிருப்பதால் உணவுண்ண முடிய வில்லை'' எனப் பொய்யான ஒரு நோயினைச் சொல்லி அவளைப் புழுக்கமான ஓர் அறையிலே அடைத்து வைத்தாள். உணவில்லாமல் வாழும் மந்திரம் மணிமேகலைக்குத் தெரியுமாதலால் ஒளிபொருந்திய நெற்றியை உடைய அவள் மேனி வருந்தாது இயல்பாய் இருந்தாள்.

அரசி மன்னிக்க வேண்டினாள் (63 – 66)

தான் செய்த கொடுமைகளினின்றும் மணிமேகலை தப்பிப் பிழைத்ததை அறிந்த அரசி விம்மிப் பொருமி நடுங்கினாள். ''பொன் போன்றவளே! என் மகனுக்கு நேர்ந்த துன்பத்தைப் பொறுக்க முடியாமல், தவநெறியை மேற்கொண்டுள்ள உனக்குப் பல சிறுமைகளைச் செய்து விட்டேன்; மன்னிப்பாயாக'' என மணிமேகலையைத் தொழுதாள்.

நீல பதிதன் வயிற்றில் தோன்றிய
ஏலம் கமழ்தார் இராகுலன் தன்னை
அழல்கண் நாகம் ஆர்உயிர் உண்ண
விழித்தல் ஆற்றேன் என்உயிர் சுடுநாள்
யாங்குஇருந்து அழுதனை இளங்கோன் தனக்குப்
பூங்கொடி நல்லாய் பொருந்தாது செய்தனை
உடற்குஅழு தனையோ உயிர்க்குஅழு தனையோ
உடற்குஅழு தனையேல் உன்மகன் தன்னை
எடுத்துப் புறங்காட்டு இட்டனர் யாரே
உயிர்க்குஅழு தனையேல் உயிர்புகும் புக்கில்
செயப்பாட்டு வினையால் தெரிந்துஉணர்வு அரியது
அவ்வுயிர்க்கு அன்பினை ஆயின் ஆய்தொடி
எவ்வுயிர்க்கு ஆயினும் இரங்கல் வேண்டும்
மற்றுஉன் மகனை மாபெருந் தேவி
செற்ற கள்வன் செய்தது கேளாய்:
மடைக்கலம் சிதைய வீழ்ந்த மடையனை
உடல்துணி செய்துஆங்கு உருத்துஎழும் வல்வினை
நஞ்சுவிழி அரவின் நல்உயிர் வாங்கி
விஞ்சையன் வாளால் வீட்டியது அன்றே!
யாங்குஅறிந் தனையோ ஈங்குஇது நீஎனில்

69. அழல்கண் நாகம் – திட்டிவிடம் என்னும் பாம்பு.
70. விழித்தல் – உயிர் வாழ்தல்.
75. புறங்காடு – சுடுகாடு.
76. புக்கில் – புகுமிடம்.
81. செற்ற – சினந்த.
82. மடையன் – சமையல்காரன்.

அரசி தொழ முற்பட்டதை மணிமேகலை தடுத்தாள் (67 – 72)

''மணங்கமழும் மாலையணிந்த இராகுலன் முற்பிறவியில் நீலபதி என்பவளின் வயிற்றிலே பிறந்து என் கணவனாய் இருந்தான். தீயுமிழும் கீன்களையுடைய திட்டிவிடம் என்னும் நாகம் அவன் ஆருயிரைப் போக்கியது. கனவன் இறந்த பிறகு வாழ விரும்பாத நான் நெருப்பிலே விழுந்து உயிரை விட்டேன். (அந்த இராகுலன்தான் இப் பிறப்பில் உன் மகன் உதயகுமரனாகப் பிறப்பெடுத்துள்ளான்). அப்போது இந்த இளவரசனுக்காக நீ எங்கிருந்து அழுதனை? (என் முற்பிறவிக் கணவனுக்கு இப்பிறப்பில் தாயாக விளங்கும்) பூங்கொடி போன்ற அரசியே! நீ என்னைத் தொழுவது பொருத்தமானது அன்று''

உயிர்க்கழுதாயா? உடலுக்கழுதாயா? (73 – 79)

''அரசியே! நீ உன் மகனுடைய உடலுக்காக அழுதாயா? உயிருக்காக அழுதாயா? உடலுக்காகத்தான் அழுதாய் என்றால் உன் மகன் உடம்பைச் சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்லவிட்டது யார்? நீ தானே! உயிருக்காக அழுதாய் என்றால், அந்த உயிர் வினைவழியே சென்று இப்போது புகுந்துள்ள இடத்தைத் தெரிந்து உணர்வது உன்னால் இயலாது. அந்த உயிர்க்கு நீ அன்புடையவளாக இருக்கிறாய் என்றால் எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் கொள்ள வேண்டும். எல்லா உயிர்க்கும் இரக்கம் காட்டினால் எங்கோ மறுபிறவியில் உள்ள உன் மகனுக்கும் இரக்கம் காட்டியதாகும்.

உதயகுமரனின் முற்பிறவிச் செயல் (80 – 90)

மாபெருந்தேவி! உன் மகனைக் காஞ்சனன் வெட்டியதற்குக் காரணமான தீவினையைக் கேட்பாயாக.

சோற்றுப்பாத்திரம் கீழே விழுந்து உடையுமாறு நடை தவறி விழுந்த சமையற்காரனின் உடலை வெட்டிக் கொன்றான் இராகுலன். அத் தீவினை சென்ற பிறப்பில் நஞ்சினைக் கொண்டுள்ள பாம்பினாலே அவன் நல்லுயிரை வாங்கியது. இப்பிறப்பில் விஞ்சையன் வாளால் வெட்டி வீழ்த்தியது.

பூங்கொடி போன்ற நல்ல அரசியே! இவற்றையெல்லாம் நீ எவ்வாறு அறிந்தனை?'' என்று கேட்கிறாயா; இதோ கூறுகிறேன் என்று

பூங்கொடி நல்லாய் புகுந்தது இதுஎன
மொய்ம்மலர்ப் பூம்பொழில் புக்கது முதலாத்
தெய்வக் கட்டுரை தெளிந்ததை ஈறா
உற்றதை எல்லாம் ஒழிவுஇன்று உரைத்து,
மற்றும் உரைசெயும் மணிமே கலைதான்
மயல்பகை ஊட்டினை மறுபிறப்பு உணர்ந்தேன்
அயர்ப்பது செய்யா அறிவினேன் ஆயினேன்
கல்லாக் கயவன் கார்இருள் தான்வர
நல்லாய் ஆண்உரு நான்கொண்டு இருந்தேன்
ஊண்ஒழி மந்திரம் உடைமையின் அன்றோ
மாண்இழை செய்த வஞ்சம் பிழைத்தது
அந்தரம் சேறலும் அயல்உருக் கோடலும்
சிந்தையின் கொண்டிலேன் சென்ற பிறவியில்
காதலன் பயந்தோய் கடுந்துயர் களைந்து
தீதுஉறு வெவ்வினை தீர்ப்பது பொருட்டால்
தையால் உன்தன் தடுமாற்று அவலத்து
எய்யா மையல்தீர்ந்து இன்உரை கேளாய்
ஆள்பவர் கலக்குற மயங்கி நல்நாட்டுக்
காருக மடந்தை கணவனும் கைவிட
ஈன்ற குழவியொடு தான்வேறு ஆகி
மான்றுஓர் திசைபோய் வ்ரையாள் வாழ்வுழிப்
புதல்வன் தன்னைஓர் புரிநூல் மார்பன்
பதியோர் அறியாப் பான்மையின் வளர்க்க

90. ஒழிவு இன்று – ஒன்றுவிடாமல்.
93. அயர்ப்பது – மறப்பது.
103. எய்யா மையல் – அறியாமையாகிய மயக்கம்.
105. காருக மடந்தை – நெய்வோர் குலத்துப் பிறந்த ஒருத்தி.
107. மான்று – மயங்கி. வரையாள் – வரையறை இலலாதவளாய.

பூக்கள் மொய்த்திருக்கும் உலவனத்தில் புகுந்தது தொடங்கி, கந்திற்பாவைத் தெய்வம் சொல்லித் தெளிவித்தது ஈறாக எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் கூறினாள்.

மணிமேகலை அரசிக்குத் தெளிவுரை கூறினாள் (91 – 103)

மணிமேகலை மேலும் கூறுவாள்: ''எனக்குப் பித்தேற்றினை; மறுபிறப்பு உணர்ந்தவள் ஆதலால் எனக்கு அம்மருந்து மயக்கத்தைத் தரவில்லை. இயல்பான அறிவோடே இருந்தேன். கல்வியறிவில்லாத கயவன் கருமையான இருளில் வந்தான். நல்லாய்! நான் அப்பொழுது ஆண் உருக் கொண்டிருந்தேன். உணவின்றி இருக்கும் மந்திரம் என்னிடத்தில் உள்ளது. அதனால் நீ செய்த வஞ்சத்தினின்றும் உயிர் பிழைத்தேன். நீ வஞ்சம் செய்தபோது வான்வழியே செல்லுதலும் வேற்றுருக் கொள்ளுதலும் ஆகிய மந்திரங்களைப் பயன்படுத்தி நான் இங்கிருந்து தப்பியிருக்கலாம். அவ்வாறு எண்ணம் கொள்ளவில்லை. ஏன் தெரியுமா? சென்ற பிறவியில் எனக்குக் கணவனாக இருந்தவனைப் பெற்ற தாயாகிய உன்னுடைய கடுமையான துன்பங்களையெல்லாம் போக்கி, தீவினைகளைத் தீர்த்தற் பொருட்டேயாகும்.

அரசியே! உன்னுடைய தடுமாற்றத்திற்குக் காரணமாகிய, அறியாமையிலிருந்து நீங்கி, நான் கூறும் இனிய மொழிகளைக் கேட்பாயாக!

ஐம்பெருந் தீமைகள்

காமத்தின் கொடுமை (104 – 111)

அரசனின் கொடுங்கோன்மையினாலே நிலை கலங்கியிருந்த ஒரு நாட்டில் இல்லற வாழ்வு நடத்திய ஒரு சேனிய நங்கையை அவள் கணவன் கைவிட்டான். அவள் தான் பெற்ற குழந்தையைப் பிரிந்து தான் மட்டும் தனியாக மயக்கமுற்று வேற்றிடத்தில் சென்று தங்கினாள். அங்கு வரைமுறை இல்லாத தவறான வழியில் வாழ்ந்து வந்தாள். அவள் விட்டுச் சென்ற புதல்வனை, முப்புரி நூல் அணிந்த மார்பினனாகிய ஒரு பார்ப்பான், தன் ஊராருக்கு அவன் யார் என்று தெரியாமல் வளர்த்து வந்தான்.

ஆங்குஅப் புதல்வன் அவள்திறம் அறியான்
தான்புணர்ந்து அறிந்துபின் தன்உயிர் நீத்ததும்,
நீர்நசை வேட்கையின் நெடுங்கடம் உழலும்
சூல்முதிர் மடமான் வயிறுகிழித்து ஓடக்
கான வேட்டுவன் கடுங்கணை துரப்ப
மான்மறி விழுந்தது கண்டு மனம்மயங்கிப்
பயிர்க்குரல் கேட்டுஅதன் பான்மையன் ஆகி
உயிர்ப்பொடு செங்கண் உகுத்த நீர்கண்டு
ஓட்டி எய்தோன் ஓர்உயிர் துறந்ததும்
கேட்டும் அறிதியோ வாள்தடங் கண்ணி!
கடாஅ யானைமுன் கள்கா முற்றோர்
விடாஅது சென்று அதன் வெண்கோட்டு வீழ்வது
உண்ட கள்ளின் உறுசெருக்கு ஆவது
கண்டும் அறிதியோ காரிகை நல்லாய்!
பொய்யாற்று ஒழுக்கம் பொருள்எனக் கொண்டோர்
கையாற்று அவலம் கடந்ததும் உண்டோ?
களவுஏர் வாழ்க்கையர் உறூஉம் கடுந்துயர்
இளவேய்த் தோளாய்க்கு இதுஎன வேண்டா

112. கடம் – காடு.
113. சூல் – கருப்பம்.
114. துரப்ப – செலுத்த.
115. மான்மறி – பெண் மான்.
116. பயிர் – விலங்குகளுள் ஒன்று மற்றொன்றை அழைக்கும் ஓசைக் குறிப்பு.
120. கடாஅயானை – மதயானை.

ஒருநாள் அப்புதல்வன் தன்னைப் பெற்றவள் அவள் என்று அறியாது தன் தாயையே கூடினான். உண்மையை அறிந்ததும் உயிரையே விட்டு விட்டான். (காமத்தின் கொடுமை இது. இனிக் கொலையின் கொடுமையைக் கேள்)

கொலையின் கொடுமை (112 – 119)

வாள் போன்ற பெரிய கண்களை உடையவளே! நீர் உண்ணுதலை விரும்பி வேட்கையினாலே கரு முதிர்ந்த இளைய மான் ஒன்று நெடிய காட்டினிடையே ஓடித் திரிந்து கொண்டிருந்தது. கான வேட்டுவன் ஒருவன் அதன் வயிற்றைக் கிழித்துச் செல்லும்படியாக கடிய அம்பினைச் செலுத்தினான். அப் பெண்மான் விழுந்ததைப் பார்த்து, மனம் மயக்கமுற்று, அதன் சாக்குரல் கேட்டு அருகில் ஓடினான். பெருமூச்சு விட்டவாறே அதனுடைய சிவந்த கண்களிலிருந்து சொரிந்த நீரைக் கண்டு, அதன்மீது அம்பினை எய்த அந்த வேட்டுவன் தன் உயிரினை அவ்விடத்திலேயே துறந்தான் என்ற வரலாற்றை நீ கேட்டு அறிந்துள்ளாயோ?

கள்ளின் தீமை (120 – 123)

அழகிய நங்கையே! (இனிக் கள்ளின் தீமையைக் கேள்!). மதங் கொண்ட யானைமுன் கள்ளை மிகுதியும் அருந்தி மயக்கம் கொண்டோர், விடாமல் சென்று, அதனுடைய வெண்மையான கொம்பினாலே குத்தப்பெற்று மடிந்து வீழ்வர். இத் துயர் அவருண்ட கள்ளின் பெரிய மயக்கத்தினாலே ஆகியது என்பதனை நீ அறியாயா?

பொய்யின் தீமை (124 – 125)

பொய்யான வழியில் ஒழுகுவதையே பொருளாகக் கொண்டவர்கள் செயலறவாகிய துன்பத்தினின்றும் நீங்கி உய்வதும் இவ்வுலகில் உண்டோ?

களவுத் துன்பம் (126 – 129)

களவினாலே வரும் துன்பம் மிகப் பெரியது. களவு என்னும் ஏரால் உழுது கள்ளப் பொருளைக் கொண்டு வாழ்பவர் முடிவில் கடுந்துன்பத்தையே அடைவர். இளைய மூங்கில்போலும் தோள்களை உடையவளே! உனக்கு இந்த ஐந்து பெரும் குற்றங்களின் தன்மைகள் எல்லாம் இத்தையன என்று நான் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை.

மன்பேர் உலகத்து வாழ்வோர்க்கு இங்குஇவை
துன்பம் தருவன துறத்தல் வேண்டும்
கற்ற கல்வி அன்றால் காரிகை
செற்றம் செறுத்தோர் முற்ற உணர்ந்தோர்
மல்லல்மா ஞாலத்து வாழ்வோர் என்போர்
அல்லல் மாக்கட்கு இல்லது நிரப்புநர்
திருந்துஏர் எல்வளை செல்உலகு அறிந்தோர்
வருந்தி வந்தோர் அரும்பசி களைந்தோர்
துன்பம் அறுக்கும் துணிபொருள் உணர்ந்தோர்
மன்பதைக்கு எல்லாம் அன்புஒழி யார்என
ஞான நல்நீர் நன்கனம் தெளித்துத்
தேன்ஆர் ஓதி செவிமுதல் வார்த்து
மகன்துயர் நெருப்பா மனம்விறகு ஆக
அகம்சுடு வெந்தீ ஆயிழை அவிப்ப,
தேறுபடு சின்னீர் போலத் தெளிந்து
மாறுகொண்டு ஓரா மனத்தினள் ஆகி
ஆங்குஅவள் தொழுதலும், ஆயிழை பொறாஅள்
தான்தொழுது ஏத்தித் தகுதி செய்திலை
காதலன் பயந்தோய் அன்றியும் காவலன்
மாபெருந் தேவிஎன்று எதிர்வணங் கினள்என்.

131. செற்றம் – சினம் செறுத்தோர் – அடக்கினோர்.
133. அல்லல் மாக்கட்கு – வறுமைத் துன்பம் உடையவர்க்கு
138. நன்கனம் – நன்றாக.
142. தேறு – தேற்றாங்கொட்டை.
143. மாறுகொண்டு – பகைமை கொண்டு

மிகப்பெரிய இந்நிலவுலகில் வாழ்பவர்களுக்கு இங்குக் கூறிய இவையெல்லாம் துன்பம் தருவன. ஆதலின் அவர்கள் இந்த ஐம்பெரும் குற்றங்களைத் தவறாது கைவிட வேண்டும்.

அரசி தெளிவு பெற்றாள் (130 – 147)

காரிகையே! கற்ற கல்வியே மெய்யுணர்வு ஆகாது. உள்ளத்தில் சினம் தோன்றாமல் அடக்கியவரே முழுதும் உணர்ந்தோர் ஆவர். வறுமையுற்றவர்க்கு நிறைய அள்ளி வழங்குபவர் எவரோ அவரே வளமுடைய இவ்வுலகில் வாழ்பவர் ஆவர். திருந்திய அழகமைந்த ஒளியுடைய வளையல்களை அணிந்தவளே! பசியால் வருந்தி வந்தவரின் தீர்த்தற்கரிய பசியினைப் போக்கியவர் எவரோ அவரே மேலுலகம் செல்லும் வழியை நன்கு அறிந்தவராவா. உலக உயிர்களுக்கெல்லாம் அன்பு காட்டுபவர் யாரோ அவரே துன்பத்தினை அறுக்கும் மெய்ப்பொருள் உணர்ந்தோர் ஆவர்.''

வண்டொலிக்கும் கூந்தலையுடைய இராசமாதேவியின் செவிகளில் இவ்வாறு ஞானமாகிய நீரைத் தெளித்து, மனம் விறகாகவும், மகன் இறந்த துன்பம் நெருப்பாகவும், உயிரினைச் சுடுகின்ற கொடிய நெருப்பை மணிமேகலை அவித்தாள்.

மணிமேகலை உரைத்த ஞானம், கலங்கிய நீரைத் தெளிவிக்கும் தேற்றாங் கொட்டைபோல, கலங்கியிருந்த அரசியின் மனத்தைத் தெளிவடையச் செய்தது. பகைமை கொண்டிருந்த மனம் மாறினாள். மணிமேகலையைத் தொழுதாள். அரசியின் செயலை மணிமேகலை பொறுக்காமல், ''தேவி! நீ என் (முற்பிறவிக்) கணவனைப் பெற்ற தாய்; மேலும் அரசமாதேவி! ஆதலின் நீ என்னை வணங்குவது தகுதியுடையதன்று'' எனக் கூறி எதிர் வணக்கம் செய்தாள்.

24. ஆபுத்திரன் நாடு அடைந்த காதை

மன்ன குமரனை வஞ்சம் புணர்த்த
தொல்முது கணிகைதன் சூழ்ச்சியின் போயவன்
விஞ்சையன் வாளின் விளிந்தோன் என்பது
நெஞ்சு நடுக்குறக் கேட்டுமெய் வருந்தி
மாதவி மகள்தனை வான்சிறை நீக்கக்
காவலன் தேவி கால்கீழ் வீழ்ந்துஆங்கு,
அரவுஏர் அல்குல் அருந்தவ மடவார்
உரவோற்கு அளித்த ஒருபத் தொருவரும்,
ஆயிரம் கண்ணோன் அவிநயம் வழூஉக்கொள
மாஇரு ஞாலத்துத் தோன்றிய ஐவரும்,
ஆங்குஅவன் புதல்வனோடு அருந்தவன் முனிந்த
ஓங்கிய சிறப்பின் ஒருநூற்று நால்வரும்,
திருக்கிளர் மணிமுடித் தேவர்கோன் தன்முன்
உருப்பசி முனிந்த என்குலத்து ஒருத்தியும்,
ஒன்று கடைநின்ற ஆறிரு பதின்மர்இத்
தொன்றுபடு மாநகர்த் தோன்றிய நாள்முதல்
யான்உறு துன்பம் யாவரும் பட்டிலர்
மாபெருந் தேவி மாதர் யாரினும்,
பூவிலை ஈத்தவன் பொன்றினன் என்று
மாதவி மாதவர் பள்ளியுள் அடைந்ததும்,
பரந்துபடு மனைதொறும் பாத்திரம் ஏந்தி
அரங்கக் கூத்திசென்று ஐயம் கொண்டதும்
நகுதல் அல்லது நாடகக் கணிகையர்
தகுதி என்னார் தன்மை அன்மையின்.
மன்னவன் மகனே அன்றியும் மாதரால்
இந்நகர் உறூஉம் இடுக்கணும் உண்டால்

3. விளிந்தோன் – இறந்தோன்.
19. பொன்றினன் – இறந்தான்.

24. ஆபுத்திரன் நாடு அடைந்த காதை

நான் பட்ட துன்பம் எவரும் பட்டிலர் (1 – 18)

அரசகுமரனை மணிமேகலைமேல் ஆசை கொள்ள வஞ்சனை யினால் தூண்டியவளான முதிய பரத்தை சித்திராபதி, தன் சூழ்ச்சியினாலே மணிமேகலையை விரும்பிச் சென்ற உதயகுமரன் விஞ்சையன் வாளினால் வெட்டுண்டு இறந்தான் என்பதைக் கேட்டு நெஞ்சு நடுங்கினாள்; உடல் வருந்தினாள். மாதவி மகள் மணிமேகலையைப் பெரிய சிறையிலிருந்து விடுவிப்பதற்காக அரசியிடம் சென்று அவள் கால்களிலே விழுந்து பணிந்து முறையிட்டாள். ''மாபெரும் தேவி! பாம்பின் படம் போன்ற அழகிய அல்குலையுடைய அரிய தவமுடைய மடந்தையர் இந்திரனுக்குப் பெற்றெடுத்த பெண்கள் பதினொருவர். இந்திரன் அவையில் ஆடிய அவிநயத்தில் ஏற்பட்ட குற்றத்தின் காரணமாக இந் நிலவுலகில் வந்து பிறந்த மகளிர் ஐவர். இந்திரன் மகன் சயந்தனுடன் அகத்திய முனிவரின் சினத்தால் சாபம் எய்திய பெண்கள் நூற்றுநால்வர். அழகு ஒளிரும் மணிமுடியணிந்த இந்திரன்முன் சாபம் பெற்ற ஒருத்தி என் குல முதல்வியாகிய உருப்பசி. இவ்வாறாக எல்லாம் சேர்ந்து நூற்று இருபத்தொரு கணிகையர், பழைய இப் பெரும்பதியிலே தோன்றித் தொன்றுதொட்டு வாழ்ந்து வந்தனர். அவர்கள் தோன்றிய அந்த நாள் முதலாக யான் பட்ட துன்பம் எவரும் பட்டிலர்

கணிகையர் துறவு நகைப்புக்குரியது (19 – 26)

பொன்மாலையை விலை கொடுத்து வாங்கிய கோவலன் இறந்தான் என்று என் மகள் மாதவி அறவண அடிகளின் தவப்பள்ளி அடைந்தாள். அரங்கக் கூத்தியாக இருக்க வேண்டிய அவள் மகள் மணிமேகலையோ பரந்து கிடக்கும் வீடு தோறும் சென்று பாத்திரம் ஏந்திப் பிச்சையெடுத்துத் திரிகிறாள். நாடகக் கணிகையர்க்கு இவை ஏற்றவையன்று. இவற்றைக் கண்டு நாடகக் கணிகையர் எள்ளி நகையாடுவரே அல்லாமல் தகுதியானது என்று சொல்லமாட்டார்கள். மணிமேகலையால் உதயகுமரனுக்கு மட்டுமன்று இவ்வூருக்கும் ஒரு துன்பம் உண்டாகும்

உம்பளம் தழீஇய உயர்மணல் நெடுங்கோட்டுப்
பொங்குதிரை உலாவும் புன்னையங் கானல்
கிளர்மணி நெடுமுடிக் கிள்ளி முன்னா
இளவேனில் இறுப்ப இறும்பூது சான்ற
பூநாறு சோலை யாரும்இல் ஒருசிறைத்
தானே தமியள் ஒருத்தி தோன்ற.
இன்னள் ஆர்கொல் ஈங்குஇவள் என்று
மன்னவன் அறியான் மயக்கம் எய்தாக்
கண்ட கண்ணினும் கேட்ட செவியினும்
உண்ட வாயினும் உயிர்த்த மூக்கினும்
உற்றுஉணர் உடம்பினும் வெற்றிச்சிலைக் காமன்
மயிலையும் செயலையும் மாவும் குவளையும்
பயில்இதழ்க் கமலமும் பருவத்து அலர்ந்த
மலர்வாய் அம்பின் வாசம் கமழப்
பலர்புறம் கண்டோன் பணிந்துதொழில் கேட்ப
ஒருமதி எல்லை கழிப்பினும் உரையாள்
பொருஅரு பூங்கொடி போயின அந்நாள்
யாங்குஒளித் தனள்அவ் இளங்கொடி என்றே
வேந்தரை அட்டோன் மெல்இயல் தோவுழி,
நிலத்தில் குளித்து நெடுவிசும்பு ஏறிச்
சலத்தில் திரியும்ஓர் சாரணன் தோன்ற,
மன்னவன் அவனை வணங்கி முன்நின்று
என்உயிர் அனையாள் ஈங்குஒளித் தாள்உளள்
அன்னாள் ஒருத்தியைக் கண்டிரோ அடிகள்
சொல்லுமின் என்று தொழஅவன் உரைப்பான்:
கண்டிலேன் ஆயினும் காரிகை தன்னைப்
பண்டுஅறி வுடையேன் பார்த்திப கேளாய்:
நாக நாடு நடுக்குஇன்று ஆள்பவன்

---

27. உம்பளம் – உப்பளம்.
29. முன்னா – முன்னாக.
42. மதி – மாதம்.
45. அட்டோன் – வென்றோன்.

நலங்கிள்ளி - பீலிவளை காதல் (27 – 43)

இவ்வூர் உப்பளத்தின் அருகே ஒரு நெடிய மணல் குன்று உள்ளது. அதனருகே பொங்கி வரும் கடல் அலைகள் உலாவும் புன்னை மரங்களையுடைய கானல் சோலை; இளவேனிற் காலம்; வியக்கும் தன்மை வாய்ந்த பூக்கள் மணக்கும் சோலை; ஒளி வீசும் மணி முடியணிந்த நெடுமுடிக்கிள்ளி அங்கே தங்கியிருந்தான். அப்போது யாருமில்லாத அப் பொழிலின் ஒரு பக்கத்தே தன்னந்தனியளாக ஒருத்தி தோன்றினாள்.

'இங்கே தோன்றும் இவள் யார்?' என்று அறியாமல் அரசன் மயங்கினான். வெற்றி வில் மன்மதன் மல்லிகை, அசோகு, மா, குவளை, இதழ் செறிந்த தாமரை ஆகிய ஐந்து மலர்களையும் சேர்த்து ஐங்கணை விடுத்தான். அவ்வம்புகள் மன்னனின் காணும் கண், கேட்கும் காது, சுவைக்கும் நா, முகரும் மூக்கு, தீண்டியுணரும் உடம்பு ஆகிய ஐம்பொறிகளிலும் தைத்துக் காதல் மணம் வீசியது. பகைவர் பலரைப் புறங்கண்ட வீர வேந்தன் அவள்முன் பணிந்து அவள் ஏவலைக் கேட்டான். ஒரு திங்கள் அவனோடு இருந்தும் ஒப்பற்ற அப் பூங்கொடி அவனிடம் ஒன்றும் சொல்லாமலே ஒருநாள் போய் விட்டாள்.

மறைந்த பீலிவளையை மன்னன் தேடினான் (44 – 51)

பகைவேந்தர்களை வெற்றி கொள்ளும் மன்னன், ''இந்த இளங்கொடி எங்கே மறைந்து விட்டாள்?'' என அவளைப் பல இடங்களில் தேடிக் கொண்டிருந்தான். அப்போது நிலத்தில் புகுந்தும், நீண்ட வானத்தில் ஏறியும், நீரின் மீது திரிந்தும் செல்லுகின்ற சாரணன் ஒருவன் அங்கே தோன்றினான். மன்னவன் அவன் முன் சென்று வணங்கி, ''அடிகாள்! என் உயிர்க் காதலி இங்கேதான் மறைந்தாள். அத்தகைய ஒருத்தியைக் கண்டீரா? கண்டிருந்தால் சொல்லுங்கள்'' என வேண்டினான்.

புதல்வன் வருவன்; அவள் வரமாட்டாள் (52 – 61)

சாரணன், ''அவளை யான் கண்டதில்லை; ஆயினும் அவள் யாரென்பதை முன்னரே அறிவேன். அரசனே! கேட்பாயாக! நாக நாட்டினை நடுக்கின்றி (துன்பம் ஏதும் நேராமல்) ஆளும் மன்னன்

வாகை வேலோன் வளைவணன் தேவி
வாச மயிலை வயிற்றுள் தோன்றிய
பீலிவளை என்போள் பிறந்த அந்நாள்
இரவிகுலத்து ஒருவன் இணைமுலை தோயக்
கருவொடு வரும்எனக் கணிஎடுத்து உரைத்தனன்
ஆங்குஅப் புதல்வன் வருஉம் அல்லது
பூங்கொடி வாராள் புலம்பல் இதுகேள்:
தீவகச் சாந்தி செய்யா நாள்உன்
காவல் மாநகர் கடல்வயிறு புகூஉம்
மணிமே கலைதன் வாய்மொழி யால்அது
தணியாது இந்திர சாபம்உண் டாகலின்.
ஆங்குப்பதி அழிதலும் ஈங்குப்பதி கெடுதலும்
வேந்தரை அட்டோய் மெய்எனக் கொண்டுஇக்
காசுஇல் மாநகர் கடல்வயிறு புகாமல்.
வாசவன் விழாக்கோள் மறவேல் என்று
மாதவன் போயின அந்நாள் தொட்டும்இக்
காவல் மாநகர் கலக்குஒழி யாதால்
தன்பெயர் மடந்தை துயர்உறு மாயின்
மன்பெருந் தெய்வம் வருதலும் உண்டுஎன
அஞ்சினேன் அரசன் தேவிஎன்று ஏத்தி
நல்மனம் பிறந்த நாடக் கணிகையை
என்மனைத் தருகென, இராசமா தேவி
கள்ளும் பொய்யும் காமமும் கொலையும்
உள்ளக் களவும்என்று உரவோர் துறந்தவை
தலைமையாக் கொண்டநின் தலைமைஇல் வாழ்க்கை

59. கணி – நிமித்திகன (சோதிடன்).
71. கலக்கு – கலங்குதல்.
78. உரவோர் – அறிவுடையோர்.

வளைவணன். அவன் வெற்றி சூடும் வேலினை உடையவன். அவன் மனைவி வாசமயிலை. அவள் வயிற்றில் பிறந்த மகள் பீலிவளை. பீலிவளை பிறந்த அந் நாளில் ஒரு கணியன் (சோதிடன்), 'சூரிய குல மன்னன் ஒருவன் இவளுடைய இணை முலைகள் தோயக் கூடுவான். அதனால் கருவுற்றுத் திரும்பி வருவாள்' என்று கூறினான். மன்னனே! அவள் பெற்றெடுக்கும் மகன் இங்கே வருவானே அல்லாமல் அவள் வரமாட்டாள். அவள் பொருட்டு இனி நீ வருந்தாதே!

இந்திர விழாக் கொண்டாடுதலை ஒருநாளும் மறவாதே! (62 – 71)

மேலும் கேட்பாயாக! தீவகச் சாந்தியாகிய இந்திர விழாவினை நீ செய்யாது விடும் நாளில் உன் நகர் கடல் வயிற்றினுள் புகும். இது மணிமேகலா தெய்வத்தின் மொழியாகும். இந்திரனது சாபமும் இருப்பதால் இது தப்பாமல் நடக்கும். இந் நகரம் அழிவினை அடைதலும், இங்கேயுள்ள அரசு கேடுறுதலும், பகைவேந்தரை வென்றவனே! உண்மை என்பதை மனத்தில் கொண்டு, குற்றமற்ற இந்நகர் கடலுள் புகுந்து அழியாமல் இருக்க, இந்திர விழாவைக் கொண்டாடுதலை ஒருபோதும் மறவாதே'' எனச் சொல்லிச் சாரணன் சென்றனன். அந் நாள் தொட்டு, காவலையுடைய இப் பெரிய நகரிலுள்ளார் கலக்கம் கொண்டுள்ளனர்.

மணிமேகலையைத் தன்னோடு அனுப்பச் சித்திராபதி வேண்டினாள் (72 – 76)

''அரசனின் தேவியே! தன் பெயரையுடைய மணிமேகலை துயருறுவாள் எனின் நிலைபெற்ற பெருந் தெய்வமாகிய மணிமேகலா தெய்வம் இங்கே தோன்றுதலும் கூடும் என்று அஞ்சுகிறேன்'' எனக் கூறிச் சித்திராபதி அரசமாதேவியிடம் 'மணிமேகலையை' என் வீட்டிற்கு அழைத்துச் செல்ல அனுமதி தருக என வேண்டினாள்.

அரசி மறுத்தாள் (77 – 82)

இராசமாதேவி, ''கள், பொய், காமம், கொலை, களவு ஆகிய இவ்வைந்தும் அறிவுடையோரால் நீக்கப்பட்டவை. இவற்றை முதன்மையாகக் கொண்ட உன்னுடைய பரத்தமைத் தொழில்

புலைமைஎன்று அஞ்சிப் போந்த பூங்கொடி
நின்னொடு போந்து நின்மனைப் புகுதாள்
என்னொடு இருக்கும்என்று ஈங்குஇவை சொல்வுழி,
மணிமே கலைதிறம் மாதவி கேட்டுத்
துணிகயம் துகள்படத் துளங்கிய வதுபோல்
தெளியாச் சிந்தையள் சுதமதிக்கு உரைத்து
வளிஎறி கொம்பின் வருந்திமெய்ந் நடுங்கி
அறவணர் அடிவீழ்ந்து ஆங்குஅவர் தம்முடன்
மறவேல் மன்னவன் தேவிதன் பால்வரத்
தேவியும் ஆயமும் சித்திரா பதியும்
மாதவி மகளும் மாதவர்க் காண்டலும்
எழுந்துஎதிர் சென்றுஆங்கு இணைவளைக் கையால்
தொழுந்தகை மாதவன் துணைஅடி வணங்க
அறிவுஉண் டாகஎன்று ஆங்குஅவன் கூறலும்,
இணைவளை நல்லாள் இராசமா தேவி
அருந்தவர்க்கு அமைந்த ஆசனம் காட்டித்
திருந்துஅடி விளக்கிச் சிறப்புச் செய்தபின்
யாண்டுபல புக்கநும் இணைஅடி வருந்தஎன்
காண்தகு நல்வினை நும்மைஈங்கு அழைத்தது
நாத்தொலைவு இல்லாய் ஆயினும் தளர்ந்து
மூத்தஇவ் யாக்கை வாழ்கபல் ஆண்டுஎன,
தேவி கேளாய் செய்தவ யாக்கையின்
மேவினேன், ஆயினும் வீழ்கதிர் போன்றேன்
பிறந்தார் மூத்தார் பிணிநோய் உற்றார்
இறந்தார் என்கை இயல்பே இதுகேள்:

80. புலைமை – தூய்மையற்றது.
84. துணிகயம் – தெளிந்த நீர்நிலை.
104. என்கை – என்பது.

சிறுமையானது என்று அஞ்சி வெளிவந்தவள் மணிமேகலை. அவள் உன்னுடன் வந்து உன் வீட்டினுள் புகமாட்டாள். அவள் என்னுடன்தான் இருப்பாள்'' என்று சித்திராபதியிடம் கண்டிப்பாகச் சொன்னாள்.

அறவண அடிகள் அரசியைக் கண்டார் (83 – 88)

அரசியின் காவலில் மணிமேகலை இருப்பதை மாதவி அறிந்தாள். தெளிந்த நீர்நிலை புழுதி படிந்து கலங்கியதுபோல உள்ளம் கலங்கினாள். சுதமதியிடம் சொன்னாள். காற்றலைக்கும் பூங்கொடிபோல் வருத்தமுற்று நடுங்கினாள். சுதமதியுடன் சென்று அறவண அடிகளின் திருவடிகளில் வீழ்ந்தாள். பின் அவருடன் வெற்றிவேலினையுடைய மன்னவன் தேவியிடம் வந்து சேர்ந்தாள்.

அரசி அவறண அடிகளை வரவேற்றாள் (89 – 100)

அரசியும், அவளுடைய ஆய மகளிரும், சித்திராபதியும், மணிமேகலையும் அறவண அடிகளைக் கண்டதும் அவரை எதிர் கொண்டு அழைத்து, வளையலணிந்த இணைக்கைகளினாலே, வணங்கும் தன்மையுடைய, அறவணரின் திருவடிகளை வணங்கினர். அடிகள், 'அறிவு உண்டாகுக' என வாழ்த்தினார்.

வளையல்கள் அணிந்த கைகளையுடைய இராசமாதேவி அரிய தவ முனிவரான அறவணர்க்கு உயர்ந்த இருக்கையைக் காட்டி அமரச் செய்தாள். அவருடைய செவ்வையான அடிகளை நீரினால் விளக்கிச் சிறப்புச் செய்தாள். ''ஆண்டு பல சென்று முதுமையடைந்துள்ள உம் திருவடிகள் வருந்துமாறு இங்கே நீவிர் வந்தது என் நல்வினைப் பயனே! அடிகளுக்குச் சொல் சோர்வு இல்லை என்றாலும், தளர்வுற்று முதிர்ந்துள்ள தங்கள் உடல் பல்லாண்டு வாழ வேண்டும்'' என வாழ்த்தித் துதித்தாள்.

அரசிக்கு அறவணர் அறிவுரை கூறினார் (101 – 114)

அறவண அடிகள் அரசிக்குக் கூறினார்: ''தேவியே கேள்! தவம் புரியும் உடம்பில் நான் பொருந்தியுள்ளேன்; என்றாலும் நான் மறையும் மாலைக் கதிரவனைப் போன்றவன் ஆவன். 'பிறந்தார்கள்; மூப்படைந்தார்கள்; பிணி, நோய் உற்றார்கள்; பின்னர் இறந்தார்கள்' என்று சொல்லப்படுவது இயற்கைதானே!

பேதைமை செய்கை உணர்வே அருஉரு
வாயில் ஊறே நுகர்வே வேட்கை
பற்றே பவமே தோற்றம் வினைப்பயன்
இற்றுஎன வகுத்த இயல்புஈ ராறும்
பிறந்தோர் அறியில் பெரும்பேறு அறிகுவர்
அறியார் ஆயின் ஆழ்நரகு அறிகுவர்
பேதைமை என்பது யாதுஎன வினவின்
ஓதிய இவற்றை உணராது மயங்கி
இயற்படு பொருளால் கண்டது மறந்து
முயற்கோடு உண்டுஎனக் கேட்டது தெளிதல்
உலகம் மூன்றினும் உயிராம் உலகம்
அலகுஇல் பல்உயிர் அறுவகைத் தாகும்
மக்களும் தேவரும் பிரமரும் நரகரும்
தொக்க விலங்கும் பேயும் என்றே
நல்வினை தீவினை என்றுஇரு வகையால்
சொல்லப் பட்ட கருவினுள் தோன்றி
வினைப்பயன் விளையுங் காலை உயிர்கட்கு
மனப்பேர் இன்பமும் கவலையும் காட்டும்
தீவினை என்பது யாதுஎன வினவின்
ஆய்தொடி நல்லாய் ஆங்குஅது கேளாய்
கொலையே களவே காமத் தீவிழைவு
உலையா உடம்பில் தோன்றுவ மூன்றும்.
பொய்யே குறளை கடுஞ்சொல் பயன்இல்
சொல்எனச் சொல்லில் தோன்றுவ நான்கும்,
வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சிஎன்று
உள்ளம் தன்னின் உருப்பன மூன்றும்எனப்
பத்து வகையால் பயன்தெரி புலவர்
இத்திறம் படரார் படர்குவர் ஆயின்

---

114. கோடு – கொம்பு.
116. அலகுஇல் – அளவில்லாத.
126. உலையா – தளராத.
127. குறளை – கோள்
130. உருப்பன – தோன்றுவன

பேதைமை, செய்கை, உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு, வேட்கை, பற்று, பவம், தோற்றம், வினைப்பயன் எனும் இப்பன்னிரண்டும் ஆன்றோரால் வகுக்கப்பட்ட இயல்புகள் (நிதானங்கள்) பிறவி எடுத்தவர்கள் இவற்றை அறிந்து நடந்தால் பெரும் பேற்றினை (நிர்வாணத்தை) அடைவர். இவற்றை அறியார் துன்பம் நிறைந்த நரகத்தில் அழுந்துவர்.

இவற்றுள், 'பேதைமை என்பது எத்தகையது?' என்று கேட்டால் கூறப்பட்ட இப்பன்னிரு இயல்புகளை அறியாமல் இயற்கையாகத் தோன்றும் பொருள்களால் தாம் கண்டதனை மறந்து, 'முயலுக்குக் கொம்பு உண்டு' என்று தாம் கேட்டதனை உண்மை எனக் கொள்ளும் அறியாமை ஆகும்.

உலகம் மூன்று; உயிர்கள் ஆறு வகை (115 – 122)

மேல், கீழ், நடு என்னும் மூன்றுலகிலும் அளவிலா உயிர்கள் இருக்கின்றன. பலவகையான இவ் வுயிர்கள் ஆறு வகையாகும். இவை மக்கள், தேவர், பிரமர், நரகர், விலங்குத் தொகுதிகள், பேய்கள் என்பனவாம். நல்வினை, தீவினை ஆகிய இருவினைகளுக்குத் தகுந்தபடி மேற்சொன்ன ஆறுவகை உயிர்வகைகளுள் தமக்குரியதான ஒரு கருவினுள்ளே சென்று உயிர் பிறக்கும். தாம் செய்த வினைப்பயன் விளைவைத் தரும் காலத்தில், அவையவை செய்த வினைகளுக்குத் தகுந்தபடி பேரின்பமும் கவலையும் உண்டாகும். (உலகம் மூன்று; உயிர்கள் ஆறுவகை; நல்வினையால் இன்பம் உண்டாகும்; தீவினையால் கவலை உண்டாகும்).

தீவினை - விளக்கம் (123 – 134)

ஆராய்ந்தெடுத்த வளையல்களணிந்த நல்லாய்! தீவினை என்பது யாது என்று கேட்டால் அதனை விளக்குகிறேன் கேட்பாயாக! கொலை, களவு, காமமாகிய தீய விழைவு ஆகிய மூன்றும் உடம்பில் தோன்றும் தீவினை. பொய், புறங்கூறல், கடுஞ்சொல், பயனற்ற சொல் ஆகிய நான்கும் சொல்லால் வரும் தீவினை. வெஃகல் (பிறர் பொருளைக் கவர நினைத்தல்), சினத்தல், மயக்கம் கொள்ளுதல் ஆகிய மூன்றும் உள்ளத்தால் வரும் தீவினை. இவ்வாறு தீவினைகள் பத்து வகையாகும். வினைப் பயனை உணர்ந்த அறிவாளர் இத்தீவினைகளைச் செய்யார்;

விலங்கும் பேயும் நரகரும் ஆகிக்
கலங்கிய உள்ளக் கவலையில் தோன்றுவர்.
நல்வினை என்பது யாதுஎன வினவில்
சொல்லிய பத்தின் தொகுதியின் நீங்கிச்
சீலம் தாங்கித் தானம் தலைநின்று
மேல்என வகுத்த ஒருமூன்று திறத்து
தேவரும் மக்களும் பிரமரும் ஆகி
மேவிய மகிழ்ச்சி வினைப்பயன் உண்குவர்.
அரசன் தேவியோடு ஆயிழை நல்லீர்
புரைதீர் நல்அறம் போற்றிக் கேண்மின்
மறுபிறப்பு உணர்ந்த மணிமே கலைநீ
பிறஅறம் கேட்ட பின்னாள் வந்துஉனக்கு
இத்திறம் பலவும் இவற்றின் பகுதியும்
முத்துஏர் நகையாய் முன்னுறக் கூறுவல்
என்றுஅவன் எழுதலும், இளங்கொடி எழுந்து
நன்றுஅறி மாதவன் நல்அடி வணங்கித்
தேவியும் ஆயமும் சித்திரா பதியும்
மாதவர் நல்மொழி மறவாது உய்ம்மின்
இந்நகர் மருங்கின்யான் உறைவேன் ஆயின்
மன்னவன் மகற்குஇவள் வரும்கூற்று என்குவர்
ஆபுத் திரன்நாடு அடைந்துஅதன் பின்னாள்
மாசுஇல் மணிபல் லவம்தொழுது ஏத்தி
வஞ்சியுள் புக்கு மாபத் தினிதனக்கு
எஞ்சா நல்அறம் யாங்கணும் செய்குவல்
எனக்குஇடர் உண்டுஎன்று இரங்கல் வேண்டா
மனக்குஇனி யீர்என்று அவரையும் வணங்கி,

142. புரை - குற்றம்.
155. மாபத்தினி - கண்ணகி.
156. எஞ்சா - குறைவில்லா.

செய்தால் விலங்கும், பேயும், நரகரும் ஆகிக் கலக்கமுற்று உள்ளக் கவலையிலே சிக்கி உழல்வர்.

நல்வினை – விளக்கம் (135 – 140)

நல்வினை எனப்படுவது யாது?' என்று கேட்டால் மேற்சொன்ன பத்துத் தீமைகளிலிருந்தும் விடுபட்டு, நல்லொழுக்கத்தை மேற்கொண்டு, தானம் வழங்குவதில் ஈடுபடுதல் ஆகும். அங்ஙனம் ஈடுபடுவோர் உயர்வுடையன என்று மேலோர் வகுத்துள்ள தேவரும், மக்களும், பிரமரும் ஆகப் பிறப்பெடுத்துத் தமது நல்வினைப் பயனை அனுபவிப்பர்.

மேகலையே! அறநெறி விளக்கம் பின்பு அறிவாய் (141 – 147)

''அரசனின் பெருந்தேவியுடன் இவ்விடத்தே இருக்கும் அழகிய அணிகலன் அணிந்த நங்கையீர்! நான் சொன்ன குற்றமற்ற நல்லறத்தினையே எந்நாளும் போற்றிக் கேட்பீராக! மறுபிறப்பினை உணர்ந்த மணிமேகலையே! முத்தனைய பற்களையுடையவளே! நீ பிற சமயங்களின் அறங்களைக் கேட்டு வா! பிறகு உனக்கு இவ்வற நெறிகள் பலவற்றையும் அவற்றின் கூறுபாடுகளையும் (புத்த தருமத்தையும் அதன் பகுதியையும்) கூறுவேன்'' என்று அறவணர் எழுந்தார்.

மணிமேகலை புகார் நகரின்றும் புறப்பட்டாள் (148 – 159)

இளங்கொடி மணிமேகலை எழுந்தாள். நன்னெறிகளை அறிந்த அறவணரின் நன்மை பொருந்திய திருவடிகளை வணங்கினாள். 'அரச மாதேவியும், ஆய மகளிரும், சித்திராபதியும் ஆகிய நீவிரெல்லாம் அறவணரின் நல்ல மொழிகளை மறவாது போற்றி உய்தி பெறுவீர்களாக' என்றாள். பின்னர், ''நான் இந்த நகரிலே தங்கியிருப்பேனானால் மன்னவன் மகனுக்கு இவள் எமனாக வந்தாள் என்று மக்கள் பழிப்பர். ஆதலால், நான் முதலில் ஆபுத்திரன் நாட்டை அடைந்து, அதன் பிறகு, குற்றமற்ற மணிபல்லவத்தைத் தொழுது போற்றி, அங்கிருந்து வஞ்சிமாநகரம் செல்வேன். அங்கே பத்தினி கண்ணகியின் பொருட்டுக் குறையற்ற நல்லறத்தை எல்லா இடத்திலும் செய்வேன். என் மனத்துக்கு இனியவர்களே! எனக்குத் துன்பம் உண்டாகுமென்று நீங்கள் யாரும் வருந்த வேண்டா'' என்று கூறி அனைவரையும் வணங்கி விடைபெற்றாள்.

வெந்துஆறு பொன்போல் வீழ்கதிர் மறைந்த
அந்தி மாலை ஆயிழை போகி
உலக அறவியும் முதியாள் குடிகையும்
இலகுஒளிக் கந்தமும் ஏத்தி வலம்கொண்டு
அந்தரம் ஆறாப் பறந்துசென்று ஆயிழை
இந்திரன் மருமான் இரும்பதிப் புறத்துஓர்
பூம்பொழில் அகவயின் இழிந்து பொறைஉயிர்த்து
ஆங்குவாழ் மாதவன் அடிஇணை வணங்கி,
இந்நகர்ப் பேர்யாது இந்நகர் ஆளும்
மன்னவன் யார்என மாதவன் கூறும்
நாக புரம்இது நல்நகர் ஆள்வோன்
பூமிசந் திரன்மகன் புண்ணிய ராசன்
ஈங்குஇவன் பிறந்த அந்நாள் தொட்டும்
ஓங்குஉயர் வானத்துப் பெயல்பிழைப்பு அறியாது
மண்ணும் மரனும் வளம்பல தருஉம்
உள்நின்று உருக்கும் நோய்உயிர்க்கு இல்எனத்
தகைமலர்த் தாரோன் தன்திறம் கூறினன்
அகைமலர்ப் பூம்பொழில் அருந்தவன் தான்என்.

159. வெநது ஆறு பொன்போல் – வெந்து ஆறிய பொன்னைப் போல்(அந்திப் பொழுதின் செக்கர் வானத்திற்கு வெந்து ஆறிய பொன் உவமம்)
161. முதியாள் குடிகை – சம்பாபதி கோவில்.
162. கந்தம் – தூண்.
163. ஆறா – வழியாக.
164. மருமான் – வழித்தோன்றல்.
172. பெயல் – மழை.
175. தகை – கட்டிய.
176. அகை மலர் – மலர்ந்த மலர்.

சாவகம் சேர்ந்தாள் (160 – 168)

பொன்னை உருக்கி வார்த்தது போன்று கதிரவன் மறைந்து கொண்டிருந்த அந்தி மாலையில் மணிமேகலை அங்கிருந்து புறப்பட்டாள். உலக அறவியினையும், சம்பாபதி கோயிலையும், ஒளி விளங்கும் கந்திற் பாவையையும் துதித்து வலம் வந்தாள். வானமே வழியாகப் பறந்து சென்று இந்திரனின் வழித்தோன்றலாகிய புண்ணியராசனது மாநகரின் புறத்தேயுள்ள ஒரு பூஞ்சோலையின் உள்ளே இறங்கி இளைப்பாறினாள். அங்கு வாழ்ந்துவந்த தவசியாகிய தருமசாவகனின் திருவடிகளை வணங்கி, ''இந் நகரின் பெயர் என்ன? இதனை ஆளும் மன்னவன் யார்?'' என்று கேட்டாள்.

புண்ணியராசன் புகழ் (169 – 176)

பெருந்தவமுடைய தருமசாவகன், ''இது நாகபுரம், இந் நன்னகரத்தே இருந்து ஆளுவோன் புண்ணியராசன். அவன் பூமிசந்திரன் என்பவனின் மகன். இங்கே அவன் பிறந்த அந்த நாள் முதல் ஓங்கி உயர்ந்த வானத்தே மழை பொய்த்தது இல்லை. மண்ணும் மரமும் பல வளங்களைத் தருகின்றன. உடலை உள்ளிருந்து வருத்தும் நோய் உயிர்கட்கு இல்லை'' என்றனன்.

கட்டப்பெற்ற மலர் மாலையினை அணிந்தவனாகிய அரசனைப்பற்றி, ஒளி வீசும் மலர்களையுடைய பூஞ்சோலையில் இருந்த பெருந்தவத்தினன் மணிமேகலைக்கு இவ்வாறு உரைத்தனன்.

25. ஆபுத்திரனோடு மணிபல்லவம்

அடைந்த காதை

அரசன் உரிமையோடு அப்பொழில் புகுந்து
தரும சாவகன் தன்அடி வணங்கி
அறனும் மறனும் அநித்தமும் நித்தத்
திறனும் துக்கமும் செல்உயிர்ப் புக்கிலும்
சார்பில் தோற்றமும் சார்புஅறுத்து உய்தியும்
ஆரியன் அமைதியும் அமைவுஉறக் கேட்டுப்
பெண்இணை இல்லாப் பெருவனப்பு உற்றாள்
கண்இணை இயக்கமும் காமனோடு இயங்கா
அங்கையில் பாத்திரம் கொண்டுஅறம் கேட்கும்
இங்குஇணை இல்லாள் இவள்யார் என்ன,
காவலன் தொழுது கஞ்சுகன் உரைப்போன்
நாவலம் தீவில்இந் நங்கையை ஒப்பார்
யாவரும் இல்லை இவள்திறம் எல்லாம்
கிள்ளி வளவனொடு கெழுதகை வேண்டிக்
கள்அவிழ் தாரோய் கலத்தொடும் போகிக்
காவிரிப் படப்பை நல்நகர் புக்கேன்
மாதவன் அறவணன் இவள்பிறப்பு உணர்ந்துஆங்கு
ஓதினன் என்றுயான் அன்றே உரைத்தேன்
ஆங்குஅவள் இவள்அவ் அகல்நகர் நீங்கி
ஈங்கு வந்தனள் என்றலும் இளங்கொடி

1. உரிமை – மனைவி.
6. ஆரியன் – ஆசிரியன் (புத்தன்).
14. கெழுதகை – உரிமை (நட்பு)

25. ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை

இவள் யார்? (1 – 10)

அரசன் புண்ணியராசன் தன் மனைவியுடன் அப் பொழிலினுள் புகுந்தான். அங்கிருந்த தருமசாவக முனிவரின் அடிகளை வணங்கினான். அறத்தின் கூறுபாடும், பாவத்தின் தன்மையும், நிலையாப் பொருள்களின் வகையும், நிலைத்த மெய்பொருள்களின் சிறப்பும், துயரத்தின் தன்மையும், உடலிலிருந்து சென்று விட்ட உயிர் புகும் இடங்களும், பேதைமை முதலிய பன்னிரண்டு நிதானங்களின் தோற்றமும், அவற்றிலிருந்து நீங்கி உய்யும் முறைமையும், புத்தனின் அமைதியும் ஆகியவற்றையெல்லாம் முனிவன் அரசனுக்குக் கூறினான். மன்னனும் அமைதிபெறக் கேட்டான்.

அரசன் அங்கிருந்த பெண்மணியைக் காட்டி, ''இவள் பெண்களுக்குள் இணையில்லாப் பேரழகுடையவளாக விளங்குகிறாள்; கண்களில் காமக்குறிப்பு இல்லை; அழகிய கைகளில் பிச்சைப்பாத்திரம் கொண்டு அறவுரைகள் கேட்டிருக்கிறாள்; இணையற்றவளாய் விளங்கும் இவள் யார்?'' என்று கேட்டான்.

கஞ்சுகன் சொன்னது (11 – 20)

கஞ்சுகன் என்பவன் மன்னனைத் தொழுது தான் அறிந்ததைச் சொல்லலானான்: ''தேன்சிந்தும் மலர் மாலையணிந்துள்ள அரசே! நாவலந் தீவில் இந் நங்கையை ஒப்பார் எவருமிலர். கிள்ளிவளவனோடு நட்புக் கொள்ள விரும்பி, ஒருமுறை மரக்கலத்திலே சென்று, காவிரி கலக்குமிடத்திலுள்ள புகார் நகர் அடைந்தேன். அங்கே அறவண அடிகள் இவள் பிறப்பு வரலாற்றைக் கூற நான் அறிந்தேன். புகாரிலிருந்து திரும்பிய அப்பொழுதே உம்மிடம் நான் இதைக் கூறியுள்ளேன். அந் நங்கையே அந் நகரிலிருந்து புறப்பட்டு இங்கு வந்திருக்கிறாள்'' என்று கூறினான்.

நின்கைப் பாத்திரம் என்கைப் புகுந்தது
மன்பெருஞ் செல்வத்து மயங்கினை அறியாய்
அப்பிறப்பு அறிந்நிலை ஆயினும் ஆவயிற்று
இப்பிறப்பு அறிந்திலை என்செய் தனையோ
மணிப்பல் லவம்வலம் கொண்டால் அல்லது
பிணிப்புஉறு பிறவியின் பெற்றியை அறியாய்
ஆங்கு வருவாய் அரசநீ என்றுஅப்
பூங்கமழ் தாரோன் முன்னர்ப் புகன்று
மைஅறு விசும்பின் மடக்கொடி எழுந்து,
வெய்யவன் குடபால் வீழா முன்னர்
வான்நின்று இழிந்து மறிதிரை உலாவும்
பூநாறு அடைகரை எங்கணும் போகி
மணிப்பல் லவம்வலம் கொண்டு மடக்கொடி
பிணிப்புஅறு மாதவன் பீடிகை காண்டலும்
தொழுதுவலம் கொள்ளஅத் தூமணிப் பீடிகைப்
பழுதுஇல் காட்சி தன்பிறப்பு உணர்த்தக்
காயங் கரைஎனும் பேரியாற்று அடைகரை
மாயம்இல் மாதவன் தன்அடி பணிந்து
தருமம் கேட்டுத் தாள்தொழுது ஏத்திப்
பெருமகன் தன்னொடும் பெயர்வோர்க்கு எல்லாம்

26. பிணிப்பு – பற்று. பெற்றி – தன்மை.
30. வெய்யவன் – கதிரவன். குடபால் – மேற்குத் திசையில்.
31. இழிந்து – இறங்கி.
36. பழுது – குற்றம்.
38. மாதவன் – பிரமதருமன்.

மணிபல்லவம் வருக (21 – 29)

கஞ்சுகன் இவ்வாறு கூறியதும் மணிமேகலை, ''மன்னனே! உன் கையிலிருந்த அமுதசுரபியே என் கையில் புகுந்தது. மிகப்பெரும் அரச செல்வத்தில் மயங்கியிருப்பதனால் அஃது உனக்குத் தெரியவில்லை. உன் முற்பிறப்பினை நீ அறியவில்லை; என்றாலும் பசுவின் வயிற்றில் பிறந்த இப் பிறவிபற்றியும் அறியாதிருக்கிறாயே!

மணிபல்லவத்திற்குச் சென்று புத்த பீடிகையை வலம் வந்தால் அல்லாமல், பற்றுகளால் கட்டுண்டுள்ள பிறவியின் தன்மையை அறியமாட்டாய்! அரசே! நீ அம் மணிபல்லவத்திற்கு வருக'' என்று மணங்கமழும் மாலையினையுடைய மன்னனிடம் கூறினாள். உடனே வானிலே எழுந்து சென்றாள்.

மணிமேகலை மணிபல்லவம் சேர்ந்தாள் (30 – 36)

கதிரவன் மேற்றிசையில் மறையும் முன்னரே, வானத்திலிருந்து இறங்கினாள். அலைகள் சுருண்டெழுந்து உலவும் மணிபல்லவத்தில் மலர் மணம் வீசும் கடற்கரை எங்கும் சுற்றித்திரிந்தாள்; மணிபல்லவத்தை வலம் வந்தாள். அதன் பின்னர்ப் பிறவிக் கட்டறுக்கும் புத்த பீடிகையை இளங்கொடிபோன்ற மணிமேகலை கண்டாள்; தொழுது வலம் வந்தாள். தூய மணிகளாலான அப் பீடிகையைக் கண்டதும், அவள் பழம்பிறப்பு நிகழ்ச்சி அவள் கண்முன்னே தோன்றியது.

முற்பிறவி நினைவு (37 – 68)

(முற்பிறப்பில் காயங்கரை ஆற்றங் கரையில் மணிமேகலை இலக்குமி என்னும் பெயருடன் பிரமதேவ முனிவனின் அடிகளை வணங்கி அறம் கேட்டு நின்றாள். அக் காட்சி அவளுக்கு இப்போது தோன்றுகிறது. அப்போது நடந்ததையெல்லாம் அம்முனிவரிடம் பேசுவதுபோல மணிமேகலை கூறுகிறாள்.)

''காயங்கரை என்னும் பெரிய ஆற்றங்கரை; வஞ்சனையற்ற பெருந்தவமுடைய பிரமதேவ முனிவராகிய நீர் அங்கு வீற்றிருந்தீர்! அரசனுடனே அவந்தி நகரம் செல்பவர்களெல்லாம் உன்னிடம் அறம் கேட்டு அடிபணிந்து வணங்கியிருந்தனர். அவர்களுக்கெல்லாம்,

விலங்கும் நரகரும் பேய்களும் ஆக்கும்
கலங்குஅஞர்த் தீவினை கடிமின் கடிந்தால்
தேவரும் மக்களும் பிரமரும் ஆகுதிர்
ஆகலின் நல்வினை அயராது ஓம்புமின்
புலவன் முழுதும் பொய்இன்று உணர்ந்தோன்
உலகுஉயக் கோடற்கு ஒருவன் தோன்றும்
அந்நாள் அவன்அறம் கேட்டோர் அல்லது
இன்னாப் பிறவி இழுக்குநர் இல்லை
மாற்றுஅருங் கூற்றம் வருவதன் முன்னம்
போற்றுமின் அறம்எனச் சாற்றிக் காட்டி
நாக்கடிப் பாக வாய்ப்பறை அறைந்தீர்
அவ்வுரை கேட்டுநும் அடிதொழுது ஏத்த
வெவ்வுரை எங்கட்கு விளம்பினிர் ஆதலின்
பெரியவன் தோன்றா முன்னர்இப் பீடிகை
கரியவன் இட்ட காரணம் தானும்
மன்பெரும் பீடிகை மாய்ந்துஉயிர் நீங்கிய
என்பிறப்பு உணர்த்தலும் என்என்று யான்தொழ
முற்ற உணர்ந்த முதல்வனை அல்லது
மற்றுஅப் பீடிகை தன்மிசைப் பொறாஅது
பீடிகை பொறுத்த பின்னர் அல்லது
வானவன் வணங்கான் மற்றுஅவ் வானவன்
பெருமகற்கு அமைத்துப் பிறந்தார் பிறவியைத்
தரும பீடிகை சாற்றுக என்றே
அருளினன் ஆதலின் ஆயிழை பிறவியும்
இருள்அறக் காட்டும் என்றுஎடுத்து உரைத்தது
அன்றே போன்றது அருந்தவர் வாய்மொழி
இன்றுஎனக்கு என்றே ஏத்தி வலம்கொண்டு

42. அஞர் – துன்பம். கடிமின் – நீக்குங்கள்.
44. அயராது – மறவாது.
48. இழுக்குநர் – தப்புவோர்.
51. கடிப்பு – பறையடிக்கும் குறுந்தடி.
55. கரியவன் – இந்திரன்.

''தீவினையானது விலங்கினமும், நரகரும், பேய்களும் ஆகப் பிறப்பிக்கும். கலங்குதற்குக் காரணமாகிய துன்பத்தைத்தரும் அத் தீவினையினை விட்டொழியுங்கள். விட்டொழித்தால், தேவர் மக்கள் பிரமர் ஆக உயர்வீர்! ஆதலால் நல்வினையை மறவாது செய்வீர்களாக!

பேரறிவுடையவனும் அனைத்தையும் பிழையற உணர்ந்தோனுமாகிய ஒப்பற்ற ஒருவன் உலகம் உய்ய உதித்தருள்வான். அந்நாளில் அவன் அறமொழிகளைக் கேட்டு நடப்பவரே துன்பம் தரும் பிறவிப் பிணியிலிருந்து தப்பிப் பிழைப்பர். எவராலும் தடுக்கமுடியாத கூற்றுவன் உங்கள் உயிரைக் கொண்டுபோகும் முன்னரே அறம் செய்வீர்களாக'' என விளக்கமாக நாக்கே கோலாக வாய் ஆகிய பறையினை முழக்கி உணர்த்தினீர்!

அந்த அறிவுரைகளைக் கேட்டிருந்த நானும் என் கணவனும் உம் திருவடிகளை வணங்கி நின்றோம். அப்பொழுது எங்களுக்குத் துன்பம் தரும் சொற்களைச் சொன்னீர்! (கணவன் இராகுலன் திட்டிவிடம் எனும் பாம்பின் நஞ்சினால் இறப்பான். மனைவி இலக்குமியாகிய நீயும் தீயுள் மூழ்கி இறப்பாய் என்பதே முனிவன் சொன்ன துன்பச் சொற்கள்).

புத்தன் தோன்றுவதற்கு முன்னரே இப் பீடிகையை இங்கே இட்டதற்கான காரணமும், பெருமைமிக்க இப்பீடிகையானது உயிர் நீங்கிய என் முறப்பினை உணர்த்துவதற்கான காரணமும் என்னவோ? என்று கேட்டு நான் உம்மை வணங்கினேன்.

எல்லாம் உணர்ந்த புத்தனையன்றி வேறெவரையும் இப் பீடிகை தன்மீது தாங்காது. இந்தப் பீடிகை பெருமானைத் தாங்கிய பின்னரே இந்திரன் இதனை வணங்குவான். இந்திரன் பெருமானைக் குறித்து இதனை இயற்றி, 'இதைக் காண்பவர்களுடைய பழம்பிறப்புச் செய்தியை, 'தருமபீடிகையே! உணர்த்து' என அருளிச் செய்தான். ஆதலின் பெண்ணே! அப் பீடிகை உன் பழம்பிறப்பினையும் மயக்கமற எடுத்துக்காட்டும் என்று நீர் அன்று கூறியது எனக்கு இன்று கூறுவதுபோலத் தோன்றுகிறது'' என்று சொல்லிப் பீடிகையைத் துதித்து வலம்வந்து மணிமேகலை மணிபல்லவத்தில் இருந்தாள். (மணிமேகலை பீடிகையைக் கண்டதும் முற்பிறப்பு நிகழ்ச்சி அவள் கண்முன் படமெனத் தோன்றியது. அப்பிறவியில் காயங்கரை

ஈங்குஇவள் இன்னணம் ஆக, இறைவனும்
ஆங்குஅப் பொழில்விட்டு அகநகர் புக்குத்
தந்தை முனியாத் தாய்பசு வாக
வந்த பிறவியும், மாமுனி அருளால்
குடர்த்தொடர் மாலை சூழாது ஆங்குஓர்
அடர்ப்பொன் முட்டையுள் அடங்கிய வண்ணமும்,
மாமுனி அருளால் மக்களை இல்லோன்
பூமிசந் திரன்கொடு போந்த வண்ணமும்,
ஆய்தொடி அரிவை அமரசுந் தரிஎனும்
தாய்வாய்க் கேட்டுத் தாழ்துயர் எய்தி
இறந்த பிறவியின் யாய்செய் ததூஉம்
பிறந்த பிறவியின் பெற்றியும் நினைந்து
செருவேல் மன்னர் செவ்விபார்த்து உணங்க
அரைசுவீற் றிருந்து புரையோர்ப் பேணி
நாடகம் கண்டு பாடல் பான்மையில்
கேள்வி இன்னிசை கேட்டுத் தேவியர்
ஊடல் செவ்வி பார்த்துநீ டாது
பாடகத் தாமரைச் சீறடி பணிந்து
தேமரு கொங்கையில் குங்குமம் எழுதி
அங்கையில் துறுமலர் சுரிகுழல் சூட்டி
நறுமுகை அமிழ்துஉறூஉம் திருநகை அருந்தி
மதிமுகக் கருங்கண் செங்கடை கலக்கக்
கருப்பு வில்லி அருப்புக்கணை தூவத்

73. அடர் – தகடு.
80. உணங்க – வாட.
81. புரையோர் – பெரியோர்.
85. பாடகம் – ஒருவகைக் காலணி.
87. துறுமலர் – நெருங்கிய மலர்.
90. அருப்புக்கணை – மலரம்பு.

ஆற்றங்கரையில் இலக்குமியாகப் பிரமதேவ முனிவரைக் கண்டபோது நடந்தது அவள்முன் இப்போது காட்சியாகத் தெரிகிறது. முனிவரிடம் பேசுவதுபோல மணிமேகலை இவற்றைத் தனக்குள் பேசியிருக்கிறாள்.)

மணிமேகலை மணிபல்லவத்தில் இவ்வாறிருக்க -

புண்ணியராசன் தன் வரலாறு அறிந்தான் (69 – 77)

புண்ணியராசன் பூம்பொழிலை விட்டுத் தன் நகரத்திற்குச் சென்றான். தந்தை முனிவனாகவும் தாய் பசுவாக இருக்கவும் அவன் பிறந்தவன். மண்முக முனிவருடைய அருளாலே குடல் சுற்றாது பசுவின் வயிற்றினுள்ளே பொன் ஓடு கொண்ட முட்டையிலே அடங்கியிருந்து தோன்றியவன். மகப்பேறு இல்லாத அரசன் பூமிசந்திரன் மண்முக முனிவரிடம் கேட்டுக் குழந்தையை வாங்கி வந்து வளர்த்தான். (அவனே இப்போது புண்ணியராசன்) எனும் இச் செய்தியைத் தன்னை வளர்த்த தாய் அமரசுந்தரியிடம் கேட்டு அறிந்து மிகுந்த துன்பத்தை அடைந்தான்.

மன்னன் துறவு பூண எண்ணினான் (78 – 96)

சென்ற பிறப்பில் தன் தாய் செய்த செயலையும் இப் பிறவியிலே தன்னுடைய தன்மையையும் நினைந்தான். (இப்போது அரச வாழ்வில் தான் வாழ்ந்துவரும் முறையை எண்ணிப் பார்க்கிறான்). ''செருக்கிய வேற்படையுடைய மன்னர்கள் என்னைக் காணுதற்கான நேரத்தை எதிர்நோக்கிக் காத்திருந்து வாடியிருக்க அரசனாக வீற்றிருக்கிறேன்; மேலோர்களைப் பேணி வருகிறேன்; நாடகம் கண்டும் பண்ணமைந்து பொருள் பொதிந்த இனிய இசையைக் கேட்டும் மகிழ்கிறேன். மனைவியர் ஊடல் கொள்ளும் நேரத்திற்காகக் காத்திருக்கிறேன்; அவ்வூடல் நீடியாதவாறு பாடகமணிந்த அவர்களுடைய சிறிய அடிகளிலே விழுந்து பணிகிறேன்; அவர்களுடைய அழகிய கொங்கைகளிலே குங்குமச் சாந்து எழுதுகிறேன், என் அழகிய கைகளினாலே நெருங்கிய மலர்களை அவர்களுடைய சுருண்ட கூந்தலில் சூட்டுகிறேன்; நறிய மகிழ்போலும் மலர்களிடத்தேயுள்ள மது போன்றதாகிய, அவர்கள் பற்களிலே ஊறுகின்ற அமிழ்தத்தை உண்கின்றேன்; திங்கள் போன்ற அவர்கள் முகத்திலுள்ள கண்களின் கடைப்பகுதியில் தோன்றும் சிவப்பு என்னைக் கலக்கமடையச் செய்கிறது. கரும்பினை வில்லாகக் கொண்ட காமன், மலராகிய

தருக்கிய காமக் கள்ளாட்டு இகழ்ந்து
தூஅறத் துறத்தல் நன்றுஎனச் சாற்றித்
தெளிந்த நாதன்என் செவிமுதல் இட்டவித்து
ஏதம் இன்றாய் இன்று விளைந்தது
மணிமே கலைதான் காரண மாகஎன்று
அணிமணி நீள்முடி அரசன் கூற,
மனம்வே றாயினன் மன்என மந்திரி
சனமித் திரன்அவன் தாள்தொழுது ஏத்தி,
எம்கோ வாழி என்சொல் கேள்மதி
நும்கோன் உன்னைப் பெறுவதன் முன்னாள்
பன்னீ ராண்டுஇப் பதிகெழு நல்நாடு
மன்உயிர் மடிய மழைவளம் கரந்துஈங்கு
ஈன்றாள் குழவிக்கு இரங்காள் ஆகித்
தான்தனி தின்னும் தகைமையது ஆயது
காய்வெங் கோடையில் கார்தோன் றியதுஎன
நீதோன் றினையே நிரைத்தார் அண்ணல்
தோன்றிய பின்னர்த் தோன்றிய உயிர்கட்கு
வானம் பொய்யாது மண்வளம் பிழையாது
ஊன்உடை உயிர்கள் உறுபசி அறியா
நீஒழி காலை நின்நாடு எல்லாம்
தாய்ஒழி குழவி போலக் கூஉம்
துயர்நிலை உலகம் காத்தல் இன்றிநீ
உயர்நிலை உலகம் வேட்டனை ஆயின்
இறுதி உயிர்கள் எய்தவும் இறைவ
பெறுதி விரும்பினை ஆகுவை அன்றே
தன்உயிர்க்கு இரங்கான் பிறஉயிர் ஓம்பும்
மன்உயிர் முதல்வன் அறமும்ஈ தன்றால்
மதிமாறு ஓர்ந்தனை மன்னவ என்றே
முதுமொழி கூற, முதல்வன் கேட்டு

92. தூ அற – பற்றுக்கோடு நீங்க.
97. மன் – மன்னன்.
113. உயர்நிலை உலகம் – முத்தி உலகம்.
114. இறுதி – மரணம்.
115. பெறுதி – இலாபம்.

அம்புகளைப் பொழிய, செருக்குற்ற காமக் களியாட்டத்தில் மகிழ்ந்திருக்கும் என் போக வாழ்வு இகழ்ச்சிக்குரியது. பற்றுக்கோடு ஏதுமில்லாதபடிக்குத் துறவு பூணுதலே நல்லது'' என்று கூறினான்.

''மெய்யுணர்வுடைய தருமசாவக முனிவர் என் காதுகளினுள்ளே விதைத்த அறிவுரையாகிய விதையானது மணிமேகலை காரணமாக இப்போது பழுதேதுமில்லாமல் விளைந்துள்ளது'' எனத் தொன்று தொட்டு வந்த அழகிய மணிமுடியினையுடைய புண்ணியராசன் கூறினான்.

அமைச்சன் அரசனுக்குக் கூறிய அறிவுரை (97 - 123)

அரசன் மனம் வேறுபட்டனன் என்பதை அமைச்சன் சனமித்திரன் அறிந்தான். அவன் அரசனின் அடிகளைத் தொழுது போற்றிக் கூறலானான். ''எம் அரசே! நீ வாழ்க! என் சொற்களைக் கேட்பாயாக! உன் தந்தையாகிய பூமிசந்திரன் உன்னைப் பெறுவதன் முன்னர் இந் நன்னாடு பன்னீராண்டு மழையின்றி வறண்டது; ஏராளமான உயிர்கள் இறந்தன. தான் பெற்ற குழந்தையிடம் இரக்கம் இல்லாமல் பசியின் கொடுமையால் தாய் தானே தனித்து உண்ணும் கொடுமை யுடையதாக அக் காலம் இருந்தது.

மலர்வரிசை கொண்ட மாலையணிந்த பெருந்தகையே! எரிகின்ற வெப்பம் மிகுந்த கோடையிலே கருமுகில் எழுந்து தோன்றியதுபோல நீ வந்து பிறந்தாய்! நீ பிறந்த பின்னர் நாட்டில் மழை பிழையாது பொழிந்தது; நிலவளம் செழித்தது. அதனால் ஊனுடம்பினை உடைய் உயிர்கள், வருத்தும்பசியை அறியா ஆயின. நீ நீங்கினால் இந் நாடு தாயற்ற சிறுகுழந்தைபோல வாய்விட்டுக் கூவியழும்.

அரசே! துன்பம் நிலைபெற்றுள்ள இந்த உலகத்தைப் பாதுகாக்காமல், நீ உயர்நிலை உலகப் பேற்றினை (முத்தியை) அடைய விரும்பினால், அரசே! உயிர்கள் துன்புற்று மரணம் அடைய நீ மட்டும் உனக்கு உய்தியினைப் பெற்றவன் ஆவாய்! இஃது தன் உயிர் விரும்பாது பிற உயிர்களைப் பாதுகாக்கும் புத்ததேவனுடைய அருளும் அல்லவே! ஆதலால் மன்னவ! உன் சிந்தனையானது அறத்திற்கு மாறுபட்டது. (அதனை விட்டுவிடுக)'' என அறிவுரை கூறினான். புண்ணியராசன் அதனைக் கேட்டு,

மணிபல் லவம்வலம் கொள்வதற்கு எழுந்த
தணியா வேட்கை தணித்தற்கு அரிதால்
அரசும் உரிமையும் அகநகர்ச் சுற்றமும்
ஒருமதி எல்லை காத்தல்நின் கடன்எனக்
கலம்செய் கம்மியர் வருகெனக் கூஉய்
இலங்குநீர்ப் புணரி எறிகரை எய்தி
வங்கம் ஏறினன் மணிபல் லவத்திடைத்
தங்காது அக்கலம் சென்றுசார்ந்து இறுத்தலும்
புரைதீர் காட்சிப் பூங்கொடி பொருந்தி
அரைசன் கலம்என்று அகம்மகிழ்வு எய்திக்
காவலன் தன்னொடும் கடல்திரை உலாவும்
தேமலர்ச் சோலைத் தீவகம் வலம்செய்து
பெருமகன் காணாய் பிறப்புஉணர் விக்கும்
தரும பீடிகை இதுஎனக் காட்ட,
வலம்கொண்டு ஏத்தினன் மன்னவன் மன்னவற்கு
உலந்த பிறவியை உயர்மணிப் பீடிகை
கையகத்து எடுத்துக் காண்போர் முகத்தை
மைஅறு மண்டிலம் போலக் காட்ட
என்பிறப்பு அறிந்தேன் என்இடர் தீர்ந்தேன்
தென்தமிழ் மதுரைச் செழுங்கலைப் பாவாய்
மாரி நடுநாள் வயிறுகாய் பசியால்
ஆர்இருள் அஞ்சாது அம்பலம் அணைந்துஆங்கு
இரந்துஊண் வாழ்க்கை என்பால் வந்தோர்க்கு
அருந்துஊண் காணாது அழுங்குவேன் கையின்
நாடுவறம் கூரினும்இவ் ஒடுவறம் கூராது
ஏடா அழியல் எழுந்துஇது கொள்கென
அமுத சுரபி அங்கையில் தந்துஎன்
பவம்அறு வித்த வானோர் பாவாய்!

125. புணரி – கடல்.
135. உலந்த பிறவி – சென்ற பிறவி.
143. அழுங்குவேன் – வருந்துவேன்.

''மணிபல்லவத்திற்குச் சென்று அதனை வலம் வரவேண்டும் என்னும் என் ஆசை தணிக்க முடியாததாக உள்ளது. ஆதலால் ஒரு திங்கள் காலம் இவ் வரசையும், உரிமை மகளிரையும், நாட்டு மக்களையும் காத்துவருதல் உன் கடமையாகும்'' என அமைச்சரிடம் கூறினான்.

புண்ணியராசன் மணிபல்லவத்தை அடைந்தான் (124 - 131)

அரசன் மரக்கலம் செய்யும் தொழிலாளரை அழைத்தான்; அலை வீசும் கடற்கரையை அடைந்தான்; மரக்கலத்தில் ஏறினான்; அக் கலம் இடையே எங்கும் நிற்காமல் மணிபல்லவம் சென்றடைந்தது. மாசில்லா மெய்யறிவினையுடைய மணிமேகலை அங்கு வந்தாள். அம் மரக்கலம் புண்ணியராசனுடையது என்பதறிந்து உள்ளம் மகிழ்ந்தாள். அரசனோடு அலை உலவும், தேன்மலர்ச்சோலை நிரம்பிய மணி பல்லவத்தை வலம் வந்தாள்.

புத்தபீடிகை முன் புண்ணியராசன் (132 - 153)

''அரசே! இதோ பார்! முற்பிறவியினை அறிவிக்கும் தரும பீடிகை இதுவே!'' என்று மணிமேகலை காட்டினாள். அரசனும் அதனை வலம் வந்து போற்றினான். உயரிய மணிகளால் இழைக்கப்பெற்றிருந்த அப் பீடிகை அரசனுக்குச் சென்ற பிறப்பில் நிகழ்ந்த செய்தியை, கையிலே எடுத்துப் பார்ப்பவர் முகத்தைத் தெளிவாகக் காட்டும் ஒரு பழுதற்ற கண்ணாடியைப்போலக் காட்டியது.

''என் முற்பிறப்பினை அறிந்தேன்! துன்பம் நீங்கினேன்! தென் தமிழ் மதுரையிலுள்ள அழகிய கலைப் பாவையே! ஒருநாள் பெருமழை பெய்த நடு இரவிலே, வயிற்றைத் தீய்க்கின்ற பெரும் பசியோடு, செறிந்துள்ள இருள்கண்டும் அஞ்சாது, அம்பலத்தை அடைந்து, பிச்சையெடுத்துத் துன்பத்தையே வாழ்க்கையாகக் கொண்டுள்ள என்னிடம் வந்தவர்க்கு, கொடுப்பதற்கு உணவேதும் இல்லாமல் வருந்தினேன்! அப்போது, 'ஏடா! வருந்தாதே! நாடே வறுமையுற்றாலும் இந்த ஓடு வறுமையுறாது; எழுந்து இதனைப் பெற்றுக் கொள்வாயாக' என்று அமுதசுரபி என்னும் பெறுதற்கரிய பாத்திரத்தை என் கையில் கொடுத்து, என் வினைத் தொடர்புகளை அறுவித்த இமையோர் பாவையே!

உணர்வில் தோன்றி உரைப்பொருள் உணர்த்தும்
அணிதிகழ் அவிர்ஒளி மடந்தை நின்அடி
தேவர் ஆயினும் பிரமர் ஆயினும்
நாமாசு கழூஉம் நலம்கிளர் திருந்துஅடி
பிறந்த பிறவிகள் பேணுதல் அல்லது
மறந்து வாழேன். மடந்தைஎன்று ஏத்தி,
மன்னவன் மணிமே கலையுடன் எழுந்து
தென்மேற் காகச் சென்று திரைஉலாம்
கோமுகி என்னும் பொய்கையின் கரைஓர்
தூமலர்ப் புன்னைத் துறைநிழல் இருப்ப,
ஆபுத் திரனோடு ஆயிழை இருந்தது
காவல் தெய்வதம் கண்டுஉவந்து எய்தி
அருந்துஉயிர் மருந்துமுன் அங்கையில் கொண்டு
பெருந்துயர் தீர்த்தஅப் பெரியோய் வந்தனை
அந்நாள் நின்னை அயர்த்துப் போயினர்
பின்நாள் வந்துநின் பெற்றிமை நோக்கி
நின்குறி இருந்து தம்உயிர் நீத்தோர்
ஒன்பது செட்டிகள் உடல்என்பு இவைகாண்
ஆங்குஅவர் இடஉண்டு அவருடன் வந்தோர்
ஏங்கிமெய் வைத்தோர் என்பும் இவைகாண்
ஊர்திரை தொகுத்த உயர்மணல் புதைப்ப
ஆய்மலர்ப் புன்னை அணிநிழல் சீழால்
அன்புஉடை ஆர்உயிர் அரசற்கு அருளிய
என்புஉடை யாக்கை இருந்தது காணாய்
நின்உயிர் கொன்றாய் நின்உயிர்க்கு இரங்கிப்
பின்நாள் வந்த பிறர்உயிர் கொன்றாய்
கொலைவன் அல்லையோ கொற்றவன் ஆயினை.

151. நா மாசு – நாக் குற்றம்.
155. உலாம் – உலவும்.
162. அயர்த்து – மறந்து.
163. பெற்றிமை – தன்மை.
174. கொலைவன் – கொல்லுதலைச் செய்பவன்.

மக்களுடைய அறிவில் தோன்றி, செற்பொருள் உணர்த்தும் தேவியே! பளிக்கு மணிபோல ஒளிவீசும் திருமேனியை உடைய முதல்வியே! நின் திருவடிகள் தேவரே ஆயினும் பிரமரே ஆயினும் அவர்தம் நா மாசு கழுவும். அத்தகைய சிறப்புமிக்க நின் திருவடிகளைப் பிறந்த பிறவிகள் தோறும் வழிபடல் அல்லது மறந்து உயிர்வாழேன்'' எனச் சிந்தாதேவியை நினைத்துப் போற்றித் துதித்தான்.

கோமுகிக் கரையில் புண்ணியராசன் (154 – 174)

பின்னர் அரசன் மணிமேகலையுடன் அங்கிருந்து புறப்பட்டுத் தென்மேற்காக இருவரும் சென்றனர்; அலைகள் உலவும் கோமுகிப் பொய்கைக் கரையினை அடைந்தனர்; தூய மலர்களையுடைய புன்னை மர நிழலில் அமர்ந்தனர்.

ஆபுத்திரனும் மணிமேகலையும் கோமுகிக் கரையிலிருப்பதை, மணிபல்லவத்தின் காவல் தெய்வமாகிய தீவதிலகை கண்டாள்; மகிழ்ச்சியுடன் அங்குச் சென்றாள். ''முற்பிறப்பில் உயிர் மருந்தான உணவைக் கையிலே கொண்டு, உயிர்களின் பெரிய பசித்துன்பத்தைப் போக்கிய பெருந்தகையே! இப்போது இங்கு நீ மீண்டும் வந்துள்ளாய்! அந் நாளில் உன்னை இங்கேயே விட்டுவிட்டு மறதியால் சென்றவர்கள் பின்னொரு நாளில் வந்து, நீ உயிர் நீத்ததை அறிந்து, நீ இருந்த அதே இடத்திலேயே தாமும் இருந்து ஒன்பது செட்டிகள் உயிர் விட்டனர். அவர்களுடைய எலும்புகளை இங்கே பார்! அச் செட்டிகள் உணவு தர அதனையுண்டு அவர்களுடன் வந்தவர்களும் ஏக்கமுற்று உயிர் நீங்கினர். அவர்களுடைய எலும்புகளையும் இங்கே காண்பாயாக! அழகிய மலர்களுடைய புன்னை மர நிழலில், பரந்த அலைகள் கொண்டு வந்து தொகுத்த மணலில் உன் உடல் புதையுண்டிருக்கிறது. போன பிறவியில் தன்னிடம் கொண்டிருந்த உயிரை, இப் பிறவியில் அரசனாக இருக்கும் உனக்குத் தந்துள்ள கூட்டினைப் பாராய்'' என்றும் காட்டியது.

''நீ உன் உயிரை வருத்திக் கொன்றாய்; உன் உயிருக்காக இரங்கிப் பின்னாளில் இங்கு வந்த ஏனையோரின் உயிரையும் கொன்றாய்! நீ அதனால் ஒரு கொலைகாரன் அல்லவா? ஆனாலும் இப்போது நீ அரசனாக இருக்கிறாய்!''

பலர்தொழு பாத்திரம் கையின் ஏந்திய
மடவரல் நல்லாய் நின்தன் மாநகர்
கடல்வயிறு புக்கது காரணம் கேளாய்:
நாக நாடு ஆள்வோன் தன்மகள்
பீலிவளை என்பாள் பெண்டிரின் மிக்கோள்
பனிப்பகை வானவன் வழியில் தோன்றிய
புனிற்றுஇளங் குழவியொடு பூங்கொடி பொருந்திஇத்
தீவகம் வலம்செய்து தேவர்கோன் இட்ட
மாபெரும் பீடிகை வலம்கொண்டு ஏத்துழி,
கம்பளச் செட்டி கலம்வந்து இறுப்ப
அங்குஅவன் பால்சென்று அவன்திறம் அறிந்து
கொற்றவன் மகன்இவன் கொள்கெனக் கொடுத்தலும்
பெற்ற உவகையன் பெருமகிழ்வு எய்திப்
பழுதுஇல் காட்சிப் பைந்தொடி புதல்வனைத்
தொழுதனன் வாங்கித் துறைபிறக்கு ஒழியக்
கலம்கொண்டு பெயர்ந்த அன்றே கார்இருள்
இலங்குநீர் அடைகரை அக்கலம் கெட்டது
கெடுகல மாக்கள் புதல்வனைக் கெடுத்தது
வடிவேல் கிள்ளி மன்னனுக்கு உரைப்ப,
மன்னவன் மகனுக்கு உற்றது பொறாஅன்
நல்மணி இழந்த நாகம் போன்று
கானலும் கடலும் கரையும் தேர்வுழி
வானவன் விழாக்கோள் மாநகர் ஒழிந்தது
மணிமே கலாதெய்வம் மற்றுஅது பொறாஅள்
அணிநகர் தன்னை அலைகடல் கொள்கென
இட்டனள் சாபம் பட்டது இதுவால்
கடவுள் மாநகர் கடல்கொளப் பெயர்ந்த
வடிவேல் தடக்கை வானவன் போல
விரிதிரை வந்து வியன்நகர் விழுங்க
ஒருதனி போயினன் உலக மன்னவன்.

---

180. பனிப்பகை வானவன் – சூரியன்.
183 ஏத்துழி – துதிக்கும்பொழுது.
184 இறுப்ப – தங்க.

பூம்புகாரைக் கடல் கொண்டது (175 - 213)

''பலரும் வணங்கும் தகைமையுடைய அமுத சுரபியைக் கையிலேந்தியுள்ள மணிமேகலையே! நின்னுடைய பெருநகராகிய புகார் நகரம் கடலின் வயிற்றிலே புகுந்து விட்டது (கடல் கொண்டு விட்டது). அதற்கான காரணத்தைக் கேட்பாயாக!

நாக நாடு என்னும் நல்ல நாட்டினை ஆண்டு வந்த மன்னன் மகள் பீலிவளை என்பவள். அவள் பெண்களுள் சிறந்தவள். அப் பூங்கொடி சூரியன் மரபிலே தோன்றிய மிக்க இளையதான ஒரு குழந்தையுடனே இங்கே வந்தாள். இத் தீவினை வலம் செய்தாள்; இந்திரன் இட்ட பெருமை பொருந்திய பீடிகையினையும் வலம் வந்து போற்றி வணங்கினாள்.

அப்போது கம்பளச் செட்டியினுடைய மரக்கலம் இங்கே வந்து தங்கியது. அவள் அவ்வணிகனிடம் சென்று, அவன் காவிரிப் பூம்பட்டினத்திற்குச் செல்வதறிந்தாள். 'இவன் புகார் நகர அரசன் மகன்; இவனைக் கொண்டுபோய் மன்னனிடம் தருக' எனக் குழந்தையை அவனிடம் கொடுத்தாள். வணிகனும் பெருமகிழ்வோடு குழந்தையைப் பீலிவளை கையிலிருந்து வாங்கிக் கொண்டான். இத் துறையை விட்டு மன்னன் மகனுடன் அவன் கடலிற் பயணம் செய்த அன்றே காரிருளில் கரையருகே கலம் உடைந்தது. அழிந்த கலத்திலிருந்து தப்பினோர் குழந்தை இறந்த செய்தியைக் கூரிய வேலினையுடைய கிள்ளிவளவனுக்குச் சொன்னார்கள்.

மகன் இறந்ததைப் பொறாதவனாய் மன்னவன் மணி இழந்த நாகம்போல வருந்தினான். கடற் கானலிலும், கடலிலும், கரையிலும் தேடித் திரிந்தான். அதனால் காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திர விழா நடக்கவில்லை. மணிமேகலா தெய்வம் அக் குற்றத்தைப் பொறுக்காமல், 'அழகிய நகரத்தை அலைகள் நிறைந்த கடல் கொள்வதாகுக' எனச் சாபமிட்டாள். அதனால் புகார் நகரம் அழிந்தது. தேவ நகரினைக் கடல் கொள்ள, அங்கிருந்து நீங்கிய வேலேந்திய பெரிய கையினையுடைய இந்திரன்போல, அலை விரிந்த கடல் தன் புகார் நகரினை விழுங்க, மன்னனான நெடுமுடிக் கிள்ளி தன்னந்தனியனாக அங்கிருந்து வெளியேறினான்.

அருந்தவன் தன்னுடன் ஆயிழை தாயரும்
வருந்தாது ஏகி வஞ்சியுள் புக்கனர்
பரப்புநீர்ப் பௌவம் பலர்தொழக் காப்போள்
உரைத்தன கேட்க உறுகுவை ஆயின்நின்
மன்உயிர் முதல்வனை மணிமே கலாதெய்வம்
முன்னாள் எடுத்ததும் அந்நாள் ஆங்குஅவன்
அறஅரசு ஆண்டதும் அறவணன் தன்பால்
மறுபிறப் பாட்டி வஞ்சியுள் கேட்பைஎன்று
அந்தரத் தீவகத்து அருந்தெய்வம் போயபின்,
மன்னவன் இரங்கி மணிமே கலையுடன்
துன்னிய தூமணல் அகழத் தோன்றி
ஊன்பிணி அவிழவும் உடல்என்பு ஒடுங்கித்
தான்பிணி அவிழாத் தகைமையது ஆகி
வெண்சுதை வேய்ந்துஅவண் இருக்கையின் இருந்த
பண்புகொள் யாக்கையின் படிவம் நோக்கி
மன்னவன் மயங்க, மணிமே கலைஎழுந்து
என்உற் றனையோ இலங்குஇதழ்த் தாரோய்
நின்நாடு அடைந்துயான் நின்னைஈங்கு அழைத்தது
மன்னா நின்தன் மறுபிறப்பு உணர்த்தி
அந்தரத் தீவினும் அகன்பெருந் தீவினும்
நின்பெயர் நிறுத்த நீள்நிலம் ஆளும்
அரசர் தாமே அருள்அறம் பூண்டால்
பொருளும் உண்டோ பிறபுரை தீர்த்தற்கு

207. பௌவம் – கடல்.
212. மறுபிறப் பாட்டி – மறுபிறப்பினை அறியும் தன்மையள்.
227. புரை – குற்றம்.

அரிய தவத்தோராகிய அறவண அடிகளுடன், நின் தாயாகிய மாதவியும், சுதமதியும் துன்பம் ஏதுமின்றி வஞ்சி மாநகர் சென்றடைந்தனர். பரந்த நீரினையுடைய கடலைப் பலரும் வணங்குமாறு காத்துவருகின்ற மணிமேகலா தெய்வம் இதனை எனக்குக் கூறியது.

இன்னும் கேட்பாயாயின், அத் தெய்வம் கூறியதை மேலும் கூறுவேன் கேள்: உன் தந்தை மரபின் முன்னோனாகிய ஒருவனை, மணிமேகலா தெய்வம் கடலிலிருந்து எடுத்துக் காத்தது. அந்நாளில் அவ் வணிகள் புண்ணியத் தானம் பல செய்தான். இவைபற்றியெல்லாம் மறுபிறப்புணர்ந்தோளாகிய நீ வஞ்சி நகரில் அறவண அடிகளிடம் கேட்டு அறிவாயாக'' - இவ்வாறு கூறியபின் மணிபல்லவத் தீவினைக் காவல் புரியும் அரிய தெய்வமாகிய தீவதிலகை வானத்தில் எழுந்து சென்றாள். அவள் சென்ற பின் -

புண்ணியராசன் எலும்பு கண்டு மயங்கினான் (214 – 231)

புண்ணியராசன் மிகவும் வருத்தமுற்று, மணிமேகலையுடன், புன்னை மர நிழலில் செறிந்து கிடந்த மணல் மேட்டினைத் தோண்டினான். தோண்டியதும் எலும்புக்கூடு தென்பட்டது. அவன் முற்பிறவி உடலில் ஊனாகிய தசைப்பிடிப்பு நீங்கி, எலும்புகள் ஒடுங்கி, தம்முடைய கோப்பினின்றும் சிதையாதனவாய் இருந்தன. வெள்ளெலும்புக்கூடு வெள்ளிய சுண்ணாம்பால் செய்யப்பட்டது போலக் காட்சியளித்தது. முற்பிறவியின் பெருமை மிக்க படிவத்தைப் பார்த்ததும் புண்ணியராசன் கலக்கமடைந்தான்.

மணிமேகலை அறம் உரைத்தாள் (221 – 231)

மணிமேகலை உடனே எழுந்து, ''இதழ்கள் நிறைந்த மலர்மாலையினையுடைய மன்னனே! நீ துன்பம் எய்தியது ஏனோ? நான் உன் நாட்டிற்கு வந்து உன்னை மணிபல்லவத்திற்கு அழைத்து வந்தது, மன்னா! உன் பழம்பிறப்பை உணர்த்தவும், அந்தரத் தீவிலும் மற்றைய பெருந்தீவுகளிலும் உன் புகழை நிலை நிறுத்துவதற்குமே ஆகும். நிலவுலகை ஆளும் அரசர்கள் அருளாகிய அறத்தை மேற்கொண்டால் உலகில் பிற குறைபாடுகள் நீங்குதற்கு அதைவிட வேறு பொருள் இல்லை.

அறம்எனப் படுவது யாதுஎனக் கேட்பின்
மறவாது இதுகேள் மன்உயிர்க்கு எல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டது இல்என, காவலன் உரைக்கும்
என்நாட் டாயினும் பிறர்நாட் டாயினும்
நல்நுதல் உரைத்த நல்அறம் செய்கேன்
என்பிறப்பு உணர்த்தி என்னைநீ படைத்தனை
நின்திறம் நீங்கல் ஆற்றேன் யான்என,
புன்கண் கொள்ளல்நீ போந்ததற்கு இரங்கிநின்
மன்பெரு நாடு வாய்எடுத்து அழைக்கும்
வங்கத்து ஏகுதி வஞ்சியுள் செல்வன்என்று
அந்தரத்து எழுந்தனள் அணியிழை தான்என்.

230 உண்டி – உணவு. உறையுள் – இருப்பிடம்.
233. செய்கேன் – செய்வேன்.
236 புன்கண் கொள்ளல் – துன்பம் கொள்ளாதே.

''அறம் என்று கூறப்படுவது யாது?' என்று கேட்பாயேயாகில் மன்னவனே! நான் கூறும் இதனை மறவாது கேட்பாயாக! நிலைபெற்றுள்ள உயிர்களுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும், தங்க இடமும் தருவது தவிர வேறு எதனையும் யாம் கண்டது இல்லை'' என்று கூறினாள்.

மணிமேகலை வஞ்சி சென்றாள் (231 - 239)

''தவச்செல்வியே! நான் என்னுடைய நாட்டிலும், பிற நாடுகளிலும நீ உரைத்த நல்லறங்களைக் செய்வேன். என் பிறப்பினை உணர்த்தி என்னை மீளவும் படைத்தவள் நீயே! ஆதலின் உன்னை விட்டுப் பிரிந்து செல்வதற்கு ஆற்றாது வருந்துகிறேன்'' எனப் புண்ணியராசன் கூறினான் அவன் அவ்வாறு கூறியதும், ''மன்னவ! வருத்தங் கொள்ளாதே! நீ இங்கு வந்ததற்கு வருத்தமுற்று, உன்னுடைய மிகப் பெரிய நாடு உன்னை வாய்விட்டு அழைத்துக் கொண்டிருக்கும். ஆதலால் நீ உன் மரக்கலத்தில் ஏறி உன் நாட்டுக்குச் செல்க! நானும் வஞ்சி மாநகரம் சேர்வேன்'' எனச் சொல்லி, மணிமேகலை வானிலே எழுந்தனள்.

26. வஞ்சி மாநகர் புக்க காதை

அணியிழை அந்தரம் ஆறா எழுந்து
தணியாக் காதல் தாய்கண் ணகியையும்
கொடைகெழு தாதை கோவலன் தன்னையும்
கடவுள் எழுதிய படிமம் காண
வேட்கை துரப்பக் கோட்டம் புகுந்து
வணங்கி நின்று குணம்பல ஏத்தி
அற்புக்கடன் நில்லாது நல்தவம் படராது
கற்புக்கடன் பூண்டு நும்கடன் முடித்தது
அருளல் வேண்டும்என்று அழுதுமுன் நிற்ப
ஒருபெரும் பத்தினிக் கடவுள்ஆங்கு உரைப்போள்:
எம்இறைக்கு உற்ற இடுக்கண் பொறாது
வெம்மையின் மதுரை வெவ்வழல் படுநாள்
மதுரா பதிஎனும் மாபெருந் தெய்வம்
இதுநீர் முன்செய் வினையின் பயனால்
காசுஇல் பூம்பொழில் கலிங்கநல் நாட்டுத்
தாய மன்னவர் வசுவும் குமரனும்
சிங்க புரமும் செழுநீர்க் கபிலையும்
அங்குஆள் கின்றோர் அடல்செரு உறுநாள்
மூஇரு காவதம் முன்னுநர் இன்றி
யாவரும் வழங்கா இடத்தில் பொருள்வேட்டுப்
பல்கலன் கொண்டு பலர்அறி யாமல்
எல்வளை யாளோடு அரிபுரம் எய்திப்
பண்டக் கலம்பகர் சங்கமன் தன்னைக்
கண்டனர் கூறத் தையல்நின் கணவன்
பார்த்திபன் தொழில்செயும் பரதன் என்னும்

---

5 வேட்கை துரப்ப – ஆசை செலுத்துதலால்.
11. இறை – கோவலன்.
15. காசு – குற்றம்.
19. முன்னுநர் – முற்படுவோர்.
23. பண்டக் கலம் – பொன்னாலாகிய அணிகலம்.

26. வஞ்சி மாநகர் புக்க காதை

கண்ணகி கோட்டத்தில் மணிமேகலை (1 – 9)

மணிபல்லவத்திலிருந்து மணிமேகலை வான வழியிலே சென்று வஞ்சி நகரின் புறத்தே இறங்கினாள்; நிறைந்த அன்புடையவளாகிய தாய் கண்ணகியையும் கொடைக்குணம் மிகுந்த தந்தை கோவலனையும் தெய்வமாகப் பண்ணிய வடிவங்களைக் காணவேண்டுமெனும் ஆசை அவளைத் தூண்டியது. கண்ணகி கோட்டத்தினுள் நுழைந்து வணங்கி நின்றாள். தாய் தந்தையரின் குணங்கள் பலவற்றையும் போற்றி உரைத்தாள். தாயின் வடிவத்தை நோக்கி, ''தாயே! தாங்கள் கணவன் இறந்ததும் உடன் இறத்தலும் தீப்பாய்தலும் ஆகிய அன்புக் கடமையிலே நில்லாமலும், நல்ல தவ நெறியினை மேற்கொள்ளாமலும் கற்பாகிய கடமையைக் கொண்டே உம் பிறவிக் கடனை முடித்தீர்கள்! அதன் காரணத்தை உரைத்தருள வேண்டும்'' எனக் கேட்டு அழுது நின்றாள்.

மதுராபதித் தெய்வத்தின் விளக்கம் (10 – 33)

அப்போது, மாபெரும் பத்தினிக் கடவுளாகிய கண்ணகி கூறலுற்றாள்: ''கணவனுக்கு நேர்ந்த துன்பத்தைப் பொறுக்க முடியாத பெருஞ்சினத்தினால் மதுரை மாநகரை எரியுள் மூழ்கச் செய்தேன். அந் நாளில் மதுராபதி என்னும் மாபெரும் தெய்வம் என்முன் தோன்றிக் கூறியது; ''இச்செயல் முற்பிறப்பில் நீவிர் செய்த தீவினைப் பயனாலே நேர்ந்தது. தூய பூம்பொழில் சூழ்ந்த கலிங்க நாட்டிற்கு வசு என்பவனும் குமரன் என்பவனும் உரிமையுள்ள மன்னர்கள் (தாயாதியர்). வசு சிங்கபுரத்திலிருந்தும், குமரன் நீர்வளம் நிறைந்த கபிலபுரத்திலிருந்தும் ஆண்டு வந்தனர். அவர்கள் தம்முள் பகை கொண்டு போரிட்டு வந்தனர். இருவர் நாட்டிற்கும் இடைப்பட்ட ஆறு காவத தூரம் எவரும் நடமாடாத இடமாய்க் கிடந்தது (போக்குவரத்தற்று இருந்தது).

சங்கமன் என்னும் வணிகன் பொருள் தேடும் விருப்ப முடையவனாய், பல அணிகலன்களை எடுத்துக்கொண்டு, யாரும் அறியாதபடி, ஒளிபொருந்திய வளையலுடைய தன் மனைவி நீலியுடன் சிங்கபுரம் வந்து சேர்ந்தான். அவன் அங்கு அணிகலன்களை விற்பதைப் பார்த்தவர் கூறினர். பெண்ணே! உன் கணவன் பரதன்

தீத்தொழி லாளன் தெற்றெனப் பற்றி
ஒற்றன் இவன்என உரைத்து மன்னற்குக்
குற்றம்இ லோனைக் கொலைபுரிந் திட்டனன்
ஆங்குஅவன் மனைவி அழுதனள் அரற்றி
ஏங்கிமெய் பெயர்ப்போள் இறுவரை ஏறி
இட்ட் சாபம் கட்டியது ஆகும்
உம்மை வினைவந்து உருத்தல்ஒழி யாதுஎனும்
மெய்ம்மைக் கிளவி விளம்பிய பின்னும்
சீற்றம் கொண்டு செழுநகர் சிதைத்தேன்
மேல்செய்நல் வினையின் விண்ணவர்ச் சென்றேம்
அவ்வினை இறுதியின் அடுசினப் பாவம்
எவ்வகை யானும் எய்துதல் ஒழியாது
உம்பர் இல்வழி இம்பரில் பல்பிறப்பு
யாங்கணும் இருவினை உய்த்துஉமைப் போல
நீங்குஅரும் பிறவிக் கடலிடை நீந்திப்
பிறந்தும் இறந்தும் உழல்வோம் பின்னர்
மறந்தும் மழைமறா மகதநல் நாட்டுக்கு
ஒருபெருந் திலகம்என்று உரவோர் உரைக்கும்
கரவுஅரும் பெருமைக் கபிலையம் பதியின்
அளப்புஅரும் பாரமிதை அளவின்று நிறைத்துத்
துளக்கம்இல் புத்த ஞாயிறு தோன்றிப்
போதி மூலம் பொருந்திவந் தருளித்
தீதுஅறு நால்வகை வாய்மையும் தெரிந்து
பன்னிரு சார்பின் பகுதித் தோற்றமும

---

26. தெற்றென – விரைவாக.
30. மெய்பெயர்ப்போள் – உயிர்விடுவோள்.
இறுவரை – பெரிய மலை.
44. கரவு – மறைத்தல்.
45. பாரமிதை – வீடு பேறாகிய கரையை அடைவதற்குரியது பாரம் – கரை.

அரசனிடம் ஏ வல் புரிபவன். கொடுந்தொழிலுடைய அவன் சங்கமனை உடனே பிடித்துச் சென்று மன்னனிடம், 'இவன் எதிரி நாட்டு ஒற்றன்' எனச் சொல்லி அவனைக் கொலை புரிவித்தான்.

கொலையுண்ட சங்கமன் மனைவி நீலி அழுதாள்; அலறினாள்; ஏக்கத்துடன் பெருமலையின் உச்சியிலே ஏறி, என்னை இப்பிறவியில் இந்நிலைக்கு ஆளாக்கியவர் மறுபிறவியில் நான் அடைந்துள்ள இதே நிலையை அடைவாராக, எனச் சாபமிட்டு இறந்தாள். அவள் இட்ட சாபம் இப்போது வந்து விளைந்திருக்கிறது. முன் செய்த தீவினை விளைவைத் தந்தே தீரும்; இது ஒருபோதும் தவறாது'' என்கின்ற உண்மை மொழிகளை மதுராபதித் தெய்வம் எனக்குச் சொல்லியது.

கண்ணகி கோவலன் எதிர்காலம் (33 – 44)

அத் தெய்வம் தெரிவித்த பிறகும், நான் சினங்கொண்டு மதுரை மாநகரை அழித்தேன். முன் செய்த நல்வினைப் பயனாலே நானும் என் கணவரும் இப்போது வானுலகத்தில் புகுந்துள்ளோம்! தேவ உலகத்திலிருக்கும் இந் நல்வினைப் பயன் முடியும் காலத்தில் மதுரையை எரித்த தீவினையின் பயன் எம்மை வந்து சேராமல் விடாது.

தெய்வ உலகத்தில் இருக்கும் நல்வினைப்பயன் முடிந்ததும் இம் மண்ணுலகில் பல பிறவிகளை எடுப்போம்! எல்லாப் பிறப்பு களிலுமே இருவினைப் பயன்களால் செலுத்தப்பெற்று, உங்களைப் போலவே நாங்களும் பிறவிக் கடலிலே நீந்திப் பிறந்தும் இறந்தும் துன்புறுவோம்

பின்னர், மழை பெய்தலை மறந்தும் தவறாத (மழை வளம் மிகுந்த) மகத நாட்டிற்கு, ஒப்பற்ற திலகம் போன்றது எனப் பெருமை வாய்ந்த அறிஞர்கள் கூறும் கபில நகரில் பிறப்போம்.

புத்த ஞாயிறு தோன்றும் (45 – 53)

வீடுபேறு எனும் கரையை அடைவதற்குரிய பத்து வகையான ஒழுக்கங்களையும் அளவில்லாமல் தன்னிடத்தே நிறைத்துக் கொண்டதாகப் புத்த ஞாயிறு தோன்றும்; அது போதி மரத்தின் அடியிலே எழுந்தருளியிருக்கும்; தீதற்ற நால்வகை உண்மைகளையும் தெளிந்து, பேதைமை முதலிய பன்னிரு நிதானங்களின் தோற்றத்தையும்,

அந்நிலை எல்லாம் அழிவுறு வகையும்
இற்றுஎன இயம்பிக் குற்றவீடு எய்தி
எண்அரும் சக்கர வாளம் எங்கணும்
அண்ணல் அறக்கதிர் விரிக்கும் காலைப்
பைந்தொடி தந்தை யுடனே பகவன்
இந்திர விகாரம் ஏழும்ஏத் துதலின்
துன்பக் கதியில் தோற்றரவு இன்றி
அன்புஉறு மனத்தோடு அவன்அறம் கேட்டுத்
துறவி உள்ளம் தோன்றித் தொடரும்
பிறவி நீத்த பெற்றியம் ஆகுவம்
அத்திற மாயினும் அநேக காலம்
எத்திறத் தார்க்கும் இருத்தியும் செய்குவம்.
நறைகமழ் கூந்தல் நங்கை நீயும்
முறைமையின் இந்த மூதூர் அகத்தே
அவ்வவர் சமயத்து அறிபொருள் கேட்டு
மெய்வகை இன்மை நினக்கே விளங்கிய
பின்னர்ப் பெரியோன் பிடகநெறி கடவாய்
இன்னதுஇவ்வி யல்புஎனத் தாய்எடுத்து உரைத்தலும்,
இளையள் வளையோள் என்றுஉனக்கு யாவரும்
விளைபொருள் உரையார் வேற்றுஉருக் கொள்கென
மைஅறு சிறப்பின் தெய்வதம் தந்த
மந்திரம் ஓதிஓர் மாதவன் வடிவாய்த்
தேவ குலமும் தெற்றியும் பள்ளியும்
பூமலர்ப் பொழிலும் பொய்கையும் மிடைந்து
நல்தவ முனிவரும் கற்றுஅடங் கினரும்
நன்னெறி காணிய தொல்நூல் புலவரும்
எங்கணும் விளங்கிய எயில்புற இருக்கையில்,

51. வீடு எய்தி – விடுதல் பெற்று.
56. தோற்றரவு – தோன்றுதல்.
61. இருத்தி –. சித்தி.
72. குலம் – கோயில், தெற்றி – திண்ணை.
73. மிடைந்து – நெருங்கி.

அவை கெடும் வகையினையும் இத்தகையது என எடுத்துக் கூறும்; காமம் முதலிய குற்றங்களை நீக்கும், எண்ணுவதற்கு முடியாததாகிய உலக முழுதும் அறக் கதிர்களைப் பரப்பும்.

கோவலன் கண்ணகி முத்தி பெறுவர் (54 – 68)

பசுமையான தொடியணிந்தவளே! (புகார் நகரை விட்டுப் புறப்பட்டபோது) உன் தந்தையுடனே நானும் புத்தனுக்குரிய இந்திர விகாரம் ஏழினையும் வணங்கித் துதித்தேன். அந் நல்வினையாலே, துன்பம்செய் பிறவிகளிலே மீண்டும் பிறத்தல் இல்லாமல் அன்புமிக்க உள்ளத்தோடு புத்தன் அறநெறிகளைக் கேட்போம்! ஆதலால் உள்ளத்தே துறவுநிலை தோன்றித் தொடர்ந்துவரும் பிறவிகள் நீங்கியவர்களாய் இறுதியில் முத்தி நிலை அடைவோம்; என்றாலும் அதுவரை பலகாலம் எவ்வகைப்பட்டவர்க்கும் சித்திகள் செய்து வருவோம்.

மணம் கமழும் கூந்தலையுடையவளே! நீ இப் பழமையான நகரினுள்ளே சென்று சமயவாதிகளிடம் அவரவர் அறிந்த பொருள்களையெல்லாம் முறையாகக் கேள்! அவற்றுள் உண்மைத் தன்மை இல்லை என்பது உனக்கே விளங்கும். பின்னர் புத்தனின் திரிபிடக நெறியிலிருந்து நீ மாறாதவள் ஆவாய்! இனிமேல் உனக்கு நிகழவிருப்பது இதுவே'' எனத் தாயாகிய பத்தினிக் கடவுள் மணிமேகலையிடம் கூறினாள்.

மணிமேகலை தவமுனிவன் வேடம் கொண்டாள் (69 – 76)

'இவள், இளமைப் பருவத்தினள்; வளையலணிந்த பெண் எனச் சொல்லி உனக்கு யாரும் தம் சமய உண்மைகளைக் கூறார்; ஆதலின் நீ வேற்றுருக் கொள்க' எனக் குற்றமற்ற சிறப்புடைய மணிமேகலா தெய்வம் தந்த மந்திரத்தை ஓதி மணிமேகலை ஒரு தவமுனிவன் வடிவினை அடைந்தாள்.

நகரக் கோட்டை மதிலின் புறத்தேயுள்ள புறஞ்சேரி; அங்கே தெய்வக் கோயில்கள், வேதிகைகள், பள்ளிகள், மலர்வனங்கள், பொய்கைகள் ஆகியன நிறைந்து நெருங்கியிருந்தன. கற்ற முனிவர்களும், கற்று அடங்கிய சான்றோரும், நல்ல நெறியை உணர்த்தும் பண்டைய நூலறி புலவர்களும் எங்கும் அங்கே விளங்கினர். அத்தகைய புறஞ்சேரியை மணிமேகலை சென்றடைந்தாள்.

செங்குட் டுவன்எனும் செங்கோல் வேந்தன்
பூத்த வஞ்சி பூவா வஞ்சியில்
போர்த்தொழில் தானை குஞ்சியில் புனைய
நிலநாடு எல்லைதன் மலைநாடு என்னக்
கைம்மலைக் களிற்றுஇனம் தம்முள் மயங்கத்
தேரும் மாவும் செறிகழல் மறவரும்
கார்மயங்கு கடலின் கலிகொளக் கடைஇக்
கங்கையம் பேரியாற்று அடைகரைத் தங்கி
வங்க நாவியின் அதன்வடக்கு இழிந்து
கனக விசயர் முதல்பல வேந்தர்
அனைவரை வென்றுஅவர் அம்பொன் முடிமிசைச்
சிமையம் ஓங்கிய இமைய மால்வரைத்
தெய்வக் கல்லும் தன்திரு முடிமிசைச்
செய்பொன் வாகையும் சேர்த்திய சேரன்
வில்திறம் வெய்யோன் தன்புகழ் விளங்கப்
பொன்கொடிப் பெயர்ப்படூஉம் பொன்நகர்ப் பொலிந்தனள்
திருந்துநல் ஏது முதிர்ந்துளது ஆதலின்
பொருந்துநால் வாய்மையும் புலப்படுத் தற்குஎன்

78. பூத்த வஞ்சி – வஞ்சிப்பூ. பூவா வஞ்சி – வஞ்சி நகரம்
83 கலிகொள – முழங்க; கடைஇ – செலுத்தி.
92 பொன்கொடி – அழகிய கொடி. -ஆதாவது வஞ்சிக்கொடி. பொன்கொடிப் பெயர்ப்படும் பொன்நகர் என்பது வஞ்சிநகர்.

செங்குட்டுவன் வீரம் (77-90)

சேரன் செங்குட்டுவன் செங்கோல் வேந்தன்; அவனுடைய தலைநகர் வஞ்சி நகரம். (வஞ்சி என்பது ஒரு பூவின் பெயராகவும் உள்ளது. எனவே நகரத்தைப் பூவா வஞ்சி என்றும், பூவினைப் பூத்த வஞ்சி என்றும் குறிப்பிடுவர்). பூ அல்லாத வஞ்சியாகிய நகரத்தில் போரெடுத்துச் செல்லும் படையினர் வஞ்சிப் பூவைத் தம் தலையில் சூடினர்; செல்லும் நாடுகளிலுள்ள பரந்த இடமெல்லாம் தனது மலைநாடு என்று தோன்றும்படித் துதிக்கை கொண்ட மலைகளைப் போன்ற யானைகள் தம்முள் நெருக்கிக் கொண்டு முன்னே செல்லுகின்றன. (சேரநாட்டில் யானைகள் மிகுதியாக இருக்கும். 'சேர நாடு வேழமுடைத்து' என்பர். படையில் யானைகள் மிகுதியாக இருக்கின்றன. ஆதலால் யானை செல்லுமிடமெல்லாம் சேரநாடு போலவே தோன்றுகிறதாம்!)

தேரும், குதிரையும், நெருங்கிய வீரக்கழலணிந்த மறவரும் மகிழ்வுடன் கூடி, கடல் போல முழக்கமிட்டுச் செல்லுகின்றனர். நால்வகைச் சேனைகளையும் செலுத்திச் சேர மன்னன் கங்கைப் பெருநதியின் அடைகரையிலே தங்கினான். 'வங்கம்' என்று சொல்லப்படும் மரக்கலங்களின் உதவி கொண்டு கங்கையின் வடகரை சென்று படையுடன் இறங்கினான். கனக விசயர்கள் முதலான பல வேந்தர்களை ஒருசேர வென்றான். உயர்ந்த உச்சிகளையுடைய இமய மலையிலிருந்து வெட்டியெடுத்ததும் தெய்வப் படிமம் அமைத்தற் குரியதுமான கல்லைப் பொன்முடியணிந்த கனக விசயர் தலைமீது ஏற்றினான்; தன் வெற்றியின் அடையாளமாகப் பொன்னாற் செய்யப்பட்ட வாகை மலரைத் தன் தலையில் சூடினான்

மணிமேகலை வஞ்சி நகரினுள் சென்றாள் (91-94)

(கனக விசயர் தலையில் கல்லேற்றி, தன் தலையில் வெற்றிப் பொற்பூச் சூடியவன் செங்குட்டுவன்); வில்லாற்றல் மிக்குடைய அவன் புகழ் பெருகுமாறு பெருமைக்குரியதாக வஞ்சிநகர் விளங்கியது.

மணிமேகலைக்குத் திருந்திய நல்வினை முற்றியதால் நால்வகை உண்மைகளை அறிவுறுத்தும் பொருட்டு அவ்வஞ்சி நகரினுள் சென்று பொலிவுடன் தோன்றினாள்.

27. சமயக்கணக்கர்தம் திறம் கேட்ட காதை

நவைஅறு நன்பொருள் உரைமி னோஎனச்
சமயக் கணக்கர் தம்திறம் சார்ந்து
வைதிக மார்க்கத்து அளவை வாதியை
எய்தினள் எய்திநின் கடைப்பிடி இயம்புஎன,
வேத வியாதனும் கிருத கோடியும்
ஏதம்இல் சைமினி எனும்இவ் ஆசிரியர்
பத்தும் எட்டும் ஆறும் பண்புஉறத்
தத்தம் வகையால் தாம்பகர்ந் திட்டனர்
காண்டல் கருதல் உவமம் ஆகமம்
ஆண்டைய அருத்தா பத்தியோடு இயல்பு
ஐதிகம் அபாவம் மீட்சி ஒழிவறிவு
எய்திஉண் டாம்நெறி என்றுஇவை தம்மால்
பொருளின் உண்மை புலம்கொளல் வேண்டும்
மருள்இல் காட்சி ஐவகை ஆகும்
கண்ணால் வண்ணமும் செவியால் ஓசையும்
நண்ணிய மூக்கால் நாற்றமும் நாவால்
சுவையும் மெய்யால் ஊறும்எனச் சொன்ன
இவைஇவை கண்டுகேட்டு உயிர்த்துஉண்டு உற்றுத்
துக்கமும் சுகமும் எனத்துயக்கு அறஅறிந்து
உயிரும் வாயிலும் மனமும்ஊறு இன்றி
பயில்ஒளி யொடுபொருள் இடம்பழுது இன்றிச்

1. நவை – குற்றம்.
4. கடைப்பிடி – சிந்தாந்தம்.
19. துயக்கு – தடை.

27. சமயக்கணக்கர்தம் திறம் கேட்ட காதை

அளவை வாதி (பிரமாண வாதி) (1-56)

முனிவர் வடிவு கொண்டு வந்த மணிமேகலை, சமயவாதிகள் தங்கியிருக்கும் இடத்திற்குச் சென்றாள். ''குற்றமற்ற மெய்ப்பொருளை உரையுங்கள்'' எனக் கேட்டாள். முதலில் வைதிக மார்க்கத்தைச் சார்ந்த அளவை வாதியை (பிரமாண வாதியை) அடைந்தாள். அவனிடம், ''நீ மேற்கொண்டுள்ள சமயக் கொள்கைகளைச் சொல்வாயாக'' எனக் கேட்டாள்.

வேதவியாசன், கிருதகோடி, சைமினி என்னும் இம்மூன்று ஆசிரியர்களும் அளவைகளை முறையே பத்து என்றும், எட்டு என்றும், ஆறு என்றும் தத்தம் கூறுபாட்டின்படி தாந்தாம் பண்புறக் கூறியுள்ளனர்.

அளவைகள் பத்து: அவை 1.காட்சியளவை; 2.அனுமான அளவை; 3.உவம அளவை; 4.ஆகம அளவை; 5.அருத்தாபத்தி அளவை; 6.இயல்பு அளவை; 7.ஐதிக அளவை; 8.அபாவ அளவை; 9.மீட்சி ஒழிவறிவு அளவை; 10.சம்பவ அளவை என்பன. இப் பத்து அளவைகளாலும் பொருளின் உண்மைத் தன்மையை அறிதல் வேண்டும்.

1. காட்சி அளவை

மருட்சிக்குச் சிறிதும் காரணமாகாத காட்சி அளவை ஐந்து வகையாகும். கண்ணால் நிறமும், செவியால் ஓசையும், மூக்கால் நாற்றமும், நாவால் சுவையும், உடலால் ஊறும் என்று சொல்லப்பட்ட இவற்றை முறையே கண்டும், கேட்டும், முகர்ந்தும், உண்டும், மெய்யுற்றும், இன்ப துன்பம் இதுவெனத் தடையின்றி அறிதல் வேண்டும். உயிரும், ஐம்பொறிகளும், மனமும் குற்றமின்றி இயங்குதல் வேண்டும். ஞாயிறு, திங்கள், தீ எனும் மூன்றும் ஒளித் துணைகள். இவற்றின் ஒளி துணையாகப் பொருளும் இடமும் இணைய வைத்துப்

சுட்டல் திரிதல் கவர்கோடல் தோன்றாது
கிட்டிய தேசம் நாமம் சாதி
குணம்கிரி யையின் அறிவது ஆகும்.
கருத்துஅள வாவது
குறிக்கொள் அனுமா னத்துஅனு மேயத்
தகைமை உணரும் தன்மையது ஆகும்.
மூவகை உற்றுஅது பொதுஎச்சம் முதல்ஆம்
பொதுஎனப் படுவது சாதன சாத்தியம்
இவைஅந் நுவயம் இன்றாய் இருந்தும்
கடம்திகழ் யானைக் கானஒலி கேட்டோன்
உடங்குஎழில் யானைஅங்கு உண்டுஎன உணர்தல்
எச்சம் என்பது வெள்ளஏ துவினால்
நிச்சயித்து அத்தலை மழைநிகழ்வு உரைத்தல்
முதல்என மொழிவது கருக்கொள் முகில்கண்டு
இதுமழை பெய்யும் எனஇயம் பிடுதல்
என்னும் ஏதுவின் ஒன்றுமுக் காலம்
தன்னில் ஒன்றில் சார்ந்துஉளது ஆகி
மாண்ட உயிர்முதல் மாசுஇன்று ஆகிக்
காண்டல் பொருளால் கண்டிலது உணர்தல்;
உவமம் ஆவது ஒப்புமை அளவை
கவய மாஆப் போலும் எனக் கருதல்;
ஆகம அளவை அறிவன் நூலால்
போக புவனம் உண்டுஎனப் புலம்கொளல்;

---

22. சுட்டல் – பொருளுண்மை மாத்திரம் காணுதல்.
திரிதல் – ஒன்றை மற்றொன்றாகக் கருதுதல். கவர்கோடல் – சந்தேகம்.
26. அனுமேயம் – அனுமானத்தால் உணரப்படுவது
29. சாதனம் – ஏது. சாத்தியம் – துணி பொருள்.
30. அந்நுவயம் – சேர்க்கை; அ∴தாவது நியதமான உடன் நிகழ்ச்சி
32. உடங்கு – உடனே.
34. அத்தலை – அவ்விடம்.

பொருளை மாத்திரம் காணுதலும், ஒன்றை மற்றொன்றாகக் கருதுதலும், இதுவோ அதுவோ என ஐயம் கொள்ளுதலும் இல்லாமல் அவையவை சார்ந்துள்ள இடம், பெயர், இனம், குணம், தொழில் இவைகளைச் சிறப்பாக அறிவதே காட்சி அளவை எனப்படும்.

2. கருத்தளவை

கருத்தளவை (அனுமான அளவை) என்பது குறித்த அனுமானத்தால் பொருள் உண்மையை உணர்வதாகும். இவ்வளவை (1) பொது (2) எச்சம் (3) முதல் என மூவகைப்படும்.

(1) 'பொது' என்பது சாதனமும் சாத்தியமும் எனும் இவையாகும். இவை உடனிகழ்ச்சி எதுவும் இல்லாதிருந்தும், காட்டில் யானையின் பிளிற்றொலியைக் கேட்டவன் உடனே யானை ஒன்று அங்கு உள்ளது என உணர்வது போன்றதாகும்.

(2) 'எச்சம்' என்பது, இங்கு வருகின்ற வெள்ளமாகிய காரணத்தைக் கொண்டு, ஆற்றின் மேற்பகுதியில் மழை பெய்திருப்பதை நிச்சயித்துக் கூறுவதாகும்.

(3) 'முதல்' எனப்படுவது வானத்தே சூல் கொண்டுள்ள கருமுகிலைக் கண்டு, 'இது மழை பொழியும்' எனச் சொல்லுதல். கருத்தளவையின் முப்பிரிவும் இறப்பு, நிகழ்வு, எதிர்வு ஆகிய முக்காலங்களில் ஒன்றினைச் சார்ந்து தோன்றும் காணப்படும் பொருளைக் கொண்டு காணப்படாதவற்றைக் குற்றமின்றி அறிதல் கருத்து அளவையாகும்.

3. உவம அளவை

உவம அளவையாவது ஒன்றோடொன்று ஒப்புமை கூறி உணர்த்தும் அளவையாகும். கயவமா என்பது ஒரு விலங்கு என்று அறியாதவனுக்கு அக் கயவமா பசுப்போன்றிருக்கும் என்று சொல்லி உணர்த்துவதாம்.

4. ஆகம அளவை

ஆகம அளவையாவது அறிவிற் சிறந்த புலவர் நூல் கருவியாக போகநுகர்ச்சிக்கென இந்நிலவுலகத்தின் மேலும் கீழும் உலகங்கள் உண்டு என்று உணர்ந்து ஏற்றுக் கொள்ளுதலாம். (அறம் செய்தார்

அருத்தா பத்தி ஆய்க்குடி கங்கை
இருக்கும் என்றால் கரையில்என்று எண்ணல்
இயல்பு யானைமேல் இருந்தோன் தோட்டிக்கு
அயல்ஒன்று ஈயாது அதுவே கொடுத்தல்
ஐதிகம் என்பது உலகுஉரை இம்மரத்து
எய்தியது ஓர்பேய் உண்டுஎனத் தெளிதல்
அபாவம் என்பது இன்மைஓர் பொருளைத்
தவாதுஅவ் விடத்துத் தான்இலை என்றல்

45. அருத்தாபத்தி – ஒரு பொருளைக் கொண்டு அதனோடு இயைபுடைய பிறிதொன்றினை உணர்தல்.
47. இயல்பளவை: இதனைச் சுபாவ அளவை என்றும் கூறுவர்.
51. அபாவ அளவை – ஒரு பொருளை இல்லை என்று கூறுவது.

சுவர்க்கம் புகுவர்; அறம் செய்யாதவர் நரகம் புகுவர் என்று சான்றோர் கூறுவது கொண்டு சுவர்க்கம், நரகம் இருப்பதை உண்மையெனக் கொள்வது ஆகம அளவை)

5. அருத்தாபத்தி அளவை

அருத்தாபத்தி அளவை என்பது, 'ஆய்க்குடி கங்கையில் இருக்கிறது' என்றால், கங்கைக் கரையில் உள்ளது எனப் பொருள் கொள்வதாகும். ஒரு பொருளைக் கொண்டு அதனோடு இயைபுடைய பிறபொருளை உணர்தல். (அருத்தம் - பொருள்; ஆபத்தி - பிறிதொரு பொருள்)

6. இயல்பு அளவை

இயல்பு அளவையாவது யானையின் பிடரின் மேல் இருக்கும் ஒருவனிடம், 'கோல் கொடு என்றால் அவன் வேறொன்றும் கொடாது தன் கையில் உள்ள அங்குசத்தைக் (தோட்டியைக்) கொடுப்பது போன்றது. (யானையின் மேல் இருப்பவன் கையில் தோட்டி அல்லது வேறு கோல் இல்லாமையால் 'கோல்' கொடு என்றதும் அவன் தோட்டியைக் கொடுப்பது இயல்பு).

7. ஐதிக அளவை

ஐதிக அளவை என்பது உலகுரை. அஃதாவது உலகோரால் வழிவழியாகக் கேட்டு வழிவழியாகச் சொல்லப்பட்டு வரும் உரையாகும். 'இம் மரத்தில் பேய் உண்டு' என்று பலரும் சொல்லுவதையே உறுதியாகக் கொண்டு அவ்வாறே உண்டு என உடன்படுவது ஆகும்.

(ஒருவரும் கண்ணில் காணவில்லையென்றாலும் பலரும் உண்டென்பது பற்றியே உடன்படுவது).

8. அபாவ அளவை

அபாவ அளவை என்பது ஒரு பொருளின் இல்லாமை; கூறப்படும் பொருள் ஒன்றினை அது உறுதியாக இல்லை என்று சொல்வது அபாவ அளவை. (கானல் நீர் இல்லை என்றவாறு போல)

மீட்சி என்பது இராமன்வென் றான்என
மாட்சிஇல் இராவணன் தோற்றமை மதித்தல்
உள்ளநெறி என்பது நாராசத் திரிவில்
கொள்ளத் தகுவது காந்தம்எனக் கூறல்
எட்டுஉள பிரமா ணாபா சங்கள்
சுட்டுணர் வொடுதிரி யக்கோடல் ஐயம்
தேராது தெளிதல் கண்டுண ராமை
எய்தும் இல்வழக்கு உணர்ந்ததை உணர்தல்
நினைப்புஎன நிகழ்வசுட்டு உணர்வெனப் படுவது
எனைப்பொருள் உண்மை மாத்திரை காண்டல்
திரியக் கோடல் ஒன்றைஒன்று என்றல்
விரிகதிர் இப்பியை வெள்ளிஎன்று உணர்தல்
ஐயம் என்பது ஒன்றை நிச்சயியா
மையல் தறியோ மகனோ என்றல்
தேராது தெளிதல் செண்டு வெளியில்
ஓராது தறியை மகன்என உணர்தல்

55. நாராசத் திரிவில் – இரும்புத்துண்டின் சுழற்சியால்.
64. இப்பி – சிப்பி.
66. மையல் – மயக்கம். தறி = கட்டை.
67. செண்டுவெளி – குதிரை மீது விளையாடுமிடம்.
68. ஓராது – உணராது.

9. மீட்சி அளவை

மீட்சி அளவை என்பது இராமனுக்கும் இராவணனுக்கும் நடந்த போரில் இராமன் வென்றான் என்றபோது மாட்சியில்லாத இராவணன் தோற்றான் என்பதை உணர்ந்து கொள்வதாகும். (மீட்சியாவது ஒழிவு அறிவு)

10. உள்ள நெறியளவை (சம்பவ அளவை)

சம்பவ அளவையாவது இரும்புத்துண்டின் சுழற்சியாலே கொள்ளக் கூடியது காந்தம் எனக் கூறுதல் போன்றதாம்.

அளவைக் குற்றங்கள் (பிரமாணாபாசங்கள்) (57-76)

மேலே காட்சி முதல் உள்ளநெறி ஈறாகக் கூறப்பட்டுள்ள அளவைகள் பத்திற்கும் ஆகா என்று விலக்கப்பட்ட குற்றங்கள் எட்டு உள. அவை (1)சுட்டுணர்வு (2)திரியக்கோடல் (3)ஐயம் (4)தேராது தெளிதல் (5)கண்டுணராமை (6)இல்வழக்கு (7)உணர்ந்ததை உணர்தல் (8)நினைப்பு என்பன. அவற்றுள்

1. **சுட்டுணர்வு** என்பது எல்லாப் பொருள்களையும் வெளித்தோற்றமே கண்டு அத்துடன் அமைந்து விடுதல்.

(குற்றியோ (கட்டையோ), மகனோ (ஆளோ) காணப்பட்ட போது அவற்றின் வேறுபாடுகளைக் காணாது தோற்றம் மட்டுமே கண்டு 'ஏதோ ஒன்று இருக்கிறது' என்று மட்டும் அறிதல்)

2. **திரியக்கோடல்:** திரியக் கோடல் என்பது ஒன்றை இன்னொன்றாய் உணர்தல் விரிந்த ஒளிக்கதிர்களையுடைய சிப்பியைச் சிப்பியென உணராது வெள்ளியென்று உணர்தல்.

3. **ஐயம்:** ஐயம் என்பது காணப்பட்ட ஒன்றை 'இன்னதுதான் இது' என நிச்சயிக்க இயலாது மயங்குதல். (ஒன்றைக் கண்டவன் இது மரக்கட்டையா, ஆளா என மயங்கித் துணியாது இருத்தல்.)

4. **தேராது தெளிதல்:** தேராது தெளிதல் என்பது ஆராய்மல் நம்புவது. குதிரை வீரர் விளையாடுமிடத்தில் நிற்கும் கட்டையை ஆராயாமலேயே அதனை ஆள் என்று சொல்லுதல்.

கண்டுண ராமை கடுமாப் புலிஒன்று
அண்டலை முதலிய கண்டும்அறி யாமை
இல்வழக்கு என்பது முயல்கோடு ஒப்பன
சொல்லின்மாத் திரத்தால் கருத்தில் தோன்றல்
உணர்ந்ததை உணர்தல் உறுபனிக் குத்தீப்
புணர்ந்திடல் மருந்துஎனப் புலம்கொள நினைத்தல்
நினைப்புஎனப் படுவது காரணம் நிகழாது
நினக்குஇவர் தாயும் தந்தையும் என்று
பிறர்சொல்லக் கருதல்இப் பெற்றிய அளவைகள்.
பாங்குறும் உலோகா யதமே பௌத்தம்
சாங்கியம் நையா யிகம்வை சேடிகம்
மீமாஞ் சகமாம் சமயஆ சிரியர்
தாம்பிரு கற்பதி சினனே கபிலன்
அக்க பாதன் கணாதன் சைமினி
மெய்ப்பிரத் தியம்அனு மானம் சாத்தம்
உவமானம் அருத்தா பத்தி அபாவம்
இவையே இப்போது இயன்றுள அளவைகள்

70. அண்டலை – நெருங்குதலை.
71. கோடு – கொம்பு.
77. இப்பெற்றிய – இத்தன்மையுடையன.
84 . சாத்தம் – ஆகமம்.

5. கண்டுணராமை: கொடுமையான புலி ஒன்று தன்னை நெருங்கி வருவதை நேரில் பார்த்தும் அதன் தீங்கை உணராதிருக்கும் அறியாமை 'கண்டுணராமை' எனப்படும்.

(இரை விழுங்கியுறங்கும் மலைப்பாம்பு எரியால் சூழப்படினும் இடம் பெயராது கிடத்தல்.)

6. இல்வழக்கு: இல்வழக்கு என்பது இல்லாததைச் சொல்லுதல். முயற்கொம்பு என்றொரு பொருள் இல்லை; சொல்வழக்கில் இது குறிக்கப்படுவது இல்வழக்காகும். (ஆகாயப்பூ, ஆமை மயிர் போன்றன; பொருள் இல்லை, என்றாலும் சொல்லுதல்).

7. உணர்ந்ததை உணர்தல்: முன்னரே ஆராய்ந்து உணர்ந்த ஒன்றை மறுபடியும் ஆராய்ந்து கொண்டிருத்தல். மிக்க குளிருக்குத் தீயினருகே இருத்தல் மருந்தாகும் என்பது முன்னரே உணர்ந்தது. அதனை மீண்டும் ஆராய்ந்து கொண்டிருத்தல் குற்றம். (மிகுகுளிருக்கு நெருப்பருகே சார்தல் மருந்தாமென்று அறிந்தும் அதையே மீண்டும் ஆராய்ந்து தெளிதல் வேண்டாம்.)

8. நினைப்பு: நினைப்பு என்பது காரண காரிய ஆராய்ச்சி எதுவுமின்றி பிறர் சொற்களை அவ்வண்ணமே ஏற்றுக் கொள்ளுதல் என்னும் குற்றம். உனக்கு இவர் தாயும் தந்தையும் என்று பிறர் சொல்ல அச் சொல்லைக் காரண காரிய ஆராய்ச்சி செய்யாமல் ஏற்றுக் கொள்ளுதல்.

ஆறு சமயங்கள்; அவற்றின் அளவைகள் (77 - 83)

''உலோகாயதம், பௌத்தம், சாங்கியம், நையாயிகம், வைசேடிகம், மீமாஞ்சகம் ஆகிய ஆறு சமயங்களுக்கும் முறையே பிருகற்பதி (வியாழன்), புத்தன், கபிலன், அக்கபாதன், கணாதன், சைமினி ஆகியோர் ஆசிரியர்கள் ஆவர். மெய்ப்பிரத்தியம் (காட்சி), அனுமானம், சாத்திரம் (ஆகமம்), உவமானம், அருத்தாபத்தி, சுபாவம் ஆகிய ஆறு அளவைகள் மட்டுமே இப்போது வழங்கப்பட்டு வருகின்ற அளவைகள் ஆகும்'' என்று அளவைவாதி கூறினான்.

(பிருகற்பதி காட்சி அளவையை மட்டும் கொண்டு உலோகாயதம் வகுத்தார். புத்தன் காட்சி, அனுமானம் எனும் இரண்டு

என்றவன் தன்னைவிட்டு, இறைவன் ஈசன்என
நின்ற் சைவ வாதிநேர் படுதலும்
பரசும்நின் தெய்வம் எப்படித்து என்ன
இருசுட ரோடுஇய மானன்ஐம் பூதம் என்று
எட்டு வகையும் உயிரும்யாக் கையுமாய்க்
கட்டிநிற் போனும் கலைஉருவி னோனும்
படைத்துவிளை யாடும் பண்பி னோனும்
துடைத்துத் துயர்தீர் தோற்றத் தோனும்
தன்னில் வேறு தான்ஒன்று இலோனும்
அன்னோன் இறைவன் ஆகும்என்று உரைத்தனன்.
பேர்உலகு எல்லாம் பிரம வாதிஓர்
தேவன் இட்ட முட்டை என்றனன்.
காதல் கொண்டு கடல்வணன் புராணம்
ஓதினன் நாராணன் காப்புஎன்று உரைத்தனன்.
கற்பம் கைசந் தம்கால் எண்கண்
தெற்றென் நிருத்தம் செவிசிக் கைமூக்கு

88. பரசும் – வணங்கப்படும்.
89. இருசுடர் – ஞாயிறு, திங்கள். இயமானன் – யாகத் தலைவன்.
ஐம்பூதம் – நிலம், நீர், தீ, காற்று, வான்
98. கடல்வணன் – திருமால், புராணம் – பழமை.

அனுமானங்களைக் கொண்டார்; கபிலன் காட்சி, அனுமானம், ஆகமம் என்னும் மூன்று அளவைகளையும்; அக்கபாதன் காட்சி, அனுமானம், ஆகமம், உவமானம் ஆகிய நான்கு அளவைகளையும்; கணாதன் இந்நான்குடன் அருத்தாபத்தியையும் சேர்த்து ஐந்து அளவைகளையும்; சைமினி இவ்வைந்துடன் சுபாவம் என்பதையும் சேர்த்து ஆறு அளவைகளையும் கொண்டனர்.)

சைவவாதி (84 – 95)

அளவைவாதியை விட்டு விலகிய மணிமேகலை, 'உலகுக்கு இறைவன் ஈசன் ஒருவனே' என்று உறுதி கொண்டவனாகிய சைவவாதியைக் கண்டாள். அவனிடம் மணிமேகலை, 'நீ வழிபடும் உன் தெய்வம் எத்தகைய இயல்புடையது' என்று கேட்டாள். அதற்கு அவன், ''எங்கள் இறைவன் ஞாயிறு, திங்கள், இயமானன், மண், நீர், நீ, காற்று, வான் என்ற எட்டினையும் உடம்பாகக் கொண்டு, தான் அவற்றிற்கு உயிராய் அமைந்திருப்பவன்; பல்வேறு கலைகளையும் தனக்கு உருவாகக் கொண்டவன்; உலகம் யாவற்றையும் படைத்து விளையாடும் பண்பினன்; படைத்தவற்றை அழித்து உயிர்களின் பிறவித் துன்பத்தைத் தீர்த்தருளும் சிறப்பினன். தன்னினும் வேறாக எந்தத் தெய்வமும் இல்லாதவன். அவனே எங்கள் இறைவன் ஆவான்'' என்றான்.

பிரமவாதி (96 – 97)

பிரமவாதி, ''பெரிய இவ்வுலகங்கள் அனைத்துமே பிரமதேவன் இட்ட முட்டை'' என்றான்.

வைணவவாதி (98 – 99)

கடல் நிறத்தவனாகிய திருமாலின் புகழை ஓதி உணர்ந்தவனாகிய வைணவ வாதி, ''நாரணனே இவ்வுலகைக் காத்தருளும் தெய்வம்'' என்றான்.

வேதவாதி (100 – 105)

கற்பம் எனப்படும் அங்கமே கைகளாகவும், சந்தமே கால்களாகவும், கணிதமே கண்களாகவும், தெற்றென விளங்கச் செய்யும் நிருத்தமே செவிகளாகவும், சிக்கையே மூக்காகவும்,

உற்ற வியாகர ணமுகம் பெற்றுச்
சார்பின் தோன்றா ஆரண வேதக்கு
ஆதி அந்தம் இல்லைஅது நெறிஎனும்
வேதியன் உரையின் விதியும் கேட்டு
மெய்த்திறம் வழக்குஎன விளம்புகின்ற
எத்திறத் தினும்இசை யாதுஇவர் உரைஎன
ஆசீ வகநூல் அறிந்த புராணனைப்
பேசும்நின் இறையார் நூல்பொருள் யாதுஎன,
எல்லைஇல் பொருள்களில் எங்கும்எப் பொழுதும்
புல்லிக் கிடந்து புலப்படு கின்ற
வரம்புஇல் அறிவன் இறைநூல் பொருள்கள்ஐந்து
உரம்தரும் உயிரோடு ஒருநால் வகைஅணு
அவ்வணு உற்றும் கண்டும் உணர்ந்திடப்
பெய்வகை கூடிப் பிரிவதும் செய்யும்
நிலம்நீர் தீக்காற்று எனநால் வகையின
மலைமரம் உடம்புஎனத் திரள்வதும் செய்யும்
வெவ்வேறு ஆகி விரிவதும் செய்யும்
அவ்வகை அறிவது உயிர்எனப் படுமே.
வற்பம் ஆகி உறும்நிலம், தாழ்ந்து
சொல்படு சீதத் தொடுசுவை உடைத்தாய்
இழின்என நிலம்சேர்ந்து ஆழ்வது நீர், தீத்
தெறுதலும் மேல்சேர் இயல்பும் உடைத்தாம்,
காற்று விலங்கி அசைத்தல் கடன்இவை
வேற்று இயல்பு எய்தும் விபரீ தத்தால்
ஆதி இல்லாப் பரமா ணுக்கள்
தீதுஉற்று யாவதும் சிதைவது செய்யா

---

100 - 102. கற்பம், சந்தம், கணிதம், நிருத்தம், சிட்சை, வியாகரணம் என்னும் இவ்வாறும் வேதத்திற்குக் கை, கால், கண், காது, முகம், மூக்கு என்னும் உறுப்புகளாக உள்ளன.

108. ஆசீவக நூல் – சமண சமயத்தின் பாகுபாடு இரண்டனுள் ஒரு வகைக்குரிய நூல்

120. வற்பம் – வன்மை.

125. விபரீதம் – விகாரம்.

சொல்வினைக்கமாகிய வியாகரணமே முகமாகவும் கொண்டு எதையும் சார்ந்து தோன்றாது தானே தோன்றிய ஆரணமாகிய வேதபுருடனுக்கு ஆதியும் இல்லை; அந்தமும் இல்லை. அவ் வேதங்கள் உரைப்பனவே எங்கள் நெறியாகும்'' என்று வேதவாதி சொன்னதையும் மணிமேகலை கேட்டாள்.

ஆசீவக வாதி (106 – 165)

மெய்யாய நூல் வழக்கு என்றும் உலக வழக்கு என்றும் சொல்லப்படுகின்ற எவ்வகையிலும் இச் சமயவாதிகள் கூறிய உரைகள் பொருத்தமுடையனவாய் இல்லை என மணிமேகலை கருதினாள். அடுத்து ஆசீவக நூற்பொருளை அறிந்த ஒரு முதியவனைக் கண்டு, ''நீ வணங்கும் இறைவன் யார்? உன் சமய நூற்பொருள் யாது?'' என்று கேட்டாள்.

எல்லையில்லாத பொருள்களில் எங்கும், எப்பொழுதும் நீங்காமல் பொருந்தியிருக்கும் மற்கலியே எங்கள் இறைவன். அவன் எல்லையில்லா அறிவுடையவன். அவன் உரைத்த நூற்பொருள்கள் ஐந்து. திண்மை பொருந்திய உயிரும், ஒப்பற்ற நிலம், நீர், தீ, காற்று ஆகிய நால்வகை அணுவும் ஆகிய இவ்வைந்துமே அவை.

இவ்வணுக்கள் தாம் தம்மை உற்றும் கண்டும் உணர்ந்திடுமாறும் தம்முள் கூடுதலும் பிரிதலும் செய்யும். நிலம், நீர், தீ, காற்று எனும் நால்வகை அணுக்கள் மலையாகவும், மரமாகவும், உடம்பாகவும் திரண்டு உருவாவதும் உண்டு. அவை வேறு வேறாகப் பிரிந்து விரிதலும் உண்டு. அணுக்கள் திரள்வதும் விரிவதும் ஆகிய கூறுபாடுகளை அறிவதே உயிர் என்று கூறப்படும்.

நில அணு திட்பமானது. நீர் அணு கீழே வீழ்வது; குளிர்ச்சியும் சுவையும் உடையது; 'இழும்' எனும் ஒசையுடன் நிலத்தில் தாழ்ந்தோடி ஆழத்தே சேரும். தீ அணு எரிவது; மேல் நோக்கி எழுகின்ற இயல்பும் கொண்டது. காற்று அணு குறுக்கிட்டு அசைந்தோடும் தன்மையுடையது.

இவை நான்கும் எவ்வித ஆதியும் இன்றி அநாதியாகவே விளங்கும் பரமாணுக்கள். இவை வேறு இயல்புகளைக் கொள்ளும்; என்றாலும் சிறிதும் இல்லாதவாறு என்றுமே அழியா

புதிதாய்ப் பிறந்துஒன்று ஒன்றில் புகுதா
முதுநீர் அணுநில அணுவாய்த் திரியா
ஒன்றுஇரண் டாகிப் பிளப்பதும் செய்யா
அன்றியும் அவல்போல் பரப்பதும் செய்யா
உலாவும் தாழும் உயர்வதும் செய்யும்
குலாமலை பிறவாக் கூடும் பலவும்
பின்னையும் பிரிந்துதம் தன்மைய ஆகும்
மன்னிய வயிரமாய்ச் செறிந்துவற் பமும்ஆம்
வேயாய்த் துளைபடும் பொருளா முளைக்கும்
தேயா மதிபோல் செழுநில வரைப்பாம்
நிறைந்தஇவ் அணுக்கள் பூதமாய் நிகழின்
குறைந்தும் ஒத்தும் கூடா வரிசையின்
ஒன்று முக்கால் அரைகா லாய்உறும்
துன்றும்மிக் கதனால் பெயர்சொலப் படுமே
இக்குணத்து அடைந்தால் அல்லது, நிலனாய்ச்
சிக்கென் பதுவும் நீராய் இழிவதும்
தீயாய்ச் சுடுவதும் காற்றாய் வீசலும்
ஆய தொழிலை அடைந்திட மாட்டா
ஓர்அணுத் தெய்வக் கண்ணோர் உணர்குவர்
தேரார் பூதத் திரட்சியுள் ஏனோர்
மாலைப் போதில் ஒருமயிர் அறியார்
சாலத் திரள்மயிர் தோற்றுதல் சாலும்
கரும்ம் பிறப்பும் கருநீலப் பிறப்பும்
பசும்ம் பிறப்பும் செம்ம் பிறப்பும்
பொன்ன் பிறப்பும் வெண்ண்பிறப்பும்
என்றுஇவ் வாறு பிறப்பினும் மேவிப்
பண்புஉறு வரிசையிற் பால்பட்டுப் பிறந்தோர்
கழிவெண் பிறப்பில் கலந்துவீடு அணைகுவர்
அழியல் வேண்டார் அத்துஉறற் பாலார்

136. வேய் – மூங்கில்.
141. துன்றும் – பொருந்தும்.
143. சிக்கென்பதும் – வன்மையுற்றிருப்பதும்.
147. தேரார் – அறியார்.

புதிதாக ஓரணு பிறந்து வேறோர் அணுவுக்குள் புகுவதும் இல்லை. நீரணுக்கள் நில அணுக்களாக மாறுவதில்லை. ஓரணு இரண்டு அணுக்களாகப் பிளந்துபோவதும் கிடையாது. நெல் அவலாகப் பரந்து போவதுபோல இவை விரிதலும் இல்லை. இவை உலாவுவதும், தாழ்வதும், மேலெழுவதும் உண்டு. மலையணு கரைந்து மணலாகிப் பிறவற்றுடன் சேரும். பலவாகச் செறிந்துள்ள அணுச் செறிவு, பிறகு பிரிந்து தனித்தனியுமாகும். மரமாகச் செறிந்துள்ள அணுக்கள் மேலும் திண்மையாகி வைரமாகும்; மூங்கிலாகி உள்ளே புழையுடையதாகவும் ஆகும்; வித்தாகி மீண்டும் முளைக்கவும் செய்யும்; தேயாத முழுமதிபோல வட்டமான நிலப்பரப்பாகவும் அமையும்.

எல்லாப் பொருள்களிலும் நிறைந்துள்ள இந் நால்வகை அணுக்கள் பூதங்களாக மாறும்போது தமக்குரிய அளவில் குறைந்தோ, சம அளவிலோ கூடுவதில்லை. நில அணு ஒன்றானால், நீரணு முக்கால், தீ அணு அரை, காற்று அணு கால் என்று ஆகி, பொருந்தும் அணுக்களுள் எந்த அணு மிகுதியாக இருக்கிறதோ அதன் பெயரால் அழைக்கப்பெறும். இவ் வளவில் அணுக்கள் செறிவுற்றால் அல்லாமல் நிலம் திண்மையாயிருப்பதும், நீர் பள்ளம் நோக்கி ஓடுவதும், தீ சுடுவதும், காற்று வீசுவதும் ஆகிய தொழில்களை அவை அடையமாட்டா

ஞானக்கண் உடையவர் ஒவ்வோர் அணுவையும் தனித்தனியே கண்டறிவர். அஃதில்லாத பிறர் பூதத் திரட்சியுள் அவ்வணு இருப்பதை அறிந்து தெளிவு கொள்ளார். அவ்வாறு அறியாத தன்மை, ஞாயிறு மறைந்த மாலைப்போதில் தலையிலுள்ள ஒவ்வொரு மயிரையும் தனித்தனியாகக் காணாமல், மயிர்க் கற்றையின் திரட்சியை மட்டுமே காண்பது போன்றதாகும்.

பிறப்புக்கு நிறமுண்டு. கருப்பு, கருநீலம், பசுமை, செம்மை, பொன்மை, வெண்மை ஆகிய வண்ணப் பிறப்புகளில் பிறப்பர். இவ்வறுவகைப் பிறப்புகளிலும் பிறந்து படிப்படியாக உயர்ந்து மிக வெண்மையான பிறப்பு எய்தினோர் வீடுபேறு அடைவர். தாம் அழிவுற்றுப் போவதனை விரும்பாதோர் அவ் வீடு பேற்றுக்குரியதான மிகவும் வெண்மையான பிறப்பினை அடைதற்கு உரியோராவர்.

இதுசெம் போக்கின் இயல்பு, இது தப்பும்
அதுமண் டலம்என்று அறியல் வேண்டும்.
பெறுதலும் இழத்தலும் இடையூறு உறுதலும்
உறும்இடத்து எய்தலும் துக்கசுகம் உறுதலும்
பெரிதவை நீங்கலும் பிறத்தலும் சாதலும்
கருவில் பட்ட பொழுதே கலக்கும்
இன்பமும் துன்பமும் இவையும்அணு எனத்தகும்
முன்உள ஊழே பின்னும்உறு விப்பது
மற்கலி நூலின் வகைஇது என்ன,
சொல்தடு மாற்றத் தொடர்ச்சியை விட்டு
நிகண்ட வாதியை நீஉரை நின்னால்
புகழும் தலைவன்யார் நூல்பொருள் யாவை
அப்பொருள் நிகழ்வும் கட்டும் வீடும்
மெய்ப்பட விளம்புஎன, விளம்பல் உறுவோன்
இந்திரர் தொழப்படும் இறைவன்எம் இறைவன்
தந்த நூல்பொருள் தன்மாத்தி காயமும்
அதன்மாத்தி காயமும் காலா காயமும்
தீதுஇல் சீவனும் பரமா ணுக்களும்
நல்வினை யும்தீ வினையும்அவ் வினையால்
செய்வுறு பந்தமும் வீடும்இத் திறத்த
ஆன்ற பொருள்தன் தன்மைய தாயும்
தோன்றுசார்வு ஒன்றின் தன்மைய தாயும்
அநித்தமும் நித்தமும் ஆகி நின்று
நுனித்த குணத்துஓர் கணத்தின் கண்ணே
தோற்றமும் நிலையும் கேடும் என்னும்
மாற்றுஅரு மூன்றும் ஆக்கலும் உரித்தாம்

167. நிகண்ட வாதி – சமணர் இருதிறத்தாரில் ஒரு வகையான். இவன் திகம்பரவாதி என்றும் கூறப்படுவான்
179. அநித்தம் – நிலையாமைத் தன்மை; நித்தம் – நிலைத்த தன்மை.
180. நுனித்தல் – கூர்ந்து அறிதல்.

இவ்வாறு துன்புறாது நன்னெறி சென்று வீடெய்தும் நெறி 'செம்போக்கு' எனப்படும். இந்நெறியில் தவறித் துன்புறுவது 'மண்டல நெறி' என்று அறிதல் வேண்டும்.

நற்பேறுகளைப் பெறுவதும், பெற்றவற்றை இழந்துவிடுதலும், பலவகையான இடையூறுகள் வந்து நேர்தலும், பொருந்திய இடத்திலேயே பொருந்தி இருத்தலும், இன்பமும் துன்பமும் எய்தலும், அவை பெரிதும் நீங்கப்பெறுவதும், பிறப்பு இறப்புகளும், ஓர் உயிர் கருவில் தோன்றியபோதே அதனைச் சார்ந்துவிடும். இன்பமும் துன்பமுமாகிய இவை அனைத்தும் அணுவெனவே கூறத்தக் கவையாம்! முன்னே செய்த ஊழ்வினைப் பயனே பின்னர் வந்து விளையும். இதுவே 'மற்கலி கோசர்' என்பார் கூறிய ஆசீவக நூலின் தத்துவமாம்'' என ஆசீவகவாதி மணிமேகலைக்குச் சொன்னான்.

நிகண்டவாதி (166 – 200)

முன்னுக்குப்பின் தொடர்பின்றித் தடுமாறிக் கூறிய ஆசீவகனுடன் தொடர்ந்து உரையாடுதலை விடுத்து, மணிமேகலை அங்கேயிருந்த நிகண்டவாதியைக் கண்டாள். அவனிடம், ''உன்னால் புகழப்படும் தலைவன் யார்? உன் நூற்பொருள்கள் யாவை? அப் பொருள்களின் வரலாறும், உயிர்களுக்கு உண்டாகும் கட்டும், அதனின்று விடுதலை பெறும் வழியும் விளங்கக் கூறுக'' எனக் கேட்டாள். நிகண்டவாதி தன் கொள்கைகளை விளக்கி உரைக்கலானான்.

இந்திரர் பலராலும் தொழப்படும் அருகபரமேட்டியே எம் இறைவன். அவன் உரைத்த நூற்பொருள் பத்து. அவை (1) தன்மாத்திகாயம் (2) அதன்மாத்திகாயம் (3) காலம் (4) ஆகாயம் (5) குற்றமில்லாத சீவன் (6) பரமாணுக்கள் (7) நல்வினை (8) தீவினை (9) நல்வினை தீவினைகளால் உண்டாகும் கட்டு (10) வீடு பேறு என்பன.

ஆகமத்தில் கூறப்படும் பொருள், தன் தன்மையது ஆகியும், சார்ந்த பொருளின் தன்மையது ஆகியும், அநித்தமும் நித்தமும் உடையதாயும், கூர்ந்து அறியப்படுகின்ற குணத்தினாலே ஒரு கணத்தி னுள்ளேயே தோற்றமும் நிலையும் கேடும் என்று சொல்லப்படும் மாற்றுதற்குரிய மூவகை இயல்பும் உடைத்தாயும் இருக்கும்.

நிம்பம் முளைத்து நிகழ்தல் நித்தியம்
நிம்பத்து அப்பொருள் அன்மை அநித்தியம்
பயற்றுத் தன்மை கெடாதுகும் மாயம்
இயற்றி அப்பயறு அழிதலும் ஏதுத்
தருமாத்தி காயம் தான்எங்கும் உளதாய்ப்
பொருள்களை நடத்தும் பொருந்த நித்தியமா
அப்படித் தாகிய தன்மாத்தி காயமும்
எப்பொருள் களையும் நிறுத்தல் இயற்றும்
காலம் கணிகம் எனும்குறு நிகழ்ச்சியும்
ஏலும் கற்பத் தின்நெடு நிகழ்ச்சியும்
ஆக்கும்ஆ காயம் எல்லாப் பொருட்கும்
பூக்கும்இடம் கொடுக்கும் புரிவிற்று ஆகும்
சீவன் உடம்போடு ஒத்துக் கூடித்
தாஇல்சுவை முதலிய புலன்களை நுகரும்
ஓர்அணு புற்கலம் புறஉரு வாகும்
சீர்சால் நல்வினை தீவினை அவைசெயும்
வருவழி இரண்டையும் மாற்றி முன்செய்
அருவினைப் பயன்அனு பவித்துஅறுத் திடுதல்
அதுவீடு ஆகும் என்றனன், அவன்பின்

183 நிம்பம் – வேம்பு.

185. கும்மாயம் – பயற்றில் செய்யப்படும் ஒருவகைப் பாயசம்

191 - 192 : காலம் 'கணிகம்' (க்ஷணிகம்) எனனும் குறுகிய அளவும் கற்பம் என்னும் பெரிய அளவும் கொண்டது. க்ஷனிகம் என்பது ஏழு செங்கழுநீரிதழை ஒரு குறட்டிலடுக்கிப் பலவானாயினான் ஒருவன் மிகவும் கூரியதோர் உளி வைத்துக் கூடமிட்டுப் புடைத்தால், ஆறாம் புரையற்று ஏழாம் புரையில் செல்லும் அளவாம். 'கற்பம்' ஆவது ஓசனை அகன்று உயர்ந்ததோர் வச்சிரமலை கர்ப்பிணி உடுத்த பட்டாடை தோய்க்கப்பட்டுக் கையறத் தேய்ந்தது ஆம்

197. புற்கலம் – உடம்பு. புறஉரு – மற்றைய வடிவங்கள்.

வேம்பின் முளை முளைத்து அது வேம்பாகவே விளங்குவது நித்தியம்; வேம்பு முளைக்கும்போது விதை அழிவது அநித்தியம். பயறு குழைந்து கும்மாயம் (கும்மாயம் என்பது பயற்றினால் ஆகிய பாயசம் போன்றது) ஆகும்போது பயறு அழிகிறது; மீண்டும் அது பய்று ஆகாது. (கும்மாயம் உண்டாகும்போது தோற்றமும், அப்போது பயறு அழிந்துபோவதால் அழிவும் நிகழ்கிறது. ஒன்று அழிந்து மற்றொன்றாகத் தோன்றும்).

(1) **தன்மாத்திகாயம்:** தன்மாத்திகாயம் எல்லாப் பொருள்களிலு மிருந்து, உயிர்ப் பொருள் அனைத்தையும் வினைப்படி இயக்கும். (உயிர்க்கட்குக் கட்டு நீங்கி வீடு பெறுவதற்குத் தன்மாத்திகாயம் ஏது; இயற்பொருள்களின் இயக்கத்திற்கும் இதுவே ஏது.)

(2) **அதன்மாத்திகாயம்:** அதன்மாத்திகாயம் அழியாத இயல்பினையுடையது. அஃது எல்லாப் பொருள்களையும் நிலைநிறுத்தலாகிய செயலை நிகழ்விக்கிறது. (பொருள்களின் இயக்கத்திற்கு தன்மாத்திகாயம் ஏது ஆதல்போல, அதன்மாத்திகாயம் அப் பொருள்கள் நிற்றற்குக் காரணம் ஆம்.)

(3) **காலம்:** காலம் என்பது 'கணிகம்' என்னும் குறுகிய நிகழ்வும், 'கற்பம்' எனும் நீண்ட கால நிகழ்ச்சியும் ஆகிய கால அளவைகளை உண்டாக்கும் தன்மையுடையது. (குறுநிகழ்ச்சி கணிகம்; நெடுநிகழ்ச்சி கற்பம் எனக் காலம் இருவகைப்படும்.)

(4) **ஆகாயம்:** ஆகாயம் எல்லாப் பொருள்களுக்கும் பொருந்துமாறு விரிந்து இடம் கொடுக்கும் திறனுடையது.

(5) **சீவன்:** சீவன் உடலுடன் இணைந்து பொருந்தி, சுவை முதலிய ஐவகைப் புலன் நுகர்வுகளை அனுபவிக்கும்.

வீடுபேறு: புற்கலம் என்பது பரமாணு எனப்படும் ஒற்றை அணு ஆகும். அதுவே பொருள்களின் புறவடிவமாகவும் அமையும், சிறப்புப் பொருந்திய நல்வினையும் தீவினையுமாகிய இரண்டையும் நிகழ்த்தும். நல்வினை தீவினை தரும் இன்ப, துன்ப வழியை அடைத்து, முன்வினைப் பயன்களை அனுபவித்து ஒழித்து, பிறவி அறுத்தலே வீடுபேறு ஆகும்.

நிகண்டவாதி மணிமேகலைக்கு இவ்வாறு கூறினான்.

இதுசாங் கியமதம் என்றுஎடுத்து உரைப்போன்
தனைஅறிவு அரிதாய்த் தான்முக் குணமாய்
மனநிகழ்வு இன்றி மாண்புஅமை பொதுவாய்
எல்லாப் பொருளும் தோன்றுதற்கு இடம்எனச்
சொல்லுதல் மூலப் பகுதிசித் தத்து
மான்என்று உரைத்த புத்தி வெளிப்பட்டு
அதன்கண்ஆ காயம் வெளிப்பட் டதன்கண்
வாயு வெளிப்பட்டு அதன்கண் அங்கி
யானது வெளிப்பட்டு அதன்கண் அப்பின்
தன்மை வெளிப்பட்டு அதின்மண் வெளிப்பட்டு
அவற்றின் கூட்டத் தின்மனம் வெளிப்பட்டு
ஆர்ப்புஉறு மனத்துஆங் கார விகாரமும்
ஆகா யத்தில் செவிஒலி விகாரமும்
வாயுவில் தொக்கும் ஊறுஎனும் விகாரமும்
அங்கியில் கண்ணும் ஒளியுமாம் விகாரமும்
தங்கிய அப்பில்வாய் சுவைஎனும் விகாரமும்
நிலக்கண் மூக்கு நாற்ற விகாரமும்
சொலப்பட்டு இவற்றின் தொக்கு விகாரமாய்
வாக்குப் பாணிபாத பாயுருஉபத் தம்என
ஆக்கிய இவைவெளிப் பட்டுஇங்கு அறைந்த
பூத விகாரத் தால்மலை மரம்முதல்
ஓதிய வெளிப்பட்டு உலகாய் நிகழ்ந்து
வந்த வழியே இவைசென்று அடங்கி
அந்தம்இல் பிரளய மாய்இறும் அளவும்
ஒன்றாய் எங்கும் பரந்துநித் தியம்ஆம்
அறிதற்கு எளிதாய் முக்குணம் அன்றிப்
பொறிஉணர் விக்கும் பொதுவும் அன்றி
எப்பொரு ளும்தோன் றுதற்குஇடம் அன்றி

209. அங்கி – நெருப்பு.
210. அப்பு – நீர்.
220. வாக்கு – வாய். பாணி – கை பாதம் – கால்

சாங்கிய வாதி (201 – 240)

நிகண்டவாதிக்குப் பின்னர் 'சாங்கிய மதம் இதுவே' என எடுத்துச் சொல்லும் அந்த மதவாதி வந்தான்.

''எல்லாப் பொருள்களும் தோன்றுவதற்கு இடமாயிருப்பது மூலப் பிரகிருதி. இஃது இத் தன்மையுடையது என்று அறிவதற்கரியது; முக்குண இயல்புடையது; மனத்திற்கு எட்டாதது; அனைத்திற்கும் பொதுவானது.

சித்தமாகிய மூலப் பகுதியிலியிருந்து 'மான்' என்று சொல்லப்படும் புத்தி தத்துவம் வெளிப்படும்; புத்தியினின்று ஆகாயம் தோன்றும்; ஆகாயத்தினின்று வாயுவும்; வாயுவிலிருந்து நெருப்பும்; நெருப்பிலிருந்து நீரும், நீரிலிருந்து நிலமும் எனும் பூதங்கள் தோன்றும். இவற்றின் கூட்டால் மனம் தோன்றும்.

ஆரவாரம் பொருந்திய தம் மனத்திலிருந்து ஆங்காரமாகிய விகாரம் தோன்றும். ஆகாயத்தினாலே செவிக்குப் புலனாகும் ஒலியாகிய விகாரமும், வளியிலிருந்து மெய்க்குத் தோன்றும் ஊறாகிய விகாரமும், நெருப்பினாலே கண்ணுக்குத் தோன்றும் ஒளியாகிய விகாரமும், நீரிலிருந்து வாய்க்குச் சுவை என்னும் விகாரமும், நிலத்தினிடத்தே மூக்கு வழியே நுகரப்படும் நாற்றமாகிய விகாரமும் என்று சொல்லப்படும் இவற்றில், மெய்யினது விகாரமாய் வாய், கை, கால், எருவாய், ஆண் பெண் உறுப்பு என்றுண்டாகிய ஐந்தும் வெளிப்படும்.

இங்கே ஆகாயம் முதல் நிலம் ஈறாகச் சொல்லப்பட்ட பூதங்களின் கலப்பால் மலையும் மரமும் முதலியவாகச் சொல்லப்பட்டன எல்லாம் வெளிப்பட்டு உலகமாய்த் திகழ்ந்து, பின்பு தாம் தோன்றிய முறையே சென்று ஒன்றனுள் ஒன்றாய் ஒடுங்கி, ஒழிவில்லாத பிரளயமாய் இறுதியில் அனைத்துமே அழியும்வரையும் ஒன்றாகி எவ்விடத்தும் பரந்து நித்தியப் பொருளாகவே விளங்கும்.

எளிதில் அறியப்படுவதாய், முக்குணங்களும் அல்லாததாய், மூலப் பகுதியோடு ஒருவகைப் பொதுத் தன்மையும் இன்றி, எவ்வகைப் பொருளும் தோன்றுதற்கு இடமில்லாததுமாய்,

ஆப்பொருள் எல்லாம் அறிந்திடற்கு உணர்வாய்
ஒன்றாய் எங்கும் பரந்துநித் தியமாய்
நின்றுஉள உணர்வாய் நிகழ்தரும் புருடன்
புலம்ஆர் பொருள்கள் இருபத் தைந்துஉள
நிலம்நீர் தீவளி ஆகா யம்மே
மெய்வாய் கண்மூக் குச்செவி தாமே
உறுசுவை ஒளிஊறு ஓசைநாற் றம்மே
வாக்குப் பாணி பாதபாயு ருபத்தம்
ஆக்கும் மனோபுத்தி ஆங்கார சித்தம்
உயிர்எனும் ஆன்மா ஒன்றொடும் ஆம்எனச்
செயிர்அறச் செப்பிய திறமும் கேட்டு,
வைசே டிகநின் வழக்குஉரை என்னப்
பொய்தீர் பொருளும் குணமும் கருமமும்
சாமா னியமும் விசேடமும் கூட்டமும்
ஆம்ஆறு கூறும் அதில்பொருள் என்பது
குணமும் தொழிலும் உடைத்தாய் எத்தொகைப்
பொருளுக்கும் ஏதுவாம் அப்பொருள் ஒன்பான்
ஞாலம்நீர் தீவளி ஆகா யம்திசை
காலம் ஆன்மா மனம்இவற் றுள்நிலம்
ஒலிஊறு நிறம்சுவை நாற்றமொடு ஐந்தும்
பயில்குணம் உடைத்து நின்ற நான்கும்
சுவைமுதல் ஒரோகுணம் அவைகுறைவு உடைய
ஓசை ஊறு நிறம்நாற் றம்சுவை
மாசுஇல் பெருமை சிறுமை வன்மை
மென்மை சீர்மை நொய்ம்மை வடிவம்
என்னும் நீர்மை பக்கம்முதல் அனேகம்
கண்ணிய பொருளின் குணங்கள் ஆகும்.

243. சாமானியம் – பொதுமை. விசேடம் – சிறப்பு.
247. ஞாலம் – நிலம். வளி – காற்று.
250. நின்ற நான்கு – நிலம் தவிர்த்த மற்ற நான்கு.

அப்பொருள்வகை எல்லாவற்றையும் அறிந்து கொள்வதற்கு உரியதான உணர்வாகி, ஏகமாய், எவ்விடத்தும் வியாபித்து நித்தியமாயும் நின்று உள்ளத்தே உணர்வு வடிவாக விளங்குவதே புருடத்துவம் ஆகும்.

அப் புருட தத்துவத்தால் அறியப்படும் பொருள்கள் இருபத்தைந்து உள்ளன. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற பூதங்கள் ஐந்து (பஞ்சபூதம்), மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற புலன்கள் ஐந்து (5 ஞான இந்திரியங்கள்); சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற உணர்வுகள் ஐந்து (5 தன்மாத்திரைகள்); வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபத்தம் என்பன ஐந்து (5 கன்மேந்திரியங்கள்); மனம், புத்தி, ஆங்காரம், சித்தம் என்பன (4 அந்தக்கரணங்கள்) ஆக இருபத்து நான்கு. இவற்றுடன் உயிர் என்று சொல்லப்படும் ஆன்மா ஒன்றும் கூட, ஆக இவை இருபத்தைந்தாம். இவ்வாறு சாங்கியவாதி குற்றமறச் சொல்லியவற்றையும் மணிமேகலை கேட்டாள்.

வைசேடிக வாதி (241 – 262)

அதன்பின் வைசேடிக வாதியைப் பார்த்து, ''வைசேடிக வாதியே! உன்னுடைய நூல் வழக்கினைக் கூறுக'' என்று கேட்டாள். பொய்மை தீர்ந்த பொருளும், குணமும், கருமமும், சாமானியமும், விசேடமும், கூட்டமும் என்று சொல்லப்பட்ட ஆறு கூறுபாட்டினை உடையன பொருள்கள். இவற்றுள் பொருள் என்பது குணமும் தொழிலும் உடையதாய்ப் பொருள்வகை எல்லாவற்றிற்குமே மூலக்காரணமாக விளங்குவதாம்.

அப் பொருள்கள் ஒன்பது வகைப்படும். அவை நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், திசை, காலம், மனம், ஆன்மா என்பன. இவற்றுள் நிலம் என்பது ஒலி, ஊறு, நிறம், சுவை, நாற்றம் என்ற ஐந்து குணங்களையுடையது. மற்றைய நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற நான்கும் அக் குணங்கள் ஐந்தனுள் முறையே ஒவ்வொரு குணம் குறைவுடையதாய் அமைந்திருக்கும்.

ஓசை, ஊறு, நிறம், நாற்றம், சுவை என்பனவும்; மாசற்ற பெருமை, சிறுமை, வன்மை, மென்மை, சீர்மை, நொய்மை, வடிவம் எனப்படும் பண்புகளும்; இடம், வலம் என்ற பக்கம் முதலாகிய பலவகைத் திசைகளும் மேலே சொல்லப்பட்ட பொருள்களின் குணங்களாம்.

பொருளும் குணமும் கருமம் இயற்றற்கு
உரிய உண்மை தரும்முதல் பொதுத்தான்
போதலும் நிற்றலும் பொதுக்குணம் ஆதலின்
சாதலும் நிகழ்தலும் அப்பொருள் தன்மை
ஒன்றுஅணு கூட்டம் குணமும் குணியும்என்று
ஒன்றிய வாதியும் உரைத்தனன். உடனே
பூத வாதியைப் புகல்நீ என்ன
தாதகிப் பூவும் கட்டியம் இட்டு
மற்றும் கூட்ட மதுக்களி பிறந்துஆங்கு
உற்றிடு பூதத்து உணர்வு தோன்றிடும்
அவ்வுணர்வு அவ்வப் பூதத்து அழிவுகளின்
வெவ்வேறு பிரியும் பறைஓ சையில்கெடும்
உயிரொடும் கூட்டிய உணர்வுடைப் பூதமும்
உயிர்இல் லாத உணர்வுஇல் பூதமும்
அவ்வப் பூத வழிஅவை பிறக்கும்
மெய்வகை இதுவே வேறுஉரை விகற்பமும்
உண்மைப் பொருளும் உலோகாயதன் உணர்வே
கண்கூடு அல்லது கருத்தளவு அழியும்
இம்மையும் இம்மைப் பயனும்இப் பிறப்பே
பொய்ம்மை மறுமைஉண் டாய்வினை துய்த்தல்
என்றலும், எல்லா மார்க்கமும் கேட்டு
நன்றுஅல ஆயினும் நான்மாறு உரைக்கிலேன்

264. தாதகிப்பூ – ஆத்திப் பூ. கட்டி – கருப்புக் கட்டி.
278. மாறு உரைக்கிலேன் – மாறாக ஏதும் சொல்லமாட்டேன்.

பொருளும் குணமும் ஆகிய இரண்டும் செயல் நிகழ்த்துதற்கு உரியன. பொதுவாவது பொருள்களின் உண்மைத் தன்மையினை உணர்த்துவதாகும். போவதும் நிற்பதும் எல்லாப் பொருள்களுக்கும் பொதுக்குணம். ஆதலின் இறத்தலும் இருத்தலும் அவ்வப் பொருளின் முன்மையில்லாத தன்மையாம்; இது சாமானியம்.

விசேடமாவது ஒன்றாகிய அணுவாகும். கூட்டமாவது குணமும் குணியும் ஒன்றிய ஒற்றுமை என்று வைசேடிகவாதி கூறி முடித்தான்.

பூதவாதி (262 – 277)

உடனே அங்குவந்த பூதவாதியைக் கண்டு மணிமேகலை, 'நீ உன் வாதத்தைச் சொல்லுக' என்றாள்.

ஆத்திப் பூவையும் கருப்புக் கட்டியையும் இட்டு, மற்றும் பல பொருள்களையும் சேர்க்கக் கள் உண்டாகிறது; கள்ளில் களிப்பு உண்டாகிறது. அது போல பொருந்துகின்ற பூதங்களின் கூட்டத்தால் உணர்வு பிறக்கும். அவ்வாறு தோன்றிய உணர்வு அப்பூதங்களின் கூட்டம் கலைந்து அழியும்போது வெவ்வேறாகப் பிரிந்து பறையிலே எழுந்த ஓசையானது சென்று சென்று தேய்ந்து இறுதியில் கெடுவதுபோலத் தேய்ந்து தேய்ந்து தத்தம் மூலப் பொருளோடு கலந்து ஒன்றிவிடும்.

உயிரோடு கூடியது உணர்வுடைய பூதம்; உடம்பான சடத்துடன் கூடுவது உணர்வில்லாத பூதம். எல்லாம் அந்தப் பூத வாயிலாகவே தோன்றும். இதுவே உண்மை நெறி. இதனின் வேறான பொருளும் தத்துவமும் உலோகாயதர் வழியாகும்.

கண்கூடாகக் காண்பதே காட்சி. கருதுவது அழியும். இம்மை வாழ்வும் இப்பிறப்பின் பயனும் இத்துடன் சரி; மறு பிறப்பு இல்லை; இம்மையிற் செய்யும் வினையினை மறுமையில் நுகர்தல் வேண்டும் என்று கூறுவது பொய்'' எனப் பூதவாதி கூறினான்.

ஐவகைச் சமயமும் அறிந்தனள் (277 – 289)

எல்லாச் சமயங்களின் கருத்துகளையும் கேட்டு, ''இவர்கள் கூறுவன நன்று அல்ல ஆயினும் நான் அவற்றுக்கு மாறாக எதும் சொல்லமாட்டேன்'' என மணிமேகலை கருதினாள். தான்

பிறந்தமுற் பிறப்பை எய்தப் பெறுதலின்
அறிந்தோர் உண்டோ என்றுநக் கிடுதலும்,
தெய்வ மயக்கினும் கனாஉறு திறத்தினும்
மையல் உறுவோர் மனம்வே றாம்வகை
ஐயம் அன்றி இல்லையென் றலும்நின்
தந்தைதா யரைஅனு மானத் தால்அலது
இந்த ஞாலத்து எவ்வகை அறிவாய்
மெய்உணர்வு இன்றிமெய்ப் பொருள்உணர்வு அரிய
ஐயம் அல்லதுஇது சொல்லப் பெறாய்என
உள்வரிக் கோலமோடு உன்னிய பொருள்உரைத்து
ஐவகைச் சமயமும் அறிந்தனள் ஆங்குஎன்.

---

280. நக்கிடுதலும் – நகைத்தலும்.
288. உள்வரிக் கோலம் – மறைந்த வேடம்.

இக்காதையின் 78-82 அடிகளில் அளவை வாதியைப் பற்றி விளக்கும் போது மணிமேகலை ஆசிரியர் ஆறு சமயங்களையும் அவற்றின் ஆசிரியர்களையும் கூறுகிறார்.

சமயம்	ஆசிரியர்
உலோகாயதம்	பிருகற்பதி
பௌத்தம்	புத்தன்
சாங்கியம்	கபிலன்
நையாயிகம்	அக்கபாதன்
வைசேடிகம்	கணாதன்
மீமாஞ்சகம்	சைமினி

அளவை வாதி, சைவ வாதி, பிரம வாதி, வைணவ வாதி, வேத வாதி, ஆசீவக வாதி, நிகண்ட வாதி, சாங்கிய வாதி, வைசேடிக வாதி, பூதவாதி ஆகியவர்களிடம் மணிமேகலை கருத்தறிந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

இவற்றுள், பூதவாதம் **உலோகாதயத்தும்**; அளவை வாதமும், சைவ வாதமும், வைணவ வாதமும் **நையாயிகத்தும்**; பிரமவாதமும் வேத வாதமும் **மீமாஞ்சகத்தும்** அடங்கும்.

காதையின் இறுதியில், 'ஐவகைச் சமயமும் அறிந்தனள்' என உள்ளது. இங்கு கூறப்பெறும் **ஐவகைச் சமயமாவன:**

முற்பிறப்பினை அறிந்திருந்தனளாதலின், ''முற்பிறப்பை அறிந்தவர் எவருமில்லை'' எனப் பூதவாதி கூறியதை நினைத்து நகைத்தாள்; அவனுக்குத் தன் பிறப்பு வரலாற்றையும் கூறினாள். அதைக் கேட்ட பூதவாதி, ''தெய்வத்தின் மருளாலும் கனவு மயக்கத்தினாலும் மயங்கி மறுபிறப்பினை நம்பினை. அது பொய்'' என்றான். மணிமேகலை அவனிடம், ''உன்னுடைய தாயும் தந்தையுமாகிய பெற்றோரை அனுமானத்தினாலன்றி வேறு எவ்வகையில் அறிவாய்? பொருள்கள் பலவும் அனுமானம் முதலியன அளவைகளால் அன்றி வேறு வகையில் அறிதற்கு முடியாதனவாம். இதனை நீ அறிந்திருந்தால் என் சொல்லில் ஐயப்பட்டிருக்க மாட்டாய்'' என்றாள்.

தான் கொண்ட ஆண் வேடத்துடனேயே ஐவகைச் சமயங்களின் பொருள்களையும் அங்கே மணிமேகலை அறிந்தாள்.

---

1. வைதிக வாதம் : இதில் அளவை வாதம், சைவ வாதம், பிரமவாதம், வைணவ வாதம், வேத வாதம் என்பன அடங்கும்.
2. ஆசீவகம் : நிகண்ட வாதம் இதனுடன் ஒன்றானது.
3. சாங்கியம்
4. சைசேடிகம்
5. பூதவாதம்

இவற்றோடு பௌத்தத்தைச் சேர்த்து மணிமேகலை ஆசிரியர் காலத்தில் தமிழ்நாட்டில் ஆறுவகைச் சமயங்கள் இருந்தன என்பதை அறிகிறோம். நாவரசர், ஞானசம்பந்தர் முதலாயினார் காலத்தே விளங்கியிருந்த பாசபதம், காபாலம் முதலாயினார் மணிமேகலையாசிரியர் காலத்தே இருந்திலர். இக்காலத்தே வேதவாதத்தின் வேறாகச் சைவமும் வைணவமும் பிரித்துக் கூறப்படுகின்றன. அளவை வாதமும் பிரமவாதமும் இப்போது மறைந்தொழிந்தன. நிகண்ட வாதம் சைன சமயம் என்ற பெயரால் நிலவுகிறது.

(ஔவை சு.துரைசாமிப்பிள்ளை அவர்கள் உரையிலிருந்து)

28. கச்சி மாநகர் புக்க காதை

ஆங்குத் தாய்ரோடு அறவணர்த் தேர்ந்து
வாங்குவில் தானை வானவன் வஞ்சியின்
வேற்று மன்னரும் உழிஞைவெம் படையும்
போல்புறம் சுற்றிய புறக்குடி கடந்து,
சுருங்கைத் தூம்பின் மனைவளர் தோகையர்
கருங்குழல் கழீஇய கலவை நீரும்
எந்திர வாவியில் இளைஞரும் மகளிரும்
தந்தமில் ஆடிய சாந்துகழி நீரும்
புவிகா வலன்தன் புண்ணிய நல்நாள்
சிவிறியும் கொம்பும் சிதறுவிரை நீரும்
மேலை மாதவர் பாதம் விளக்கும்
சீல உபாசகர் செங்கைநறு நீரும்
அறம்செய் மாக்கள் அகில்முதல் புகைத்து
நிறைந்த பந்தல் தசும்புவார் நீரும்
உறுப்புமுரண் உறாமல் சந்தஉத் தியினால்
செறித்துஅரைப் போர்தம் செழுமனை நீரும்
என்றுஇந் நீரே எங்கும் பாய்தலில்
கன்றிய கராமும் இடங்கரும் மீன்களும்
ஒன்றிய புலவுஒழி உடம்பின ஆகித்
தாமரை குவளை கழுநீர் ஆம்பல்
பூமிசைப் பரந்து பொறிவண்டு ஆர்ப்ப
இந்திர தனுஎன இலங்குஅகழ் உடுத்து,

---

2. வாங்கு வில் – வளைந்த வில்.
3. உழிஞை – புறமதிலை வளைப்போரும் அதனைக் காப்போரும் அணியும் அடையாளப்பூ
5. தூம்பு – சலதாரை.
8. சாந்து – சந்தனம்.
10. விரைநீர் – மணநீர்.
14. தசும்பு – நீர்க்குடம்.
18. கராம், இடங்கர் – முதலை இனங்கள்.
22. இந்திர தனு – வானவில்.

28. கச்சி மாநகர் புக்க காதை

வஞ்சிப் புறநகர் (1 – 4)

மணிமேகலை வஞ்சி மாநகரில் இருந்த மாதவியையும் சுதமதியையும் அறவண அடிகளையும் காண நினைந்தாள். வளைந்த வில்லேந்திய வீரப்படை வேந்தனுடைய வஞ்சிமாநகர் பல மதில்களைக் கொண்டது. மதில்களின் உட்புறத்திலும், வெளியே புறஞ்சேரியிலும் நால்வகைப் படையினரும் திரண்டிருந்தனர். இக் காட்சி மதிலை வளைக்கும் வேற்று மன்னருடையவும், மதிலை உள்ளிருந்து காப்பவருடையவுமான படைகள் குழுமியிருப்பது போலத் தோன்றியது. மணிமேகலை புறநகரைக் கடந்து அகழியை வந்தடைந்தாள்.

அழகு கொண்ட அகழி (5 – 22)

இல்லங்களில் மகளிர் தம் கரிய கூந்தலில் நறுமணக் கலவையிட்டு நீராடுகின்றனர். அக் கலவைமணத்தோடு மறைவாக அமைக்கப்பட்டுள்ள தூம்புகளின் வழியே வந்து சேரும் மண நீர்; எந்திரங்கள் அமைந்த பொய்கைகளில் மைந்தரும் மகளிரும் நீராடும் போது அவர்கள் பூசியிருந்த சந்தனக் குழம்பு கழுவுற்றுக் கலந்து ஓடிவருகின்ற நீர்; மன்னன் பிறந்த நன்னாளில் சிவிறி, கொம்பு ஆகிய கருவிகள் கொண்டு ஒருவர் மேல் ஒருவர் பீச்சியடிக்கும் நறுமணநீர்; பெருமை பொருந்திய முனிவர்களுடைய திருவடிகளை ஐவகைச் சீலமுடைய உபாசகர்கள் தம் சிவந்த கைகளால் கழுவும் நறுமண நீர். அறம் செய்யும் மக்கள் அகில் முதலானவற்றைப் புகைத்து அமைத்த தண்ணீர்ப் பந்தல்களில் உள்ள பானைகளில் ஊற்றும்போது ஒழுகும் நீர்; மணப் பொருள்களை முறைப்படி கலந்து அரைக்கும் வளம் மிக்க வீடுகளிலிருந்து வந்து சேரும் நீர்; ஆகிய இத்தகைய நீரே அகழியின் எப்புறத்திலும் வந்து பாய்கின்றன. ஆதலின் சினம் கொண்ட கராம்கள், முதலைகள், மீன்கள் ஆகியவற்றின் உடல்கள் ஊன் நாற்றமில்லாது நறு மணம் கொள்கின்றன. பூக்களில் பொறி வண்டுகள் தேனுண்டு ஒலிக்கின்றன. தாமரை, குவளை, செங்கழுநீர், ஆம்பல் ஆகிய மலர்கள் அகழியின் நீரின் மேலே எங்கும் பூத்து, வானவில்லைப்போலப் பல வண்ணம் காட்டுகின்றன. இத்தகைய அகழியால் சூழப்பட்டிருந்தது வஞ்சி மாநகர்.

வந்துஎறி பொறிகள் வகைமாண்பு உடைய
கடிமதில் ஓங்கிய இடைநிலை வரைப்பில்
பசுமிளை பரந்து பல்தொழில் நிறைந்த
வெள்ளிக் குன்றம் உள்கிழிந் தன்ன
நெடுநிலை தோறும் நிலாச்சுதை மலரும்
கொடிநிலை வாயில் குறுகினள் புக்கு,
கடைகாப்பு அமைந்த காவ லாளர்
மிடைகொண்டு இயங்கும் வியன்மலி மறுகும்,
பல்மீன் விலைஞர் வெள்உப்புப் பகருநர்
கள்நொடை யாட்டியர் காழியர் கூவியர்
மைந்நிண விலைஞர் பாசவர் வாசவர்
என்னுநர் மறுகும் இருங்கோ வேட்களும்
செம்பு செய்ஞ்ஞரும் கஞ்ச காரரும்
பைம்பொன் செய்ஞ்ஞரும் பொன்செய் கொல்லரும்
மரம்கொல் தச்சரும் மண்ணீட் டாளரும்
வரம்தர எழுதிய ஓவிய மாக்களும்
தோலின் துன்னரும் துன்ன வினைஞரும்
மாலைக் காரரும் காலக் கணிதரும்
நலம்தரு பண்ணும் திறனும் வாய்ப்ப
நிலம்கலம் கண்டம் நிகழக் காட்டும்
பாணர் என்றுஇவர் பல்வகை மறுகும்
விலங்குஅரம் பொரூஉம் வெள்வளை போழ்நரோடு
இலங்குமணி வினைஞர் இரீஇய மறுகும்
வேத்தியல் பொதுவியல் என்றுஇவ் விரண்டின்
கூத்தியல்பு அறிந்த கூத்தியர் மறுகும்
பால்வே றாக எண்வகைப் பட்ட
கூலம் குவைஇய கூல மறுகும்
மாகதர் சூதர்வே தாளிகர் மறுகும்

---

25. மிளை – காவற்காடு.
30. மிடைகொண்டு – நெருக்கமாக
32. நொடை – விலை
காழியர் – பிட்டு வாணிகர். கூவியர் – அப்ப வாணிகர்
34. கோவேட்கள் – குயவர்.
39. துன்ன வினைஞர் – தையற்காரர்.
44. போழ்நர் – அறுப்போர்.

வெள்ளிமலை பிளந்திருப்பதொத்த மதில் வாயில் (23 – 28)

மணிமேகலை அகழியைக் கடந்து மதில் வாயிலை அடைகிறாள். மதில் மிகுந்த பாதுகாப்புடையது; பகைவர் படையெடுப்பின்போது அவர்கள் மீது படைக்கலங்களை எறியும் பொறிகள் அமைந்த சிறப்பினையுடையது. மதிலின் இடைநிலங்களில் பசுங்காடு பரந்துள்ளது. மதிலின் உயரமான நிலைகள் தோறும் நிலவொளியை ஒத்த வெண்சுதை பூசப்பட்டிருந்தது. தொழிற்பாடமைந்த வெள்ளிமலை நடுவே பிளந்திருப்பதுபோல மதில் வாயில்கள் தோற்றமளித்தன. மணிமேகலை கொடிகள் நெருங்கிப் பறக்கும் மதில் வாயில் வழியே நகரினுள் புகுந்தாள்.

வஞ்சிமாநகரின் வகைவகையான தெருக்கள் (29 – 61)

வாயில் காவலர் நெருங்கி வாழும் அகன்ற பெரிய வீதியும்; பலவகையான மீன்களை விற்கும் பரதவர், வெள்ளிய உப்பு விற்போர், கள் விற்கும் வலைச்சியர், பிட்டு வாணிகர், அப்ப வாணிகர், இறைச்சி விற்போர், வெற்றிலை விற்போர், மணப்பொருள் விற்போர் ஆகியோர் வாழும் தெருவும்; குயவர், செப்புப் பாத்திரம் செய்வோர், வெண்கலக் கன்னார், பொன்செய் கொல்லர், உருக்குத் தட்டார், மரமறுக்கும் தச்சர், மண்பாவை செய்வோர், வரந்தரத்தக்க கடவுள் உருவம் எழுதும் ஓவியர், தோல் பதனிடும் பாணர், தையல் வேலை செய்வோர், மாலை கட்டுவோர், காலத்தைக் கணக்கிட்டுச் சொல்லும் கணியர், தானம் குரலிசை யாழ் இவற்றால் இனிய பண் மிழற்றும் பாணர் எனும் இத்தகையவர் பலரும் வாழும் வீதியும்;

அரத்தினைக் கொண்டு வெள்ளிய சங்குகளை அறுப்போருடன், ஒளிவிளங்கும் முத்துகளைக் கோப்பவரும் இருக்கின்ற வீதியும்;

வேத்தியல் (அரசர்க்கு ஆடும் கூத்து), பொதுவியல் (பொது மக்கட்கு ஆடும் கூத்து) என்னும் இருவகைக் கூத்துகளின் இயல்பறிந்த ஆடல் மகளிர் வாழும் தெரு;

எண்வகைத் தானியங்களையும் தனித் தனியே தெரியும் படியாகக் குவித்து வைத்திருக்கும் கூலவாணிகர் தெரு;

அரசனை நின்று பாராட்டும் மாகதர், இருந்து பாராட்டும் சூதர், நாழிகை அறிவிக்கும் வேதாளிகர் ஆகியோர் வாழும் தெரு;

போகம் புரக்கும் பொதுவர்பொலி மறுகும்
கண்நுழை கல்லா நுண்நூல் கைவினை
வண்ண அறுவையர் வளம்திகழ் மறுகும்
பொன்உரை காண்போர் நல்மனை மறுகும்
பல்மணி பகர்வோர் மன்னிய மறுகும்
மறையோர் அருந்தொழில் குறையா மறுகும்
அரைசியன் மறுகும் அமைச்சியன் மறுகும்
ஏனைப்பெருந் தொழில்செய் ஏனோர் மறுகும்
மன்றமும் பொதியிலும் சந்தியும் சதுக்கமும்
புதுக்கோள் யானையும் பொன்தார்ப் பரவியும்
கதிக்குஉற வடிப்போர் கவின்பெறு வீதியும்
சேண்ஓங்கு அருவி தாழ்ந்தசெய் குன்றமும்
வேணவா மிகுக்கும் விரைமரக் காவும்
விண்ணவர் தங்கள் விசும்புஇடம் மறந்து
நண்ணுதற்கு ஒத்த நல்நீர் இடங்களும்
சாலையும் கூடமும் தமனியப் பொதியிலும்
கோலம் குயின்ற கொள்கை இடங்களும்
கண்டுமகிழ்வு உற்றுக் கொண்ட வேடமோடு
அந்தர சாரிகள் அமர்ந்துஇனிது உறையும்
இந்திர விகாரம் எனஎழில் பெற்று
நவைஅறு நாதன் நல்அறம் பகர்வோர்
உறையும் பள்ளிபுக்கு இறைவளை நல்லாள்

---

51. பொதுவர் – பொதுமகளிர்.
58. ஏனோர் – சேனாதிபதிகள் முதலியோர்.
59. சந்தி – மூச்சந்தி. சதுக்கம் – நாற்சந்தி.
61. கதிக்கு உற – நடையில் மேம்பாடுற.
வடிப்போர் – பயிற்றுவிப்போர்.
67. கோலம் குயின்ற – சித்திரம் எழுதப்பெற்ற

இன்பத்தினை விற்கும் பொது மகளிர் நிறைந்த வீதி;

கண்ணில் காணுதற்கு அரிய நுண்ணிய நூல்களால் பல நிற ஆடைகளை நெய்து வளம் பெறும் சேனியர் தெரு;

பொன்னுரைத்து மாற்றுக் காணும் வண்ணக்கர் வாழும் நல்ல மாடங்களையுடைய வீதி;

மாணிக்கம் முதலிய பலவகை மணிகளை விற்கும் வாணிகர் நிறைந்திருக்கும் தெரு;

மறையோர்க்குரிய தொழிலில் குறையாது விளங்கும் அந்தணர் தெரு; அரசப் பெருந் தெரு; அமைச்சர் வீதி, சேனைத் தலைவர் வீதி; மன்றங்கள், அம்பலங்கள்; சந்திகள், சதுக்கங்கள்,

புதிதாகப் பிடித்துவரப்பட்ட யானைகளையும், பொன்னாலான கிண்கிணி மாலைகளையுடைய குதிரைகளையும் நடை பயிற்றும் யானைப் பாகரும், குதிரை வாதுவரும் வாழும் அழகுமிக்க வீதி;

ஆகிய தெருக்கள் பலவற்றையும் கண்டவாறே மணிமேகலை சென்றாள்.

மகிழ்வுக் காட்சிகள் (62 – 68)

உயரே இருந்து அருவிகள் விழுமாறு அமைக்கப்பட்டுள்ள செய்குன்றுகள், ஆர்வத்தை மேன்மேலும் தூண்டும் நறுமணச் சோலைகள், தேவர்கள் தங்கள் வானுலகத்தையும் மறந்து வந்து தங்குதற்குரிய நன்னீர்ப் பொய்கைகள், அறச்சாலைகள், கூடங்கள், பொன்னம்பலங்கள், ஓவியங்களால் அழகு பெற்றுள்ள தவச்சாலைகள் ஆகியவற்றைக் கண்டு மணிமேகலை மகிழ்ச்சி அடைந்தாள்.

மணிமேகலை மசாத்துவானைக் கண்டாள் (68 – 74)

தான் கொண்டிருந்த தவமுனிவர் உருவுடனேயே வான் வழியே செல்லும் அந்தரசாரிகள் விருப்பமுடன் தங்குகின்ற இந்திர விகாரத்தைப் போன்ற அழகு கொண்டதும், புத்தன் அருளறத்தைக் கூறுவோராகிய துறவியர் வாழ்வதுமான பௌத்தப் பள்ளியினுள்ளே சென்றாள் வளையல்களணிந்த மணிமேகலை.

கோவலன் தாதை மாதவம் புரிந்தோன்
பாதம் பணிந்துதன் பாத்திர தானமும்
தானப் பயத்தால் சாவக மன்னவன்
ஊனம்ஒன்று இன்றி உலகுஆள் செல்வமும்
செல்வன் கொணர்ந்துஅத் தீவகப் பீடிகை
ஒல்காது காட்டப் பிறப்பினை உணர்ந்ததும்
உணர்ந்தோன் முன்னர் உயர்தெய்வம் தோன்றி
மனம்கவல் கெடுத்ததும் மாநகர் கடல்கொள
அறவண ரடிகளும் தாயரும் ஆங்குவிட்டு
இறவாது இப்பதிப் புகுந்தது கேட்டதும்
சாவக மன்னன் தன்நாடு எய்தத்
தீவகம் விட்டுஇத் திருநகர் புகுந்ததும்
புக்கபின் அந்தப் பொருள்உரு வுடனே
தக்க சமயிகள் தம்திறம் கேட்டதும்
அவ்வவர் சமயத்து அறிபொருள் எல்லாம்
செவ்விது அன்மையிற் சிந்தைவை யாததும்
நாதன் நல்அறம் கேட்டலை விரும்பி
மாதவன் தேர்ந்து வந்த வண்ணமும்
சொல்லினள் ஆதலின், தூயோய் நின்னைஎன்
நல்வினைப் பயன்கொல் நான்கண் டதுஎனத்
தையல் கேள்நின் தாதையும் தாயும்
செய்தீ வினையில் செழுநகர் கேடுஉறத்
துன்புஉற விளிந்தமை கேட்டுச் சுகதன்
அன்புகொள் அறத்திற்கு அருகனேன் ஆதலின்
மனைத்திற வாழ்க்கையை மாயம்என்று உணர்ந்து
தினைத்தனை ஆயினும் செல்வமும் யாக்கையும்
நிலையா என்றே நிலைபெற உணர்ந்தே

---

73. தாதை – தந்தை
78. ஒல்காது – தளராது
80. கவல் – கவலை
95. விளிந்தமை – இறந்தமை. சுகதன் – புத்தன்.

கோவலனன் தந்தையும் துறவு பூண்டு பெருந்தவம் செய்து வந்தோனுமாகிய மாசாத்துவானிடம் சென்று அவன் அடிகளை வணங்கினாள்.

தன் வரலாறு கூறினாள் (74 – 91)

தன்னுடைய அமுதசுரபியினால் செய்யப்பெறும் சோற்று அறமும், அவ்வாறு சோறளித்த புண்ணியப் பயனால் ஆபுத்திரன் சாவக நாட்டு மன்னன் புண்ணியராசனாகி குறையொன்றுமின்றி அரசாளும் பேறு பெற்றதும், அவ் வரசனை அழைத்துப்போய் மணிபல்லவத்திலுள்ள புத்த பீடிகையினைக் காட்ட அவன் தன் முற்பிறப்பினை உணர்ந்ததும், அவ்வாறு அறிந்தவன்முன்பு தீவதிலகை என்னும் உயர்ந்த தெய்வம் தோன்றி அவனது உள்ளக் கவலையைப் போக்கியதும், பெரிய நகரமான காவிரிப்பூம்பட்டினத்தைக் கடல் கொண்டதால் அறவண அடிகளும் மாதவியும் சுதமதியும் இறவாமல் அந்நகரை விட்டு இவ் வஞ்சி மாநகருக்கு வந்துள்ளதைத் தான் கேள்வியுற்றதும், சாவக மன்னன் தன் நாடு நோக்கிப் புறப்படத் தான் மணிபல்லவத் தீவினை விட்டு இந்த அழகிய வஞ்சி நகருக்கு வந்து சேர்ந்ததும், வஞ்சி நகருக்குள் புகுந்த பின்னர் முன்பு கொண்ட முனிவன் வடிவுடனேயே பலவகைச் சமயவாதிகளின் சமயக் கருத்துகளைக் கேட்டதும், அவரவர் சமயத்தில் அறிந்த பொருளெல்லாம் செவ்வையானவையாக இல்லாமையால் அவற்றைத் தான் மனத்துள் கொள்ளாமையும், புத்தன் அருளறம் கேட்க அறவண அடிகளைத் தான் தேடி வந்ததும் ஆன வரலாறனைத்தையும் மணிமேகலை தன் பாட்டனிடம் கூறினாள்.

மாசாத்துவான் மணிமேகலையிடம் கூறினான்

துறவு பூண்டேன் (91 – 100)

''தூயவளே! உன்னை நான் கண்டது என் நல்வினைப் பயனே'' என்று சொன்ன மாசாத்துவான் மேலும் கூறினான். ''நங்கையே! கேள்! உன் தந்தையும் தாயும் செய்த தீவினையின் பயனாக மதுரை நகரம் அழிந்ததும், அவர்கள் இருவரும் துன்புற்று இறந்ததும் கேட்டுப் புத்த தேவன் அருளறத்திற்கு அருகதையுடையவனாயினேன். இல்லற வாழ்க்கை மாயமுடையது என்பதை உணர்ந்தேன். செல்வமும் உடலும் தினைத்துணையும் நிலையில்லாதன என்பதையும் தெளிவாக அறிந்தேன்.

மலையா அறத்தின் மாதவம் புரிந்தேன்.
புரிந்த யான்இப் பூங்கொடிப் பெயர்ப்படூஉம்
திருந்திய நல்நகர்ச் சேர்ந்தது கேளாய்:
குடக்கோச் சேரலன் குட்டுவர் பெருந்தகை
விடர்ச்சிலை பொறித்த வேந்தன் முன்நாள்
துப்புஅடு செவ்வாய்த் துடிஇடை யாரொடும்
இப்பொழில் புகுந்துஆங்கு இருந்த எல்லையுள்
இலங்கா தீவத்துச் சமன்ஒளி என்னும்
சிலம்பினை எய்தி வலம்கொண்டு மீளும்
தரும சாரணர் தங்கிய குணத்தோர்
கருமுகில் படலத்துக் ககனத்து இயங்குவோர்
அரைசற்கு ஏது அவ்வழி நிகழ்தலின்
புரையோர் தாமும்இப் பூம்பொழில் இழிந்து
கல்தலத்து இருந்துழிக் காவலன் விரும்பி
முன்தவம் உடைமையின் முனிகளை ஏத்திப்
பங்கயச் சேவடி விளக்கிப் பான்மையின்
அங்குஅவர்க்கு அறுசுவை நால்வகை அமிழ்தம்
பாத்திரத்து அளித்துப் பலபல சிறப்பொடு
வேத்தவை யாரொடும் ஏத்தினன் இறைஞ்சலில்
பிறப்பில் துன்பமும் பிறவா இன்பமும்
அறத்தகை முதல்வன் அருளிய வாய்மை
இன்ப ஆர்அமுது இறைவன் செவிமுதல்
துன்பம் நீங்கச் சொரியும் அந்நாள்.

---

101 பூங்கொடி – வஞ்சி. பூங்கொடியின் பெயருடைய நகரம் என்பது வஞ்சி நகரம்.
104 விடர் – மலை உச்சியிலுள்ள சரிவு; சிலை – வில்.
105 துப்பு – பவளம்.
108 சிலம்பு – மலை.
113 கல்தலம் – சிலாதலம்.
116 நால்வகை அமிழ்தம் – நால்வகை உணவு; அவையாவன உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன.

ஆதலின் மாறுபடாத அறத்தினையுடைய பெருந்தவம் புரியலானேன்.

அங்ஙனம் தவம் மேற்கொண்ட நான் அழகிய கொடியின் பெயரைக் கொண்டுள்ள இவ்வழகுமிகு நகரத்திற்கு வந்த காரணத்தைக் கேள் !

குடக்கோச் சேரல் சிறந்த மன்னன் (101 - 106)

குடக்கோச் சேரலாதன் என்பான் குட்டுவர் தலைவன். இமயத்திலே தன் வில் இலச்சினையைப் பொறித்தவன். முன்பொரு காலத்தே அவன் பவளம் போலச் சிறந்த வாயும், துடி போலும் இடையும் கொண்ட தன் உரிமை மகளிருடன் இச் சோலையினுள் நுழைந்து இன்பம் நுகர்ந்திருந்தான். அப்பொழுது –

தருமசாரணர்கள் அருளுரை பெற்றான் (107 – 122)

சில தரும சாரணர்கள் இலங்கைத் தீவிலுள்ள 'சமனொளி' என்னும் மலையினை அடைந்து வலங்கொண்டு திரும்ப வந்து கொண்டிருந்தனர். அவர்கள் நற்குணம் நிரம்பியவர்; கருமுகில் படர்ந்துள்ள வான் வழியே செல்பவர்கள். குடக்கோச் சேரலுக்கு அப்பொழுது நல்வினைப் பயன் விளையும் காலம் ஆதலாலே அவர்கள் இவ் வழகிய சோலையிலே வந்து இறங்கினர். இங்குள்ள சிலாதலத்தில் அமர்ந்தனர். அப்பொழுது –

முற்பிறப்பிற் செய்த நற்றவம் உடையோனாதலின் அரசன் விருப்பத்துடன் அம் முனிவர்களைப் போற்றினான். அவர்களுடைய தாமரை மலர்போன்ற திருவடிகளை நீரினாலே கழுவினான். அவர்களுக்கு ஏற்ற வகையிலே அறுசுவையுடைய நால்வகைப் பட்ட உணவுகளைப் பாத்திரத்தில் கொணர்ந்தளித்தான். அரசவை உறுப்பினரொடும் கூடிப் பற்பல சிறப்புகளைச் செய்து துதித்து வணங்கினான். சாரணர் பிறப்பினால் வரும் துன்பமும், பிறவாமை யினால் பெறும் இன்பமும், அற முதல்வனான புத்தன் அருளிச் செய்த நால்வகை வாய்மையும் ஆகிய இன்பம் பயக்கும் அமிழ்தம் போன்ற அறவுரைகளை அவ் வரசனுடைய பிறவித் துயர் நீங்குமாறு அவன் செவிகுளிரச் சொரிந்தனர். அந் நாளிலே –

நின்பெருந் தாதைக்கு ஒன்பது வழிமுறை
முன்னோன் கோவலன் மன்னவன் தனக்கு
நீங்காக் காதல் பாங்கன் ஆதலின்
தாங்கா நல்அறம் தானும் கேட்டு
முன்னோர் முறைமையின் படைத்ததை அன்றித்
தன்னான் இயன்ற தனம்பல கோடி
எழுநாள் எல்லையுள் இரவலர்க்கு ஈத்துத்
தொழுதவம் புரிந்தோன் சுகதற்கு இயற்றிய
வான்ஓங்கு சிமையத்து வால்ஒளிச் சயித்தம்
ஈனோர்க்கு எல்லாம் இடர்கெட இயன்றது
கண்டு தொழுதுஏத்தும் காதலின் வந்துஇத்
தண்டாக் காட்சித் தவத்தோர் அருளிக்
காவிரிப் பட்டினம் கடல்கொளும் என்றஅத்
தூஉரை கேட்டுத் துணிந்துஇவண் இருந்தது
இன்னும் கேளாய் நல்நெறி மாதே!
தீவினை உருப்பச் சென்றநின் தாதையும்
தேவரின் தோன்றிமுன் செய்தவப் பயத்தால்
ஆங்குஅத் தீவினை இன்னும் துய்த்துப்
பூங்கொடி முன்னவன் போதியில் நல்அறம்
தாங்கிய தவத்தால் தான்தவம் தாங்கிக்
காதலி தன்னொடு கபிலையம் பதியில்
நாதன் நல்அறம் கேட்டுவீடு எய்தும்என்று
அற்புதக் கிளவி அறிந்தோர் கூறச்

125. பாங்கன் – தோழன்.
128. தனம் – செல்வம்.
131. வால் ஒளிச் சயித்தம் – வெள்ளிய ஒளியையுடைய ஆலயம்.
132. ஈனோர்க்கு – இவ்வுலகதோர்க்கு.
134. தண்டாக் காட்சி – நீங்காத அறிவு.
145. கிளவி – சொல்.

முன்னோன் ஒரு கோவலன் (123 – 130)

உன்னுடைய தந்தையாகிய கோவலனுக்கு ஒன்பது தலை முறைக்கு முன்னோனாகிய கோவலன் என்பான், குடக் கோச் சேரலாதனை எந் நேரமும் விட்டுப் பிரியாத அன்புத் தோழனா யிருந்தான். ஆதலால் அவனும் தரும சாரணர் உரைத்த அளவிடற் கரிதான நல்லறத்தை அரசனோடு இருந்து கேட்டனன்; கேட்டவன், தன் முன்னோர்கள் முறைமையோடு ஈட்டிய செல்வத்தோடன்றித் தான் ஈட்டிய பல கோடி அளவான செல்வத்தையும் ஏழு நாள்களுக்குள் இரவலர்கட்குக் கொடுத்து விட்டான். அதன் பின் யாவரும் தொழுதற்குரியதான தவம் செய்து வந்தனன்.

புத்தர் கோயில் கட்டினான் (130 – 136)

அவன் புத்த தேவனுக்கு வானளாவிய உயர்ந்த உச்சியினை யுடைய வெள்ளிய ஒளியுடைய கோயில் (சைத்தியம்) ஒன்றை அமைத்தான். அஃது இவ்வுலகத்தவர் துன்பமெலாம் நீக்குமாறு விளங்கி வருகிறது. இக் கோயிலைக் கண்டு வணங்கித் துதிக்கும் விருப்பத்தினாலேயே நான் இங்கு வந்தேன். இங்குள்ள நல்லறிவினையுடைய பெருந்தவ முனிவர்கள், 'காவிரிப் பூம்பட்டினம் கடலால் கொள்ளப்படும்' என்பதை முன்னறிவித்தனர். நங்கையே! அவ்வுரைகளைக் கேட்ட நான் காவிரிப் பூம்பட்டினத்திற்குச் செல்லாமல் இங்கேயே தங்கி விட்டேன்.

கோவலனின் எதிர்காலம் (137 – 150)

தவநெறியில் ஒழுகும் மணிமேகலையே ! நான் இன்னும் சொல்லப்போவதையும் கேள்! தீவினை வந்து உருத்தலினாலே கொலையுண்ட உன் தந்தை, முன் செய்த நல்வினைப் பயனாலே தெய்வ உலக வாழ்வை அடைந்துளான். அந் நல்வினைப் பயன் கழிந்தபின் மீண்டும் பிறந்து தீவினையின் பயன்களை யெல்லாம் அனுபவிப்பான். இளங்கொடியே! புத்தர் போதி மரத்தின் கீழ் அறவுரைகளைக் கூறியிருக்கும் அந் நாளில் அவற்றைக் கேட்டுத் தானும் தவம் மேற்கொள்வான். தன் மனைவி கண்ணகியோடு கபிலை என்னும் அழகிய நகரில் நாதனின் நல்லறங்களைக் கேட்டு வீட்டுலகை அடைவான். எதிர்கால அற்புதச் செய்திகளை அறிந்து உரைப்போர் இவ்வாறு கூறினர்!

சொல்பயன் உணர்ந்தேன் தோகை யானும்
அந்நாள் ஆங்குஅவன் அறநெறி கேட்குவன்
நின்னது தன்மைஅந் நெடுநிலைக் கந்தில்துன்னிய
துவதிகன் உரையில் துணிந்தனை அன்றோ
தவநெறி அறவணன் சாற்றக் கேட்டனன்
ஆங்குஅவன் தானும்நின் அறத்திற்கு ஏதுப்
பூங்கொடி கச்சி மாநகர் ஆதலின்
மற்றுஅம் மாநகர் மாதவன் பெயர்நாள்
பொன்தொடி தாயரும் அப்பதிப் படர்ந்தனர்
அன்னதை அன்றியும் அணியிழை கேளாய்:
பொன்எயில் காஞ்சி நாடுகவின் அழிந்து
மன்உயிர் மடிய மழைவளம் கரத்தலின்
அந்நகர் மாதவர்க்கு ஐயம் இடுவோர்
இன்மையின் இந்நகர் எய்தினர் காணாய்
ஆர்உயிர் மருந்தே! அந்நாட்டு அகவயின்
கார்எனத் தோன்றிக் காத்தல்நின் கடன்என
அருந்தவன் அருள, ஆயிழை வணங்கித்
திருந்திய பாத்திரம் செங்கையின் ஏந்திக்
கொடிமதில் மூதூர்க் குடக்கண்நின்று ஓங்கி
வடதிசை மருங்கின் வானத்து இயங்கி,
தேவர் கோமான் காவல் மாநகர்
மண்மிசைக் கிடந்தென வளம்தலை மயங்கிய
பொன்நகர் வறிதாப் புல்என்று ஆயது
கண்டுஉளம் கசிந்த ஒண்தொடி நங்கை

156. கவின் – அழகு
161. கடன் – கடமை.
164. குடக்கண் நின்று – மேற்றிசையிலிருந்து.
168. புல் என்று ஆயது – பொலிவு இழந்திருந்ததை

அவர்களின் சொற்களின் பயனை யானும் உணர்ந்தேன் ! மயில் போன்றவளே ! யானும் அந் நகரிலேயே புத்தனின் அற நெறிகளைக் கேட்கும் நற்பேறடைவேன்!

உன்னுடைய பிற்கால நிகழ்ச்சிகளைக் கந்திற்பாவையின் சொற்களினால் தெரிந்துள்ளனை அல்லவோ? அறவண அடிகள் கூற நானும் அதனைக் கேள்வியுற்றேன்.

காஞ்சிநகரின் வறுமைத் துன்பத்தைப் போக்குக (151 - 162)

பூங்கொடியே! உன் அறத்திற்குரிய ஏது நிகழ்ச்சிகள் வாய்க்கும் இடம் காஞ்சி மாநகரமே, ஆதலின் அறவண அடிகள் அங்குச் சென்றுள்ளார். பொற்கொடியே ! அடிகள் காஞ்சி மாநகருக்குப் புறப்பட்ட அந் நாளிலேயே மாதவியும் சுதமதியும் அவருடன் அந் நகர்க்குச் சென்றுள்ளனர்.

இவையேயன்றி, அணியிழையே! இன்னும் கேள்! மழைவளம் குன்றியதால் பொன் மதிலையுடைய காஞ்சி மாநகரம் அழகிழந்து போயுள்ளது. உயிர்களெல்லாம் மடிகின்றன. தவம் செய்வோர்க்கு ஐயம் இடுவோர் அந் நகரில் இல்லாது போனமையால் அவர்கள் இந் நகர் வந்து சேர்ந்திருப்பதை நீயும் காண்பாயாக!.

அரிய உயிர்க்கு மருந்தாயிருப்பவளே! நீ அந் நாட்டிலே மழைதரும் முகில்போலத் தோன்றி அங்குள்ள உயிர்களைக் காப்பாற்று. அஃது உன் கடமையாகும்'' என மாசாத்துவான் கூறினான். கூறியதும் –

மணிமேகலை காஞ்சி மாநகர் அடைந்தாள் (162 - 172)

மணிமேகலை மாசாத்துவானை வணங்கினாள். தெய்வத் தன்மை பொருந்திய அமுத சுரபியைத் தன் கையிலே ஏந்தினாள். கொடிகள் பறந்து கொண்டிருக்கும் மதில் சூழ்ந்த பழமையான வஞ்சி மாநகரத்தின் மேற்றிசையினின்றும் வானில் எழுந்தாள். வடதிசையாகச் சென்றாள். தேவர் தலைவன் இந்திரன் ஆட்சி செய்யும் அவனுடைய நகரமே (அமராவதியே) நிலவுலகில் வந்து இருந்ததுபோல வளஞ்சிறந்திருந்த அழகிய கச்சி மாநகரம், வறுமையால் அழகிழந்து புல்லென்று ஆகிவிட்ட தன்மையைக் கண்டு மணிமேகலை மனம் கசிந்தாள்.

பொன்கொடி மூதூர்ப் புரிசை வலம்கொண்டு
நடுநகர் எல்லை நண்ணினள் இழிந்து
தொடுகழல் கிள்ளி துணைஇளங் கிள்ளி
செம்பொன் மாச்சினைத் திருமணிப் பாசடைப்
பைம்பூம் போதிப் பகவற்கு இயற்றிய
சேதியம் தொழுது, தென்மேற் காகத்
தாதுஅணி பூம்பொழில் தான்சென்று எய்தலும்,
வையம் காவலன் தன்பால் சென்று
கைதொழுது இறைஞ்சிக் கஞ்சுகன் உரைப்போன்
கோவலன் மடந்தை குணவதம் புரிந்தோள்
நாவலம் தீவில் தான்நனி மிக்கோள்
அங்கையின் ஏந்திய அமுத சுரபியோடு
தங்காது இப்பதித் தருமத வனத்தே
வந்து தோன்றினள் மாமழை போல்என
மந்திரச் சுற்றமொடு மன்னனும் விரும்பிக்
கந்திற் பாவை கட்டுரை எல்லாம்
வாய்ஆ கின்றென வந்தித்து ஏத்தி
ஆய்வளை நல்லாள் தன்னுழைச் சென்று,
செங்கோல் கோடியோ செய்தவம் பிழைத்தோ
கொங்குஅவிழ் குழலார் கற்புக் குறைபட்டோ
நலத்தகை நல்லாய் நல்நாடு எல்லாம்
அலத்தல் காலை ஆகியது அறியேன்
மயங்குவேன் முன்னர்ஓர் மாதெய்வம் தோன்றி
உயங்காது ஒழிநின் உயர்தவத் தால்ஓர்
காரிகை தோன்றும் அவள்பெருங் கடிஞையின்

170. புரிசை – மதில்.
173. சினை – கிளை. பாசடை – பசிய இலை.
175. சேதியம் – கோயில்.
179. குணவதம் – குணவிரதம்.
191. அலத்தல்காலை – வறுமைக் காலம்.
193. உயங்காது – வருந்தாது.

ஒளியுடைய வளையலணிந்த மணிமேகலை அழகிய கொடிகள் விளங்கும் அத் தொன்மையான நகரின் கோட்டை மதிலை வலம் வந்தாள். பின்னர் நடுநகர் அடைந்து நிலத்திலே இறங்கினாள்.

புத்தர் கோயிலை வணங்கிச் சோலையில் தங்கினாள் (173 – 176)

தொடுகழற் கிள்ளியின் தம்பியான இளங்கிள்ளி என்பான், சிவந்த பொன் போன்ற பெரிய கிளைகளையும், அழகிய மரகத மணியை ஒத்த பசுமையான இலைகளையும், அழகிய பூக்களையு முடைய போதி மரத்தின் கீழ் அமர்ந்த புத்த தேவர்க்கு ஒரு கோயிலை அமைத்திருந்தான். மணிமேகலை அக் கோயிலை வணங்கினாள்; அதன்பின் தென்மேற்காகச் சென்று தேன் பொருந்திய அழகிய மலர்ச் சோலை ஒன்றை அடைந்தாள்.

மன்னன் மணிமேகலை வரவறிந்தான் (177 – 183)

மணிமேகலையைக் கண்ட கஞ்சுகன் (அரசுப் பணியாள்) ஒருவன் மாநிலம் காவல் புரியும் அரசனிடம் சென்று, ''அரசே! கோவலன் மகள்; துறவறம் பூண்டவள்; இந் நாவலந் தீவிலே மிகு புகழ் பெற்றவள்; அழகிய கையிலே ஏந்தியுள்ள அமுதசுரபியோடு இவ்வூரின் தரும வனத்திடையே மாமழைபோல வந்து இருக் கின்றனள்'' எனத் தெரிவித்தான்.

நகர வறுமையை எடுத்துரைத்தான் (184 – 206)

அது கேட்ட மன்னன், 'கந்திற்பாவை சொன்ன உரைகள் எல்லாம் உண்மையாகின்றன' என அப் பாவையை நினைந்து துதித்தான். பின்னர், அமைச்சர் முதலானாரோடு ஆவலுடன் மணிமேகலை இருந்த இடத்தினை அடைந்தான்.

''நல்லறம் மேற்கொண்ட நங்கையே! என் செங்கோல் வளைந்ததாலோ, துறவோர் தவநெறியிலிருந்து தவறியதாலோ, தேன் சொரியும் மலர் சூடிய கூந்தலையுடைய மகளிர் கற்புக் குறை பட்டதாலோ இந் நன்னாடு முழுதும் வறண்டு போனது, செய்வது யாது என அறியாது வருந்தியிருந்தேன். என் முன் ஒரு பெருந் தெய்வம் தோன்றி, 'வருந்தாதே! உன் உயரிய தவப் பெருமையாலே இங்கே ஒரு மங்கை நல்லாள் வந்து தோன்றுவாள். அவள் கையிலே இருக்கும் பெருமை பொருந்திய பாத்திரம் அளிக்கும்

ஆர்உயிர் மருந்தால் அகல்நிலம் உய்யும்
ஆங்குஅவள் அருளால் அமரர்கோன் ஏவலின்
தங்கா மாரியும் தான்நனி பொழியும்
அந்நாள் இந்த அகநகர் புகுந்த
பின்நாள் நிகழும் பேர்அறம் பலவால்
கார்வறம் கூரினும் நீர்வறம் கூராது
பாரக விதியில் பண்டையோர் இழைத்த
கோமுகி என்னும் கொழுநீர் இலஞ்சியொடு
மாமணி பல்லவம் வந்தது ஈங்குஎனப்
பொய்கையும் பொழிலும் புனைமின் என்று அறைந்துஅத்
தெய்வம் போயபின் செய்துயாம் அமைத்தது
இவ்விடம் என்றே அவ்விடம் காட்ட, அத்
தீவகம் போன்ற காஅகம் பொருந்திக்
கண்டுஉளம் சிறந்த காரிகை நல்லாள்
பண்டைஎம் பிறப்பினைப் பான்மையில் காட்டிய
அங்குஅப் பீடிகை இதுஎன அறவோன்
பங்கயப் பீடிகை பான்மையின் வகுத்துத்
தீவ திலகையும் திருமணி மேகலா
மாபெருந் தெய்வமும் வந்தித்து ஏத்துதற்கு
ஒத்த கோயிலுள் அத்தகப் புனைந்து
விழவும் சிறப்பும் வேந்தன் இயற்ற
தொழுதகை மாதர் தொழுதனள் ஏத்தி,
பங்கயப் பீடிகைப் பசிப்பிணி மருந்துஎனும்
அங்கையின் ஏந்திய அமுத சுரபியை
வைத்துநின்று எல்லா உயிரும் வருகெனப்
பைத்தரவு அல்குல் பாவைதன் கிளவியின்
மொய்த்த மூவறு பாடை மாக்களில்
காணார் கேளார் கால்முடம் ஆனோர்
பேணா மாக்கள் பேசார் பிணித்தோர்
படிவ நோன்பியர் பசிநோய் உற்றோர்
மடிநல் கூர்ந்த மாக்கள் யாவரும்
பல்நூறு ஆயிரம் விலங்கின் தொகுதியும்
மன்உயிர் அடங்கலும் வந்துஒருங்கு ஈண்டி

200. கார் வறங்கூரினும் – மழை பெய்யா தொழியினும்.
207. காஅகம் – சோலையினுள்ளே.
223. பேணா மாக்கள் – பாதுகாக்கப்படாத மக்கள்.

ஆருயிர் மருந்தாகிய உணவினால் இந் நாட்டு மக்கள் உய்தி பெறுவர். அவள் அருளால், இந்திரன் ஏவலினாலே மேகங்கள் மிகு மழை பொழியும். அம் மங்கை இந் நகருள் புகுந்த பிறகு பெரிய அறச் செயல்கள் பலவும் நிகழும். மேகம் வறண்டாலும் இங்கு நீர்வளம் வறட்சியுறாது. முன்னோரால் அமைக்கப்பெற்ற கோமுகி என்னும் கொழுவிய நீரினையுடைய பொய்கையுடனே மணிபல்லவமே இங்கு வந்து சேர்ந்தது என்று சொல்லுமாறு, இந் நகரத்தில் பொய்கையும் சோலையும் உண்டாக்குவீர்களாக' எனக் கூறி அத் தெய்வம் சென்றது. அத் தெய்வம் கூறியவாறு, நாங்கள் செய்து அமைத்த இடம் இதுவே'' என அந்த இடத்தை மன்னன் மணிமேகலைக்குக் காட்டினான்.

மணிமேகலை அனைவருக்கும் சோறளித்தாள் (207 – 235)

மணிபல்லவத் தீவு போலவே இருந்த அச் சோலையுள் மணிமேகலை சென்றாள். அதன் சிறப்பினைக் கண்டு மகிழ்ந்தாள். 'எம் பழம் பிறப்பினை முறைமையோடு உணர்த்திய புத்த பீடிகையை ஒத்தது இது' என்று சொல்லுமாறு அங்கே அறவோனின் பாதபங்கயப் பீடிகையை அமைக்கச் சொன்னாள். தீவதிலகையையும், பெருமை பொருந்திய மணிமேகலா தெய்வத்தையும் போற்றித் துதித்தற்கு ஏற்றவாறு கோயில் அமைக்கச் செய்தாள்; அவற்றிற்கு விழாவும் சிறப்பும் முறையாகச் செய்யுமாறு வேந்தனிடம் கூறினாள். அத் தெய்வங்களையும் பீடிகையையும் பணிந்து துதித்தாள். கையில் ஏந்தியிருந்த பசிநோயைப் போக்கும் மருந்தான அமுத சுரபியைப் புத்த பீடிகை மீது வைத்து, ''எல்லா உயிரும் உணவுண்ண வருக'' என அழைத்தாள்.

பாம்பின் படம் போலும் அல்குலையுடைய மணிமேகலை அழைத்ததும், பதினெட்டு மொழி பேசும் மக்களில் குருடர், செவிடர், முடவர், பாதுகாப்பு அற்றவர், ஊமையர், நோய்வாய்ப்பட்டோர், தவசியர், பசியால் வருந்தினோர், வறுமையுற்று வாடினோர் ஆகிய மக்களும், இன்னும் அனைத்து உயிரினங்களும்; பல நூறாயிரம் விலங்குகளும், அங்கே வந்து திரண்டன.

அருந்தியோர்க்கு எல்லாம் ஆர்உயிர் மருந்தாய்ப்
பெருந்தவர் கைப்பெய் பிச்சையின்·பயனும்
நீரும் நிலமும் காலமும் கருவியும்
சீர்பெற வித்திய வித்தின் விளைவும்
பெருகியது என்னப் பெருவளம் சுரப்ப
வசித்தொழில் உதவி வளம்தந் ததுஎனப்
பசிப்பிணி தீர்த்த பாவையை ஏத்திச்
செல்லுங் காலை, தாயர் தம்முடன்
அல்லவை கடிந்த அறவண வடிகளும்
மல்லல் மூதூர் மன்உயிர் முதல்வி
நல்அறச் சாலை நண்ணினர் சேறலும்
சென்றுஅவர் தம்மைத் திருவடி வணங்கி
நன்றுஎன விரும்பி நல்அடி கழுவி
ஆசனத்து ஏற்றி அறுசுவை நால்வகைப்
போனகம் ஏந்திப் பொழுதினில் கொண்டபின்
பாசிலைத் திரையலும் பளிதமும் படைத்து
வாய்வ தாகஎன் மனப்பாட்டு அறம்என
மாயைவிட்டு இறைஞ்சினள் மணிமே கலைஎன்.

233. வசி – மழை.
242. போனகம் – திருவமுது.
243. திரையல் – வெற்றிலை. பளிதம் – பச்சைக் கருப்பூரம்

பெருந்தவசிகள் கையிலிட்ட அறத்தின் பயனும்; நிலம், நீர், காலம், கருவி ஆகிய யாவும் செவ்வனே அமைந்திருக்க விதைக்கப்பட்ட விதையால் உண்டாகும் பயனும் பெருகுவதைப் போல அமுதசுரபியில் உணவு சுரந்தது. மழை பெய்து உலகிற்கு வளம் தந்ததுபோல மணிமேகலை உணவு கொடுத்துப் பசிப்பிணி தீர்த்தாள். அப் பாவையைப் போற்றியவாறு அனைவரும் சென்று கொண்டிருந்தனர். அப்போது –

மாதவி, சுதமதி, அறவண அடிகள் மணிமேகலையைக் கண்டனர் (235 – 245)

மாதவியும், சுதமதியும், அறமல்லனவற்றை நீக்கிய அறவண அடிகளும் வளம் மிக்கதும் பழமையானதுமான அந் நகரில் உள்ள உயிர்கட்கெல்லாம் மணிமேகலை உணவளித்துப் பேணிய அறச் சாலையை அடைந்தனர். அவர்கள் அங்குவந்து சேர்ந்ததும் –

மணிமேகலை அவர்களின் திருவடிகளை வணங்கினாள். அவர்கள் வரவு 'நன்மையானது' என விருப்பம் கொண்டாள். அவர்களுடைய தூய திருவடிகளை நீரால் கழுவினாள்; அவர்களை இருக்கைகளிலே அமர்த்தினாள்; அறுசுவையுடைய நால்வகை உணவுகளை ஏந்திச் சென்று உண்பதற்குரிய பொழுதிலே உண்பித்தாள்; உண்ட பின்னர் பசிய வெற்றிலையும், பாக்கும், கருப்பூரமும் அளித்தாள். ''என் மனம் அறம் கேட்க விழைகிறது. அது வாய்ப்பதாகட்டும்'' என்று கூறி உலக மயக்கினை அகற்றியவளாக அறவண அடிகளை வணங்கினாள் மணிமேகலை.

29. தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை

இறைஞ்சிய இளங்கொடி தன்னை வாழ்த்தி
அறம்திகழ் நாவின் அறவணன் உரைப்போன்:
வென்வேல் கிள்ளிக்கு நாகநாடு ஆள்வோன்
தன்மகள் பீலி வளைதான் பயந்த
புனிற்றிளங் குழவியைத் தீவகம் பொருந்தித்
தனிக்கலக் கம்பளச் செட்டிகைத் தரலும்
வணங்கிக் கொண்டுஅவன் வங்கம் ஏற்றிக்
கொணர்ந்திடும் அந்நாள் கூர்இருள் யாமத்து
அடைகரைக்கு அணித்தா அம்பி கெடுதலும்
மரக்கலம் கெடுத்தோன் மைந்தனைக் காணாது
அரைசற்கு உணர்த்தலும் அவன்அயர் வுற்று
விரைவனன் தேடி விழாக்கோள் மறப்பத்
தன்விழாத் தவிர்தலின் வானவர் தலைவன்
நின்உயிர்த் தந்தை நெடுங்குலத்து உதித்த
மன்உயிர் முதல்வன் மகர வேலையுள்
முன்னிய வங்கம் முங்கிக் கேடுறப்
பொன்னின் ஊசி பசுங்கம் பளத்துத்
துன்னியது என்னத் தொடுகடல் உழந்துழி
எழுநாள் எல்லை இடுக்கண்வந்து எய்தா
வழுவாச் சீலம் வாய்மையில் கொண்ட
பான்மையில் தனாது பாண்டு கம்பளம்
தான்நடுக்கு உற்ற தன்மை நோக்க

---

4 பயந்த – பெற்ற.
8. கூர் இருள் யாமத்து – மிக்க இருளையுடைய இடையிரவில்.
9. அணித்தா – அருகே. அம்பி – கப்பல்
16. முங்கி – முழுகி.
21. பாண்டு கம்பளம் – வெள்ளைக் கம்பளமாகிய இருக்கை.

29. தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை

மன்னன் இந்திர விழாக் கொண்டாட மறந்தான் (1 - 12)

தன்னை வணங்கிய மணிமேகலையை அறவண அடிகள் வாழ்த்தினார். அறவுரைகளே திகழும் நாவினையுடைய அவர் மணிமேகலையிடம் கூறலானார்.

''வெற்றிவேலினை உடையவன் நெடுமுடிக்கிள்ளி. அவனுக்கு நாகநாட்டரசன் மகள் பீலிவளை என்பாள் ஓர் ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தாள். ஈன்ற அணிமை தீரா முன்னரே அக் குழந்தையை மணிபல்லவத்தீவிற்குக் கொண்டு வந்தாள்.

அங்கு மரக்கலத்தில் வந்த கம்பளச்செட்டி என்பவனிடம் அக் குழந்தையைத் தந்து அதனை அரசனிடம் சேர்க்குமாறு சொன்னாள். அவன் அக் குழந்தையை வணங்கி வாங்கிக் கலத்தில் கொணர்ந்தான். ஒரு நாள் இருள் செரிந்த நள்ளிரவில் சோழநாட்டுக் கடற்கரை அருகே மரக்கலம் சிதைந்தது. கம்பளச் செட்டி உயிர்தப்பிக் கரை சேர்ந்தான்; குழந்தையைக் காணாது கலங்கினான் நடந்தவற்றை அரசனிடம் கூறினான். அரசன் பெரும் துன்பம் அடைந்து குழந்தையைத் தேடி அலைந்தான் அத் துயரத்தில் இந்திரவிழாவினை நடத்த மறந்துவிட்டான்.

புகார் நகரைக் கடல் கொண்டது (13 - 36)

'மணிமேகலை! உன் உயிர்போன்ற தந்தை கோவலனின் நெடிய மரபில் தோன்றிய முன்னோன் ஒருவன்; உலக உயிர்கட்கெல்லாம் அருள் செய்யும் தன்மையன். ஒரு முறை மகர மீன்களுடைய கடலில் சென்று கொண்டிருந்த அவனுடைய மரக்கலம் முழுகி அழிவுற்றது. பசுமையான கம்பளத்தில் தைத்த ஊசி இருக்கும் இடம் தெரியாமல் மறைந்தாற்போலக் கலம் கடலுள் விரைந்து மறைந்தது. ஏழுநாள் அவன் கடலில் நீந்தி வருந்தினான்; மேலும் முடியாமல் இறக்கும் நிலை நெருங்கியது. அவன் ஐவகைச் சீலங்களையும் வழுவாமல் மேற்கொண்டிருந்தவன்; ஆதலின் இந்திரனுடைய பாண்டு கம்பளம் உள்ள இருக்கை நடுங்கியது.

ஆதி முதல்வன் போதி மூலத்து
நாதன் ஆவோன் நளிநீர்ப் பரப்பின்
எவ்வம்உற் றான்தனது எவ்வம் தீர்எனப்
பவ்வத்து எடுத்துப் பாரமிதை முற்றவும்
அறஅரசு ஆளவும் அறவாழி உருட்டவும்
பிறவிதோறு உதவும் பெற்றியள் என்றே
சாரணர் அறிந்தோர் காரணம் கூற
அந்த உதவிக்கு ஆங்குஅவள் பெயரைத்
தந்தைஇட் டனன்நினைத் தையல்நின் துறவியும்
அன்றே கனவின் நனவுஎன அறைந்த
மென்பூ மேனிமணி மேகலா தெய்வம்
என்பவட்கு ஒப்ப அவன்இடு சாபத்து
நகர்கடல் கொள்ளநின் தாயரும் யானும்
பகரும்நின் பொருட்டால் இப்பதிப் படர்ந்தனம்
என்றலும் அறவணன் தாள்இணை இறைஞ்சிப்
பொன்திகழ் புத்த பீடிகை போற்றும்
தீவ திலகையும் இத்திறம் செப்பினள்
ஆதலின் அன்ன அணிநகர் மருங்கே
வேற்றுஉருக் கொண்டு வெவ்வேறு உரைக்கும்
நூல்துறைச் சமய நுண்பொருள் கேட்டே
அவ்வுரு என்ன ஐவகைச் சமயமும்

25. எவ்வம் – துன்பம்.
26. பவ்வம் – கடல். பாரமிதை – கரையை அடைவது.
35. நகர் – காவிரிப்பூம்பட்டினம்.
36. பதி – காஞ்சி நகரம்.
40. நகர் – வஞ்சி நகரம்.

(உலகில் தானம் சீலம் முதலியவற்றில் சிறந்த பௌத்தர் உளரானாலும், அவர்களுக்கு ஏதேனும் துன்பமுளதானாலும் இந்திரனுடைய பாண்டு கம்பளம் நடுங்கும் என்பது புத்தர்கள் கொள்கை).

காரணம் அறிந்த இந்திரன் மணிமேகலா தெய்வத்தை அழைத்து, 'இந்த வாணிகன் ஆதிமுதல்வனான போதிசத்துவனாகவும் தகுதியுடையவன்; பெருங்கடல் பரப்பில் துன்புற்றிருக்கிறான். நீ சென்று அவன் துயரைத் துடைப்பாயாக' எனப் பணித்தான். அறம் ஆட்சி செய்யவும், அறச்சக்கரத்தை உருட்டவும் பிறவிதோறும் உதவுகின்ற இயல்பினளான மணிமேகலா தெய்வம் வாணிகனைக் கடலிலிருந்து எடுத்துக் கரை சேர்த்தது. மணிமேகலா தெய்வம் வாணிகனைக் காத்ததைச் சாரணர் உன் தந்தையிடம் கூறியிருந்தனர்.

உன் தந்தை அத் தெய்வத்தினுடைய பழைய உதவியின் நினைவாக உனக்கு மணிமேகலை என்று பெயரிட்டனன். நீ துறவு மேற்கொள்ளப்போவதை உனக்குப் பெயரிட்ட அந்நாளிலேயே உன் தாயின் கனவில் நனவிலே சொல்வதுபோல அம் மணிமேகலா தெய்வம் வந்து சொல்லியது. (அரசன் இந்திரவிழாவைக் கொண்டாட மறந்துவிட்டதால்) மெல்லிய பூப்போன்ற மேனியையுடைய மணிமேகலா தெய்வத்தின் கருத்திற்கேற்ப இந்திரனிட்ட சாபத்தால் புகார் நகரைக் கடல் கொண்டது. நான் உன் தாயருடன் உன் பொருட்டாக இக்காஞ்சி நகர் வந்து சேர்ந்தேன்'' என அறவண அடிகள் கூறினர்.

அடிகள்! மெய்ப்பொருள் அருள்க! (37 - 45)

அதுகேட்ட மணிமேகலை அறவண அடிகளின் இணையடிகளை, வணங்கி, ''அடிகளே! பொன்போல் ஒளிவிடும் புத்த பீடிகையைக் காவல் செய்யும் தீவதிலகையும் இவ்வரலாற்றைக் கூறினாள். ஆதலால் (நான் மணிபல்லவத்திலிருந்து புகார் நோக்கிச் செல்லாமல்) அந்நகர் போன்றே அழகுடையதான வஞ்சி நகரின் புறத்தே ஒரு மாதவன் உருக்கொண்டு சென்றேன். வெவ்வேறு விதமாகச் சொல்லப்படும் நூல்துறைகளைக் கொண்ட பல்வேறு சமயங்களின் நுண்பொருள்களையெல்லாம் அங்கே கேட்டேன். நான் கொண்டிருந்த உருவம் போலியானதைப் போலவே ஐவகைச் சமயத்தாரின் கருத்துகளும்

செவ்விது அன்மையின் சிந்தையின் வைத்திலேன்
அடிகள் மெய்ப்பொருள் அருளுக என்ன,
நொடிகுவென் நங்காய் நுண்ணிதின் கேள்நீ:
ஆதி சினேந்திரன் அளவை இரண்டே
ஏதம்இல் பிரத்தியம் கருத்துஅளவு என்னச்
சுட்டுணர் வைப்பிரத் தியக்கம் எனச்சொலி
விட்டனர் நாம சாதிகுணக் கிரியைகள்
மற்றவை அனுமா னத்தும்அடை யும்எனக்
காரிய காரண சாமா னியக்கருத்து
ஓரின் பிழைக்கையும் உண்டுபிழை யாதது
கனலில் புகைபோல் காரியக் கருத்தே
ஏனை அளவைகள் எல்லாம் கருத்தினில்
ஆன முறைமையின் அனுமான மாம்பிற
பக்கம் ஏதுத் திட்டாந்தம் உபநயம்
நிகமனம் என்ன ஐந்துஉள அவற்றில்
பக்கம் இம்மலை நெருப்புஉடைத்து என்றல்

---

46. நொடிகுவென் – சொல்லுவேன்.
47. சினேந்திரன் – புத்தன்.
48. ஏதம் – குற்றம். பிரத்தியக்கம் – பிரத்தியக்க (காட்சிப்) பிரமாணம்.
கருத்தளவு – அனுமானப் பிரமாணம். பிரமாணம் – அளவை.
50. நாமம் - பெயர்.
51. அனுமானம் – உரைத்தவற்றைப் பிரமாணமாகக் கொண்டு
உரையாத பொருளை அறிதல்.
57. பக்கம் – அறிந்து சொல்லுதல் (மேற்கோள்). ஏது – காரணம்.
திட்டாந்தம் – எடுத்துக்காட்டு.
உபநயம் – துணிந்தபின் துணிவை எடுத்துக் கூறுவது
நிகமனம் – உறுதிப்படுத்திச் சொல்லுதல்.

உண்மையுடையனவாக இல்லாதிருப்பதை அறிந்தேன். அவற்றில் எதையும் என் மனத்தில் கொண்டிலேன். அடிகளே எனக்கு உண்மைப் பொருளை உரைத்தருள்வீராக'' என்று வேண்டினாள்.

அறவணர் அருளிய அற அளவைகள் (46 - 56)

அறவண அடிகள் மேகலையிடம், ''நங்கையே! நீ கேட்கும் மெய்ப்பொருளைக் கூறுவேன்; நுணுக்கமாகக் கேட்பாயாக'' எனக் கூறத் தொடங்கினார்.

ஆதிபுத்தன் (சினேந்திரன்) வகுத்த அளவைகள் இரண்டே! அவை குற்றமில்லாத காட்சியளவை, கருத்தளவை என்பனவாம்.

காட்சி அளவை: ஒரு பொருளைச் சுட்டி, 'இஃது இன்னது' என அதன் பொருண்மை ஒன்றை மாத்திரமே அறிகின்ற உணர்வினைப் பிரத்தியக்கம் (காட்சி) என்பர். பெயர், சாதி, குணம் என்பவை கருத்தளவையாகிய அனுமான அளவைக்கும் பொருந்துவன. ஆதலால் அவற்றைக் காட்சிக்கு இலக்கணமாகக் கொள்ளாது நீக்கினர். (காட்சியளவைப் பிரத்தியட்சம் என்றும் கருத்தளவை அனுமானம் என்றும் கூறுவர்).

கருத்தளவை: கருத்தளவை காரியம், காரணம், சாமானியம் என மூன்று நிலையின. ஆராய்ந்து பார்க்குமிடத்து இம்மூன்றுமே பிழைபட்டு விடுதலும் உண்டு. அவற்றுள் பிழைபடாதது எது என்றால், 'நெருப்பினில் புகை' என்றாற்போல அறியப்படுகின்ற காரியானுமானம் ஒன்றேயாகும். மற்ற ஆகமம் முதலாகக் கூறப்பட்ட (அதாவது ஆகமம், அருத்தாபத்தி, இயல்பு, ஐதிகம், சுபாவம், ஒழிவறிவு முதலிய) அளவைகள் எல்லாம் கருத்திலே உண்டாகும் முறைமையுடையன; எனவே அவையெல்லாம் கருத்தளவையினுள்ளே அடங்கிவிடும்.

அனுமான உறுப்புகள் (57 - 67)

பக்கம், ஏது, திட்டாந்தம், உபநயம், நிகமனம் எனக் கருத்தளவைக்கு ஐந்து உறுப்புகள் உண்டு. அவற்றுள் **பக்கம்** என்பது ஒன்றை இஃது இன்னதாகும் என மேற்கொள்வது. 'இம்மலை நெருப்பை உடையது' என்பதுபோல ஒன்றை அறிந்து சொல்லுதலாகும்.

புகையுடைத்து ஆதலால் எனல்பொருந்து ஏது
வகைஅமை அடுக்களை போல்திட் டாந்தம்
உபநயம் மலையும் புகைஉடைத்து என்றல்
நிகமனம் புகைஉடைத் தேநெருப்பு உடைத்துஎனல்
நெருப்புடைத் தல்லாது யாதொன்று அதுபுகைப்
பொருத்தம் இன்று புனல்போல் என்றல்
மேய விபக்கத்து மீட்சி மொழியாய்
வைதன் மியதிட் டாந்தம் ஆகும்
தூய காரிய ஏதுச் சுபாவம்
ஆயின் சத்தம் அநித்தம் என்றல்
பக்கம் பண்ணப் படுத லால்எனல்
பக்க தன்ம வசனம் ஆகும்
யாதொன்று யாதொன்று பண்ணப் படுவது
அநித்தம் கடம்போல் என்றல் சபக்கத்
தொடர்ச்சி யாதொன்று அநித்தம்அல் லாதது
பண்ணப் படாதது ஆகாசம் போல்எனல்
விபக்கத் தொடர்ச்சி மீட்சிமொழி என்க;
அநன்னு வயத்தில் பிரமாணம் ஆவது
இவ்வெள் ளிடைக்கண் குடம்இலை என்றல்

67. வைதன்மியம் – பக்கத்தின் மறுதலை.
68. சுபாவம் – இயல்பு. 69. அநித்தம் – நிலையின்மை.
71. பக்க தன்ம வசனம் – சாதிக்கப்படும் பொருளுக்கு இயல்பாகிய தருமமாகும் உரை.
73. சபக்கம் – தன் பக்கம். 76. விபக்கம் - மறுதலைப்பக்கம்.
77. அநன்னுவயம் – காரண காரியத் தொடர்பு.
78. வெள்ளிடை – வெற்றிடம்.

இந்தப் பக்கத்தைச் சாதிப்பதற்குப் பொருந்திய **ஏது** ஆவது, 'புகையுடைமையால் இம்மலை நெருப்பினையுடையது' என்று கூறுவதாகும்.

'வகையோடு அமைந்த ஓர் அட்டிற்சாலையினைப்போல' எனக் கூறுதல் **திட்டாந்தம்** (எடுத்துக்காட்டு) ஆகும்.

உபநயமாவது, 'இம்மலையும் புகையினையுடைது' என்று சொல்லுவது.

நிகமனமாவது, 'எது எது புகையுடையதோ அது நெருப்புடையது' என்று துணிந்து கூறுதல்.

வைதன்மிய திட்டாந்தம்

'நெருப்புடையது அல்லாது யாதொன்று', அது புகைப்பொருத்தம் இல்லாதது - புனலைப்போல' என்று சொல்வது பக்கத்து மறுதலையாய் வைதன்மிய திட்டாந்தம் எனப்படும். (திட்டாந்தம் சாதன்மிய திட்டாந்தம், வைதன்மிய திட்டாந்தம் என இரண்டாம். 'புகையுடைத்து நெருப்புடைத்து வகையமை அடுக்களைபோல' எனக் கூறுவது சாதன்மிய திட்டாந்தம். 'நெருப்புடையதல்லாதது யாதொன்று, அது புகைப்பொருத்தம் இல்லை - புனலைப்போல' எனக் கூறுவது வைதன்மிய திட்டாந்தம்)

பக்க வகைகள் (68 - 84)

(i) தூயதான 'காரிய ஏது' பொருளினது இயல்பேயானால் அது பக்க தன்ம வசனம் எனப்படும். 'ஒலி அநித்தியமானது' என்று கூறுதல் பக்கம். 'அது எழுப்பப்படுவதால்' எனத் தொழிலைச் சுட்டிச் சொல்லுதல் **பக்க தன்ம வசனம்** ஆகும்.

(ii) 'யாதொன்று செய்யப்படுவதோ அஃது அநித்தமாகும் - குடத்தினைப்போல' என்பது **சபக்கத் தொடர்ச்சி**யாகும். 'யாதொன்று அநித்தமில்லாததோ அது செய்யப்படாதது ஆகும் - ஆகாயம்போல' எனச் சபக்கத்திற்கு மறுதலைப் பக்கமாக நின்று சொல்வது **விபக்கத் தொடர்ச்சி** என்னும் மீட்சி மொழி என்று அறிக.

அநன்னுவய அனுமானத்தால் பொருளை அறியும் பிரமாணமாவது: 'இவ்வெற்றிடத்தில் குடமில்லை' என்பது

செவ்விய பக்கம் தோன்றாமை யில்எனல்
பக்க தன்ம வசனம் ஆகும்
இன்மையின் கண்டிலம் முயல்கோடு என்றல்
அந்நெறிச் சபக்கம் யாதொன்று உண்டுஅது
தோற்றரவு அடுக்கும் கைந்நெல்லி போல்எனல்
ஏற்ற விபக்கத்து உரைஎனல் ஆகும்
இவ்வகை ஏதுப் பொருள்சா திப்பன
என்னைகா ரியம்புகை சாதித்தது; என்னின்
புகைஉள இடத்து நெருப்புஉண்டு என்னும்
அன்னுவயத் தாலும், நெருப்புஇலா இடத்துப்
புகையில்லை என்னும் வெதிரேகத் தாலும்
புகைஇ நெருப்பைச் சாதித்தது, என்னின்
நேரிய புகையில் நிகழ்ந்துஉண் டான
ஊர்த்தச் சாமம் கௌடிலச் சாமம்
வாய்த்த நெருப்பின்வரு காரியம் ஆதலின்
மேல்நோக் கிக்கறுத்து இருப்பபகைத்து இருப்ப
தாமே நெருப்பைச் சாதிக்க வேண்டும்
அன்னு வயம்சா திக்கின் முன்னும்
கழுதை யையும் கணிகை யையும்
தம்மில் ஒருகா லத்துஓர் இடத்தே
அன்னு வயம்கண் டான்பிற் காலத்துக்
கழுதையைக் கண்ட இடத்தே கணிகையை
அனுமிக்க வேண்டும் அதுகூ டா; நெருப்பு

83. தோற்றரவு – வெளிப்படல்.
88. அன்னுவயத்தாலும் – உடன்பாட்டு உடனிகழ்ச்சியாலும்.
89. எதிரேகத்தாலும் – எதிர்மறை உடனிகழ்ச்சியாலும்.
92. ஊர்த்தச் சாமம் – மேல் நோக்கிச் செல்லுதல்.
கௌடிலச் சாமம் – படலமாய்ப் படர்தல்.
101. அனுமிக்க வேண்டும் – துணிய வேண்டும்.

செம்மையான பக்க மொழியாகும். 'அது தோன்றாமையினாலே' என்பது பக்க தன்ம வசனம் ஆகும். 'யாதொன்று இலதாயிருக்கிறதோ அதனைக் காண்பது இல்லை - முயற்கொம்பு போல' என்பது அந்நெறியிற் பெறப்படும் சபக்கத் தொடர்ச்சியாகும். 'யாதொன்று உளதாயிருக்கிறதோ அது காணப்படுவதாகும் – கையகத்து நெல்லிக் கனி போல' என்பது அதற்கேற்ற விபக்கத் தொடர்ச்சி மொழியாகும்.

ஏது (85 - 108)

சாதனமாகிய ஏதுக்கள் இக்கூறிய வகையால் பொருளைச் சாதிப்பனவாம். புகை எழலாகிய காரியமே நெருப்பு உண்டென்றலாகிய உண்மையைச் சாதித்தது. அஃது எங்ஙனம் என்றால் 'புகையுள்ள இடத்தே நெருப்புண்டு' என்னும் உடன்பாட்டு உடனிழ்ச்சியாலும், 'நெருப்பு இல்லாவிடத்துப் புகையும் இல்லை' என்னும் எதிர்மறை உடனிகழ்ச்சியாலும், புகையாகிய ஏது நெருப்பின் உண்மையைச் சாதித்ததாம்.

காரிய ஏது பிழைபடல்

இவ்வாறு ஏது பொருளைச் சாதிக்கும் என்றால் (புகையாகிய ஏது நெருப்புண்மையைச் சாதிக்கும் என்றால்) புகையின் மேலே நோக்கிய செலவும், வளைந்து படர்ந்த செலவும், நெருப்பினின்று ஏற்பட்ட காரியமே; ஆதலால் மேல் நோக்கிச் சென்று கறுத்திருப்பனவும், மேல் நோக்காது மாறுபட்டுப் பரந்து படலமாய்ப் பரந்திருப்பனவும் தாம் தோன்றியுள்ள இடத்தே நெருப்புண்டெனச் சாதிக்க வேண்டுமல்லவா?(அப்புகையிடத்தே நெருப்பில்லை. ஆதலின் காரிய ஏதுவாகிய புகை பிழைபடுமாறு காட்டியது).

அன்னுவயம் பிழைபடல்

உடன்பாட்டு உடனிகழ்ச்சிப் பொருளதாகிய அன்னுவயத்தால் பொருளுண்மை சாதிக்கப்படுமாயின், 'முன்னம் ஒரு காலத்து ஓரிடத்தே கழுதையும் கணிகையும் தம்மில் ஓரிடத்தே இருப்பதைக் கண்டவன், பின்னொரு காலத்தே கழுதையிருப்பக் கண்டு கணிகையும் உடனிருப்பதாகத் துணிய வேண்டுமல்லவா? அங்ஙனம் துணிதல் பொருந்துவதாகாது. (இதனால் அன்னுவய அனுமானம் பிழைபடும் எனலாயிற்று).

இலாஇடத் துப்புகை இலைஎன நேர்அத்
திருத்தகு வெதிரேகம் சாதிக்கும் என்னின்
நாய்வால் இல்லாக் கழுதையின் பிடரின்
நரிவாலும் இலையாக் காணப் பட்ட
அதனையே கொண்டு பிறிதுஓர் இடத்து
நரிவாலி னால்நாய் வாலைஅனு மித்தல்
அரிதாம் அதனால் அதுவும்ஆ காது
ஒட்டிய உபநயம் நிகமனம் இரண்டும்
திட்டாந் தத்தி லேசென்று அடங்கும்
பக்கம் ஏதுத் திட்டாந் தங்கள்
ஒக்க நல்லவும் தீயவும் உளஅதில்
வெளிப்பட் டுள்ள தன் மியினையும்
வெளிப்பட் டுளசாத் தியதன் மத்திறம்
பிறிதின் வேறாம் வேறுபாட் டினையும்
தன்கண் சார்த்திய நயம்தருதல் உடையது
நன்குஎன் பக்கம்என நாட்டுக அதுதான்
சத்தம் அநித்தம் நித்தம்என்று ஒன்றைப்
பற்றி நாட்டப் படுவதுஅதில் தன்மி
சத்தம் சாத்திய தன்ம மாவது
நித்தா நித்தம் நிகழும்நல் ஏது
மூன்றாய்த் தோன்றும் ஒழிந்த பக்கத்து
ஊன்றி நிற்றலும் சபக்கத்துஉண் டாதலும்
விபக்கத்து இன்றியே விடுதலும் சபக்கம்

109. ஒட்டிய – பொருந்திய.

எதிரேகம் பிழைபடல்

'நெருப்பில்லா இடத்தில் புகையுமில்லை' எனல் போன்று அச்சிறப்புத் தன்மை வாய்ந்த எதிரேகமே பொருளுண்மையைச் சாதிக்கும் என்பாயாயின் - 'ஓரிடத்தே நாய் வால் இல்லாத கழுதையின் பிடரியிலே நரி வாலும் இல்லையாக, அங்ஙனம் காணப்பட்ட எதிரேக அறிவே கொண்டு, பிறிதோரிடத்துக்குச் சென்றகாலை, நரி வாலிருப்பக் கண்டு நாய் வாலும் உண்டெனத் துணிந்து அனுமானித்தல் இயலாதாம்.' அதனாலே எதிரேக அனுமானமும் பொருளுண்மையைத் தெளிவாகக் காண்பதற்குப் பொருத்தமுடையது ஆகாது.

உபநயமும் நிகமனமும் (109 - 110)

பக்கம் முதலியவற்றோடு பொருந்திய உபநயம், நிகமனம் ஆகிய இரண்டும் மூன்றாவதாகிய திட்டாந்தத்தின்கன் அடங்கிவிடும் எனவே அவையும் பொருத்தம் உடையன ஆகா.

தன்மதம் கூறல்

நல்ல பக்கம் (111 - 121)

பக்கம், ஏது, திட்டாந்தம் ஆகிய மூன்றுள்ளும் ஒவ்வொன்றிலும் நல்லவையும் உள; தீயவையும் உள. வெளிப்பட்டுள்ள தன்மியையும், வெளிப்பட்டுள்ள சாத்திய தன்மத்தையும், பிறிதொன்றின் வேறுபட்டவாகக் காணப்பெறும் வேறுபாடுகளையும், தன்கண் சார்த்திக் கூறப்படும் தன்மையுடையது எதுவோ, அதுவே 'நன்கு' என்று சொல்லப்பெறும் பக்கம் என்று துணிவாயாக! அது சத்தம் அநித்தம், சத்தம் நித்தம் என்ற இரண்டனுள் ஒன்றனை மேற்கொண்டு துணியப்படுவதாகும். தன்மியாவது சத்தம், அதனைச் சாதித்தற்குப் பொருந்திய தன்மமாவது நித்தமும் அநித்தமும் என்று அறிவாயாக!

நல் ஏது (121 - 135)

நல் ஏது மூன்று வகையாய்த் தோன்றுகிறது. பக்கம் பொருளில் தானே நிலைபெற்று நிலவுதலும், சபக்கப் பொருளினிடத்தேயும் உண்டாதலும், விபக்கப்பொருளினிடத்தே அறவே இல்லாது விடுபட்டிருத்தலும் ஆம்.

சாதிக் கின்பொருள் தன்னால் பக்கத்து
ஒதிய பொதுவகை ஒன்றி இருத்தல்
சத்த அநித்தம் சாத்தியம் ஆயின்
ஒத்த அநித்தம் கடாதி போல்எனல்
விபக்கம் விளம்பில் யாதொன்று யாதொன்று
அநித்தம்அல் லாதது பண்ணப் படாதது
ஆஅ காசம் போல்என்று ஆகும்
பண்ணப் படுதலும் செயலிடைத் தோன்றலும்
நண்ணிய பக்கம் சபக்கத் திலுமாய்
விபக்கத்து இன்றி அநித்தத் தினுக்கு
மிகத்தரும் ஏதுவாய் விளங்கிற்று என்க
ஏதம்இல் திட்டாந் தம்இரு வகைய
சாதன் மியம்வை தன்மி யம்எனச்
சாதன் மியம்எனப் படுவது தானே
அநித்தம் கடாதி அன்னுவயத்து என்கை
வைதன் மியதிட் டாந்தம் சாத்தியம்
எய்தா இடத்தில் ஏதுவும் இன்மை
இத்திறம் நல்ல சாதனத்து ஒத்தன
தீய பக்கமும் தீய ஏதுவும்
தீய எடுத்துக் காட்டும் ஆவன
பக்கப் போலியும் ஏதுப் போலியும்
திட்டாந்தப் போலியும் ஆஅம் இவற்றுள்
பக்கப் போலி ஒன்பது வகைப்படும்
பிரத்தி யக்க விருத்தம் அனுமான
விருத்தம் சுவசன விருத்தம் உலோக
விருத்தம் ஆகம விருத்தம் அப்பிர
சித்த விசேடணம் அப்பிர சித்த
விசேடியம் அப்பிர சித்த உபயம்
அப்பிர சித்த சம்பந் தம்என
எண்ணிய இவற்றுள், பிரத்தியக்க விருத்தம்
கண்ணிய காட்சி மாறுகொளல் ஆகும்

139. அன்னுவயத்து – உடன்பாட்டு நெறியில்

சபக்கம் ஒன்றைச் சாதிக்குமானால், தான் எடுத்துக்காட்டும் பொருளின் பொதுத் தன்மத்தோடு பக்க வசனத்துட் கூறிய சாத்திய தன்மமும் ஒத்திருத்தல் வேண்டும். சத்தம் அநித்தம் என்ற பக்க வசனத்தினுள் அநித்தத்துவமாகிய தன்மம் சாதிக்கப்படுமிடத்து அநித்தம் ஒப்புடைய குடம் போல்வதெனத் துணிவதாம். இதற்கு விபக்க நிலை காட்டுவதாயின், 'யாதொன்று அநித்தம் அல்லாதது; அது ஆகாசத்தைப்போல் செய்யப்படாதது' என்றாவதாம். பண்ணப் படுவதும் பண்ணுஞ் செய்கையிடத்தே தோன்றுவதுமாகிய பொதுத் தன்மமானது, ஆராய்ச்சிக்குப் பொருந்திய பக்கப் பொருளிலும் சபக்கப் பொருளிலும் உள்ளதாய், விபக்கத்தோதும் பொருளிடத்தே அறவே இல்லையாய், சத்தமாகிய தன்மி அநித்தத்துவமாகிய தன்மத்தை யுடையதென்பதைச் சாதித்தற்கு மிகவும் பொருத்தமான ஏதுவாய் விளங்கிவிட்டது என அறிக.

நல்ல திட்டாந்தம் (136 – 142)

குற்றமில்லாத திட்டாந்தம் சாதன்மியம் வைதன்மியம் என இருவகைப்படுவனவாம். சாதன்மியம் எனப்படுவது உடன்பாட்டு நெறியில், 'சத்தம் அநித்தம், அது பண்ணப்படுதலால், குடம்போல' என எடுத்துக் காட்டுதல். வைதன்மிய திட்டாந்தமாவது, சாத்திய தன்மம் எய்தாத இடத்திலே பக்க தன்மம் ஆகிய ஏதும் இல்லா திருத்தல். நல் பக்கம், நல் ஏது, நல் திட்டாந்தம் என்ற இவ்வகைகள் மூன்றும் பொருளைக் குற்றமின்றிச் சாதித்தற்கு ஏற்புடையனவாம்.

பக்கப்போலி வகை (143 - 153)

தீய பக்கமும், தீய ஏதுவும், தீய எடுத்துக்காட்டும் என்பவை பக்கப்போலி, ஏதுப்போலி, திட்டாந்தப்போலி என வழங்கும். இவற்றுள் பக்கப் போலியாவது ஒன்பது வகைப்படும். அவை பிரத் தியக்க விருத்தம், அனுமான விருத்தம், சுவசன விருத்தம், உலோக விருத்தம், ஆகம விருத்தம், அப்பிரசித்த விசேடணம், அப்பிரசித்த விசேடியம், அப்பிரசித்த உபயம், அப்பிரசித்த சம்பந்தம் என்பனவாம்.

பக்கப்போலி - ஒன்பது (154 - 190)

இந்தப் போலிகள் குற்றமுடையன என்று கருதப்பட்டவை. இவற்றுள் **பிரத்தியக்க விருத்தம்** என்பது கண்ட காட்சிக்கு மாறாகக்

சத்தம் செவிக்குப் புலன்அன்று என்றல்.
மற்றுஅனு மான விருத்தம் ஆவது
கருத்தள வையைமா றாகக் கூறல்
அநித்தியக் கடத்தை நித்தியம் என்றல்.
சுவசன விருத்தம்தன் சொல்மாறி இயம்பல்
என்தாய் மலடி என்றே இயம்பல்.
உலக விருத்தம் உலகின்மாறு ஆம்உரை
இலகுமதி சந்திரன் அல்ல என்றல்.
ஆகம விருத்தம்தன் நூல்மாறு அறைதல்
அநித்த வாதியாய் உள்ளவை சேடிகன்
அநித்தி யத்தைநித் தியம்என நுவறல்.
அப்பிர சித்த விசேடணம் ஆவது
தத்தம் எதிரிக்குச் சாத்தியம் தெரியாமை
பௌத்தன் மாறாய் நின்றசாங் கியனைக்
குறித்துச் சத்தம் விநாசி என்றால்
அவன்அவி நாச வாதி ஆதலின்
சாத்திய விநாசம்அப் பிரசித்தம் ஆகும்.
அப்பிர சித்த விசேடியம் ஆவது
எதிரிக்குத் தன்மி பிரசித்தம் இன்றி
இருத்தல் சாங்கியன் மாறாய் நின்ற
பௌத்தனைக் குறித்துஆன் மாச்சை தனியவான்
என்றால் அவன்அ நான்ம வாதி
ஆதலில் தன்மி அப்பிர சித்தம்.

---

156. சத்தம் செவிக்குப் புலனாதல் கண்ணிய காட்சி; புலனன்று என்றல் அக்காட்சிக்கு மாறுகோளுரை.
166. அநித்தியம் – நிலையின்மை
நித்தியம் – நிலையானது; அழிவில்லாதது.
172. அப்பிரசித்தம் – அறியப்படாதது
174. பிரசித்தம் – அறியப்பட்டது.

கொண்டுரைப்பதாம். 'சத்தம் செவிக்குப் புலப்படுவது இல்லை' என்று சொல்லுதல்.

அனுமான விருத்தம் என்பது கருத்தளவையால் துணியப்பட்ட ஒன்றைத் தவறாக எடுத்துக் கூறுதலாம். அநித்தியத் தன்மையுடையது என்று துணியப்பட்ட குடத்தினை நித்தியத் தன்மை உடையதாகக் கூறுவது போன்றது.

சுவசன விருத்தம் என்பது, தான் சொல்லும் சொற்கள் ஒன்றுக்கொன்று மாறுபடக் கூறுதல். என்னைப் பெற்ற தாய் மகப்பெறாத மலடி எனச் சொல்வது போல்வது.

உலோக விருத்தம் என்பது, உலகினர் கூறும் கூற்றுக்கு மாறுபடக்கூறுவதாம், விளங்குகின்ற சந்திரனை நோக்கி, 'இது சந்திரன் அல்ல' என்பதுபோலச் சொல்வதாம்.

ஆகம விருத்தம் என்பது, தான் ஆதரவாக மேற்கொள்ளும் நூலுக்கு மாறுபட்டதாக ஒன்றனைக் கூறுதல். அநித்தவாதியாக உள்ளவன் வைசேடிகன். அஃது அவனுடைய ஆகமத்துப் பொருளாக அமைந்தது. அவன் அநித்தியமான ஒரு பொருளை நித்தியம் என்று சொன்னாற் போல்வது இது.

அப்பிரசித்த விசேடணம் என்பது தத்தம் எதிரியான பிரதிவாதிக்குத் தாம் சாதிக்கும் பொருளுண்மை தெரியாதிருத்தலாகும். பிரதிவாதியாய் நின்ற சாங்கியனை நோக்கிப் புத்தனாகிய வாதி, 'சத்தம் அநித்தம்' என்பானானால், அச்சாங்கியன், 'அது நித்தியம்' என்னும் கொள்கையாளன் ஆதலின் துணிபொருளாகிய அநித்தத்துவம் அப்பிரசித்தமாய்க் குற்றமாகும்.

அப்பிரசித்த விசேடியம் என்பது, எதிரிக்குத் தான் கூறும் தன்மி தெரியாது இருத்தல். ஆன்மவாதியாகிய சாங்கியன், தனக்கு மாறுபட்டோனாய் நின்ற பௌத்தனை நோக்கி, 'ஆன்மா அறிவுள்ள பொருளாகும்' என்று சொல்வானானால், அந்த பௌத்தன் 'ஆன்மா எனப்படும் ஒன்று இல்லை' எனும் கொள்கையாளன் ஆதலால், தன்மி எதிரிக்கு அறியப்படாத ஒன்றைக் கூறுதல் என்னும் குற்றமுடைய தாயிற்று.

அப்பிர சித்த உபயம் ஆவது
மாறுஆ னோற்குத் தன்மி சாத்தியம்
ஏறாது அப்பிர சித்தமாய் இருத்தல்
பகர்வை சேடிகன் பௌத்தனைக் குறித்துச்
சுகம்முத லியதொகைப் பொருட்குக் காரணம்
ஆன்மா என்றால் சுகமும்ஆன் மாவும்
தாம்இசை யாமையில் அப்பிரசித் தோபயம்.
அப்பிர சித்த சம்பந்தம் ஆவது
எதிரிக்கு இசைந்த பொருள்சா தித்தல்
மாறாம் பௌத்தற்குச் சத்த அநித்தம்
கூறில் அவன்ன் கொள்கைஅஃ்து ஆகலில்
வேறுசா திக்க வேண்டா தாகும்.
ஏதுப் போலி ஒதின்மூன்று ஆகும்
அசித்தம் அநைகாந் திகம்விருத் தம்என
உபயா சித்தம் அன்னியதரா சித்தம்
சித்தா சித்தம் ஆசிரயா சித்தம்
எனநான்கு அசித்தம் உபயா சித்தம்
சாதன ஏது இருவர்க்கும் இன்றிச்
சத்தம் அநித்தம் கண்புலத்து என்றல்
அன்னியதரா சித்தம் மாறாய் நின்றாற்கு
உன்னிய ஏது அன்றாய் ஒழிதல்.

193. உபயா சித்தம் – சாதனமாகிய 'ஏது' வாதி பிரதிவாதி இருவர்க்குமே சாதனமாக அமைதலில்லாததாம். அன்னியதரா சித்தம் – பிரதிவாதியாய் நின்ற ஒருவனுக்கு வாதியாகிய தான் எடுத்துக் கூறிய 'ஏது' அவனால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சாதனமாக இல்லாது போவது.

194. சித்தா சித்தம் – எடுத்தோதும் ஏதுவே ஐயத்திற்கு இடமானதாயிருக்க அது கொண்டு ஒன்றைச் சாதிப்பதாம்.
ஆசிரயா சித்தம் – மாறான ஒருவனுக்கு அவனால் ஏற்றுக் கொள்ளப்படாத ஒன்றைக் காட்டி, அதற்குரிய 'ஏது' ஒன்றைச் சொல்லிக் காட்டுவதாம்.

அப்பிரசித்த உபயம் என்பது தமக்கு மாறுபட்டோர் ஆயினவர்கட்குத் தாம் கூறும் பொருளினது சாத்தியத் தன்மம் விளக்கமின்றி உணரப்படாததொன்றாய் இருத்தல். வைசேடிகன் ஒருவன் பௌத்தன் ஒருவனை நோக்கி, 'சுகம் துக்கம் இச்சை முதலிய தொகைப் பொருள்களுக்கு ஆன்மாவே காரணம்' என்றால், சுகமும் ஆன்மாவுமாகிய இரண்டினையுமே பௌத்தன் ஏற்றுக் கொள்ளாமை உடையவனாதலின், இது அவனுக்கு உணரப்படாததொன்றாய் அப்பிரசித்த உபயமென்னும் குற்றம் உடையதாயிற்று.

அப்பிரசித்த சம்பந்தம் என்று சொல்லப்படுவது எதிரிக்கு ஏற்றதாகிய ஒரு பொருளைச் சொல்பவன் தானே எதிரிக்குச் சாதித்துக் கொடுத்தலாம், மாறுபட்டோனாகிய பௌத்தனுக்குச் 'சத்தம் அநித்தத் தன்மையுடையது' என்று ஒருவன் சொன்னால் அதுவே அப்பௌத்தனின் கொள்கையும் ஆதலினாலே, சொல்பவன் வேறு எதுவும் சொல்லித் தன் கூற்றினைச் சாதிக்க இடமின்றிப் போதலினாலே அது குற்றமாயிற்று.

ஏதுப்போலி மூன்று (191 - 192)

ஏதுப்போலி எனப்படும் தீய ஏதுவை வகுத்துக் கூறுமிடத்து அது (i) அசித்தம் (ii) அநைகாந்திகம் (iii) விருத்தம் என மூவகைப்படும்

அசித்தம் - நான்கு (193 - 211)

உபயா சித்தம், அந்நியதரா சித்தம், சித்தா சித்தம், ஆசிரயா சித்தம் என அசித்தம் நான்கு வகையாகும்.

உபயா சித்தம் என்னும் ஏதுப்போலியாவது சாதனமாகிய ஏது, வாதி, பிரதிவாதிகளாகிய இருவர்க்குமே சாதனமாக அமைதலல்லாதது ஆகுதல். அது, 'சத்தம் அநித்தமானது, கண்ணால் காணப்படுதலினாலே' என்று சொல்வது போன்றது. (இங்கே சத்தத்தின் அநித்தத் தன்மையைச் சாதித்தற்கு ஏதுவாகக் கூறப்பெற்ற 'கண்ணால் காணப்படுதலினால்' என்றது வாதிடும் இருவர்க்கும் பொருந்தாதாதலின் குற்றமாயிற்று.)

அன்னியதரா சித்தம் ஆவது பிரதிவாதியாய் நின்ற ஒருவனுக்கு வாதியாகிய தான் எடுத்துக்கூறிய ஏது அவனால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சாதனம் ஆகாது போவதாம். 'சத்தம் செயலிலே

சத்தம் செயல்உறல் அநித்தம் என்னின்
சித்த வெளிப்பாடு அல்லது செயல்உறல்
உய்த்த சாங்கியனுக்கு அசித்தம் ஆகும்
சித்தா சித்தம் ஆவது
ஏதுச் சங்கய மாய்ச்சா தித்தல்
ஆவி பனிஎன ஐயுறா நின்றே
தூய புகைநெருப்பு உண்டுஎனத் துணிதல்
ஆசிரயா சித்தம் மாறா னவனுக்கு
ஏற்ற தன்மி இன்மை காட்டுதல்
ஆகாசம், சத்த குணத்தால் பொருளாம் என்னின்
'ஆகா சம்பொருள் அல்லஎன் பாற்குத்
தன்மி அசித்தம்; அநைகாந் திகமும்
சாதா ரணம்அசா தாரணம் சபக்கைக
தேச விருத்தி விபக்க வியாபி,
விபக்கைக தேச விருத்தி சபக்க
வியாபி, உபயைக தேச விருத்தி,
விருத்த வியபி சாரிஎன்று ஆறு.
சாதாரணம் சபக்க விபக்கத் துக்கும்
ஏதுப் பொதுவாய் இருத்தல் சத்தம்
அநித்தம் அறியப் படுதலின் என்றால்
அறியப் படுதல்நித் தாநித்தம் இரண்டுக்கும்
செறியும் கடம்போல் அநித்தத்து அறிவோ
ஆகா சம்போல நித்தத்து அறிவோ
என்னல் அசாதா ரணமா வதுதான்
உன்னிய பக்கத்து உண்டாம் ஏதுச்

204. சங்கயம் – ஐயம்; சந்தேகம்.

தோற்றமுடைமையினாலே அநித்தம் ஆகும்' என்று பிரதிவாதியாய் நிற்கும் சாங்கியன் ஒருவனுக்குச் சொன்னால், சாங்கியனுக்குச் 'செயலிடைத் தோற்றமுடையதாதல்' என்பது மூலப்பகுதிச் செயலிடையே சத்தமாகத் தோன்றுகிறது என்பதாக விளங்குமே அல்லாமல், அநித்தியத்தைச் சாதிக்கின்ற சாதனமாகாமையால் இது பயனற்ற ஏதுவாகும்; ஆகவே குற்றமாயிற்று.

சித்தா சித்தம் என்பதாவது, எடுத்துக் கூறும் ஏதுவே ஐயத்திற்கிடமான ஒன்றாக இருக்க, அது கொண்டு ஒன்றைச் சாதிக்க முனைவதாம். புகையோ பனியோ என்று ஐயுற்றுத் துணியாமலேயே, 'அது தூய புகையாம்' என்று தானே ஏற்றுக்கொண்டு ஆதலால், 'அங்கே நெருப்புண்டு' என்று துணிந்து சொல்வது போன்றதாகும்.

ஆசிரயா சித்தம் என்பது மாறான ஒருவனுக்கு ஏற்றதான தன்மியல்லாத ஒன்றினைக் காட்டி அதற்குரிய ஏது ஒன்றைக் கூறிக் காட்டுவதாம். 'ஆகாசம் சத்தமான குணத்தை உடைமையினாலே பொருளாகும்' என்று சொன்னால், 'ஆகாசம் பொருளல்ல' என்று சொல்வானான எதிரிக்கு அவ்வாகாசமாகிய தன்மியே அசித்தமாகும் என்க.

அநைகாந்திகம் - ஆறு (211 - 274)

அநைகாந்திகம் என்னும் ஏதுப்போலி (i) சாதாரணம் (ii) அசாதாரணம் (iii) சபக்கைக தேச விருத்தி விபக்க வியாபி (iv) விபக்கைக தேச விருத்தி சபக்க வியாபி (v) உபயைக தேச விருத்தி (vi) விருத்த வியபிசாரி என ஆறு வகைப்படும்.

சாதாரணம்: சுபக்கத்துக்கும் அதற்கு மறுதலையாகிய விபக்கத்துக்கும் பொதுவாக இருக்கும் ஒரு முறையிலே சொல்லப்படுவதாகும். 'சத்தம் அநித்தத் தன்மையது அறியப்படுதலினால்' என்று கூறினானாக 'அறியப்படுதல்' என்பது நித்தம் அநித்தமாகிய இரண்டிற்குமே சமமாகப் பொருந்தும். 'குடம்போல் அநித்தமென்று அறிவதோ? அன்றி ஆகாயம்போல் நித்தம் என்று அறிவதோ?' என்று ஐயுறுதற்கு இடமாகிறது.

அசாதாரணம் : என்பது சாதிக்கக் கருதிச் சொல்லும் பக்க வசனத்திற்குப் பொருந்தி நிற்கும் ஏதுவானது, சபக்கம் விபக்கம் ஆகிய

சபக்க விபக்கம் தம்மிலின் றாதல்
சத்தம் நித்தம் கேட்கப் படுதலின்
என்னில் கேட்கப் படல்எனும் ஏதுப்
பக்கத் துள்ள தாயின் அல்லது
சபக்க விபக்கத்து மீட்சித்து ஆதலின்
சங்கயம் எய்தி அநேகாந் திகமாம்
சபக்கைக தேச விருத்தி விபக்க
வியாபி யாவது ஏதுச் சபக்கத்து
ஓரிடத்து எய்தி விபக்கத்து எங்கும்
உண்டாதல் ஆகும் சத்தம் செயலிடைத்
தோன்றா தாகும் அநித்தம் ஆகலின்
என்றால் அநித்தம் என்ற ஏதுச்
செயலிடைத் தோன்றா மைக்குச் சபக்கம்
மின்னினும் ஆகா சத்தினும் மின்னின்
நிகழ்ந்துஆ காசத்தில் காணாது ஆகலின்
அநித்தம் கடாதியின் ஒத்தலில் கடம்போல்
அழிந்து செயலில் தோன்றுமோ மின்போல்
அழிந்து செயலில் தோன்றா தோஎனல்
விபக்கைக தேச விருத்தி சபக்க
வியாபி யாவது ஏது விபக்கத்து
ஓரிடத்து உற்றுச் சபக்கத்துஒத்து இயறல்
சத்தம்; செயலிடைத் தோன்றும் அநித்தம்ஆ தலின்எனின்
அநித்த ஏதுச் செயலிடைத் தோன்றற்கு
விபக்க ஆகா யத்தினும் மின்னினும்
மின்னின் நிகழ்ந்துஆ காசத்துக் காணாது
சபக்கக் கடாதிகள் தம்மில்
எங்குமாய் ஏகாந்தம் அல்ல மின்போல்
அநித்தமாய்ச் செயலிடைத் தோன்றாதோ கடம்போல்
அநித்த மாய்ச் செயலிடைத் தோன்று மோஎனல்

245. ஒத்து இயறல் – நன்கு பொருந்தியிருத்தல்.

இரண்டிடத்தும் முற்றும் பொருந்தாதொழிவதாம் 'சத்தம் நித்தத் தன்மையுடையது கேட்கப்படுதலினாலே' என்றால் 'கேட்கப்படுதல்' என்னும் ஏது, பக்கப பொருளாகிய சத்தத்து உளதாவதேயன்றி, சபக்க விபக்கங்களில் பொருந்தி இல்லை. ஆதலின் அது ஐயத்திற்குரியதாகி அநைகாந்திகம் என்னும் குற்றமாம்.

சபக்கைக தேச விருத்தி விபக்க வியாபி என்பது சபக்கப் பொருள்களில் ஏதேனும் ஒன்றில் பொருந்தி, விபக்கப் பொருள்கள் எல்லாவற்றிலும் பொருந்தியிருப்பதாகும். 'சத்தம் செயலிடத்துத் தோன்றுவது அன்று' எனப் பக்க வசனமும், 'அது அநித்தமாதலால்' என அதற்கு ஏதுவும் சொன்னால், அநித்தம் என்ற ஏதுவானது செயலிடைத்தோன்றாமைக்குச் சபக்கம், மின்னினும் ஆகாசத்தினும் ஆகிய இவற்றினுள் மின்னிடத்தே பொருந்தியும் ஆகாசத்தில் பொருந்தாமையும் உடையதாயிருக்கின்றதனால், அநித்தம் எனும் ஏது விபக்கமான குடம் முதலிய அநித்தப் பொருள்களில் முழுதும் பொருந்துவதால், குடம்போல அழிந்து அந்த அழியும் செயலிடத்துத் தோன்றுமோ? மின்போல அழிந்து அச்செயலிடத்தே தோன்றாது போகுமா? என்ற ஐயத்திற்கிடமாகும்.

விபக்கைக தேச விருத்தி சபக்க வியாபி என்பது விபக்கத்துள்ள பொருள்களில் ஒன்றில் பொருந்தி, சபக்கத்துள்ள பொருள்கள் எல்லாவற்றிலும் நன்கு பொருத்தியிருப்பதாம். 'சத்தம் செயலிடைத் தோன்றும் அநித்தம் ஆதலால்' என்றால் அநித்தமாகிய அந்த ஏது, செய்லிடைத் தோன்றுதற்கு, விபக்கமாகிய ஆகாயம், மின் என்னும் இவற்றுள் மின்னுக்குப் பொருந்துவதாயும் ஆகாசத்துக்குப் பொருந்தாமை உடையதாயும், சபக்கப் பொருள்களான கடம் முதலியவற்றினுள் எங்கும் முற்றப் பொருந்துவதாய் அநைகாந்திகம் என்னும் குற்றம் உடையதாக விளங்கிற்று. 'மின்போல அநித்தமாயச் செயலிடைத் தோன்றாதோ? கடம்போல அநித்தமாய்ச் செயலிடைத் தோன்றுவதோ?' என ஐயத்திற்கிடமாய் முடிவின்றிப் போலியாயிற்று.

உபயைக தேச விருத்தி ஏதுச்
சபக்கத் தினும்விபக் கத்தினும் ஆகி
ஓர்தே சத்து வர்த்தித்தல் சத்தம்
நித்தம் அமூர்த்தம் ஆதலின் என்னின்
அமூர்த்த ஏது நித்தத் தினுக்குச்
சபக்கஆ காச பரமா ணுக்களின்
ஆகா சத்து நிகழ்ந்து மூர்த்தமாம்
பரமா ணுவின்நிக ழாமை யானும்
விபக்க மான கடசுகா திகளில்
சுகத்து நிகழ்ந்து கடத்துஒழிந் தமையினும்
ஏகதேசத்து நிகழ்வதுஏ காந்தம்அன்று
அமூர்த்தம் ஆகாசம் போல நித்தமோ
அமூர்த்த சுகம்போல் அநித்த மோஎனல்
விருத்த வியபிசாரி திருந்தா ஏதுவாய்
விருத்த ஏதுவிற் கும்இடம் கொடுத்தல்
சத்தம் அநித்தம் செயல்இடைத் தோன்றலின்
ஒத்தது எனின்அச் செயலிடைத் தோன்றற்குச்
சபக்கமாய் உள்ள கடாதி நிற்கச்
சத்தம் நித்தம் கேட்கப் படுதலில்
சத்தத் துவம்போல் எனச்சாற் றிடுதல்
இரண்டினும் சங்கயமாய் ஏகாந்தம் அல்ல
விருத்தம் தன்னைத் திருத்தக விளம்பில்
தன்மச் சொரூப விபரீத சாதனம்
தன்ம விசேட விபரீத சாதனம்
தன்மிச் சொரூப விபரீத சாதனம்
தன்மி விசேட விபரீத சாதனம்
என்ன நான்கு வகையது ஆகும்அத்
தன்மச் சொரூப விபரீத சாதனம்
சொன்ன ஏதுவில் சாத்திய தன்மத்து
உருவம் கெடுதல் சத்தம் நித்தம்
பண்ணப் படுதலின் என்றால் பண்ணப்
படுவது அநித்தமா தலில்பண்ணப் பட்ட

256. ஓர் தேசத்து வர்த்தித்தல் – ஒவ்வொன்றிலும் ஒரோரிடத்துப் பொருத்தமாக நிலவுதல்.

உபயைக தேச விருத்தி என்பது, கூறப்படுகின்ற ஏதுவானது சபக்கத்தினும் விபக்கத்தினும் உரியதாக, ஒவ்வொன்றிலும் ஓரோரிடத்துப் பொருத்தமாக நிலவுதலாம். 'சத்தம் நித்தம்' எனப் பக்க வாகனமும், அது 'அமூர்த்தம் ஆதலால்' என ஏதுவும் கூறினால், அமூர்த்தம் என்னும் ஏது நித்தத்தினையுடைய சபக்கத்து அடங்குவனவான ஆகாசம், பரமாணுக்கள் ஆகியவற்றினுள்ளே ஆகாசத்து நிகழ்ந்து பரமாணுக்களின்கண் நிகழாமையால் பொருந்தாது ஒழிவதாம் விபக்கத்து அடங்குவனவான குடம் இன்பம் என்பவற்றுள், அமூர்த்தமாகிய ஏது இன்பத்துக்குப் பொருத்தமாய்க் குடத்துக்குப் பொருத்தமின்றி ஒழிந்தமையானும், 'சபக்கம் விபக்கம்' ஆகிய இரண்டினும் ஏக தேசத்துப் பொருந்துவதாகும். அநைகாந்திக மாதல் எங்ஙனமெனின் அமூர்த்தம் ஆகாசம்போல நித்தமோ, இன்பம்போல அநித்தமோ என ஐயுற்று மயக்கம் ஏற்படுவதாம். எனவே இங்ஙனம் கூறுவது உபையகதேச விருத்தியாம்.

விருத்த வியபிசாரி என்னும் ஏதுப்போலியாவது திருந்தாத ஏதுவாக அமைவதாம். விருத்த ஏதுவாகிய ஏதுப் போலிக்கும் அது இடம் கொடுத்து நிற்கும். வைசேடிகன், 'சத்தம் அநித்தமுடையது; அது செயலிடைத் தோன்றலின் ஒத்தது' என்னும்போது அச்செயலிடைத் தோன்றுவதற்குச் சபக்கமாயுள்ள குடம் முதலியன பொருத்தமாய் நிற்பனவாம். 'சத்தம் நித்தமானது கேட்கப்படுதலினால்' என மீமாஞ்சகன் உரைக்கும்போது, 'சத்நத்துவத்தைப் போல' என்று சொல்லுதல் இருபக்கத்து ஏதுக்களிலும் ஐயம் உடையதாயும், இரண்டிலே ஒன்றுக்கும் பொருத்தமற்றதாயும் அமைந்து அமையும்.

விருத்தம் - நான்கு (275 - 339)

விருத்தம் என்னும் போலியின் தன்மையைத் திருத்தமுடனே சொல்வதானால், அது (i) தன்மச் சொரூப விபரீத சாதனம் (ii) தன்ம விசேட விபரீத சாதனம் (iii) தன்மிச் சொரூப விபரீத சாதனம் (iv) தன்மி விசேட விபரீத சாதனம் என நான்கு வகையாம்.

தன்மச் சொரூப விபரீத சாதனம் என்னும் ஏதுப் போலியாவது கூறிய ஏதுவினாலே சாத்திய தன்மமாகிய துணி பொருளின் சிறப்பியல்பு கெட மொழிவது. 'சத்தம் நித்தத்தன்மையுடையது பண்ணப்படுதலின்' என்னுமிடத்துப் பண்ணப்படுதல் என்னும் ஏது

ஏதுச் சாத்திய தன்மநித் தத்தைவிட்டு
அநித்தம் சாதித்த லான்விப ரீதம்
தன்ம விசேட விபரீத சாதனம்
சொன்ன ஏதுச் சாத்திய தன்மம்
தன்னிடை விசேடம் கெடச்சா தித்தல்
கண்முதல் ஓர்க்கும் இந்திரி யங்கள்
எண்ணில் பரார்த்தம் தொக்குநிற் றலினால்
சயனா சனங்கள் போல என்றால்
தொக்கு நிற்றலின் என்கின்ற ஏதுச்
சயனா சனத்தின் பரார்த்தம்போல் கண்முதல்
இந்தியங் களையும் பரார்த்தத்தில் சாதித்து
சயனா சனவா னைப்போல் ஆகிக்
கண்முதல் இந்தியத் துக்கும் பரனாய்ச்
சாதிக் கிறநிர் அவயவமாய் உள்ள
ஆன்மா வைச்சா வயவ மாகச்
சாதித் துச்சாத் தியதன் மத்தின்
விசேடம் கெடுத்த லின்விப ரீதம்
தன்மிச் சொரூப விபரீத சாதனம்
தன்மி உடைய சொரூபமாத் திரத்தினை
ஏதுத் தானே விபரீதப் படுத்தல்
பாவம் திரவியம் கன்மம் அன்று
குணமும் அன்றுஎத் திரவியம் ஆம்எக்
குணகன் மத்துஉண் மையின்வே றாதலால்
சாமா னியவிசே டம்போல் என்றால்
பொருளும் குணமும் கருமமும் ஒன்றாய்
நின்றவற் றின்இடை உண்மைவே றாதலால்என்று
காட்டப் பட்ட ஏது மூன்றினுடை
உண்மை வேறு படுத்தும் பொதுவாம்
உண்மை சாத்தியத்து இல்லா மையினும்

---

291 இந்திரியங்கள் – பொருள்களை அறிதற்குக் கருவியாகிய கண் முதலிய பொறிகள்.
293 சயன ஆசனங்கள்– படுக்கையும் இருக்கையும்.
295 பரார்த்தம் – பிறர்க்குப் பயன்படுவது.
298 பரனாய் – வேறாய்.

சாத்திய தன்மமாகிய நித்தத்தை விட்டு அநித்தத்தையே சாதித்தலால் இது சொரூப விபரீத சாதன விருத்தமாயிற்று.

தன்ம விசேட விபரீத சாதனம் எனும் ஏதுப்போலியானது சொன்ன ஏதுவானது சாத்திய தன்மத்திடத்தேயுள்ள விசேடம் கெடுமாறு ஒன்றைச் சாதிப்பதாம். பொருள்களை அறிதற்குக் கண் முதலாகிய பொறிகள் ஆராயுமிடத்துத் தம்மின் வேறாயுள்ள ஆன்மாவுக்குப் பயன்படுவனவாம். பலவாய்த் தொக்கியிருப்பதால் படுக்கையும் இருக்கையும் போல என்று கூறியவழி, 'தொக்கு நிற்றலின்' என்னும் ஏது, 'சயன ஆசனத்தின் பிறர்க்குப் பயன்படும் தன்மைபோல்' என்று கண் முதலிய இந்திரியங்களையும் பிறர்க்குப் பயன்படுதல் என்னும் பொருளிலே சாதித்து, சயன ஆசனவானைப் போலவே மனமும் ஒரு தனிப் பொருளாகிக் கண் முதலிய இந்திரியத்துக்கும் வேற்றுப் பொருளாய்ச் சாதிக்கிறதாயிற்று. உறுப்பாகவே இல்லாததாகிய ஆன்மாவை, உணர்வற்ற அவயவமாகச் சாதித்துச் சாத்திய தன்மத்தின் விசேடத்தினைக் கெடுத்தலினால் இஃது இங்ஙனம் போலியாயிற்று.

தன்மிச் சொரூப விபரீத சாதனம் என்னும் ஏதுப் போலியானது தன்மியின் சிறப்பியல்பினை ஏதுவே விபரீதப்படுத்தி விடுவதாம். 'பாவம் திரவியம் அன்று; கன்மம் அன்று; குணமும் அன்று. எத்திரவியம், எக்குணம் எக்கன்மத்து உண்மையின் வேறாதலால் சாமானியமும் விசேடமும் போல' என்றால், 'பொருளும் குணமும் தொழிலும் ஒன்றாய் நின்றவற்றினிடையே பொருள் வேறாதலால்' என்று காட்டப்பட்ட ஏதுவானது, மூன்றின் கண்ணுமுள்ள உண்மைத் தன்மையின் வேறுபட்டு நிற்கும் பொதுவான உண்மைத் தன்மை, சாதிக்கப்படுவதனிடத்தே இல்லாமையானும், திட்டாந்தத்தில்

திட்டாந் தத்தில் சாமானியம் விசேடம்
போக்கிப் பிறிதுஒன்று இல்லாமை யானும்
பாவம் என்று பகர்ந்ததன் மியினை
அபாவம் ஆக்குத லான்விப ரீதம்
தன்மி விசேட விபரீத சாதனம்
தன்மி விசேட அபாவம் சாதித்தல்
முன்னம் காட்டப் பட்ட ஏதுவே
பாவமா கின்றது கருத்தா வுடைய
கிரியையும் குணமும்ஆம் அதனை விபரீதம்
ஆக்கியது ஆதலால் தன்மி விசேடம்
கெடுத்தது, தீய எடுத்துக்காட்டு ஆவன
தாமே திட்டாந்த ஆபா சங்கள்
திட்டாத் தம்இரு வகைப்படும் என்றுமுன்
கூறப் பட்டன இங்கண் அவற்றுள்
சாதன் மியதிட் டாந்தஆ பாசம்
ஓதில் ஐந்து வகைஉள தாகும்
சாதன தன்ம விகலமும் சாத்திய
தன்ம விகலமும் உபய தன்ம
விகலமும் அநன்னு வயவிப ரீதான்
னுவயம் என்ன, வைதன் மியதிட்
டாந்த ஆபா சமும்ஐ வகைய
சாத்தி யாவி யாவி ருத்தி
சாத னாவி யாவி ருத்தி
உபயாவி யாவி ருத்திஅவ் வெதிரேகம்
விபரீத வெதிரேகம் என்ன, இவற்றுள்

323. கிரியை – தொழில்.
326. ஆபாசங்கள் – போலி

கூறப்பட்ட பொதுவுஞ் சிறப்புமாகிய இயல்புடைய பொருள்களுள் ஒன்றின் வழிப்பிறிதொன்றில்லையாதலாலும், பாவமென்று பக்க வசனத்துள் எடுத்தோதப்பட்ட தன்மியின் சொரூப இயல்பைக் கெடுத்து, அபாவமெனச் சாதித்து விடுதலால் விபரீதப் போலியாயிற்று.

தன்மி விசேட விபரீத சாதனம் ஆவது, தன்மியின் விசேடத்தையே விபரீதமாகத் துணிதற்கு ஏற்றவாறு ஏதுக் கூறுதல். முன்னம் காட்டப்பெற்ற 'பாவம் திரவியம் குண கன்மம் அன்று. எத்திரவியம் ஆம்? எக்குண கன்மத்து உண்மையின் வேறாதலால் சாமானிய விசேடம் போல' என்ற ஏதுவே பாவம் ஆகின்றது. கருத்தாவாகிய சொல்வோனால் கொள்ளப்பெற்ற கன்மமும் குணமுமாம் அதனையே விபரீதமாகச் சாதித்தது. அதனால் தன்மியின் சிறப்புத் தன்மையைக் கெடுத்தது ஆயிற்று. இவ்வாறு தன்மி விசேடம் மாறுபாடடைய நின்றமையினால் தன்மி விசேட விபரீத சாதனமாயிற்று.

திட்டாந்தப்போலி - இரண்டு

திட்டாந்தப் போலி என்பன குற்றமுடைய எடுத்துக்காட்டுகளாம். திட்டாந்தம், 'சாதன்மியம், வைதன்மியம்' என முன்னரே கூறப்பட்டது.

திட்டாந்தப் போலி வகை இரண்டனுள் சாதன்மிய திட்டாந்தப் போலிவகையைக் கூறுமிடத்து அவை ஐந்து வகைப்படும். அவை (i) சாதன தன்ம விகலம் (ii) சாத்திய தன்ம விலகம் (iii) உபய தன்ம விகலம் (iv) அநன்னுவயம் (v) விபரீதான்னுவயம் என்பனவாம்.

வைதன்மிய திட்டாந்த ஆபாசமும் அதே போன்று ஐந்து வகையினவாம். அவை, (i) சாத்தியா வியாவிருத்தி (ii) சாதனா வியாவிருத்தி (iii) உபயா வியா விருத்தி (iv) அவ் வெதிரேகம் (v) விபரீத வெதிரேகம் என்பனவாம்.

சாதன தன்ம விகலம் ஆவது
திட்டாந் தத்தில் சாதனம் குறைவது
சத்தம் நித்தம் அமூர்த்தம் ஆதலான்
யாதொன்று யாதொன்று அமூர்த்தம்அது நித்தம்
ஆதலால் காண்புற்றது பரமாணு வில்எனில்
திட்டாந் தப்பர மாணு
நித்தத் தோடு மூர்த்தம் ஆதலால்
சாத்திய தன்ம நித்தத்துவம் நிரம்பிச்
சாதன தன்மஅமூர்த் தத்துவம் குறையும்
சாத்திய தன்ம விகலம் ஆவது
காட்டப் பட்ட திட்டாந் தத்தில்
சாத்திய தன்மம் குறைவு படுதல்
சத்தம் நித்தம் அமூர்த்தம் ஆதலால்
யாதொன்று யாதொன்று அமூர்த்தம்அது நித்தம்
புத்தி போஒல் என்றால்
திட்டாந்த மாகக் காட்டப்பட்ட
புத்தி அமூர்த்தம் ஆகி நின்றே
அநித்தம் ஆதலால் சாதன அமூர்த்தத்துவம்
நிரம்பிச் சாத்திய நித்தத்துவம் குறையும்
உபய தன்ம விகலம் ஆவது
காட்டப் பட்ட திட்டாந் தத்திலே
சாத்திய சாதனம் இரண்டும் குறைதல்
அன்றியும் அதுதான் சன்னும் அசன்னும்
என்றுஇரு வகையாம் இவற்றுள்சன் னாஉள
உபய தன்ம விகலம் ஆவது
உள்ள பொருள்கண் சாத்திய சாதனம்
கொள்ளும் இரண்டும் குறையக் காட்டுதல்
சத்தம் நித்தம் அமூர்த்தம் ஆதலான்
யாதொன்று யாதொன்று அமூர்த்தம்அது நித்தம்
கடம்போல் எனில்திட் டாந்த மாகக்
காட்டப் பட்டகடம் தான்உண் டாகிச்
சாத்திய மாயுள நித்தத் துவமும்
சாதன மாயுள அமூர்த்தத்து வமும்குறையும்

சாதன்மிய திட்டாந்த ஆபாசங்கள் - விளக்கம் (340 - 401)

சாதன தன்ம விகலம் ஆவது, வாதிடுபவன் காட்டுகின்ற திட்டாந்தத்திலே ஏதுவாகிய சாதனம் பொருந்தாது குறைபட்டு விளங்குவதாம். 'சத்தம் நித்தமானது அமூர்த்தம் ஆதலின்; யாதொன்று அமூர்த்தம் அது நித்தம் ஆதலின் காண்பற்றது பரமாணுவில்' என்று சொன்னால், திருட்டாந்தமாகக் காட்டிய பரமாணு, நித்தத்துவமும் மூர்த்தமுமாம் இயல்பும் உடையது. ஆதலின் சாத்திய தன்மமாகிய நித்தத்துவம் நிரம்பலுற்றதேனும், சாதன தன்மமாகிய அமூர்த்தத் தன்மை குறைபட்டதாயிற்று. இவ்வாறு வருவது சாதன தன்ம விகலமாகும்.

சாத்திய தன்ம விகலம் என்பதாவது, எடுத்துக் காட்டப்பெற்ற திட்டாந்தத்தில் சாத்திய தன்மம் குறைபட்டுப் போதல் 'சத்தம் நித்தம் அமூர்த்தம் ஆதலால் யாதொன்று யாதொன்று அமூர்த்தம் அது நித்தத்துவம் உடையது, புத்தியைப் போல' என்று கூறினால், திட்டாந்தமாக எடுத்துக்காட்டப்பட்ட புத்தி என்பது அமூர்த்தம் ஆகி நின்றே, அநித்தத் தன்மையும் உடையதாதலால், சாதனமாகிய அமூர்த்தத்துவம் நிறைவுற்றதேனும், சாத்தியமாகிய நித்தத்துவம் குறைபட்டதாயிற்று.

உபய தன்ம விகலம் ஆவது எடுத்துக்காட்டப்பட்ட திட்டாந்தத்திலே சாத்திய தன்மும் சாதன தன்மமும் ஆகிய இரண்டுமே பொருந்தாதொழிவது. அன்றியும் உபய தன்ம விகலம் எனும் அது சன்னு உபய தன்ம விலகம் எனவும் அசன்னு உபய தன்ம விலகம் எனவும் இருவகையாகக் கூறப்படும்

அ) சன்னு உபய தன்ம விலகம் ஆவது, திட்டாந்தமாகக் காட்டப்பெற்றுள்ள பொருளினிடத்தே சாத்திய தன்மமும் சாதன தன்மமும் ஆகிய இரண்டும் குறைபாடுடையதாகக் காட்டுதலாம். 'சத்தம் நித்தத் தன்மையுடையது, அமூர்த்தமாதலான், யாது யாது அமூர்த்தம் அது நித்தமாம் தன்மையுடையதுமாம்; அது குடத்தினைப்போல' என்று சொன்னால், திட்டாந்தமாகக் காட்டப்பெற்ற குடம் என்பது தான் உண்டாகிச் சார்த்தியமாக உளதாயிருக்கின்ற நித்தத்துவமும், சாதனமாய் உளதாயிருக்கும் அமூர்த்தத்துவமும் ஆகிய இரண்டுமே இல்லாததாகும் என்றறிக.

அசன்னா உள்ள உபயதன்ம விகலம்
இல்லாப் பொருள்கண் சாத்திய சாதனம்
என்னும் இரண்டும் குறையக் காட்டுதல்
சத்தம் அநித்தம் மூர்த்தம் ஆதலான்
யாதொன்று யாதொன்று மூர்த்தம்அது அநித்தம்
ஆகாசம் போல்எனும் திட்டாந் தத்துச்
சாத்திய தன்மமாய் உள்ள அநித்தமும்
சாதன தன்மமாய் உள்ள மூர்த்தமும்
இரண்டும் ஆகாசம் அசத்துஎன் பானுக்கு
அதன்கண் இன்மை யானே குறையும்
உண்டுஎன் பானுக்கு ஆகாசம் நித்தம்
அமூர்த்தம் ஆதலால் அவனுக்கும் குறையும்
அநன்னுவயம் ஆவது சாதன சாத்தியம்
தம்மின் கூட்ட மாத்திரம் சொல்லாதே
இரண்ட னுடைய உண்மையைக் காட்டுதல்
சத்தம் அநித்தம் கிருத்தம் ஆதலின்
யாதொன்று யாதொன்று கிருத்தம்அது அநித்தம் எனும்
அன்னுவயம் சொல்லாது குடத்தின் கண்ணே
கிருத்த அநித்தம் காணப் பட்ட
என்றால் அன்னுவயம் தெரியா தாகும்
விபரீதான் னுவயம் வியாபகத் துடைய
அன்னுவயத் தாலே வியாப்பியம் விதித்தல்
சத்தம் அநித்தம் கிருத்தத் தால்எனின்
யாதொன்று யாதொன்று கிருத்தம் அநித்தம்என
வியாப்பியத் தால்வியா பகத்தைக் கருதாது
யாதொன்று யாதொன்று அநித்தம்அது கிருத்தம்என
வியாபகத் தால்வியாப் பியத்தைக் கருதுதல்
அப்படிக் கருதின் வியாபகம் வியாப்பியத்தை
இன்றியும் நிகழ்த்த லின்விப ரீதமாம்.

ஆ) அசன்னு உபய தன்ம விலகம் என்பது இல்பொருளாம் ஒன்றைக் காட்டுமிடத்து சாத்திய சாதனம் இரண்டும் குறையக் காட்டுதல் 'சத்தம் அநித்தம்; ஆதலான் யாதொன்று யாதொன்று மூர்த்தம் அது அநித்தமாம்; ஆகாசத்தினைப் போல' என்று கூறினால் ஆகாசமாகிய திட்டாந்தத்திற்குச் சாத்திய தன்மமாயுள்ள அநித்தத்துவமும், சாதன தன்மமாயுள்ள மூர்த்தத் தன்மையும் ஆகிய இரண்டும், 'ஆகாசமென்ற ஒன்றே இல்லாதது' என்று சொல்பவனுக்கு அதன்கண் பெறப்படாமையினாலே குறைபாடுடையதாம். 'ஆகாசம் உண்டு' என்பானுக்கும், அது நித்தத்துவமும் அமூர்த்தமுமாம் இயல்பும் உளதாக அவனால் கொள்ளப்படுமாதலால் அவனுக்கும் அது குறைபாடுடையதாக, உபயதன்ம விகலமாம்.

அநந்நுவயம் என்னும் திட்டாந்தப் போலியானது சாதன சாத்தியங்களினுடைய அன்னுவயத்தைச் சொல்லிக் காட்டாமல், இரண்டும் பொருந்தியுள்ள திட்டாந்தத்தை மட்டுமே காட்டி விடுதல். 'சத்தம் அநித்தத்துவம் உடையது, அது பண்ணப்படுதலினாலே' என்று மட்டும் சொல்லி, 'யாதொன்று யாதொன்று பண்ணப்படுவது அது அநித்தத் தன்மையும் உடையதாதலினாலே' என்னும் அன்னுவயத் தினைச் சொல்லாது விட்டுவிட்டுக், 'குடத்தின் கண்ணே பண்ணப் படுதலால் ஏற்படும் அநித்தத்துவம் காணப்படுகின்றதுபோல' என்று மட்டும் சொன்னால் அன்னுவயம் தெரியாமற் போகும். இங்ஙனமாவதே அநந்நுவயமாம் என்க.

விபரீதான்னுவயம் ஆவது அன்னுவயத்தாலே வியாப்பிய மாகிய சாதன தன்மமும் பொருந்தியிருப்பதாக எடுத்துக்காட்டுவதாம். 'சத்தம் அநித்தம், பண்ணப்படுதலால்' என்று சொன்னால், 'யாதொன்று யாதொன்று பண்ணப்படுவது அநித்தம்' என வியாப்பியத்தால் வியாபகத்தைக் கருதாது, 'யாதொன்று யாதொன்று அநித்தம், அது பண்ணப்படுவது' என வியாபகத்தால் வியாப்பியத்தைக் கருதலாம். அப்படிக் கருதினால், வியாபகம் வியாப்பியம் இன்றியும் நிகழ்தலினாலே விபரீதான்னுவயம் ஆகும்.

வைதன்மிய திட்டாந் தத்துச்
சாத்தி யாவியா விருத்தி யாவது
சாதன தன்மம் மீண்டு
சாத்திய தன்மம் மீளாது ஒழிதல்
சத்தம் நித்தம் அமூர்த்தத்து என்றால்
யாதொன்று யாதொன்று நித்தமும் அன்றுஅது
அமூர்த்தமும் அன்று பரமாணுப் போல்எனின்
அப்படித் திட்டாந்த மாகக் காட்டப்பட்ட
பரமாணு நித்தமாய் மூர்த்தம் ஆதலின்
சாதன அமூர்த்தம் மீண்டு
சாத்திய நித்தம் மீளாது ஒழிதல்
சாத னாவியா விருத்தி யாவது
சாத்திய தன்மம் மீண்டு
சாதன தன்மம் மீளாது ஒழிதல்
சத்தம் நித்தம் அமூர்த்தத்து என்றால்
யாதொன்று யாதொன்று நித்தம் அன்றுஅஃது
அமூர்த்தமும் அன்று கன்மம்போல் என்றால்
வைதன் மியதிட் டாந்த மாகக்
காட்டப் பட்ட கன்மம்
அமூர்த்தமாய் நின்றே அநித்தம் ஆதலின்
சாத்திய மான நித்தியம் மீண்டு
சாதன மான அமூர்த்தம் மீளாது
உபயாவி யாவிருத்தி காட்டப் பட்ட
வைதன் மியதிட் டாந்தத்தி னின்று
சாதன சாத்தியங்கள் மீளாமை அன்றியும்
உண்மையின் உபயா வியாவி ருத்தி
இன்மையின் உபயா வியாவி ருத்தி
எனவிரு வகைஉண்மையின்

வைதன்மிய திட்டாந்த ஆபாசங்கள் (402 - 468)

சாத்தியா வியாவிருத்தி ஆவது சாதன தன்மம் மீண்டு நிற்கச் சாத்திய தன்மம் மீளாது போதல். 'சத்தம் நித்தம் அமூர்த்தத்து' என்று சொல்லி, 'யாதொன்று யாதொன்று நித்தமும் அன்று அமூர்த்தமும் அன்று, பரமாணுப் போல' எனவும் பரமாணுவைத் திட்டாந்தமாகச் காட்டினால், அப்படித் திட்டாந்தமாகக் காட்டப்பட்ட பரமாணு, நித்தத்துவம் உடையதாய், உருவமும் உடையதாதலின், சாதனதன்மமாகிய அமூர்த்தத்திற்கு மீட்சியாகிய உருவமுடைய தன்மை மீண்டு, சாத்திய தன்மமாகிய நித்தத்துவத்தின் மீட்சியான அநித்தத்துவம், பிரமாணுவிடத்தே இல்லாது போதலால், குற்றமாய் சாத்தியா வியாவிருத்தி வைதான்மியத் திட்டாந்தப் போலியாயிற்று.

சாதனாவியா விருத்தியாவது சாத்திய தன்மம் மீண்டு, சாதன தன்மம் மீளாது ஒழிதல் 'சத்தம் நித்தம் அமூர்த்தத்து' என்று சொல்லி 'யாதொன்று யாதொன்று நித்தமன்று அஃது அமூர்த்தமும் அன்று, தன்மம்போல்' என்று திட்டாந்தமும் காட்டினால், வைதன்மிய திட்டாந்தமமாகக் காட்டப்பெற்ற கன்மமானது, உருவற்றதாய் நின்றே அநித்தத்துவம் உடையதாதலின், சாத்தியமான நித்தியம் மீட்சியுற்று சாதனமான அமூர்த்தம் மீளாது போயினமை ஆயிற்று.

உபயா வியா விருத்தி ஆவது, காட்டப்பட்ட வைதன்மிய திட்டாந்தத்திலிருந்து சாதன சாத்தியங்கள் இரண்டும் மீளாமல் போவதாம். அல்லாமலும், உண்மையின் உபயா வியாவிருத்தி, இன்மையின் உபயா வியாவிருத்தி என இருவகைப்படும்.

உபயாவி யாவிருத்தி உள்ள பொருள்கண்
சாத்திய சாதனம் மீளா தபடி
வைதன் மியதிட் டாந்தம் காட்டல்
சத்தம் நித்தம் அமூர்த்தம் ஆதலின்
என்றாற்கு யாதொன்று யாதொன்று நித்தம்அன்று
அமூர்த்தமும் அன்றுஆ காசம்போல் என்றால்
வைதன்மியா திட்டாந்த மாகக் காட்டப்பட்ட
ஆகா சம்பொருள் என்பாற்கு
ஆகாசம் நித்தமும் அமூர்த்தமும் ஆதலான்
சாத்திய நித்தமும் சாதனமா உள்ள
அமூர்த்தமும் இரண்டும் மீண்டில இன்மையின்
உபயாவி யாவிருத்தி யாவது
சத்தம் அநித்தம் மூர்த்தம் ஆதலான்
என்றஇடத்து யாதொன்று யாதொன்று அநித்தம்
மூர்த்தமும் அன்றுஆ காசம் போல்என
வைதன் மியதிட் டாந்தம் காட்டில்
ஆகா சம்பொருள் அல்லஎன் பானுக்கு
ஆகாசந் தானே உண்மையின் மையினால்
சாத்திய அநித்தமும் சாதன மூர்த்தமும்
மீட்சியும் மீளா மையும்இலை யாகும்
அவ்வெதி ரேகம் ஆவது சாத்தியம்
இல்லா விடத்துச் சாதனம் இன்மை
சொல்லாதே விடுதல் ஆகும் சத்தம்
நித்தம் பண்ணப் படாமையால் என்றால்
யாதொன்று யாதொன்று நித்தம் அன்று
பண்ணப் படுவது அல்லா ததுவும்
அன்றுஎனும் இவ்வெதி ரேகம் தெரியச்
சொல்லாது குடத்தின் கண்ணே பண்ணப்
படுதலும் அநித்தமும் கண்டேம் ஆதலான்
என்னின் வெதிரே கம்தெரி யாது

உண்மையின் உபயா வியாவிருத்தியாவது உளதாகிய ஒரு பொருளின்கண், சாத்திய தன்மம் மீட்சியடையாதபடி, வைதன்மிய திட்டாந்தம் எடுத்துக் காட்டுதலாகும். 'சத்தம் நித்தம், அமூர்த்தம் ஆதலின்' என்று கூறியவனுக்கு 'யாதொன்று யாதொன்று நித்தமன்று, அது அமூர்த்தமுமன்று ஆகாசத்தைப் போல' என்றால் வைதன்மிய திட்டாந்தமாகக் காட்டப்பெற்ற 'ஆகாசம்' என்பது, அதனை 'உள்ள பொருள்' என்பவனுக்கு, 'அது நித்தமும் அமூர்த்தமும்' ஆதலின், சாத்திய தன்மமாகிய நித்தத்துவமும் சாதன தன்மமாகிய அமூர்தமும் ஆகிய இரண்டுமே மீட்சி பெற்றில; எனவே போலியாயிற்று.

இன்மையின் உபயா வியாவிருத்தியாவது, 'சத்தம் அநித்தம், அது மூர்த்தம் ஆதலான்' என்றுரைத்தவிடத்து, 'யாதொன்று யாதொன்று அநித்தம் அது மூர்த்தமும் அன்று ஆகாசத்தைப்போல' என வைதன்மிய திட்டாந்தமும் காட்டினால், 'ஆகாசம் ஒரு பொருளே அல்ல' என்பானாகிய எதிராளிக்கு ஆகாசம்தானே உண்மை என்பது இல்லாமையினாலே, சாத்தியப் பொருளின் அநித்தமும், சாதன தன்மத்து மூர்த்தமும், மீண்டு நிற்றலும் மீளாதே நிற்றலும் இல்லையாகிக் குற்றம் ஆம்.

அவ்வெதிரேகம் என்பதாவது சாத்திய தன்மம் இல்லாத இடத்துச் சாதன தன்மம் இல்லையென்று சொல்லாமலே விட்டுவிடுதலாம். 'சத்தம் நித்தமாகும் பண்ணப்படுவது அன்று ஆதலால்' என்றால், 'யாதொரு பொருள் நித்தமன்றோ அது பண்ணப்படுவதல்லாதது என்னும் அதுவுமன்று' என்று கூறி இந்த வெதிரேகம் தெளியப் புலனாமாறு சொல்லாமல், 'குடத்தினிடத்தே பண்ணப்படுதலும் அநித்தமும் கண்டேம் ஆதலால்' என்று எடுத்துச் சொன்னால், எதிரேக வியாத்தி விளங்கத் தெரிவிக்கப்படாமையின் குற்றமாயிற்று.

விபரீத வெதிரேகம் ஆவது
பிரிவைத் தலைதடு மாறாச் சொல்லுதல்
சத்தம் நித்தம் மூர்த்தம் ஆதலின்
என்றால் என்று நின்ற இடத்து
யாதோர் இடத்து நித்தமும் இல்லைஅவ்
விடத்து மூர்த்தமும் இல்லை எனாதே
யாதோர் இடத்து மூர்த்தமும் இல்லைஅவ்
விடத்து நித்தமும் இல்லை என்றால்
வெதிரேகம் மாறு கொள்ளும் எனக்கொள்க
நாட்டிய இப்படித் தீயசா தனத்தால்
காட்டும் அனுமான ஆபா சத்தின்
மெய்யும் பொய்யும் இத்திற விதியால்
ஐயம் இன்றி அறிந்துகொள் ஆய்ந்துஎன்.

விபரீத வெதிரேகமாவது விபக்கத்துவெதிரேக வியாத்தி வசனத்தைத் தலை தடுமாறச் சொல்லுதலாம். 'சத்தம் நித்தம் மூர்த்தமாதலின்' என்று காட்டினால், இங்ஙனம் நின்றவிடத்து, 'யாதோர் இடத்து நித்தமும் இல்லை; அவ்விடத்து மூர்த்தமும் இல்லை' என்று சொல்லாமல், 'யாதோர் இடத்து மூர்த்தமும் இல்லை, அவ்விடத்து நித்தமும் இல்லை' என்று சொன்னால் எதிரேகம் மாறுபட்டு விபரீத வெதிரேகம் ஆகும் என்க.

ஐயமின்றி அறிந்து கொள் (469 - 472)

'இவ்வாறு காட்டப்பெற்ற குற்றமுடைய சாதனங்களால் சொல்லப்படும் அனுமான ஆபாசத்தின் உண்மையையும் பொய்ம்மையையும் இத்திறம் கொண்ட விதிகளாலே ஐயம் திரிபின்றி ஆராய்ந்து அறிந்து தெளிவு கொள்வாயாக' என்று அறவண அடிகள் மணிமேகலைக்குக் கூறினார்.

30. பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை

தானம் தாங்கிச் சீலந் தலைநின்று
போன பிறப்பில் புகுந்ததை உணர்ந்தோள்
புத்த தன்ம சங்கம் என்னும்
முத்திற மணியை மும்மையின் வணங்கிச்
சரணா கதியாய்ச் சரண்சென்று அடைந்தபின்
முரணாத் திருவற மூர்த்தியை மொழிவோன்
அறிவு வறிதாய் உயிர்நிறை காலத்து
முடிதயங்கு அமரர் முறைமுறை இரப்பத்
துடித லோகம் ஒழியத் தோன்றிப்
போதி மூலம் பொருந்தி இருந்து
மாரனை வென்று வீரன் ஆகிக்
குற்றம் மூன்றும் முற்ற அறுக்கும்
வாமன் வாய்மை ஏமக் கட்டுரை
இறந்த காலத்து எண்ணில்புத் தர்களும்
சிறந்துஅருள் கூர்ந்து திருவாய் மொழிந்தது

---

1. சீலம் – ஐவகைச் சீலம்; அவையாவன கொல்லாமை, பொய் சொல்லாமை, களவின்மை, காமமின்மை, இரவாமை.
3. முத்திறமணி – புத்தன், தருமம், சங்கம். மும்மையின் வணங்கி – 'புத்தம் சரணங் கச்சாமி, தாமம் சரணங்கச்சாமி, சங்கம் சரணங் கச்சாமி' என்பனவற்றை மூன்று முறை ஓதி, மூன்று முறை பணிதல், மனம், மொழி, மெய் எனும் மூன்றாலும் வணங்கி என்றும் கொள்ளலாம்.
9. துடிதலோகம் – கௌதம புத்தராகத் தோன்றிய பிரபாபாலர் என்னும் போதி சத்துவர் இங்ஙனம் தோன்றுவதற்கு முன்பு இருந்த இடம் என்பர்.
10. போதிமூலம் – புத்தகயை என்னுமிடத்தில் ஐந்து கிளைகளையுடையதாய் விளங்கும் அரசமரம் (போதி - அரச மரம்)
12. குற்றம் மூன்று – காமம், வெகுளி, மயக்கம்.

30 பவத்திறம் அறுக எனப் பாவை நோற்ற காதை

மணிமேகலை சரண்புகுதல் (1 - 5)

தனது முற்பிறப்பின் வரலாற்றை அறிந்தவளாகிய மணிமேகலை தானம் செய்தாள்; சீலங்களின் வழி நின்றாள். 'புத்தன், தன்மம், சங்கம்' எனும் முத்திற மணிகளையும் மணிமேகலை மனம் மொழி மெய் எனும் மூன்றாலும் வணங்கினாள். புத்தன் திருவடியல்லது வேறே புகல் இல்லாதவளாய்ப் புத்த சங்கத்தில் அடைக்கலமாய்ப் புகுந்தாள்.

புத்தர் தோற்றம் (6 - 15)

புத்ததேவன் மாறுபாடில்லாத அறங்களின் வடிவானவன். அவன் வரலாற்றை அறவணர் சுருங்கக் கூறலானார்.

உயிர்கள் நல்லறிவின்றி நிரம்பியிருந்த காலத்தில் திருமுடியணிந்த தேவர்கள் புத்ததேவனை முறைப்படி வணங்கி மண்ணுலகில் தோன்றி அறம் கூறவேண்டுமெனக் குறையிரந்து வேண்டினர். அத் தேவனும் துடிதலோகத்தை விட்டு நிலவுலகில் தோன்றி, புத்தகயை என்னுமிடத்தில் போதி மரத்தின் கீழே எழுந்தருளினான். அவன் மாரன் என்னும் காமனை வென்ற வீரனாக விளங்கினான். காமம் வெகுளி மயக்கம் என்னும் மூவகைக் குற்றங்களையும் அறவே ஒழித்து இல்லாதவையாக்கினான். அப் புத்த தேவனும் அவர்க்குப் பின் பிறந்த அளவிறந்த புத்தர்களும் மெய்ம்மை நிறைந்ததும் உயிர்கட்குப் பாதுகாவலாக உள்ளவையுமான அறநெறிகளை அருளுள்ளத்தோடு எடுத்தோதினர். அந்த அறங்களை நான் உனக்கு உரைப்பேன்; கேட்பாயாக!

(துடிதலோகம - கௌதம புத்தராகத் தோன்றிய பிரபாபாலர் என்னும் போதிசத்துவர் அவ்வாறு தோன்றுவதன் முன்பு இருந்த இடம் என்பர் கௌதம புத்தருக்கு முன்பும் தருமம் குறைந்த ஒவ்வொரு காலத்தும் ஒவ்வொருவராகப் புத்தர் பலர் தோன்றி அறமுரைத்துள்ளனர் என்பது பௌத்த நூல் துணிபு. கௌதம புத்தருக்கு முன்னேயுள்ள புத்தாகளுள் இருபத்தெழுவர் பெயர் இப்போது தெரிகிறது. கௌதம புத்தருக்குப் பின்னரும் பல புத்தர்கள்

ஈரறு பொருளின் ஈந்தநெறி உடைத்தாய்ச்
சார்பின் தோன்றித் தத்தமில் மீட்டும்
இலக்குஅணத் தொடர்தலின்
மண்டில வகையாய் அறியக் காட்டி
எதிர்முறை ஒப்ப மீட்சியும் ஆகி
ஈங்குஇது இல்லா வழிஇல் லாகி
ஈங்குஇது உள்ள வழிஉண் டாகலில்
தக்க தக்க சார்பில் தோற்றம்எனச்
சொற்றகப் பட்டும் இலக்கணத் தொடர்பால்
கருதப் பட்டும் கண்டம்நான்கு உடைத்தாய்

17. சார்பில் தோன்றி – ஒன்றினொன்று காரண காரியமாய்ச் சார்ந்து தோன்றி.
18. இலக்கு அணத் தொடர்தலின் – இயைந்து தொடர்ந்து தோன்றுதலால்.
19. மண்டிலம் – வட்டம்.
20. எதிர்முறை ஒப்ப – தோன்றும் முறையை நீக்க.

16-20. புத்த தருமம் பன்னிரண்டு நிதானங்களைக் கொண்டது. இவை ஒன்றின் ஒன்று இயைந்து தொடர்ந்து காரண காரியமாக மண்டலித்து விளங்கும். மூல காரணத்தை நீக்கினால் தீமையிலிருந்து மீளலாம்.

தோன்றினர். அவர்கள் தொகுதி புத்த சங்கம் எனப்பட்டது. ஆதி புத்தன் கூறிய அறங்களை வழிவழியாய்த் தோன்றிய புத்தர்கள் அறிவுறுத்திவந்தனர்.)

பன்னிரு நிதானங்கள் (16-24)

புத்தன் மொழிந்த கட்டுரைப் பொருள்கள் பன்னிரண்டு. அவை ஒன்றினொன்று காரண காரியமாய்ச் சார்ந்து தோன்றும் இயல்பின. தம்மில் அவை மீளவும் தோன்றித் தொடர்ந்து வருவன. ஆதலின் மண்டலிக்கும் வகையால் (வட்ட முறையில்) வைத்து அனைவரும் அறிந்து கொள்ளுமாறு அவற்றை விளக்கிக் கூறினார்.

(பேதைமை, செய்கை, உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு, வேட்கை, பற்று, பவம், தோற்றம், வினைப்பயன என்பன பன்னிரு நிதானங்கள். இவை சார்பில் தோன்றும் முறையாவது: பேதைமையினின்று செய்கையும், செய்கையிலிருந்து உணர்வுமென்ற முறையில் ஒன்றிலிருந்து ஒன்று தொடர்ந்து வரும். பன்னிரண்டாவதாகிய வினைப்பயனினின்றும் முதலிலுள்ள பேதைமை தோன்றும். இவ்வாறு இவை வட்ட முறையில் தோன்றித் தொடர்ந்து வரும்).

இவை இவ்வாறு தோன்றும் முறையை நீக்கினால் பேதைமை முதலியவற்றிலிருந்து மீட்சி உண்டாகும். காரணத்தை இல்லாதாக்கினால் காரியங்களும் இல்லையாகும். காரணம் உள்வழிக் காரியமும் உளதாகும். காரணங்களை உள்ளுதலும் தள்ளுதலுமாகிய தகுதிக்கேற்ப, காரியத்தோற்றம் உளதாகவும் இலதாகவும் அமையும். காரண காரியங்களின் உண்மை இன்மைகள் இவ்வியைபால் உணரப்படும்.

நிதான வகை (25 - 26)

(பேதைமை முதலிய பன்னிரண்டும் நிதானங்கள் எனப்படும்).

நிதானம் நான்கு வகையான கண்டங்களையுடையது. அக்கண்டங்கள் மூன்று வகையான புணர்ச்சிகளையுடையன.

கண்டம் நான்கு

(முதற் கண்டம் : பேதைமை, செய்கை என்ற இரண்டு

இரண்டாம் கண்டம் : உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு என்ற ஐந்து.

மருவிய சந்தி வகைமூன்று உடைத்தாய்த்
தோற்றம் பார்க்கின் மூன்று வகையாய்த்
தோற்றற்கு ஏற்ற காலம்மூன்று உடைத்தாய்க்
குற்றமும் வினையும் பயனும் விளைந்து
நிலையில வறிய துன்பம்என நோக்க
உலையா வீட்டிற்கு உறுதி யாகி
நால்வகை வாய்மைக்குச் சார்பிடன் ஆகி
ஐந்துவகைக் கந்தத்து அமைதி ஆகி
மெய்வகை ஆறு வழக்குமுகம் எய்தி

27. தோற்றம் – பிறப்பு.

25–54. பன்னிரு நிதானங்கள் நான்கு கண்டங்களாக்கப் பெற்றன. மூன்று வகையான புணர்ச்சிகளையுடையன. அருவம், உருவம், காமம் எனப் பிறப்பு மூவகைப்படும். இறப்பு, நிகழ்வு, எதிர்வு எனக் காலம் மூவகையாக அமையும்.

வாய்மை நான்கு ஐந்து கந்தங்களுக்கும் பன்னிரு நிதானங்களும் அமைவுடையன. ஆறு வகையான வழக்குகளால் உண்மையை ஆராய்ந்து தெளிய வேண்டும். நால்வகை நயங்களைச் சீர்தூக்கித் துணிந்து கூறிட்டு வினாவி விடையறிந்து வாய்மையை நிதானித்து அறிதல் வேண்டும். அப்படி நிரூபிக்கப்பட்ட புத்த தருமம் கெடுதலில்லை. அது கோவையாகத் தொடர்பாகப் போக்குவரவின்றி நிலைத்திருக்கும். அது, 'யான் எனது' என்னும் பற்றுக் கோடற்றது. பிறர் முடிக்க முடிவதில்லை தானும் முடிதல் இல்லை. வினை, பயன், பிறப்பு, வீடு – எல்லாவற்றுக்கும் தானே முதலாகி நிற்கும் பண்புகள் நிதானங்களுக்கு அமைவனவாம். பன்னிரண்டு நிதானங்களின் இயல்பினைப் பிறப்பெடுத்தோர் அறிவராயின் வீடு பேற்றினை அடைவர். அறியாராயின் ஆழ்ந்த நரகத்தில் வீழ்ந்து துன்புறுவர்.

மூன்றாம் கண்டம் : வேட்கை, பற்று, பவம் என்ற மூன்று

நான்காம் கண்டம் : தோற்றம், வினைப்பயன் என்ற இரண்டு.

சந்தி மூன்று

செய்கையும் உணர்வும் கூடுதல் முதற்சந்தி (புணர்ச்சி)

நுகர்வும் வேட்கையும் கூடுதல் இரண்டாம் சந்தி

பவமும் தோற்றமும் கூடுதல் மூன்றாம் சந்தி)

பிறப்பும் காலமும் (27 - 28)

அருவம், உருவம், காமம் எனப் பிறப்பு மூன்று வகையாம். பிறப்பு தோன்றுதற்கேற்ற காலம் இறப்பு, நிகழ்வு, எதிர்வு என மூவகை.

வீட்டுறுதி (29 - 31)

வேட்கை, பற்று, பேதைமை ஆகிய முக்குற்றங்களும், பவம் செய்கை ஆகிய இரு வினைகளும், பிற ஏழு வினைப்பயன்களும் என்ற பன்னிரெண்டும் நிலையில்லாதன; பயனற்றன; துன்பம் தருவன. இவற்றை அறிந்து நீக்கவே கெடாத வீடுபேறு அடைவதற்கேற்ற உறுதியான நல் ஞானப்பேறு உண்டாகும்.

வாய்மை, கந்தம், வழக்கு (32 - 34)

நான்கு வகையாகிய வாய்மைக்கும் சார்பிடனாகியும், ஐவகைக் கந்தங்களுக்கும் அமைவுடையதாயும், மெய்ம்மையுணர்வுக்குரிய அறுவகை வழக்குகளையுடையதாகியும் இந்நிதானம் நிலவும்.

(வாய்மை நான்கு : துக்கம், துக்கநீக்கம், துக்கத் தோற்றம், துக்க நீக்க நெறி.

கந்தம் ஐந்து : உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம்.

வழக்கு ஆறு : உண்மை வழக்கு, இன்மை வழக்கு, உள்ளது சார்ந்த உண்மை வழக்கு, உள்ளது சார்ந்த இன்மை வழக்கு, இல்லது சார்ந்த உண்மை வழக்கு, இல்லது சார்ந்த இன்மை வழக்கு)

நயங்கள் நான்கால் பயன்கள் எய்தி
இயன்றநால் வகையால் வினாவிடை உடைத்தாய்
நின்மிதி இன்றி ஊழ்பாடு இன்றிப்
பின்போக் கல்லது பொன்றக் கெடாதாய்ப்
பண்ணுநர் இன்றிப் பண்ணப் படாதாய்
யானும் இன்றி என்னதும் இன்றிப்
போனதும் இன்றி வந்ததும் இன்றி
முடித்தலும் இன்றி முடிவும் இன்றி
வினையும் பயனும் பிறப்பும் வீடும்
இனையன எல்லாம் தானே ஆகிய
பேதைமை செய்கை உணர்வே அருவுரு
வாயில் ஊறே நுகர்வே வேட்கை
பற்றே பவமே தோற்றம் வினைப்பயன்
இற்றுஎன வகுத்த இயல்புஈ ராறும்
பிறந்தோர் அறியின் பெரும்பேறு அறிகுவர்
அறியார் ஆயின் ஆழ்நரகு அறிகுவர்
பேதைமை என்பது யாதுஎன வினவின்
ஓதிய இவற்றை உணராது மயங்கி
இயற்படு பொருளால் கண்டது மறந்து
முயல்கோடு உண்டுஎனக் கேட்டது தெளிதல்

37 நின்மிதி – நிர்மானம்; உண்டாக்குதல். ஊழ்பாடு – முடிவுபடுதல்.
38 பின்போக்கு – தொடர்ச்சி. பொன்றக் கெடாதாய் – முற்றக் கெடாததாகி.
49. பெரும்பேறு – நிர்வாணம் (முத்தி)

நயங்கள், வினாவிடை (35 - 36)

நால்வகை நயங்களாலும் நால்வகைப் பயனையுற்று, நான்கு வகையான வினாவிடையுடையதுமாய் இந்நிதானம் இயலும்.

(நயங்கள் நான்கு : ஒற்றுமை, வேற்றுமை, புரிவின்மை, இயல்பு.

வினாவிடை நான்கு : துணிந்து சொல்லல், கூறிட்டு மொழிதல், வினாவின வருவித்தல், வாய்வாளாமை.)

நிதானங்களின் பண்புகள் (37 - 44)

இந் நிதானங்கள் நிருமிக்கப்படுதலின்றி, கெடுவதுமின்றி, ஒன்றன்வழி ஒன்று தொடர்வதன்றி முற்றக் கெடுவதில்லை. செய்வோர் இன்றித் தானே செயப்படுவதில்லை. யான் எனது எனும் பற்றுக்கோடில்லாதவை; போக்குவரவு இல்லாதவை; பிறர் முடிக்க முடிவதும் தானே முடிவதும் என்பதில்லாதவை, வினையாயும், பயனாயும், பிறப்பிற்கும், வீடு பேற்றிற்கும் காரணமாய் அமைபவை. இவைபோன்ற பிறவற்றுக்கெல்லாம் தாமே முதலாகி விளங்குவன இந் நிதானங்களேயாம்!

நிதான விளக்கம் (45 - 54)

பேதைமை, செய்கை, உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு, வேட்கை, பற்று, பவம், தோற்றம், வினைப்பயன் என இப்பன்னிரண்டும் ஆன்றோரால் வகுக்கப்பட்ட இயல்புகள் (நிதானங்கள்) பிறவி எடுத்தவர்கள் இவற்றை அறிந்து நடந்தால் பெரும்பேற்றினை (நிருவாணத்தை) அடைவர். இவற்றை அறியார் துன்பம் நிறைந்த நரகத்தில் அழுந்துவர்.

இவற்றுள், **பேதைமை** என்பது எத்தகையது என்று கேட்டால் கூறப்பட்ட இப்பன்னிரு இயல்புகளை அறியாமல், இயற்கையாகத் தோன்றும் பொருள்களால் தாம் கண்டதனை மறந்து, 'முயலுக்குக் கொம்பு உண்டு'.என்று தாம் கேட்டதனை உண்மை எனக்கொள்ளும் அறியாமை ஆகும்.

உலகம் மூன்றினும் உயிராம் உலகம்
அலகில பல்உயிர் அறுவகைத்து ஆகும்
மக்களும் தேவரும் பிரமரும் நரகரும்
தொக்க விலங்கும் பேயும் என்றே
நல்வினை தீவினை என்றுஇரு வகையால்
சொல்லப் பட்ட கருவில் சார்தலும்
கருவில் பட்ட பொழுதினுள் தோற்றி
வினைப்பயன் விளையும் காலை உயிர்கட்கு
மனப்பேர் இன்பமும் கவலையும் காட்டும்
தீவினை என்பது யாதுஎன வினவின்
ஆய்தொடி நல்லாய் ஆங்குஅது கேளாய்
கொலையே களவே காமத் தீவிழை
உலையா உடம்பில் தோன்றுவ மூன்றும்
பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்
சொல்எனச் சொல்லில் தோன்றுவ நான்கும்
வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சிஎன்று
உள்ளம் தன்னின் உருப்பன மூன்றும்எனப்
பத்து வகையால் பயன்தெரி புலவர்
இத்திறம் படரார் படர்குவர் ஆயின்
விலங்கும் பேயும் நரகரும் ஆகிக்
கலங்கிய உள்ளக் கவலையில் தோன்றுவர்
நல்வினை என்பது யாதுஎன வினவின்
சொல்லிய பத்தின் தொகுதியின் நீங்கிச்
சீலம் தாங்கித் தானம் தலைநின்று
மேல்என வகுத்த ஒருமூன்று திறத்துத்
தேவரும் மக்களும் பிரமரும் ஆகி
மேவிய மகிழ்ச்சி வினைப்பயன் உண்குவர்
உணர்வுஎனப் படுவது உறங்குவோர் உணர்வின்
புரிவுஇன்று ஆகிப் புலன்கொளா ததுவே

---

56. அலகில – அளவில்லாதன. 68. கடுஞ்சொல் – வன்சொல்
70. பொல்லாக் காட்சி – மயக்கம்; அதாவது உண்மையை அறியாமை
71. உருப்பன – தோன்றுவன
55-81. உலகம் மேல், நடு, கீழ் என மூன்று. மக்கள், தேவர், பிரமர், நரகர், விலங்கு, பேய் எனப் பிறப்பு அறுவகை. நல்வினை செய்தோர் மக்கள், தேவர், பிரமராகப் பிறப்பெடுத்து நல்வினைப் பயனை அனுபவிப்பர். தீவினை செய்தோர் நரகர், விலங்கு, பேய் எனப் பிறப்பெடுத்துக் கவலையில் சிக்கி உழல்வர்

உலகம் மூன்று; உயிர்கள் ஆறுவகை (55 - 63)

மேல், கீழ், நடு என்னும் மூன்றுலகிலும் அளவில்லாத உயிர்கள் இருக்கின்றன. பல்வகையான இவ்வுயிர்கள் ஆறு வகையாகும். இவை மக்கள், தேவர், பிரமர், நரகர், விலங்குத் தொகுதி, பேய்கள் என்பனவாம். நல்வினை தீவினை ஆகிய இரு வினைகளுக்குத் தகுந்தபடி மேற்சொன்ன ஆறுவகை உயிர்த்தொகுதியுள் தமக்குரியதான ஒரு கருவினுள் சென்று உயிர் பிறக்கும். தானம் செய்த வினைப்பயன் விளைவைத் தருங்காலத்தில் அவையவை செய்த வினைகளுக்குத் தகுந்தபடி பேரின்பமும் கவலையும் உண்டாகும்.

தீவினை விளக்கம் (64 - 75)

ஆராய்ந்தெடுத்த வளையல்களை அணிந்த நல்லாய்! தீவினை என்பது யாது என்று கேட்டால் அதனை விளக்குவேன் கேட்பாயாக! கொலை, களவு, காமமாகிய தீய விழைவு ஆகிய மூன்றும் உடம்பில் தோன்றும் தீவினை. பொய், புறங்கூறல், கடுஞ்சொல், பயனற்ற சொல் ஆகிய நான்கும் சொல்லால் வரும் தீவினைகள். வெஃகல் (பிறர் பொருளைக் கவர நினைத்தல்), சினத்தல், மயக்கம் கொள்ளுதல் ஆகிய மூன்றும் உள்ளத்தால் வரும் தீவினைகள். இவ்வாறு தீவினைகள் பத்து வகையாகும். வினைப்பயனை உணர்ந்த அறிவாளர் இத் தீவினைகளைச் செய்யார். செய்தால் விலங்கும், பேயும், நரகரும் ஆகிக் கலக்கமுற்று உள்ளக் கவலையிலே சிக்கி உழல்வர்.

நல்வினை விளக்கம் (76 - 81)

'நல்வினை எனப்படுவது யாது?' என்று கேட்டால் மேற்சொன்ன பத்துத் தீமைகளிலிருந்தும் விடுபட்டு, நல்லொழுக்கத்தை மேற்கொண்டு, தானம் வழங்குதலில் ஈடுபடுதலாகும். அங்ஙனம் ஈடுபடுவோர் உயர்வுடையன என்று மேலோர் வகுத்துள்ள தேவரும், மக்களும், பிரமரும் ஆகப் பிறப்பெடுத்துத் தமது நல்வினைப் பயனை அனுபவிப்பர்.

நிதானங்கள் (82 - 103)

உணர்வு என்று சொல்லப்படும் நிதானமானது உறங்கும் ஒருவர்பால் உள்ள உணர்வுபோல செய்தொழில் எதுவுமின்றி உளதென்னும் அளவால் மட்டுமே விளங்குவது.

அருவுரு என்பதுஅவ் வுணர்வு சார்ந்த
உயிரும் உடம்பும் ஆகும் என்ப
வாயில் ஆறும் ஆயும் காலை
உள்ளம் உறுவிக்க உறும்இடன் ஆகும்
ஊறுஎன உரைப்பது உள்ளமும் வாயிலும்
வேறு புலன்களை மேவுதல் என்ப
நுகர்வே உணர்வு புலன்களை நுகர்தல்
வேட்கை விரும்பி நுகர்ச்சிஆ ராமை
பற்றுஎனப் படுவது பசைஇய அறிவே
பவம்எனப் படுவது கரும ஈட்டம்
தருமுறை இதுஎனத் தாம்தாம் சார்தல்
பிறப்புஎனப் படுவதுஅக் கருமப் பெற்றியின்
உறப்புணர் உள்ளம் சார்பொடு கதிகளில்
காரண காரிய உருக்களில் தோன்றல்
பிணிஎனப் படுவது சார்பில் பிறிதாய்
இயற்கையின் திரிந்துஉடம்பு இடும்பை புரிதல்
மூப்புஎன மொழிவது அந்தத்து அளவும்
தாக்குநிலை யாமையின் தாம்தளர்ந் திடுதல்

91. ஆராமை – நிரம்பாமை.
92. பசை இய – ஒட்டிக் கொண்ட.
93. ஈட்டம் – கூட்டம்.
96. சார்பொடு கதிகளில் – சம்பந்தத்தோடு கூடிய பலவகைப் பிறப்புகளில்
98. பிணி – நோய். பிறிதாய் – வேறாகி.
99. இயற்கையின் திரிந்து – இயல்பிலிருந்து வேறுபட்டு.
100. அந்தம் – முடிவு (சாவு)
101. தாக்கு – வந்து மோதுகின்ற.

அருவுரு என்பது அவ்வுணர்வொடு கூடியய் உயிரும் உடம்பும் என்பர். (அருவமான உயிரும் உருவமான உடலும் சேர்ந்தது அருவுரு)

வாயில் என்பதை ஆராயுங்கால் ஐம்பொறிகளும் மனமும் சேர்ந்து ஆறு வாயில்களாம். இவை உள்ளத்தின்கண் பொருளுணர்ச்சி தோன்றிப் பொருந்துதற்குரிய இடங்களாம்.

ஊறு என்று சொல்லப்படுவது மனமும் ஐம்பொறிகளும் வேறு பொருள்களைப் பொருந்துவது.

நுகர்வு என்பது புலன்களை உணர்ந்து அவற்றின் பயனை அனுபவித்தல்.

வேட்கை என்பது அங்ஙனம் பயனை நுகருமிடத்து அந் நுகர்ச்சி மேற்கொள்ளும் ஆசை அடங்காது எழுந்துகொண்டிருக்கும் நிலை யாகும். (வேட்கை - அடங்கா ஆசை)

பற்று என்று சொல்லப்படுவது அடங்காது எழுகின்ற ஆசையினாலே அதனையே பற்றி நிற்கிற ஒரு தன்மை. (பற்று - ஆசையால் பொருளைப் பற்றி நிற்பது)

பவம் என்பது கருமங்களின் தொகுதி. தன் பயனை விளைத்துக் கொடுக்கும் முறைமை இது எனக் கருதி அதற்கு உடன்பட்டுச் சென்று சார்தலாம்.

பிறப்பு எனப்படுவது செய்வினைகளின் தன்மைக்கேற்ப உள்ளமானது சார்போடு ஏற்ற கதிகளில் காரண காரியமாய் உடம்புகளில் பொருந்தித் தோன்றுதல்.

பிணி எனப்படுவது பேதைமை முதலாகச் சொல்லப்பெற்ற வற்றினின்றும் வேறுபட்டதான சார்பினை உடையதாய், உடலின் இயற்கைத் தன்மையினின்றும் வேறுபட்டு அதற்குத் துன்பத்தையுண்டு பண்ணுவதாம்.

மூப்பு என்று சொல்லப்படுவது சாகும் இறுதி வரையிலும் உடலை வந்து மோதும் நிலைமையால் உடலைத் தளர்ச்சியடையச் செய்தலாம்.

சாக்காடு என்பது அருவுருத் தன்மை
யாக்கை வீழ்கதிர் எனமறைந் திடுதல்
பேதைமை சார்வாச் செய்கை ஆகும்
செய்கை சார்வா உணர்ச்சி ஆகும்
உணர்ச்சி சார்வா அருவுரு ஆகும்
அருவுருச் சார்வா வாயில் ஆகும்
வாயில் சார்வா ஊறுஆ கும்மே
ஊறு சார்ந்து நுகர்ச்சி ஆகும்
நுகர்ச்சி சார்ந்து வேட்கை ஆகும்
வேட்கை சார்ந்து பற்றுஆ கும்மே
பற்றில் தோன்றும் கருமத் தொகுதி
கருமத் தொகுதி காரண மாக
வருமே ஏனை வழிமுறைத் தோற்றம்
தோற்றம் சார்பின் மூப்புப்பிணி சாக்காடு
அவலம் அரற்றுக் கவலைகை யாறுஎனத்
தவல்இல் துன்பம் தலைவரும் என்ப
ஊழின்மண டிலமாச் சூழும்இந நுகர்ச்சி
பேதைமை மீளச் செய்கை மீளும்
செய்கை மீள உணர்ச்சி மீளும்
உணர்ச்சி மீள அருவுரு மீளும்
அருவுரு மீள வாயில் மீளும்
வாயில் மீள ஊறு மீளும்
ஊறு மீள நுகர்ச்சி மீளும்
நுகர்ச்சி மீள வேட்கை மீளும்
வேட்கை மீளப் பற்று மீளும்
பற்று மீளக் கருமத் தொகுதி
மீளும் கருமத் தொகுதி மீளத்
தோற்றம் மீளும் தோற்றம் மீளப்
பிறப்பு மீளும் பிறப்புப் பிணிமூப்புச்
சாக்காடு அவலம் அரற்றுக் கவலை
கையாறு என்றுஇக் கடையில் துன்பம்
எல்லாம் மீளும்இவ் வகையான் மீட்சி

117. தவல் இல் – நீங்காத 118. ஊழின் மண்டிலமா – முடிவில்லாத வட்டமாக
119. மீள – நீங்க; இல்லையாக.

சாக்காடு என்பது அருவாகவும், உருவாகவும் ஆகிய தன்மையினை உடைய உடம்பு மேற்றிசைக்கண் மறைகின்ற ஞாயிற்றைப்போல மறைதலாம்.

(வினைக் கூட்டத்தினால் பிறப்ப வரும்; பிறப்பினால் பிணி, மூப்பு சாக்காடு வரும். இயற்கை வழிதவறி உடலுக்கு இடும்பை செய்வது பிணி. இளமை முதிர்ந்து மூப்பாகி உடம்பைத் தளர்த்திச் சாவிற்குக் கொண்டு செல்லும் உதித்த கதிர் விழுவது போலப் பிறந்த உடல் சாகும்)

துன்பச் சங்கிலி (104 - 118)

(துன்பம் சங்கிலிபோலத் தொடரும்). பேதைமையைச் சார்பாகக் கொண்டு செய்கை தோன்றும்; செய்கையைச் சார்பாகக் கொண்டு உணர்ச்சி தோன்றும்; உணர்ச்சியைச் சார்பாகக் கொண்டு அருவுரு தோன்றும்; அருவுருவைச் சார்பாகக் கொண்டு வாயில் தோன்றும்; வாயிலைச் சார்பாகக் கொண்டு ஊறு தோன்றும், ஊற்றினைச் சார்பாகக் கொண்டு நுகர்ச்சி தோன்றும்; நுகர்ச்சியைச் சார்பாகக் கொண்டு வேட்கை தோன்றும்; வேட்கையைச் சார்பாகக் கொண்டு பற்றுத் தோன்றும், பற்றினைச் சார்பாகக் கொண்டு வினைப்பயன் தோன்றும்; வினைப்பயனைச் சார்பாகக் கொண்டு பவமும் தோற்றமும் தோன்றும்; அத்தோற்றத்தைச் சார்பாகக் கொண்டு மூப்பு, பிணி, சாக்காடு, அவலம், அழுகை, கவலை, செயலறுதி எனச் சொல்லப் பெறும் நீங்காத துன்பங்கள் எல்லாம் தொடர்ந்து முடிவில்லாத வட்டமாகப் பிறவிகளைச் சூழ்ந்து நிற்கும்.

துன்ப மீட்சி (119 - 133)

பேதைமை நீங்கினால் அதனைச் சார்பாகக் கொண்டு தோன்றும் செய்கை நீங்கும், செய்கை நீங்கினால் உணர்ச்சி நீங்கும்; உணர்ச்சி நீங்கினால் அருவுரு நீங்கும்; அருவுரு நீங்கினால் வாயில் நீங்கும்; வாயில் நீங்கினால் ஊறு நீங்கும்; ஊறு நீங்கினால் நுகர்ச்சி நீங்கும்; நுகர்ச்சி நீங்கினால் வேட்கை நீங்கும்; வேட்கை நீங்கினால் பற்று நீங்கும்; பற்று நீங்கினால் வினைப்பயன் நீங்கும்; வினைப்பயன் நீங்கினால் பவம் நீங்கும்; பவம் நீங்கினால் பிறப்பு நீங்கும்; பிறப்பு நீங்கியவழிப் பிணியும், முதுமையும், சாக்காடும், அவலமும், அரற்றலும், கவலையும், கையறவுமாகிய துன்பங்களெல்லாம் நீங்கும்; துக்க நிவாரணமாகிய மீட்சி என்பது இவ்வகையாகவே நிகழும்.

ஆதிக் கண்டம் ஆகும் என்ப
பேதைமை செய்கை என்றுஇவை இரண்டும்
காரண வகைய ஆத லானே
இரண்டாம் கண்டம் ஆகும் என்ப
உணர்ச்சி அருவுரு வாயில் ஊறே
நுகர்ச்சி என்று நோக்கப் படுவன
முன்னவற்று இயல்பால் துன்னிய ஆதலின்
மூன்றாம் கண்டம் வேட்கை பற்றுக்
கரும ஈட்டம் எனக்கட் டுரைப்பவை
மற்றுஅப் பெற்றி நுகர்ச்சி ஒழுக்கினுள்
குற்றமும் வினையும் ஆக லானே
நான்காம் கண்டம் பிறப்பே பிணியே
மூப்பே சாவுஎன மொழிந்திடும் துன்பம்
எனஇவை பிறப்பில் உழக்குபயன் ஆதலின்
பிறப்பின் முதல்உணர்வு ஆதிச் சந்தி
நுகர்ச்சி ஒழுக்கொடு விழைவின் கூட்டம்
புகர்ச்சிஇன்று அறிவது இரண்டாம் சந்தி
கன்மக் கூட்டத் தொடுவரு பிறப்பிடை
முன்னிச் செல்வது மூன்றாம் சந்தி
மூன்றுவகைப் பிறப்பு மொழியுங் காலை
ஆன்றபிற மார்க்கத்து ஆய உணர்வே
தோன்றல் வீடுஎனத் துணிந்து தோன்றியும்
உணர்வுள் அடங்க உருவாய்த் தோன்றியும்
உணர்வும் உருவும் உடங்கத் தோன்றிப்
புணர்தரு மக்கள் தெய்வம்விலங்கு ஆகையும்

148. பிறப்பின் முதல் – செய்கை. ஆதி – முதல்.
150. புகர்ச்சி இன்று – குற்றமின்றி
157. உடங்க – உடன் நிகழ

கண்டங்கள் - நான்கு (134 - 146)

முதற் கண்டம் : பேதைமையும் செய்கையுமாகிய இரண்டும். மற்றத் தீவினைகட்கு மூலகாரணங்களாக அமைவதால் இவற்றை ஆதிக் (முதல்) கண்டம் என்பர்.

இரண்டாம் கண்டம் : உணர்ச்சி, அருவுரு, வாயில், ஊறு, நுகர்ச்சி என்று சொல்லப்படும் ஐந்தும். பேதைமை செய்கை என்னும் முதற்கண்டத்திய இரண்டாலும் வந்தனவாதலின் இவை இரண்டாம் கண்டம் என்பர்.

மூன்றாம் கண்டம் : வேட்கை, பற்று, கருமத் தொகுதி முதலிய மூன்றும் நுகர்ச்சி ஒழுக்கத்தின்கண் உண்டாகிய குற்றமும் அதனால் உளதாகும் வினையும் ஆகும். ஆதலின் இவற்றை மூன்றாம் கண்டம் என்பர்.

நான்காம் கண்டம் : பிறப்பு, பிணி, மூப்பு, சாவு என சொல்லப்படும் துன்பங்கள் பிறந்த உடம்பில் வரும் வினைப்பயனாதலால் நான்காம் கண்டம் என்பர்.

சந்தி - மூன்று (147 - 152)

பிறப்புக்குக் காரணமான செய்கையும் உணர்ச்சியும் பொருந்துவது முதற் சந்தி; நுகர்ச்சியாகிய ஒழுக்கமும் வேட்கையும் கூடும் சந்தி இரண்டாம் சந்தி; கருமத் தொகுதியும் தோற்றமும் (பிறப்பும்) சேர்தல் மூன்றாம் சந்தி.

பிறப்பு - மூன்று (153 - 158)

மூவகைப் பிறப்புகளாவன. (i) சமாதி ஞானமே வீடுபேறு எனத் துணிந்து அதுவேயாய்த் தோன்றியிருத்தல் (ii) உண்ர்வு உள்ளேயடங்க உருக்கொண்டு தோன்றியிருத்தல் (iii) உணர்வும் உருவும் உடன் நிகழுமாறு தோன்றிக் கூட்டமாய் உறையும் மக்கள், தெய்வம் முதலியவாகத் தோன்றியிருத்தல். (இம் மூவகைப் பிறப்புகளையும் முறையே அரூப தாது, ரூப தாது, காம தாது என்பர்.)

காலம் மூன்றும் கருதுங் காலை
இறந்த காலம் என்னல் வேண்டும்
மறந்த பேதைமை செய்கையா னவற்றை
நிகழ்ந்த காலம்என நேரப் படுமே
உணர்வே அருவுரு வாயில் ஊறே
நுகர்வே வேட்கை பற்றே பவமே
தோற்றம் என்றுஇவை சொல்லுங் காலை
எதிர்காலம்என இசைக்கப் படுமே
பிறப்பே பிணியே மூப்பே சாவே
அவலம் அரற்றுக் கவலைகை யாறுகள்
குலவிய குற்றம்எனக் கூறப் படுமே
அவாவே பற்றே பேதைமை என்றுஇவை
புனையும்அடை பவமும் வினைசெயல் ஆகும்
உணர்ச்சி அருவுரு வாயில் ஊறே
நுகர்ச்சி பிறப்பு மூப்புப்பிணி சாவுஇவை
நிகழ்ச்சிப்பயன் ஆங்கே நேருங் காலைக்
குற்றமும் வினையும் பயனும் துன்பம்
பெற்ற தோற்றப் பெற்றிகள் நிலையா
எப்பொரு ளுக்கும் ஆன்மா இலைஎன
இப்படி உணரும் இவைவீட் டியல்பாம்.
உணர்வே அருவுரு வாயில் ஊறே
நுகர்வே பிறப்பே பிணிமூப்புச் சாவே
அவலம் அரற்றுக் கவலைகை யாறுஎன
நுவலப் படுவன நோயா கும்மே
அந்நோய் தனக்குப்
பேதைமை செய்கை அவாவே பற்றுக்
கரும ஈட்டம்இவை காரணம் ஆகும்
துன்பம் தோற்றம் பற்றே காரணம்
இன்பம் வீடே பற்றுஇலி காரணம்
ஒன்றிய உரையே வாய்மை நான்காவது

165. தோற்றம் – பிறப்பு. 187 பற்று இலி – பற்றின்மை.

காலம் :- மூன்று (159 - .174)

மூவகைக் காலங்களாவன. (i) மறத்தலைச் செய்யும் பேதைமையும் அதன் சார்பாக வரும் செய்கையும் இறந்த காலம் (ii) உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு, வேட்கை, பற்று, பவம், தோற்றம் எனும் இவை எல்லாம் நிகழ்காலம் (iii) பிறப்பு, பிணி, மூப்பு, சாவு, அவலம், அரற்று, கவலை, கையாறு ஆகியவை எல்லாம் எதிர்காலம்.

வேட்கையும் பற்றும் பேதைமையும் என்ற இம்மூன்றும் குற்றம் என்று சொல்லப்படும்.

உருப்படுத்தும் பவமும் அதனை அடுத்துவரும் வினையும் செய்கையாகும்.

உணர்ச்சி, அருவுரு, வாயில், ஊறு, நுகர்ச்சி, பிறப்பு, மூப்பு, பிணி, சாவு என்ற இவை குற்றம் செய்கை ஆகியவற்றின் பயனாகும்

வீடுபேற்றின் இயல்பு (175 - 178)

குற்றம், வினை, பயன் ஆகிய இவை எல்லாம் துன்பம் பயப்பன; பிறப்புக்குரிய உடம்புகள் நிலையில்லாதன; உயர்திணை அஃறிணை ஆகிய எப்பொருட்கும் ஆன்மா என்பதொன்று இல்லை என இவற்றை இவ்வாறு பகுத்துணர்வது வீடுபேற்றிற்கு உறுதியாகும்.

வாய்மை - நான்கு (179 - 188)

உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு, பிறப்பு, பிணி, சாக்காடு, அவலம், அரற்று, கவலை, கையாறு என்று சொல்லப்டுவன எல்லாம் துக்கமாகும் - இது முதல் வாய்மை.

அத்துக்கத் தோற்றத்திற்குப் பேதைமை, வினை, வேட்கை, பற்று, வினைப்பயன் ஆகிய இவையே காரணமாகும் - இஃது இரண்டாம் வாய்மை

துன்பத்துக்கும் பிறப்புக்கும் பற்றுடைமையே காரணம் - இது மூன்றாம் வாய்மை.

இன்பத்துக்கும் பிறவாத வீடுபேற்றிற்கும் பற்றின்மையே காரணமாகும் - இது நான்காம் வாய்மை.

உருவு நுகர்ச்சி குறிப்பே பாவனை
உள்ள அறிவுஇவை ஐங்கந்தம் ஆவன
அறுவகை வழக்கு மறுஇன்று கிளப்பின்
தொகையே தொடர்ச்சி தன்மை மிகுத்துரை
இயைந்துரை என்ற நான்கினும் இயைந்த
உண்மை வழக்கும் இன்மை வழக்கும்
உள்ளது சார்ந்த உண்மை வழக்கும்
இல்லது சார்ந்த இன்மை வழக்கும்
உள்ளது சார்ந்த இன்மை வழக்கும்
இல்லது சார்ந்த உண்மை வழக்கும்என,
சொல்லிய தொகைத்திறம் உடம்புநீர் நாடு
தொடர்ச்சி வித்து முளைதாள் என்றுஇந்
நிகழ்ச்சியில் அவற்றை நெல்என வழங்குதல்
இயல்பு மிகுத்துஉரை ஈறுடைத்து என்றும்
தோன்றிற்று என்றும் மூத்தது என்றும்
மூன்றின் ஒன்றின் இயல்புமிகுத்து உரைத்தல்

189. நுகர்ச்சி – வேதனை.

(தோன்றுதல் துன்பம்; அதற்குக் காரணம் பற்று; வீடு இன்பம்; அதற்குக் காரணம் பற்றின்மை என்கிற நான்குரைகளும் நான்கு வாய்மைகளாகும். இவை துக்கம், துக்கத் தோற்றம், துக்க நீக்கம், துக்க நீக்க நெறி என்று சொல்லப்படும்)

கந்தம் - ஐந்து (189-190)

உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, உள்ளஅறிவு ஆகிய இவ்வைந்தும் ஐவகைக் கந்தங்கள் எனப்படும்.

வழக்கு - ஆறு (191 - 216)

அறுவகை வழக்காவன: தொகை, தொடர்ச்சி, மிகுத்துரை, இயைந்துரை என்ற நான்கோடும் சேர்ந்து வருவனவாகிய (i) உண்மை வழக்கு (ii) இன்மை வழக்கு (iii) உள்ளது சார்ந்த உண்மை வழக்கு (iv) இல்லது சார்ந்த இன்மை வழக்கு (v) உள்ளது சார்ந்த இன்மை வழக்கு (iv) இல்லது சார்ந்த உண்மை வழக்கு முதலிய ஆறுமாம்.

தொகை

மேலே கூறப்பெற்றவற்றுள் தொகையின் தன்மையாவது உடம்பும் நீரும் நாடும் ஆம். (பல தாதுக்களின் கூட்டம் உடம்பென்றும், பல துளிகளின் கூட்டம் நீரென்றும், பல ஹார்களின் கூட்டம் நாடென்றும் வழங்குமாறு போலவே ஐந்து கந்தங்களின் கூட்டமே ஆன்மா என்று வழங்கப்படுவது தொகையாகும்)

தொடர்ச்சி

தொடர்ச்சியாவது வித்து, முளை, தாள் என்று தோன்றித் தொடர்கின்ற நிகழ்ச்சியில் அவற்றை நெல்லென்று வழங்குதலாகும். (வித்திலிருந்து முளையும், முளையிலிருந்து தாளும் தோன்றி, நிகழ்ந்து நெல்லாகுமாறு போல எல்லாம் காரணகாரிய சம்பந்தமாகவே உள்ளதென்பது.)

மிகுத்துரை

இயல்பு அல்லது தன்மை மிகுத்துரையாவது ஒரு பொருளினுடைய இயல்பு, பிறப்பு, மூப்பு என்பவற்றுள் ஒன்றனியல்பை மிகுத்துச் சொல்லுதல்.

இயைந்துரை என்பது எழுத்துப்பல கூடச்
சொல்எனத் தோற்றும் பலநாள் கூடிய
எல்லையைத் திங்கள் என்று வழங்குதல்
உள்வழக்கு உணர்வுஇல் வழக்கு முயல்கோடு
உள்ளது சார்ந்த உள்வழக்கு ஆகும்.
சித்தத் துடனே ஒத்த நுகர்ச்சி
உள்ளது சார்ந்த இல்வழக்கு ஆகும்.
சித்தம்உற் பவித்தது மின்போல் என்கை
இல்லது சார்ந்த உண்மைவழக்கு ஆகும்
காரணம் இன்றிக் காரியம் நோ்தல்
இல்லது சார்ந்த இல்வழக்கு ஆகும்
முயல்கோடு இன்மையின் தோற்றமும் இல்எனல்.
நான்கு நயம்எனத் தோன்றப் படுவன
ஒற்றுமை வேற்றுமை புரிவின்மை இயல்புஎன்க.
காரண காரியம் ஆகிய பொருள்களை
ஒன்றா உணர்தல் ஒற்றுமை நயமாம்

207. எல்லையை – ஒரு கால எல்லையை.
208. முயல் கோடு – முயல் கொம்பு
210. சித்தம் – உணர்வு.
212. உற்பவித்தது – தோன்றிற்று

இயைந்துரை

இயைந்துரை என்பது எழுத்துகள் பல கூடியவழிச் சொல்லென்பது தோன்றும் என்பது போன்றில்லாமல், பல நாட்கள் கூடிய ஒரு கால எல்லையைத் திங்கள் என்று வழங்குவது போல்வது.

(எழுத்துகளின் கூட்டத்தால் உண்டாகும் சொல் தொகைத்திறம் அவ்வாறின்றி இத்துணைநாள் என வரையறுக்கப்பட்ட தொகையுடையது திங்களாதலின் இயைந்துரை என்றார். தொகைக்கும் இயைந்துரைக்கும் வேற்றுமை யாதோ எனின் பல பொருள்களின் வரையறைப்படாத தொகுதி தொகையென்றும், பல பொருள்களின் வரையறைப்பட்ட தொகுதி இயைந்துரையாம் என்றும் கூறுப.)

அறுவகை வழக்கின் விளக்கம்

(i) உள்ளதாகிய உணர்ச்சியை உள்ளது என்று கூறுதல் உள்வழக்கு (உண்மை வழக்கு)

(ii) இல்லாததாகிய முயற்கொம்பினை இல்லை என்றே சொல்லுதல் இல்வழக்கு (இன்மை வழக்கு)

(iii) உள்ளதாகிய உணர்வோடு அதற்கியைந்த நுகர்ச்சியையும் உண்டென்பது உள்ளது சார்ந்த உண்மை வழக்கு.

(iv) 'மின்னலைப் போல உணர்வு தோன்றிற்று' என்றல் உள்ளது சார்ந்த இல்வழக்காகும்.

(v) காரணமின்றிக் காரியத்தை மட்டும் கொண்டுரைத்தல் இல்லது சார்ந்த உண்மை வழக்கு ஆகும்.

(vi) முயற்கொம்பு இல்லாத பொருள். அதற்குத் தோற்றம் இல்லை என்று கூறுதல் இல்லது சார்ந்த இல்வழக்கு ஆகும்.

நயங்கள் நான்கு (217 - 234)

ஒற்றுமை நயம், வேற்றுமை நயம், புரிவின்மை நயம், இயல்பு நயமென நயங்கள் நான்கு வகைப்படும்.

(i) காரணமும் காரியமுமாகி நிற்கும் பொருள்களை வேற்றுமை கருதாது காரணமாகவோ காரியமாகவோ கொள்ளுதல் ஒற்றுமை நயம்.

(அரிசி பெற்றவழிச் சோறு பெற்றேன் என்பது ஒற்றுமை நயம்)

வீற்றுவீற் றாக வேதனை கொள்வது
வேற்றுமை நயம்என வேண்டல் வேண்டும்
பொன்றக் கெடாஅப் பொருள்வழிப் பொருள்களுக்கு
ஒன்றிய காரணம் உதவுகா ரியத்தைத்
தருதற்கு உள்ளம் தான்இலை என்றல்
புரிவின்மை நயம்எனப் புகறல் வேண்டும்
நெல்வித் தகத்துள் நெல்முளை தோன்றும்எனல்
நல்ல இயல்புநயம் இவற்றில்நாம் கொள்பயன்
தொக்க பொருள்அலது ஒன்றுஇல்லை என்றும்
அப்பொருள் இடைப்பற்று ஆகாது என்றும்
செய்வா னொடுகோட் பாடுஇலை என்றும்
எய்துகா ரணத்தால் காரியம் என்றும்
அதுவும் அன்றுஅது அலாததும் அன்றுஎன்றும்
விதிமுறை தொகையினால் விரிந்த நான்கும்
வினாவிடை நான்குஉள
துணிந்து சொல்லல் கூறிட்டு மொழிதல்
வினாவின் விடுத்தல் வாய்வா ளாமைஎனத்

221. வீற்று வீற்றாக – தனித்தனி வேறுபடுத்து.
வேதனை கொள்வது – உணர்தல்.
223. பொன்றக் கெடா – முற்றக் கெடுதலில்லாத.
234. விதிமுறை – முறை முறையாக.

(ii) காரண காரியங்களை ஒன்றாக உணராது தனித்தனியே வேறுபடுத்தி உணர்ந்து கொள்ளுதல் வேற்றுமை நயம்

(இது புகை, இது நெருப்பு எனக் காரண காரியங்களை வேறுபடுத்துணர்வது வேற்றுமை நயம்)

(iii) முற்றவும் கெடுதல் இல்லாத முதற்பொருள், காரியப் பொருள் என்பவற்றிற்குப் பொருந்தியுள்ள காரணம் விளைந்த தற்குரியதான காரியத்தைப் பயத்தலை அறிவதற்கான உணர்வுநிலை இல்லை என்பது 'புரிவின்மை நயம்' ஆகும்.

(வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு ஆகிய காரணம் மூன்றும் கூடிச் செம்மை நிறமாகிய காரியத்தைப் பயத்தல் எவ்வாறென அறிதல் கூடாமை புரிவின்மை நயம்.)

(iv) 'நெல் விதையிலிருந்து நெல் முளையே தோன்றும்' என்றல் நல்ல இயல்பு நயம்

நயத்தின் பயன்

நால்வகை நயங்களால் நாம் அடையும் பயன்களாவன:

காரண காரியமாய்த் தொக்க பொருள்களேயன்றித் தனியே ஒன்றும் இல்லை; அப்பொருள்களிடத்தே நாம் பற்றுவைக்கக் கூடாது; செய்வானோடு செய்கைக்கு ஒரு கோட்பாடு இல்லை; பொருந்தும் ஒரு காரணத்தினாலேயே ஒரு காரணம் பிறக்கும்; அது காரணகாரியமும் அன்று அல்லாததுமன்று என்று முறையாகத் தொகையினாலே நான்காய் விரிந்துள்ள இவைகளேயாம்

வினா விடை - நான்கு (235 - 249)

வினாக்களுக்குரிய விடையில் நான்கு வகை உள்ளன.

அவை: (i) முடிவாய்த் துணிந்து கூறல்

(ii) பலகூறு செய்து ஒவ்வொன்றாய்ச் சொல்லுதல்

(iii) வினாவிற்கு எதிராக வேறு வினாத்தொடுத்து விடை கூறுதல்

(iv) வாய் பேசாதேயே (விடை சொல்லாமலேயே) இருந்து விடுதல்.

தோன்றியது கெடுமோ கெடாதோ என்றால்
கேடுஉண்டு என்றல் துணிந்துசொலல் ஆகும்
செத்தான் பிறப்பா னோபிற வானோ
என்று செப்பின்
பற்றுஇறந் தானோ அன்மக னோஎனல்
மிகக்கூ றிட்டு மொழிதல்என விளம்புவர்
வினாவின் விடுத்தல்·முட்டை முந்திற்றோ
பனைமுந் திற்றோ எனக்கட் டுரைசெய்
என்றால் எம்முட்டைக்கு எப்பனை என்றல்
வாய்வா ளாமை ஆகா யப்பூப்
பழைதோ புதிதோ என்று புகல்வான்
உரைக்கு மாற்றம் உரையாது இருத்தல்
கட்டும் வீடும் அதன்கா ரணத்தது
ஒட்டித் தருதற்கு உரியோர் இல்லை
யாம்மேல் உரைத்த பொருள்கட்கு எல்லாம்
காமம் வெகுளி மயக்கம் காரணம்
அநித்தம் துக்கம் அநான்மா அசுசிஎனத்
தனித்துப் பார்த்துப் பற்றுஅறுத் திடுதல்
மைத்திரி கருணா முதிதைஎன்று அறிந்து
திருந்துநல் உணர்வால் செற்றம்அற் றிடுக

---

238. தோன்றியது – உண்டான பொருள்.
248 பழைது – பழமையானது
250. கட்டு – பந்தம்.
253. காமம், வெகுளி, மயக்கம் எனும் மூன்றும் முக்குற்றம் எனப்படும்
254. அசுசி – அருவருப்பு.
253 - 260 எல்லாத் துன்பங்களுக்கும் காமம், வெகுளி, மயக்கம் எனனும் மூன்றுமே காரணங்களாம். பொருள்கள் நிலையற்றன, துன்பந்தருவன, அநான்மா, அருவருப்புடையன எனத் தனித்தனியே ஆராய்ந்து பார்த்துப் பற்றினை அறுப்பதால் காமத்தை நீக்குக! எவ்வுயிரிடத்தும் அன்பு பேணும் பண்பு, பிற உயிர்களின துன்பங்கண்டு உள்ளம் உருகி உதவி செய்யும் கருணை, எல்லோரும் இன்புறத்தான் மகிழும் மன நிறைவு ஆகியன கொண்டு வெகுளியைப போக்குக! அறவுரை கேட்டு, கேட்டவற்றைச் சிந்தித்து, கேடடவாறு ஒழுகி, உண்மை தெளிந்து மயக்கத்தைப போக்குக!

தோன்றியது கெடுமோ, கெடாதோ?' என்று கேட்டால் 'கெடுதல்' உண்டு என்று விடையளித்தல் துணிந்து கூறுதல் ஆகும்.

'செத்தான் பிறப்பானோ, பிறவானோ?' என்று கேட்டால் அவன் பற்றுகளை விட்டவனா விடாதவனா எனப்பகுத்து, விட்டவனாயின் பிறவான் என்றும், விடாதவனாயின் பிறப்பான் என்றும் கூறுசெய்து விடைகூறுதலைக் கூறிட்டு மொழிதல் என்பர்.

'விதையாகிய கொட்டை முந்தியதா, பனை முந்தியதா?' என்று வினவினால், 'எந்தக் கொட்டைக்கு எந்தப் பனை?' என விடையிறுத்தல் வினாவின் விடுத்தல் ஆகும்.

'ஆகாயப்பூ பழையதோ? புதிதோ?' என்று கேட்பவனின் கேள்விக்கு விடையொன்றும் கூறாதிருத்தல் வாய் வாளாமை ஆகும்.

ஞான தீபம் (250 - 259)

கட்டும் வீடுமாகிய இரண்டினையும் அவை ஒவ்வொன்றன் காரணத்தினையும் கூடியிருந்து பெறுவித்ததற்குரியவர் பிறர் எவருமிலர். (கட்டும் வீடும் எய்துதற்குப் பிறர் காரணர் அல்லர்; அவரவரே காரணர்.) யாம் மேலே கூறிய பொருள்களுக்கெல்லாம் காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்றுமே காரணங்களாம்.

பொருள்கள் நிலையற்றன என்றும், துன்பம் தருவன என்றும், அநான்மா என்றும், அருவருப்புடையன என்றும் தனித்தனியே ஆராய்ந்து பார்த்துப் பற்றினை நீக்குவதால் காமமாகிய காரணத்தைக் கெடுப்பாயாக!

மைந்திரி பாவனை, கருணைப் பாவனை, முதிதைப் பாவனை ஆகியவற்றை அறிந்து அவற்றால் திருந்தப்பெறும் நல்லுணர்வு கொண்டு வெகுளியைப் போக்குவாயாக!

(**மைத்திரி பாவனை:** எல்லா உயிர்களையும் நட்புறவோடு நினைந்து அவையெல்லாம் துன்பம் நோய் முதலியன இன்றி இன்புற்றிருக்க நினைத்தல்.

கருணைப் பாவனை: பிற உயிர்கட்குண்டாகும் துன்பம் கண்டு உள்ளமுருகி அதனை நீக்கற்கு விரைதல்

முதிதைப் பாவனை: பிற உயிர்களின் ஆக்கமும் இன்பமும் கண்டு மனமகிழ்வும் நிறைவும் அமைதியும் கொண்டு. அவை அவற்றின் நீங்காதிருப்பனவாகுக என நினைப்பது.)

சுருதி சிந்தனா பாவனா தரிசனை
கருதி உய்த்து மயக்கம் கடிக
இந்நால் வகையால் மனத்துஇருள் நீங்குஎன்று
முன்பின் மலையா மங்கல மொழியின்
ஞான தீபம் நன்கனம் காட்ட,
தவத்திறம் பூண்டு தருமம் கேட்டுப்
பவத்திறம் அறுகெனப் பாவை நோற்றனள்என்.

✿ ✿ ✿

258. சுருதி – ஞான நூற் பொருளைக் கேட்டல்.
சிந்தனா – சிந்தனை, சிந்தித்தல்.
பாவனா – பாவனை, பாவித்தல்.
தரிசனை – அறிதல்.
259. உய்த்து – ஆராய்ந்து. கடிக – போக்குக.
264. பவத்திறம் – பிறப்பின் வகைகள்.

சுருதியும் சிந்தனையும் பாவனையும் தரிசனமும் ஆகிய நான்கையும் ஆராய்ந்து உணர்ந்து மயக்கத்தைப் போக்குவாயாக!

(சுருதி - அறவுரை கேட்டல்; சிந்தனை - கேட்டவற்றைச் சிந்தித்தல்; பாவனை - கேட்டவாறு ஒழுகுதல்; தரிசனம் - உண்மை தெளிதல்.)

பாவை நோற்றனள் (260 – 264)

மேற்கூறிய சுருதி முதலிய நான்கு நெறிகளில் மனமயக்கம் நீங்குவாயாக என்று முரணுதல் இல்லாத அறமாகிய சொற்களால் அறவண அடிகள் ஞானமாகிய விளக்கைத் தெளியக் காட்டினார். பாவை மணிமேகலையும் உண்மை ஞானத்திற்குரிய தவத்தினை மேற்கொண்டு பல்வகை அறநெறிகளையும் தெளிவுறக் கேட்டு, 'பிறப்புக்கு ஏதுவான குற்றங்களினின்றும் நீங்குவேன்' என நோற்கலானாள்.

* * *

ஆசிரியர் பற்றி
ஈரோடு தமிழன்பன்...

இந்தநாள் இவரைப் போல
எளியவர் எங்கே உண்டு?
செந்தமிழ்ப் பண்பாட் டுக்குச்
செல்லப்பர் சிற்ப மானார்!

கடலுக்கு மேலும் ஆழம்
கட்டாயம் தேவை என்றால்
படிப்பிலே இவர்ப டைத்த
ஆழத்தைப் பகிர்ந்து கொள்ளும்!

வருவது தடைப டாமல்
கருத்துகள் வந்து பெய்யும்!
அருமையில் அருமை எங்கள்
செல்லப்பர் அழகுப் பேச்சே!

இது ஒரு
பாரதி பதிப்பக
வெளியீடு